கலைஞரின்

கடிதங்கள்

15

15.08.1985 - முதல்

30.05.1986 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 15

15.08.1985 - 30.05.1986

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் **கலைஞர்**

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

AVAILABLE @ :

கௌரா புத்தக மையம்
9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.
GOWRA PUTHAGA MAIYAM
9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.
GOWRA AGENCIES
NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஒய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

H2222
8894-8116

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

"எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, "அன்பு நண்பா !" என விளித்து, "ஜாக்குலின்கள்" என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”
“படமும் பாடமும்”

"மூலவர் மூவர் முரசொலி"

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?"
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! "யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!"

அன்புடன்,



(மு.க. ஸ்டாலின்)

14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
1332. நடப்பதெல்லாம் நடக்கட்டும்!	15-08-1985	23
1333. சுதந்திர நாளில் - மூன்று விஷயங்கள்!	17-08-1985	30
1334. சுதந்திர நாளில் - நமது தாய்த் தமிழ்நாடு!	18-08-1985	35
1335. பஞ்சாப் தேர்தல் - பிரதமர் சிந்தனைக்கு!	25-08-1985	45
1336. தொலைக்காட்சியில் இருட்டடிப்பு!	27-08-1985	49
1337. மாணவர் குமுறல்! கொந்தளிப்பு! எழுச்சி!	28-08-1985	54
1338. செப்டம்பர் 15 - சென்னைக்கு வரும்போது!	02-09-1985	58
1339. இவர்களை அடையாளம் காண்க!	03-09-1985	61
1340. குணத்தைக் காட்டுகிறது! கோயங்கா ஏடு!	04-09-1985	64
1341. உடன்பாடு உருவாகிட உடனடியாகத் தேவை என்ன?	06-09-1985	70
1342. காணக் காத்திருக்கிறேன்; கண்மணியே!	07-09-1985	75
1343. வந்துவிட்டது தேர்தல்! வகைப்படுத்துக பணிகளை!	09-09-1985	79

1344. விழிகள் பாடட்டும் வீர காவியம்!	11-09-1985	83
1345. வா! வா! வையம் ஆண்ட தமிழ் இனமே வா!	12-09-1985	87
1346. ஒரு முடிவெடுக்க அணிவகுப்போம் சென்னையில்!	14-09-1985	94
1347. பாதமலர்களில் பாசமலர்கள்!	17-09-1985	99
1348. விழா மகிழ்ச்சியும், விழி நீர்வீழ்ச்சியும்!	20-09-1985	100
1349. கேரள விஜயமும் - கேலிக்குரிய விஷயமும்!	21-09-1985	105
1350. தேசியப் பார்வை அல்ல! போர்வை!	22-09-1985	110
1351. இது என்ன வெங்காய தேசியம்?	28-09-1985	114
1352. அக்டோபரில், பேரணிகள்! பொதுக்கூட்டங்கள்!	29-09-1985	118
1353. விகடன் தலையங்கம் - ஒரு விளக்கம்!	30-09-1985	121
1354. வாகனங்கள் மட்டுமே வந்தன! வாய்த் துடுக்கே மிஞ்சியது!	01-10-1985	125
1355. எழுச்சி கொள்வோம்! இனம் காப்போம்!	02-10-1985	131
1356. குட்ட குட்ட குனிந்து கொடுப்பது ஏன்?	11-10-1985	135
1357. பாபப்பட்ட ஜென்மம் தமிழன் மட்டும்தானா?	13-10-1985	140
1358. விட்டொழிப்பாய் தீக்குளித்தல்	14-10-1985	145
1359. கருங்குயில் உறங்கிடும் கல்லறை!	21-10-1985	146

1360. எண்ணெய் இல்லாத விளக்கு எப்படி எரியும்?	27-10-1985	151
1361. இந்தப் பணியையும் இனிதே நிறைவேற்றிடுக!	28-10-1985	155
1362. நவம்பர் திங்கள்; அந்த ஏழு நாட்கள்!	29-10-1985	162
1363. அரும்பணியாற்றிட ஆயத்தமாகுக!	30-10-1985	168
1364. அன்னை இந்திராவின் நினைவுநாள் இன்று!	31-10-1985	171
1365. இன்றே தொடங்கிடுக! இனிதே நிறைவேற்றிடுக!	03-11-1985	176
1366. நெடுமாறன் மேற்கொண்ட நெஞ்சைக் குலுக்கிய பயணம்!	04-11-1985	180
1367. அய்கோ! மீனவர்கள்! அந்தோ; ஆசிரியர்கள்!	06 11-1985	185
1368. உணர்வாரா? அல்லது உணர்த்தப்பட வேண்டுமா?	08-11-1985	191
1369. பாதிக்கப்பட்ட மீனவர்களைப் பாதுகாக்கும் அறப்போர்!	11-11-1985	196
1370. ரகுபதி ராகவ ராஜாராம்!	07-12-1985	202
1371. இன்று எம்.ஜி.ஆரின் அடக்குமுறைக் கண்டன நாள்!	08-12-1985	208
1372. நாகாக்க! எனும் குறள், நாவலர் அறியாததா?	28-12-1985	213
1373. இன்னொரு எமர்ஜன்சி - இந்தியா தாங்காது!	30-12-1985	220
1374. நிழற்படம் எழுப்பிடும் நினைவு அலைகள்!	02-01-1986	224

1375. ஒருமைப்பாட்டின் பகைவர்கள் யார்?	04-01-1986	228
1376. அண்ணா குறிப்பிட்டுள்ள அந்த அடித்தளம்!	05-01-1986	233
1377. வைர மாலையும் - மஞ்சள் கயிறும்!	06-01-1986	239
1378. ஆலந்தூர் - அண்ணாநகர் - தாம்பரம்!	08-01-1986	244
1379. சொல்லக் கொதிக்குதே நெஞ்சம்!	10-01-1986	248
1380. பஞ்சாப் உடன்பாடும் - பஜன்லால் குறுக்கீடும்!	11-01-1986	252
1381. ஆணையிடுகிறாய்! நிறைவேற்றுகிறேன்!	25-01-1986	255
1382. உள்ளாட்சித் தேர்தல் - உளமுருகி ஒரு வேண்டுகோள்!	26-01-1986	259
1383. வாபஸ் ஆன வழக்குகள்!	29-01-1986	263
1384. ஆதாரங்கள் தந்தபோது என்ன செய்தார்கள்?	31-01-1986	269
1385. இதயத்தில் மேலும் ஈட்டி எறியாதீர்!	01-02-1986	272
1386. கல்லறையைக் கண்ணீரால் குளிப்பாட்டும்போது!	03-02-1986	275
1387. அண்ணா நினைவு நாளும் ஆன்மீக வேள்வியும்!	04-02-1986	278
1388. அண்ணாவின் சந்திரமோகன்; அன்றும், இன்றும்!	மு.க. 05-02-1986	283
1389. அரும்பெரும் வெற்றிகளை அடைந்திட வேண்டுமெனில்...!	06-02-1986	287

1390. ஒட்டளித்தோரை ஒட்டகங்களாக ஆக்குவதோ?	07-02-1986	292
1391. குறிக்கோள் உணர்ந்து குவித்திடுக வெற்றி!	08-02-1986	297
1392. துவளாமல் தொண்டாற்றிட வேண்டுகிறேன்!	11-02-1986	300
1393. உன் ஒளி விழி காண ஓடி வருகிறேன்!	15-02-1986	303
1394. மைதிலி படம் மட்டுமல்ல; ஒரு பாடம்!	16-02-1986	307
1395. அடக்கமுடன் செயல்படுவோம்! அநீதியை புறங்காண்போம்!	01-03-1986	310
1396. கோட்டையில் கோமாளிக்கூத்து! இது நாட்டின் தலை எழுத்து!	03-03-1986	314
1397. கொதிப்பது உலையல்ல; எரிமலை!	07-03-1986	319
1398. கழகப் பேச்சாளர்கள் கவனத்துக்கு!	08-03-1986	323
1399. மணமிகு மாலையும் - பொன்னார் இழை ஆடையும்!	09-03-1986	327
1400. உள்ளாட்சி மன்றம்; ஜனநாயகத்தின் வேர்!	16-03-1986	330
1401. இந்திய அரசு என்ன செய்யப் போகிறது?	17-03-1986	334
1402. மக்வானா விளக்கமும் மற்றொரு குழப்பமும்!	21-03-1986	339
1403. ஏற்றுக்கொள்ள இயலாத போக்கு!	22-03-1986	343
1404. அன்புத் தம்பிக்கு, அண்ணனின் வேண்டுகோள்!	23-03-1986	348

1405. பிப்ரவரி 23ம், மார்ச் 23ம்!	26-03-1986	353
1406. கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்போம், வா!	21-04-1986	357
1407. இலங்கைத் தமிழரைக் காத்திட இதோ மற்றொரு முயற்சி!	24-04-1986	361
1408. கோவை - மதுரை; கொடுத்திடும் குரல்!	01-05-1986	364
1409. தாங்கிக்கொள்ள முடியவில்லை! தவிக்கிறேன்!	08-05-1986	367
1410. மனச்சாட்சியில்லாத மனிதர்கள்!	16-05-1986	372
1411. தமிழ் இன அழிவைத் தடுத்திட; தமிழகம் எழுக!	26-05-1986	378
1412. உனது உடன்பிறப்பின் வேண்டுகோள்!	27-05-1986	382
1413. மே 31- முழு அடைப்பு; ஏன்? எதற்காக?	28-05-1986	385
1414. அமைதி வழியில் அமையட்டும் நமது அறப்போர்!	29-05-1986	390
1415. மதுரை மாநாட்டுத் தீர்மானம் - ஓர் எடுத்துக்காட்டு!	30-05-1986	394

1332. நடப்பதெல்லாம் நடக்கட்டும்!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் கப்பல் வாங்கு வதற்காக ஜப்பானுக்குப் புறப்படுகிறார் என்று செய்தி வந்ததில் இருந்து - ஆகஸ்டு 15 சுதந்திர நாள் கொடியேற்றுவதற்கு அவர் வரவில்லையென்று ஆகஸ்டு 13ஆம் தேதி மாலையில் அறிவிக்கப்பட்டது வரையில் எத்தனை எத்தனை முரண்பாடுகள்! எத்தனை எத்தனை விதண்டாவாதங்கள்!

அரசின் சார்பிலும், அமைச்சர்கள் சார்பிலும், அரசுத் தலைமைச் செயலாளர் அந்தோணி அவர்கள் சார்பிலும், இன்று முதலமைச்சர் சார்பிலும் ஏடுகளுக்குச் சொல்லப்பட்ட செய்திகளைத் தொகுத்துத் தான் நான் சில விளக்கங்களை அளிக்க விரும்புகிறேன்.

தினகரன், முரசொலி, எதிரொலி, ஆகிய தி.மு.க. ஆதரவு ஏடுகள், அல்லது தி.மு.க. ஏடுகளில் வெளிவந்த செய்திகளைத் தொகுத்தளித்தால் அமைச்சர்கள், அவை தி.மு.க. ஏடுகள் அதனால் செய்தி வெளியிட்டுவிட்டன! என்று அங்கலாய்ப்பர்! ஆத்திரத்தில் தீ மிதித்தவராகக் காட்சி தருவர்!

எனவே, வேறு ஏடுகளில் வெளிவந்துள்ள செய்திகளையே எடுத்து வைக்கிறேன்! வரிசைக்கிரமமாக!

இதோ தினமணி 26.7.85 வெள்ளிக்கிழமை சென்னைக் காலைப்பதிப்பில் வெளிவந்துள்ள செய்தி:-

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இன்று வெள்ளிக்கிழமை விடியற்காலை ஜப்பானுக்கு பயணமாகிறார்... முதலமைச்சர் ஊரில் இல்லாதபோது அமைச்சரவையில் இரண்டாவது இடத்தை வகிக்கும் நிதியமைச்சர் நெடுஞ்செழியன், முதல்வர் சம்பந்தப்பட்ட பொறுப்புகளை கவனிப்பார் என்று ஏற்கனவே முதல்வர் அமெரிக்காவில் சிகிச்சை பெற்ற போது ரூல்ஸ் ஆப் பிசினஸ்

நிர்வாக நடைமுறை விதி திருத்தப்பட்டிருந்தது போலவே, இப்போதும் அந்தப் பொறுப்புகளை நெடுஞ்செழியன் கவனிப்பார். ஜப்பானில் கப்பல் வாங்கும் விழாவில் சாவியை முதலமைச்சர் பெற்றுக் கொள்வார். மூன்று கப்பல்களை எழுபது கோடி ரூபாய் செலவில் தமிழக அரசு வாங்க முடிவு செய்துள்ளது.

ஜூலை 25ஆம்45 தேதி இரவு தலைமைச் செயலாளர் அந்தோணி மூலமும், போக்குவரத்துத் துறை தனிச் செயலர் ஏ.கே. வேங்கடசுப்பிரமணியம் மூலமும் கிடைத்த செய்தியை தினமணி இவ்வாறு பிரசுரித்திருந்தது!

அதே 26.7.85 காலை தினத்தந்தி சென்னைப் பதிப்பில் முதல் பக்கத்தில் ஜப்பான் கப்பல் வாங்குவதற்காக முதலமைச்சர், மின்துறை அமைச்சர், போக்குவரத்து அமைச்சர் உள்ளிட்ட பதினான்கு பேர் பட்டியல் வெளியிடப்பட்டு முதலமைச்சர் அவர்கள் கப்பல் சாவியை வாங்கிக் கொள்ளத்தான் ஜப்பான் போகிறார். அப்படியே உடல் நிலை பரிசோதனையும் செய்து கொள்வார் என்று தலைமைச் செயலாளர் அந்தோணி அவர்கள் அறிவித்திருந்த செய்தியும் அத்துடன் இணைந்திருந்தது. அதே தினத்தந்தி முதல் பக்கத்தில்:-

எம்.ஜி.ஆர். இலாகா - நெடுஞ்செழியன் கவனிப்பார்

என்ற பெருந்தலைப்பில், முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். ஜப்பான் செல்வதால், அவர் வரும் வரையில் அவருடைய இலாகாக்கள் அனைத்தையும் நிதியமைச்சர் நெடுஞ்செழியன் கவனிப்பார். தமிழக அரசு செய்திக் குறிப்பில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

என்று பெட்டிச் செய்தி போல முக்கியத்துவத்துடன் ஒரு செய்தி ஒளி விட்டது!

ஆனால், மறுநாள் 27ஆம் தேதி சனிக்கிழமை காலை வெளிவந்த தினமணி இதழிலும், தினத்தந்தி இதழிலும் - முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் இலாக்காக்களை மூன்று அமைச்சர்கள் கவனிப்பார்கள் என்றும், போலீஸ் இலாகாவை வீரப்பன் கவனிப்பார் என்றும் தலைமைச் செயலாளர் அந்தோணியின் அறிவிப்பு முதல் பக்கத்திலேயே வெளியாயின!

அதுமட்டுமல்ல, அந்தோணி அறிக்கையில் முதல்வர் ஜப்பானில் இருந்து திரும்பும் போது, ஆங்காங் நகரில் ஒரு நாளும், சிங்கப்பூரில் ஒரு நாளும் தங்கி விட்டு வருவார் என்றும், திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டு ஜப்பானில் அவர் பத்து நாட்கள் தங்குகிறார் என்றும் கூறப்பட்டிருந்தது.

இதற்கிடையே முரசொலி கரிகாலன் பதில் என்ற தலைப்பில் ஆர்.கந்தசாமி, ஏ.ஐ. 208 நாலாவது தெரு, அண்ணா நகர், சென்னை 600 040 என்பவரால் ஒரு கேள்வி கேட்கப்பட்டிருந்தது. அதற்குப் பின்வருமாறு பதில் எழுதப்பட்டிருந்தது. இதோ அந்தக் கேள்வியும், பதிலும்:-

> கேள்வி:- முதல்வர் இலாகா அனைத்தையும் நாவலர் கவனிப்பார் என்று காலையிலே சொல்லப்பட்டது. சிலமணி நேரத்துக்குப்பிறகு அந்த இலாகாக்கள் மூன்று அமைச்சர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டு விட்டதே?
>
> பதில்:- அது அவர்களின் உட்கட்சி விவகாரம்! எனினும் காலையில் ஒரு அறிவிப்பும், மாலையில் ஒரு அறிவிப்பும் அரசின் சார்பில் வெளியிட்டதற்கு தலைமைச் செயலாளர் திருவாளர் அந்தோணிதான் விளக்கம் தர வேண்டும்.

இந்தக் கேள்வி பதில் அடங்கிய முரசொலி ஜூலை 31 காலை வெளிவந்தவுடன் - ஆகஸ்டு முதல் தேதி தினமணியிலும், தினத்தந்தியிலும் தலைமைச் செயலாளர் அந்தோணி அவர்கள் அளித்த பேட்டி வெளியாகியுள்ளது. அதில், முதல்வர் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டதையடுத்து அவரது இலாகாக்களை பிரிப்பதில் இரண்டு உத்தரவுகள் போடப்படவில்லையென்றும், ஜூலை 25ஆம் தேதியே மூன்று அமைச்சர்களுக்கு இலாகாக்கள் பிரிக்கப்பட்டு அதனைக் கவர்னரும் ஒப்புக் கொண்டுவிட்டார் என்றும், அதனை 26ஆம் தேதி உத்தரவாகப் பிறப்பிக்கப்பட்டது என்று அந்தோணி அவர்கள் விளக்கம் அளித்திருந்தார்!

விளக்கம் சரி! ஆனால் நமக்கு ஏற்படுகிற சந்தேகமெல்லாம் - 25ஆம் தேதி மாலையிலோ, இரவிலோ நிருபர்களைச் சந்தித்த அந்தோணி அவர்கள், முதல்வரின் இலாகாக்கள் மூ வருக்குப் பிரிக்கப்பட்ட விவரத்தையும், முதல்வர் இல்லாத

நேரத்தில் அமைச்சரவைக் கூட்டத்துக்கு யாரும் தலைமை வகிக்க முடியாது. அதனால் அமைச்சரவைக் கூட்டம் நடக்காது என்பதையும் அவர்களிடம் ஏன் கூறவில்லை? கூறியிருந்தால் தினமணி 26ஆம் தேதி இதழில் முதல்வர் இலாகாக்களை நாவலரே முழுப்பொறுப்பேற்று கவனிப்பார் என்று செய்தி வந்திருக்காதே!

அதுமட்டுமா? அ.தி.மு.க. அரசின், அதிலும் குறிப்பாக செய்தித்துறையின் ஆஸ்தான ஏடாகத் திகழுகிற தினத்தந்தியில் 26.7.85 அன்று, முதல்வர் இலாகா அனைத்தையும் நாவலரே கவனிப்பார் என்ற தமிழக அரசின் செய்திக் குறிப்பு தெரிவிப்பதாக முதல் பத்திச் செய்தி வெளியிடப்பட்டுள்ளதே! அந்தச் செய்திக்குறிப்பு - அதுவும் தமிழக அரசின் செய்திக் குறிப்பு, யாரால் தயாரிக்கப்பட்டது? யார் அதனை வெளியிட்டது?

அவ்வாறு ஒரு செய்திக் குறிப்பையே அரசாங்கம் வெளியிடாமல் இருக்கும்போது - தினத்தந்தி இதழ் எந்த அடிப்படையில் அதனைப் பிரசுரித்தது?

இரண்டு உத்தரவுகள் வெளியிடப்படவில்லை என்று மறுப்பறிக்கை கொடுத்த அந்தோணி அவர்கள் - 25ஆம் தேதியன்று இலாகா பிரிவினை குறித்துச் செய்தியாளர்களிடம் ஒருவிதமாகவும் - 26ஆம் தேதி மாலையில் வேறுவிதமாகவும் - அரசின் வாயிலாகத் தகவல்கள் தரப்பட்டதற்கு என்ன சமாதானம் கூறப் போகிறார்!

சிகிச்சைக்காக ஜப்பான் போகவில்லை - கப்பல் வாங்கத்தான் போகிறார்! இப்படி முதலில் செய்தி!

அவருடன் அவரது துணைவியார் சென்றார் - செல்ல வேண்டியதுதான்! உதவிக்கு ஒரு டாக்டர் சென்றார், அதுவும் சரி! மேலும் ஒரு அதிகாரி கூடத் தேவைப்பட்டிருக்கலாம்! கப்பல் வாங்குவதுடன், மருத்துவ பரிசோதனையும் ஜப்பானில் செய்து கொள்வது முக்கியம் என்பதை மனிதாபிமானத்துடன் ஏற்றுக் கொள்வதால் நாலு அல்லது ஐந்து பேருக்கு மேல் எதற்காகச் செல்ல வேண்டும்?

மூன்று அமைச்சர்கள் அவரது குடும்பத்தினர் - மொத்தம் பதினான்கு பேர்!

கப்பல் வாங்குவது என்ற பெயரால் ஒரு பெரிய பரிவாரத்துக்கான போக்குவரத்துச் செலவுகள் - பத்து நாட்களுக்கு

மேல் ஜப்பானில் தங்குகிற செலவுகள் - அந்நியச் செலாவணி வசதிகள்- ஒரு பகுதிதான் தமிழக அரசு ஏற்றுக் கொள்கிறது - மற்றவை அவரவர் சொந்தச் செலவு என்றால், மொத்தம் அந்தச் செலவே எவ்வளவு ஆகும்? அதற்கான வழி, வகை வசதிகள் யாவை?

அரசு காரியமாக கப்பல் வாங்க இத்தனைப் பேர், ஜப்பான் சென்றார்கள்! அத்துடன் உடல் பரிசோதனையும் முதல்வருக்கு நடந்து, ஜப்பானில் இருந்து முதல்வர் நமது அந்தோணியுடன் உரத்த குரலில் ஜெயில்சிங் விஜயம், காவிரிப் பிரச்சினை, கிருஷ்ணா திட்டம், எலக்ட்ரானிக் தொழிலில் ஜப்பான் வளர்ச்சி, வேளாண்மையில் ஜப்பான் கண்டுள்ள முன்னேற்றம், சூரிய ஒளியில் மின்சாரம் தயாரித்தல் ஆசிரியர் போராட்டம் தவிர எல்லாவற்றையும் பேசக்கூடிய அளவுக்கு உடல் நலம் பெற்றுவிட்டார் என்று அந்தோணியே நிருபர்களிடம் அறிவித்தார். அறிக்கையும் விடுத்தார்.

பிறகு எதற்காக, அந்தப் பரிவார சமேதராய் முதலமைச்சர் அமெரிக்காவுக்கு எழுந்தருள வேண்டும்?

எத்தனையோ முறை அழைத்தவுடன் சென்னைக்குப் பறந்து வந்த அமெரிக்க டாக்டர் பிரீட்மென் அவர்கள், இப்போது அழைத்தால் சென்னைக்கு வந்து முதல்வரின் உடல்நிலையைப் பரிசோதித்து விட்டுப் போயிருக்க மாட்டாரா?

ஜப்பானிலிருந்து முதல்வர் மிக நன்றாக இருக்கிறார் எனக் கூறிவிட்டு பிறகு அமெரிக்கா போவானேன்?

ஜப்பானிலும், அமெரிக்காவிலும் இந்தப் பெரிய பரிவாரத்துக்கான செலவுகள் அரசாங்கத்தினுடையதா? தனிப்பட்டவர் பொறுப்பு என்றால் அவ்வளவு தொகைக்கு எங்கிருந்து பணம் புரண்டது?

அதிலும் முரண்பாடு! அமெரிக்காவில் எம்.ஜி.ஆர். நிருபர்களிடம் சொன்னதாக ஒரு தகவல்!

அமெரிக்காவில் உள்ள இந்தியர்களைச் சந்திக்கத் திட்டமிட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் அவர்களை முதலீடு செய்ய வைப்பதற்கான முயற்சியில் ஈடுபடப்போகிறேன். இந்த வகையில்

எனது அமெரிக்க விஜயம் அதிகாரபூர்வமானது!

அதிகாரபூர்வமான விஜயம் என்றால்தான், அனைத்துச் செலவையும் அரசாங்கத்தின் தலையில் கட்டமுடியும்!

தமிழ்நாட்டு மக்களின் காதிலும், அரசியல்வாதிகளின் காதிலும் எம்.ஜி.ஆர். நன்றாகப் பூச்சுற்றுகிறார்!

தூங்குகிறவர்கள் தொடையில் கயிறு திரிக்கிறார்! இப்படியும் கூறலாம்!

இந்தா! இந்தா! என்று மத்திய அரசு கொடுத்திட முன்வந்த ரெயில்பெட்டி தொழிற்சாலையைக் கோவைக்கு அருகிலே அமைத்திட சகலவிதமான வாய்ப்புக்கூறுகள் இருந்தும் - அதைப் பற்றிக் கவலைப்படாமலே இருந்து - அந்தப்பெரும் தொழிற்சாலையை அடுத்த மாநிலத்திற்குக் கோட்டை விட்டவர். அசோக்லேலண்டு விரிவாக்கத் தொழிற்சாலை, ஆவடி எலக்ட்ரானிக் தொழிற்சாலை ஆகியவற்றையும் அடுத்த மாநிலங்களுக்கே அர்ப்பணித்தவர். இப்போது அமெரிக்காவிலே இருக்கிற இந்தியர்களைத் தமிழகத்துக்கு அழைக்கிறாராம் முதலீடு செய்ய!

யார் அந்த இந்தியர்? இங்கே வந்து என்ன முதலீடு செய்யப் போகிறார்?

அந்த இந்தியர் அடிக்கடி சென்னை இராமாவரம் தோட்டத்துக்கு வருபவர்தானே! அப்படி வரும் போது அவர் தமிழகத்தில் முதலீடு செய்வது குறித்து முதல்வர் பேசியிருக்கக் கூடாதா?

தமிழகத்தில் அமெரிக்க இந்தியர்களின் பொருளாதார முதலீடு என்றால் - தொழிற்சாலைகளின் வாயிலாகத்தானே!

அதற்குத் தொழில் மந்திரி ராஜாராம் அவர்களையல்லவா அழைத்துச் சென்றிருக்க வேண்டும்?

அவரை விட்டு விட்டு மின்துறை அமைச்சரையும், போக்குவரத்து அமைச்சரையும் அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்வானேன்?

ஜப்பானில் கப்பல் சாவியை வாங்கியதுடன் போக்குவரத்து அமைச்சரின் வேலை முடிந்து விட்டதே! பிறகு அவர் எதற்காக அமெரிக்காவுக்கு?

அங்கே பஸ்கள் எல்லாம் எப்படி ஓடுகின்றன என்று பார்ப்பதற்காகவா?

Enquiries made in New York show that during the Press conference, Mr.M.G.Ramachandran was seen whispering answers into the ear of Mr.S.Ramachandran seated next to him and the latter in turn conveyed the answers to pressmen.

நியூயார்க்கில் விசாரித்த அளவில் அமெரிக்கா பத்திரிகையாளர் பேட்டியில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தன்னருகே உட்கார்ந்திருந்த பண்ருட்டி ராமச்சந்திரன் காதுகளில் முணு முணு என்று கூறிய பதில்களை செய்தியாளர்களிடம் பண்ருட்டி ராமச்சந்திரன் முறையே கூறினார்.

என்று இன்றைய 14.8.85 இந்து இதழில் குறிப்பு என்ற அளவில் செய்தி வளைவுக் கோட்டுக்குள் வெளியிடப் பட்டிருந்தது!

இப்படிக் காதுகளில் முணுமுணுத்து, அதனை நிருபர் களிடமும் உரக்கச் சொல்வதற்கும், மொழி பெயர்ப்பதற்கும் - ராசாராம் அவர்களால் இயலாதா?

தொழில் அமைச்சர் என்ற முறையில், அமெரிக்காவில் உள்ள இந்தியர்களிடமும் முதல்வருக்குத் துணையாக பேசியிருக்கலாம். தமிழகத்தில் முதலீடு செய்வதுபற்றி! அத்துடன் முதல்வர் காதில் முணுமுணுத்ததையும் நிருபர்களிடம் கூறியிருக்க முடியுமே!

தமிழ்நாட்டில் உள்ளவர்களை முழு முட்டாள்களாகக் கருதிக்கொண்டு - பொக்கிஷத்தைக் காலி செய்து கொண்டிருக்கிறார்கள்!

ஏன்? எப்படி? என்ன நியாயம்? என்று கேட்கக் கூடிய அளவுக்கு முதுகெலும்பு உள்ளவர்கள் தமிழ் நாட்டில் குறைந்து போய் விட்டார்களா? என்று வெளிநாட்டிலே இருக்கிறவர்கள் கேட்பது நமது காதுகளில் விழத்தான் செய்கிறது!

இன்னும் என்னென்ன நடக்குமோ? நடக்கட்டும்! நாடு, காடாகும் வரையில் நடக்கட்டும்!

அன்புடன்

மு.க.

15-08-1985

1333. சுதந்திர நாளில் - மூன்று விஷயங்கள்!

உடன்பிறப்பே,

இந்த ஆண்டு சுதந்திரநாள் குறித்து மூன்று விஷயங்களைக் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

ஒன்று இந்தியத் திருநாட்டைப்பொறுத்த விஷயம்!

மற்றொன்று அஸ்ஸாம் மாநிலத்தைப் பொறுத்த விஷயம்!

மூன்றாவது நமது மாநிலமான தமிழ்நாட்டைப் பொறுத்த விஷயம்!

1. இந்தியாவின் இளம் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள், ஆகஸ்டு 15 காலையில் காந்தியடிகள் நினைவிடத்துக்கும், தனது பாட்டனார் நேருபிரானின் நினைவிடத்துக்கும், தனது அன்னையார் இந்திராகாந்தி அம்மையார் நினைவிடத்துக்கும் சென்று - அவர்களின் உடல் எரியூட்டப்பட்ட மேடையில் மலர் வளையம் வைத்து வணங்கிவிட்டு அதன் பிறகே தேசியக்கொடி ஏற்றும் விழாவுக்குச் சென்றிருக்கிறார். தேசத்தந்தையாம் காந்தியடிகளின் நினைவிடத்திற்கும், நேரு, இந்திரா காந்தி இருவரின் நினைவிடத்திற்கும் சென்று மரியாதையும், வணக்கமும் செலுத்திய ராஜீவ் அவர்கள், இந்தியப் பிரதமராகக் குறைந்த காலமே இருந்தாலும் நிறைந்த புகழ் பெற்றவரும், நாட்டு விடுதலைப்போரில் தியாகத் திருவிளக்காகத் திகழ்ந்தவருமான லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் நினைவிடத்திற்கும் சென்று மலர்தூவி மரியாதை செலுத்தியிருக்கலாம்!

சோவியத் ரஷ்யா, பாகிஸ்தான் அதிபர்கள் அவரது சவப்பெட்டியைத் தோள்கொடுத்துத் தூக்கி தாஷ்கண்டிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பிவைத்த அந்தக் காட்சியை இன்னும் மறக்க முடியவில்லை அல்லவா?

பரவாயில்லை; அடுத்த ஆண்டு இதனை அவருக்கு நினைவு படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். முப்பத்து எட்டு ஆண்டுக்காலமாக சுதந்திரத்தை அனுபவிப்பதாகச் சொல்லப்படுகிற பரந்த இந்தப் பெருநாட்டில் டெல்லிச் செங்கோட்டையில் தேசியக் கொடி ஏற்றிய இந்த ஆண்டு நிகழ்ச்சியை ஏடுகளில் காணும் போதும், தொலைக்காட்சியில் பார்த்த போதும், ஒரு நெடிய பெருமூச்சுத்தான் வெளிப்பட்டது!

குண்டு துளைக்க முடியாத கவசத்தை அணிந்து கொண்டு, அதற்கு மேலே சட்டையை மாட்டிக் கொண்டு, குண்டு துளைக்க முடியாத கண்ணாடிப் பெட்டி போன்ற கூண்டுக்குள் நின்று கொண்டு இந்தியாவின் பிரதமர் முதன்முதலாகச் சுதந்திர தினப் பேருரையாற்றினார் என்பது - பிரதமரின் பெருமையைக் குறைப்பது ஆகாது! இந்தியாவின் பெருமையையே குறைப்பது ஆகும்!

ஆம்! அந்த அளவுக்கு வன்முறையாளர்கள் - கொலைவெறிக்கும், கொடுமைக்கும் தங்களைத் தயார்படுத்திக் கொண்டவர்கள் இந்தியாவுக்குள்ளும் இருக்கிறார்கள் என்கிற போது, நாம் எல்லாம் இந்த நாட்டவர் என்று சொல்லிக் கொள்வதற்குச் சிறிது வெட்கமாகத்தானிருக்கிறது!

வன்முறை இருபுறமும் கூர்மை உள்ள ஒரு கத்தி!

அந்த ஆபத்தான கத்தியை யார் பயன்படுத்தினார்கள் - யார் வன்முறையை முதலில் ஊக்கப்படுத்தினார்கள் - இவை நாடறிந்த உண்மை எனினும், ஒரு தவறுக்கு இன்னொரு தவறு பரிகாரமாகி விடாது என்ற நோக்கில் சிந்திக்கும் போது, பிரதமர் ராஜீவுக்கு இத்தனைப் பாதுகாப்புகள் தேவைதானா என்று நான் கேட்க மாட்டேன்!

ஆனால் எனக்குள்ள வேதனையெல்லாம், இப்படிப் பெருமளவுக்கு - இந்திய வரலாற்றில் இல்லாத அளவுக்கு - இந்தியா சுதந்திரம் பெற்றிருக்கிறது! ஆனால் இந்தியப் பிரதமர் சுதந்திரமாக இயங்க முடியவில்லை! என எண்ணி வருந்துகிற அளவுக்கு - திடீர் விபத்தோ, அபாயமோ - நிலநடுக்கம் போலத் தோன்றிடும் நிலையில் வன்முறைக் கொடுமை பதுங்கிக் கொண்டிருக்கிறதே என்பதைப் பற்றியதுதான்!

இவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவைதான் என்ற முடிவுக்கு நான் வருகிற சமயத்தில், ஒருவேளை இப்படிப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் - ஒரு இளக்காரமான எண்ணத்தை வன்முறையாளர்கள் நெஞ்சத்தில் தூண்டுவதற்குக் காரணமாக அமைந்து விடுமோ என்றும் அஞ்சுகிறேன்!

நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும் - இனி நடப்பவைகளாவது நல்லவைகளாக இருக்கட்டுமென்று நான் அடிக்கடி நினைவுபடுத்துவதையே இந்தக் கடித வாயிலாக நினைவுபடுத்தி - கருத்து வேறுபாடுகளை ஒரு ஜனநாயக நாட்டில் அறவழி போராட்டங்களின் மூலமே தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பதையும், உயிர்வாங்கும் செயல்களால் அந்தக் கருத்து வேறுபாடுகள் தொடர் கதையாகி, பழிக்குப் பழி எனும் பயங்கரங்களே மிகுந்திடும் என்பதையும் கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அற வழியில் தொடங்கி நடைபெறும் போராட்டங்களையும், அரசு அதே அறவழியில் அணுகிடவேண்டும் என்பதும் இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்ல வேண்டிய ஒன்றாகும்!

தீவிரவாதத்துக்கு தூபம் போடப்பட்டு - தீவிரவாதிகளின் ஆதரவையும் கட்சி நலனுக்காகப் பெற்று - பஸ்மாசூரனுக்கு பரமசிவன் வரங் கொடுத்த கதையாகப் பஞ்சாப் நிலவரம், கலவரமாக உருவெடுத்து - ஆயிரக்கணக்கானோர் உயிர் இழந்து, அதன் விளைவு அன்னை இந்திரா காந்தியையே இந்தியநாடு இழக்கும் கொடூரமாக மாறி - இந்திரா காந்தியின் படுகொலை எதிரொலியாக டெல்லித் தலைநகரில் அப்பாவிச் சீக்கிய மக்கள் குடும்பம் குடும்பமாக அழிய நேரிட்டு - அம்மவோ! இவ்வளவு பேரிழப்பு, சீரழிவுக்குப் பிறகன்றோ பஞ்சாபில் அமைதியின் ஒளிக்கீற்று தோன்றியிருக்கிறது!

2. அந்த ஒப்பந்தத்தையடுத்து சுதந்திர நாளில் நமது பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், அஸ்ஸாம் குறித்த மகிழ்ச்சியான முடிவையும் அறிவித்திருக்கிறார். அஸ்ஸாம் உடன்பாடு குறித்து - அந்தச்செய்தி வெளிவந்தவுடனே பி.டி.ஐ. செய்தி நிறுவனத்திலிருந்து தொலைபேசி வாயிலாக எனது கருத்தைக் கேட்டார்கள். நான் தெரிவித்துள்ள கருத்தைச் சில நாளேடுகளில் கண்டிருப்பாய்! விடாமுயற்சியாகத் தொடர்ந்து பேசிப்பேசி,

இறுதியில் அஸ்ஸாம் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்த ராஜீவைப் பாராட்டுகிற அதே வேளையில் - அந்த மாநிலத்தில் இடைவிடாது உறுதியுடன் - ஒற்றுமையுடன் - உணர்வுபூர்வமாக - நின்று போராடிய மக்களுக்கும், அந்தப் போராட்ட இயக்கங்களின் தலைவர்களுக்கும் புகழாரம் சூட்டுவதும் நமது கடமையாகும்!

ஏறத்தாழ ஆறு ஆண்டுகளாக அஸ்ஸாம் மாநில மக்கள் இயக்கங்களும், மாணவர், இளைஞர் அமைப்புகளும் நடத்திய போராட்டத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள்.

பங்களாதேஷ் போராட்டத்தையொட்டி, அந்த நாட்டிலேயிருந்து பத்து லட்சத்துக்கு மேற்பட்டோர் அஸ்ஸாமில் குடியேறி விட்டார்கள்!

அவர்களில் வங்காளிகள், முஸ்லிம்கள் எண்ணிக்கையில் பெருந்தொகையினர்!

எனினும் அவர்கள், வெளிநாடாகிவிட்ட பங்களா தேஷிலிருந்து அஸ்ஸாமில் குடியேறிவிட்ட காரணத்தால் - அஸ்ஸாம் மாநிலத்தவருக்கு வேலை வாய்ப்பு, கல்வி, மருத்துவம், தொழில் போன்ற வசதிகள் குறையவும் - அஸ்ஸாம் மாநில மக்களின் கலாச்சாரம், மொழி இவைகளுக்கு ஊறு ஏற்படக்கூடிய சூழல் தோன்றவும் - அந்த ஆபத்தை எதிர்த்துப் போராட வேண்டிய காலத்தின் கட்டாயம் அஸ்ஸாம் மக்களுக்கு ஏற்பட்டுவிட்டது!

பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கியது தானே இந்தியா! அந்த தேசிய இனங்களுக்கான கலாச்சாரம், மொழி, உரிமைகள் இவைகளுக்கு ஊனம் விளைவிப்பதாக இருந்தால் ஒருமைப்பாடு என்பது அர்த்தமற்றதாகிவிடும் என்பது தானே நம்முடைய கழகத்தின் வாதமாகும்!

அதிலும், வெளிநாட்டுக்காரர்கள் ஏற்கனவே இந்தியாவில் இருந்தாலும், இப்போது பாகிஸ்தானில் இருந்து பிரிந்த பங்களாதேஷ்காரர்கள் அஸ்ஸாம் மக்களின் கலாச்சாரம், மொழி, வேலைவாய்ப்பு, கல்வி, தொழில் போன்ற உரிமைகளுக்குச் சேதாரம் விளைவிப்பதை அஸ்ஸாம் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை!

போராடினார்கள்! போராடினார்கள்! போராடிக் கொண்டே இருந்தார்கள்!

பொதுத் தேர்தல் என்ற ஒரு நாடகத்தை 1983-இல் மத்திய அரசு அஸ்ஸாமில் நடத்தியபோது, அந்த மாநில மக்கள் அந்தத் தேர்தலைப் புறக்கணித்தனர். எந்தவொரு தொகுதியிலும் ஐந்து சதவிகிதம், பத்து சதவிகிதத்திற்குமேல் வாக்குப்பதிவு நடைபெறவில்லை!

அந்தத் தேர்தலே செல்லாது என அறிவிக்க வேண்டியதற்கு மாறாக - தொகுதிக்கு நூறு இருநூறு வாக்குகளைப் பெற்ற உறுப்பினர்களைக் கொண்டு ஒரு சட்டசபை, ஒரு அமைச்சரவை என அமைப்பதற்கு மத்திய அரசு, குடியரசுத் தலைவர், தேர்தல் கமிஷன் அனைவரது ஆசியும் இருந்தது தான் இந்திய ஜனநாயகத்தில் வியப்புக்குரிய வேதனைச் செய்தியாகும்!

பொம்மை ராஜ்யம் ஒன்று அமைந்த பிறகும் - போராட்டம் நிற்கவில்லை!

மாநில உரிமைகளையும், தங்களது தனித்த கலாசாரம், மொழி, ஆகியவற்றையும் காப்பாற்ற ஒன்றுபட்டு அஸ்ஸாம் மக்கள் நடத்திய வீரமிக்க - உறுதியான போராட்டம் வெற்றி பெற்றுவிட்டது!

அதற்கு இணக்கம் தெரிவித்த பிரதமர் பாராட்டப்பட வேண்டியவர்!

3. மூன்றாவது, தமிழ்நாட்டைப் பொறுத்த விஷயம் என்று தொடக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறேன் அல்லவா! அதுபற்றி நாளைக் கடிதத்தில் எழுதுகிறேன்!

அன்புடன்

மு.க.

17-08-1985

1334. சுதந்திர நாளில் - நமது தாய்த் தமிழ்நாடு!

உடன்பிறப்பே,

நேற்றைய கடிதத்தின் தொடர்ச்சி இது!

சுதந்திர நாளில் மூன்று விஷயங்கள் என்று குறிப்பிட்டிருந் தேனே! அதில் மூன்றாவது, தமிழ் நாட்டைப் பற்றியது என முடித்திருந்தேன்!

சுதந்திர நாளில் தமிழ்நாட்டுத் தலைநகரில் - தலைமைச் செயலகக் கோட்டைக் கொத்தளத்தில் முதலமைச்சருக்குப் பதிலாக நிதியமைச்சர் நாவலர் தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரை நிகழ்த்தினார்!

அவரது உரை தொலைக்காட்சியில் டி.வி. ஒலி, ஒளி இரண்டுமாகக் காட்டப்பட்ட போது மகிழ்ச்சியடைந்த வர்களில் நானும் ஒருவன்!

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தேசியக் கொடியை ஏற்ற முடியாததற்கான நிலையை நாவலர், தனது உரையின் தொடக்கத்திலேயே கள்ளம் கபடமின்றி வெள்ளையுள்ளத்துடன் குறிப்பிட்டார்!

மருத்துவப் பரிசோதனைக்காக அமெரிக்கா சென்றுள்ள பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், பரிசோதனை முடிந்து இப்போது அவர் உடல் நிலை சிறப்பாக இருக்கிறது என்று செய்தி வந்திருக்கிறது

கள்ளம் கபடமின்றி நாவலர் பேசியிருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கிறேனே! அதற்குக் காரணம் புரிகிறதா?

அமெரிக்காவில் நிருபர்கள் பேட்டியில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், பண்ருட்டியின் காதில் கிசு கிசுத்தது

என்ன? அதாவது இந்து ஏடு குறிப்பிட்டபடி பண்ருட்டி காதுக்குள் எம்.ஜி.ஆர். அவர்கள் கிசு கிசுக்க - பத்திரிக்கை யாளரிடம் பண்ருட்டி விவரிக்க - எல்லா ஏடுகளிலும் வந்த செய்தி என்ன?

அமெரிக்காவில் உள்ள இந்தியர்கள் தமிழ் நாட்டுக்கு வந்து, தொழில் வளர்ச்சிக்கான முதலீடுகள் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ள வந்திருக்கிறேன். எனவே இது அதிகார பூர்வமான பயணமாகும்

இப்படியொரு கருத்தை அமெரிக்கச் செய்தியாளர்களிடம் எம்.ஜி.ஆர். தெரிவித்ததன் வாயிலாகத் தனது பயணமும், தன்னுடன் வந்துள்ள இரண்டு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் பயணமும் அரசாங்கச் செலவு - ஜப்பான், அமெரிக்காவில் சுற்றுலா - தங்கும் வசதிகள் - இத்யாதி இத்யாதி அனைத்தும் தமிழ்நாட்டு அரசாங்கக் கஜானாவின் தலையில்தான் விழவேண்டுமென்பதைக் குறிப்பாக உணர்த்தியிருக்கிறார்!

ஆனால் முதலமைச்சரின் கூற்று, முற்றிலும் பொய்யானது என்பதைச் சொல்லாமற் சொல்வது போல - மருத்துவப் பரிசோதனைக்காக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அமெரிக்கா சென்றார் என்று நாவலர் அவர்கள் கோட்டை கொடியேற்று விழா உரையின் தொடக்கத்திலேயே போட்டுடைத்து விட்டார்!

கப்பல் வாங்க ஜப்பானுக்குப் பதினான்கு பேர் கொண்ட பெரும் பரிவாரம்! உதவிக்குச் சிலர்! அந்த உதவியாளர்களுக்கு உதவி செய்யச் சிலர்! ஜப்பானில் பத்து நாள் சுற்றுலா!

அங்கிருந்து செய்திகள், முதலமைச்சர் நன்றாக இருக்கிறார்! மிகத் தெளிவாகப் பேசுகிறார்! உரத்தக் குரலில் டி.வி. அந்தோணியுடன் நீண்ட நேரம் உரையாடினார்!

அடுத்து - அதே பெரும் பரிவாரத்தில் மூன்று நான்கு நீங்கலாக அமெரிக்கா விஜயம்!

அங்கிருந்து செய்திகள் - முதலமைச்சர் மிகவும் நன்றாக இருக்கிறார்! திடகாத்திரமாக இருக்கிறார்! நிருபர்களுக்கு பேட்டியளித்தார்! வாஷிங்டன் இந்தியத் தூதுவர் அலுவலகத்தில் சுதந்திரதினக் கொடியேற்று விழாவில் கலந்து கொள்கிறார்! அதிலும் ஒரு ஆஸ்தான ஏடு,

அமெரிக்காவில் இந்தியத் தூதரகத்தில் எம்.ஜி.ஆர். தேசியக் கொடியை ஏற்றி வைக்கப்போகிறார் என்றே செய்தி வெளியிட்டு விட்டது!

நான் தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம் இதுதான்!

முதலமைச்சர் தமிழ்நாட்டில் இருக்கும்போதே நல்ல உடல் நலத்துடன் இருக்கிறார் என்றுதான் செய்திகள் வந்துகொண்டேயிருந்தன!

அவர், பரிவாரங்களுடன் ஜப்பானுக்கு செல்வதே கப்பல் வாங்கும் அதிகாரபூர்வமான பயணம்தான் என்று கூறப்பட்டது!

அடுத்து, அதே பட்டாளம் அமெரிக்காவுக்குச் சென்று, அந்த விஜயத்தின் நோக்கம் - அமெரிக்காவில் உள்ள இந்தியர்கள், தமிழ்நாட்டில் முதலீடுகளைச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதற்காகவே எனக் கூறப்பட்டு, அந்தப் பயணத்திற்கும் அதிகாரபூர்வம் என்று தமிழக அரசின் வாய்மையே வெல்லும் என்று பொறிக்கப்பட்ட கோபுர முத்திரை குத்தப்பட்டு விட்டது!

இத்தனைக்கும் பிறகு, முதலமைச்சர் நலமுடன் இருக்கிறார் - தெம்புடன் இருக்கிறார் - சிரித்தார் - கைகுலுக்கினார் - பேசினார் - என்றெல்லாம் அரசின் சார்பில் வலியச் செய்திகளைத் தர வேண்டிய அவசியம் என்ன வந்தது?

அவர் நலமுடன் இருக்க வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு கொள்பவர்கள் - மனிதாபிமான முடைய வர்களாகவே இருக்க முடியாது! கட்சி மாறுபாடுகளைக் கடந்து, எதிர் எதிர் அணியில் இருப்பவர்கள் ஒருவருக் கொருவர் உளமார வாழ்த்து சொல்வதில் ஒரு பண்பாடு மிக்க பாரம்பரியத்தைக் கொண்டதுதான் தமிழ்நாடு!

ஆனால் அமைச்சர்கள், அதிகாரிகள், ஒவ்வொரு நாளும் முதல்வரின் உடல் நிலை குறித்து ஏதாவதொன்றைச் சொல்லிக் கொண்டேயிருப்பதற்கு என்ன காரணம்?

கப்பல் வாங்க ஜப்பானுக்கு! அமெரிக்காவில் உள்ள இந்தியர்களைத் தமிழகத்தில் தொழில் தொடங்க அழைத்திட அமெரிக்காவுக்கு!

இந்த இரண்டு பயணமும் - எம்.ஜி.ஆரின் மருத்துவப் பரிசோதனைக்காக அல்ல!

கப்பல் வாங்கப் போன இடத்தில் மருத்துவப் பரிசோதனை!

அமெரிக்க இந்தியர்களை தமிழகத்தில் முதலீடு செய்ய அழைக்கப் போன இடத்தில் மருத்துவப் பரிசோதனை!

அவ்வளவுதான்! இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால் - இருநாட்டுப் பயணச் செலவும் - சுற்றுலா மற்றும் தங்கும் விடுதிகள் செலவும் - தமிழ் நாட்டு மக்களின் வரிப் பணத்திலிருந்து செலவுக் கணக்கு எழுதப்படும்!

சிறுவயதில் படித்த ஒரு கதையில் - ஊசியை வாங்கிப் பனைமரத்தில் குத்தி அந்த மரத்தை நான்கு மேதைகள் தூக்கிக் கொண்டுவந்து, தங்கள் குருஜீயிடம் சேர்த்தார்கள் என்று விவரிக்கப்படும்!

அதுபோலக் கப்பல் வாங்கப் பதினாலு பேர்! அமெரிக்க இந்தியர்களைத் தமிழகத்தில் தொழில் தொடங்க அழைக்கச் சுமார் பத்துப்பேர்!

ஆனால் நமது நாவலரோ, மருத்துவப் பரிசோதனைக்காக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். சென்றார் எனத் தேசியத் திருவிழாவில் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார்.

ஆளுங்கட்சி ஆஸ்தான ஏடான தினத்தந்தியில் 16.8.85 நாலாம் பக்கத்தில், அமெரிக்காவில் சுதந்திர தினம் - எம்.ஜி.ஆர். கலந்து கொண்டார் எனத் தலைப்பிட்டு ஒரு செய்தி வெளியிட்டிருந்தது!

அமெரிக்க சுதந்திர தினம் இப்போது எங்கு வந்தது? எப்படி வந்தது? என்று நான் கூட ஆச்சரியப்பட்டுச் செய்தியைப் படித்தேன். வாஷிங்டனில் உள்ள இந்திய தூதரகத்தில் நடந்த இந்தியச் சுதந்திர தின விழாவில் எம்.ஜி.ஆர். கலந்து கொண்டதைத் தான் அப்படிக் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிந்தது. அந்தச் செய்தியில் முக்கியமான பகுதி பின்வருமாறு:-

வைத்தியப் பரிசோதனைக்காக அமெரிக்கா சென்ற எம்.ஜி.ஆர். புரூக்ளின் ஆஸ்பத்திரியில் பரிசோதனைகளை முடித்துக் கொண்டு வாஷிங்டன் சென்றார்!

ஆக, ஜப்பான்-அமெரிக்கா இரு பயணங்களின் நோக்கம் வைத்தியப் பரிசோதனைதான்!

நான் வேண்டாமென்று சொல்லவில்லை! யாரும் சொல்ல மாட்டார்கள்!

அதற்கு இவ்வளவு பெரிய கூட்டம் போக வேண்டுமா?

இந்த நியாயமான கேள்விகளுக்குப் பதில் கூறத்தானே வேண்டும் அரசு!

உண்மையான நோக்கத்தை மறைத்துவிட்டு - நொண்டிச் சமாதானங்களைத் தேடியலைந்து, அதனைச் செய்தியாளர்கள் வாயிலாக மக்களிடையே பரப்புவது பெரும் பொறுப்புகளில் இருப்பவர்களுக்கு அழகா?

அந்தப்பணம் என்பது, மக்கள் தருகிற வரிப்பணம்தானே! மக்களின் பணம்தானே!

பிரதமருக்கான பாதுகாப்புகள் குறித்து நேற்று எழுதியிருந்தேன்! தேவையெனினும் - என் எண்ணங்கள் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டியிருந்தேன்!

தமிழ்நாட்டில் என்ன நிலைமை? முதலமைச்சர் வீட்டை விட்டோ, தோட்டத்தை விட்டோ, கோட்டையை விட்டோ புறப்படுகிறார் என்றால் - வெளிநாட்டு ஜனாதிபதிகள், பிரதமர்கள் வருகிற போது கூட இந்த அளவுக்குப் போக்குவரத்துகள் தடைப்படுத்தப் படுவதில்லை!

முதல்வரின் காருக்கு முன்னாலே இரண்டு ஜீப்! பின்னாலே இரண்டு ஜீப்!

அருமை நண்பர் அப்துஸ்சமத் இல்லத்துத் திருமணத்துக்குச் சென்றிருந்தேன் - முதல்வர் வந்து கொண்டிருக்கிறார் என்றார்கள்! மண்டபத்துக்குள் நுழைந்து விட்டார் என்றார்கள்! காக்கி உடையணிந்த போலீசார் நூற்றுக்கணக்கில் - அத்துடன் அதிகாரிகள் - காக்கி உடையணியாத போலீசார் ஐம்பது பேருக்கு மேல்! - படபடவென பூட்ஸ் ஒலிகள்! ஓரமாக உட்கார்ந்திருந்த என் காலையே ஒரு காவலர் மிதித்து வலியேற்படுத்தி விட்டார் என்றால் பாரேன்! அத்துணை ஆர்ப்பாட்டம்! அத்துணை அமளி! பொதுமக்களால் அல்ல! போலீசாரால்!

கடந்த காலங்களில் ராஜாஜி, ஓமந்தூரார், காமராஜர், பக்தவத்சலனார், அண்ணா, அடியேன் - அரசு விழாக்களில் - திருமண நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டபோதும் சரி, தலைமைச் செயலகத்துக்குச் சென்ற போதும் சரி - இப்படிப் படாடோபமான பந்தோபஸ்து ஏற்பாடுகள், மக்களுக்குத் தொல்லை தருகிற போலீஸ் தர்பார்கள் இருந்ததே இல்லை!

அதற்காகப் பாதுகாப்பே தேவையில்லை என்பது என் வாதமல்ல! அதற்கும் ஒரு எல்லை வேண்டாமா? எளிமை வேண்டாமா?

1965 மொழிப்புரட்சியின் போது தான் பக்தவத்சலனார் அவர்களுக்குப் பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டது!

ஆனால் இன்று, சாதாரண நாட்களிலேயே - முதல்வர் அலுவலகத்திற்கு வருவதற்கே, போக்குவரத்தைப் போலீசார் ஸ்தம்பிக்கச் செய்வது வேதனை நிறைந்த வேடிக்கை!

இந்தப் பாதுகாப்பில் ஒரு சிறு துளியாவது பொது மக்களுக்குக் கிடைக்கிறதா?

எப்படியோ புகழுடன் விளங்கிய தமிழகப் போலீஸ்துறை, எந்தெந்த சாம்ராஜ்யாதிபதிகளுக்கோ, எடுப்பார் கைப்பிள்ளையாகி விட்ட பரிதாபத்தையே காண முடிகிறது, தமிழகத்தில்!

திரு.பால்ராஜ் விவகாரத்தைப்பார்! நாட்டில் போலீஸ் இருக்கிறதா என்ற கேள்வி எழாதா?

நண்பர் சோ எப்படியெல்லாம் அசிங்கமாக மிரட்டப்படுகிறார்? கொடுத்த புகாரையே இல்லையென மறுக்கிறது போலீஸ் துறை என்றால், தமிழ்நாட்டுச் சட்டமும் ஒழுங்கும் எங்கு போய் முட்டிக் கொள்வது?

குமுதம் இந்த வார இதழில் ஒரு கேள்வி, பதில்!

சோ,வைப் பற்றி ஒட்டப் பட்டிருந்த சுவரொட்டியைப் பார்த்தீரா? இது கேள்வி!

விளைவு, சுமன் மீதுள்ள குற்றச் சாட்டிலேயே இப்போது சந்தேகம் வந்துவிட்டது! இது பதில்!

குமுதமே குமுறுகிறது என்றால், தமிழ் நாட்டில் எல்லாத் துறைகளிலும் நடக்கிற அக்கிரமங்களை - அதிலும் குறிப்பாகச் சட்டம் ஒழுங்கு என்ற பேரால் நடக்கிற

அக்கிரமங்களைத் தடுக்க - இனியும் தயங்கிக் கொண்டிருப்பதில் பயனில்லை!

இதோ பாரேன் ஒரு பட்டியலை! சுதந்திர விழா கொண்டாடும் இந்த ஆகஸ்டு திங்கள் முதல் தேதியிலிருந்து பதினைந்தாம் தேதி வரையில் - பதினைந்தே நாட்களில்;

- ஆகஸ்டு 1 - தர்மபுரி மாவட்டம் போச்சம்பள்ளி கிராமத்தில், லட்சுமணக் கவுண்டர் என்பவர் வீட்டில், முகமூடிக் கொள்ளையர் புகுந்து, அனைவரையும் கட்டிப் போட்டு விட்டு பெருங் கொள்ளையடித்துச் சென்றனர்.
- அதே ஆகஸ்டு முதல் தேதி சேலம் நாமக்கல் கணேசபுரத்தில், குமார் என்ற குப்புசாமியையும், அவரது மனைவியையும் கொலை செய்துவிட்டு - பணம், நகைகள், தாலி அனைத்தையும் கொள்ளையடித்தனர்.
- அதேநாளில் திருவள்ளூரில், சாராயக் குடி தகராறில் தாமோதரன் என்பவர் கொலை செய்யப்பட்டார்.
- ஆகஸ்டு 2 - சென்னை ரெயில் பெட்டி தொழிற்சாலை அதிகாரி ராமா என்பவரின் மனைவி பிரபாசங்கரியை ஒருவன் கத்தியால் குத்திவிட்டு நகைகளைப் பறித்துச் சென்றான்.
- அதேநாளில் கம்பூர் அருகில் உள்ள காணகுப்பம் - சுப்பிரமணியமும், அவரது குடும்பத்தினரும் - மாஜிஸ்டிரேட் முன்னால் வந்து போலீசார் தொல்லை தாங்க முடியவில்லை என ஒரு மனுவைக் கொடுத்து விட்டு வெளியே வந்து விஷங்குடித்து விட்டனர். உடனே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்!
- ஆகஸ்டு 3 - ஜெயங்கொண்டம் அருகில் வீரமணி என்பவர், வரதட்சணைக் கொடுமை காரணமாக, தனது மனைவி கமலத்தைக் கொலை செய்து ஏரியில் வீசினார்.
- ஆகஸ்டு 4 - சென்னையில் பாண்டிபசாரைச் சேர்ந்த ஷீலா என்ற பெண் நடந்து போய்க் கொண்டிருந்த போது - ஒருவன் மோட்டார் சைக்கிளில் வந்து, ஆறுபவுன் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டான்.

- அதேநாளில் திருப்பரங்குன்றத்தில் சத்துணவு தயாரித்துக் கொண்டிருந்த மாமனாரை, மருமகன் நாகபாண்டி கொலை செய்தார்!
- சென்னையில் பாடி-மண்ணூர் பேட்டையில் வேலைப்பார்த்த சண்முகம் என்ற வாலிபரை அடித்துக் கொன்று தூக்கிலே தொங்க விட்டதாகச் செய்தி!
- ஆகஸ்டு 5 - திருச்சி உத்தமர்சேரி பெருமாள் கோயிலில் அர்ச்சகர் கிருஷ்ணமூர்த்தியும், கோயில் காவலர் ராமனும் கொலை செய்யப்பட்டு ஐந்து லட்ச ரூபாய் சிலைகள் களவு!
- அதேநாளில் மதுரை வீரபாண்டிக் கிராமத்தைச் சேர்ந்த சுப்புலட்சுமி என்ற பெண்ணைப் போலீசார் கற்பழித்ததாகவும், அதனால் அவள் தூக்குமாட்டிக் கொண்டதாகவும் செய்தி!
- ஆகஸ்டு 6 - பல்லடம் தாழக்கரை கிராமத்தைச் சேர்ந்த ராஜீவுக்கும், அவர் மனைவி பாப்பாத்திக்கும் லாட்டரியில் ஏழு லட்சம் கிடைத்தது. அவர்கள் கொல்லப்பட்டு பணமும் நகைகளும் கொள்ளை!
- அதே நாளில் ஆதம்பாக்கம் கரிமேடு பாலகிருஷ்ணன் என்ற வாலிபர் கொலை செய்யப்பட்டார்!
- ஆகஸ்டு 8 - சென்னையை அடுத்த குமரன் நகரில் சுங்க அதிகாரி ராஜாமணி வீட்டில் நாலு லட்ச ரூபாய் நகை மற்றும் பொருட்கள் கொள்ளை!
- அதே நாளில் ஆவடித் தண்டறையில் வரதட்சணைக் கொடுமையால் பானுமதி என்ற ஊமைப்பெண் கொலை!
- ஆகஸ்டு 9 - ராயப்பேட்டையில் பாங்க் அதிகாரியாக இருக்கும் சந்திரா என்பவர் வீட்டில் நகைகள் திருட்டு!
- இதே சென்னையில் தரமணியில் கமலா என்ற பெண் கொலை!
- அதே நாளில் கைக் குழந்தையுடன் மைலாப்பூரில் சென்று கொண்டிருந்த மும்தாஜ் என்ற பெண்ணை கற்பழிக்க மூன்று பேர் முயற்சி!

❖ ஆகஸ்டு 10 - சென்னை ராயப்பேட்டையில் மாலக் கொண்டைய்யா என்பவர் மனைவி சுஜாதா கொலை!

❖ அதே நாளில் சென்னை புதுப்பேட்டையில் காமாட்சி அம்மாள் என்பவர் கொலை செய்யப்பட்டு இருபத்தி ஐயாயிரம் ரூபாய் மதிப்புள்ள நகைகள் கொள்ளை!

❖ அதே நாளில் திருவள்ளூர் அருகே நத்தம் கிராமத்தில் மோகனா என்ற பெண் கொலை!

❖ அதே நாளில் திருச்சி செம்பட்டு கிராமம் அய்யனார் என்பவர் கொலை!

❖ ஆகஸ்டு 13 - மதுரை ஆழ்வார்புரம் கண்ணையா நாயுடு மனைவி விசாலாட்சி கற்பழிக்கப்பட்டு, கொலையும் செய்யப்பட்டு, வீட்டிலே உள்ள நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டன!

❖ இன்று வந்துள்ள செய்தி:- சென்னை ஓட்டேரியைச் சேர்ந்த சபிபுல்லா என்பவர், வறுமையின் காரணமாக மனைவியையும், மூன்று குழந்தைகளையும் கொன்று விட்டு - தானும் வெட்டிக் கொண்டு - படுகாயமுற்றார்.

உடன்பிறப்பே, கிடைத்த தகவல்களை மட்டும் வைத்து சுருக்கமாகத் தயாரிக்கப்பட்டுள்ள பட்டியல் இது! இன்னும் பெரிய பட்டியலே இருக்கிறது.

கொலை, கொள்ளை போன்ற குற்றங்களே நடக்காத நாடு இருக்க முடியாது! - ஆனால் அது பெருகிக் கொண்டே இருக்கிறதே தமிழகத்தில் இந்த ஆட்சியில்!

எடுத்துக்காட்டாக - 1976ஆம் ஆண்டில் கொலைகளின் கணக்கு முப்பது! 83-84ஆம் ஆண்டில் கொலைகளின் கணக்கு அறுபத்து ஒன்பது! 76 இல் கொள்ளைகள் இருபது! 83-84 இல் கொள்ளைகள் அறுபது! 76 இல் வழிப்பறிகள் எண்ணிக்கை நூற்று இருபது! 83-84 இல் முந்நூற்று அறுபத்து ஆறு!

இந்தப் பெருக்கத்தைத் தடுத்திடவோ அல்லது உரிய நடவடிக்கை எடுத்திடவோ முடியாத இக்கட்டான சூழலில்,

தமிழகத்துக் காவல்துறை தவித்துக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை அண்மைக் காலத்து நிகழ்ச்சிகள் படம் பிடித்துக் காட்டுகின்றன அல்லவா?

பரவாயில்லை! தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு - மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விவாதிக்க கலெக்டர்கள் மாநாட்டைக் கூட்டுமாறு நமது தலைமைச் செயலாளர் அந்தோணி அவர்களுக்கு அமெரிக்காவில் இருந்து முதலமைச்சர் ஆணை பிறப்பித்திருக்கிறாராம்!

அந்த கலெக்டர் மாநாடு நியூயார்க் ஓட்டலிலோ - அல்லது வாஷிங்டனில் உள்ள இந்தியத் தூதுவர் அலுவலகத்திலோ நடைபெறாது என்று நம்புவோமாக!

அப்படி நடக்குமென்று அறிவித்தாலும் - நடந்தாலும் - இங்குள்ள இளித்தவாய்த் தமிழன் ஆச்சரியப்படத் தேவையில்லை!

அன்புடன்

மு.க.

18-08-1985

1335. பஞ்சாப் தேர்தல் - பிரதமர் சிந்தனைக்கு!

உடன்பிறப்பே,

லோங்கோவால் படுகொலைக்குப் பிறகும், பஞ்சாபில் உடனடியாகத் தேர்தலை நடத்தக் கூடிய அளவுக்கு நிலைமை திருப்திகரமாக இருப்பதாகத் தேர்தல் கமிஷன் கருதுகிறதாம். தேர்தல் கமிஷனுக்குத் திருப்தி ஏற்பட்டால், தனக்கும் திருப்திதான் என்று நாடாளுமன்ற அவைகளில் குறிப்பிட்ட பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள்,

தேர்தலில் வெற்றி தோல்வி முக்கியமல்ல! ஜனநாயகத் தீபம் அணைந்து விடக்கூடாது. இந்தியா வெற்றி பெற வேண்டும் என்பதே முக்கியம்.

என்று பலத்த ஆரவாரத்துக்கிடையே கூறினாராம்!

காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது ஆதரவைத் திரும்பப் பெற்ற பிறகும், தி.மு.க. தலைமையிலான கூட்டணி ஆட்சித் தொடர்ந்து நடக்கப் பெரும்பான்மை இருப்பதை தி.மு.க., ஜனதா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் கவர்னரிடம் நேரில் சென்று நிரூபித்த பிறகும், புதுவையில் ஆட்சியைக் கலைத்து சட்டமன்றத்தைக் கலைத்து ஜனநாயக தீபத்தை அணைக்காமல் காப்பாற்றிய அன்னை இந்திராவின் அருந்தவப் புதல்வர்தான் பஞ்சாபில் ஜனநாயக தீபத்தைக் காப்பாற்ற வரிந்து கட்டிக் கொண்டு புறப்பட்டுள்ளார்.

காஷ்மீரில் ஒரே இரவில் பரூக் அப்துல்லாவின் கட்சியைச் சேர்ந்த ஒரு டஜன் எம்.எல்.ஏக்களை ஷாவின் பக்கம் சேர்த்துவிட்டு, அந்த கட்சித் தாவல் ஜனநாயகத்துக்கு காங்கிரஸ் எம்.எல்.ஏக்களின் பரிபூரண ஆதரவைத் தந்து ஆட்சிமாற்றம் நடத்திக் காட்டிய இந்திரா காங்கிரஸ் கட்சியின் இன்றைய தலைவரும் இளம்பிரதமருமான ராஜீவ் அவர்கள் ஜனநாயக தீபத்தை

ஜனாதிபதி ஆட்சி எனும் காற்று கொண்டு அணைத்துவிடக்கூடாது எனப் பெருத்த ஆரவாரத்திற்கிடையே கூறியிருப்பது எவ்வளவு பெரிய ஆச்சரியத்தில் நம்மை ஆழ்த்தியிருக்கிறது!

இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டு ரணம் கூட சரியாக ஆறாத நிலையில் ஆந்திராவுக்குத் திரும்பிய என்.டி. ராமாராவின் ஆட்சியைக் கவிழ்க்க, பாஸ்கரராவ் என்ற ஒருவரைப் பிடித்து - அவரைத் திடீர் முதலமைச்சராக்கி - அதனை எதிர்த்து ராமாராவ், தனக்குள்ள பெரும்பான்மை உறுப்பினர்களுடன் கவர்னர் மாளிகைக்குச் செல்ல - அங்கே அவர் கைது செய்யப்பட்டு - அதன் பிறகு நாடே கொந்தளித்து எழுந்த பிறகு மீண்டும் ராமராவ் அவர்களை, வேறு வழியின்றி முதல்வர் பொறுப்பை ஏற்கச் செய்தார்களே இந்திரா காங்கிரசார் - அதற்கு முன்னோடித் திட்டம் வகுத்துக் கொடுத்தவர்தான், இன்றைக்குப் பிரதமர் பொறுப்பில் இருந்து கொண்டு பஞ்சாபில் ஜனநாயக தீபம் அணையாமல் இருக்க தேர்தல் நடத்தப் போகிறோம் என்கிறார்!

அஸ்ஸாம் ஒப்பந்தம் முடிவுற்ற பிறகும் - மக்களால் அறவே புறக்கணிக்கப்பட்ட தேர்தலில், ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிப்பதுபோல நூறு இருநூறு என வாக்குகள் பதிவான தொகுதிகளில், தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட ஒரு பொம்மை மந்திரி சபையை இப்போதும் காபந்து சர்க்கார் என நீட்டித்துக் கொண்டிருக்கும் மத்திய அரசின் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி அவர்கள், பஞ்சாபில் ஜனநாயக தீபம் அணையக்கூடாது என்கிறார்!

ஏதோ, தாமதமாகவாவது ஜனநாயக தீபத்தை அணையாமல் காப்பாற்ற, ஆயுள் இன்ஸ்யூரன்ஸ் சின்னத்தின் கைகளைப்போல அவர் கைகள் அந்தத் தீபச்சுடரை இருபுறமும் பாதுகாத்திட முனைவது குறித்து எனக்கு மகிழ்ச்சிதான்!

ஆனால் பஞ்சாபில் இன்றுள்ள நிலை என்ன?

அதனைச் சிந்திக்க வேண்டாமா?

தேர்தல் கமிஷன் என்பது சுயமாக இயங்கும் ஒரு துறை என்று கூறப்பட்டாலுங் கூட, பொம்மலாட்டத்தில் கண்ணுக்குத் தெரியாமல் பொம்மைகளில் கட்டப்பட்டிருக்கும் கறுப்புக் கயிறுகள், ஆட்டுவிப்பவனின் கைவிரல்களில் அடங்கிக் கிடப்பது போலத்தான், மத்திய அரசின் பிடியில் தேர்தல் கமிஷன் இயங்குகிறது என்ற உண்மை ஊரறிந்த ரகசியமாகும்!

தேர்தல் கமிஷன் மீது பழியையோ - பாரத்தையோ போட்டு விட்டு பஞ்சாப் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமா என்பதே இப்போதுள்ள கேள்வி!

பஞ்சாபில் தேர்தல் பிரச்சாரமும் - பணிகளும் பதற்றமாகவும், வன்முறை தலைவிரித்தாடக் கூடிய நிலையிலும் இருக்குமென்று எடுத்துரைத்து கழகச் சார்பில் தம்பி என்.வி.என். சோமு உள்ளிட்ட பல்வேறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுப் பிரதமரிடம் அளித்தது மட்டுமன்றி - நாடாளுமன்ற அவைகளிலும், சற்று அவகாசம் தந்து பஞ்சாபில் தேர்தலை நடத்தலாம் என்று ஆழ்ந்த அக்கறையுடன் தெரிவித்துள்ளனர். அந்தக் கருத்துகளைப் பிரதமர் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை!

இப்போது உடனடியாகத் தேர்தல் வேண்டாம் - சற்றுப் பொறுத்து யோசிக்கலாம் - என்று கூறுகிற எதிர்க்கட்சியினர் யாரும் ஜனநாயக தீபத்தை ஊதி அணைத்திட உதட்டைக் குவிப்பவர்கள் அல்லர்!

பிரதமரும், லோங்கோவாலும் செய்து கொண்ட ஒப்பந்தச் செய்தி வெளிவந்தவுடன், ஒருவரையொருவர் முந்திக்கொண்டு வரவேற்றுப் பாராட்டி அறிக்கை விட்டவர்கள் தான்!

அவர்கள் தான் லோங்கோவாலின் படுகொலைக்குப் பிறகு பஞ்சாப்பில் தேர்தல் நடத்துவதை, ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு நடத்தலாம் என்று அறிவுரை கூறுகின்றனர்!

இதுவே தான் எங்களுக்கு நல்ல சூழ்நிலை என்று ராஜீவ் காந்தி அவர்கள், கூறாமல் கூறுகிறார் போலும்!

பஞ்சாபில் தேர்தல் நடத்துவதை, நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள்!

இப்படி ஓரிரு கட்சிகள் ஆதரவுக் கருத்து தெரிவித்தாலே போதுமென்று பிரதமர் கருதுவாரேயானால் - அனுபவமிக்க பல கட்சித் தலைவர்களின் நல்லெண்ணத்தைப் புறக்கணித்ததற்கான விளைவுகளுக்கு, அவர்தான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டியவராகிறார்!

அஸ்ஸாம் ஒப்பந்தம் முடிந்த பிறகும், பழைய பொம்மை மந்திரிகளே காபந்து மந்திரி சபையாக செயல்படலாமாம்! அங்கே ஜனநாயக தீபம் சுடர் விடுகிறதாம்!

பஞ்சாபில் இத்தனை நாள் நடந்த ஆட்சி - காலச் சூழ்நிலை கருதி, இன்னும் சில நாட்கள் நடந்து, பிறகு தேர்தலை நடத்தினால் அதற்குள் ஜனநாயக தீபம் அணைந்து விடுமாம்!

இன்னும் நேரம் இருக்கிறது. எதிர்க்கட்சியினர் கருத்துகளை நினைத்துப் பார்த்து மறுசிந்தனை செய்து முடிவெடுக்க!

இதனை நமது பிரதமர் அலட்சியப்படுத்துவது நல்லதல்ல!

அன்புடன்

மு.க.

25-08-1985

1336. தொலைக்காட்சியில் இருட்டடிப்பு!

உடன்பிறப்பே,

கண்டனப் பேரணி, டெலிவிஷனின் இருட்டடிப்பு என்று தலைப்பிட்டு, தினகரன் இதழ், தனது வேதனையை வெளியிட்டிருக்கிறது.

தமிழ் ஈழத்தலைவர்களை இந்திய அரசு நாடு கடத்தியதைக் கண்டித்து, சென்னை நகரத்தையே குலுக்கிய பேரணி நடந்தது. ஆனால், சாதாரண ஊர்வலத்தைக் கூடப் படம் பிடித்துக்காட்டும் சென்னை டெலிவிஷன், இந்த எழுச்சிமிகு தமிழர் பேரணியை முழுவதுமாக இருட்டடிப்பு செய்து விட்டது. டெலிவிஷனைப் பார்த்தவர்கள் உள்ளக் குமுறலோடு இதுதான் ஜனநாயகமா? எனக்கேட்டனர்.

தினகரன், இவ்வாறு முதல் பக்கத்தில் விளிம்பு கட்டிய செய்தியை ஒரு நெடிய பெரு மூச்சுடன் தந்துள்ளது.

24 ஆம் தேதி மாலை 5 மணிக்கு முடிவெடுத்து அறிவித்து, அந்த அறிவிப்பு 25 ஆம் தேதி காலை ஏடுகளில் சென்னை - அதன் சுற்றுப்புறப் பகுதிகளுக்கு பரவி, மாலை 4 மணி அளவில் சுமார் பத்தே மணி நேரத்தில் லட்சக்கணக்கான தமிழ்க் குலமக்கள், மயிலை திருவள்ளுவர் சிலையிலிருந்து பேரணியாகப் புறப்பட்டு அண்ணா சாலையில் உள்ள அறிவாலயம் வரையில், வங்கக்கடல் அலைகள் வீதிகளில் பொங்கிப்புகுவது போல் எழுச்சி முழக்கமிட்டு வந்த காட்சியைக் கண்ணுள்ளோர் அனைவரும் கண்டனர்.

கருத்துக் குருடர்களுக்கு வேண்டுமானால் அது, கசப்பான நிகழ்ச்சியாகத் தோன்றியிருக்கலாம்.

வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டமென்ற பாரதிதாசப் பாவேந்தனின் கவிதை வரிகளுக்கு வடிவம்

கொடுத்தாற்போலவும் - வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள் என, வீறு கொண்டு எக்காளமிட்டுக் கொண்டு வரும் புறநானூற்றுத் தமிழ் மறவர்கள் போலவும் - அணிவகுத்திட்ட டெசோ இயக்கத்தின் மகத்தான கண்டனப் பேரணியின் புகைப்படங்கள் ஏடுகளில் வெளி வந்துள்ளன!

அந்தப் படங்களே, பேரணியின் மாண்புக்குச் சான்று கூறுவனவாகும்!

ஆனால், தொலைக்காட்சி நிலையத்துக்கு அப்படியொரு மாபெரும் தமிழர் அணி, தனது மனக் கொதிப்பைக் காட்டிக் கொள்ளச் சென்னை நகரில் நடைபெற்ற செய்தியே தெரியவில்லை!

தொலைக் காட்சி நிலையத்தார் வந்து பேரணியையும் - பொதுக் கூட்டத்தையும் படம் கூட எடுத்ததாகச் சொன்னார்கள்! ஏழு மணிக்கு எடுக்கிற படங்களைக் கூட எட்டே முக்கால் மணிச்செய்தியில் ஒளிபரப்புகிற தொலைக்காட்சி நிலையம், மாலை ஐந்து மணி அளவில் நடைபெற்ற தமிழர்களின் பேரணியை மட்டும் ஒளிபரப்பாமல் நிறுத்தி விட்ட காரணம் என்ன?

படங்காட்டக் கூட வேண்டாம். பேரணியும், பொதுக் கூட்டமும் நடத்தப்பட்ட செய்தியையாவது தொலைக் காட்சிச் செய்தியாளர்களின் நாவில் நடமாட விட்டிருக்கக் கூடாதா?

நாடு கடத்தப்பட்ட தமிழ் ஈழத்தலைவர்கள் சந்திரகாசன், பாலசிங்கம், சத்தியேந்திரா ஆகியோரை உடனடியாகத் தமிழகம் திரும்பிடச் செய்யும் ஏற்பாடுகளை மத்திய அரசு மேற்கொள்ளாவிட்டால், பிரதமர் ராஜீவ் அவர்களுக்கும், மத்திய உள்துறை அமைச்சருக்கும் கறுப்புக் கொடி காட்டப்படும் என்று லட்சக்கணக்கான தமிழர்களின் கூட்டத்தில் டெசோ இயக்கச் சார்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை, தொலைக் காட்சியில் தெரிவித்தால் இந்தியாவில் ஜனநாயக தீபத்தை அணையாமல் காப்பாற்றுவதில் இந்திரா காங்கிரஸ் அரசும், அதன் பிரதமர் ராஜீவ் அவர்களும் எவ்வளவு அக்கறையுடனும் - ஆகாயமளாவிய பரந்த

மனத்துடனும் இருக்கின்றனர் என்பதை நாட்டு மக்கள் அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக இருந்திருக்குமே!

அலகு குத்திக் கொள்வதும், நாக்கில், கன்னத்தில் முள் கம்பிகளைக் குத்திக் கொண்டு காவடி எடுப்பதும் சட்டப்படி தடுக்கப் பட்டிருந்தாலும் கூட, அண்மையில் அவ்வாறு அலகும், சிலாகைகளும் குத்திக் கொண்டு திருத்தணி கோவிலுக்கு காவடி எடுத்த ஊர்வலக் காட்சிகளை குளோசப், மிட்ஷாட், லாங்ஷாட் என்று பல விதமாகக் காட்டி - அதற்கான வர்ணனைகளையும் வாரியிறைத்ததே தொலைக்காட்சி - அந்தத் தொலைக்காட்சிக்கு இலங்கையில் நித்தநித்தம் செத்துக் கொண்டிருக்கிற தமிழ் இனத்தைக் காத்திட நடைபெற்ற கண்டனப் பேரணியின் தீர்மானத்தை வெளியிட ஏன் மனமில்லை!

டெசோ இயக்கம் மட்டுமல்ல! தி.மு.கழகமானாலும், மற்ற எதிர்க்கட்சிகளானாலும் அவற்றின் சார்பில் அறிவிக்கப்படும் கருத்துகள் அரசாங்கத்தை விமர்சிப்பதாகவோ அல்லது கண்டிப்பதாகவோ இருந்தாலும் கூட, அந்தக் கருத்துகளை வெளியிடுவது தான் வானொலி, தொலைக்காட்சிகளின் ஜனநாயகக் கடமையாகும்!

பிரதமருக்கும், தமிழக முதலமைச்சருக்கும் விளம்பரம் தருவதே முதல் வேலையாகவும், வல்லினம், மெல்லினம், இடையினம் என்பதை அறியாது, தமிழைக் கொலை செய்கிறவர்களைக் கொண்டு பேட்டிகள் என்ற பெயரால் மக்களைச் சோதனை செய்வதை அடுத்த வேலையாகவும், எப்போதோ ஒரு நாள் இரு நாள் அதிசயமாகப் பார்க்கத் தகுந்த, கேட்கத் தகுந்த நிகழ்ச்சிகளை நடத்துவதை ஒரு அபார சாதனையாகவும் செய்து கொண்டிருக்கிற தொலைக்காட்சி, தமிழக மக்களின் கொந்தளிப்பை வெளிப்படுத்திய பேரணி, பொதுக்கூட்டம், தீர்மானம் இவற்றை இருட்டடிப்புச் செய்தது மன்னிக்க முடியாத குற்றம்!

இந்தியைத் தமிழர்கள்பால் மறைமுகமாகத் திணிக்கின்ற செயலுக்காகவே இயங்குகிற வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களிடம், தமிழ் உணர்வினை எதிர்பார்க்க முடியாதுதான்!

எல்லா மக்களின் வரிப்பணத்தில் தான் அரசாங்கம் நடைபெறுகிறது என்பதையும் - அந்த மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் எந்தவொரு இயக்கமானாலும், அவற்றின் கருத்துகளைத் தடுத்திட இருட்டடிப்பு செய்யும் முறையைப் பின்பற்றுவது தொலைக்காட்சி நிலையத்தினருக்கு அழகல்ல - முறையல்ல என்பதையும் பலமுறை சுட்டிக்காட்டியும் கூட, கறைச் சேற்றால் தாமரையின் வாசம் போகும் என்ற மூடநினைப்புடன் தான் தொலைக்காட்சி நிலையம் செயல்பட்டு வருகிறது.

ஆனால் ஒன்று - பஞ்சாப், அஸ்ஸாம் பிரச்சினைகளைத் தொலைக்காட்சியில் இப்படித்தான் இருட்டடிப்பு செய்தார்கள்! திரித்துக் கூறினார்கள்!

ஆனால் இன்று? அந்த இரு மாநிலத்தில் வெளியிடப்படும் அரசுக்கு எதிரான கருத்துகளுக்கு தொடக்கத்தில் தொலைக்காட்சியில் இடமளிக்காதவர்கள், இன்று வரிந்து கட்டிக்கொண்டு அந்த இயக்கங்களின் செய்திகளை ஒளிபரப்புகிறார்கள்!

என்ன செய்வது உடன்பிறப்பே! இவர்களுக்கு அஸ்ஸாம் மொழியும், பஞ்சாப் பாஷையும் தான் புரிகிறது!

அந்த விதமாகத் தமிழனும் பேசத் தொடங்கினால்தான் திருந்துவார்கள் போலும்!

இன்னும் கொஞ்சம் பொறுத்திருப்போம்!

பொறுமை கடலினும் பெரிது என்ற தமிழ் மூதுரை நமது நெஞ்சில் ஒலித்துக் கொண்டிருக்கிறது! அந்த ஒலியுடன் இணைந்து, பொறுமைக்கும் எல்லையுண்டு என்ற ஒலியும் கிளம்பத்தான் செய்கிறது!

தொலைக்காட்சி, வானொலி நிலையங்கள், தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளாவிட்டால் - அடுத்து என்ன செய்வது என்பதைக் கலந்து பேசி முடிவெடுப்போம்!

தமிழ் ஈழத் தலைவர்களை நாடு கடத்தியதை இங்குள்ள முதலமைச்சர் ஒப்புதல் அளித்து ஏற்றுக் கொண்டது மட்டுமல்ல, அவரை நிறுவனராகக் கொண்ட அண்ணா என்ற அவரது கட்சியின் ஏட்டில், தமிழ் ஈழத்தலைவர்கள் நாடு கடத்தப்பட்டதற்கு நியாயம் கற்பித்து செய்தியும் வெளியிடப்பட்டிருக்கிறது!

இவர்களின் எடுபிடிகளாக - இவர்களிடம் கையேந்திகளாக - இவர்களின் விசுவாசமிக்க பந்துமித்திரர்களாக - விளங்குகிறவர்கள் ஆதிக்கம் செலுத்துகிற தொலைக்காட்சி, வானொலி நிலையங்கள் இவர்களின் ஆணைப்படிதானே செயல்பட முடியும்!

பரவாயில்லை! இத்தகைய இருட்டடிப்புப் பிறவிகளை, வெளிச்சத்தில் கொண்டுவந்து நிறுத்தி அடையாளங் காட்டக்கூடிய நாள் தொலைவில் இல்லை என்பது மட்டும் உறுதி!

அன்புடன்

மு.க.

27-08-1985

1337. மாணவர் குமுறல்! கொந்தளிப்பு! எழுச்சி!

உடன்பிறப்பே,

மாணவர்கள் படிப்பில் அக்கறை காட்டவேண்டு மென்பதிலும் - சின்னஞ்சிறு பிரச்சினைகளுக்காக வேலைநிறுத்தம், அமளி, போன்ற செயல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு எதிர்காலத்தை வீணாக்கிக் கொள்ளக் கூடாது என்பதிலும் இரண்டு விதமான கருத்துகளுக்கு இடமே இல்லை!

ஆனால், ஒட்டுமொத்தமாக நாட்டின் வருங்கால சமுதாயத்தையே பாதிக்கக் கூடிய காரியங்களைத் திட்டமிட்டு ஒரு அரசாங்கம் நடத்தத் தொடங்கி, தனது ஆளுங்கட்சிப் பிரமுகர்களின் வேட்டைக் காடாகக் கல்வித்துறையை ஆக்கி, அந்த வேட்டைக்கான லைசென்ஸ் தருவதற்காக அமைச்சர்களின் கறுப்புப்பணக் கருவூலங்களை நிரப்பிக் கொண்டு - அந்த முழுக்கொள்ளையில் முக்கால் பகுதியை ஒரு முதலமைச்சர் சுருட்டிக் கொண்டு - தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், தொழிற் கல்வித்துறை லஞ்ச லாவண்யக் கூடாரமாக மாற்றப்பட்டுவிட்டதைக் கண்டித்து, மாணவர்கள் போர்க்குரல் கொடுத்து தொடர்ந்து போராட்டம் நடத்துவதில், உள்ள நியாயங்களை நடுநிலையில் சிந்திப்போர் எவரும் புறந்தள்ளி விட முடியாது!

நாளை வருகுது சட்டம், பல நன்மை பயக்கின்ற திட்டம் என்று பாடிய புரட்சித் தலைவர், கல்வித் துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளார் - எல்லோருக்கும் இலவசக் கல்வி எங்கள் மாநிலத்தில் என்ற நிலை மாறி, எல்லாப் பட்டங்களுக்கும் விலைப்பட்டியல் பாரீர்! என்ற சாதனையைத் தமிழக அரசு புரிந்துள்ளது.

உடன்பிறப்பே, தமிழக இள மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள் - சென்னை பாட்டாளி அச்சகத்தில் அச்சியற்றி வெளியிட்டுள்ள துண்டறிக்கை, மேற்குறிப்பிட்டவாறு ஆரம்பமாகிறது.

அந்த மாணவர் அறிக்கையில் மேலும் காணப்படும் கருத்துக்கள் வருமாறு:-

ஏற்கனவே L.K.G.யிலிருந்து M.Sc.வரை ஆயிரக் கணக்கான ரூபாய்களுக்கு சீட்கள் விற்கப்படும் நிலையை இந்த அரசு கண்டும் காணாமல் இருந்தது. ஆனால் சென்ற ஆண்டில் சுயநிதி திட்டம் Self - Financing Scheme என்ற அடிப்படையில் Open Market இல் கொள்ளையடித்துக் கொள்ளுங்கள் என்று அனுமதித்து விட்டது. அதன் விளைவு சென்ற ஆண்டிலிருந்து 22 இன்ஜீனியரிங் கல்லூரிகளும், 78 பாலிடெக்னிக்குகளும், 7 கலைக் கல்லூரிகளும், ஒரு சட்டக் கல்லூரியும் தோன்றி இவற்றில் எல்லாம் 10,000 ரூபாய் முதல் 50,000 ரூபாய் வரை சீட்டுகள் விற்கப்படும் கொடுமையைப் பார்க்கின்றோம். இந்த ஆண்டு மருத்துவக் கல்வியையும் மயானத்திற்கு அனுப்பிவிட்டார்கள். இதுவரை மூன்று! இன்னும் எத்தனை வரப் போகின்றனவோ? MBBS பட்டத்தை இரண்டரை லட்சத்துக்கு விற்கிறார்கள். சுய நிதித் திட்டத்தில் எல்லாக் கல்லூரிகளுக்கும் ஒரு ஒற்றுமை இருக்கிறது. அதாவது இங்கெல்லாம் கட்டிடங்களோ பரிசோதனைச்சாலைகளோ இருக்காது. மரத்தடியில் வகுப்பு நடத்தும் புரட்சிக் கல்லூரிகள் கூட இருக்கின்றன. நாங்கள் புதிய கல்லூரிகள் வருவதை எதிர்க்கவில்லை. புதிதாக டாக்டர் வருவதை எதிர்க்கவில்லை. கல்வியில் லஞ்சமும், ஊழலும் கைகோர்த்து பவனி வருவதை எதிர்க்கிறோம். கலைமகளை, விலைமகளாக மாற்றிடும் இந்த அரசை எதிர்க்கும் எங்களுக்குச் சமூகவிரோதிகள் என்று அமைச்சர்கள் பட்டம் சூட்டுவது முறையா?

இவ்வாறு குரல் எழுப்பி, வினாக்களை தொடுத்து அரசின் சுயநலப் பிற்போக்குவாத ஊழல் நடவடிக்கையை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்துள்ள மாணவர்களின் நியாயமான வாதத்தை அடக்குமுறையினால் ஒடுக்கிவிட முடியுமா? முடியாது!

எப்படி எதிர்காலச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கான வேரில் வெந்நீர் ஊற்றப்படுவதை மாணவர்கள் எதிர்த்துப்போரிடக் கிளம்பியிருக்கிறார்களோ, அதே போலத்தான் தனது சொந்த இனம் - தமிழ் இனம் - இலங்கையில் தினம் தினம் அழிக்கப்படுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் கொந்தளிக்கிறார்கள். அதுமட்டுமா? வெந்த புண்ணில் வேல் நுழைப்பதைப் போல தமிழ்ஈழ விடுதலைத் தலைவர்கள் மூவரை நாடு கடத்துகிற உத்தரவை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி பிறப்பித்ததும் - அதனை எதிர்த்துத் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு கண்டனம் கூடத் தெரிவிக்காததும் - அதற்கு மாறாக அந்த நாடு கடத்தும் ஆணைக்குச் சம்மதமும் வழங்கினார் என்பதும், தமிழகத்தின் இளைய தலைமுறையான மாணவர்களால் பொறுத்துக் கொள்ளக் கூடிய காரியங்களா?

நாதியற்றுத் தமிழன் இலங்கையில் சாவதையும், தமிழர் தலைவர்கள் நாடு கடத்தப்பட்டுப் பந்தாடப்படுவதையும் சகிக்க முடியாத தமிழகம் குமுறியெழுந்துள்ளது. அதில் இளைஞர் சமுதாயமும், மாணவர் சமுதாயமும் தனது கடமையை நிறைவேற்றுகிறது அறவழியில்!

அவர் தம் உணர்வுகளைக் கூட வெளிக்காட்ட வழியின்றி, அவசர அவசரமாகக் கல்வி நிலையங்களைக் கால வரையறையின்றி இந்த அரசு மூடி விட்டது!

நாடு கடத்தல் உத்தரவுக்கு நியாயம் கற்பித்து அ.தி.மு.க. ஏடுகள் செய்தி வெளியிடுகின்றன!

முதல்வருக்கு அடுத்துள்ள நாவலரே, காரணமில்லாமல் நாடு கடத்தியிருக்க மாட்டார்கள் என்றும், மத்திய அரசு தனக்குச் சரியென்று பட்டதைச் செய்துள்ளது என்றும் பெங்களூரில் நிருபர்கள் பேட்டியில் அறிவித்திருக்கிறார்.

அற்பக் காரணங்களை மையமாக வைத்து, தமிழ்நாட்டு மாணவர்கள் அறப்போரில் குதிக்கவில்லை!

எடுத்துக் கொண்டுள்ள இரண்டு பிரச்சினைகளுமே உயிர்ப்பிரச்சினைகள் தான்!

நாட்டுச் சுதந்திரத்திற்காக, மாணவர்களைப் போராட்டத்தில் கலந்துகொள்ள காந்தியடிகளே அழைத்துள்ளார் என்பது வரலாறு!

இன்றும் - மாணவர்கள் மத்தியில் எழுந்துள்ள பிரச்சினை, சுதந்திரக் கோரிக்கை போன்ற ஒரு பொதுப்பிரச்சினை தான்!

அதனால் தான் கிளம்பிற்றுகாண் தமிழச் சிங்கக்கூட்டம்! என்று பாடிய புரட்சிக் கவிஞரின் கவிதை வரிகளின் வடிவங்களாக மாணவர்கள் சிலிர்த்தெழுந்துள்ளனர்!

இது அவர்கள் ஆற்ற வேண்டிய கடமை எனினும் அறவழி, அமைதி வழிவிட்டு அகன்றிடக் கூடாது!

உடன்பிறப்பே, இந்தக் கடிதத்தை எழுதி முடித்து விட்டு அன்பகத்தில் டெசோ இயக்கக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள முடிவை ஆகஸ்டு 30ஆம் தேதியன்று வெற்றிகரமாக நிறைவேற்ற - அமைதியாக நிறைவேற்ற வேண்டுமென்று உன்னையும், உன் போன்ற உடன்பிறப்புகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்

மு.க.

28-08-1985

1338. செப்டம்பர் 15 - சென்னைக்கு வரும்போது!

உடன்பிறப்பே,

என் அன்பு வேண்டுகோளை ஏற்றுக் கழக அறக் கட்டளையின் அண்ணா அறிவாலய நிதிக்காக நீயும், உன் போன்ற உடன்பிறப்புகளும் நாள்தோறும் பணவிடைத்தாள் வாயிலாக அனுப்பி வைக்கிற தொகை, கழக அமைப்புகள் வழங்குகிற தொகை, நான் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் வழங்குகிற தொகை எல்லாமாக எட்டு லட்ச ரூபாயைத் தாண்டியிருக்கிறது என்கிறபோது எனக்கேற்படும் மகிழ்ச்சிக்கு எல்லையில்லைதான்.

ஜூன் திங்கள் 10ஆம் நாள் தான் உனக்கு எனது வேண்டு கோளைக் கடித வாயிலாகத் தெரிவித்தேன்.

1967ஆம் ஆண்டுத் தேர்தல் நிதியாகப் பத்து லட்ச ரூபாய் திரட்டுவதென முடிவெடுத்து, அதனைத் திரட்டி முடிக்க சுமார் இரண்டு ஆண்டுக்காலம் தேவைப்பட்டதை எண்ணிக் கொள்ளும்போது, இப்போது எண்பது நாட்களிலேயே எட்டுலட்சம் ரூபாய் - அதுவும் எவ்வளவோ சோதனைகள், வேதனைகள், இவற்றுக்கிடையே, கழகம் சோர்ந்து வீழ்ந்து விட்டது என எதிரிகளின் பிரச்சாரம் கடும்வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது அண்ணா அறிவாலய நிதி கிடைத்திருக்கிறது என்பதும், மேலும் நிதி வழங்கிடப் பல மாவட்டங்களில் இருந்து அழைப்புகள் வந்த வண்ணமிருக்கின்றன என்பதும் தி.மு.கழகத்தின் வலிவையும், கொள்கைப் பிடிப்பையும் உணர்த்துகின்ற எடுத்துக்காட்டு என எண்ணி எண்ணி இதயம் பூரிக்கிறேன்.

அண்ணா அறிவாலய நிதி வழங்கிட முயற்சிகளை மேற்கொள்ளும் அமைப்புகள் அனைத்துக்கும், அவற்றின் நிர்வாகச் செயல்வீரர்களுக்கும் என் வாழ்த்துகளைக் குவிக்கிறேன்.

இதற்கிடையே சேலம் குகை வட்டாரத்தில் நடைபெற்ற மாநாடு போன்ற பொதுக்கூட்ட நிகழ்ச்சியில், சேலம் மாவட்டக் கழகச் சார்பில் பல்வேறு அமைப்புகளை முடுக்கி விட்டு, தம்பி வீரபாண்டி ஆறுமுகம் அந்த ஒரே விழாவில் மட்டும் நிதியாகச் சேர்த்தளித்த தொகை, ஒரு லட்சத்து இருபத்தி இரண்டாயிரத்தைத் தாண்டியது என்பது குறிப்பிடவேண்டிய ஒன்றாகும்!

இது தம்பி ஆறுமுகத்தைப் பாராட்டுவதற்காக மட்டுமல்ல - சேலம் மாவட்டக் கழக செயல்வீரர்களின் ஆர்வத்தைப் புகழ்வதற்காக மட்டுமல்ல - இவர்களையும் வெல்லக்கூடிய முறையில் மற்ற மாவட்டங்களிலும் ஒரே ஒரு நிகழ்ச்சியில் - என்னை அதிகம் அலையவிடாமல் அண்ணா அறிவாலய நிதியை அளிக்கின்ற முயற்சியில் நமது உடன்பிறப்புகள் ஈடுபட வேண்டுமென்பதற்காகத்தான்!

இலங்கைத் தமிழ்ஈழத் தலைவர்களை இந்திய அரசு நாடு கடத்தியதை எதிர்த்து நடத்திய ரயில் நிறுத்தப் போராட்டத்தையொட்டிச் செய்திகளை வெளியிடவே முரசொலியில் இடம் போதாமல் இருக்கிற காரணத்தால், அறிவாலய நிதி அளித்தோர் பட்டியலும், நிதி சேர்ந்துள்ள விபரமாக கணக்கும் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டு விட்டது!

இனித் தொடர்ந்து வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீயும், உன் போன்றோரும் தொடர்ந்து நிதி வழங்கும் பணியை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

அறிவாலயத்தின் முழுப் பணிகளும் முற்றுப் பெறத் தேவைப்படுவது இரண்டு கோடி ரூபாய் என்பதை மறந்து விடாதே!

சேர்ந்திருப்பது இதுவரை ஏழு லட்சம் தான்! அதையும் நினைவிற் கொள்க!

அண்ணா அறிவாலயம் ஒரு மாபெரும் திட்டம்!

செப்டம்பர் 15 - முப்பெரும் விழாவுக்கு சென்னைக்கு வரும்போது அந்த இடத்தையும், அங்கே உருவாகும் கட்டிடங்களையும் நேரில் பார்க்கத்தானே போகிறாய்!

உடன்பிறப்பே;

நீயும் எத்தனை வேலைதான் செய்வாய்? உறுப்பினர்கள் சேர்க்கவேண்டும். அறிவாலய நிதி திரட்டிட ஓடியாடி உழைக்க வேண்டும். போராட்டத்தில் ஈடுபட வேண்டும். சிறை செல்ல வேண்டும். வழக்கு மன்றங்களின் படிக்கட்டுகளில் ஏறி இறங்கவேண்டும். செப்டம்பர் 15 - சென்னை முப்பெரும் விழாவில் கலந்து கொள்ளத் தேவையான பணிகளை ஆற்றிவிட்டு பயணப்பட வேண்டும். என்ன செய்வது! என்னைப்போல நினைத்துக்கொண்டு உன்னையும் வேலை வாங்குகிறேன். மன்னித்துவிடு!

அன்புடன்

மு.க.

02-09-1985

1339. இவர்களை அடையாளம் காண்க!

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழர் பாதுகாப்புக்காகத் திராவிட முன்னேற்றக் கழகம் அண்மையில் மத்திய அரசு அலுவலகங்களின் முன்னால் மறியல் போராட்டம் நடத்தி முப்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு பதினைந்து நாட்கள், இருபது நாட்கள், முப்பது நாட்கள் என்று சிறையில் அடைக்கப்பட்டிருந்த போதும் - இப்போது டெசோ எனும் தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பின் சார்பில் தி.மு.க., தி.க., காமராஜ் காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், செயல்வீரர்களும் இந்திய அரசின் நாடு கடத்தல் உத்தரவை எதிர்த்து, ரயில் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு ஏழாயிரம் பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள போதும் - அவர்களை விடுதலை செய்க என்று இந்த அரசை நாம் கேட்டு விண்ணப்பம் எதுவும் போடவில்லை.

ஆனால் இந்த அரசின் தமிழ் இன உணர்வு, எந்த அளவுக்கு இருக்கிறது என்பதையும் - இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பெரும் அக்கறையிருப்பதாக நடிக்கும் நாடகத்தையும் - நடுநிலையில் இருந்து சிந்திக்கும் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டாமா?

இந்த அரசையே எதிர்த்து ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்கள். அந்த ஆசிரியர்களை மறியல் செய்த காரணத்திற்காகக் காலையிலே கைது செய்தார்கள் மாலையிலே விட்டுவிட்டார்கள். ஆசிரியர்கள் தொடர்ந்து மறியல் போராட்டம் நடத்தியும் கூட, அவர்களைக் கைது செய்து அன்று மாலையே விடுதலை செய்தனர். அந்தச் செயலை நான் குறை கூறவில்லை! தவறு என்று குறிப்பிடவில்லை! ஆசிரியர்களை ஏன் சிறையில் போட்டு வாட்டவில்லை என்று கேட்கவில்லை!

எண்ணிப் பார்க்க வேண்டியது என்னவென்றால், எம்.ஜி.ஆர். அரசுக்கே உடன்பாடுடைய இலங்கைத் தமிழர் பிரச்சினையை யொட்டி தி.மு.க.வோ, தி.க. அல்லது காமராஜ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளோ மறியல் போராட்டத்தில் ஈடுபட்டால் மட்டும் சட்டப் பிரிவுகள், வழக்குகள், ரிமாண்டுகள், சிறையில் போராட்ட வீரர்கள் தங்கியுள்ள பந்தலுக்குத் தீ வைத்துக் கொளுத்துதல் போன்ற அடக்குமுறை அநியாயங்கள் அவிழ்த்து விடப்படுகின்றன!

ஆகஸ்டு 30ஆம் நாள் புதுவை மாநிலத்தில் ரயில் நிறுத்தப் போராட்டம்! அங்கே நடைபெறுவது காங்கிரஸ் அரசு, எனினும் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் அன்று மாலையிலேயே விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள்!

கர்நாடக மாநிலத்திலும் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் பெங்களூரில் இருநூற்றி ஐம்பது பேர் கைது செய்யப்பட்டனர்! அங்கு நடப்பது ஜனதா அரசு! அங்கேயும் கைது செய்யப்பட்ட போராட்ட வீரர்கள் மாலையில் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள்!

ஆனால் இங்கே? தமிழ் நாட்டில்? அண்ணாவின் பெயரை வைத்துக் கொண்டுள்ள கட்சியின் ஆட்சியில்?

என்ன செய்வது? தமிழ் ஈழத் தலைவர்கள் மூவரை இந்திய அரசு நாடு கடத்தியதைத் தவறு எனக் கண்டித்து பாராளுமன்றத்திலும், மாநிலங்களவையிலும் திராவிட முன்னேற்றக் கழகமும், மற்ற எதிர்க்கட்சிகளும் உணர்ச்சிமயமாக எழுந்து குரல்கள் எழுப்பின!

எம்.ஜி.ஆர். அவர்களின் சீரிய தலைமையில் இயங்கும் அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்ற, மாநிலங்களவை உறுப்பினர்கள் இருபதுக்கு மேற்பட்டோர் இருந்தும்கூட,

தம்பி கோபால்சாமி, மாநிலங்களவையில் கர்சித்தபோதும் - தம்பி என்.வி.என்.சோமு, பாராளுமன்றத்தில் முழங்கிய போதும் - அந்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஒருவர் கூட வாய் திறக்கவில்லை!

"Silent Members" என்று "இந்து" பத்திரிகை "நற்சான்று" இதழல்லவா வழங்கியது!

அ.இ.அ.தி.மு.க.வின் அதிகார பூர்வமான ஏட்டில், தமிழ் ஈழத் தலைவர்களை நாடு கடத்தியது நியாயம் தான் என்பது போலன்றோ முதல் நாள் செய்தி வெளியிடப்பட்டது!

இப்படிப்பட்ட உணர்வு படைத்தவர்களின் ஆட்சியில் - இலங்கைத் தமிழர் பிரச்சினையில், புதுவை முதல்வர் பரூக் அவர்களும், கர்நாடக முதல்வர் ஹெக்டே அவர்களும் மேற்கொண்ட அணுகுமுறையை எப்படி எதிர்பார்க்க முடியும்!

சிறைத் தண்டனைகள் அல்ல, சித்திரவதைகளையே கூட ஏற்றுக் கொள்ளத் தயாராகத்தான் நாம் களம் காணுகிறோம், என்பதை இந்த அரசுக்கு அறிவுறுத்துகிறேன்!

அதே நேரம் இவர்களை அடையாளம் காண்க! என்று தமிழ்நாட்டு மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்

மு.க.

03-09-1985

1340. குணத்தைக் காட்டுகிறது! கோயங்கா ஏடு!

உடன்பிறப்பே,

என்னதான் ஒருமைப்பாடு குறித்து வாய் கிழியப் பேசினாலும் - வடக்கு, தெற்கு என்று பேதம் கற்பிக்கக்கூடாது என்று மலைமலையாக எழுதிக் குவித்தாலும், அத்தகைய தேசிய ஞானமார்க்கத்தைப் போதிக்கிற உபதேசிகள், தெற்கேயுள்ள தமிழ் மக்களின் குரல் நியாயத்திற்காக ஓங்கி ஒலித்திடும் போது - அந்த உபதேசிகள், தங்களின் சுயஉருவத்தைத் தோலுரித்துக் காட்டி விடுகிறார்கள், அவர்களை அறியாமலேயே!

அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக, செப்டம்பர் இரண்டாம் நாள் இந்தியன் எக்ஸ்பிரஸ் தலையங்கம் அமைந்துள்ளது.

உற்றுக் கவனித்து வந்திருந்தால் - அதுவும் தொடர்ச்சியாகக் கவனித்து வந்திருந்தால் - இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எக்ஸ்பிரஸ் ஏட்டின் குரல், பழைய வடநாட்டு கோயங்காவின் குரலாகவே ஒலித்துக் கொண்டிருப்பதை தெளிவாக உணர முடியும்!

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கருணாநிதி எந்த சேவையும் செய்யவில்லை. அவர் தூண்டிவிட முயற்சி செய்வதன் மூலம், திருமதி பண்டாரநாயகாவுக்கும், சிங்களவர்களுக்கும் ஒப்பான நிலையை எடுத்தவராகிறார் என்று ஜெயவர்த்தனேயின் அத்யந்த நண்பர் கோயங்காவின் எக்ஸ்பிரஸ் ஏடு, தனது தலையங்கத்தின் இறுதிப் பகுதியில் முத்தாய்ப்பு வைத்து முடிக்கிறது!

மத்தியில் உள்ள ராஜீவ் அரசு, தமிழ்ஈழத் தலைவர்களை, அவர்கள் விரும்பாத உடன்பாட்டுக்கு நெருக்கடி செய்யக் கூடாதென்றும் - அந்த அடிப்படையில் தமிழ்ஈழ விடுதலைப்

போராளிகளின் பிரதிநிதிகளை நாடு கடத்தியது தவறு என்றும் - தமிழ் மக்களின் எண்ணத்தை எதிரொலிக்கிற வகையிலேதான் நாம் போராட்டம் நடத்தி, இந்திய அரசின் அணுகுமுறையைக் கண்டிக்கிறோம்!

இவ்வாறு நாம் எடுத்துள்ள நிலையை, திருமதி பண்டாரநாயகா எடுத்திடும் நிலையுடனும், சிங்களவர் எடுத்திடும் நிலையுடனும் எக்ஸ்பிரஸ் ஒப்பிடுகிறதல்லவா, ஆனால் அதே எக்ஸ்பிரஸ், அந்தத் தலையங்கத்தின் முதற்பகுதியில் என்ன கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளது என்பதையும் படித்துப் பார்த்தால் - முரண்பாட்டின் விஸ்வரூபம் தெளிவாகத் தெரியும்!

மறைக்க முடியாத பல உண்மைகள், எக்ஸ்பிரஸ் தலையங்கத்தில் வரிகளைப் பிளந்து கொண்டு கண்களை உருட்டி விழிக்கின்றன!

ராஜீவ் காந்தியின் புதிய திட்டங்கள் உமாமகேஸ்வரனுக்கு விளக்கப்பட்டிருக்கிறதென்றும், அவற்றை உமாமகேஸ்வரன், விடுதலைப் போராளிகளான மற்ற குழுவின் தலைவர்களுக்குத் தெரிவிப்பார் என்றும் எக்ஸ்பிரஸ் எழுதுகிறது.

மற்ற குழுக்கள் எவை? விடுதலைப் புலிகள் குழு - டெலோ இயக்கக் குழு - ஈராஸ் இயக்கக் குழு - இ.பி.ஆர்.எல்.எப். குழு - இந்த நான்கு குழுக்களும் இடம் பெற்று இயங்குகிற இ.என். எல்.எப். என்ற ஒரு அமைப்புக்குழு!

இந்த அமைப்பில் சேராமல் தனித்து இயங்குகிற ப்ளாட் இயக்கத்தின் தலைவராக இருப்பவர் தான் நண்பர் உமாமகேஸ்வரன்!

தனித்து அவர் இருந்தபோதிலும் கூட, ராஜீவ் காந்தி வகுத்துள்ள திட்டத்தை இ.என்.எல்.எப். எனப்படும் ஈழதேசிய விடுதலை முன்னணியின் தலைவர்களான பிரபாகரன், ஸ்ரீசபாரத்தினம், பத்மனாபா, பாலகுமார் ஆகியோரிடம் தெரிவிப்பார் என்றால் - இப்போது அந்தத் தலைவர்கள் எங்கே இருக்கிறார்கள்?

அவர்கள் திடீரெனத் தலைமறைவாகி விட்டதாகத் தானே செய்திகள் வருகின்றன!

அப்படிப் பதுங்கிவிட்டதற்கு என்ன காரணம்?

திம்பு பேச்சுவார்த்தைக்கு உதவிகரமாக இருந்த தமிழீழத் தலைவர்களை திடுதிப்பென்று ராஜீவ் காந்தி, நாடு கடத்தியதால் மற்ற தீவிரத் தலைவர்கள் அண்டர் கிரவுண்டுக்குள் சென்று விட்டார்கள் என்பதுதானே உண்மை!

அதனால்தானே தங்களுக்கு அருகில் இருக்கிற உமாமகேஸ்வரனிடம் இந்தியாவின் திட்டத்தைத் தெரிவித்து, மற்ற தலைவர்களுக்கும் அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள்!

அவர்களோடு உமாமகேஸ்வரன் தொடர்பு கொள்ளக் கூடிய சூழ்நிலை இருக்கிறதா?

முடியாத சூழ்நிலை என்றால் அதற்கு யார் காரணம்? இந்திய அரசுதானே பொறுப்பு! பேச்சு வார்த்தையில் உறுதிப்பாட்டுடன் கருத்துகளைத் தெரிவிக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்களை மிரட்டுவது, நாடுகடத்துவது, சிலரிடம் திட்டத்தைத் தெரிவிப்பது என்றால், இதற்குப் பெயர்தானே பிரித்தாளும் சூழ்ச்சி!

நாடுகடத்தும் உத்தரவினால் தான் குழறுபடியே ஆகியிருக்கிறது என்று நாம் குற்றம் சாட்டுகிறோம்!

நம்மைக் குற்றம் சாட்டுகிற எக்ஸ்பிரஸ் ஏடு, நாடு கடத்திய செயல் குறித்து அதே தலையங்கத்தில் என்ன எழுதுகிறது தெரியுமா?

சந்திரகாசனை நாடு கடத்தியது எதேச்சாதிகாரமான செயல் ARBITRARY MOVE என்றும், Clumsily executed என்றும், Badly timed என்றும் வர்ணித்து நேரங் கெட்ட நேரத்தில் செய்யப்பட்ட அசிங்கமான நடவடிக்கையென்று எக்ஸ்பிரஸ் எழுதியுள்ளது.

அது மட்டுமா? இந்தச் செயல் மூலம் தமிழ் ஈழத் தீவிரவாதிகளுக்கு முன் எச்சரிக்கை நோட்டீஸ் தரப்பட்டுள்ளது என்றும் எக்ஸ்பிரஸ், அந்தத் தலையங்கத்தில் சுட்டிக் காட்டுகிறது.

தீவிரவாதிகள், தங்களைப் பற்றி அதிகம் கணக்குப் போட்டுக் கொள்ளக்கூடாது - அவர்கள் முறையாகவும், பொறுப்புணர்வோடும் நடந்து கொள்ள வேண்டும் - அப்போதுதான் அவர்களுக்கு இந்தியாவின் நல்லெண்ணமும், நல்லுதவியும் கிடைக்குமென்று மத்திய அரசு எச்சரிப்பதாக எக்ஸ்பிரஸ் எழுதியுள்ளது!

இதற்குப் பெயர் என்ன? இதைத்தான் நிர்ப்பந்தம் என்று கூறுகிறோம்! இந்த உண்மையை எக்ஸ்பிரஸ் எப்படியோ அம்பலத்திற்கு கொண்டு வந்து விட்டிருக்கிறது.

நாங்கள் தருகிற திட்டத்தில், நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போடு! என்று நெற்றிப் பொட்டில் துப்பாக்கி முனையை வைத்து மிரட்டுவது போன்ற செயல்தானே இது!

இவ்வளவு தான்! இதற்கு மேல் கிடையாது! போடு கையெழுத்தை! என்று மத்திய அரசு சொல்வதை, நாசூக்கான முறையில் எக்ஸ்பிரஸ் தலையங்கம் வெளிப்படுத்தியிருக்கிறது!

இந்தப் போக்கைத்தான் தமிழ் இனத்தின் சார்பாக நாங்கள் கண்டிக்கிறோம்! எக்ஸ்பிரசே எதேச்சாதிகாரச் செயல் என்று தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கும் போது, அந்தச் செயலைத் தமிழ் இனம் எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்?

எக்ஸ்பிரஸ் ஏடு கோடிட்டுக் காட்டுகிற மத்திய அரசின் எதேச்சாதிகாரச் செயலைக் கண்டிப்பது, தூண்டிவிடுகிற குற்றம் என்று கோயங்கா அகராதியில் ஏதாவது புதிய அர்த்தம் கூறப்பட்டிருக்கிறதா?

தஞ்சம் புகுந்தவர்கள் - இந்தியாவுக்கு விரோதமான காரியங்களில் ஈடுபடாதவர்கள் - பிரதமர் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள் - அவர்களுக்கு எக்ஸ்பிரஸ் ஏட்டுத் தலையங்கம் விவரித்துள்ளது போல Notice எச்சரிக்கை கொடுத்து மிரட்டப்படுவதைத் தமிழ் இனம் சகித்துக் கொண்டிருக்க வேண்டுமா?

உண்மையான தமிழர்களின் சார்பாகத்தான் டெசோ இயக்கம், தனது கடமையைச் செய்தது! களம் புகுந்துள்ளது!

ரயில் நிறுத்தப் போராட்டமும், ஆர்ப்பாட்டங்களும் பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியது என்று எக்ஸ்பிரஸ் இதழ்த் தலையங்கம் அங்கலாய்த்துக் கொள்கிறது!

குஜராத் கலவரம் கொழுந்து விட்டெரியவும், கொலைகள் பல நடக்கவும் தூண்டிவிடும் பேனாவை தூக்கிய கோயங்காவின் கரம், என்ன காரணத்தாலோ ரயில் நிறுத்தப் போராட்டத்தால்,

தமிழ் மக்கள் சிலருக்கு ஏற்பட்ட அசௌகரியம் குறித்து நீலிக் கண்ணீரைக் குடம் குடமாக வடிக்கிறது!

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது இப்படித்தான் வெள்ளைக்காரன் அங்கலாய்த்துக் கொண்டான்!

ஆறு ஆண்டுகள் அசாமியர் தொடர்ந்து போராடிய போது, சாய்வு நாற்காலி பேர் வழிகள் இப்படித்தான் புகை பிடித்தவாறு அசடு வழிந்தார்கள்!

முட்டையை உடைக்காமல் ஆம்லெட் செய்ய முடியாது! எக்ஸ்பிரஸ் வாசிகள் போன்ற சில மேட்டுக் குடியினருக்கு, மக்கள் போராட்டங்கள் சில அசௌகரியங்கள் ஏற்படுத்துவதைத் தவிர்க்க முடியாது!

எக்ஸ்பிரசும் சேர்ந்து இந்திரா காந்தியின் எமர்ஜன்சியை எதிர்த்த போது கூட, அசௌகரியங்கள் ஏற்படத்தான் செய்தன!

எதேச்சாதிகாரப் போக்கு எங்கு தலைகாட்டினாலும், அதை நேர் நின்று எதிர்ப்பது ஜனநாயகவாதிகளின் கடமை!

ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் இப்படித்தான் கூறியிருக்கிறார். காந்தியடிகளும் கூட இவ்வாறு உரைத்திருக்கிறார்!

எக்ஸ்பிரஸ் தற்காலிகமாக அதை மறந்தது ஏனோ?

இலங்கையை சைப்ரஸ் போலப் பிரித்துத் தமிழருக்கு விடுதலை வாங்கித் தரமுடியாதென்றும், அப்படிக் கூறுவது பொறுப்பற்ற செயல் என்றும் எக்ஸ்பிரஸ் தாக்குகிறது!

வாதத்திற்காகக் கேட்கிறேன்! இன்று சைப்ரஸ் இரண்டாகத்தானே இருக்கிறது.

பாகிஸ்தானை உடைத்து பங்களாதேஷ் உருவாக்கப் படவில்லையா?

இந்தியா அந்த அளவுக்கு இலங்கைப் பிரச்சினையில் போகுமென்று நாம் எதிர்பார்க்கவில்லை!

ஏனெனில், பாதிக்கப்படுவோர் கோயங்கா கூட்டமல்லவே!

தமிழர்கள்! தமிழர்கள்! நாதியற்ற தமிழர்களாயிற்றே!

இந்த நிலையையெல்லாம் அனுசரித்து டெசோ இயக்கம் நிறைவேற்றியுள்ள தீர்மானம் என்ன என்பதை படித்து விட்டாவது, எக்ஸ்பிரஸ் ஏடு தலையங்கத்தில் நம்மைத் தாக்கியிருக்கலாம்!

தனித்தமிழ் ஈழமே நிரந்தரப்பரிகாரம்! அதற்கிடையே, இரு சாராரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய உடன்பாடு எந்த அளவில் ஏற்பட்டாலும், அதற்கு நாங்கள் குறுக்கே நிற்க மாட்டோம்!

இதுவே நமது தீர்மானத்தின் மையக் கருத்து!

இருதரப்பாரும் செய்து கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தப்படி, அமைதி நிலை நாட்டப்பட வேண்டுமென எக்ஸ்பிரஸ் எழுதுகிறது!

சரி! அதனைக் கண்காணிப்பது யார்? இனப் படுகொலை தொடருகிறதே! இந்தத் தலையங்கம் வந்த எக்ஸ்பிரஸ் ஏட்டிலேயே இலங்கையின் மன்னார் மாவட்டத்தில் 46 தமிழர்கள் சிங்கள ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகச் செய்தி வந்துள்ளதே! பல பெண்கள் தாலியிழந்தனர் என்றும் எக்ஸ்பிரஸ் செய்தி பிரசுரித்துள்ளதே!

இதற்கு இந்தியா என்ன செய்யப் போகிறது?

எக்ஸ்பிரஸ் இதற்குப் பதில் கூறுமா? அல்லது செத்துமடிவது தமிழினம்தானே என்று வாயை மூடிக்கொண்டு கிடக்குமா?

உடன்பிறப்பே, எக்ஸ்பிரஸ் போன்ற ஏடுகளை தூண்டிவிட்டு - நமது உணர்வுகளை ஒடுக்கிவிட முடியாது என்பதை ஆளுகின்ற வர்க்கத்துக்குத் தெளிவுபடுத்துவோம்!

நியாயமான முடிவுகளை - நிர்ப்பந்தமற்ற முடிவுகளை - இரு தரப்பாரும் ஏற்றுக் கொள்ளும் முடிவுகளை - அவை எந்த வடிவில் இருந்தாலும் குறுக்கே நிற்கமாட்டோம்!

மாறாக எது நடந்தாலும், இருப்பது ஒரு உயிர்! அது போகப்போவது ஒரு முறை! அந்த உயிர் நல்ல காரியத்துக்காகப் போகட்டுமென்று உறுதியெடுத்துச் செயல்படுவோம்!

அன்புடன்

மு.க.

04-09-1985

1341. உடன்பாடு உருவாகிட உடனடியாகத் தேவை என்ன?

உடன்பிறப்பே,

இலங்கையில் - தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் - அருமை நண்பர்கள் ஆலாலசுந்தரம், தர்மலிங்கம் ஆகியோர் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி கேட்டுத் தமிழகம் மேலும் ஒரு அதிர்ச்சியால், துடித்துத் துவண்டு போனது.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர்களான திரு.அமிர்தலிங்கம் அவர்களும், திரு.சிவசிதம்பரம் அவர்களும் அந்தக் கொடுஞ்செயல் குறித்து விடுத்த அறிக்கையில், தமிழ் ஈழத்துக்காக ஆலாலசுந்தரமும், தர்மலிங்கமும் அனைத்தையும் தியாகம் செய்துவிட்டார்கள் என்று குறிப்பிட்டிருந்த அந்த வரிகள் நம் நெஞ்சத்தை நெகிழவைத்தன.

தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் எனத் தொடங்கி நூற்றுக்கணக்கான விடுதலைப் போர்த் தளகர்த்தர்களையும், விடுதலைப் போராளிகளையும், ஆயிரக்கணக்கான தமிழின மக்களையும் தமிழ் ஈழம் அமைய வேண்டுமென்பதற்காகப் பலி கொடுத்துக் கொண்டேயிருக்கிற நிலைமைக்கு ஒரு முடிவு ஏற்படாமல், இதோ இன்னும் இரண்டு தமிழர் தலைவர்கள் பிணமாக்கப்பட்டு விட்டார்கள்.

கடத்தப்பட்ட முன்னாள் எம்.பி.க்களில் இருவர் உயிருடன் இருக்கிறார்கள் என்ற செய்தி சற்று ஆறுதலைத் தருகிறது எனினும், அவர்களின் கதி என்ன ஆகுமோ என்ற அச்சமும், கவலையும் நம்மை ஆட்டிப் படைக்கின்றன!

தமிழின முன்னாள் எம்.பி.க்கள் கடத்தப்பட்டதற்கும், கொல்லப்பட்டதற்கும் விடுதலைப் போராளிகளின் இயக்கங்களில் ஒன்றுதான் காரணமென்று இலங்கை அரசு, வதந்தியை வேகமாகப் பரப்பியதிலிருந்தே - விடுதலைப் போராளிகள் மீது பழி சுமத்தி தாய்த் தமிழ்நாட்டு மக்களுக்கும், இந்திய அரசுக்கும் அவர்கள் மீது ஒரு அதிருப்தியை உருவாக்க வேண்டுமென்ற திட்டம் இலங்கை அரசின் மூளையில் உருவாகி, செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகப் புரிகிறது.

இந்தக் கடத்தலுக்கும், கொலைக்கும் தங்கள் இயக்கத்திற்கு எவ்வித தொடர்பும் இல்லையென்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், தமிழ் ஈழ விடுதலை அமைப்பு, ஈழம் புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சி விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகள் அறிவித்திருப்பது மட்டுமன்றி, இலங்கையில் சுவரொட்டிகளும் வெளியிட்டு தமிழ் ஈழப் பகுதிகளில் ஒட்டியிருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன.

இரு முன்னாள் எம்.பி.க்களை தமிழ் ஈழப் போராளிகள் சுட்டுக் கொன்றதாக இலங்கை அரசு கூறுவது, அந்த அரசின் வழக்கமான பொய்ப்பிரச்சாரத்தின் ஒரு பகுதியே ஆகும் என்று, தமிழ்ஈழத் தலைவர்களில் ஒருவரான நண்பர் சந்திரகாசன் அவர்கள் செய்தி விடுத்துள்ளார்.

தீவிரவாத அமைப்புகளிடையே பிளவை உருவாக்கவே, இத்தகைய பழிதூற்றும் பொய்ப் பிரச்சாரம் நடத்தப்படுவதாக விடுதலைப்புலி அமைப்பின் பிரதிநிதிகளில் ஒருவரான திலகர் என்பவர் ஏடுகளுக்கு அறிக்கை தந்துள்ளார்.

எந்தச் செய்தி உண்மையாக இருக்கக் கூடாது என நானும், உன்னைப் போன்றவர்களும், ஏன்? உன் போன்ற உடன்பிறப்புகளும் கருதினோமோ - அவ்வாறே அந்த முன்னாள் எம்.பி.க்களின் கடத்தலுக்கும் கொலைக்கும் விடுதலைப் போராளி இயக்கங்கள் எதுவும் காரணமில்லை யென்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதில் ஒரு துளி மகிழ்ச்சி! ஆம். பெருமூச்சுக்கிடையே! சோகப் புயலுக்கிடையே!

விடுதலைப் போராளிகளின் போராட்டக் கூட்டமைப்பாக விளங்கும் இ.என்.எல்.எப். ஈழ தேசிய விடுதலை முன்னணியின்

சார்பில் நான்கு இயக்கங்களின் பிரதிநிதிகளும் கையெழுத்திட்டு விடுத்துள்ள அறிக்கையில், தங்கள் மீது இலங்கை அரசும், அதற்குத் துணையாகச் சிலரும் பொய்ப்பழி சுமத்தித் திசை திருப்ப முயற்சிப்பதாகக் கூறி வன்மையான கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே இலங்கையில் தொடர்ந்து சிங்கள ராணுவத்தினரும், சிங்களக் காடையரும் நடத்துகின்ற இனப்படுகொலை நின்றபாடில்லை!

பேச்சுவார்த்தை என்பதும் தடைப்பட்டுக் கிடக்கிறது. பாலசிங்கம், சத்தியேந்திரா இருவர் மீதுமுள்ள நாடு கடத்தல் உத்தரவு திரும்பப் பெறப்பட்டு, அவர்கள் இந்தியாவுக்குத் திரும்பி வந்தால்தான் மூன்றாவது சுற்றுப்பேச்சு வார்த்தை நடத்துவதற்கு உதவிகரமாக இருக்க முடியுமென்று நண்பர் சந்திரகாசன் அவர்கள் நேற்றைய பேட்டியில் கூறியிருக்கிறார்.

பிரதமர் ராஜீவ் காந்தி தயாரித்த புதிய சமரசத் திட்டத்தைக்கூட, இலங்கை அரசு அலட்சியப்படுத்தி விட்டதாகச் செய்திகள் வருகின்றன!

இலங்கையில் நிலைமை, எல்லை கடந்து போய்க் கொண்டிருப்பதால் அங்கே சர்வதேச அமைதிகாக்கும் படையொன்றையாவது உடனடியாக அனுப்பிவைக்க இந்திய அரசு, தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென சந்திரகாசன் கூறியிருப்பது அலட்சியப் படுத்தப்படக் கூடியதல்ல!

இலங்கையில் தமிழினம் முற்றிலும் அழிந்து போய் - புல் முளைப்பதற்குள்ளாகவாவது இந்திய அரசு ஆக்கபூர்வமாக ஏதாவது செய்ய முன்வருமா என்பதே சந்தேகத்திற்குரியதாகி விட்டது!

செப்டம்பர் முதல்நாள் இந்து பத்திரிகையின் முதல்பக்கத்தில் ஒரு செய்தி பார்த்தேன்!

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் எம்.கே. ரஷ்கோத்ரா என்பவரைத் தனது தனித்தூதுவராக மொராக்கோ அரசர் ஹசானிடம் அனுப்புகிறார். மேற்கு சகாரா பிரச்சினை குறித்துப் பேச! மேற்கு சகாராவில் சகர்வாய் குடியரசு அமைந்திட நடைபெறுகிற விடுதலை

போராட்ட இயக்கத்திற்கு இந்தியா தனது அங்கீகாரத்தை அளிக்க முன்வந்துள்ளதை முன்னிட்டு, இப்படி ஒரு முயற்சி ராஜீவ் காந்தி அவர்களால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

எங்கேயோ உள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு இந்தியாவின் அங்கீகாரம்! அதன் தலைவர் அராபத்துக்கு ஆதரவு!

அதே போல நமீபியா விடுதலை இயக்கத்துக்கு இந்தியாவின் அங்கீகாரம்! ஆதரவு!

இப்போது மேற்கு சகாராவில் உள்ள விடுதலை இயக்கத்துக்கு அங்கீகாரம்! அதற்காகத் தூதர் விரைகிறார்!

ஆனால் இந்தியக் கடற்கரைக்கு இருபது கல் தொலைவில் ஒரு இனம் சுட்டெரிக்கப்படுகிறது!

பூண்டற்றுப் போக முயற்சி நடைபெறுகிறது!
புழுதி மேடாகிக் கொண்டிருக்கிறது!

அதைப் பற்றி நமக்குக் குரல் கொடுக்கக் கூட உரிமை யில்லையாம்!

அந்த விடுதலை இயக்கத்துக்கு அங்கீகாரம் அளிக்காதது மட்டுமல்ல. அதன் தலைவர்களை இந்திய அரசு நாடு கடத்தி உத்தர விடுகிறது! அதுவும் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும் போது!

இங்கே தமிழ்நாட்டில் ஒரு தமிழ் இனத்துரோக அரசு நடைபெறுகிறது. அதன் அமைச்சர்கள் சிலர், எம்.ஜி.ஆரின் அருளாசி பெற்றுக் கொண்டு - இந்திய அரசின் நாடு கடத்தல் உத்தரவை மிகவும் நியாயமானது என்று பொது மேடைகளில் முழங்குகிறார்கள்!

நடவடிக்கைக்கு எதிர் நடவடிக்கை என்ற முறையில் தான், அவர்கள் நாடு கடத்தப்பட்டார்கள் என்று ஒரு அமைச்சர் வியாக்யானமே செய்திருக்கிறார்!

என்செய்வது! நாவலர் அவர்களே கூட நிருபர்களிடம் பேசும் போது காரணமில்லாமல் நாடு கடத்தியிருக்க மாட்டார்கள் என்று கடந்த வாரம் பெங்களூரில் கூறியிருக்கிறாரே!

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென நமது இளம்பிரதமர் உண்மையிலேயே நம்புவாரேயானால் - பேச்சு

வார்த்தைக்கான சூழ்நிலையை சுமுகமாக உருவாக்கிட, இந்திய அரசு, தமிழீழத் தலைவர்கள் மீதுள்ள நாடு கடத்தல் உத்தரவைத் திரும்பப் பெறவேண்டும்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிச் செயல்படுகிற இலங்கை அரசின் போக்கினைத் தடுத்து நிறுத்த உடனடியாக, சர்வதேச அமைதிப் படையொன்றை இலங்கைக்கு அனுப்பிட இந்திய அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

நமது குறிக்கோள் தமிழ் ஈழம் தான்! அதுவே தமிழர்க்கு நிரந்தர பரிகாரமாக இருக்க முடியும்!

அதற்கிடையே இரு சாராரும் ஏற்றுக் கொள்கிற உடன்பாடு ஒன்று உருவாகுமேயானால், நாம் குறுக்கே நிற்க மாட்டோம் என்று டெசோ இயக்கத்தின் சார்பில் தெளிவுபடுத்தியிருக்கிறோம்!

அந்த உடன்பாடு ஏற்படுவதற்கு உதவிகரமாக இருக்கத்தான் நாடு கடத்தல் உத்தரவைத் திரும்பப்பெற வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

அதனை வலியுறுத்தி நடத்திய போராட்டத்தில் தான் பேராசிரியரும், நண்பர் நெடுமாறனும், தி.மு.க., தி.க., காமராஜ் காங்கிரஸ் இயக்கத்தை சேர்ந்த முன்னோடிகளும் இந்தத் தமிழ் இனத் துரோக ஆட்சியில் இன்னமும் சிறையில் இருக்கிறார்கள்.

யார்? எப்படி? எந்த வகையில் தமிழின உணர்வோடு செயல்படுகிறார்கள் என்பதையும் - யார்? எப்படி? எந்த வகையில் தமிழினப் பகைவர்களாக விளங்குகிறார்கள் என்பதையும் கண்டறிய, உடன்பிறப்பே! தமிழ்மக்களுக்கு இது ஒரு வாய்ப்பல்லவா?

அன்புடன்

மு.க.

06-09-1985

1342. காணக் காத்திருக்கிறேன்; கண்மணியே!

உடன்பிறப்பே,

இந்தக் கடிதம் உன் கைக்குக் கிடைக்கும் போது - செப்டம்பர் 15ஆம் நாளுக்கு இடையே எட்டு நாட்கள் தானிருக்கின்றன!

சென்னையில் நடைபெறுகிற முப்பெரும் விழாவை நினைவுபடுத்தத்தான் இடையிலிருக்கும் நாட்களின் கணக்கைக் குறிப்பிடுகிறேன்.

ஓயாப் பணிகள் உனக்கு! அது தெரியாமல் இல்லை எனக்கு!

இருப்பினும் அயர்வின்றி, அண்ணா வழியில் உழைப்பதாகச் சூளுரை மேற்கொண்டிருக்கிறோமே!

அந்த அண்ணனுக்கும், அந்த அண்ணன் ஏற்றுக் கொண்ட தலைவராம் இனமான ஏந்தல் தந்தை பெரியாருக்கும், அண்ணன் உருவாக்கிய ஒப்பற்ற இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் பிறந்த நாள் விழா - அதுவே நாம் தொடர்ந்து ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்ற முப்பெரும் விழா!

ஆதிக்கக்காரர்களின் பிடியில் அகப்பட்டுச் சீரழிந்து கிடந்த ஒரு பெரும் சமுதாயத்தின் அறிவுக் கண்களைத் திறந்து, மாக்களாகத் திரிந்தோரை மக்களாக்கிட, மலைபோன்ற எதிர்ப்புகளையும் மண்துகள்களாக எண்ணிக் கடந்து சென்று போர்முரசு கொட்டிய பெரியாரின் வழிவந்த இயக்கம் தி.மு.க.!

தமிழ்மொழி தழைக்க - தமிழர் உரிமை நிலை நாட்டப்பட - சமத்துவ சமதர்ம சமுதாயம் உருவாகிட - எத்தனை தடைகள் வந்துற்றபோதிலும் - சிறிதளவும் விட்டுக் கொடுக்காமல் பீடு நடைபோட்டுப் பெருமை கொண்ட பேறறிஞர் அண்ணா, ஏற்றிவைத்த அணையாத ஜோதி - தி.மு.க.!

அந்தத் தி.மு.க. கொண்டாடுகிறது, தலைநகரில் எழுச்சிமிகு முப்பெரும்விழா!

விழாவுக்கான மும்முரமான ஏற்பாடுகளில் மாவட்ட, ஒன்றியக் கழகங்களும், இளைஞர் அணியினரும் - மகளிர், மாணவர் தொழிலாளர் மற்றும் கழகத்தின் பல்வேறு சார்பு மன்றங்களும் ஈடுபட்டிருக்கும் வேளையில்தான், நாம் சற்றேனும் எதிர்பாராமல், தமிழ் ஈழத் தலைவர்களை நாடு கடத்தும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது! முப்பெரும்விழா ஏற்பாடுகளை ஒத்திவைத்து விட்டுக் களம் புகுந்தோம்!

முன் கூட்டியே பல்லாயிரவர் கைது செய்யப்பட்டனர்! ஆகஸ்டு 30 - ரயில் நிறுத்தப் போராட்டத்தன்றும் பேராசிரியர், நெடுமாறன் மற்றும் கழக முன்னோடிகள், திராவிடர் கழகச் செயல்வீரர்கள், காமராஜ் காங்கிரஸ் இயக்கத்தினர் பலரும் கைது செய்யப் பட்டனர்!

பழிவாங்கும் சேடிஸ்ட் மனப்பான்மை கொண்ட அரசல்லவா? அதனால் வழக்கு! கோர்ட்டு! ரிமாண்டு! சிறைச்சாலை!

அதனால் சோர்ந்து விடவில்லை எவரும்!

அண்ணா அறிவாலய நிதி பெறுவதற்காகச் சில மாவட்டங்களுக்குச் சென்று அங்கே பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட போது, சென்னை முப்பெரும் விழாவுக்கு வருவதற்கான ஆக்கப்பணிகளில் கழகத்தினரும், கழக ஆதரவாளர்களும் ஆர்வத்தோடு ஈடுபட்டிருப்பதைக் கண்டு மகிழ்ந்தே திரும்பியுள்ளேன்.

எங்கள் கிராமத்திலிருந்து இருபது பேர் புறப்படுகிறோம்!

எங்கள் நகரத்திலிருந்து ஆயிரம் பேருக்குக் குறையாமல் வருவோம்!

இப்படி ஒவ்வொரு பகுதியிலும் போட்டி போட்டுக் கொண்டு என்னிடம் கூறினர்.

வரும்போது எதற்கும் மறந்து விடாமல் குடைகளை எடுத்து வாருங்கள். ஏனெனில் சென்னையில், எப்போது மழை வரும் - அல்லது வராது எனச் சொல்ல முடியாது - எதற்கும் எச்சரிக்கையாக வாருங்கள் என்று கூறி வைத்தேன்!

மழையானாலும், வெள்ளமானாலும் நனைந்து கொண்டோ, நீந்திக் கொண்டோ வரக் கூடத் தயார் என்று இளஞ்சிங்கங்கள் மார் தட்டினர்! பூரித்துப் போனேன்!

உடன்பிறப்பே, உன்னைப் போன்றோர் எத்தனை லட்சம் பேர் வந்தாலும் சரி - ஒவ்வொருவரின் கரத்திலும் நமது அண்ணன் தந்த கழகத்தின் இருவண்ணக் கொடி இருக்கிறதா? - என்று பார்த்துக்கொண்டேதான் நான் அந்தப் பேரணியில் வருவேன்!

ஆடம்பரம், நிழல்விரிக்க வேண்டுமென நான் எதிர்பார்க்கவில்லை!

எளிமை - அதே நேரம் எழுச்சி கரைபுரண்ட நதிப்பெருக்காக, கட்டுப்பாடு எனும் அணையை மீறாமல் அமைந்திடல் வேண்டும்!

பிரம்மாண்டமான அலங்கார வளைவுகள் - பதாகைகள் - இவற்றையெல்லாம் என் உடன்பிறப்புகள் உருவாக்கிடவில்லையே என்று கவலைப்படமாட்டேன் நான்!

தமிழ் மக்களின் சக்தியை உலகறியச் செய்கிற பணியில் ஈடுபட்டால் போதும்!

அருகே இலங்கையில் நமது இனம் அழிக்கப்படுகிறது! அது கண்டு பொங்கியெழுந்து குமுறிக் கொந்தளிக்கிறது தமிழகம் என்ற உண்மையை இந்தியப்பேரரசு உணருமாறுச் செய்திடும் ஊர்வலமாக முப்பெரும் விழாப் பேரணி அமைந்திட்டால், அது இந்திய அரசுக்கு மட்டுமல்ல - இலங்கை அரசுக்கும் எச்சரிக்கையாக இருந்திடும்!

இங்கோ, இந்தி ஆதிக்கம் எல்லா வழியிலும் நம் தலையை மிதிக்கக் காலை நீட்டிப் பார்க்கிறது!

அந்த ஆதிக்கத்தை அனுமதிக்க மாட்டோம் - தாளமுத்து, நடராசன் காலத்திலிருந்து தமிழ்மொழி காத்திடும் போரில் உயிரைத் துச்சமெனக் கருதிக் களம் புகுந்திடும் பட்டாளத்தினர் நாம் என்பதை விளக்கும் வகையில் முப்பெருவிழாப் பவனி, இந்தப் பாரினைக் குலுக்கிட வேண்டும்!

விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வியாபாரிகள், இப்படி அத்தனை பிரிவு மக்களும்,

அனுதாப அலையில் சிக்கி அவசரத்தில் செய்து விட்ட தவறை உணர்ந்து - இன்று வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிடும் தமிழக அரசினை நோக்கிப் போர்க்குரல் கொடுக்கிறார்களே! அவர்கட்கு நம் துணை எந்த நிலையிலும் உண்டு என்பதை நாட்டுக்கும், நாடாள்கின்ற கூட்டத்துக்கும் எடுத்துரைக்கும் இலட்சியப் பேரணியாக எழுந்திடல் வேண்டும் முப்பெரும் விழாப்பேரணி!

குலக்கொழுந்தே! கொள்கைக் குன்றே! கொடிப் படை திரண்டதோ என ஐயுறும் வண்ணம் நீ அணிவகுக்கும் அழகினை - செப்டம்பர் 15 இல், சென்னையில் காணக் காத்திருக்கிறேன் கண்மணியே!

அன்புடன்

மு.க.

07-09-1985

1343. வந்துவிட்டது தேர்தல்! வகைப்படுத்துக பணிகளை!

உடன்பிறப்பே,

நகராட்சித் தேர்தல்கள், பேரூராட்சித் தேர்தல்கள், ஊராட்சி மன்றத் தேர்தல்கள், ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் அக்டோபர் 18ஆம் நாள் நடைபெறும் என்பதற்கான அரசின் செய்திக் குறிப்புகள் வெளியாகியுள்ளன. இந்தக் கடிதம் உன் கையில் கிடைக்கும்போது தேர்தல் அறிவிப்பும் Notification அரசின் சார்பில் வந்துவிடும்.

ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, பேரூராட்சிக்கான தேர்தலில் போட்டியிட முனைவோர் வேட்பு மனுக்களுக்கான இறுதித் தேதியாக செப்டம்பர் 19ஆம் நாள் குறிக்கப்படுமென அரசின் செய்திக் குறிப்பு, அதிகாரிகள் வாயிலாக ஏடுகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

இடையில் இருக்கும் நாட்கள் குறைவு தான்!

கட்சிச் சின்னங்களில் போட்டி கிடையாது என தெரிவிக்கப் பட்டிருந்தாலும் கூட கட்சிச் சின்னமின்றி, ஏதோ தங்களுக்கென ஒதுக்கப்படும் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் பெரும்பாலும், கட்சிகளின் சார்புடையவர் களாகத்தானிருப்பார்கள். அனைவருமே சுயேச்சைகளாக இருப்பார்கள் என்று முடிவு செய்ய முடியாது.

கழகத்தினர், எந்தவொரு பொறுப்புக்குப் போட்டியிடு வதாயிருந்தாலும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் அண்ணாவின் அறிவுரையை இதயத்தில் பதியவைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

கழகத்தின் மேலமைப்புகளால் பரிந்துரைக்கப்பட்டு, தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்படும் வேட்பாளர் பெயர்கள்

அல்லது தலைமையின் ஒப்புதல் பெற்று மாவட்டச் செயலாளர்கள், மாவட்டப் பொறுப்பாளர்களால் அறிவிக்கப்படும் பெயர்கள் செப்டம்பர் 18ஆம் தேதிக்குள் ஏடுகளில் வெளிவந்துவிடும்.

சிலவற்றுக்கு வேண்டுமானால் ஏடுகளில் வெளியிட போதிய அவகாசமில்லாதுபோயின், மாவட்டக் கழகங்கள் வாயிலாகத் தெரிவிக்கப்பட நேரிடும்.

கழக அமைப்பின் வாயிலாக யாருடைய பெயர் வேட்பாளராக அறிவிக்கப்படுகிறதோ, அவரது வெற்றிக்காகக் கழகத்தினர் ஒன்றுபட்டுப் பாடுபட வேண்டும். கட்டுப்பாடு ஒரு சிறிதும் குலையக்கூடாது. கட்சிச் சின்னம்தான் இல்லையே! கட்சிக்குள்ளேயே இன்னொருவர் போட்டியிட்டால் குற்றமா? என்றெல்லாம் நொண்டிச் சமாதானம் கூறிக்கொண்டு கழகத்தின் கட்டுப்பாட்டைச் சீரழிக்க முனைவோர் யாராயினும், கழகத்தின் சட்டதிட்டப்படி கடுமையான ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும்.

செப்டம்பர் 14ஆம் நாள் சென்னை வந்தால் போதுமானது! அல்லது 15ஆம் நாள் வந்து முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு 16, 17 இருநாட்கள் தங்கி வேட்பாளர் குறித்த கருத்துகளை அறிவிக்கலாம்!

அதற்கிடையே அந்தந்தப் பகுதிகளில் உள்ள அமைப்புகளைக் கூட்டி நிலவரங்களை ஆராய்ந்து, போட்டியிட விரும்பும் வேட்பாளர்களுக்குள்ள வாய்ப்புக் கூறுகளை மனம்விட்டுப் பேசி, மற்றும் ஒன்றியச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் அல்லது பொறுப்பாளர்கள் கலந்துரையாடி - தலைமைக் கழகத்தின் வேலைப் பளுவைக் குறைக்கிற அளவுக்கு காரியமாற்றத் தொடங்கலாம்! அவ்வாறு தொடங்கிட வேண்டுமென்றும் - அந்த அணுகுமுறை அனைவரையும் அரவணைத்துச் செல்வதாக இருக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களும், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களும் நானும் சந்தித்துப் பேசினோம். நமது தோழமை அணியில் உள்ள மற்ற கட்சித் தலைவர்களுடனும் சந்தித்துப் பேசும் வாய்ப்பு ஏற்படும்.

குறைந்த கால அவகாசமே இருப்பதால் - தோழமைக் கட்சி வேட்பாளர்களும், கழக வேட்பாளர்களும், போட்டியிடும் இடங்களைப் பகிர்ந்துகொள்வது குறித்து மாவட்ட அளவிலேயே விவாதித்து முடிவுகளை மேற்கொள்வதென நம்முடைய கட்சித் தலைமையும் மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகளும் எடுத்துள்ள நிலையே இப்போதுள்ள காலநெருக்கடியில் சரியானதாக இருக்க முடியும்.

எனவே, அதற்கேற்ப மாவட்டக் கழகச் செயலாளர்கள் அல்லது பொறுப்பாளர்கள் ஒன்றியக் கழக அமைப்புகளுடன் கலந்து ஆலோசித்து நகரக் கழக, பேரூர்க் கழக அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு பேசி, மாவட்ட அளவில் எடுக்கும் முடிவுகளை - அதாவது கழகத்தினர் போட்டியிடும் விபரம், தோழமைக் கட்சியினர் போட்டியிடும் விபரம், முதலியவற்றையும் - இடையே எதுவும் பிரச்சினைகள் எழுந்தால் அவற்றையும் அவ்வப்போது தலைமையுடன் தொடர்பு கொண்டு தெரிவிப்பதுடன் - முப்பெரும் விழாவுக்கு வரும்போது நேரிலேயே தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இதற்குள்ளாக, தலைமைக் கழகத்திடம் நேரிடையாகப் பேசலாம் என முந்திக்கொண்டு - வேட்பாளராகப் போட்டியிட விரும்பும் எவரும் சென்னைக்கு அவசரப்பட்டு வர வேண்டாமெனப் பணிவுடன் வேண்டுகிறேன்.

கழக ஆட்சியைக் கலைத்த இந்திரா காங்கிரஸ் ஆட்சியாளர்களின் கவர்னர் ஆட்சியிலே ஊராட்சி ஒன்றியங்களையும், நகராட்சிகளையும் கலைத்தனர். எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்ததும் ஊராட்சி மன்றங்களையும் கலைத்தார்!

எனவே உள்ளாட்சி மன்றங்களில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத பெருங்குறையும் - ஊழல் பெருக்கமும் - நிர்வாகச் சீர்கேடும் - ஆளும் கட்சியின் ஆர்ப்பாட்டமும், ஆதாயந்தேடலும் தான் இதுவரை மக்கள் கண்ட பலன்!

இந்தத் தீமைகளுக்கு ஒரு முடிவு காணக் கிடைத்துள்ள இடைப்பட்ட இந்த வாய்ப்பைத் தோழமைக் கட்சிகளுடன் ஒன்றுபட்டும், நம்முடைய கட்சியினரிடையே கட்டுப்பாடு காத்தும் நன்கு பயன்படுத்தி நகர்ப்புற, கிராமப்புற மக்களின்

அடிப்படை வசதிகளைப் பெருக்கிட, தூய்மை எல்லா வகையிலும் திகழ்ந்திட, உடன்பிறப்பே, உனது கடமையைச் செய்திடுவதோடு உன் போன்ற உடன்பிறப்புகளுடன் இணைந்து நின்று அரும்பணியாற்றிட வேண்டுகிறேன்!

இன்னும் நிறைய இருக்கிறது எழுதிட!

தொடர்ந்து எழுதுகிறேன்!

அதற்குள் செப்டம்பர் 15 இல் சென்னையில்தான் சந்திக்கிறோமே!

அன்புடன்

மு.க.

09-09-1985

1344. விழிகள் பாடட்டும் வீர காவியம்!

உடன்பிறப்பே,

செப்டம்பர் 15 - மறந்திருக்க மாட்டாய்! மறக்க முடியுமா அந்த நாளை! மறக்க முடியாத நாளாயிற்றே!

பூவிதழின் மென்மையினும் மென்மையான
புனித உள்ளம் - அன்பு உள்ளம்
அரவணைக்கும் அன்னை உள்ளம்!
மலர் இதழ்கள் தமிழ் பேசும்;
மா, பலா, வாழையெனும் முக்கனியும் தோற்றுவிடும்
விழிமலர்கள் வேலாகும், வாளாகும்
தீங்கொன்று தமிழ்த்தாய்க்கு வருகுதென்றால்!
கால் மலர்கள் வாடிடினும் அவர் கடும் பயணம் நிற்காது;
கைமலர்கள் பிணைத்துநிற்கும், தம்பியரை கழகத்தை!

அம்மலரே எதிரிகளை மன்னித்து
நெற்கதிர் போல் தலைநாணச் செய்துவிடும்!
மக்களாட்சி மலர் குலுங்க
சமதர்மப்பூ மணக்க
தாய்மொழி தமிழே, வாழ்வுப் பொழிலாக;
ஆடிவரும் தென்றல்,
நாடி வரும் பூமுடியே! புகழ்முடியே! உமைத்
தேடிவரும் வாழ்த்துக் குவியலிலே - தினம்
பாடிவரும் வண்டாக நான் பறப்பேன்
உனக்காக எனைத் துறப்பேன்; என

ஒரு கோடித் தமிழ் இளைஞர்
பாடி நின்ற பாட்டுக்குப் பெருந் தலைவன்!

நமது அண்ணனின் பிறந்த நாள்! செப்டம்பர் 15ஆம் நாள்! அந்நாளில் அவரை,

தமிழே! தேனே! தங்கக்கனியே!
அமிழ்தே! அன்பே! அழகுக் கலையே!
எழிலே! அறிவே! எண்ணச் சுடரே!
பொழிலே! புகழே! பொன்னின் மணியே!
திருவே! உருவே! திங்கட் குளிரே!
தருவே! நிழலே! நிழல் தரு சுகமே! தாயே!

என்று கண்களில் நீர்துளிர்க்கப் பெருமிதத்துடன் - பெருமகிழ்ச்சியுடன் - பேரன்புடன் - பெருமூச்செறிந்தவாறு போற்றுகிறோம்!

அந்த அண்ணனை நமக்கு அடையாளம் காட்டி, நம்மையெல்லாம் அவருக்கு உடன்பிறப்புகளாய் ஆக்கிய பெருமைமிகு மேதை பெரியாரன்றோ!

எரிமலையாய்ச் சுடு தழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடிஒலியாய்
இனஉணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக்கட்டும் கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்சு நகர் சாக்ரடீசாய்
ஏன்என்று கேட்பதிலே வைரநெஞ்ச வால்டேராய்

வாழ்ந்திருந்த பெரியாரின் பிறந்த நாள் செப்டம்பர் 17 - அந்தத் திருநாளில்தான் திராவிட முன்னேற்றக் கழகமெனும் இந்த இனமானப் பாசறையை - தமிழ் உணர்வுப் பேரியக்கத்தை - பகுத்தறிவுப் பாடி வீட்டை - கொட்டும் மழைக்கிடையே நம் அண்ணன் தொடங்கி வைத்தார்!

முக்கனிகள் என வாய்த்த இந்த மூன்று பிறந்த நாள் விழாக்களும் தான் முப்பெரும் விழா!

ஆண்டுதோறும் நாம் எடுத்து ஆனந்தப் பள்ளுப்பாடுகின்ற விழா!

ஆனால் இந்த ஆண்டு - மகிழ்ச்சியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு எழுச்சி முரசு கொட்டும் விழாவாக - உணர்ச்சிச் சங்கநாதம் முழங்கிடும் விழாவாக - முப்பெரும் விழா அமைகிறது!

அருகாமையில், இலங்கைத் தீவில் அழிந்து கொண்டிருக்கும் தமிழ் இனத்தை எண்ணி ஏங்கியவாறு - அகதிகளாய் வந்து குவிந்து கொண்டிருக்கும் தமிழ்க் குடும்பங்களைக் கண்டு கண்ணீர் வடித்தவாறு - செய்வதறியாது திகைத்து நிற்கும் நாம் நடத்துகின்ற முப்பெரும் விழாவிலே எவ்வாறு முழுமையான மகிழ்ச்சி இருக்க முடியும்!

மலர்ந்தது போல் தெரியலாம் முகம் - ஆனால் அகமோ ரணமாகி விட்டிருக்கிறதே! நமது இனம் அழிவது கண்டு! அந்த ரணத்தின் சிகப்புத்தான் நமது முகத்தில் படர்ந்ததோ எனும் விதத்தில் தான் விழா நாளன்றும் நாம் காணப் படுவோம்!

இதை எழுதிக்கொண்டிருக்கும் போதே இலங்கையில் சிங்களராணுவத்தினரின் துப்பாக்கிகள் வெடிக்கின்ற சப்தம் என் காதுகளைக் குடைவது போல் தெரிகிறது!

அய்யகோ, அம்மவோ! என்று அலறிவீழ்கின்றனர்
தமிழர்கள்!
நமது சகோதரிகள் அலங்கோலப்படுத்தப்படுகின்றனர்!
மழலைகள் மலைப்பாறைகளில் பந்தாடப்படுகின்றனர்!
எத்தனை முறைதான் எரிவது இலங்கை?

அன்றந்தத் தென்னிலங்கை ஆண்ட இராவணனாம் தமிழ்ப் பெருமகனை வீழ்த்தவும் - இனத்தை அழிக்கவும் அனுமார்கள், வீடணர்கள் துணையினால் இலங்கை எரிக்கப்பட்டதாக ஒரு நிகழ்ச்சி!

அன்று முதல் இன்று வரையில் அங்கே தமிழ் இனத்தை அழிப்பதற்கெனவே எரிகிறதே இலங்கை!

இதற்கோர் முடிவே கிடையாதா? என்ற வினாக்குறி களாகத்தான் விழாநாளில், உடன்பிறப்பே! உன் போன்றோர் நடை போடப் போகிறீர்கள் பேரணியில்!

எனவே, செப்டம்பர் 15 சென்னையில் நடைபெறுவது அண்ணா, பெரியார், கழகம் பிறந்த முப்பெரும் விழா நாள் மட்டுமல்ல!

இங்குள்ள தமிழரும், வேறு எங்குள்ள தமிழராயினும் அவர்களனைவரும் தமிழர் என்ற உணர்வுடன் தலைநிமிர்ந்து தன்மானச் சீயங்களாய் பீடுநடையுடன் பெருமித நோக்குடன் விளங்கிட உறுதியெடுத்துக் கொள்ளும் நாள்!

சுயமரியாதை கொள் தமிழா! எனச் சுடர்முகம் தூக்கிச் சூளுரை மேற்கொள்ளும் நாள்!

பெயரளவில் பெரியார், அண்ணா என்று கூறி, வாழ்த்து முழக்கி விட்டுக் கலைந்து செல்லும் திருவிழா நாளல்ல!

அவர்கள் தந்த இனமான உணர்வு - தன்மானக் கொள்கை - சமுதாயப் புரட்சி - சமதர்ம ஜோதி - பகுத்தறிவு தீபம் - அரசியல் தெளிவு - இவற்றுக்கு மாசு ஏற்படுத்துவோர், மங்கிடவைக்க முனைந்திடுவோர் - யாராயினும் அவர்களை மக்களுக்கு அடையாளம் காட்டி, கொள்கைக் கடல் இது - கொந்தளித்துக் குமுறுது பார்! என தரணியறியச் செய்திட தடந்தோள் தட்டும் நாள் இதுவென அறிக!

இடையில் இருப்பது இன்னும் நான்கு நாட்களேதான்!

என்னுயிரோடு உயிராகக் கலந்துவிட்ட கண்மணியே, உன் விழிகள் பாடும் வீரகாவியத்தை நெஞ்சாரக் கேட்டு நிமிர்ந்து நிற்பேன் நான் என்பதை நீ அறியமாட்டாயா?

அறிவாய் என்பது உண்மையாயின் வருவாய் சென்னைக்கு செப்டம்பர் 15 இல்!

அன்புடன்

மு.க.

11-09-1985

1345. வா! வா! வையம் ஆண்ட தமிழ் இனமே வா!

உடன்பிறப்பே,

தமிழ்ஈழத் தலைவர்கள் சந்திரகாசன், சத்தியேந்திரா, பாலசிங்கம் ஆகிய மூவரை அவர்கள், இந்திய அரசின் மீது நல்லெண்ணம் கொண்டவர்கள் என்பதை அறிந்திருந்தும், இளம்பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், அவரது அன்னையார் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காட்டிய அக்கறையை விட அதிக அக்கறை காட்டுவார் என்று நம்புகிறவர்கள் என்று தெரிந்திருந்தும், இந்திய அரசின் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் எனக் கருதுகிறவர்கள் என்பது புரிந்திருந்தும் - திடீரென நாடு கடத்தித் தனது இலங்கைச் சிங்கள அரசு விசுவாசத்தை வெளிப்படுத்திக் கொண்ட ராஜீவ் காந்தியின் நடவடிக்கையைக் கண்டித்தும், அந்த நடவடிக்கைக்கு ஒப்புதல் அளித்து, செயல்படுத்தியதோடு - தனது அதிருப்தியைக் கூடக் காட்டிக் கொள்ள விரும்பாத எம்.ஜி.ஆர். அவர்களின் தமிழின விரோதப் போக்கைக் கண்டித்தும் சென்னைத் தலைநகரிலும், தமிழகமுழுவதும் பேரணிகள் நடைபெற்றன. தமிழ் ஈழத்தலைவர்கள் மூவரையும் உடனடியாக இந்தியாவுக்கு திரும்ப அழைத்து - பேச்சுவார்த்தையை விரைவுபடுத்தி இலங்கையில் தமிழ் இனம் அழிவதைத் தடுக்குமாறு விடுத்த வேண்டுகோள் வீணாகி விடவே, தமிழ் ஈழ ஆதரவாளர் இயக்கமாம் டெசோ ஆகஸ்டு 30 ஆம் தேதி ரெயில் நிறுத்தப் போராட்டத்தை அறிவித்தது.

அன்று மாத்திரம் ரயில்கள் ஓடியிருந்தால், தமிழ்நாட்டில் மருந்துக்குக் கூட தமிழ் இன உணர்வு இல்லை என்றாகியிருக்கும்!

ரயில்களை ஓட்டிக் காட்டுவோம் என்று ஆர்ப்பரித்த அந்தோணிகள், அடங்கி ஒடுங்கி மூலையிலே பதுங்குமளவிற்குத்

தமிழின எழுச்சி அலை மோதிக் கிளம்பியது!

ஓட்டுவோம் ரயில்களை என்றவர்கள், நிலைமையைப் புரிந்து கொண்டு ரயில்கள் ஓடாது என ஆகஸ்டு 30 ஆம் தேதி அதிகாலையிலே அறிவித்தார்கள்!

அதை நம்பிப் போராட்டம் நின்றுவிடும் - ஒன்றிரண்டு ரயில்களை ஓட்டிக் காட்டி, டெசோ போராட்டம் பிசுபிசுத்தது எனச் செய்தி வெளியிடத் திட்டம் தீட்டியிருந்தனர்!

எப்போது ரயில், எங்கிருந்து புறப்பட்டாலும் நிறுத்துவதற்குத் தயாராகத் தமிழர் அணிகள் ஆங்காங்கு புகைவண்டி நிலையங்களிலே முகாமிட்டன!

இந்த அறப்போராட்டம் முழுக்க முழுக்க இந்திய அரசின் நாடு கடத்தல் உத்தரவைத் திரும்பப் பெறவேண்டுமென்பதற்காக நடத்தப்பட்டது.

ஆனால் இதில், எம்.ஜி.ஆர். எப்படி நடந்து கொண்டார்?

இலங்கைத் தூதுவர் அலுவலகத்துக்கு எதிரில் உண்ணாவிரதமிருந்தவர்கள், எம்.ஜி.ஆர். அரசில் கைது செய்யப்படவில்லை! காரணம் அவரது தோழமைக்கட்சியினர் என்பதால்!

இலங்கைத்தூதுவர் அலுவலகத்துக்கு மறியல் செய்ய வீட்டில் இருந்து புறப்பட்ட போதே நானும் - அண்ணா சாலை அண்ணா சிலைக்கருகிலேயே ஒவ்வொரு நாளும் முன்னணியினரும் கைது செய்யப்பட்டு வாரக்கணக்கில், மாதக்கணக்கில் சிறையில் அடைக்கப்பட்டோம்!

இந்த முரண்பாடான அடக்குமுறை இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எம்.ஜி.ஆரால் பிரயோகிக்கப்பட்டது!

அடுத்து மீண்டும் ஒரு மறியல் அறப்போராட்டம், இலங்கைத் தமிழர்களுக்காக நடத்தவேண்டிய கடமை நமக்கு ஏற்பட்டது!

ஒரு மாத காலம் - மாவட்டந்தோறும் ஆயிரக்கணக்கில் ஒவ்வொரு நாளும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட உடன்பிறப்புகள் முப்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் பல்வேறு சிறைகளில் மாதக்கணக்கில், வாரக்கணக்கில் அடைக்கப்பட்டனர்.

காஞ்சியில் திராவிட நாடு அலுவலகமாயிருந்து இப்போது

கழகப் பணிமனையாகியுள்ள அண்ணாவின் அழியாத நினைவாலயத்திலிருந்து மறியலுக்குப் புறப்பட்ட நான் கைது செய்யப்பட்டுச் சென்னைச் சிறையில் அடைக்கப்பட்டேன்.

கழகப் பொருளாளர் சாதிக் கோவைச் சிறையில் அடைபட்டார்.

தலைமைக் கழகத்தின் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், கழகத்தின் முன்னோடிகள், செயல் வீரர்கள், மகளிர் அணியினர், இளைஞர் அணியினர் கடும் வெயிலில் சிறைக் கோட்டங்களில் கருகி வாடினர்.

திருச்சிச் சிறையில் நம்மவர் நாலாயிரவர் அடைபட்டிருந்த பகுதியில் பந்தலுக்கு தீ வைக்கப்பட்டது.

இதற்கிடையே 1983 முதல் தீக்குளித்து மடிந்த தியாக தீபங்கள் எத்தனை பேர்! உடலைச் சுருக்கிக் கொண்டு உலவுகிற உணர்ச்சிப் பிழம்புகளாக எத்தனைபேர்!

இப்போதுதான் என்ன! சில எரிச்சல் இதயங்களிலிருந்து கிளம்புகிறதே விஷமத்தனமான கேலி! அதைப்போல நாம் போராட்டத்தைத் தேடி ஓடினோமா? இல்லை! இல்லவே இல்லை!

திம்பு பேச்சுவார்த்தை என்றதும் டெசோ இயக்கம் கூடியது! நானும், பேராசிரியரும், தளபதி வீரமணியும், நண்பர் நெடுமாறனும் கலந்துரையாடினோம்! பேச்சு வார்த்தையில் நல்ல முடிவு ஏற்படுமென்று இந்திய அரசு கூறுகிறது. எனவே நாமும், அப்படியொரு நல்ல முடிவு ஏற்படுவதற்கு ஒத்துழைப்போம் என்றுதான் மனதாரக் கருதி அமைதியாக இருந்தோம்! பொறுமையோடு திம்பு பேச்சு வார்த்தைகளைக் கவனித்துக் கொண்டிருந்தோம்!

இரண்டாவது கட்டத் திம்பு பேச்சுவார்த்தை நடக்கும்போதே, வேண்டுமென்றே திட்டமிட்டுப் போர் நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு, இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கூட அல்ல - மொத்தத்திலே மீறிவிட்டது என்பதைக் கண்ட பிறகுதான், இனியும் பேச்சு வார்த்தையால் பயன் உண்டா? எனக்கேட்டுப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு தந்தி கொடுத்தோம்!

அதற்குள் தமிழ் ஈழத்தலைவர்களும், விடுதலைப் போராட்டவீரர்களும் இலங்கை அரசு போர் நிறுத்த ஒப்பந்தத்தை

மீறுகிறது எனக் கூறிவிட்டுத் திம்புவிலிருந்து திரும்பி விட்டார்கள்!

இந்த சமயத்தில்தான், இந்திய அரசின் மிகத் தவறான அணுகுமுறை திடுமெனப் பாய்ந்தது! நாடு கடத்தல் உத்தரவு எந்தக் காரணமுமின்றி, நாகபாணமாக சீறிக் கிளம்பியது!

போர்க் குரல் கொடுத்து மத்திய அரசின் கோபத்தைத் தேடிக் கொள்ள விரும்பாவிடினும், அதிருப்தி அறிக்கையொன்றாவது தமிழக முதலமைச்சரிடமிருந்து வரும் என நாடு எதிர்பார்த்தது!

ஆனால் அவரோ, அதற்குமாறாக - நாடு கடத்தல் உத்தரவை எதிர்த்த நமது டெசோ இயக்கத்தின் மீது சினந்து பாய்ந்தார்!

ரயில் நிறுத்தப் போராட்டமா? முன் கூட்டியே கைது செய்! அறப்போர்க்களம் புகுவோரை அடைத்திடு சிறையில்!

இவ்வாறு எம்.ஜி.ஆர். அரசு ஆர்ப்பரித்தது!

பத்துநாள், பனிரெண்டுநாள் என்று சிறையில் இருந்து விட்டு தி.மு.க., தி.க., காமராஜ் காங்கிரஸ், தமிழ்நாடு பார்வர்டு பிளாக் கட்சிகளின் தலைவர்கள், தளபதிகள், செயல்வீரர்கள் இப்போது தான் விடுதலையாகிக் கொண்டிருக்கிறார்கள் நீதி மன்றங்களில்!

இனமானக் காவலராய்த் திகழும் நமது பேராசிரியர் - இளம்பருவ முதல் இது நாள் வரையில் தமிழ், எங்கள் உயிருக்கு நேர்! தமிழ் இன உணர்வு, எங்கள் இயக்கத்தின் வேர்! எனப் பரணி பாடியவாறு கொள்கை முழக்கம் செய்யும் அடலேறாவார்! பத்துநாள் சிறைத் தண்டனைக்குப் பிறகு அவரும் தலைமைக்கழகச் செயலாளர்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்களும் விடுதலைபெற்று வெளிவந்துள்ளனர்.

இன்னமும் மதுரைச் சிறையில் காமராஜ் காங்கிரஸ் தலைவரும் - இலங்கைத் தமிழர்க்காகத் தியாகப் பயணம் மேற்கொண்டவருமான நெஞ்சுறுதிமிக்க நெடுமாறன் அவர்கள் அடைபட்டிருக்கிறார். அவருடன் டெசோ இயக்க முன்னணியினர், சட்டமன்ற பேரவை, மேலவை முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள் மதுரைச் சிறையில்!

எத்தனை நாட்கள் - கிழமைகள் - மாதங்கள் - வருடங்கள் - சிறையில் இருப்பதெனினும், அதற்குத் தயாராக ஆயிரமாயிரம்

பேர் தமிழ் இன உணர்வு மிக்கார் இந்த நிலத்தில் இருக்கிறார்கள்! அந்தத் தியாக நெருப்பு, பதவி ஆசை எனும் நீரால் அணைந்து விடாமல் பாதுகாக்கும் தன்னலமற்றத் தங்கங்களாக அவர்கள் ஒளிவிடுகிறார்கள்!

அவர்களுக்குத் தலைமையேற்றுத் தமிழ் இன உணர்வுடன் செயலாற்றும் இயக்கங்களில் தி.மு.க., தி.க., காமராஜ் காங்கிரஸ், தமிழ்நாடு பார்வர்டு பிளாக் - ஆகிய இவை இடம் பெற்றுள்ள டெசோ இயக்கம்,

இலங்கையில் தமிழர் நிம்மதியாக வாழ்ந்திட நிரந்தரத் தீர்வு தமிழ் ஈழம் ஒன்றுதான் என்பது முடிந்த முடிவாயினும் கூட, இலங்கையில் அமைதி மலர்ந்திடவும், இனப்படுகொலை நின்றிடவும், தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் தடுக்கப்படவும் தமிழர்கள் மொழி, பண்பாடு, அரசியல் உரிமைகள் பெற்று சமத்துவ வாழ்வு பெற்றிடவும் - ஒரு வழி காணப்பட்டு, அதனை இருசாராரும் உடன்பட்டு ஏற்றுக் கொள்வதாயின், அதனை வரவேற்கத் தயங்கிடோம் என அறிவித்துள்ளது.

அப்படியொரு வழி காண்பதற்கான நிலையில் - இந்திய அரசின் நாடு கடத்தல் உத்தரவு ஒரு தடங்கலாக உருவாகி விட்டதல்லவா?

இலங்கை அரசு, போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தொடர்ந்து இனப்படுகொலையில் ஈடுபடுவது, அந்த வழியின் கதவை அடைக்கும் செயல் அல்லவா?

பேச்சுவார்த்தைக்கான சூழலை உருவாக்க எந்த ஒரு நிலைமை தடங்கலாக இருக்கிறதோ - அதனைத் தவிர்த்திடும் செயலில் இந்திய அரசு தயக்கம் காட்டுவது ஏன்?

நாளும் வளர்ந்து வரும் நாசங்களை நோக்கிடும் போது - இலங்கையில் இந்திய அரசின் முயற்சியால் ஒரு சர்வதேச அமைதிப்படை அனுப்பப்பட்டால் ஒழிய, பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ண அடித்தளம் அமையுமா? அமைந்தாலும் நிலைக்குமா? என்பதே ஐயப்பாடாக உள்ளது!

இந்தக் கருத்துகளை உள்ளடக்கித்தான் - சென்னையில் பெரியார் திடலில் செப்டம்பர் 8ஆம் நாள் கூடிய டெசோ

இயக்கக் கூட்டம் ஒரு விரிவான தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறது.

தீர்மான வாசகங்களில் சிறிது கடுமை இருக்கலாம்!

உண்மை சில நேரங்களில் சற்றுக் கடுமையாகவே தோன்றும்!

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர்கள் - தமிழ் இன உணர்வு ஒன்றையே மையமாக வைத்து நிறைவேற்றிய தீர்மானமும் அது!

அந்த உணர்வோடு அந்தத் தீர்மானத்தைப் பிரதமர் ராஜீவ் நோக்கிட விரும்பாவிடினும் - மனிதாபிமான உணர்வுடன் நோக்கிடுவாரேயானால், நாம் எடுத்து வைக்கும் நியாயத்தின் ஒளியை அவரால் புரிந்து கொள்ள முடியும்!

இல்லையேல் - இலங்கையில் தமிழ் இனம் அழிவதை, இங்குள்ள தமிழன் எவ்வளவு நாளைக்குச் சகித்துக் கொண்டிருக்க முடியும் என்ற கேள்வி எழுவதை யாரும் தடுக்க முடியாது!

அது நமது குருதியுடன் கலந்துவிட்ட உணர்வு! அந்த உணர்வை வெளிப்படுத்தும் நாள்தான், உடன்பிறப்பே! செப்டம்பர் 15 - சென்னையில் முப்பெரும் விழா நடக்கும் நாள்!

இனம் விழாமல் காத்திட, நாம் எடுத்திடும் விழா!

விழாவுக்கு நீ வருவதை வழிமேல் விழிவைத்துப் பார்த்திருப்பேன்!

ஓர் நொடிதான் இந்த உடலில் உயிர் இருக்கும் எனினும் - அந்த நொடிப் பொழுதிலும் உடன்பிறப்பே! உன்னைப் பார்ப்பதில்தானே நான் ஆறுதல் பெறுவேன் - அகமிக மகிழ்வேன்! அந்தப்பாசம் நிறை நெஞ்சம்தான், என் பத்தரை மாற்றுப்பசும் பொன்னே! உன்னை அழைக்கிறது!

சென்னைக் கடற்கரையின் வெண்மணற்பரப்பினைக் கண்டிட அல்ல!

செந்தமிழர் இனம், சிந்திடும் ரத்தத்தால் செம்மணற் பரப்பாகிறதே இலங்கை கடற்கரை! அந்தக் கொடுமையைத் தடுத்திட!

வா, வரிப்புலியே வா!

வைர நெஞ்ச இளைஞர் கூட்டமே வா!

வையம் ஆண்ட தமிழ் இனமே வா!

அழைக்கின்ற நான் சாதாரணமானவன் ஆயினுங் கூட; அழைப்பது ஒரு மகத்தான காரியத்தை நிறைவேற்ற! ஆம், நமது தமிழ் இன மாண்பினை, இந்த மன்பதை அறிந்திடச் செய்யும் பணிக்கு உன்னை அழைக்கிறேன்!

மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த இனத்தின் வீரம் விலை போய் விடவில்லை என்பதை உலகுக்கு உணர்த்திட - உன்னை அழைக்கிறேன்!

வா! எந்த வேலையிருப்பினும் அதனைத் தள்ளி வைத்து விட்டு - வெற்றிவேலைக் கரத்தில் ஏந்திட துள்ளியோடி வா!

அன்புடன்

மு.க.

12-09-1985

1346. ஒரு முடிவெடுக்க அணிவகுப்போம் சென்னையில்!

உடன்பிறப்பே,

இன்று சென்னை நோக்கிப் புறப்படுவாய் வெளியூர்களில் இருந்து!

சென்னையில் உள்ள உன்போன்ற உடன்பிறப்புகளோ, முப்பெரும் விழாவுக்கான ஏற்பாடுகளில் பம்பரமெனச் சுழன்று பணியாற்றிடுவர்!

இடையில் உள்ளாட்சித் தேர்தல் என ஒரு அறிவிப்பு எட்டிப் பார்த்தது!

தலையை நீட்டிய வேகத்தில் அந்தத் தேர்தல் அறிவிப்பு, பின்னுக்கு இழுத்துக் கொண்டது!

ஏ, அப்பா! எத்தனை சர்வகட்சிக் கூட்டங்கள் இந்தத் தேர்தலுக்காக நடத்தப்பட்டிருக்கின்றன!

எத்தனை மந்திரிகளிடம் இந்த இலாகா மாறி மாறிச் சென்று அவர்களால் தேர்தல் நாட்கள் அறிவிக்கப்பட்டு - அந்த உறுதிகள் எல்லாம் காற்றில் பறந்திருக்கின்றன!

1969-1970 ஆகிய ஆண்டுகளில் நகராட்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களைக் கழக ஆட்சியில் நடத்தினோம்!

1972-1973 இல் மீண்டும் உள்ளாட்சித் தேர்தல் நடத்தியிருக்க வேண்டும்! 1975 வரையில் நடத்த இயலவில்லை! வறட்சி நிவாரணப் பணிகள் - வெள்ள நிவாரணப் பணிகள் - நெருக்கடி நிலைப் பிரகடனம் - இவை போன்ற காரணங்களால் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் தள்ளிப் போனதற்கே அன்றைக்கு எம்.ஜி.ஆர்.

கட்சியினரும், இந்திரா காங்கிரஸ், மற்றும் சில கட்சியினரும் - தி.மு.க. அரசு மீது கண்டனக் கணைகளைப் பொழிந்தார்கள்!

கிராம ராஜ்யம், காந்தியடிகளின் கனவு - அந்தக் கிராம ராஜ்யங்கள் வளம்பெற உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற வேண்டாமா? அய்யோ! இரண்டு மூன்று ஆண்டுகள் அவற்றை நடத்தாமல் கழக ஆட்சியினர் விட்டுவிட்டார்களே! அநியாயம்! அக்கிரமம்! என்றெல்லாம் ஆவேசமாக முழங்கினர்!

கழக ஆட்சியைக் கலைத்துவிட்டு, இந்திரா காங்கிரஸ் ஆதிக்கமுள்ள கவர்னர் ஆட்சி வந்தவுடன், நகராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் கலைக்கப்பட்டு விட்டன!

1977 இல் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்தவுடன் - பன்னிரண்டாயிரத்துக்கு மேற்பட்ட ஊராட்சி மன்றங்களையும் கலைத்து விட்டார்!

கலைத்தவர்கள், இதோ தேர்தல் - அதோ தேர்தல் என்று ஏறத்தாழ எட்டு ஆண்டுகளாக மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்!

ஆக, உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடந்து சுமார் பதினைந்து ஆண்டுகளாகி விட்டன!

அதாவது நம்முடைய கழக ஆட்சியில் நடந்ததுதான்!

உள்ளாட்சித் தேர்தலை நடத்தியே தீருவேன் என்று ஒரு புதிய அமைச்சர் புறப்பட்டார்!

வேண்டுமென்றே தேர்தல் முறைகளில் - அதற்கான சட்டங்களில் - ஓட்டை உடைசல்களை வைத்து அறிவித்து விட்டு நீதிமன்றங்களில் இடைக்காலத் தடை வருவதற்கான வழி வகைகளையும் செய்து கொண்ட இந்த ஆட்சியாளர்கள், இறுதியாகப் பழைய முறையிலேயே தேர்தல் செப்டம்பர் 9ஆம் நாள் நடைபெற்று, செப்டம்பர் 15 இல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பதவியேற்பார்கள் என்றும் அறிவித்தனர்.

அதுவும் அறிவித்தவாறு நடைபெறவில்லை!

தனியார் எவரையும் ஊக்குவிக்காத கொள்கை உடையது எங்கள் அரசு! அதனால் உள்ளாட்சி மன்றத் தேர்தல் வாக்காளர் பட்டியல்களைக் கூட்டுறவு அச்சகங்களில் அச்சியற்றக்

கொடுத்துள்ளோம்! அந்தப் பட்டியல் அச்சாகிடத் தாமதம்! அதனால் செப்டம்பரில் தேர்தல் இல்லை என்று புதிய அமைச்சர் இந்த ஆட்சியின் முற்போக்கு ? கொள்கையினால் ஏற்பட்ட முட்டுக்கட்டையை விளக்கினார்!

ஆனால் உண்மை என்ன? அந்த வாக்காளர் பட்டியல்கள், தனியார் அச்சகங்களில்தான் அச்சியற்ற கொடுக்கப்பட்டிருந்தன என்பது பல்வேறு ஆதாரங்களுடன் வெளியிடப்பட்டதும் - புதிய அமைச்சர் தனது பொய்யுரையை நிலைநாட்ட முடியாமல் - சொல்லிவிட்ட பொய்க்காக ஒரு வருத்தம் கூட தெரிவிக்காமல் மௌனமாக இருந்து விட்டார்!

பிறகு நமக்கேன் வம்பு என்று அக்டோபரில் தேர்தல் நடைபெறும் என்பதை அதிகாரிகளை விட்டு அறிவிக்கச் சொன்னார்!

செப்டம்பர் 9 ஆம் தேதி நோட்டிபிகேஷன் அரசாங்க அறிவிப்பு வரும் என அந்தோ-ணி அறிவித்தார்!

அவ்வாறே அரசாங்க அறிவிப்பு வந்தது! அக்டோபர் 18 ஆம் தேர்தல்! செப்டம்பர் 16, 17, 19 வேட்பு மனு தாக்கல்!

அறிவிப்பு வந்ததும் நம்முடைய கழகமும், மற்ற கட்சிகளும் தேர்தலுக்கு ஆயத்தமாயின!

மீண்டும் ஒரு கோமாளித்தனம்! அல்ல! அல்ல! கோமாளித்தனம் என்ற பெயரால் ஒரு அரசியல் மோசடி!

கட்சி ரீதியில் தேர்தல் நடத்த வேண்டுமெனவும், அதற்காகத் தேர்தலை தள்ளி வைக்க வேண்டுமெனவும் காங்கிரஸ் தலைவர்கள் எம்.ஜி.ஆர். அவர்களைக் கேட்டுக் கொண்டார்களாம் - அதனால் தேர்தல் அக்டோபர் 18 ஆம் நடக்காது என்று புதிய அமைச்சர் கூறிவிட்டார்!

அய்யோ! நாங்கள் கட்சி ரீதியில்தான் தேர்தல் வேண்டுமெனக் கேட்டோமே தவிர, தள்ளி வைக்கச் சொல்லவில்லை என்று மறுப்பு தெரிவிக்கின்றனர் காங்கிரசார்!

இல்லை - நீங்கள் இரண்டும்தான் கேட்டீர்கள்! என்று மேசையைப் பலமாகத் தட்டி இல்லை குத்தி அழுத்தமாகக் கூறுகிறார் புதிய அமைச்சர்!

இரண்டுமே அவர்கள் கேட்டது உண்மையென்றாலுங்கூட - நான் வாதத்திற்காகக் கேட்கிறேன். கட்சிச் சின்னம் வேண்டுமென்று காங்கிரஸ் சொன்னால்தான் இந்த ஆட்சியினர் அதற்குக் காது கொடுப்பார்களா? அல்லது நோட்டிபிகேஷனுக்குப் பிறகு தேதியைத் தள்ளி வை! என்று காங்கிரஸ் கட்சி சொன்னால், ஒரு ஆட்சி - தனது சுயமரியாதையை இழந்துவிட்டு அடியேன் தாசானுதாசன் என முழந்தாளிட்டபடி தேதியைத் தள்ளி வைப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகுமா?

தேதியைத் தள்ளி வைக்கச் சொல்லவில்லை என்கிறார்கள் காங்கிரஸ் தலைவர்கள்!

கட்சிச் சின்னங்களில் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்தின் ஒரு உத்தரவு பிறப்பித்தாலே போதும் என்கிறார் புதிய அமைச்சர்!

பிறகென்ன இடையூறு வந்தது! குறிப்பிட்டபடி அக்டோபர் 18 ஆம் தேர்தலை நடத்துவதற்கு!

இதில் புதிய அமைச்சரைக் குற்றம் கூறித்தான் என்ன பயன்?

ஆட்டுவித்தபடி ஆடுகிறார் அவர்! அதனால் அவர் மனச்சாட்சிக்கே பதில்கூற இயலாத நிலையில் முன்னுக்குப்பின் முரணான பேட்டிகளை அளித்து - முதலமைச்சரின் கோமாளித்தனத்தைத் திரைபோட்டு மூடப்பார்க்கிறார்!

புதிய அமைச்சர் எனினும் - கழக ஆட்சிக் காலத்திலிருந்து பதவியில் அனுபவம் பெற்ற பழைய அமைச்சர்தான்! இன்னும் சொல்லப் போனால், தொடக்கத்தில் நகரசபைத் தலைவராகவும் இருந்தவர்!

என் செய்வது! நிர்வாண தேசத்துக்குள் நுழைந்து விட்டால் கோவணம் கட்டிக் கொள்பவன் பைத்தியக்காரனாகத்தானே மதிக்கப்படுவான்!

அப்படியொரு திண்டாட்டம் அந்த அமைச்சருக்கு!

இங்குள்ள தமிழர்கள் இப்படியொரு சடுகுடு ஆட்சியில் அவதிப்படுகிறார்கள்!

இலங்கையில் உள்ள தமிழர்களோ, அங்குள்ள சண்டாள வெறியர்களின் ஆட்சியில் நித்த நித்தம் செத்துக் கொண்டிருக்கிறார்கள்!

இங்குள்ள தமிழனுக்கு ஒரு நேர்மையான ஆட்சி கிடைத்திடவும் - இலங்கைத் தமிழனுக்கு நிம்மதியானதும் நிலையானதுமான உரிமை வாழ்வு கிடைத்திடவும் நாம் உயர்த்தியுள்ள கொடி, ஆம்! நமது அண்ணன் நம் கையில் தந்த கொடி-

இலட்சோப இலட்சமாக செப்டம்பர் 15 - சென்னைப் பேரணியில் விண்முட்டப் பறக்கட்டும்!

முப்பெரும் விழாவில் கலந்துகொள்ள - இன்று காலை - மாலை - இரவு - நாளை, அதிகாலை, நேரங்களில் புறப்படுகின்ற உடன்பிறப்புகள் - விழாவின் ஊர்வலக் குழுவினரால் விளக்கப்பட்டுள்ள பாதைகளில் வந்து பேரணியில் கலந்து கொள்வதில், கட்டுப்பாட்டுடன் ஒத்துழைப்புத் தர வேண்டும்!

வாகனங்களில் வருகின்ற உடன்பிறப்புகள், வழியில் மிகுந்த எச்சரிக்கையுடன் - மிதமிஞ்சிய வேகத்துடன் வாகனங்களை ஓட்டச் சொல்லாமல் - எந்தவொரு சிறு அசம்பாவிதத்துக்கும் இடம் தராமல் -

சென்னைக்கு நலமுடன் வந்து சேர விழைகிறேன்!

விழா முடிந்து திரும்பும் போதும் அவ்வாறே சென்றிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்!

முப்பெரும் விழா, கூடிக்கலையும் கூட்டமல்ல!

வேடிக்கை பார்க்கும் உற்சவமல்ல!

தமிழ் இனத்துக்குரிய எதிர்காலம் என்ன என்பதை நிர்ணயிக்கவும் - அதற்கான முடிவெடுக்கவும் - அணி வகுக்கிறோம் சென்னையில் என்பதை மறவாதே!

அன்புடன்

மு.க.

14-09-1985

1347. பாதமலர்களில் பாசமலர்கள்!

உடன்பிறப்பே,

என் கடிதங்களைக் கட்டளைகளாக ஏற்று, கழகம் நடத்திய முப்பெரும் விழாவுக்கு வந்ததற்காகப் பல லட்சம்பேர் அணிவகுத்த; சென்னை வரலாறு காணாத பேரணியில் முழக்கம் செய்தாய்!

கட்டளையல்ல கண்மணியே; கட்டளையல்ல!

கனிவு நிறைந்த அழைப்பு! உரிமை கொண்ட வேண்டுகோள்! உன்னையே உயிராகக் கருதும் உடன்பிறப்பின் கோரிக்கை!

அதனையேற்று இனமானம் காத்திட உறுதிமொழி எடுத்து என் நெஞ்சைக் குளிர வைத்த உன் பாத மலர்களில் - இதோ; எந்தன் பாசமலர்களைத் தூவுகிறேன்!

அன்புள்ள

மு.க.

17-09-1985

1348. விழா மகிழ்ச்சியும், விழி நீர்வீழ்ச்சியும்!

உடன்பிறப்பே,

கலிங்கத்துப்பரணியில்/ படைதிரண்டெழுந்த காட்சியின் சிறப்பை ஜெயங்கொண்டார், பின்வருமாறு தீட்டிக் காட்டுகிறார்:-

முரசு அறைக என்று அருளுதலும் முழுதுலகும்
ஒரு நகருள் புகுந்தது ஒப்பத்
திரை செய் கடல் ஒலி அடங்கத் திசை நான்கின்
படை நான்கும் திரண்ட ஆங்கே.

பயணத்தை அறிவித்து முரசு முழங்கட்டும் எனக் கூறப்பட்டவுடன், உலகம் முழுதும் உள்ளவர்கள் அனைவரும் ஒரே நகரத்தில் வந்து புகுந்து குவிந்தது போல, அலைபாயும் கடலின் ஒலியும் கூட பின்னடையக்கூடிய அளவுக்கு, நான்கு திசைகளிலிருந்தும் நால்வகைப்படை வீரர்களும் திரண்டுவிட்டனர் என்கிறார் கவிஞர்!

இந்தக் கவிதையழகைச் சுவைக்கும்போது, என் கண்எதிரே இப்போதும் காட்சியாக ஒளிவிட்டுக் கொண்டிருப்பது, என் உடன்பிறப்பே - நீ நடத்திக் காட்டிய சென்னை முப்பெரும் விழா பேரணியும், கடற்கரைப் பொதுக்கூட்ட நிகழ்ச்சியும்தான்!

மாவட்டக் கழகத்தின் தளநாயகர்களும், ஒன்றியக்கழக, கிளைக்கழக மற்றும் சார்பு மன்றங்களின் அமைப்புகளும் இந்த விழா எழுச்சியுற எடுத்துக் கொண்ட ஆர்வங்கொழிக்கும் முயற்சிகளை எப்படிப் பாராட்டுவதென்றே எனக்குத் தெரியவில்லை!

பீடு நடை போட்டுக் கொண்டு புலிக்குட்டிகள் போல இளைஞர் அணியினர் - நூற்றுக்கணக்கான பதாகைகளைத் தாங்கியவாறும், தமிழ் இனமான முழக்கத்தை விண்முட்டச்

42222

E894.8116
கலை.15
தி.மு.க. அறக்கட்டளை பேராசிரியர் அன்பழகன் நிலையம் அண்ணா அறிவாலயம் சென்னை-18

செய்தவாறும் பேரணியில் வந்த காட்சியினை வர்ணிக்க இந்த ஒரு கடிதம் போதாது உடன்பிறப்பே!

இராணுவ உடையணியாத சிப்பாய்களாக - பயிற்சி பெற்ற பல்வேறு மாவட்டத் தொண்டர் அணியினர் பேரணியில் வந்த மாட்சிக்குச் சிகரம் வைத்தாற்போலச் சென்னை மாவட்ட தொண்டர் அணியினர், தமது கரத்தினில் கழகத்தின் இருவண்ணக் கொடியினைப் பிடித்துக் கொண்டு தலைதாழாச் சிங்கங்களாக நடைபயின்றது கண்கொள்ளாக் காட்சி! கண்கொள்ளாக் காட்சி!

அம்மாடியோவ்! எங்கிருந்து வந்தன இத்தனை பேருந்துகள்! இத்தனை லாரிகள்! இத்தனை வேன்கள்! இத்தனை அலங்கார வண்டிகள்!

அல்லும் பகலும் உழைத்து, வாய், வயிற்றைக் கட்டி - சென்னை முப்பெரும் விழாவுக்குச் செல்ல வேண்டுமென சேர்த்து வைத்த காசுகளைச் செலவழித்து, லட்சோபலட்சம் உடன்பிறப்புகள் வாடகை பேசி வந்த வண்டி வாகனங்களன்றோ அவைகள்!

செப்டம்பர் 15 - சென்னையில் முப்பெரும் விழாவுக்கு வருக என நான் கடிதங்கள் எழுதிக் கொண்டிருக்கும் போதே - இலங்கைப் பிரச்சினை குறித்து திம்புவில் நடந்த பேச்சு வார்த்தை தடை படுகிற அளவுக்கு இலங்கை அரசு மீண்டும் இனப் படுகொலையை நடத்தத் தொடங்கியது - வெந்த புண்ணில் வேல் என்பது போல தமிழ் ஈழத் தலைவர்களான சந்திரகாசன், பாலசிங்கம், சத்யேந்திரன் ஆகியோர் நாடு கடத்தப்பட்டனர்!

சென்னை முப்பெரும் விழாப் பணிகளை நிறுத்தி வைத்து விட்டு டெசோ இயக்கத்தின் சார்பில் எடுத்த முடிவுக்கிணங்க, கழகமும் களத்தில் இறங்கியது! ஆகஸ்டு 30 இல் தமிழக முழுதும் ரயில் நிறுத்தப் போராட்டம்!

ரயில் நிறுத்தப்படுவதால் பொது மக்களுக்கு அசௌகரியம் என்று நம் மீது குற்றம் சாட்டி, கைதுப் படலத்தில் இறங்கியது தமிழக அரசு! அர்த்தால் நடத்துவதால் பொது மக்களுக்கு அசௌகரியம் எதுவுமில்லை என்று இப்போது வாதிடுவார்கள்! அது வேறு விஷயம்! எனினும், நாம் அர்த்தாலை ஆதரிக்கிறோம்! ரயில் நிறுத்தப் போராட்டத்தின் காரணமாகக் கைது செய்யப்பட்ட கழகத்தினர் உள்ளிட்ட டெசோ இயக்கத்தினரை

உடனடியாக விடுதலை செய்யவுமில்லை! பத்து நாள், பதினைந்து நாள் என்று ரிமாண்ட் செய்து சிறைகளில் பூட்டினார்கள்!

கழக முன்னோடிகள் பலர் சிறையில் இருந்தால், சென்னை முப்பெரும் விழா சிறப்படையாமற்போகுமெனக் கணக்கிட்டுச் செய்த காரியம் அது!

அத்துடன் விட்டார்களா? நகராட்சி பஞ்சாயத்துத் தேர்தலுக்கு செப்டம்பர் 16, 17, 19 ஆகிய நாட்களில் வேட்பு மனு தாக்கல் செய்யும் நாட்கள் எனவும் அறிவித்தனர்!

உடன்பிறப்பே, எந்த வேலையைத்தான் நீ பார்ப்பாய் என்று நான் பெருமூச்சு விட்டுக் கொண்டேன்!

ஆனால் நீயோ, என்னைத் திகைக்க வைக்கும் அளவுக்கு எல்லா வேலைகளையும் எறும்பையும், மிஞ்சுகிற சுறு சுறுப்புக் காட்டிச் செய்து முடித்தாய்!

ரயில்கள் நிறுத்தப்பட்டன! உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான தொடக்கப்பணிகள் நிறை வேற்றப்பட்டன! இவைகளினூடே முப்பெரும் விழாவுக்கான செயல் திறன்மிக்கப் பணிகளையும் செய்து முடித்துவிட்டுச் சென்னைக்கு வந்து இந்த மாநகரையே குலுங்கச் செய்துவிட்டாய்!

பேரணியை எங்கிருந்து தொடங்குவது என்பதற்காக, நானும் பேராசிரியரும், சென்னை மாவட்டச் செயலாளர் தம்பி பாலுவும் எத்தனையோ நாட்கள் யோசித்ததுண்டு! எல்லா சாலைகளிலும் வருகிற வாகனங்கள், வெளியூர்க்கழக உடன்பிறப்புகள் - ஒன்றாக இணைந்து பேரணியைத் தொடங்கிட, தியாகராய நகரில் உள்ள பனகல் பூங்கா ஒன்றுதான் பரந்த இடமாக எங்களுக்குக் கிடைத்தது!

தியாகராயநகர்! பனகல் பூங்கா! திராவிட இயக்கத்தின் ஆரம்பக்கால வரலாற்றைச் சுட்டிக் காட்டும் அழியாத பெயர்கள் அல்லவா?

என் செய்வது! அந்தப் பனகல் பூங்காவைச் சுற்றியுள்ள பெருவெளியும் போதவில்லை!

பேரணி முடிந்ததாக எண்ணிக் கொண்டு, கடற்கரையில் நிகழ்ச்சிகளைத் தொடங்கிவிட்ட பிறகும் செய்தி வருகிறது!

இன்னும் ஊர்வலத்தின் கடைசிப் பகுதி பனகல் பூங்காவை விட்டு நகரவில்லையென்று!

எனவே, பனகல் பூங்காவைச் சுற்றியும் - அங்கிருந்து சைதாப்பேட்டை மறைமலை அடிகள் பாலம் வரையில் நீண்டிருந்த வழியில் நகர்ந்து கொண்டிருந்த வண்டி, வாகனங்களைப் பல்வேறு வழிகளில் கடற்கரைக் கூட்டத்திற்குச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டது!

சென்னை மாநகரம் முழுதும் அன்றைக்குப் பேரணிதான்! கொடிக்காடுதான் இருவண்ணத் தோரணங்கள்தான்! இனமான உணர்வு முழக்கம்தான்!

இப்படி என்னை மகிழ்ச்சியில் திளைக்கவைத்த உடன்பிறப்புகளை எண்ணி எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும் போது - வழக்கம் போல் எனது மகிழ்ச்சி நீடிக்காமல், கழகத்தின் காளை, களம் பல கண்டு அடக்குமுறைகளையேற்ற வீரன் - முப்பெரும் விழாப் பேரணியில் எக்காள முழக்கமிட்ட தீரன் - பீர்க்கங்கரணை வேலுவைக் கொடியோர் சிலர் கொலை செய்து வீழ்த்தி விட்டனர் என்ற செய்தி!

அந்தச் செய்தியை முந்திக் கொண்டு மற்றோர் செய்தி!

பசும்பொன் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர் உடன்பிறப்புகள், முப்பெரும் விழாவுக்கு வந்து விட்டுத் திரும்பிச் செல்லும் வழியில் அவர்கள் ஏறியிருந்த லாரி கவிழ்ந்து நால்வர் மாண்டனர் - மற்றவர்க்குப் பலத்த காயம்!

மகிபாலன்பட்டி தர்மலிங்கம்	**வயது** 45
நெமினிப்பட்டி சின்னா	**வயது** 21
அப்பாகுடிப்பட்டி சையது	**வயது** 25
மகிபாலன்பட்டி காசி	**வயது** 22

இந்த நால்வரையும் நினைத்திடும் போது, வீரன் வேலுவை எண்ணிடும் போது, முப்பெரும் விழா எனக்களித்த பூரிப்பு அனைத்தும் எங்கோ மறைந்து போய் விட்டதே! என் செய்ய!

எத்தனை முறை கூறியிருக்கிறேன். இந்தமுறை கூட கடிதத்தில் எழுதினேனே! பேருந்து, லாரி, வேன்களில் வருவோர்

இரவு நேரப் பயணத்தையும் - வேகமாகச் செல்வதையும் தவிர்த்திடுக என்று!

எனினும், என் அழைப்பையேற்று வந்த அந்த உடன்பிறப்புகளின் முடிவு இப்படி ஆகிவிட்டதே எனக் கலங்குகிறேன்!

இரங்கல் - குடும்பத்தாருக்கு உதவி - இவைகளால் மீட்கக்கூடிய இழப்பா இவைகள்?

கழகத்திற்கு எத்தனை சோதனைகள் வந்தாலும், அதன் கட்டுமானம் - அடித்தளம் எவராலும் அசைக்க முடியாத வலுவுடையது என்பதை நிரூபித்துக் காட்டி வருகிற என் உடன்பிறப்புகளில் சிலரை இப்படி இழந்து விடும்போது; தாங்கிக் கொள்ள முடியவில்லைதான்!

நாம் எதிர் கொள்ள வேண்டிய பணிகளை எண்ணிப் பார்த்து, அதற்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள - நமக்கு நாமே ஆறுதல் பெற்றுக் கொள்வதைத் தவிர வேறு மார்க்கமில்லை!

முப்பெரு விழாவைத் தொடர்ந்து கழகமும் - கழகம் இடம் பெற்றுள்ள டெசோ இயக்கமும் எடுத்துள்ள முடிவுகளை நிறைவேற்ற - தொடருவோம் தொண்டினை!

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கடமையாற்ற முனைந்திடுவோம்!

அன்புடன்

மு.க.

20-09-1985

1349. கேரள விஜயமும் - கேலிக்குரிய விஷயமும்!

உடன்பிறப்பே,

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், அவரது துணைவியாரும் அண்மையில் கேரள மாநிலத்தில் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். தொலைக் காட்சியினர் அந்த நிகழ்ச்சிகளைப் படம் பிடித்து இரண்டு நாட்கள் நீண்ட நேரம் ஒளிபரப்பினார்கள்.

பிரதமர் தம்பதிகள் படகுகளில் பயணம் செல்வது - கேரளத்துக் கலை நிகழ்ச்சிகளில் உள்ளத்தைப் பறி கொடுப்பது - மலைவளம் காண்பது - நதியழகு ரசிப்பது - கேரளத்து மீனவர்கள், மலைவாழ் மக்கள், இலங்கையிலிருந்து வந்துள்ள தமிழ் நாட்டு அகதிகள் ஆகியோரைச் சந்திப்பது - கயிறு திரிப்பது எப்படியென்று அந்தத் தொழில் நடத்துவோர் மத்தியில் சென்று தெரிந்து கொள்வது - இன்னோரன்ன வண்ணப்படக் காட்சிகள்! தொலைக் காட்சியை இரண்டு நாட்கள் ஆக்ரமித்துக் கொண்டன!

இத்தனை வேலைகளில் தொலைக்காட்சி பார்க்கக் கூட நேரமிருக்கிறதா? என்று உனக்கு கேட்கத் தோன்றுகிறதல்லவா?

சென்னையில் பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளோ - வெளியூர் நிகழ்ச்சிகளோ இல்லாத நேரத்தில் வானொலி, தொலைக்காட்சிகளைக் கேட்கவும், காணவும் கிடைத்திடக்கூடிய வாய்ப்பினை நான் நழுவ விடுவதில்லை?

சில நேரங்களில் சுவைக்கத்தக்கவை! பல நேரங்களில் கொடுந்தண்டனை! அறுவை!

மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று அவர்கள் வானிலை அறிவிக்கும்போது, அடடா! என்ன திட்டவட்டமாகத் தெளிவாகச் சொல்லுகிறார்கள் என்று வியப்புறுகிறோம் அல்லவா?

ஒருவர் பெயரைச் சொல்லி - அவரைப் பற்றிய செய்தியை விளக்கிக்கொண்டே, அதற்கு சம்பந்தமில்லாத வேறொருவர் படத்தைக் காட்டி நம்மை அதிசயத்தில் எத்தனையோ முறை மூழ்கடித்திருக்கிறார்கள்!

சில நாட்களுக்கு முன்பு, தூத்துக்குடி நிகழ்ச்சியை விவரித்துக்கொண்டே, பெரியவர் பக்தவத்சலனார் மேடையில் அமர்ந்திருக்கும் காட்சியைக் காட்டினார்கள்! அடடே - எவ்வளவு தொலைவு இந்த வயதில் பயணம் செய்திருக்கிறார் என எண்ணிடும் பொழுது, பக்தவத்சலனார் கலந்து கொண்டது சென்னையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி என்பது சில வினாடிகளுக்குப் பிறகே புரிந்தது!

சும்மா சொல்லக்கூடாது உடன்பிறப்பே! நமது நாட்டின் முற்போக்கான வளர்ச்சியினை அதுவும், பிறநாட்டார் பார்த்து மூக்கின் மீது விரல் வைத்து ஆச்சரியப்படக்கூடிய விஞ்ஞானப் புதுமைகளையெல்லாம் நமது தொலைக்காட்சியில் காணமுடிந்தது!

விநாயகர் சதுர்த்தி நாளன்று - சென்னைத் தொலைக் காட்சி நிலையத்தில் விவரிக்கப்பட்டதும், காட்டப்பட்டதும் - அனைவரையும் மெய் சிலிர்க்க வைக்கக் கூடியதாகும்!

என்ன அது? அதுதான் நமது நாட்டின் பிரம்மாண்டமான சாதனை!

செங்குன்றம் பிள்ளையார் கோயிலில் செய்யப்பட்ட மிகப்பெரிய கொழுக்கட்டை!

கொழுக்கட்டையின் புகழ்பாடியதுடன் நிற்கவில்லை! அந்தக் கொழுக்கட்டையைப் படம் எடுத்துக் காட்டினர்! அந்தக் கொழுக்கட்டைக்குப் பூஜை, நைவேத்தியங்கள் செய்கிற பக்தர்களின் அற்புதக் காட்சியை என்னவென்று கூறிட? அதனைத் தொலைக் காட்சியில் காட்டியதன் மூலம், எத்தனை மகத்தான சேவையை அந்த நிலையத்தினர் செய்துள்ளனர்!

உடன்பிறப்பே, ஓய்வு கிடைக்கும் போது இதையெல்லாம் நான் பார்த்திராவிட்டால் - உனக்கு எழுதி விளக்கிட முடியாமற் போயிருக்குமல்லவா?

அப்படிப் பார்த்த சமயத்தில்தான் பாரதப் பிரதமர் அவர்களின் கேரள விஜயம் காட்சிகளையும் பார்க்க முடிந்தது!

பிரதமருடன் கேரள முதல்வர் கருணாகரன்! மாநில அதிகாரிகள்!

பிரதமர், ஆங்காங்கு சென்று சந்திக்கும் பலதரப்பட்ட மக்களை ஆங்கிலத்தில் அல்லது இந்தியில் விசாரிக்கிறார். அதனைக் கேரள முதல்வரும், அதிகாரிகளும் அந்த மக்களிடம் மலையாளத்தில் மொழிபெயர்க்கிறார்கள். அதற்கு அந்த மக்கள் மலையாளத்தில் சொன்ன பதில்களை முதல்வரோ அல்லது அதிகாரிகளோ பிரதமருக்கு ஆங்கிலத்தில் சொல்லுகிறார்கள். பதிலைக் கேட்கும் பிரதமர் முகத்தில் புன்னகை! பதில் சொன்ன பாமர மக்களின் முகத்தில் திகைப்பு!

ஏன்? எதற்காக? எப்படி?

இதோ பத்திரிகைகள் சிலவற்றில் வந்துள்ள செய்தியை அப்படியே தருகிறேன். படித்துப்பார்!

ஏழை எளிய மக்களுக்காகத் திட்டமிட்டுக் கட்டப்படும் புதிய வீடுகள் உங்களுக்கு வழங்கப்பட்டு விட்டதா? என்று மீனவர்களைப் பார்த்துப் பிரதமர் கேட்டார்.

எங்களுக்கு வீடும் தரவில்லை! அதற்காக நாங்கள் கட்டிய பணத்தையும் திரும்பத் தரவில்லை! என்று அந்த மீனவர்கள் பதில் சொன்னார்கள்!

அந்த மலையாள மொழிப் பதிலை மொழிபெயர்த்த அதிகாரி, ஆமாங்க, அரசாங்கம் கொடுத்த வீடுகள் ரொம்ப ரொம்ப வசதியாக இருக்குங்க! என்று மொழி பெயர்த்து பிரதமரிடம் சொன்னார்! மீனவரின் பதில் கேட்டு பிரதமர் மகிழ்ச்சியடைந்தார்! மொழி பெயர்ப்பில் நடந்த மோசடி அவருக்குத் தெரியவில்லை!

உங்களுக்கு நிலம் இருக்கிறதா? என்ன வருமானம் கிடைக்கிறது? என்று ஒரு ஏழை விவசாயியைப் பார்த்து ராஜீவ் காந்தி கேட்டார்!

விவசாயி சொன்னார், பட்டா தருவதாக அரசாங்கம் சொல்லி பல வருஷம் ஆச்சுங்க! இன்னும் தரவில்லை! என்று!

முதல்வர் கருணாகரனின் ஆணைப்படி நடந்து கொண்ட அதிகாரி, அந்த விவசாயி வெளியிட்ட வேதனையைப் பிரதமரிடம் எப்படி மொழி பெயர்த்து சொன்னார் தெரியுமா?

சொந்த நிலத்தில் விவசாயம் செய்து நாங்கள் எல்லாம் வாழுகிறோம் பிரபு!

இப்படி மொழி பெயர்த்தனர். அந்த விவசாயி வெளியிட்ட வேதனையான பதிலை!

அய்யா! மழை பெய்து வெள்ளம் வந்தபோது எனது இரு மாடுகள் இறந்து போய்விட்டன! அதிகாரிகளிடம் பல முறை கெஞ்சியும் எந்தப் பலனுமில்லை!

ஒரு ஏழைக் கிழவியின் ஏக்கக் குரல் இது!

என்ன சொல்லுகிறார் இந்த அம்மா? என்று கேட்டார் பிரதமர்!

அதிகாரி பட்டென்று பதில் சொன்னார், ஆங்கிலத்தில்!

எனது இரண்டு பிள்ளைகளும் இப்போது பெரியவர்களாக வளர்ந்து நல்ல வேலைகளில் இருக்கிறார்கள் என்று இந்தத் தாய் சொல்லுகிறார்!

இளம் பிரதமர் அது கேட்டு ஒரு இளம் புன்னகையை நெளியவிட்டார்!

இலங்கைத் தமிழ் அகதியான ஒரு வாலிபர், தமிழில் கூறியதை, தமிழும் ஆங்கிலமும் தெரிந்த ஒருவர், பிரதமரிடம் அப்படியே உண்மையாகக் கூறிவிடவே - அந்தத் தமிழ் இளைஞனின் வாயை அடக்கி விட்டு, முதல்வர் கருணாகரன், பிரதமரிடம் இவன் சரியில்லை! வாருங்கள் வேறிடத்தில் விசாரிப்போம்! என்று அழைத்துப் போய்விட்டார்!

இந்த மொழிபெயர்ப்பு மோசடிகள் குறித்து பிரதமர் அலுவலகத்திற்குப் பல கடிதங்கள் சென்றன!

உடனே பிரதமருக்குச் சினம்பொங்கி விட்டது!

இனிமேல் எந்த மாநிலத்துக்குப் பயணம் செய்து மக்களை சந்தித்தாலும் அந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒன்று விடாமல் ஒலி, ஒளிப்பதிவு செய்து அந்த டேப்புகளை எனக்கு அனுப்ப வேண்டும்.

என்று ஆணை பிறப்பித்துள்ளார்! நல்ல ஏற்பாடு! பாராட்டவேண்டிய ஏற்பாடு! பிரதமரிடமே அதிகாரிகள் இப்படிப்

பொய் சொல்லலாமா? அதற்கு ஒரு முதலமைச்சரும் துணையாக இருக்கலாமா?

இதைக்கேட்டால், உடன்பிறப்பே நீ திருப்பிக் கேட்பாய்!

பிரதமருக்குத் தெரிந்தே அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரியும், தமிழக கவர்னரும் - எம்.ஜி.ஆர். அவர்கள் வேட்பாளர் உறுதிமொழியையும், பதவிப் பிரமாணத்தையும் வாயுரை மூலம் எடுத்துக் கொண்டார் என்று பொய் சொல்லவில்லையா? என்று!

மோசடிகள் எந்த உருவில் வந்தாலும் - எவ்வளவு பெரும் பொறுப்பில் உள்ளவர்கள் மூலமாக நடைபெற்றாலும் - அதனை முறியடிக்க வேண்டியதுதான் ஜனநாயகத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டிய கடமை! ஜனநாயக மரபுக்கு தமிழகம் மட்டும் விதிவிலக்கு என்று பிரதமர் கூறமாட்டார் என்று நம்புவோமாக!

அன்புடன்

மு.க.

21-09-1985

1350. தேசியப் பார்வை அல்ல! போர்வை!

உடன்பிறப்பே,

தமிழ், தமிழர், தமிழ் இனம், தமிழ்நாடு என்று பேசினாலோ எழுதினாலோ இந்திரா காங்கிரஸ் தலைவர்களுக்குக் கொள்ளைக் கோபம் வந்து விடுகிறது!

தேசிய நீரோட்டத்துக்கு நம்மை எதிரிகள் என்று நம்மீது வசைபாடிட, அவர்கள் தயங்குவதில்லை!

இந்திய ஒருமைப்பாட்டை நாம் சிதைப்பவர்கள் போலவும், இவர்கள்தான் அந்த ஒருமைப் பாட்டுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு நிற்பவர்கள் போலவும் விசுவரூபம் எடுத்துக் கொண்டு நம்மீது சீறிப்பாய்வார்கள்!

இந்தியாவில் பல தேசிய இனங்கள் இருப்பதையும் - அவற்றுக்கெனத் தனிமொழி, கலாச்சாரம், இலக்கியம், வரலாறு இவைகள் இருப்பதையும் - அந்தத் தேசிய இனங்களில் ஒன்றாகத் தமிழ் இனம் இருப்பதையும் பல முறை எடுத்துக்காட்டி, அந்த இன மக்கள் வாழுகிற பகுதிகளில் அவர்களது மொழியுரிமை, கலாச்சார உரிமை, பாதுகாக்கப்படவும் - மத்தியில் உண்மையான கூட்டாட்சித் தத்துவம் நடைமுறைக்கு வந்து மாநிலங்களில் சுயாட்சி முழுமையாக வழங்கப்படவும் - அதன் தொடர்பாகவே இந்தியாவின் ஒருமைப்பாடும், வலுவும், நிலைத்து நிற்கவும், மேலும் பெருகிடவும் வழி ஏற்பட முடியுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் தெளிவாகத் தெரிவித்து வருகிறது!

முதலமைச்சர் பதவியில் இருந்து கொண்டே அண்ணா அவர்கள், 28.7.68 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டில் தேசியம் பேசுகிறவர்களைப் பார்த்துப் பின் வருமாறு அறைகூவல் விடுத்துக் கேட்டார்கள்:-

மாநில சுயாட்சி வேண்டுமென்று நாம் கேட்கிற போது, இப்படிப் பேசுவது மத்திய அரசைக் குலைப்பதாகும், நாட்டுக்குப் பெருத்த

ஆபத்து வரும் என்று கூறுகின்றனர். இப்படிக் கூறுகிறவர்களைப் பணிவோடும், உறுதியோடும் கேட்டுக் கொள்வேன். நாட்டுக்கு ஆபத்து வரும் என்று அறிந்து கூறவும், நாட்டை வலிமையுள்ளதாக ஆக்கும் உரிமையும் - வழி காட்டும் திறமையும் உங்களைத்தவிர வேறு யாருக்குமில்லை என்று நினைத்துப் பேசிட முழு உரிமை, யாரால்? எந்தக்காரணத்தால்? எப்போது? உங்களுக்கு அளிக்கப்பட்டது? காங்கிரஸ்காரர்களைத் தவிர நாட்டின்மீது மற்றவர்களுக்கு அக்கறை இல்லை என்பது பொருளற்றது, பொருத்தமற்றது, ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியது.

ஏன், மாநில சுயாட்சித் தீர்மானத்தையே தமிழக சட்டப்பேரவையில் 1974ஆம் ஆண்டு; அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் சிலவற்றின் எதிர்ப்பையும் மீறி நிறைவேற்றியிருக் கிறோம்! அப்போது காங்கிரஸ் கட்சியினர் கடுங்கோபம் கொண்டு நம்மை இந்திய ஒருமைப்பாட்டுக்கு விரோதிகள் என வர்ணித்தனர்!

மாநில உரிமைகளும், தேசிய இனங்களின் தனித் தன்மைகளும் காப்பாற்றப்பட வேண்டுமென்ற நமது முழக்கம் இன்றைக்கும், இந்திரா காங்கிரஸ் தலைவர்களால் பிரிவினை சக்திகளின் கோஷம் என்றே விமர்சிக்கப்படுகிறது!

அவர்களது பாஷைப்படி, இந்தப் பிரிவினைவாதிகள் கடந்த காலத்தில் இந்தியாவின் பாதுகாப்புக்காக எந்த வகையில் பாடுபட்டார்கள் என்பதை நம்மால் பட்டியல் போட்டுக் காட்டமுடியும்!

சீன ஆக்கிரமிப்பின்போது, அண்ணா உட்பட அனைவரும் விலைவாசிப் போராட்டத்தின் காரணமாக, சிறையில் அடைபட்டிருந்தோம்!

விடுதலை பெற்ற முதல்நாளே அண்ணா அவர்கள், வேலூர் கோட்டைவெளி மைதானத்துக் கூட்டத்தில் சீன ஆக்கிரமிப்பைத் தகர்த்திட நேருவின் கரத்தைப் பலப்படுத்துவோம் வாரீர் என அழைப்பு விடுத்தார்! கழகச் சார்பில் யுத்த நிதி வசூலிக்கப்பட்டு ஆட்சியாளர்களிடம் வழங்கப்பட்டது. பிரதமர் லால்பகதூர் காலத்தில் பாகிஸ்தான் போர் தொடுத்த போதும், நமது குரல் இந்திய நாட்டின் பாதுகாப்புக்காகத்தான் ஒலித்தது! கன்னியாகுமரி முனையில் இருக்கிற நாம், காஷ்மீர் பிரச்சினைக்காகக் கவலைப் படுவானேன் என்று எண்ணிடவில்லை!

எதிரிகளுக்கு முன்னால் இந்தியா என்ற பேருருவமாகவே நின்று ஒருமித்த உணர்வை நெருப்புப் பொறியாகவே பொழிந்தோம்!

பாகிஸ்தானில் 1970 இல் ஒரு உள்நாட்டுப் பிரச்சினை! கிழக்கு பாகிஸ்தானில் முஜிபுர் ரஹிமான் மாநில சுயாட்சி கேட்டுப் போர்க்கொடி தூக்கினார்! அமளி மூண்டது! அடக்கிட முனைந்தது பாகிஸ்தான் அரசு! அகதிகள் பல்லாயிரக்கணக்கில் இந்திய மண்ணில் வந்து குவிந்தனர்! மனிதாபிமான உணர்வுடன் செயல்படுவதாகக் கூறி, பிரதமர் இந்திரா, கிழக்கு பாகிஸ்தான் விடுதலைப் போராளிகளுக்கு உதவினார்! இந்திய ராணுவம், கிழக்கு பாகிஸ்தானில் புகுந்தது! போர் மூண்டது! அதன் விளைவாக ஒரு புதிய நாடு உருவாயிற்று. பங்களாதேஷ் - வங்கதேசம் எனும் பெயர்களுடன்!

அப்போது தமிழகத்தில் கழக ஆட்சி! இந்தியாவில் எந்த மாநிலமும் தராத அளவுக்கு - யுத்த நிதியாக ஆறு கோடி ரூபாயை ஒரு சில நாட்களில் வசூலித்து பிரதமர் இந்திரா காந்தியை அழைத்து சென்னைத் தீவுத் திடலில் வழங்கிய கரம், இந்தப் பிரிவினை சக்தி ?யின் கரம்தான்!

உடன்பிறப்பே, இந்தப் பழைய கதைகளையெல்லாம் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் - தமிழ்த் தேசிய இனம் என்ற தனித்தன்மையைப் பாதுகாப்பதும், மாநில முழு உரிமைகளைப் பெறுகிற சுயாட்சி கோருவதும் நம்முடைய கழகத்தின் குறிக்கோள் எனினும் - அதற்காக இந்தியாவின் பாதுகாப்புக்காக - ஒற்றுமைக்காக தோளுயர்த்தத் தவறாதவர்கள் நாம் என்பதை எடுத்துக்காட்டத்தான்!

ஆனால் இந்திய தேசியம் - இந்திய ஒருமைப்பாடு - காஷ்மீர் முதல் குமரி வரையில் உள்ளோர் சகோதரர்கள் - என்றெல்லாம் பேசுகிறவர்களின் உண்மை உருவம் என்ன?

இதோ, தமிழகத்துக் கடற்கரையோரத்துக்குச் சில கல் தொலைவிலே, இலங்கைத் தீவிலே, நமது தமிழ் இனம் அழிக்கப்படுகிறது! தமிழர் மானம் அலங்கோலப் படுத்தப்படுகிறது! இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர்களும் - இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களும் - மிரண்டோடி அகதிகளாக இந்தியாவுக்கு வந்து குவிந்த வண்ணமுள்ளனர்!

மத்திய அரசின் மெத்தனத்தைக் கண்டித்து நம்முடைய கழகமும், டெசோ அமைப்பில் உள்ள திராவிடர் கழகமும், காமராஜ் காங்கிரசும், தமிழ்நாடு பார்வர்டு பிளாக்கும் தொடர்ந்து போராடி வருகிறோம்!

நாடு கடத்தல் ஆணை பிறப்பித்த மத்திய அரசைக் கண்டித்து, ஆகஸ்டு 30 இல் ரயில் நிறுத்தப் போராட்டம் நடத்தி, ஏழாயிரம் பேர் கைது செய்யப்பட்டு, பத்து பதினைந்து நாட்கள் சிறையில் வாடினர் டெசோ இயக்கத்தினர்!

இப்போது தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சியினர் முதலமைச்சர் தலைமையிலே கூடி - பந்த் நடத்தப்போகிறார்கள்!

ஆம்! தமிழர்கள் வாழுகிற, தமிழ்நாட்டிலும், புதுவையிலும் மட்டும்தான் பந்த் - அதாவது முழு அடைப்பு!

தமிழ் - தமிழர் - எனப் பேசுவது பிராந்திய உணர்வு! பிரிவினை வாதம்! என்று அங்கலாய்த்தவர்கள் - அகில இந்தியா பேசுகிற இந்திரா காங்கிரஸ் கட்சியினர் தமிழனின் துயரத்தில் பங்குகொள்ள அகில இந்திய அளவில் ஏன் முன் வரவில்லை?

இந்த பந்த் கூட மத்திய அரசைக் கண்டித்து அல்லவே! பிரதமருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றிவிட்டு, இலங்கை அரசைக் கண்டித்து நடைபெறுகிற பந்த் அல்லவா?

இதில் கலந்து கொண்டு இந்தியா முழுமையும் 24 ஆம் தேதி பந்த் என அறிவிக்கிற உணர்வு வராத காரணம் என்ன? இப்படிச் சிக்கலான நேரத்தில் மட்டும் தமிழனை இந்தியனோடு சேர்த்துக் கொள்ள மாட்டார்களாம் - தமிழ்நாடு இந்தியாவில் இருப்பதை மறந்து விடுவார்களாம் - அதே சமயம், நாம் - தமிழ், தமிழர், தமிழினம் என்ற உணர்வோடு செயல்பட்டால் பிராந்தியம், பிரிவினை என்று மட்டும் வசைமொழி வீசுவார்களாம்!

அடேடே! என்னே தேசியப் பார்வை! உண்மையில் இது தேசியப் பார்வையல்ல - போர்வை!

புரிந்து கொள்ள வேண்டும் தமிழன்!

அன்புடன்

மு.க.

22-09-1985

1351. இது என்ன வெங்காய தேசியம்?

உடன்பிறப்பே,

மாநில உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர்கள் தேசியத்துக்கு விரோதிகள்!

மாநிலக் கட்சிகளை நடத்துபவர்கள் பிராந்தியப் பித்துக் கொண்ட பிரிவினைவாதிகள்!

அகில இந்தியா - அல்லது அனைத்து இந்தியா என்ற அடைமொழியுடன் தங்கள் கட்சிக்குப் பெயர் சூட்டிக் கொள்ளாதவர்கள், இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிரிகள்!

இந்தி ஆதிக்கத்தால் இரண்டாம்தர குடிமக்களாகி விடுவோம் எனக் கூறி இந்தியை எதிர்ப்பவர்கள் இந்தியாவைத் துண்டாட நினைப்பவர்கள்!

தமிழ், தமிழர், தமிழ் இன உணர்வு என்று பேசுவது குறுகிய நோக்கம்! பிரிவினைவாதம்!

இது, தேசியத்தை மொத்தக் குத்தகை எடுத்துக் கொண்டிருப்பதாக மார்தட்டிக் கொண்டு எக்காள முழக்க மிடுகிற இந்திரா காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கும், அவர்களுடன் கூடிக்குலவும் ஒரு சில தயவு நாடிகளுக்கும் கிடைத்துள்ள ஒரு கூர் மழுங்கிப் போன ஆயுதமாகும்!

பஞ்சாப் மாநிலத்தில், ஆண்டால் காங்கிரஸ்தான் ஆளவேண்டும் என்பதற்காக எத்தனையோ விபரீதங்களுக்கு வித்திட்டு, தீவிரப் பயங்கர வாதங்களுக்கு வேரிலே எருவிட்டுத் தண்ணீர் ஊற்றி வளர்த்து விட்டு - பிறகு வன்முறை ஒழிப்பு என்ற பெயரால், ஆயிரக்கணக்கான பிணங்கள் விழுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார் என்பது நாட்டுக்குத் தெரியும்!

அதன் விபரீத விளைவுகளால் இந்திய நாட்டுக்கு எத்துணைப் பேரிழப்பு ஏற்பட்டது என்பதும் மறந்து விடக்கூடியதல்ல!

அன்னை இந்திரா காந்தி அவர்கள் கொடுமையாகக் கொல்லப்பட்ட பிறகு பதவிக்கு வந்துள்ள ராஜீவ்காந்தி அவர்கள், பஞ்சாப் மாநிலப் பிரச்சினையில் ஒரு முடிவு காண்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட பிறகு - அகாலிதளத் தலைவர் லோங்கோவாலுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்.

ஏதோ, இருநாடுகளின் அதிபர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டதுபோல மத்திய அரசு, ஒரு மாநிலக் கட்சித் தலைவருடன் பேச்சு வார்த்தை நடத்தி - ஒப்பந்தம் நிறைவேறிய நிகழ்ச்சியை குதூகலமாகக் கொண்டாடியது!

மாநிலக் கட்சிகள் - பிராந்திய உணர்வு கொண்டவை என்ற வாதம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, ஒரு மாநிலக் கட்சியுடன் இந்திய நாட்டின் பிரதமர் அமர்ந்து பேசி, ஒப்பந்தம் செய்து கொள்கிற அளவுக்கு பஞ்சாப் மாநிலத்தில் அகாலிதளம் என்ற ஆட்சியில் இல்லாத ஒரு மாநிலக் கட்சியின் நிலை உயர்ந்தது குறித்து மகிழ்ந்தது மட்டுமல்ல! வீண் கௌரவம் பாராமல், அந்த அளவுக்கு இறங்கி வந்து ஒப்பந்தம் செய்து கொண்ட ராஜீவ் காந்தியின் செயலைக்கூட, நம்முடைய கழகச் சார்பில் பாராட்டியிருக்கிறோம்.

ஆனால், அகாலிதளத்தின் கோரிக்கைகள் பலவற்றை அந்தக் கட்சி வெற்றிகரமாக எட்டி விட்டது என்பதற்கு மாறாக - பிரதமர் ராஜீவ் காந்திக்கு மிகப் பெரும் வெற்றி என்ற வகையில் பிரச்சார சாதனங்கள் முடுக்கிவிடப்பட்டன! அதனால் சீக்கிய தீவிரவாதிகள், லோங்கோவால் எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்துவிட்டார் போலும்! எனக் கருதினர்! அதனால் ஏற்பட்ட விரும்பத்தகாத செயல்தான் லோங்கோவால் படுகொலை!

பஞ்சாப் பிரச்சினையைத் தீர்த்துப் பெருவெற்றி கொண்டார் ராஜீவ் காந்தி என்ற திசை திருப்பும் பிரச்சாரத்தால், அகாலிதளத்தைத் தேர்தலில் வெற்றி கண்டுவிடலாம் என நம்பியது இந்திரா காங்கிரஸ்!

பொதுத் தேர்தலில் இந்திரா அம்மையாரின் படத்தை வைத்தே அனுதாப அலையைத் திரட்டி வெற்றி கண்டவர்கள்,

இப்போது பஞ்சாப் மாநிலத் தேர்தலில் இந்திராவின் படத்தையே வாக்காளர் கண்களில் காட்டவில்லை!

ராஜீவ்! ராஜீவ்! திரும்பிய பக்கமெல்லாம் ராஜீவ்! வானொலி, தொலைக்காட்சி அனைத்தும் ராஜீவ்! ராஜீவ்!

பல இடங்களில் பிரதமர் ராஜீவ் தேர்தல் பிரச்சாரமும் செய்தார்!

ஆனால் முடிவு, வேறு விதமாகிவிட்டது!

அகாலிதளம் எனும் மாநிலக்கட்சி மாநில உரிமைகளுக்காகக் குரல் எழுப்பும் கட்சி, வெற்றி பெற்றிருக்கிறது!

இந்த வெற்றிக்குப் பிறகு அந்தக் கட்சி ஆட்சியின் நடவடிக்கைகள் எப்படி இருக்குமோ? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

மாநில உரிமைக்காக விண்முட்டக் குரல் உயர்த்திய சிலபேர், பதவிப் பொறுப்புகளுக்கு வந்த பின்னர் - டெல்லி இட்ட கட்டளையே வேதம் எனக் கூறிக் கொண்டிருக்கிற காட்சியை இந்தத் துணைக் கண்டத்தில் காண முடிகிற தல்லவா?

எப்படியோ - மாநில உணர்வு கொண்டவர்களுக்கு தேசிய நலத்தில் நாட்டமில்லை என்று இந்திரா காங்கிரஸ் செய்து வரும் பிரச்சாரத்துக்கு பஞ்சாப் மக்கள் பலமான அடி கொடுத்து விட்டார்கள் என்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது!

இந்திரா காங்கிரசார் பேசுவது போலி தேசியம் என்பதற்கு, தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர்களுக்காக நடத்தப்பட்ட முழு அடைப்பில், மத்திய அரசு அலுவலகங்கள் கலந்து கொள்ளவில்லை என்பது ஒரு எடுத்துக்காட்டு!

மற்றொரு உதாரணம் - இதோ! காஷ்மீரில் ஆகஸ்டு 14ஆம் நாள் ஐம்பதுக்கு மேற்பட்ட இடங்களில் பாகிஸ்தான் தேசியக் கொடி ஏற்றப்பட்டு பாகிஸ்தானின் சுதந்திர நாளைக் கொண்டாடியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் நடைபெறுகிற ஷாவின் அரசுக்கு இது முன் கூட்டியே தெரிந்திருந்தும், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று காஷ்மீர் கவர்னர் ஜக்மோகன் அவர்கள், மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்துக்கு எழுதிப் பல நாட்கள் ஆகிவிட்டன!

இதுவரை மத்திய அரசு மௌனம் சாதிக்கிறது! காஷ்மீர் ஷாவின் அமைச்சரவை, காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் தயவில்லாவிட்டால் ஒரு நிமிடம் கூட நிலைக்க முடியாது!

அங்கே இந்தக் காங்கிரஸ்காரர்களின் தேசியம் என்ன ஆயிற்று?

எமர்ஜன்சியை எதிர்த்ததால், அன்று தமிழகத்தில் கழக ஆட்சியைக் கலைத்தார்கள்!

ஹெக்டே கூட்டிய தென்மண்டல முதல்வர்கள் மாநாட்டுக்குப் புதுவையின் தி.மு.க. முதலமைச்சர் சென்ற காரணத்தால் தேசியம், அறை கூவலுக்கு ஆளாகி விட்டது என அலறி, இந்திரா காங்கிரசார் தமது ஆதரவை வாபஸ் வாங்கிக் கொண்டு ஆட்சியைக் கலைத்தனர்!

இப்போது காஷ்மீரில் பாகிஸ்தானின் சுதந்திர நாள் விழா! பாகிஸ்தான் தேசியக் கொடி ஐம்பது இடங்களில் உயர்த்தப்பட்டுள்ளது!

இப்படி நடக்கப் போவது முன்னரே தெரிந்திருந்தும் காஷ்மீர் மாநில அரசு கண்ணை மூடிக்கொண்டிருந்தது எனக் கவர்னரே எழுதுகிறார். மத்தியில் உள்ள உள்துறை அலுவலகத்துக்கு!

இன்னமும் காஷ்மீரில் காங்கிரஸ் கட்சி, ஷாவின் அரசுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறது!

இது என்ன தேசியம்? பெரியார் பாஷையில் சொல்லப்போனால், வெங்காய தேசியம்???

அன்புடன்

மு.க.

28-09-1985

1352. அக்டோபரில், பேரணிகள்! பொதுக்கூட்டங்கள்!

உடன்பிறப்பே,

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளபடி டெசோ தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பின் சார்பில் அக்டோபர் மூன்றாம் நாள் கோவையிலும், நான்காம் நாள் திண்டுக்கல்லிலும், ஐந்தாம் நாள் தூத்துக்குடியிலும், ஆறாம் நாள் திருச்சியிலும், ஏழாம் நாள் சேலத்திலும் இலங்கைத் தமிழ் இனப்பாதுகாப்புக்காக உறுதிமொழியேற்கும் பேரணிகளும், பொதுக் கூட்டங்களும் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற இருக்கின்றன.

நான், பேராசிரியர், தளபதி வீரமணி, மாவீரர் நெடுமாறன், திரு.அய்யண்ணன் அம்பலம் ஆகியோர் அந்தச் சுற்றுப்பயண நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறோம். அக்டோபர் 13ஆம் நாள் வேலூரிலும் பேரணி, பொதுக் கூட்டம் ஏற்பாடாகியுள்ளது.

தி.மு.கழகம், திராவிடர் கழகம், காமராஜ் காங்கிரஸ், தமிழ்நாடு பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகளின் முன்னணியினர், செயல்வீரர்கள் மட்டுமன்றி, தமிழ் இன உணர்வு படைத்த பெருமக்கள், இளைஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், தாய்மார்கள் அனைவருமே இந்த உறுதிமொழியேற்கும் பேரணியிலும், பொதுக் கூட்டத்திலும் கலந்து கொண்டு இலங்கையில் நமது தமிழ்ச் சாதியை அழித்துக் கொண்டிருக்கும் ஜெயவர்த்தனேவுக்கும், அதனை இன்னமும் அனுமதித்துக் கொண்டே இலங்கை அரசுடன் நட்புறவு கொண்டாட துடித்துக் கொண்டிருக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும், தாய்த் தமிழகத்தின் இதயக் குமுறலை எடுத்துக்காட்டிட வேண்டுமென டெசோ இயக்கத்தின் சார்பாக அன்புடன் அழைக்கிறேன்.

இலங்கையில் கடந்த மூன்று ஆண்டுகளாக, எல்லை மீறிப்போய்விட்ட இனப்படுகொலையின் தொடர் நிகழ்ச்சிக்கு

இங்குள்ள தமிழர்கள் உணர்வு பூர்வமாக ஒன்றாகி நின்று, தமிழ் ஈழம் ஒன்றைத் தவிர, தற்காலிகக் கண்துடைப்பு ஏற்பாடுகள் எதுவும் நிலையான தீர்வாக அமையாது என்பதை அறுதியிட்டுக் கூறுகிற நமது டெசோ இயக்கம், இடையில் எந்தவொரு நிர்ப்பந்திக்கவோ அல்லது திணிக்கவோ படாத உடன்பாட்டை - இரு சாராரும் ஒப்புக் கொள்கிற உடன்பாட்டை - வரவேற்கும் என்றும் பலமுறை அறிவித்திருக்கிறது!

ஆனால் அத்தகைய ஒரு உடன்பாட்டுக்குக் கூட, இலங்கைச் சிங்கள அரசு வருவதாகத் தெரியவில்லை! அந்த நியாயத்தை எடுத்துச் சொல்லி இலங்கை அரசின் மனத்தை மாற்றுவதற்குப் பதிலாக, தமிழ் ஈழப் போராளிகளையே மேலும் மேலும், கீழே இறங்கி வாருங்கள் என்று இந்திய அரசு வலியுறுத்துவதில் இலங்கைத் தமிழ் இன மக்களுக்கு என்ன உருவான பயன் ஏற்பட முடியும்?

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிச் செயல்படுகிற சிங்கள அரசின் வெறித்தனத்தைக் கட்டுப்படுத்திக் கண்காணிக்க வழிவகைகளை மேற்கொள்வதில்கூட, ஈழ தேசிய விடுதலை முன்னணியினர் எடுத்துவைத்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசு தயாராக இல்லை!

இதற்கு அடுத்தகட்டம், பேச்சு வார்த்தை நடந்தால் - அப்போது அதில் கலந்து கொள்ள வேண்டிய பாலசிங்கம், சத்தியேந்திரா ஆகிய இருவருக்கும் இந்தியாவுக்கு வருவதற்கான அனுமதியை வழங்குவதில் இந்திய அரசு இன்னமும் நாள் நட்சத்திரம் பார்த்துக் கொண்டிருக்கிறது.

தாய்த் தமிழகமும், தமிழகம் உள்ளிட்ட இந்தியத் திருநாடும் தங்களைக் கைவிட்டு விடாது என்ற நம்பிக்கையுடன் அடைக்கலம் புகுந்த தமிழ் ஈழப் போராளிகள், இலங்கைத் தமிழ் இனத்தின் எதிர்காலம் நிம்மதியாகவும் நிலையான உரிமைகள் பெற்றதாகவும் விளங்கிட, நம்மைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவும், தமிழகமும் தங்களைக் கைவிட்டு விடாது எனக் கருதுகிறார்கள்.

அவர்களது எண்ணத்தில் மண் போடும் விதமாக - இந்திய அரசின் நடவடிக்கைகள் அமையக் கூடாது என்பதே இங்குள்ள தமிழ்மக்களின் ஒருமித்த கருத்தாகும்!

அதனை எதிரொலிக்கும் வகையில்தான், அக்டோபரில் டெசோ பேரணிகள், பொதுக்கூட்டங்கள் நடை பெறவேண்டும்!

1. இலங்கையில் தமிழ் ஈழம் மலர ஆதரவு தருவோம்!
2. இலங்கைத் தமிழர்களுக்கு நிலையான உரிமையும், நிரந்தரப் பாதுகாப்பும் கிடைக்கும் வரையில் ஓயமாட்டோம்!
3. தமிழ் ஈழப் போராளிகளுக்கு அடைக்கலம் தரும் கடமையிலிருந்து தவறமாட்டோம்!
4. இலங்கைத் தமிழ் இனத்தைப் பாதுகாக்க, எந்தவித தியாகத்துக்கும் தயாராக இருப்போம்!
5. இந்தக் கடமைகளை நாங்கள் செய்யும் போது மத்திய - மாநில அரசுகளின் அடக்குமுறைகளுக்கு ஆளாக நேர்ந்தால், அவற்றை இன்முகத்துடன் ஏற்றுக் கொள்வோம்!

பேரணி, பொதுக் கூட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய உறுதிமொழிகள் இவைதான் என்று டெசோ இயக்கம் கலந்து பேசி முடிவு செய்து அறிவித்துள்ளது.

பேரணியில் - இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் விளக்கப்படும் வகையிலான முழக்கங்கள், காட்சிகள் மட்டும் இடம் பெறல் வேண்டும்!

தமிழ் ஈழ விடுதலைக்காகத் தியாகம் செய்த தளபதிகள், போராளிகளின் திருவுருவங்கள், வரலாறுகள் அலங்கார வண்டிகளில் அமைத்திடல் வேண்டும்.

டெசோ குறித்துள்ள உறுதி மொழிகளின் அடிப்படையிலேயே இலங்கைத் தமிழர் பிரச்சினையை மையமாக வைத்து கோவையில், திண்டுக்கல்லில், தூத்துக்குடியில், திருச்சியில், சேலத்தில், வேலூரில் - பேரணிகளை நடத்துவோம்! பொதுக் கூட்டங்களை ஏற்பாடு செய்வோம்!

தமிழர்களின் எழுச்சியைத் தரணி அறியச் செய்வோம்!

தமிழ் இனத்தின் அழிவு இலங்கையில் மேலும் தொடராமல் தடுக்கப்பட இங்குள்ள ஒவ்வொரு தமிழனும் உறுதியெடுத்துக் கொண்டு செயல்பட வேண்டுமென்று அறிவிக்கவும் - செயல்படத் தொடங்கவும்தான் அக்டோபரில் பேரணி, பொதுக் கூட்டங்கள் என்பதை மறவாமல்; தமிழக முழுவதும் கிளர்ந்தெழட்டும்!

அன்புடன்

மு.க.

29-09-1985

1353. விகடன் தலையங்கம் - ஒரு விளக்கம்!

உடன்பிறப்பே,

தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் படுகொலை செய்யப் படுவதைத் தடுக்கும் வகையில் சிக்கலான முயற்சிகளில் மத்திய அரசு ஈடுபட்டிருக்கும் நேரத்தில், ஈழ விடுதலை வீரர்களையும் - இலங்கை அரசையும் உட்கார வைத்துச் சமாதானத் திட்டம் வகுக்கப் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், மத்திய அரசுக்கு எதிராக தமிழ்நாட்டில் இந்தியை எதிர்த்து திடீர் முழக்கம் கிளப்புவது அரசியல் விவேகமாக இருக்க முடியாது!

நேரங்கெட்ட நேரத்தில் என்ற தலைப்பில் இந்த வார ஆனந்த விகடன் எழுதியுள்ள தலையங்கத்தின் ஒரு பகுதி இது!

இந்தத் தலையங்கத்தைக் குறித்த விளக்கமான பதில் விடுதலை இதழில் வெளியாகியிருக்கிறது.

ஈழத்தமிழர் பிரச்சினையில் தமிழர்களாகிய நமது வீடுகள் எல்லாம் சோகக் கடலில் மூழ்கிக் கிடக்கின்றன! வீட்டில் சோகம் நிரம்பியுள்ள நேரமாகப் பார்த்து திருடர்கள் வீட்டுக்குள் நுழைவதை நாம் அனுமதிக்க முடியாதல்லவா? அதைப்போலத் தான் திருடனைப்போல் நுழையும் இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கிறோம்.

என்று இந்தி எதிர்ப்புப் போராட்ட வழியனுப்புக் கூட்டத்தில் தளபதி வீரமணி அவர்கள், பொருத்தமானதொரு உவமையுடன் குறிப்பிட்டார்!

ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் மத்திய அரசு எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கிறது என்பதில் கருத்து வேறுபாடு இருந்தாலும்கூட - தூய்மையான அக்கறையுடன் மத்திய அரசு படாதபாடு படுவதாக விகடன் கூறுவதை வாதத்திற்காக ஏற்றுக்கொள்வோம்!

மிக முக்கியம் வாய்ந்த ஈழத்தமிழர் பிரச்சினையில், மத்திய அரசு வேறு வேலையே இன்றி ஈடுபடுகிறது என்பது உண்மையானால், ஈழத்தமிழர் பிரச்சினையின் காரணமாக மனம் நொந்து, வெதும்பிக் கிடக்கும் தமிழ்நாட்டு மக்கள் மேலும் ஒரு அதிர்ச்சிக்கு ஆளாகும் வகையில் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இந்தி மொழி குறித்து - நேரு, இந்திரா, லால்பகதூர் ஆகிய பிரதமர்கள் தந்த உறுதிமொழிகளுக்கு மாறாக, திடீரென்று இப்போது பேச வேண்டிய அவசியம் என்ன வந்தது?

அரசு அலுவலகங்களில் எண்பது சதவிகிதம் பேர் இந்தி மொழி அறிந்தவர்கள் என்று புள்ளி விபரங்கள் காட்டினாலும் கூட, அலுவலகப் பணிகளில் இந்தியைப் பயன்படுத்துவது அந்த அளவிற்கு உயரவில்லை. எனவே தவறு எங்கேயிருக்கிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சிறப்பு ஊதிய உயர்வுகளையும், படிகளையும் பெறுவதற்காக மட்டுமே, அரசு ஊழியர்கள் இந்தி தெரிந்தவர்கள் பட்டியலில் தங்களுடைய பெயரை பதிவு செய்து கொள்ளும் போக்கு கண்டு வருந்துகிறேன்!

சில நாட்களுக்கு முன்பு பிரதமர் ராஜீவ் காந்தி ஆற்றிய உரை இது!

இது நேரங்கெட்ட நேரத்திலே பேசப்பட்ட கருத்து என்பதை ஆனந்த விகடன் ஏற்றுக் கொள்கிறதோ, என்னவோ, எனக்குத் தெரியாது!

ஓரிரு மாதங்களுக்கு முன்பு பம்பாய் எல்.ஐ.சி. தலைமையகத்திலிருந்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ஒன்று! என்ன தெரியுமா?

1. இந்திப் பயிற்சி வகுப்புக்குச் செல்லவோ, இந்தி தட்டச்சுப்பணிகளை ஆற்றவோ, அலுவலர்களுக்கு விருப்பம் உண்டா என்று இனி கேட்கவே தேவையில்லை.
2. கட்டாயம், அவர்கள் இந்திப் பயிற்சி பெறாவிட்டால் அவர்கள், தங்கள் கடமையிலிருந்து த்வறியவர்கள் ஆவார்கள்.
3. இந்திப் பயிற்சி வகுப்புகளுக்குச் செல்லாவிட்டால் முதலில் எச்சரிக்கை செய்து விட்டு, அதற்கும் பலன்

இல்லையேல் உடனடியாக, அந்த அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேதனையில் மூழ்கியிருக்கும் வேளையில், வீட்டுக்குள் புகுந்து என் இஷ்டத்துக்குத் தேட்டை போடுகிறேன் என்பவனைத் தடுத்து நிறுத்தி விரட்டியடிப்பதற்குப் பதிலாக, நேரம் கெட்ட நேரம் என்று நினைத்து விட்டு விட முடியுமா?

ராஜீவ் காந்தி பேசியது மட்டுமா? எல்.ஐ.சி. ஆணை மட்டுமா? வானொலி, தொலைக்காட்சிகளில் இந்தியின் ஆக்கிரமிப்பு ஒவ்வொரு நாளும் எந்த அளவுக்கு வளர்ந்து கொண்டு போகிறது!

சனிக்கிழமை இந்தி மொழிப்படம்! முழுப் படமும் ஒன்பது மணிக்குள் முடிந்து விடுகிறது. அதுவும் தேசிய நிகழ்ச்சியில் இணைந்து விடுகிற காரணத்தால்!

ஞாயிற்றுக்கிழமை சென்னை தொலைக்காட்சியில் தமிழ்ப்படம்!

இயக்குநர் திலகம் கே.எஸ். கோபாலகிருஷ்ணன் இயக்கியுள்ள மகரந்தம் என்ற தமிழ்ப் படத்தை கடந்த ஞாயிறன்று தொலைக்காட்சியில் பார்த்தேன்!

துண்டு துண்டாக - இடையிடையே விளம்பரங்கள், தேசிய நிகழ்ச்சிகள் என்ற பெயரால் ஒரே இந்திக் கூச்சல்!

இடையிடையே தமிழ்ப்படம்! அந்தப் படத்தின் இறுதிப் பகுதியின் சில முக்கிய காட்சிகளைப் பார்க்க வேண்டுமென்று காத்திருந்தால் அந்தப் பகுதியை இரவு பதினோரு மணிக்கு மேல்தான் காணமுடிந்தது!

ஆரம்பத்தில் பார்த்தக் காட்சிகளைத் திரும்ப நினைவூட்டிக் கொண்டுதான் பார்க்க வேண்டும்!

வீடுகளில் பள்ளிக் குழந்தைகள், தமிழ்ப் படங்களைத் தொலைக்காட்சியில் ஆவலுடன் பார்க்கிறார்கள்!

ஞாயிறு இரவு 11 அல்லது 12 மணி வரையில் தமிழ்ப்படம் பார்த்துவிட்டு, மறுநாள் திங்கட்கிழமை காலையில் எழுந்து அவர்கள் பள்ளிகளுக்கோ, கல்லூரிகளுக்கோ போவது எப்படி?

இந்தச் சங்கடத்தைக் கூட பொருட்படுத்தாமல் இந்தி ஆதிக்கம் தலைவிரித்தாடுகிறது என்றால் - அந்தக் கொடுமையை ஒரு கட்டத்தில் தடுத்துத்தானே தீரவேண்டும்!

இலங்கைத் தமிழ் இனமக்களுக்காக, எந்த தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறோம்!

அதற்காகத் தமிழையே தியாகம் செய்துவிடுக! என்று இலங்கைத் தமிழர்கள் யாரும் இங்குள்ள தமிழர்களுக்கு அறிவுரை கூறமாட்டார்கள் என்பதை, விகடனும் அறியக் கூடும் என்ற காரணத்தால் இதற்கு மேல் விளக்கம் தேவைப்படாது என நம்புகிறேன்!

அன்புடன்

மு.க.

30-09-1985

1354. வாகனங்கள் மட்டுமே வந்தன! வாய்த் துடுக்கே மிஞ்சியது!

உடன்பிறப்பே,

The AIADMK Processionists stoned the Kamaraj Bhavan and Sivaji Manram at Teynampet. Sign-boards were also pulled down at the Congress I Office. T.N.C.C.I President M. Palaniyandi condemned the Violence in a statement.

The D.M.K. alleged that its office on Mount Road was also stoned.

செப்டம்பர் 30, சென்னை, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில இதழில் வெளிவந்துள்ள செய்தி இது!

அதன் தமிழாக்கம் இதோ:-

❑ அ.இ.அ.தி.மு.க. ஊர்வலத்தில் வந்தவர்கள், சென்னை தேனாம்பேட்டையில் உள்ள காமராஜ் மாளிகை மீதும், சிவாஜி மன்றத்தின் மீதும் கற்களை வீசினர். இந்திரா காங்கிரஸ் அலுவலகத்தின் முன்பு இருந்த பெயர்ப் பலகைகள் இழுத்தெறியப்பட்டன. இந்த வன்முறைச் செயலை தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் ஒரு அறிக்கை வாயிலாகக் கண்டித்திருக்கிறார்.

❑ தி.மு.கழகமும், தனது அலுவலகத்தின் மீது கற்கள் வீசப்பட்டதாகப் புகார் செய்துள்ளது.

உடன்பிறப்பே, அ.இ.அ.தி.மு.க. ஊர்வலத்தினர் நடத்திய அநாகரிகமான வன்முறைத் தாக்குதல்களை - தினகரனோ, முரசொலியோ வெளியிட்டிருந்து, அதனை எடுத்து நான் இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டால், அந்த இரண்டு பத்திரிகைச் செய்திகளுக்கும் கட்சி வண்ணம் பூசி - சமாளித்து மறைத்துவிடுவார்கள். ஆட்சியாளர்கள் என்பதற்காகத்தான் -

சமீபகாலமாக ஆட்சியாளர்களின் மனம் நோகாமல் எழுதிக் கொண்டும், நம்முடைய கழகத்தைத் தாக்கிக் கொண்டுமிருக்கிற எக்ஸ்பிரஸ் ஏட்டில் வந்த செய்திகளை அப்படியே தந்துள்ளேன்.

அதிலும் கூட நீ கவனித்துப் பார்ப்பாயானால், காங்கிரஸ் அலுவலகம், காமராஜ் மாளிகை, சிவாஜி மன்றம், அ.இ.அ.தி.மு.க. ஊர்வலத்தினரால் தாக்கப்பட்டதை ஊர்ஜிதம் செய்து எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டு விட்டு-

தி.மு.க. அலுவலகம் கூட தாக்கப்பட்டதாக அந்தக் கட்சியினர் புகார் கூறியுள்ளனர் என்று பட்டும் படாமல் கூறியிருக்கிறது! பரவாயில்லை! வாழ்க பத்திரிகா தர்மம்! வாழ்க! வாழ்க!

ஓரளவு நடுநிலையில் செய்தி வெளியிடுகிற இந்து ஏடு கூட, கிட்டத்தட்ட எக்ஸ்பிரஸ் ஏட்டையே இந்த விஷயத்தில் பின்பற்றியிருக்கிறது!

இந்திரா காங்கிரஸ் அலுவலகங்களின் மீது அ.தி.மு.க.வினர் நடத்திய தாக்குதல், அரசியல் அநாகரிகம் என்று நண்பர் பழனியாண்டி அவர்கள் குறிப்பிட்டிருப்பதை இந்து கோடிட்டு காட்டியுள்ளது!

சென்னை தினகரன் இதழில் இந்திரா காங்கிரஸ், சிவாஜி மன்ற அலுவலகங்கள் தாக்கப்பட்டு பெயர்ப் பலகைகள் உடைந்து நொறுங்கிக் கிடப்பதைப் படங்களுடன் வெளியிட்டிருக்கிறார்கள்.

அன்பகம் நம்முடைய கழகத்தின் அலுவலகம்! அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட அலுவலகம்! அந்த அலுவலகத்தின் மீது கல் வீச்சு! இன்னும் என்னவெல்லாமோ எடுத்து வீசினர்! என்னையும், என் குடும்பத்தினரையும் தரக்குறைவாகவும், இழிவாகவும் அர்ச்சித்து முழக்கமிட்டனர்! அவர்கள் கற்ற மொழி அது! கற்றுக்கொடுத்ததை எழுத்து மாறாமல் முழக்கமிடாவிட்டால், அவர்களின் இதய தெய்வம் கோபித்துக் கொள்ளுமே! மனிதனின் கோபத்துக்கு ஆளாகலாம். தெய்வத்தின் கோபத்துக்கு ஆளாகலாமா? அதனால் கல்வீச்சு - ஆபாசச் சொல்வீச்சு!

அன்பகத்தையடுத்து அண்ணா அறிவாலயம்! ஊர்வலத்தில் வந்தவர்கள் அண்ணாவைக் கண்டார்களா? அல்லது அவரது கொள்கையைக் கண்டார்களா?

அவர்கள் கண்ட அண்ணாவெல்லாம், அவர்களது இதய தெய்வம் காட்டிய மூகாம்பிகை அண்ணாதானே! பகுத்தறிவு அண்ணாவை, சுயமரியாதைச் சுடர் அண்ணாவை அவர்கள் எங்கே கண்டார்கள்?

அதனால், அண்ணா அறிவாலயத்தின் மீதும் தாக்குதல்! அண்ணா அறிவாலயம் என்ற பெயர்ப் பலகையை உடைத்து நொறுக்கினர்! இலங்கைத் தமிழர்க்காக தீக்குளித்த ஏழுமலையின் தாயார் அமராவதி என்ற மூதாட்டி! அண்ணா அறிவாலயத்தில் தங்கிப் பணியாற்றுகிறார். அந்த மூதாட்டியின் மீது கல்வீசி நெற்றியைப் பிளந்திருக்கிறார்கள். அறிவாலயத்துக் காவலாளியின் மகள் சிறுமி கல்பனாவின் முகத்தில் கல்வீசிக் காயப்படுத்தியுள்ளனர்.

அண்ணா அறிவாலயப் பலகை உடைத்து சேதப்படுத் தப்பட்டது என எனக்குத் தொலைபேசியில் செய்தி சொன்னார்கள்.

நான் சிரித்துக்கொண்டே, அவர்கள் அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலையைக் கூட உடைத்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை - காரணம், அவர்களில் பெரும்பான்மை யோருக்கு அண்ணாவையே தெரியாது என்பது தான் என்று பதில் கூறினேன். செய்தி சொன்னவர்களிடம்!

கடந்த ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்கள், உடல் நலிவுறுவதற்குச் சில நாட்களுக்கு முன்பு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினாரே! மறந்தா போய்விட்டது!

எனது சிலையை வைப்பதற்கு நான் அனுமதி கொடுத்து விட்டால், பிறகு தமிழ்நாட்டில் அண்ணா சிலை வைப்பதற்கு இடமே இருக்காது!

இப்படியொரு ஆணவத்தை, இதயத்தின் ஆழத்திலே புதைத்துக் கொண்டிருக்கும் எம்.ஜி.ஆரின் சீடகோடிகள் எப்படியிருப்பார்கள்?

செக்கு என்றுதான் கண்டார்களா? சிவலிங்கம் என்றுதான் கண்டார்களா?

அண்ணா திறந்து வைத்த அன்பகம் என்றால் என்ன - அண்ணா அறிவாலயம் என்றால் என்ன - அவை, தி.மு.கழகத்துக் குரியவை என்றால் அப்படித்தான் நடந்து கொள்வார்கள்!

அண்மைக்காலமாக இந்திரா காங்கிரசில் உள்ள சிலரும், சிவாஜி மன்றத்தினரும் - அ.தி.மு.க. ஆட்சியின் ஊழல்களை விமர்சிக்கிறார்கள் அல்லவா, அதற்காகத் தரப்பட்ட பதிலடிதான் அவர்கள் கட்சியின் அலுவலகங்கள் தாக்கப்பட்ட செயலாகும்!

எப்படியோ மிகப்பிரம்மாண்டமான? ஒரு பேரணியை நடத்தி முடித்து விட்டார்கள்! இத்தனை பஸ்களும், லாரிகளும் வந்த பேரணி, இதுவரையில் வேறு எந்தக் கட்சிப் பேரணியாகவும் இருக்க முடியாது!

இருபத்திநான்கு அமைச்சர்கள்!
இருபது வாரியத் தலைவர்கள்!
நூற்றி முப்பது எம்.எல்.ஏ.க்கள்,
மாவட்ட கலெக்டர்கள்,
ஆர்.டி.ஓ. முதலிய அதிகாரிகள்,
சாராய சாம்ராஜ்யாதிபதிகள்,
பஸ் முதலாளிகள்,
லாரி சொந்தக்காரர்கள்,

அரசுப் போக்குவரத்து கழக அதிகாரிகள்

இன்னோரன்ன அரசாங்க யந்திரத்தில் உள்ள எல்லாத் தரப்பினரும் முடுக்கிவிடப்பட்டு, சென்னையில் கொண்டுவந்து சேர்த்தது பஸ்கள், லாரிகள், வேன்கள் என்ற எண்ணிக்கைதானே தவிர, மக்கட் கூட்டமல்ல!

ஏழு மணி நேரம் ஊர்வலத்தையே பார்த்துக் கொண்டிருந்தாராம் எம்.ஜி.ஆர்.!

வேறு என்ன செய்வார் அவர்? கடற்கரைக் கூட்டத்திற்குச் சென்றால் அங்கு உரையாற்றிட வேண்டுமே! அதைத் தட்டிக் கழிக்க, பேரணியைப் பார்வையிடுவது போல ஏழுமணியல்ல, எட்டு மணி நேரம் நின்றுதானே ஆகவேண்டும்!

ஊர்வலத்தில் வந்த லாரிகளையும், பஸ்களையும் - ஊர்வலத்துப் பாதையிலே செல்ல வேண்டுமென்று போலீசார் மிகத் தீவிரமாகச் செயல்பட்டதால், ஊர்வலம் நகரவே முடியவில்லை!

நகராத ஊர்வலம் நகர் முழுதும் வியாபித்து இருந்ததாம்!

ஊர்வலப் பாதையைத் தவிர, சென்னை நகரின் மற்ற எல்லாப் பகுதிகளிலும் போக்குவரத்து என்றும் போல் சகஜமாகவே இருந்தது!

நகர முடியாத அளவுக்கு அண்ணா சாலையில் லாரிகளையும், பஸ்களையும், வேன்களையும், நிறுத்தி விட்டு - அது ஏழு மணி நேரம் நின்றது, எட்டு மணி நேரம் நின்றது - அவ்வளவு நேரம் எம்.ஜி.ஆர். பார்வையிட்டார் என்றெல்லாம் செய்திகளை வெளியிடச் சொல்லி, அதைப்பார்த்து அவர்களே பரவசப்பட்டுக் கொண்டார்கள்!

இவர்களது பேரணி - பஸ், லாரி பேரணிதான் என்பதை, கடற்கரையில் இவர்கள் நடத்திய பொதுக்கூட்டம் காட்டிக் கொடுத்துவிட்டது!

அந்தக் கூட்டத்திலும் தனது பழைய வீராப்பைக் குறைத்துக் கொள்ளாமல் - இருக்கிற ஒன்றிரண்டு இலாகாவுக்கும் எங்கே ஆபத்து வந்துவிடுமோ என்ற பயத்தில் - எம்.ஜி.ஆருக்குப் பிடித்தமான காரசாரமான சொற்பொழிவை வீரப்பன் நிகழ்த்தி உள்ளார்.

தமிழ் ஈழப் போராளிகள் புரட்சித் தலைவரைத்தான் சந்திக்கிறார்கள். கருணாநிதியைச் சந்திக்க மாட்டார்கள். காரணம், கருணாநிதியை அவர்கள் சந்தித்த போது அவர்களை மிரட்டி, ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட வேண்டும் என்று கேட்டுள்ளார்.

வீரப்பன் இப்படிப் பேசியதாக - ஆளுங்கட்சியின் ஆதரவு ஏடான அதிலும் குறிப்பாக, வீரப்பனின் விளம்பர ஏடான தினத்தந்தியில் செய்தி வந்துள்ளது.

வீரப்பனின் இந்தப் பித்தலாட்டப் பேச்சில் மறைந்து கிடக்கும் பொய், சூது, சூழ்ச்சி, சதி அனைத்தையும் தமிழ் ஈழப் போராளிகள் அறிந்தே இருக்கிறார்கள்.

எந்த ஒப்பந்தம்? எதற்காக நான் தமிழ் ஈழப் போராளிகளை மிரட்டிக் கையெழுத்துப் போடச் சொன்னேன்?

இப்படியொரு அபாண்டத்தை யாரோ தெருவிலே போகிறவன் சொல்லி விட்டுப் போனால், பாவம் மூளை சரியில்லை என்று எண்ணிக் கொள்ளலாம்!

ஆனால் ஒரு அமைச்சர் பொறுப்பிலே இருக்கிற வீரப்பன், இது போன்ற ஒரு அண்டப்புளுகை, அண்ணா பிறந்த

நாள் விழாப் பொதுக் கூட்டத்தில் கூறும் போது அதனை வன்மையாகக் கண்டிக்கவும், மறுத்துரைக்கவும் எனக்குக் கடமையிருக்கிறதல்லவா?

கெஞ்சினால் மிஞ்சுவதும் - மிஞ்சினால் கெஞ்சுவதும் கருணாநிதிக்குக் கைவந்த கலை!

இதுவும் வீரப்பனின் கடற்கரைப் பேச்சு!

வீரப்பன், தனது ஓராண்டுக்கால அறிவிப்புகள், சொற்பொழிவுகள், வர்ணனைகள், உவமைகள், குட்டிக் கதைகள் இவற்றையெல்லாம் ஒருமுறை திரும்பப் படித்துப் பார்த்துக் கொண்டால், கெஞ்சினால் மிஞ்சுவதும், மிஞ்சினால் கெஞ்சுவதும் யார் என்று தெரியும்! ஆமாம்! நிலைக்கண்ணாடியில் வீரப்பனின் திருவுருவம் - திவ்ய உருவமே தெரியும்!

குட்டிமணியைப் பற்றிய எம்.ஜி.ஆர்., வீரப்பன் பொய்யுரைகளுக்கு குட்டிமணியே மறுப்பறிக்கை அப்போதே கொடுத்து விட்ட பிறகும், குட்டிமணி கையெழுத்திட்ட அறிக்கையை நமது பேராசிரியர் சட்ட மன்றத்தில் ஆதாரமாகக் காட்டிய பிறகும், தமிழ் ஈழப் போராளிகள் சார்பில் மறுப்புகள் வெளியிடப்பட்ட பிறகும் - அந்தப் புனைந்துரை என்னும் முருங்கை மிலாரைப் பிடித்துக் கொண்டு வீரப்பன் தொங்குவதில் பயனில்லை!

அலட்சியப் படுத்தப்பட வேண்டிய மனிதன் - அவருக்குப் போய் இவ்வளவு விளக்கமான பதில் தேவைதானா? என்று - உடன்பிறப்பே! நீ கேட்கக் கூடும்!

விஷம் பரப்பப்படுவதைத் தடுக்க வேண்டியது கடமையல்லவா?

வாந்திபேதி, வெறுக்கத் தக்க வியாதிதான்!

எனினும் அதன் குணங்களை எடுத்துக்கூறி, மக்களை விழிப்புடன் இருக்கச் செய்ய வேண்டியது நமது பொறுப்பல்லவா? பொதுவாக, அ.தி.மு.க. நடத்திய பேரணியில் வாகனங்கள் மட்டுமே வந்தன! கூட்டத்தில் வாய்த்துடுக்கே மிஞ்சியது! அவ்வளவுதான்!

அன்புடன்

மு.க.

01-10-1985

1355. எழுச்சி கொள்வோம்! இனம் காப்போம்!

உடன்பிறப்பே,

கோவை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருச்சி, சேலம், வேலூர் ஆகிய நகரங்களில் நடைபெறும் TESO தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்புப்பேரணி, பொதுக் கூட்டங்களில் உன்னைச் சந்திக்க இருக்கிறேன்.

பேச்சுவார்த்தை - போர் நிறுத்தம் - ராஜீவ் ஜெயவர்த்தனா சந்திப்பு - இப்படி ஏடுகளில் தலைப்புச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றனவே தவிர - இலங்கைத் தமிழருக்கு விடிவுகாலம் ஏற்படுமா என்பது நமது ஏக்கப் பெருமூச்சாகவே இருக்கிறது!

மத்தியில் ஜனதா ஆட்சி நடந்தபோது - அப்போது பிரதமராக இல்லாத இந்திரா காந்தி அவர்கள், இந்தியாவில் உள்ள மத்திய ஜனதா அரசு, இலங்கை அரசுடன் தவறான வழியில் சென்றாவது நட்புறவு வைத்துக்கொள்ள தவிக்கிறது - அதனால் தான் தமிழர் பிரச்சினையில் அக்கறை காட்டவில்லை என்று ஒரு கருத்தை எழுத்து வாயிலாகவே அறிவித்தார்கள்.

இப்போது என்ன நிலைமை? எதையாவது ஒரு தீர்வைக் கண்டுபிடித்து - அது இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு நிலையான உரிமைகளை அளிக்கவோ, நிரந்தர அமைதியை வழங்கவோ முடியாவிட்டாலும் கூட, எப்படியோ ஒப்பந்தம் முடிந்தது என்ற கித்தாப்பைப் பெற்றால் போதும் என்று செயல்பட்டுக்கொண்டு இலங்கை அரசின் நட்புக்கு எள்முனையளவு சேதாரமும் வராமல் பார்த்துக் கொள்வதில்

இந்திரா காங்கிரஸ் மத்திய அரசு கவனமாக இருக்கிறதா இல்லையா?

அன்று இந்திய மத்திய அரசான ஜனதா அரசின் மீது இந்திரா காந்தி, எந்தக் குற்றத்தைச் சுமத்தினாரோ - அதே குற்றத்திற்கு ஆட்பட்டதாகத் தானே இன்றைய மத்திய அரசு விளங்குகிறது!

அப்போது 1979ஆம் ஆண்டு - இந்த அளவு இனப்படுகொலைகள் நடைபெறாத காலம்!

அப்போதே இந்திரா அம்மையார் மத்திய ஜனதா அரசின் மீது குறை கண்டார்கள்! இப்போது பல்லாயிரக்கணக்கானத் தமிழின மக்கள் படுகொலைக்கு ஆளாகியுள்ளார்கள். இந்தக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கும் போது கூட திரிகோணமலைப் பகுதியிலே உள்ள அப்பாவித் தமிழ் மக்களையும், இளைஞர்களையும் சிங்கள ராணுவத்தினர் கடத்திக் கொண்டு போயிருக்கிறார்கள் என்றும் - அந்த எண்ணிக்கை ஐநூறு முதல் ஆயிரம் வரை இருக்குமென்றும், அவர்கள் கதி என்ன ஆயிற்றென்று தெரியவில்லையென்றும் ஏடுகளில் செய்திகள் வருகின்றன!

பேச்சுவார்த்தைக்கு முன்பு போர் நிறுத்தம் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்பட, தமிழ் ஈழப்போராளிகள் சார்பில் எடுத்துக் கூறப்படும் கருத்துகளைக் கூட இலங்கை அரசு ஏற்பதற்குத் தயங்குகிறது!

இந்திய அரசோ, தமிழர் பிணங்களின் மீது நடந்து வரும் இலங்கை அரசின் முகவாய்க்கட்டையைப் பிடித்து - முழந்தாளிட்டு கெஞ்சிப் பார்க்கிறது!

இந்திய அரசு மிரட்டுவதெல்லாம் அல்லது நிர்பந்திப் பதெல்லாம் இங்கு அடைக்கலம் புகுந்து ஆதரவு கேட்கிற தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளிடம்தான்!

இலங்கை அரசைப் பார்த்து ஒரு கடுஞ்சொல் கூறக்கூட அஞ்சி நடுங்குகிறது!

ஏதோ, தமிழகத்தின் குமுறலையும், கொந்தளிப்பையும் டெசோ இயக்கத்தின் சார்பில் எழுச்சிமயமாக நாம் எடுத்துக் காட்டிய காரணத்தினால் தான் மத்திய அரசு, இது கூடச் செய்கிறது! இல்லையேல் இந்நேரம் இலங்கையில் மொத்தத் தமிழ் இனமும் அழிந்திருக்கும்!

செய்வதைச் செவ்வனே செய்யவேண்டும் - உளப்பூர்வமாகச் செய்யவேண்டும் - யாருக்காகவோ செய்யக்கூடாது - பங்களாதேஷ் அணுகு முறையைப் போல இராணுவத்தை அனுப்புகிற காலம் இப்போது கடந்து விட்டது என்றாலும்கூட, இலங்கையில் இனிமேல் தமிழர்கள் சிங்களவர்களுடன் இணைந்து வாழ்வதில் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய சிக்கல்களை முன் கூட்டியே சிந்தித்துப் பார்த்து தமிழ் ஈழம் உருவாகிட, இலங்கை அரசு அரசியல் தீர்வு என்ற அடிப்படையில் வலியுறுத்தினால் தான் பயன் உண்டு!

தமிழ் ஈழம் ஒன்று தான் இலங்கைத் தமிழர்களுக்குள்ள ஒரே பாதுகாப்பு என்றாலுங் கூட - தமிழ் ஈழப் போராளிகள் ஏற்றுக்கொள்கிற, ஏற்றுக் கொண்டு கையெழுத்திடுகிற ஒப்பந்தத்திற்கு டெசோ அமைப்பு குறுக்கே நிற்காது என பலமுறை அறிவித்திருக்கிறோம்!

தமிழ் இன நலன்களும், உரிமைகளும் பாதுகாக்கப்படாத நிலையில் - எதிர்காலம் இருட்டாக இருக்கும் நிலையில் - ஏதோ ஒன்றில் கையெழுத்திட்டு விட்டு எங்கள் சுமையைக் குறையுங்கள் என்று இந்திய அரசு சொல்லாது என நம்புகிறோம்! சொல்லக்கூடாது என்று சுட்டிக் காட்டுகிறோம்! அப்படிச் சொன்னால், அதனை ஏற்க முடியாமல் தயங்கி நிற்கும் தமிழ் ஈழப் போராளிகளின் சார்பில், டெசோவின் குரல் ஓங்கி ஒலிக்கும்! ஒலித்துக் கொண்டேயிருக்கும்! ஓயாமல் ஒலிக்கும்!

அதற்கான உறுதி மொழி எடுக்கத்தான் அக்டோபரில் தமிழகப் பெருநகரங்களில் பேரணி - பொதுக் கூட்டங்கள்!

அந்த எழுச்சிமிகு நிகழ்ச்சிகளில் நாம் தொடர்ந்து கடைப் பிடித்து வரும் அரசியல் பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும்!

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுக்குக் கடுகளவு ஊனமும் ஏற்படக் கூடாது!

சென்ற கடிதத்தில் எழுதியிருந்த உறுதி மொழிகள் நினைவிருக்கட்டும்!

அவற்றின் அடிப்படையிலேயே ஊர்வல முழக்கங்கள் அமைந்திடல் வேண்டும்!

தமிழ்நாட்டு மக்களின் உறுதியையும், உள்ளக் கொதிப்பையும் உணர்த்தப்பட வேண்டியவர்களுக்கு - நமது கட்டுப்பாடு மிக்க எழுச்சியின் மூலம் உணர்த்திடுவோம்!

அன்புடன்

மு.க.

02-10-1985

1356. குட்ட குட்ட குனிந்து கொடுப்பது ஏன்?

உடன்பிறப்பே,

மேற்குவங்க சட்ட அமைச்சர் மன்சூர் அபிபுல்லா சென்னைக்கு வந்திருந்தார். பல்கலைக் கழகத் துணைவேந்தர் நியமனத்தில் கவர்னருக்குள்ள அதிகாரம் பற்றி அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனத்தில் கவர்னர், மாநில அரசோடு கலந்து ஆலோசனை செய்தால் மட்டும் போதாது. மாநிலஅரசின் பரிந்துரையைத்தான் ஏற்கவேண்டும். கவர்னர், தனக்குச் சாதகமான ஒருவரைத் துணைவேந்தராக நியமிக்கும் நிலை ஏற்படுவது கூடாது.

இதுதான் மேற்குவங்க சட்ட அமைச்சர் வெளியிட்ட கருத்தாகும்.

மேற்கு வங்கத்தில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நியமனத்தில் கவர்னர், தனது விருப்பப்படி செயல்பட்டபோது அதனைக் கடுமையாக மேற்கு வங்கத்து மாநில அரசு எதிர்த்ததையும், இறுதி வரையில் தனது எதிர்ப்பைத் திரும்ப பெற்றுக் கொள்ளாததையும், மாநில உரிமை - மாநிலங்களின் சுய மரியாதை - இவற்றில் பற்றுக் கொண்டு அவற்றைப் பாதுகாக்க வாதாடி போரிடுகிறவர்கள் யாரும் மறந்திருக்க மாட்டார்கள்!

ஆனால், இங்கேயும் நமக்கு ஒரு மாநில அரசு இருக்கிறது. அந்த அரசின் கருத்தை அறவே புறக்கணித்துவிட்டு கவர்னர் குரானா அவர்கள், மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத்துக்குத் தனது விருப்பப்படி ஒருவரைத் துணைவேந்தராக நியமித்தார்.

அந்த அறிவிப்பு வெளிவந்ததும், நமது மாநிலக் கல்வி அமைச்சர் துடியாத் துடித்தார். கவர்னர் நியமனம் தன்னிச்சையானது

என்றார். முதலமைச்சரின் ஆலோசனையை ஏற்காமல், கவர்னரே இவ்வாறு நியமன அறிவிப்பை வெளியிட்டது, மாநில அரசின் உரிமைகளை நசுக்குவது என்று முழக்கமிட்டார்.

பத்திரிகையாளர்களைக் கூட்டினார் - படபடவெனப் பொழிந்து தள்ளினார் - பலே! பலே! என்று தன்மானமுள்ள தமிழ் மக்கள் அனைவரும் கல்வி அமைச்சரின் கம்பீரமான கர்ச்சனை கேட்டுக் கரகோஷம் செய்து பாராட்டினர்!

டெசோ பேரணிப் பொதுக்கூட்டமொன்றில் பேசும்பொழுது, நான்கூடப் பின்வருமாறு குறிப்பிட்டேன்!

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நியமனத்தில் கவர்னர் நடந்து கொண்ட முறை கண்டிக்கத்தக்கது. மாநிலக் கல்வி அமைச்சர் கவர்னரின் போக்கை எதிர்த்து அறிக்கை விட்டிருப்பது மாநில உரிமையின் அடிப்படையில் என்றால், அதனை வரவேற்கிறேன். அப்படியல்லாமல், பேசப்பட்ட பேரத்திற்கு இடையூறு வந்து விட்டது என்ற அடிப்படையில் என்றால், அது வேறு விவகாரம்!

இப்படி நான் கருத்து வெளியிட்ட மறுநாளே - மாநில அரசின் சுயமரியாதை, உரிமை முழக்கம் எல்லாமே ஆமையின் கால்களையும், தலையையும் போல ஓட்டுக்குள் போய் ஒடுங்கிக் கொண்டன!

மதுரை துணைவேந்தர் நியமனம் - அரசு ஏற்றது என்று பத்திரிகைகளில் கொட்டை எழுத்துகளில் செய்தி வந்து விட்டது!

கவர்னர் முடிவை ஏற்கிறோம் - தமிழக அரசு அறிவிப்பு

என்று பெரிய எழுத்தில் செய்தி வெளியிட்டுள்ள தினத்தந்தி இதழ், சென்னை 5.10.85 இந்தத் துணைவேந்தர் நியமனம் குறித்து எழுந்த சர்ச்சைகளையும், இறுதியில் அரசாங்கம் எப்படி பணிந்து போயிற்று என்பதையும் விபரமாகக் கூறியிருக்கிறது! அதை அப்படியே இங்கு தருகிறேன், தினத்தந்தியில் உள்ளபடி:-

மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் ஜே.இராமச்சந்திரன் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, புதிய துணைவேந்தராக பேராசிரியர் எஸ்.கிருஷ்ணசாமியை நியமிப்பதாக, கவர்னர் குரானா நேற்றுமுன்தினம் அறிவித்தார். இதன் பிறகு நிருபர்களுக்குக்

கல்விஅமைச்சர் அரங்கநாயகம் அளித்த பேட்டியில், மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவிக்கு அரசியல்துறை பேராசிரியர் சி.ஏ.பெருமாள் பெயரைக் கவர்னருக்கு தமிழக அரசு சிபாரிசு செய்துள்ளது. அமைச்சரவையின் யோசனைப்படிதான் கவர்னர் நடக்க வேண்டும் என்று கூறினார்.

பிறகு கவர்னர் குரானா விடுத்த அறிக்கையில், துணைவேந்தர் நியமனம் பற்றி முடிவு செய்யும் உரிமை கவர்னருக்கு உண்டு என்று குறிப்பிட்டிருந்தார்.

எனக்கு சிபாரிசு செய்யப்படும் பெயர்களில் இருந்து, ஒருவரை தேர்ந்து எடுப்பதுதான் நடைமுறையில் இருக்கும் வழக்கம் என்று அவர் கூறினார்.

இதுபற்றி நேற்று காலை கல்வி அமைச்சர் அரங்கநாயகம், நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

இதற்கு முன் எல்லா சந்தர்ப்பங்களிலும், மாநில அரசை கலந்து பேசி எங்கள் ஒப்புதலுடன்தான் பல்கலைக் கழகத் துணைவேந்தர்களை கவர்னர் நியமனம் செய்துள்ளார்.

தற்போது அட்வகேட் ஜெனரல் கருத்து ஒன்றையும் கவர்னருக்கு அனுப்பி இருக்கிறோம். அதில் பஞ்சாப் மாநிலம் சம்பந்தப்பட்ட சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின் சில பகுதிகள் குறிப்பிடப் பட்டு உள்ளன. அந்த தீர்ப்பில் நீதிபதி தெளிவாகவே குறிப்பிட்டு இருக்கிறார். ஜனாதிபதியோ, கவர்னரோ இதுபோன்ற பிரச்சினைகளில் மாநில அமைச்சரவையை கலந்து பேசி முடிவெடுக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

பட்வாரி முன்பு இங்கு கவர்னராக இருந்த போது ஜி.ஆர். தாமோதரனை சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக நியமிக்கும்படி தமிழக அரசு கவர்னரிடம் ஆலோசனை கூறியது. ஆனால் கவர்னரோ ஜி.ஆர்.தாமோதரன் பெயரை வெளியிடாமல், அப்படியே வைத்திருந்தார். அப்போது சென்னை வந்த ஜனாதிபதி சஞ்சீவி ரெட்டியிடம் இந்தப் பிரச்சினை பற்றி கூறப்பட்டது.

அவர் உடனே கவர்னர் பட்வாரியை அழைத்து, மாநில அரசின் ஆலோசனைப்படி நடந்து கொள்ளுங்கள் என்று சொன்னார். உடனே கவர்னர், எங்கள் ஆலோசனையை ஏற்று ஜி.ஆர். தாமோதரனை துணைவேந்தராக நியமித்தார்.

இதே பிரச்சினை அப்போது பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாயிடம் தெரிவிக்கப்பட்ட போது, மாநில அரசின் ஆலோசனைப் படிதான் கவர்னர் நடந்து கொள்ளவேண்டும் என்று அவர் கூறினார்.

இவ்வாறு அரங்கநாயகம் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினை பற்றி நேற்றிரவு தமிழக அரசு ஒரு அறிக்கை வெளியிட்டது.

அதில் கூறப்பட்டு இருப்பதாவது:-

மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நியமனம் பற்றி தேவையற்ற சர்ச்சை எழுந்தது மிகவும் துரதிஷ்டவசமானது.

அரசாங்கம் இதுபற்றி கவனமாக பரிசீலனை செய்தது. முடிவில் மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத் துணைவேந்தராக எஸ்.கிருஷ்ணசாமியை கவர்னர் நியமித்தது செல்லத்தக்கது. தகுதி அடிப்படையில் நடந்தது என்று தீர்மானித்தது.

கவர்னரின் அறிவிப்பை அரசு அமுல் நடத்துகிறது.

இப்படி தினத்தந்தி முதலிய ஏடுகள் செய்தி வெளியிட்டன.

இந்த நியமனம் பற்றி சர்ச்சை எழுந்ததே துர் அதிர்ஷ்டமானது என்று அரசாங்கம் அறிவிக்கிறது!

சர்ச்சையைக் கிளப்பியவர் யார்? கவர்னர் செய்தது சரியல்ல என்று கல்வி அமைச்சர்தானே சர்ச்சையைக் கிளப்பினார்! அவர்தானே கவர்னர் பட்வாரி காலத்தில் நடந்தவற்றை யெல்லாம் விவரித்தார். அவர்தானே அட்வகேட் ஜெனரல் அவர்களின் சட்டபூர்வமானக் கருத்தைப் பெற்று கவர்னர் செய்தது தவறு என்று பத்திரிகையாளர்களிடம் வெளியிட்டார்.

சர்ச்சை எழுந்தது தவறு என்று அரசாங்கம் கண்டிக்கிறது என்றால், அந்த அரசாங்கம் எது? கல்வி அமைச்சரும் உள்ளிட்ட இருபத்தைந்து பேர் அமைச்சரவைக்குத் தலைமை வகிக்கிற முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் பொறுப்பிலே உள்ள அரசாங்கமா? அல்லது அந்தோணியைத் தலைமைச் செயலாளராகக் கொண்டு இயங்கும் அரசாங்கமா? அல்லது செயல்படாத ஆட்சியில், மறைமுகமாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற கவர்னரின் அரசாங்கமா?

இவற்றில் எந்த அரசாங்கமாயினும், இந்த விவகாரத்தில் சர்ச்சை கிளப்பியது தவறு என்று முடிவு எடுத்து அறிவிக்கும் போது, கல்வி அமைச்சர் என்ன செய்திருக்க வேண்டும்!

கவர்னர் செய்த நியமனத்துக்கு எதிராகத் தான் எடுத்து வைத்த ஆதாரங்கள் அனைத்தும் தவறு என்று ஒப்புக் கொண்டு, அறிக்கை விட வேண்டும்!

அல்லது மானஸ்தர் என்ற முறையில், தனது ஆதாரங்கள் ஆணித்தரமானவையென்று அடித்துச் சொல்லி விட்டு, அரசாங்கத்தின் கூற்றுப்படி இது ஒன்றும் துர்அதிர்ஷ்டமான சர்ச்சையல்ல என்று விளக்கிவிட்டு - தனது உரிமையை நிலைநாட்டும் வகையிலும், தான் எடுத்துவைத்த முன் மாதிரி நிகழ்ச்சிகளின் நியாயத்தை வலியுறுத்தும் முறையிலும் - சீ! இந்தப் பதவியே வேண்டாம் என்று தூக்கி எறிந்து விட்டு வெளியேறியிருக்க வேண்டும்!

அப்படி வெளியேறியிருந்தால் மாநில உரிமைக்காகக் குரல் கொடுக்கும் எல்லாக் கட்சியினரும் அவருக்குப் பாராட்டு மாலைகளை மலைமலையாகக் குவித்திருப்பர்!

கவர்னர் செய்த துணைவேந்தர் நியமனம் தகுதி அடிப்படையில் நடந்தது.

என்று அரசாங்க அறிக்கை கூறுகிறது!

அப்படியானால் முதலில் கல்வி அமைச்சர், தகுதியற்ற ஒருவருக்காகத்தான் சர்ச்சையைக் கிளப்பினாரா?

கல்வி அமைச்சரின் கூற்றுப்படி முதலமைச்சர், தகுதியற்ற ஒருவரின் பெயரைத்தான் கவர்னருக்கு முதலில் பரிந்துரை செய்து செய்தி அனுப்பினாரா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் இந்த அரசிடமோ அல்லது அமைச்சர்களிடமோ பதிலை எதிர்பார்க்க முடியாது!

பாவம்! நன்றாக சிக்கிக் கொண்டிருக்கிறார்கள் - அதனால் குட்ட குட்ட குனிந்து கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள்!

அன்புடன்

மு.க.

11-10-1985

1357. பாபப்பட்ட ஜென்மம் தமிழன் மட்டும்தானா?

உடன்பிறப்பே,

வருகிற திங்கட்கிழமையன்று இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் மேற்கொள்ள இருக்கும் சுற்றுப் பயணத்திற்காகப் புறப்படுகிறார்.

அதற்கிடையே இலங்கைப் பிரச்சினையில் முதல் கட்ட வெற்றி - பெரும் சாதனை என்ற பாராட்டு மொழிகளை அவரே கூறிக் கொண்டு, அந்த வர்ணனைகள், தொலைக்காட்சி - வானொலி - நாளேடுகள் அனைத்திலும் வெளிவந்துள்ளன!

பஞ்சாப் பிரச்சினையில் ஒரு சாதனை! அஸ்ஸாம் பிரச்சினையில் ஒரு சாதனை!

இந்த இரண்டு சாதனைகளுடன் மூன்றாவது சாதனையாக, ஒரு வெற்றிமாலையை ராஜீவின் கழுத்தில் அணிவித்து அவரை அமெரிக்காவுக்கும், இங்கிலாந்துக்கும் வழியனுப்பி வைத்திட ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கு உரியபரிசாக ஒரு கண்டிப்பானதும், திட்டவட்டமானதுமான பிரகடனத்தையும் அவர் செய்திருக்கிறார்.

என்ன அந்தப் பரிசு? என்ன அந்தப் பிரகடனம்?

இலங்கையில் தமிழ்ஈழம் என்ற தனிநாடு அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் ஏற்கவில்லை!

இந்தப் பிரகடனம், இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே வாயிலிருந்து முழக்கப்பட்டது போல் தோன்றுகிறதல்லவா?

அதுதான் இல்லை! ஜெயவர்த்தனாவுக்கு அந்தச் சிரமம் வைக்காமல் நமது பிரதமர் அவர்களே, தமிழ் ஈழ விடுதலைப்

போராளிகளுக்குச் சுடச் சுடப் பதில் கொடுத்து விட்டார்! இல்லை! இல்லை பரிசு கொடுத்து விட்டார்! தமிழ் ஈழம் கிடையாதென்று!

பல்லாயிரக் கணக்கான உயிர்கள் பஞ்சாபிலும், டெல்லியிலும், பலியான பிறகு, எந்த அனந்தபூர் சாகேப் தீர்மானம் தேசத் துரோகமானது என இந்திரா காங்கிரசாரால் குற்றம் சாட்டப்பட்டதோ, அந்தத் தீர்மானம் உட்பட அனைத்துக் கோரிக்கைகளும் ஏற்கப்பட்ட நிலையில் பஞ்சாப் ஒப்பந்தம் ஏற்பட்டது! அந்த மாநிலத்தில் அப்போது ஆளுங்கட்சியாக இல்லாத அகாலிதளக் கட்சியுடன் ராஜீவ் காந்தி பேசி முடித்து, ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

அன்னை இந்திராவின் காலத்தில் எந்தக் கோரிக்கைகள் ஏற்கப்பட வில்லையோ, அவற்றை இப்போதைய பிரதமர் ஏற்றுக் கொண்டார்! இது அகாலிதளக் கட்சிக்குக் கிடைத்த வெற்றியென்று மத்திய அரசின் விளம்பரச் சாதனங்கள் அறிவிக்கவில்லை! ராஜீவ் சாதனை! ராஜீவ் வெற்றி! என்றுதான் மகத்தான விளம்பரங்களைச் செய்தன! பஞ்சாப் தேர்தலில் அகாலிதளம் வெற்றி பெற்றதைக் கூட, ஒரு மாநிலக் கட்சியின் உரிமை முழக்கத்துக்குக் கிடைத்த வெற்றியாக ஏற்றுக் கொள்ள மனமில்லாமல், அதனையும் ராஜீவுக்குக் கிடைத்த வெற்றியென்றே பறைசாற்றினர்!

இதே போன்ற தமாஷ் தான், அஸ்ஸாம் பிரச்சினையிலும் நடந்தது! ஆறு ஆண்டுகள் விடாமல் மாணவர்கள் அங்கு போராட்டம் நடத்தி, சுமார் நாலாயிரம் உயிர்களைக் காவு கொடுத்து இறுதியாக இப்போது, தங்கள் கோரிக்கைகளில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்!

அன்னை இந்திரா காலத்தில் அஸ்ஸாமில் நடத்தப்பட்ட தேர்தல் ஒரு கேலிக்கூத்து! மக்களால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் தொகுதி ஒன்றுக்கு இருநூறு முன்னூறு வாக்குகள் மட்டுமே பதிவான ஒரு பொதுத் தேர்தலை நடத்தி, அன்னை இந்திராவின் இஷ்டத்துக்கு ஒரு ஆட்சியையும் அஸ்ஸாமில் அமைத்தனர்!

இப்போது அந்தச் சட்டசபை கலைக்கப்பட்டு விட்டது! விரைவில் தேர்தல் நடக்க இருக்கிறது! அஸ்ஸாம் கிளர்ச்சிக்காரர்களுக்கு கிடைத்துள்ள இந்த வெற்றிக்கும்கூட அவர்களை உரிமை கொண்டாட விடாமல், அதுவும்

ராஜீவ்காந்தியின் வெற்றி - சாதனை! என்றே அரசின் விளம்பர சாதனங்கள் டமாரம் கொட்டின!

ராஜீவ் காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இதே கோரிக்கைகள், இந்திரா அம்மையார் காலத்தில் பஞ்சாபிலும், அஸ்ஸாமிலும் ஏற்றுக்கொள்ளப்படாத போதும் - அதுவும் சரியே! என்றுதான் இந்திரா காங்கிரசார் வாதிட்டனர்!

எப்படியோ பஞ்சாப் அமைதி - அஸ்ஸாம் அமைதி - நிலைத்து நீடிக்க வேண்டுமென்ற விழைவுடன், அவற்றைப் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம்!

ஆனால், இந்திரா காங்கிரசின் மத்திய ஆட்சி தாமதமாக எடுத்த இந்த முயற்சிகளை - முன்பே உரிய நேரத்தில் எடுத்திருந்தால்; எத்தனை ஆயிரக்கணக்கான உயிர்களைத் திடீர் அழிவிலேயிருந்து காப்பாற்றியிருக்க முடியும் என்பதையும் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை! எதிர்காலத்திலாவது அத்தகைய தவறுகள் நடக்காமலிருக்க, கடந்த காலத்து அனுபவங்களை நினைவூட்டுவது கடமையன்றோ!

ஏ! அப்பா! எத்தனை கசப்பான சம்பவங்கள்! அன்னை இந்திரா கொலை! எந்தப் பிரதமர்களுக்கும் இல்லாத அளவுக்கு நமது பிரதமருக்கு கண்ணாடிக் கூண்டுக்குள் நின்று பேசுகிற அளவுக்கு மகத்தான பாதுகாப்பு ஏற்பாடுகள்!

காலம் கடத்தாமல் பிரச்சினைகளில் கவனம் செலுத்துகிற போக்கினை, இந்திரா காங்கிரஸ் ஆட்சியாளர்கள் கடைப்பிடிக்காத காரணத்தால் வந்த வேதனைகள் இவை யெல்லாம் என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியுமா?

விரைவு - அவசரம் என்ற இருசொற்களுக்குமுள்ள வேறுபாட்டையும் மத்திய அரசு உணர்ந்து செயல்படுவதாகத் தோன்றவில்லை!

கடைப்பிடிக்கப்பட வேண்டிய விரைவு பஞ்சாப், அஸ்ஸாம் பிரச்சினையில் கடைப்பிடிக்கப்படவில்லை!

கடைப்பிடிக்கப்படக்கூடாத அவசரம் இலங்கைத் தமிழர் பிரச்சினையில், இந்திய அரசினால் கடைப்பிடிக்கப்படுகிறது!

இதில் நாம் விரும்புவது, வேண்டுவது எல்லாமே விரைவான முடிவே தவிர, அவசரமான முடிவுகள் அல்ல!

"Quick Decision" என்பதற்கும், "Hasty Decision" என்பதற்கும் உள்ள பொருளும் - அவற்றின் விளைவுகளும் விஷயமுணர்ந்தோர் அறியக் கூடியதேயாகும்!

வெளிநாட்டு விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் ராஜீவின் கிரீடத்தில் பஞ்சாப் என்ற முத்தும், அஸ்ஸாம் என்ற மாணிக்கமும் பொருத்தப்பட்டிருந்தால் மட்டும் போதாது. இலங்கைத் தமிழர் பிரச்சினையின் தீர்வு, கூழாங்கல்லாக இருந்தாலும் பரவாயில்லை - அதனை வைரம் என்று கூறிப் பொருத்திக் கொண்டுதான் போகவேண்டும்.

இவ்வாறு முடிவெடுத்துச் செயல்பட்டு - ஏதோ, காமாசோமா என்று ஒரு கண்காணிப்புக்குழு விவகாரத்தைப் பெரும்சாதனை, பிரமாண்டமான வெற்றி என்று விமர்சித்துக் கொள்வது தமிழ் ஈழத்துக்காக பல்லாயிரக் கணக்கில் உயிர் நீத்த தமிழர்களுக்கும், களத்தில் மாண்டு புகழ்ப் பூக்களாக மலர்ந்துள்ள போராளிகளுக்கும், சிறைகளில் நிராயுதபாணிகளாகக் கொல்லப்பட்ட தமிழ் ஈழ விடுதலைத் தலைவர்களுக்கும், தளபதிகளுக்கும் காட்டுகின்ற நன்றிக்கடனாக இருக்க முடியாது!

அதுவும், கண்காணிப்புக் குழு விவகாரத்தைப் பெரிய சாதனை, முதல் வெற்றி எனக் கூறிய அதே நொடியில், தமிழ் ஈழத்துக்கு இந்தியாவின் ஆதரவு கிடையாது எனப் பிரதமர் அறிவித்திருப்பது, இலங்கைச் சிங்கள அரசின் கையை ஓங்கச் செய்ய உதவிடும் செயலேயாகும்!

இப்படி அவசர அவசரமாக தமிழ் ஈழம் என்பதற்கு இந்திய அரசு, எதிர்க் குரல் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது?

இந்தியாவுடன் அணி சேரா நாடுகளில் ஒன்றாக இருக்கிற மொராக்கா, தனது ராஜீய உறவுகளை இந்தியாவுடன் துண்டித்துக் கொண்டாலும் பரவாயில்லையென்று அங்கு நடைபெறும் விடுதலை இயக்கத்துக்கு இந்தியா அங்கீகாரம்!

நமீபியா விடுதலை இயக்கத்துக்கு இந்தியா அங்கீகாரம்!

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு இந்தியா அங்கீகாரம்!

பாபப்பட்ட ஜென்மம்! தமிழன் மட்டும்தானா?
இப்படியொரு ஆதங்கம் ஏற்படுவது இயல்பல்லவா?

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவுக்குப் போராளிகள் யோசனை ஏற்கப்பட்டது என ஒரு செய்தி!

போராளிகளிலே ஒரு பிரிவினருக்கு திருப்தியில்லையென மற்றொரு செய்தி!

இந்தச் செய்திகள் வெளிவந்த பத்திரிகைகளிலேயே, திரிகோணமலை, வவுனியா முதலிய தமிழ்ப்பகுதிகளில் இருந்து முப்பதாயிரம் தமிழர்கள் இலங்கை ராணுவத்தினரால் விரட்டப்பட்டனர் என்ற விபரம்!

இலங்கை மட்டக்களப்பு மாவட்டத்தில், கரியம்பதி என்னுமிடத்தில், ராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று சோதனை நடத்தி ஐம்பதுக்கு மேற்பட்ட இளைஞர்களை கைது செய்துள்ளனர். இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள அவர்கள் கதி என்னவென்று தெரியவில்லை என்கிற செய்தியும் அதே பத்திரிகைகளில்தான் வந்துள்ளன!

இப்படியொரு முரண்பாடான நிலையில் ஏதோ ஒரு முடிவை அவசரமாக எடுத்து முடியில் பதித்துக் கொண்டு வெளிநாட்டு விஜயத்தை தொடங்குகிறார், பிரதமர்!

அதற்குத்தான் தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளைத் தேடோ தேடு என்று தேடி, டெல்லிக்கு அழைத்துச் சென்றார்கள் போலும்! இங்கிருந்து எம்.ஜி.ஆரும் அனுப்பி வைத்தார்போலும்!

அன்புடன்

மு.க.

13-10-1985

1358. விட்டொழிப்பாய் தீக்குளித்தல்

உடன்பிறப்பே,

குருவிபோல் கொக்குபோல்
கொன்று குவிக்கின்றார்
இலங்கையில் தமிழ் இனத்தையென்று,
அருவியில் குளிப்பது போல் - நீ
அக்கினியில் குளிக்கின்றாய்!
ஆறிலும் சாவு, நூறிலும் சாவு
அதிலோர் ஐயம் இல்லை! ஆயினும்
களம் சென்று விழுப்புண் பெறுதலே
பெருமை என்பேன்! மாறாக
உளம்நொந்து உயிர் விடுதல்
வீரமன்று! முறையுமல்ல! உன்
உணர்வுக்குத் தலைதாழ்ந்த வணக்கம்!
எனினும் எண்ணிப்பார் உடன்பிறப்பே!
ஒருதமிழன் வீளுக நம்படையில்
குறைதல் நன்றா?
வேண்டுகின்றேன் தாள்பணிந்து:
விட்டொழிப்பாய், தீக்குளித்தல்!

அன்புடன்

மு.க.

14-10-1985

1359. கருங்குயில் உறங்கிடும் கல்லறை!

உடன்பிறப்பே,

கடைசியாக ஒருமுறை, என் மகனைப் பார்க்க அனுமதி கொடுங்கள் என்று கதறினாள் அந்தத் தாய்!

அனுமதி தரப்பட்டது! அந்த அன்னைக்கு! எப்படிப்பட்ட அனுமதி தெரியுமா?

மகனின் உடல் வைக்கப்பட்டு, மூடப்பட்டிருந்த அந்த சவப் பெட்டியை மட்டும், அவள் காண்பதற்கு எந்தத் தடையும் இல்லை! அந்தத் தாய்க்கு அதில் பரிபூரண சுதந்திரம் அளிக்கப்பட்டது!

யார் அந்த மகன்? யார் அந்தத் தாய்? அந்த மகன் ஒரு கவிஞன்! முப்பது வயதுதான் எனினும், இளமையிலேயே பெருங்கவிஞன் எனப் புகழ் பெற்றவன்!

என் மகன் குற்றமற்றவன்! அவனை தூக்கிலிடாதீர்கள் எனக் கெஞ்சினேன்! நடக்கவில்லை! அவன் கழுத்தைக் கயிறு இறுக்குவதற்குள் கடைசி முறையாக ஒரு தடவை, அவனைப் பார்க்கும் வாய்ப்பை எனக்கு வழங்கிடுமாறு மன்றாடினேன்! எதுவும் நடக்கவில்லை! இந்த அரசு இவ்வளவு கொடுமையாகவும், குரூரமாகவும் நடந்து கொள்ளுமென நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை!

என்று அந்தத் தாய் கண்ணீர் வடித்து மயங்கி விழுந்தபோது, அவளுடைய மகன் சவப்பெட்டிக்குள்ளே அமைதியாக சயனித்துக் கொண்டிருந்தான்!

ஆம்! அவன் பாடவேண்டிய புரட்சிக் கவிதைகளை யெல்லாம் பாடி விட்டான்! கவிதைகள் வாயிலாக மட்டுமல்ல. அவனது தியாக உள்ளத்தாலும் - திடமான உறுதியாலும் - திறன்மிகு செயல்களாலும் விளைவிக்க வேண்டிய எழுச்சியை அவன்

பங்கிற்கு விளைவித்து விட்டான்! அவன் வேலை இன்னும் முடியவில்லை என்றாலுங்கூட, அவன் வேலையை அதற்குள் முடித்து அவனுக்கு நிரந்தர ஓய்வை வழங்கிவிட்டார்கள்!

ஆனால் அவன் கவிதைகள் ஓய்வின்றி, உறக்கமின்றி உலவிக் கொண்டேயிருக்கும்! அவற்றைத் தூக்கிலிட முடியாது! தூக்கி எறியவும் முடியாது! காரணம், அந்தக் கவிதைகள் வெறும் காகிதங்களில் மட்டும் எழுதப்பட்டு - அச்சு இயந்திரங்களின் உதவியால் புத்தகங்களாக மாத்திரமே இருப்பவை அல்ல!

அவன், யாருக்காக அந்தக் கவிதைகளை எழுதினானோ, அந்த மக்களின் மனப்பாடமாகி விட்டவை அவை!

அந்த மக்கள் சமுதாயத்தையே பெரும்பகுதி பூண்டற்றுப் போகுமாறு அழித்துவிட்டால் கூட, அந்தக் கவிதை, ஆலின் விதை போல் இருந்து விடுதலை இயக்கத் தருவை விண்ணளாவ உருவாக்கி, என்றோ ஒருநாள் அந்தச் சமுதாய மக்கள் சுதந்திரக் கனியைப் பறித்துச் சுவைக்கக்கூடிய வாய்ப்பை வழங்கிடும் வல்லமை பெற்றது!

அத்துணை ஆற்றல் பெற்ற அந்த இளங் கவிஞன் யார்? அவன் ஒரு நீக்ரோ! கறுப்பர் இனத்தினன்! கற்பனை வளமுடையான் என்பதைக் காட்டிலும், கனல்கக்கப் பாட்டியற்றும் விடுதலை உணர்வுடையான்! அந்த கருங்குயிலுக்குப் பெயர் பெஞ்சமின் மலாய்ஸ்!

அவன் செய்த குற்றமென்ன? தென்னாப்பிரிக்காவில் கறுப்பர்களை அடிமைப்படுத்தி, ஆதிக்கம் செலுத்தும் வெள்ளை ஏகாதிபத்திய அரசை எதிர்த்து, ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆப்பிரிக்க தேசிய விடுதலைப் பேரியக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டான்! அதுதான் அவன் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு செய்த மிகப்பெரிய குற்றம்!

விடுதலைபெறவும், ஆதிக்க சக்தியின் வெறியாட்டத் திலிருந்து விடுபடவும், இனஉரிமை பெற்றுத் திகழவும் - எல்லா வழிகளிலும் முயன்று பார்த்து, எதிலும் பயனில்லாத காரணத்தால், இறுதியாக ஆயுதமேந்திக் கொரில்லா யுத்தம் நடத்திக் கொண்டிருக்கிற, அந்த நீக்ரோ விடுதலை இயக்கத்தினரை மனித உரிமையில் நாட்டமுடைய நாட்டினர் அனைவருமே ஆதரிக்கத்தான் செய்கின்றனர். இந்தியா உட்பட!

அந்தக் கவிஞன் மீது சாட்டப்பட்ட குற்றம், அவன் ஒரு போலீஸ்காரர் கொலையில் உடந்தையாக இருந்தான் என்பது!

இல்லவே இல்லையென்று அவன் மறுத்தான்!

பிறந்த கவிதைகள் போக, இனி பிறக்கப் போகும் கவிதைகளைத் தடுக்க வேண்டுமானால், அந்தக் கவிஞனைத் தீர்த்துக் கட்டிவிடுவதே சிறந்த திட்டம் என வெள்ளையர் அரசு முடிவு செய்தது!

வழக்கு! விசாரணை! தீர்ப்பு! இன்னோரன்ன நீதிமன்ற நாடகக் காட்சிகள். அவற்றைத் தொடர்ந்து பெஞ்சமின் தூக்கு கயிற்றில் பிணமாகத் தொங்கினான்!

உலகமே பெருமூச்சு விடுகிறது. உன் மகனின் பிணத்தை எங்கே அடக்கம் செய்யப் போகிறோம் என்பதை இப்போது சொல்ல முடியாது! அவன் கல்லறை எங்கேயிருக்கிறது என்பதைப் பிறகு அறிவிக்கிறோம் என்று, அவனைத் தூக்கிலிட்ட அதிகாரிகள் அவன் தாயிடத்தில் கூறிவிட்டார்கள்!

நீக்ரோ மக்கள் ஆட்சி நடத்துகிற அந்தநாள் வந்தேதீரும்! இப்போது உயிர் விடுகிற விடுதலைப் போராளிகள் அனைவருமே சுதந்திரத்திற்காகப் பெரும் தியாகம் செய்கிறார்கள். முப்பது ஆண்டுகளுக்கு முன்பே, நீக்ரோ மக்கள் ஏற்றுக்கொண்ட சுதந்திரப் பிரகடனத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்கும்வரை, நாம் சுதந்திரம் பெறப்போவது நிச்சயம்! விடுதலை நமது கரங்களில் உள்ளது! அச்சம் தவிர்த்துத் தொடரட்டும் நமது போராட்டம்!

அந்தக் கருங்குயில், கல்லறைக்குப் போகும்முன் இசைத்த கடைசிப் பாட்டு இதுதான்!

தூக்கு மேடைக்கு நடந்து செல்லும்போது சுதந்திர கீதமொன்றை இசைத்திட, அந்தக் கவிஞன் விருப்பம் தெரிவித்தானாம்! அவன் விரும்பியவாறு பாடினானா? என்ன பாடினான்? இது குறித்து தெளிவான செய்தியில்லை!

பெஞ்சமின் மலாய்சின் தாய், மகனுக்காக அழுதாள் எனினும் - அவன் மண்ணுக்குள் போன பிறகு - அவன் தூங்கும் அந்த மண்ணுக்கான உரிமைப் போர்க்குரலை உயர்த்திடத் தவறவில்லை!

நமது குழந்தைகளுக்கு பாதுகாப்பு அரணாக விளங்குவோம்!
நமது கரங்களைக் கோத்தவாறு சுதந்திரத்திற்காகப் போர் புரிவோம்!

என முழங்கிய அந்த வீரத்தாய், தனது மகனின் பெருமையை எண்ணி எப்படி மகிழ்கிறாள் பார்!

"He is very brave, he has accepted this with his whole heart. I have never seen him so strong. I am proud. I am a bit sad"

அவன் மிகவும் தைரியசாலி! முழுமனதோடு இந்த முடிவை அவன் ஏற்றுக் கொண்டான்! அவனை இவ்வளவு உறுதியாக இதற்கு முன் நான் பார்த்ததில்லை! நான் துக்கத்தினால் சிறிது பாதிக்கப்பட்டாலும், அவனுக்காகப் பெருமைப் படுகிறேன்!

இப்படி வீரமரணம் எய்திய விடுதலை வீரனாம், ஒரு மகனைப் பற்றிக் கூறிய தாயின் பெயரைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

பவுலின் மலாய்ஸ் என்பது அந்த அன்னையின் பெயர்!

நாம் இத்தகைய வீரத்தாய்களை சங்க இலக்கியங்களில் தானே சந்தித்திருக்கிறோம்!

அந்தத் தாய்க் குலத்தின் வீரம், தமிழ்க் குலத்தில் அறவே பட்டுப்போய்விடவில்லை என்றாலும், இதோ இந்த பவுலின் மலாய்ஸ் என்ற தாய் கொடுக்கும் குரல், நமது தாய்க்குலம் முழுமைக்கும் புதிய உணர்வை ஏற்படுத்தட்டும்!

உலகின் பல திசையிலிருந்தும் விடுக்கப்பட்ட வேண்டுகோள் பலனளிக்காமல் இறுதியாக, அந்தக் கருங்குயிலைக் கல்லறைக்கு அனுப்பிவிட்டது தென்னாப்பிரிக்க வெள்ளையர் அரசு!

இரண்டு நாட்களுக்கு முன்பு தென்னாப்பிரிக்காவில் பிரிட்டோரியா மத்தியச் சிறைச்சாலையில் இந்தக் கொடுமையை நடத்தி முடித்து விட்டனர்!

செய்தி கேட்டு நீக்ரோ மக்கள் நெருப்புத் துண்டங்களாக மாறினர்! அந்த நாட்டின் பல்வேறு நகரங்களில் கிளர்ச்சித் தீ!

பெஞ்சமின் உயிருக்கு மாற்றாகப் பழி வாங்குவோம்!
ரத்தத்துக்கு ரத்தம்!
என்று முழக்கமிட்டபடி, ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன!

பொழுது ஒரு நாள் விடியும்! அது நீக்ரோக்களின் சுதந்திரப் பொழுதாக விடியும்! அப்போது நான் விழித்துக் கொண்டிருக்க மாட்டேன்! ஆனால், என் கவிதைகள் தூங்காமலே இருக்கும்!

என்று, உடன்பிறப்பே! நான் அவனுக்காகப் பாடுகிறேன்!

அந்தக் கருங்குயில், கல்லறையில் உறங்கிக் கொண்டிருக்கிறது - ஆம்! மற்றவர்களை எழுப்பி விடுவதற்காக!

இளைய தலைமுறைக்கு இந்தக் கருங்குயிலின் வரலாறு ஒரு எழுச்சி மிக்க வழிகாட்டியல்லவா?

கென்யா, நைஜீரியா, ரொடீஷியா, ஜாம்பியா, தான் சானியா, உகாண்டா, சுவாசிலாந்த், கானா, பசூடோலாண்ட், எதியோப்பியா என்று பத்துக்கு மேற்பட்ட நாடுகள் நீக்ரோக்களுக்கு உண்டு இந்த உலகத்தில்! ஆனால் நாகரிகத்திற்கு வித்திட்ட தமிழனுக்கு? எண்ணிப்பார் உடன்பிறப்பே!

அன்புடன்

மு.க.

21-10-1985

1360. எண்ணெய் இல்லாத விளக்கு எப்படி எரியும்?

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து, குமுதம் இதழில் ஒரு கேலிச் சித்திரம் வெளிவந்துள்ளது! இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வு என்பதை ஒரு குத்து விளக்காகவும், சமரச முயற்சி என்ற ஒரு பெண்மணி, தீக்குச்சி கொண்டு விளக்கேற்ற முனைவதாகவும், எம்.ஜி.ஆரும், அவருக்குப் பின்னால் மூப்பனாரும் நின்று கொண்டு விளக்கு நல்லா ஏற்றி, விழா நல்லா நடக்கணும் என்று மங்கலமொழி கூறுவது போலவும் - அவர்களுக்கெதிரே நானும், என் தோளில் தோழமையுடன் கை வைத்துக் கொண்டு வீரமணியும் விழா நடக்கக் கூடாது! விளக்கு எரியக் கூடாது! என்று அமங்கல மொழி கூறுவது போலவும் சித்தரிக்கப்பட்டுள்ளது!

என்னையோ, கழகத்தையோ உருவகப்படுத்தி வெளி வந்துள்ள எத்தனையோ கேலிச் சித்திரங்களை, எத்தனையோ ஏடுகளில் நான் கண்டிருக்கிறேன். அவற்றில் பலவற்றை ரசித்தும் இருக்கிறேன். சிலவற்றை அலட்சியப்படுத்தியும் இருக்கிறேன். தாக்கி வரையப்பட்ட கேலிச் சித்திரங்களாயினும், அவற்றில் காணப்படும் கலைநயத்தையும், கருத்தாழத்தையும் வியந்து பாராட்டியுமிருக்கிறேன்.

ஆனால், விஷநோக்கம் கொண்டு சில முக்கியமான ஏடுகளில் வெளியிடப்படும் கேலிச்சித்திரக் கருத்துகளுக்கு, அவ்வப்போது விளக்கமளித்து மறுத்துரைக்கும் கடமையினை நான் ஆற்றிடத் தவறுவதில்லை!

முக்கியமான வார ஏடுகளில் ஒன்றாக நான் குமுதத்தையும் கருதுவதால்தான், இந்த இதழில் அது வெளியிட்டுள்ள கேலிச் சித்திரம் கக்குகின்ற விஷத்தை நான் மறுத்து விளக்க வேண்டியவனாக இருக்கிறேன்!

குமுதத்தின் கேலிச் சித்திரத்தைக் கூர்ந்து கவனித்தால் ஒரு உண்மை விளங்கும்!

இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வு, எனக் குறிக்கப் பட்டுள்ள குத்துவிளக்கில் எண்ணெய் என்பது ஒரு துளியும் இல்லை! அந்த எண்ணெய் இல்லா விளக்கை ஏற்றுகிற சமரச முயற்சியில்தான் ராஜீவ் காந்தி ஈடுபட்டிருக்கிறார் என்று, குமுதத்தில் கேலிச் சித்திரம் வரைந்த ஓவியர் குத்திக் காட்டியுள்ளார்! எண்ணெய் இல்லா விளக்கு எப்படி எரியும்? என்று நானும், தளபதி வீரமணியும் கேட்பதுகோல் வாசகம் அமைத்திருக்க வேண்டும்! ஆனால் அந்த ஓவியர், ஆசிரியர் உத்திரவின்படி வாசகங்களை எழுதிவிட்டு - இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு, எண்ணெய் இல்லா விளக்கை ஏற்ற முயற்சி செய்கிறது என்ற உண்மையைப் படமாகத் தீட்டி விட்டார்!

விளக்கு எரியக்கூடாது, விழா நடத்தக் கூடாது என்பது தி.மு.கழகத்திற்கோ அல்லது திராவிடர் கழகத்திற்கோ இருக்கின்ற எண்ணமா?

தி.மு.க., தி.க., காமராஜ் காங்கிரஸ், தமிழ்நாடு பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகள் இணைந்த டெசோ இயக்கத்திற்கு அப்படிப்பட்ட கருத்து கிடையாது என்பதை அந்த இயக்கத்தின் சார்பில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தையும் - அந்த இயக்கப் பேரணிகளில் அறிவிக்கப்பட்டுள்ள கருத்துகளையும் முழுமையாகப் படித்துப் பார்த்தால் குமுதம் இப்படியொரு குரூரமான கேலிச் சித்திரத்தை வெளியிட்டிருக்காது!

தமிழ் ஈழம்தான் இலங்கையில் தமிழர்கள் நிலையான உரிமைகள் பெற்று, நிம்மதியாக வாழ வழிவகுக்கும் சரியான தீர்வாக இருக்க முடியுமென்றாலும், பேச்சு வார்த்தைகளில் இருசாராரும் ஒன்றுபட்டு ஏற்றுக்கொள்கிற முடிவுக்கு டெசோ அமைப்பு குறுக்கே நிற்காது!

இதுதான் டெசோ இயக்கத்தின் சார்பில், பலமுறை உறுதியாக அறிவிக்கப்பட்டுள்ள கருத்தாகும்!

அதற்காக, இலங்கைத் தமிழர் உரிமைக்காகப் போராடுகிற போராளிகளின் பிரதிநிதிகளை இந்திய அரசு நிர்ப்பந்தம் செய்து,

தஞ்சம் புகுந்தவர்களை நாடு கடத்தி, இலங்கைச் சிங்கள அரசுக்குச் சாதகமாகச் செயல்படுவதை ஏற்க இயலாது! மாறாக, எதிர்த்து நிற்போம்!

இதுவும் டெசோ இயக்கத்தின் உறுதியான நிலையாகும்!

இதெல்லாம் குமுதம் இதழுக்குப் புரியாது அல்லது தெரியாது என்று நான் சொல்லமாட்டேன்!

புரிந்தாலும், தெரிந்தாலும், எப்படியாவது நம்மீது புழுதி வாரி வீச வேண்டும் என்பதிலே, குமுதத்திற்கு ஒரு தனி ஆசை! அரிப்புங்கூட!

தென்னாப்பிரிக்காவிலே நீக்ரோக்கள் நடத்துகின்ற விடுதலை இயக்கத்தை அங்கீகரித்து, தென்னாப்பிரிக்க வெள்ளை அரசுடன் எல்லாவித உறவுகளையும் வெட்டிக்கொள்ள முனைந்துள்ள நாடுகளில் இந்தியா முன்னணியில் நிற்கிறது! பாராட்டுகிறோம்! ஆனால் அதே நேரத்தில், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மட்டும் எண்ணெய் ஊற்றாமல் விளக்கு ஏற்றப் பார்க்கிறீர்களே! நியாயமா? என்றுதானே இந்திய அரசைப் பார்த்துக் கேட்கிறோம்!

நமீபியா விடுதலை இயக்கத்துக்கு இந்தியாவின் அங்கீகாரம்! அதனையும் வரவேற்கிறோம்! ஆனால் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை மட்டும், ஐ.நா. பொதுச்சபையில் நமது பிரதமர் நினைவுபடுத்த மறந்துவிட்டாரே! ஏன்? குமுதம் குத்துவிளக்கு எண்ணெய் இல்லாமல் எரியுமா? எண்ணத்தில் தூய்மை இருந்தால் ஐ.நா. மன்றத்தில், அத்தனை விடுதலை இயக்கங்களுடன் இணைத்து தமிழ் ஈழ விடுதலை இயக்கம் குறித்தும் இந்தியா பேசியிருக்குமல்லவா? இதைப் புரிந்து கொண்டுதான் குமுதத்தின் குறும்புக்கார ஓவியர், குத்து விளக்கில் எண்ணெய் இல்லை என்கிறார். அவர் வரைந்த சித்திரத்தின் வாயிலாக!

இந்தியாவுடன் இணைந்து அணிசேரா நாடுகளில் அங்கம் வகிக்கும் மொராக்கா நாட்டின் ராஜ்ய உறவுகளை அறுத்துக் கொண்டு - அங்கு கொரில்லாப் போர் நடத்தும் வன்முறை விடுதலைப் படையை அங்கீகாரம் செய்து அறிவித்து விட்ட ராஜீவ் காந்தியின் அரசு, இலங்கைச் சிங்கள அரசின் இஷ்டத்துக்கு ஆடிக் கொண்டு இருப்பதின் மர்மம் தான் என்ன?

இப்படிச் சில முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி, ஈழத்தமிழ் இனப் போராளிகளுக்கு ஆதரவாக - இந்திய அரசை வலியுறுத்தும் நம்மைப் பார்த்து விளக்கு எரியக் கூடாது என நினைப்பவர்கள், விழா நடக்கக் கூடாது என எண்ணுபவர்கள் என்று குமுதம் இதழ், தீய நோக்கம் கற்பிக்க முனைந்துள்ள காரணத்தினாலேதான், இந்த விளக்கமளிக்க நேரிட்டது!

குமுதத்தின் கேலிச் சித்திரத்தை மென்மேலும் உற்றுக் கவனித்தால், அந்தப் படத்தில் விழா நடக்கும் சூழ்நிலையே இல்லை! ஒரு தோரணம் - வாழை மரம் - எதையுமே காணோம்!

எப்படியோ அந்தக் கேலிச் சித்திரம் - வெறிச்சோடிக் கிடக்கும் இடம், எண்ணெய் இல்லா விளக்கு - இவை தான் இந்திய அரசு நடத்தும் இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வுக்கான பேச்சு வார்த்தை முயற்சியாக இதுவரை, இருந்து வருகிறது என்பதைத் தெளிவாகவே விளக்கிக் காட்டுகிறது!

எண்ணெய் ஊற்றப்படுமா? விளக்கு நிலைத்து நின்று எரியுமா?

குமுதம் படத்தை பார்த்த பிறகாவது - இந்திய அரசு தனது குற்றத்தை உணர்ந்து, குத்து விளக்கை, முறைப்படி ஏற்றி வைக்க முன் வருமா?

உடன்பிறப்பே! பொறுத்திருந்து பார்ப்போம்!

அன்புடன்

மு.க.

27-10-1985

1361. இந்தப் பணியையும் இனிதே நிறைவேற்றிடுக!

உடன்பிறப்பே,

கடந்த சில மாதங்களில் கழகத்தின் சார்பில் எடுக்கப் பட்ட முடிவுகளைச் செயல்படுத்தவும், விடுக்கப்பட்ட வேண்டுகோள்களைச் செவிமடுத்து நிறைவேற்றவும் உன்னைப் போன்ற ஆர்வம் படைத்த உடன்பிறப்புகள் நிறைந்துள்ள கழகத்தின் பல்வேறு அமைப்புகளும், சார்புமன்றங்களும், அணிகளும் ஆற்றியுள்ள பணியினை எண்ணிப்பார்த்துப் பூரிப்பும், பெருமிதமும் அடைகிறேன். கடந்த ஆறுமாதங்களை ஒரு கணக்கிற்காக எடுத்துக் கொண்டாலே போதுமானது. நீ புகுந்த களங்கள் எத்தனை - புரிந்த தியாகம் எத்தகையது - எடுத்த முயற்சிகள் - அளித்த உழைப்பு - இவையனைத்தும் கழகத்தைக் கற்கோட்டையாகவே என்றைக்கும் வைத்திருக்க முடியும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையை அல்லவா நாட்டுக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறது!

மார்ச் திங்களில் இலங்கைத் தீவில் தமிழ் இனப் படுகொலை மீண்டும் கடுமையானபோது - உடனடியாகக் கழகத்தின் செயற்குழு, பொதுக்குழுக்கள் கூடி எடுத்த முடிவுக்கேற்ப, ஒருமாத காலம் மாநில முழுதும் - மாவட்ட வாரியாக ஒவ்வொரு நாளும் மறியல் போராட்டங்கள் அறிவிக்கப்பட்டன. மத்திய அரசின் மெத்தனப் போக்கை எதிர்த்து!

அந்த முடிவை அறிவிக்கும் போராட்ட மாநாடு, சென்னைக் கடற்கரையில், காந்தி காமராசர் சிலையருகே, மார்ச் 24ஆம் நாள் மகத்தான முறையில் நடத்தப்பட்டபோது, தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலுமிருந்தும் உன்போன்ற உடன்பிறப்புகள் லட்சக்கணக்கில் எழுச்சியுடன் கூடிய காட்சி, இன்னும் என் கண்முன்னால் நிற்கிறது!

அந்த மாநாட்டைத் தொடர்ந்து ஏப்ரல் திங்கள் முழுதும், போராட்ட விளக்கக் கூட்டங்கள் ஒவ்வொரு மாவட்டத் தலைநகர்களிலும் - மற்றும் ஆயிரமாயிரம் ஊர்களிலும் நடைபெறுவதற்கு உன் போன்றோர் எடுத்துக் கொண்ட முயற்சிகள், அவை தந்த எழுச்சி, என்றென்றும் மறக்க முடியாதவை!

அறிவிக்கப்பட்டபடி ஏப்ரல் இறுதியில் தொடங்கி, மே திங்கள் முடிய ஒவ்வொரு மாவட்டத்திலும் - இலங்கைத் தமிழர் பாதுகாப்பு பிரச்சினையில் மத்திய அரசின் அலட்சியத்தைச் சுட்டிக்காட்டி நடத்தப்பட்ட மறியல் அறப்போராட்டத்தில், முப்பத்து ஐயாயிரத்து மேற்பட்டோர் சிறைகளில் வாட நேரிட்டது! காஞ்சி, திருச்சி, தர்மபுரி போன்ற இடங்களில் சில உடன்பிறப்புகள் தீக்குளித்தனர்! திருச்சிச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தஞ்சை மாவட்டக்கழகக் கண்மணிகளைத் தீயிட்டுப் பொசுக்கவும் சில தீயோர் முயன்று திட்டம் தீட்டிச் செயல்பட்டனர்!

அதற்கிடையே, கழகத்தின் சட்ட திட்டக் குழுவினர் இரண்டு மூன்று மாத காலம் அயராது பாடுபட்டு அளித்திட்ட திருத்தங்களைக் கழகம் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் ஜனநாயக முறைப்படி, ஜூலை 27, 28 தேதிகளில் பொதுக்குழு விவாதித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட இறுதி வடிவத்தின் அடிப்படையில், கழக உறுப்பினர் புதுப்பித்தல், சேர்த்தல் என்கின்ற பணியும் தொடங்கப்பட்டு விட்டது! அதிலும் நீயும், உன்னைப் போன்றோரும் கவனம் செலுத்திடத் தவறவில்லை!

அதுமட்டுமா? கழக அறக்கட்டளை உருவாக்கி வரும் அண்ணா அறிவாலய நிதிக்காக விடுத்த வேண்டுகோளையேற்று ஆங்காங்கு நிதி திரட்டுகிற வேலையையும் - நீயே நேரிடையாக பணவிடைத் தாள்கள் மூலம் நிதியனுப்புகிற தொண்டினையும் விறுவிறுப்பாகச் செயல்படுத்தி இதுவரையில், சுமார் ஐந்து மாதங்களில் பதினைந்து லட்ச ரூபாய் அளவுக்கு நிதி திரட்டித் தந்திருக்கிறாய்!

கழக அறக்கட்டளை மேற் கொண்டுள்ள மாபெரும் திட்டங்களுக்கும் - அதற்கென அமைக்க இருக்கும் கட்டிடங்களுக்கும் - இதுவரை திரண்டுள்ள நிதி போதாதுதான் என்றாலும் - இன்னும் நீ அந்த முயற்சியைத் தொடர

வேண்டும் என்றாலும் - எத்தனை விதமான ஓய்வில்லாப் பணிகளுக்கிடையே நீ இந்த நிதியினைத் திரட்டியிருக்கிறாய் என்பதும், உறுப்பினர்களைப் புதுப்பித்தல் - சேர்த்தல் என்கிற அரும்பணியை ஆற்றுகிறாய் என்பதும் என்னை எவ்வளவு வியப்பிலே ஆழ்த்துகின்றன தெரியுமா?

நமது போராட்டங்கள், டெசோ இயக்கத்தின் தோற்றம் - அந்த இயக்கம் எடுத்த முடிவுகள் இவற்றின் காரணமாக, மத்திய அரசு, சற்று அசைந்து கொடுக்கத் தொடங்கியது! அதுவும் முழுமையாக அல்ல! முழுமனதுடனும் அல்ல! அதன் விளைவாகத்தான் திம்பு எனக்கூறித் திசை திருப்பினார்கள்!

ஆறுதல் பிறக்குமென ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த போதுதான், திம்புவுக்கு ஏற்பாடு செய்தவர்கள் ஒரு புது வம்பையும் விலைகொடுத்து வாங்கினார்கள்!

அதுதான் தமிழ் ஈழப்போராளிகளின் பிரதிநிதிகள் மூவர், திடீரென மத்திய அரசினரால் நாடு கடத்தப்பட்டதும் - அதற்கு மாநில அரசு சம்மதம் அளித்து, அந்த நாடு கடத்தல் உத்தரவுக்கு அமைச்சர்களே நியாயம் கற்பித்துப் பேசியதுமாகும்!

உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பத்துமணி நேரத்தில், டெசோவின் அழைப்பையேற்றுச் சென்னையில், ஆகஸ்டு 25 இல் நடத்தப்பட்ட கண்டனப் பேரணியில், கடல் அலைதானோ அல்லது தமிழரின் தலைதானோ என ஐயுறும் வண்ணம் லட்சக்கணக்கில் அணிவகுத்த அந்தக் காட்சியை எதிரிகள்கூட குறைத்து மதிப்பிடவில்லையே!

அந்தப் பேரணியில் நாடு கடத்தல் உத்தரவைத் திரும்பப்பெறுக! என்று அறிவித்த கோரிக்கை அலட்சியப் படுத்தப்பட்டதால் - தமிழக முழுதும் ஆகஸ்டு 30ஆம் நாள் ரயில் நிறுத்தப் போராட்டம் என்று டெசோ போர்க்குரல் கொடுத்தது!

ஆண்டனிகள் ஆர்ப்பரித்தனர். ரயில்கள் ஓடுமென்று! அமைச்சர்கள் மிரட்டிப் பார்த்தனர்! ஆனால் தமிழனின் உணர்வு அறவே பட்டுப் போய்விடவில்லை என்பதை உலகிற்குப் பிரகடனப்படுத்துகிற வகையில், அன்றைக்கு எந்த ரயில்களும் தமிழ்நாட்டில் ஓட முடியவில்லை! டெசோ இயக்கத்தினர் ஏழாயிரம் பேர் சிறைப்பட்டனர்!

ஆண்டுதோறும் நாம் நடத்தி வருகிற முப்பெரும் விழா திட்டமிட்டபடி செப்டம்பர் 15ஆம் நாள் சென்னையில் நடக்குமா? என்ற சந்தேகம் எழுந்த நேரத்தில்தான் உள்ளாட்சித் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கலுக்கு செப்டம்பர் 19 ஆம் நாள் கடைசித் தேதி என அரசாங்கம் அதிகாரபூர்வமாக அறிவித்தது.

நீ என்ன செய்வாய்? டெசோ போராட்டத்தில் ஈடுபட்டு சிறையில் ஒரு பகுதியினர்! உள்ளாட்சித் தேர்தலுக்கான வேட்பாளர்களை ஆய்வு செய்து, செப்டம்பர் 14 ஆம் தேதிக்குள் சென்னை வந்து சேர்ந்திடுக என்றும், செப்டம்பர் 15 - முன்னர் அறிவித்தவாறு முப்பெரும் விழா பேரணியும், பொதுக் கூட்டமும் சென்னையில் நடைபெறுமென்றும் நான் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்த கடிதங்கள் ஒருபுறம் - அட்டாவதானம் கற்ற என் அன்பு உடன்பிறப்பே! நீ அயர்ந்து விடவில்லை!

மாவட்ட முழுதும் சுற்றினாய்! ஒன்றியங்கள் - சிற்றூர் பேரூர்கள் எங்கனும் செயல் பட்டாய்! உள்ளாட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை விரைந்து பெற்றாய்-

சென்னை முப்பெரும் விழாவுக்கும் புலிப்போத்தாய் - சிங்கக் குட்டியாய் - கழகத்தின் கண்மணியே; என் அன்புமணியே! இருபது லட்சம் பேர் அணி வகுத்தோம் - கடற்கரையில் கூடினோம் என்கிற அளவுக்குச் சென்னையில் புதிய வரலாற்றைப் படைத்தாய்! பட்டிதொட்டிகளில் இருந்தெல்லாம் வந்து குவிந்து!

வீரத்திற்கோர் வித்தே வருக! வித்தின் விளைவே வருக! இந்த வரவேற்புக் கவிதைக்கு, ஆம் - மறக்கமுடியாத இந்த வரிகளுக்கு - மனத்தில் நிலைத்துவிட்ட இந்த வரிகளுக்கு - கண்மணியே, நீ இலக்கணமானாய்! என் இதயம் இன்பத்தால், பூரித்திட இலட்சியத் திருவிழாவினை சென்னைத் திருநகரில் எடுத்திட்டாய்!

அடடா! அந்த மாலைநேரப் பேரணி - அதைத் தொடர்ந்து நடந்த அந்த உணர்ச்சி அலை மோதிய கூட்டம்!

இலங்கைத் தமிழ் இனத்தைப் பாதுகாக்க அக்டோபரில் தொடர்ந்து நடைபெறுமென அறிவிக்கப்பட்ட பேரணிகளில் எடுக்க வேண்டிய உறுதிமொழிகளுக்கான ஒத்திகையும் கடற்கரையின் வெண்மணற் பரப்பில் நடைபெற்றது!

இப்போது நினைத்தாலும் புல்லரிக்கிறது! உடன்பிறப்பே! என் உயிரே! உன் செலவில், உன் பொறுப்பில், உன் உழைப்பில் நீ உருவாக்கிய உயிரோவியம் சென்னை முப்பெரும் விழா!

அத்துடன் விட்டோமா உன்னை! அடுத்து பதினைந்து நாட்களுக்குள், கோவை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருச்சி, சேலம், வேலூர் என டெசோ இயக்கத்தின் சார்பில் பேரணிகள் - லட்சோபலட்சமெனத் தமிழ் இனமக்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டங்கள்! இலங்கைத் தமிழருக்கான உறுதிமொழி ஏற்புகள்!

இந்த நேரத்தில் கூட திருவொற்றியூரிலும், சேலத்திலும் இரண்டு உடன்பிறப்புகள் தீக்குளித்து மாண்டனர். இலங்கைத் தமிழருக்காக!

அக்டோபர் 13 வரையில், பேரணிகள் தமிழக முழுதும் நடைபெற்ற பிறகாவது உனக்கு ஓய்வு அளித்தோமா?

நவம்பர் முதல்வாரம் உள்ளாட்சித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நடந்தே தீருமென இந்த அரசு அறிவித்த அதிகாரபூர்வமான தகவல், நாணயத்தின் அடிப்படையில் இருக்குமென நம்பி, அக்டோபர் 15 முதல் போட்டியிடும் வேட்பாளர்களுடனும், பட்டியல்களுடனும், ஒவ்வொரு வேட்பாளருக்குரிய விண்ணப்பக் கட்டணம் தலைமைக்கு அறுபது சதவிகிதம் - மாவட்டத்திற்கு நாற்பது சதவிகிதம் என நிர்ணயித்து - அந்தப் பணத்துடனும் வா என அழைத்து, அதன்படி ஒவ்வொரு நாளும் சென்னை அன்பகத்துக்கு கழக உடன்பிறப்புகள், நூற்றுக்கணக்கில் வந்து கொண்டிருக்கிற நிலை! அதற்குள் இந்த நாணயஸ்தர்கள் தேர்தலை தள்ளிப்போட்டு விட்டார்கள்!

இருந்தாலும் - வேட்பாளர் விண்ணப்பக் கட்டணம் மூலமாக கழகத்துக்குக் கிடைத்துள்ள தொகை மூன்று லட்ச ரூபாய் என்பதில் எனக்கு ஒரு மகிழ்ச்சி! அதில் இரண்டு லட்சத்தை அண்ணா அறிவாலய நிதியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது!

தேர்தலை தள்ளி வைக்கும் அறிவிப்பு, சற்றுத் தாமதமாக வந்திருந்தால் இன்னும் கொஞ்சம் அதிகத்தொகை சேர்ந்திருக்கும்.

இருப்பினும், எப்போது உள்ளாட்சித் தேர்தல் நடத்தினாலும் தயாராக இருக்க - இப்போதே முழுமையான

ஆய்வைப் பல மாவட்டங்களில் நடத்தி முடித்துவிட்டோம்! 28 இல் அண்ணா மாவட்டமும், 30 இல் சேலம், தர்மபுரி மாவட்டங்களும் வேட்பாளர் ஆய்வுக்கு வரஇருக்கின்றன!

கடந்த பத்து பதினைந்து நாட்களுக்கு மேலாக, அன்பகத்தில் காலை பத்து மணி முதல் மாலை ஏழு மணி வரையில் உட்கார்ந்த இடத்தை விட்டு நகராமல் நானும், நமது பொதுச்செயலாளரும், தேர்தல் பணிச் செயலாளரின் துணையுடன் இந்த ஆய்வினை நடத்தி முடித்துள்ளோம்!

இத்தனை வகையான ஆக்கப்பணிகள், அறப் போராட்டங்கள் அனைத்துக்கும் சோர்வின்றி ஈடுகொடுக்கும் அந்த அற்புத வலிமை, கழக உடன்பிறப்பே! நமக்கு எப்படிக் கிடைத்தது!

நம்முடைய கழகத்தின் ஜனநாயகக் கோட்பாடு காக்கும் முறைதான் இத்தனை வலிமைக்கும், செயலாற்றும் திறனுக்கும் மூல காரணம் என்பதை மறவாதே!

அடிமட்டம் முதல் மேல் மட்டம் வரையில் கழகத்தின் ஜனநாயகம் என்றென்றும் செயல்படத்தான், குறித்த காலத்தில்-

உறுப்பினர் சேர்த்தல், புதுப்பித்தல்.

கிளைக்கழகம் அமைத்தல், நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தல்.

பேரூர்க் கழகத் தேர்தல் நடத்துதல்.

ஒன்றியக் கழகத் தேர்தல், நகரக் கழகத் தேர்தல் நடத்துதல்.

மாவட்டக் கழகத் தேர்தல் நடத்துதல், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

தலைமைக்கழக நிர்வாகிகள் மற்றும் தணிக்கைக் குழு, ஆட்சிமன்றக் குழு போன்றவற்றுக்குத் தேர்தல் நடத்துதல்.

போன்றவற்றை முறைப்படி, தொடர்ந்து செய்து வருகிறோம்!

நமக்கிருக்கும் எத்தனையோ பணிகளுக்கிடையே நமது பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் கழக உறுப்பினர் சேர்த்தல் - புதுப்பித்தல் குறித்து விடுத்துள்ள அறிக்கைகளுக்கேற்பவும், அமைப்புச் செயலாளர் தரும் விளக்கங்களுக்கு ஏற்பவும்,

உறுப்பினர் சேர்க்கும் பணியிலும் விரைந்து, விறுவிறுப்பாக ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கிறேன்!

1986ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே கழகத்தின் எல்லா அமைப்புகளுக்கும், தலைமை அமைப்புக்கும் தேர்தல்கள் நடந்து முடிந்தாக வேண்டுமென நானும், பொதுச்செயலாளரும் விரும்புகிறோம்!

எனவே, உன்போன்ற உடன்பிறப்புகள் உறுப்பினர் சேர்த்தல் - புதுப்பித்தல் எனும் பணியைத் தீவிர பணியாக மேற்கொள்ளுமாறு வேண்டுகிறேன்!

இத்துடன் நவம்பர் முதல் வாரத்தில் இன்னொரு பணியும் இருக்கிறது உனக்கு. நாளை எழுதுகிறேன் அது குறித்து!

அன்புடன்

மு.க.

28-10-1985

1362. நவம்பர் திங்கள்; அந்த ஏழு நாட்கள்!

உடன்பிறப்பே,

இந்தக் கடிதம் நேற்றைய கடிதத்தின் தொடர்ச்சி!

எத்தனை பணிகள் இந்த ஆறுமாத காலத்தில் உன்னால் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி,

பேரூர் தோறும் பாரூர்த்தோவெனப்
பெரும்படை நடத்தி;
ஊரூராய் உலவி வந்த உடன்பிறப்பே; வாழ்க!

என உன்னை வாழ்த்துவதற்குத் தயாராக நின்று கொண்டு மற்றோர் பணியை - இப்போது உன்முன் வைக்கிறேன்!

ஏற்கனவே தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்ட பணிதான் அது!

ஆம்! நவம்பர் முதல்தேதி தொடங்கி ஏழாம் நாள் முடிய தமிழக முழுதுமுள்ள சிற்றூர், பேரூர், அவற்றில் அடங்கியுள்ள பட்டிதொட்டிகள், நகரங்கள், அவற்றில் அடங்கியுள்ள வார்டுகள், மாநகரங்கள் அவற்றில் அடங்கியுள்ள டிவிஷன்கள் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும், நகராட்சி, ஊராட்சி, ஒன்றியத் தேர்தல்களை ஒன்பதாண்டு காலமாக நாள் குறிப்பிட்டு அறிவித்து விட்டு, அந்தத் துறையின் அமைச்சர்கள் மாறினார்களே தவிர, தேர்தல்கள் நடந்தபாடில்லை என்பதை விளக்குவதற்கும் - இந்த அரசின் நாணயமற்ற செயலையும், அரசியல் மோசடியையும், நிர்வாகத் துறையின் சகல அங்கங்களும் சீழ்பிடித்துப் புரையோடிப் போய்க்கிடக்கிற காரணத்தால், மூக்கைப் பிடித்துக் கொள்ள வேண்டிய அளவுக்கு அடிக்கிற ஊழல் நாற்றத்தையும் கண்டித்து முழக்கம் செய்வதற்கும் - நீயும் உன்போன்ற கடமையுணர்வு மிக்க உடன்பிறப்புகளும் தயாராக வேண்டும்!

இதுவரை அறிவித்த அமைச்சர்கள் எல்லாம் தேர்தலை நடத்தவில்லை. இதோ செப்டம்பர் 15 ஆம் தேதி அண்ணா பிறந்த நாளன்று உள்ளாட்சி மன்றத்துத் தலைவர்களை அவர்களுக்குரிய நாற்காலிகளில் அமர வைக்கிறேன் என்று புதிதாகப் பொறுப்பேற்ற அமைச்சர், வார்த்தைகளை பட்டாசு வெடிகளாகப் பொழிந்தார்!

பட்டாசு வெடித்தால் கூட துண்டுத் தாள்கள், கருகிய வெடி மருந்துத் தூள்கள் தெருவில் மிஞ்சிக் கிடக்கும்! ஆனால் அமைச்சரது வார்த்தைகளோ, போன இடம் தெரியாமல் போய் விட்டன! அவர் என்ன செய்வார் பாபம்! தேர்தல் தேதிகளை அறிவிக்கச் சொல்லி அவருக்கு ஆணையிடப்படும் போது - அது ஒத்திவைக்கப்படத்தான் அறிவிக்கப்படுகிறது என்று அவருக்கே தெரியாது!

செப்டம்பரில் ஏன் தேர்தல் நடத்தவில்லையென்று கேட்ட போது, கூட்டுறவு அச்சகங்களில் வாக்காளர் பட்டியலை அச்சடிக்கக் கொடுத்தோம். அவை உரிய நேரத்தில் அச்சியற்றித் தரவில்லை. அதனால் அக்டோபருக்கு ஒத்தி வைக்கிறோம் என்று அமைச்சர் ஒரு விளக்கத்தைச் சொன்னார்!

ஏன்? பொதுத்தேர்தலில் கூட தனியார் அச்சகங்களில் வாக்காளர் பட்டியல் அச்சடிக்கப்பட்டனவே? இப்போது மட்டும் கூட்டுறவு அச்சகங்களில் தருவானேன்? என்று பல முனைகளிலுமிருந்து கேள்வி எழுந்தது!

உடனே அமைச்சர், கூட்டுறவு அச்சகங்களில் மட்டுமே வாக்காளர் பட்டியல் அச்சிடுவதென்று, அரசு ஒரு கொள்கை வகுத்துக் கொண்டிருக்கிறது! என்று தனியுடைமைத் தத்துவ நாமாவளியைப் பாடினார்!

பஸ்களை தேசிய உடைமையாக்கும் சட்டம் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்டது செல்லும் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கிய பிறகும் - அந்தத் தீர்ப்பைக் காட்டி தேசிய உடைமைத் திட்டத்தை நடைமுறைப் படுத்தாமல், பஸ் முதலாளிகளைப் பயமுறுத்திப் பணம் பறித்து வரும் இந்த அரசுக்குத் தனியார் துறை என்றால் அவ்வளவு வெறுப்பாம்! அதனால் வாக்காளர் பட்டியல் அச்சியற்றும் பொறுப்பை, கூட்டுறவு அச்சகங்களுக்குக் கொடுத்ததாம்!

சரி, அதாவது உண்மையா என்றால் அதுவும் இல்லை!

உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் ஏராளமான தனியார் அச்சகங்களுக்குத் தரப்பட்டு, அவையும் அவற்றை உரிய நேரத்தில் தந்துவிட்டன என்ற உண்மை, ஆதாரபூர்வமாக நம்முடைய கழகத்தினராலும், மற்ற கட்சியினராலும் பல இடங்களில் வெளிப்படுத்தப்பட்டன!

நிருபர்கள் அதுபற்றிக் கேள்விக் கணைகளைத் தொடுத்தபோது அமைச்சர் அவர்கள், அவரது தலைவரைப் பின்பற்றி அவற்றைச் சமாளித்தாரே தவிர, அவரிடமிருந்து நேர்மையான பதில் கிடைக்கவில்லை!

மீண்டும் மற்றொரு தேதி அறிவிக்கப்பட்டு, செப்டம்பர் 19ஆம் நாள் வேட்புமனு தாக்கல் செய்யக் கடைசி நாள்! இதில் சத்தியமாக மாறுதலே இருக்காது என்று அமைச்சர் முழக்கமிட்டார்!

அன்னையின் மீது ஆணை - எனது ஆட்சியில் மதுக் கடைகளைத் திறக்கமாட்டேன் என்று, 1979 இல் பொதுமக்கள் மத்தியில் செய்த சத்தியத்தையே காலில் போட்டு மிதித்துக் கொண்டு - சாராய சாம்ராஜ்யத்தில் ஆண்டு ஒன்றுக்கு இருபத்தி ஐந்து கோடி ரூபாய் லஞ்சப்பணம் பெறும் முதலமைச்சரின் தலைமையிலே பணியாற்றக் கூடிய ஒரு அமைச்சர், தானளித்த உறுதிமொழிக்கு அவ்வளவு முக்கியத்துவம் தர முடியுமா என்ன?

அதனால் அறிவிக்கப்பட்ட அந்தத் தேதியும் மாற்றப் பட்டது!

ஏன்? ஏன்? என்ற கேள்வி எழுந்த போது, இந்திரா காங்கிரசின் தமிழ் நாட்டுத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, தேதி ஒத்தி வைக்கப்படுகிறது என்று அமைச்சர் பதில் அளித்தார் செய்தியாளர்களிடம்!

ஆகா! இது அப்பட்டமான பொய்! அடாது! அநியாயம்! அக்ரமம்! அமைச்சர் சொல்வது கடைந்தெடுத்த புளுகு! வன்மையாகக் கண்டிக்கிறோம்! காந்தியடிகள் விரும்பிய கிராம ராஜ்யத்தின் ஜனநாயகத்தை வளர்க்கும் உள்ளாட்சித் தேர்தலை, நாங்கள் ஒத்திவைக்கச் சொன்னதாக அமைச்சர் சொல்வதை அழுத்தம் திருத்தமாக ஆணித்தரமாக எதிர்க்கிறேன்!

என்று இந்திரா காங்கிரஸ் தலைவர் சீறிக் கிளம்பவில்லை! அப்படிக் கிளம்ப இயலாது! அந்தக் கட்சியில் உள்ள தளபதிகள்

சிலர் தடந்தோள்தட்டி எக்காளக்குரல் எழுப்பினார்களே தவிர, தலைவரோ - மிகவும் பொறுமையுடன் ஒத்திவைக்குமாறு நாங்கள் கேட்கவில்லை என்று மிக மென்மையாக விடையளித்தார்!

இதற்கு என்ன சொல்கிறீர் அமைச்சரே! இந்திரா காங்கிரஸ் தலைவர் ஒத்தி வைக்கச் சொன்னதாக நீங்கள் கூறினீர்கள்! அவரோ இல்லை! அப்படிச் சொல்லவில்லை! என்கிறாரே?

இவ்வாறு நிருபர்கள் உள்ளாட்சித்துறை அமைச்சரை மடக்கியபோது - இதுபோன்ற பல கிடுக்கிப்பிடிகளுக்கெல்லாம் கழக ஆட்சிக் காலத்தில் ஈடுகொடுத்து வாகை சூடிய வல்லமையாளரான அந்த அமைச்சர், அசடு வழியும் நிலையில் பதில் சொன்னார்-

நான் சொன்னதும் அப்படியே இருக்கிறது! இந்திரா காங்கிரஸ் தலைவர் சொன்னதும் அப்படியே இருக்கிறது!

இதுதான் அமைச்சர் அளித்த பதில்! ஆமாம்! அவர்கள்தான் ஒத்திவைக்கச் சொன்னார்கள்! என்று ஓங்கியடித்துப் பேச முடியவில்லை அமைச்சரால்!

முடியாதவரல்ல! ஓங்கியடித்துப் பதில் கூறியிருந்தால் விளைவுகள் என்ன ஆகும் என்பதை உணரக்கூடியவர் அவர்!

நாடுகேட்டது, நாமும் கேட்டோம் - தேர்தலை நடத்துவதும், ஒத்திவைப்பதும் இந்த இரண்டுகட்சிகள் மட்டுமே பேசி முடிவு செய்கிற விஷயம் என்றால், அதற்கு இத்தனை தடவை சர்வகட்சிக்கூட்டங்களை நடத்தியிருக்கத் தேவையில்லையே என்று!

என்செய்வது, மந்திரியாரை மனச்சாட்சி உறுத்துகிறது! இருப்பினும், மாண்புமிகு என்ற அடைமொழிக்கு ஆபத்து வந்துவிடாமல் பாதுகாக்க மனச்சாட்சியை பார்த்தால் முடியுமா?

இதோ இறுதியும், உறுதியுமான தேதியை அறிவித்து விட்டோம்! நவம்பர் முதல் வாரம் - வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யத் தயாராவீர்!

என்றது எம்.ஜி.ஆர். அரசு! உள்ளாட்சித் துறை அமைச்சரும் எம்.ஜி.ஆர். அவர்களின் பேச்சை நம்பி, முற்றிலும் உண்மை! இந்தத் தேதியில் தேர்தல் நடந்தே தீரும்! என முரசு கொட்டினார். தமிழகத்தின் பல பகுதிகளில்!

ஒரு அ.தி.மு.க. நண்பர் மட்டும் என்னிடம் சொன்னார். தேர்தல் ஒன்றும் வராது என்று! நான் அவர் பேச்சை நம்பவில்லை! நாம் தயாராகாமல் தடுத்திடப் பொய் சொல்லுகிறார் என எண்ணினேன்! அமைச்சரின் அறிவிப்பில் வாய்மை இருப்பதாகவே கருதினேன்!

அது அரசாங்க முத்திரையில் மட்டும்தான் எழுத்துகளாக இருக்கிறது என்பது, மீண்டும் ஒருமுறை தெளிவாக்கப்பட்டு விட்டது!

நகராட்சி உறுப்பினர்களுக்கும் கட்சிச் சின்னம் - ஊராட்சித் தலைவர்களுக்கு கட்சிச் சின்னம் வழங்கப்போவதால், இப்போது இந்தத் தேதியையும் ஒத்திவைத்து விட்டார்களாம்!

ஊராட்சிமன்ற உறுப்பினர்களுக்குத் தேர்தலில் கட்சிச் சின்னம் உண்டா என்பதை அமைச்சர், தனது பேட்டியில் பிரஸ்தாபிக்கவில்லை!

அடுத்து ஒரு முறை தேதியை அறிவித்து, அதையும் ஒத்திவைக்க அப்போது, ஊராட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் கட்சிச் சின்னம் என்ற காரணம் தேவைப்படுமல்லவா? அதனால் இப்போது, அது குறித்துச் சொல்லப்படவில்லை!

உடன்பிறப்பே, கிராமங்களில் - நகரங்களில் - மாநகரங்களில் எந்தப் பகுதியும் விட்டுப் போகாமல் எல்லாப் பகுதிகளிலும் நவம்பர் முதல் வாரம் - ஆம்! அந்த ஏழு நாட்களிலும்,

இந்த அரசாங்கம் நடத்துகிற இந்த அரசியல் மோசடியை அம்பலப்படுத்த,

ஊர்வலங்கள் நடத்த வேண்டும்!
கூட்டங்கள் நடத்தி விளக்க வேண்டும்!

வாய்ப்புள்ள இடங்களில் அரசு அல்லது உள்ளாட்சித் துறை அலுவலகங்களின் முன்னால், அமைதியாக ஆர்ப்பாட்டங்கள் நடத்திட வேண்டும்!

தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள முழக்கங்களை அச்சியற்றி அல்லது சுவர்களில் எழுதி, சுவருக்குரியோர் அனுமதி பெற்று எல்லாப் பகுதிகளிலும் பரப்பிட வேண்டும்!

கிராமங்களில் ஒவ்வொரு தனிமனிதனின் காதிலும், இந்த அரசின் ஏமாற்று வித்தைகள் - எத்து வேலைகள் - எடுத்தியம்பப்படுதல் வேண்டும்!

இன்றே தொடங்கட்டும் அதற்கான ஆயத்தங்கள்!

ஊழல் அரசே! உள்ளாட்சித் தேர்தலை நடத்து!

ஊரை அடித்து உலையில் போடாதே! உள்ளாட்சித் தேர்தலை ஒத்தி வைக்காதே!

ஊர் மக்கள் தேவைகளைப் புறக்கணிப்பதா? உள்ளாட்சித் தேர்தலை, தள்ளி வைப்பதா?

உள்ளாட்சி மன்றங்களா? அமைச்சர்கள், உண்டு கொழுக்கும் உல்லாச மடங்களா?

இந்த வாசகங்கள் மட்டுமல்ல. ஆங்காங்குள்ள நிலைமைக் கேற்ப - முழக்கங்கள் பரவட்டும்!

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவை, கடுகளவும் சிதறாமல் கழகக் கண்மணியே!

கண்டன வாரம் - நவம்பர் திங்கள் முதல்வாரம் - அந்த ஏழு நாட்கள் - பட்டிதொட்டி முதல் பட்டினங்கள் வரையில் உன் பதாகைகள், இந்த அரசின் மக்கள் விரோதப் போக்கை - நிர்வாகச் சீர்கேட்டை - லஞ்ச லாவண்ய ஊழலைப் பறை சாற்றட்டும்!

அன்புடன்

மு.க.

29-10-1985

1363. அரும்பணியாற்றிட ஆயத்தமாகுக!

உடன்பிறப்பே,

பிப்ரவரி மாதத்திலும் உள்ளாட்சித் தேர்தலை எம்.ஜி.ஆர். அரசு நடத்துமென்று நம்மால் நம்ப முடியவில்லை.

ஜனவரியில் வழக்கமாக வாக்காளர் பட்டியல் பரிசீலிக்கப்பட்டு, பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட வேண்டியவர்கள் சேர்க்கப்பட்டு, நீக்கப்பட வேண்டியவர்கள் நீக்கப்பட்டு - அதற்குப் போதுமான அவகாசம் தரப்பட்டு புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டுமென்பது கட்டாயம் என்பதால் எப்படி பிப்ரவரியில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற முடியும்?

உட்கட்சிச்சண்டை, எதிர்க்கட்சிகள் வசம் பெரும்பாலான உள்ளாட்சி மன்றங்கள் போய் விடுமோ என்ற அச்சம், இவைகளின் காரணமாகத்தான் எம்.ஜி.ஆர். ஆட்சி, உள்ளாட்சி மன்றத் தேர்தலை அறிவிப்பதும், பிறகு தள்ளிப் போடுவதுமான செயலில் ஈடுபட்டு வருகிறது!

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாத கிராமப்பகுதிகள், நகர்ப்புற வார்டுகளில் எல்லாவிதமான அடிப்படைத் தேவைகளும் கவனிப்பாரற்ற நிலைமையில் ஸ்தம்பித்துப் போய் கிடக்கின்றன.

ஊராட்சிகள், ஒன்றியங்கள், நகராட்சிகள் அனைத்திலும் ஊழல்கள் மலிந்து விட்டன. திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகிற பணம் அவற்றுக்காக செலவழிக்கப்படாமல், அதே சமயத்தில் அவைகள் அந்த திட்டங்களுக்காகச் செலவழிக்கப்பட்டதாகப் போலி ரிக்கார்டுகள் தயாரிக்கப்படுகின்றன. தெரு விளக்குகள், சாலை பராமரிப்புகள், வடிகால் வசதிகள், துப்புரவுப் பணிகள் அனைத்தும் காகிதங்களில் காணக் கிடைக்குமே தவிர, அவைகளுக்குப் பொறுப்பேற்று பதில் அளிக்க வேண்டிய

கட்டாயம், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளுக்கு இருப்பது போல் - அதிகாரிகளுக்கு இருப்பதில்லை!

இந்த வாசகங்கள் அனைத்தும், இந்திரா காங்கிரஸ் கட்சியின் கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் நண்பர் கே. இராமமூர்த்தி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் காணப்படுபவையாகும்.

எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு, நாம், வேண்டுமென்றே உள்ளாட்சி மன்றங்களின் ஊழல்கள் பற்றிப் பேசுகிறோம் என்று சமாளித்து மறைக்க முயன்றுவரும் ஆளுங்கட்சியினருக்கு - அவர்களது தோழமைக் கட்சியின் சார்பாக வெளியிடப்பட்டுள்ள கருத்துகளாவது கவனத்துக்குரியதாகுமா என்றால் நிச்சயமாக ஆகாது!

காரணம், சிற்றூர் தொடங்கி, ஒன்றியம், நகரம் என்று பல்வேறு உள்ளாட்சி மன்றங்களில் நடத்தப்படுகிற பயங்கர ஊழல்களில் ஏழெட்டு ஆண்டுக்காலமாகவே அமைச்சர்களுக்குப் பங்கு இருந்து வருகிறது! ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.க்களுக்கும், ஆளுங்கட்சிப் பிரமுகர்களுக்கும் பங்கு இருந்து வருகிறது!

அதனால் ஊழல்கள், மோசடிகள் குறித்து என்னதான் குரல்கள் எழுப்பப்பட்டாலும், எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திட இந்த அரசினர் முன்வரமாட்டார்கள்!

பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொன்றிலும் இவ்வளவு - நகராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றிலும் இவ்வளவு என்று கப்பம் நிர்ணயிக்கப்பட்டு, அவற்றினைத் தவறாமல் கொண்டு வந்து கோட்டையிலிருப்போர் வீடுகளில் மாதாமாதம் கட்டிவிட்டுப் போகும் கடமை ?யை அதிகாரிகள் செய்யத் தவறினால், அவர்களுக்குத் தண்டனை என்ற ரீதியில் அல்லவா ஏழெட்டு ஆண்டுகளாக அமைச்சர்கள் ராஜரீகம் நடத்தியிருக்கிறார்கள்!

மத்திய அரசோ, மாநில அரசோ - கிராமப்புற வளர்ச்சி, நகர்ப்புற வளர்ச்சி என்று ஒதுக்குகிறத் திட்டத் தொகை அனைத்தும் - தேன் எடுத்தவன் புறங்கையை நக்குதல் என்பதுபோல் கூட இல்லாமல், முதலுக்கே மோசமாக தேனடையையே ஏப்பம் விட்டுவிடுவதுபோல - ஏட்டுத்திட்டங்களாக ஆகி, ஊழல் பெருச்சாளிகளின் வீட்டில் கறுப்புப்பணமாகக் குவிந்து போனதுதான் இந்த ஆட்சியில் மக்கள் கண்ட பலன்!

யார் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டு போகட்டும். எங்களுக்கு அதைப்பற்றி கவலையில்லை - நாங்கள் அடிக்கிற கொள்ளையை சத்துணவு ஆயாக்கள் நியமனத்திலிருந்து, சாராயத் தொழிற்சாலை வரையில் - இடையிடையே கப்பல் வாங்கிற வகையுட்பட, ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் அடித்துக்கொண்டு தானிருப்போம்!

என்று மார்தட்டிக் கூறியவாறு மந்திரிமார்கள் பவனி வந்து கொண்டிருக்கிறார்கள்!

உள்ளாட்சித் துறையில் மட்டுமா? கூட்டுறவுத் துறையிலும் தேர்தல் இல்லை! நடக்கும் நடக்குமென்று எத்தனையோ முறை அறிவித்து விட்டு, அந்த அறிவிப்பையும் கிடப்பில் போட்டு விட்டார்கள்!

கூட்டுறவு இயக்கத்துக்கு, அதிகாரிகள் அல்லாதவர் அடங்கிய ஜனநாயகக் குழுக்கள் இல்லாமையால், தமிழ் நாட்டில் கூட்டுறவு இயக்கம் இப்போது வளர்ச்சி குன்றித் துவண்டு கிடக்கிறது.

இவ்வாறு தினமணி இதழில் வெளிவந்துள்ள ஒரு கட்டுரைப் பகுதியில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

கூட்டுறவு - உள்ளாட்சி முதல் கோட்டை கொத்தளம் வரையில் ஊடுருவியுள்ள ஊழல்களை எடுத்துக்காட்டி, ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்காத இந்த எதேச்சாதிகார அரசின் ஏமாற்று வேலைகளை சிற்றூர் முதல் மாநகரங்கள் வரையில், விரித்துரைத்துக் கண்டனக் குரல் எழுப்பத்தான்,

நவம்பர் முதல்நாள் தொடங்கி ஏழாம்நாள் முடிய, கழகம், உனக்கு அரும்பணியொன்றை வகுத்தளிக்கிறது!

அப்பணியை திறம்பட ஆற்றிட அன்பு உடன்பிறப்பே! ஆங்காங்கு ஆயத்தமாகுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்

மு.க.

30-10-1985

1364. அன்னை இந்திராவின் நினைவுநாள் இன்று!

உடன்பிறப்பே,

அக்டோபர் 31ஆம் நாள், கடந்த ஆண்டு காலை நேரத்தில், இந்திய தீபகற்பத்தையே கண்ணீரில் மிதக்க விடக் கூடிய அந்தக் கொடிய செய்தி டெல்லியிலிருந்து வெளிவந்தது. இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் மீது துப்பாக்கிக் குண்டுகளை மழையெனப் பொழிந்து, கணநேரத்தில் அவர்களை மீளாத் துயில் கொள்ளச் செய்து விட்டனர்!

அரசியலில் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருப்பினும், ஜனநாயகம் போற்றப்படுகிற ஒரு நாட்டில் படுகொலைகள், பிரச்சினைகளைத் தீர்க்குமென்று கருதிச் செயல்படுவது குரூரமானது! இரக்கமற்றது! மனிதாபிமானத்திற்குக் கிஞ்சிற்றும் தொடர்பில்லாதது! வன்மையாகக் கண்டிக்கத் தக்கது!

பஞ்சாப் பிரச்சினை தொடங்கிய விதம் - அதனை அணுகியமுறை - அதனால் ஏற்பட்ட விளைவுகள் - அவை குறித்துத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எடுத்துரைக்கப்பட்ட கருத்துகள் அப்படியே இருக்கின்றன!

ஆனால் அதே நேரத்தில், துணிவு மிகுந்தவரும் - ஓய்வறியாது உழைப்பவரும் - வேதனைகளைச் சோதனைகளைத் தாங்கிக் கொள்ளக்கூடிய உறுதிமிக்கவருமான ஒரு பிரதமரை, இந்தியா இழந்து விட்டது என்பதில் இருவிதமான அபிப்பிராயங்களுக்கு இடமே இல்லை!

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக நீண்ட காலம் பொறுப்பேற்றிருந்த அவரது தந்தை பண்டித நேரு அவர்களைப் போலவே, இந்திரா காந்தி அம்மையாரும்

நீண்டகாலம் பிரதமராக விளங்கியதோடல்லாமல் - தந்தையைப் போலவே, பொதுமக்களுக்கும் தனக்கும் இடைவெளி அதிகமில்லாமல் அவர்களோடு நெருங்கியிருந்து அயராப் பணியாற்றியவர்!

முப்பத்தி எட்டு ஆண்டுக்கால சுதந்திர இந்தியா பெற வேண்டிய அளவுக்கு வளம் பெறவில்லை என்பதும், அடைந்திருக்க வேண்டிய முன்னேற்றத்தை அடையவில்லை என்பதும், வறுமைக் கோட்டுக்கும் கீழே தள்ளப்படுகிற மக்களின் தொகை பெருகிய வண்ணம் இருக்கிறது என்பதும், எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கிச் செல்லும் வழிவகுக்கக் கூடிய தலைகீழ்ப் பொருளாதார மாற்றங்களைச் செய்திட தயக்கம் காட்டப்படுவதும், சாதிகளால், மதப்பூசல்களால், மூடப் பழக்கவழக்கங்களால், அவற்றை ஊக்கப்படுத்தினால்தான் தங்கள் செல்வாக்கு நிலைக்கும் என்று திட்டம் தீட்டிச் செயல்படுபவர்களால், தீமைகள் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருப்பதும் - நாட்டின் மீதும், சமுதாயத்தின் மீதும் அக்கறை கொண்டவர்கள், நாளும் எண்ணிக் கவலையுறும் நிலைமையாகும்!

இந்திய பிரதமர்களாக இருந்தோர், இருப்போர் - எல்லோருமே அந்தக் கவலைகளில் நம்மோடு சேர்ந்து பங்கு கொண்டவர்களாகத் திகழ்ந்தனர் - அல்லது திகழ்கின்றனர் என்பதல்லாமல், அந்தக் கவலையை மாற்றி அமைக்கும் சக்தி படைத்த அளவில் கொள்கைகளை வகுத்திடவில்லை!

இத்தனை குறைபாடுகளுக்குமிடையே, அவற்றைத் தவிர்த்துத் தாங்கி நிற்கக் கூடிய மாற்று ஒன்று அகில இந்திய அளவில் உருவாகாத காரணத்தாலும் - உருவாகியது போலத் தோன்றியதும் உருக்குலைந்து போனதாலும் - இந்திரா காந்தி ஒருவரையே எதிர்காலத்தின் நம்பிக்கைப் பேரொளியாக நாடு எண்ணிக் கொண்டிருந்தது! அந்த நம்பிக்கை குலைந்து போகக் கூடிய கொடிய செய்தியைத்தான் கடந்த ஆண்டு அக்டோபர் 31ஆம் நாள் இந்திய மக்கள் கேட்க நேர்ந்தது!

இன்றைய இளம் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், சுறுசுறுப்பாகச் செயல்பட வேண்டுமென்று சுழன்று, சுழன்று பணியாற்றுகிறார் என்பது பாராட்டுக்குரிய தென்றாலும் - பழைய

பதார்த்தம், புதிய ஆள் பரிமாறுகிறார் என்கிற நிலைமைதான் இருக்கிறது நாட்டில்!

எழுபது கோடி மக்கள் - பல்வேறு தேசிய இனங்கள் - அவற்றுக்கெல்லாம் தனி மொழி, தனிக் கலாச்சாரம் - மொழி வாரியாகப் பிரிந்து தீர வேண்டிய அவசியத்தின் காரணமாகப் பிரிக்கப்பட்ட மாநிலங்கள் - அனைத்தையும் ஒன்றாகப் போட்டு அவியலாக - முக்கியமான அதிகாரங்கள் எல்லாவற்றையும் மத்திய அரசே குவித்துக் கொண்டிருக்கிற - மேலும் குவிக்கத் திட்டமிடுகிற ஒரு போலியான கூட்டாட்சித் தத்துவத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு, மாநிலங்களைக் கொத்தடிமைகளாக நடத்தும் ஒற்றை ஆட்சி முறை நீடிக்கிற வரையில், புதிய இந்தியா - நவீன இந்தியா - இருபத்தியோராம் நூற்றாண்டு இந்தியா என்றெல்லாம் எழுதுவதும், பேசுவதும் ஏட்டுச் சுரைக்காய் ஆகிவிடுமேயல்லாமல், ஆன பயன் ஏதும் விளையுமென நம்ப இயலவில்லை!

மாநிலங்கள் சுயாட்சி பெற்று - மத்தியில் உண்மையான கூட்டாட்சி அமைந்திட வேண்டுமென்று, இன்றையப் பிரதமரின் பாட்டனார் நேரு அவர்கள் ஒரு காலத்திலே முழங்கியதுண்டு!

ஆனால் அதிகாரப் பொறுப்பில் அமர்ந்த பிறகு, மென்மேலும் மாநிலத்துக்குரிய உரிமைகளையும் மத்திய அரசுக்குரியதாக்கிக் கொள்ள முனைந்தனரேயன்றி மாநில சுயாட்சி என்ற கோரிக்கைக்கு விரோதிகளாகவே விளங்கி வந்திருக்கின்றனர்!

அரசியல் துறையில் இப்படியொரு நல்ல மாற்றத்தை ஏற்காதது போலவே, பொருளாதாரத்துறையிலும் விரல்விட்டு எண்ணத்தக்க சில குபேரபுரியினர் இன்னமும் கொழுத்துச் செழிக்கத் தக்கவண்ணம் கொள்கை வகுத்துக் கொண்டு, முற்போக்கான குறிக்கோளுக்கு எதிராகவும் மத்தியில் உள்ளோர் செயல்பட்டு வருகின்றனர் - அவ்வழியில் பல மாநில அரசுகளும் நடைபோடத் தவறவில்லை!

சமுதாயத் துறையிலும், அடக்கப்பட்டோர், ஒடுக்கப் பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஒரு அறிவார்ந்த சமுதாயமாகவும், உரிமை பெற்ற சமுதாயமாகவும் எழுந்து நிற்க முடியாமல் இருக்கின்ற தடைகளைத் துணிவுடன் உடைத்தெறியும் புரட்சிச் சிந்தனையும் இல்லை! அதனால், அத்தகைய செயல்பாடுகளுக்கான திட்டங்களும் தீட்டப் படவில்லை!

மாறாக, அந்த மக்களை ஆழப்படுகுழியில் தள்ள முனையும் ஆதிக்கக்காரர்களின் பக்கமே அரசு நிற்கிறது!

இவற்றையெல்லாம் எடுத்துக்காட்டி, இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடம் நம்முடைய கழகம் தோழமையாக இருந்தபோதும் சரி, தோழமையில்லாமல் இருந்தபோதும் சரி - நமது தனித்தன்மையை, நமது கொள்கை கோட்பாடுகளை வலியுறுத்தியிருக்கிறோம் என்பதுதான் வரலாறு!

அதனால்தான் நட்பாக இருந்தாலும், பகையாக இருந்தாலும் இருநிலையிலும் உறுதியாக இருப்பவர்கள் என்று அம்மையார் அவர்களே, சென்னைக் கடற்கரையில் கழகம் நடத்திய அண்ணா பிறந்தநாள் விழாவில் நம்மைப் புகழ்ந்து பாராட்டிப் பேசினார்கள்!

சுயமரியாதையை மூட்டை கட்டிவைத்துவிட்டுக் கழகம் இந்திரா அம்மையார் அவர்களுடன் உடன்பாடு கொண்டதில்லை!

அவர்களும் அவ்வாறு சுயமரியாதையை விட்டு விட்டு வருமாறு நம்மை வலியுறுத்தியதில்லை!

திருப்பத்தூர் இடைத் தேர்தல் ஒன்றே, அதற்குச் சான்று பகரும்!

கழகத்துடன் கடுமையான மோதல் - கருத்து மாறுபாடு - கழகத்துக் கெதிராக அதிதீவிர அடக்குமுறைகள் - இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட தனி மதிப்பு ஒன்று, அம்மையார் அவர்களுக்கு நம்முடைய கழகத்தின் மீது இருந்ததுண்டு!

ஆட்சிகள் கலைப்பு - எமர்ஜன்சி - அஸ்ஸாம் - பஞ்சாப் பிரச்சினை - இவைகளைப் பற்றிய மாறுபாடான கருத்துகளுக்கிடையேகூட, அம்மையார் அவர்களிடத்திலே அரசியல் பண்பாட்டின் காரணமாக நமக்கும் ஒரு தனி மதிப்பும், மரியாதையும் உண்டு!

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அம்மையார் கொண்டிருந்த அக்கறை - காட்டிய ஆர்வம் - போதுமானதாக இல்லையென்ற குறை நமக்கிருந்தாலும் கூட,

இன்றைக்குள்ள பிரதமர் அவர்களின் அணுகுமுறையைக் காணும் பொழுது,

இந்திரா அம்மையாரின் மறைவு, இலங்கைத் தமிழர்களுக்கும் ஒரு பெரும் இழப்பாகவே ஆகிவிட்டது என்று கூறாமல் இருக்க முடியாது!

இந்த முதலாமாண்டு நினைவு நாளில் இவற்றையெல்லாம் நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டு, கடந்த காலக் குறைகளைப் போக்கி - நிகழ்காலச் செயல் முறைகளிலும் சொல்லப்படுகிற திருத்தங்களையேற்று - எதிர்காலத்தை ஒளிமயமானதாக ஆக்கிட, நாடு, தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடுவதோடு,

அயராது உழைத்தவரும், அச்சம் தவிர்த்தவரும், உறுதிமிகக் கொண்டவருமான அன்னை இந்திரா அவர்களை இழந்துவிட்ட இந்த நாள் துயரத்தில் நம்மையும் இணைத்துக் கொள்கிறோம்.

அன்புடன்

மு.க.

31-10-1985

1365. இன்றே தொடங்கிடுக! இனிதே நிறைவேற்றிடுக!

உடன்பிறப்பே,

முதலமைச்சரோடு கலந்துபேசி, இறுதியாக இந்தத் தேர்தல் அட்டவணையை அறிவிப்பதால், இனி எக்காரணம் கொண்டும் உள்ளாட்சி அமைப்புத் தேர்தல் வாக்குப்பதிவு நிச்சயமாகத் தள்ளிப் போடப்படமாட்டாது.

என்று உள்ளாட்சித்துறை அமைச்சர் அறிவித்துள்ள தாகவும், அதன்படி அடுத்த ஆண்டு, பிப்ரவரி திங்கள் 23ஆம் நாள், உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்,

தினமணி 2.11.85 இதழ் முதல்பக்கத்தில் வெளியிட்டுள்ள செய்திக்கு முகப்புரை தந்துள்ளது!

அந்தச் செய்தியின் முடிவில் அடைப்புக் கோட்டுக்குள், தினமணி இதழ் - பின்வருமாறு குறிப்பொன்றையும் எழுதியிருக்கிறது.

அ.தி.மு.க. ஆட்சி அமைந்தது முதல் இதுவரையில், பல்வேறு காரணங்களைத் தெரிவித்து உள்ளாட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நான்கு அமைச்சர்களும், இவ்வாறு தேதிகளை அறிவித்து பின்னர் ஒத்திவைத்துள்ளனர். இப்படித் தேர்தல்கள் ஒத்திப் போடப்படுவதை சட்டப் பேரவையில் எதிர்க்கட்சியினர் வன்மையாகக் கண்டித்து எதிர்த்தபோது, முதன் முதலாக உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தவர் அடாது மழை பெய்தாலும் விடாது தேர்தல் நடந்தே தீரும்! என்று கூறியிருந்தார். ஆனால் மழை, புயல் என்று பல்வேறு காரணங்கள் காட்டி அந்தத் தேர்தல்கள் பலமுறை தள்ளிப் போடப்பட்டன. கடைசியாக

நடந்த சட்டப் பேரவைக் கூட்டத்தில் புதிய உள்ளாட்சித்துறை அமைச்சர், எக் காரணம் கொண்டும் இனித் தேர்தல்கள் தள்ளிப் போடப்பட மாட்டாது என்று உறுதி கூறியதோடு, தனி அதிகாரிகள் பதவி நீட்டிப்புக்கு அனுமதி கோரி இனி மசோதா வராது என்று திட்டவட்டமாகத் தெரிவித்தும், அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் தேதி புதிய உள்ளாட்சி அமைப்புகள் எல்லாம் அமைந்து விடும்! என்றும் அறுதியிட்டுக் கூறியது நினைவிருக்கலாம்.

இவ்வாறு இந்த அரசின் உறுதிமொழிகள் படும்பாட்டை மேற்கண்ட கருத்தமைந்த வாசகங்களில் தினமணி கோடிட்டுக் காட்டியிருக்கிறது.

செப்டம்பர் 15 என அறிவிக்கப்பட்ட பிறகு, எத்தனை தேதிகள் அறிவிக்கப்பட்டு அவைகள் மாற்றப்பட்டன, என்பதெல்லாம் மீண்டும் நினைவூட்டத் தேவையில்லை!

இப்போது பிப்ரவரி 23ஆம் நாள் என அறிவிக்கப் பட்டுள்ளது. இது நிச்சயமாகத் தள்ளிப்போடப்படமாட்டாது என அறிவிக்கிறார் அமைச்சர்!

ஏன் தெரியுமா? முதலமைச்சரோடு கலந்து பேசி இறுதியாக, இந்தத் தேர்தல் அட்டவணையை அறிவிக்கிறாராம்!

அப்படியானால், நமக்கு எழும் சந்தேகம் ஒன்று உண்டு!

இதுவரையில் அறிவிக்கப்பட்ட உள்ளாட்சித் தேர்தல் அட்டவணை அறிவிப்புகள் அனைத்தும் முதலமைச்சரோடு கலந்து பேசி அறிவிக்கப்பட்டவைகள் அல்ல! என்று அமைச்சர் கூறுகிறாரா?

ஒவ்வொரு முறையும் தேர்தல் தேதிகள் - அட்டவணைகள் அறிவிக்கப்பட்டபோது, இதே அமைச்சர் அவர்கள், இது முதலமைச்சரோடு கலந்து பேசி அறிவிக்கப்படுகிறது என்றுதானே கூறியிருக்கிறார்!

அப்படி, இதற்கு முன்பு அவர் முதலமைச்சரின் பெயரையும் இழுத்துக் கூறியதெல்லாம் உண்மைக்குப் புறம்பான செய்திகளா?

உள்ளாட்சி மன்றத்தேர்தல் குறித்து, இப்போது தான் முதல் தடவையாக முதல்வருடன் கலந்து பேசி அறிவிப்பதைப்போல, அமைச்சர் வெளியிட்டுள்ள கருத்து - நாட்டுமக்கள் நம்பக்கூடியதா?

உள்ளாட்சி அமைச்சரின் தேர்தல் தேதி அறிவிப்புகள் வெளிவந்துள்ள பழைய நாளிதழ்கள் அனைத்திலும் - இதேபோலத்தான் முதலமைச்சரைக் கலந்துபேசி இந்தத் தேதிகள் அறிவிக்கப்படுகின்றன - என்று பாயிரம் பாடப்பட்டிருக்கிறது!

இப்போதும், அதே பாயிரம் தான் பாடப்பட்டிருக்கிறது!

உடன்பிறப்பே, தேர்தல் தேதிதான் அறிவித்து விட்டார்களே என்று கருதி, இத்திங்கள் ஏழாம் நாள் முடிய தமிழக முழுதும் சிற்றூர், பேரூர், நகர்ப்புறங்களில் நடத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ள நம்முடைய கழகத்தின், கண்டனக் கூட்டங்களையோ, அமைதி ஆர்ப்பாட்டங்களையோ, ஊர்வலங்களையோ நிறுத்திவிடத் தேவையில்லை!

எத்தனை முறைதான் தேதிகளை அறிவித்துவிட்டு மக்களை ஏமாற்றுவீர்கள் எனக்கேட்டு கண்டனங்கள் எழட்டும்! இந்த முறையாவது அறிவித்துள்ள தேதியிலிருந்து நழுவிடாமல் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு, இந்த ஏழு நாட்களில் ஊர் ஊராக நாம் ஒலிக்கின்ற குரல் பயன்படட்டும்!

எனவே, பட்டிதொட்டிகளில்கூட நமது செயல் வீரர்கள் பத்து பதினைந்து பேர் கலந்து கொண்டாலே போதும். உள்ளாட்சித் தேர்தலில் இந்த அரசு நடத்தும் மோசடியை மக்களுக்கு விளக்கிடும் வண்ணம் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், பிரச்சாரங்கள் - இவற்றை அமைதியான முறையில் மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்!

நாலைந்து வீடுகள் உள்ள ஒரு சிறு பகுதியாயினும் - அங்கு கூடச் சென்று இந்த ஆட்சியாளரின் அலங்கோலச் சேட்டைகளை, உள்ளாட்சியிலிருந்து மாநில ஆட்சி வரையில் பெருக்கெடுத்துள்ள ஊழல்களை ஒவ்வொருவருக்கும் தெளிவு ஏற்படுகிற வகையில் எடுத்துக் கூற வேண்டும்! கழகக் கருத்துகளை படித்துக் காட்ட வேண்டும்!

உள்ளாட்சித் தேர்தல் குறித்தே எத்தனை முரண்பாடான அறிக்கைகளை விடுத்துள்ளனர் என்பதை, ஏடுகளை ஆதாரமாகக் காட்டியே கிராமங்களில் விளக்கம் தர வேண்டும்!

கிராமங்களின் அடிப்படைத் தேவைகளுக்காக ஒதுக்கப்படுகிற பணமெல்லாம் அவற்றுக்காகச் செலவழிக்கப் படாமல் - ஆனால் செலவழிக்கப்பட்டதாக போலி ரிக்கார்டுகள் தயாரிக்கப்பட்டு - பெரும் ஊழல் சாம்ராஜ்யமே நடைபெறுகிறது என்பதை இந்திரா

காங்கிரஸ்காரர்களே அறிக்கை மூலம் தெரிவித்திருப்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

உடன்பிறப்பே, உடனடியாகச் செய்ய வேண்டிய இந்தப் பணிகளுடன் மற்றொரு முக்கியமான பணியையும் நீ ஓய்வின்றிச் செய்து முடித்திட வேண்டும்!

உள்ளாட்சித் தேர்தல் ஒன்று நடைபெறுமேயானால், அதற்கான வேட்பு மனுத்தாக்கல் ஜனவரி 23, 24, 27 ஆகிய தேதிகளில்தான்!

எனவே அதுவரையில் நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய இந்த மூன்று மாதங்களில் கழக உறுப்பினர்கள் புதுப்பித்தல் - சேர்த்தல் என்னும் கடமையை ஆங்காங்கு முறைப்படித் தொடங்கி, நிறைவேற்றிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஜனவரி பொங்கல் திருநாளுக்கு முன்பே, உறுப்பினர்களைச் சேர்ப்பது, புதுப்பிப்பது என்ற பணியை முடித்துவிட்டால், அதனைத் தொடர்ந்து அமைப்புகளின் தேர்தல்களை அறிவிக்க வசதியாக இருக்கும் எனப் பொதுச்செயலாளரும், நானும் கருதுகிறோம்!

ஒவ்வொரு ஒன்றியத்திலும், நகரத்திலும் உறுப்பினர் சேர்க்கும் வாரம் என குறிப்பிட்ட ஒரு வாரத்தை மாதந் தோறும் அறிவித்து அந்த வாரத்தில் உறுப்பினர் சேர்ப்பதைத் தீவிரப் பணியாகக் கொள்ளலாம்!

ஒவ்வொரு நாளுமே - ஒருநாள் கூடத் தவறாமல், கழக அமைப்புகளின் செயல்வீரர்களும் - உறுப்பினர் விண்ணப்பத்தாள்களைப் பெற்றவர்களும் உறுப்பினர் சேர்க்கும் பணியைத் தொடர்ந்து நடத்தலாம்!

எங்கே பார்க்கலாம்! எனதருமை உடன்பிறப்பே! எந்த மாவட்டத்தில், எந்த ஒன்றியத்தில், எந்த ஊரில், எந்த நகரில், எந்தப் பகுதியில் கழகம் வகுத்தளித்துள்ள முறைப்படி, அதிக உறுப்பினர்களைச் சேர்க்கிறாய் என்பதைச் செயல் மூலம் காட்டிட முன் வருக!

இன்றே தொடங்கிடுக! இனிதே நிறைவேற்றிடுக!

அன்புடன்

மு.க.

03-11-1985

1366. நெடுமாறன் மேற்கொண்ட நெஞ்சைக் குலுக்கிய பயணம்!

உடன்பிறப்பே,

அக்டோபர் திங்கள் வேலூரில் 13 ஆம் தேதியன்று நடைபெற்ற, தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பு டெசோ நடத்திய பேரணியிலும், பொதுக் கூட்டத்திலும் நண்பர் நெடுமாறன் அவர்கள் கலந்து கொள்ள இயலவில்லையென்று கூறி, அவருக்குப் பதிலாக காமராஜ் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் நண்பர் கிள்ளிவளவன் அவர்கள் கலந்து கொண்டார்கள். தி.மு.க., தி.க., காமராஜ் காங்கிரஸ், தமிழ்நாடு பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகளின் சார்பில் கோவை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களில் நடைபெற்ற டெசோ பேரணிகளில் கலந்து கொண்ட அவர், வேலூர் பேரணியில் கலந்து கொள்ள இயலாமற்போன காரணத்தை நான் ஓரளவு புரிந்து கொள்ள முடிந்தது என்றாலும் கூட, எனது ஐயத்தை உறுதிப்படுத்தும் வண்ணம் அக்டோபர் 13க்குப் பிறகு 10.10.85 என்று தேதியிட்டு எழுதப்பட்ட அவரது கடிதம் எனக்கு வந்து சேர்ந்தது.

அதில் உள்ள வாசகங்கள் வருமாறு:-

அன்புள்ள தலைவர் கலைஞர் அவர்கட்கு, வணக்கம். உங்கள் கரங்களில் இக்கடிதம் தவழும் போது நான் தமிழ் ஈழ மண்ணில் இருப்பேன். தமிழீழ மக்களின் வீரம் செறிந்த போராட்டத்தை நேரில் காணவும், அவர்களின் துயரங்களைப் பகிர்ந்து கொள்ளவும், அவர்களுக்கு உறுதுணையாகத் தமிழகம் நிற்கிறது என்ற உறுதியைக் கூறி ஆறுதல் அளிக்கவுமே செல்கிறேன். நமது டெசோ இயக்கம் தமிழ்நாட்டில் தமிழ் ஈழத்துக்கு ஆதரவாக ஏற்படுத்தியுள்ள மகத்தான எழுச்சியினை அவர்களுக்கு விளக்கிக் கூறுவேன். நலமுடன் திரும்புவேன் என நம்புகிறேன். ஒருவேளை எனக்கு ஏதேனும் நேர்ந்து விடுமானால், அதற்காகக்

கலங்க வேண்டாம். தமிழீழ மக்கள் விடுதலை பெறுவதற்காகத் தமிழ்நாட்டு மக்களும் உயிர்த்தியாகம் புரியத் தயாராகி விட்டார்கள் என்பதை உலகம் உணர அது வழிவகுக்கும். டெசோ இயக்கத்தை மேலும் வளருங்கள். ஏனெனில் தமிழீழம் காணப் போராடும் விடுதலைப் போராளிகளுக்கும், மக்களுக்கும் நமது டெசோ இயக்கத்தைத் தவிர, உற்றத்துணைவன் - உண்மையான துணைவன் வேறு யாருமில்லை. பேராசிரியர் அவர்களுக்கும், மற்றுமுள்ள தோழர்களுக்கும் எனது வணக்கம் - அன்புள்ள நெடுமாறன்

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும் என் நெஞ்சம் கனத்துப் போய்விட்டது! ஏன்? கடித முழுவதையும் ஒரேயடியாகப் படிக்க முடியாமல் கண்களில் நீர்த்திரைகள் விழுந்து தடுத்தன! அன்றிரவு முழுதும் எனக்கு உறக்கமேயில்லை! - அதன் காரணமாக இரண்டு நாட்கள் உடல்நிலையும் பாதிக்கப்பட்டது!

அவர் திரும்பித் தமிழ்நாடு வந்து சேர்ந்து விட்டார் எனக் கேள்விப்படும் வரையில் - இன்னும் சொல்லப்போனால், நவம்பர் முதல் நாளிரவு அவர் என்னை வந்து சந்திக்கிற வரையில், என்னுள்ளத்தில் அமைதியே இல்லை!

எந்தப் பிரச்சினை பற்றிப் பேசிக் கொண்டிருந்தாலும் அல்லது சிந்தித்துக் கொண்டிருந்தாலும் அவரது நினைவே நிழலாடிக் கொண்டிருந்தது என் நெஞ்சில்!

அதன் விளைவுதான் உடன்பிறப்பே, இந்த வாரம் 8.11.85 தேதியிட்ட குங்குமம் இதழில் கூட சங்கத்தமிழ் தொடரோவியம் தீட்டிட, நான் நெடுநல்வாடை எனும் சங்க இலக்கியத்தைத் தேர்ந்தெடுத்தது!

மதுரை நக்கீரனார் எழுதிய நெடுநல்வாடை, தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழிய பாண்டியன், போர்க்களத்தில் காயம்பட்ட வீரர்களைப் பாசறையில் கண்டு ஆறுதல் வழங்கிடும் காட்சியினை எடுத்துக் காட்டி, அகம் - புறம்! எனத் தமிழர்கள் வகுத்துக்கொண்ட வாழ்க்கை நெறியின் மாட்சியை விளக்குகின்ற பெருமைமிக்க இலக்கியமன்றோ?

அந்த மதுரைப் புலவன் நக்கீரன், நெடுஞ்செழியப் பாண்டியனுக்காக மட்டும் பாடவில்லை - இதோ இந்த மாவீரன் நெடுமாறனுக்காகவும் பாடியுள்ளான் போலும்! என்ற

உணர்வுடன்தான் இந்த இதழ்க் குங்குமத்திற்காக கடந்த வாரம் நெடுநல்வாடையை அடிப்படையாக வைத்து சங்கத் தமிழ் எழுதித் தந்தேன்.

வலியதோர் வாள்வீரன் தோளில் - தன்
வலக்கையினைத் தோழமையுடன் போட்டுக் கொண்டு
மழைத்துளிகள் வீழ்கின்ற நள்ளிரவில்
மாவீரர் பலர் காயமுற்றுப் படுத்திருக்கும்
பகுதியெலாம் சென்று பார்த்தான் - அவரைப்
பரிவுடனே நலம்கேட்டு நன்றி கூறி அரவணைத்தான்
பகல்போதில் பகைவர்களின் படையழித்து
விரட்டும்போது
பழுதுபட்ட கால், கை, உடல்களுடன் படுகின்ற
துயரமெல்லாம்
பறந்தனவாம் தம்தலைவன், பனிப்பார்வை பட்டதாலே!
காதலனைத் தேடிப் பேரரசி கலங்குகின்றாள்; அவனோ
கடமையினை ஆற்றுதற்குக் கால்கடுக்கச் சுற்றுகின்றான்
பாசறையை!

இந்த இதழ் குங்குமத்தில் நான் தீட்டியுள்ள சங்கத் தமிழ் பகுதியில் சில வரிகள் இவை!

என்னைச் சந்தித்து ஒரு மணி நேரத்திற்கு மேலாக உரையாடிய நண்பர் நெடுமாறன் அவர்கள், இருபத்து மூன்று நாட்கள் இலங்கைச் சுற்றுப்பயணம் பற்றி விரிவாக விளக்கிய போது, பாசறைப் படை வீரர்களை அன்றொரு நாள் பாண்டிய மன்னன் பார்வையிட்ட நிகழ்ச்சி குறித்த நெடுநல்வாடைதான் என் நினைவைத் தழுவிக்கொண்டது!

அந்தப் பயணம் குறித்த வீடியோ படக் காட்சியினை செய்தியாளர்கள் மட்டுமல்ல! நானும், தம்பி முரசொலி மாறனும், நண்பர் ஆற்காடு வீராசாமியும் கண்டபோது எத்தனை முறை கண்ணீர் வடித்தோம் என்பதை எண்ணிச் சொல்ல முடியாது! ஆம்! நீர்வீழ்ச்சிக் கண்களுடனே அந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தோம், வீடியோவில்!

நெஞ்சுறுதியுடனும், நிலை மாறாத தமிழ் உணர்வுடனும் நெடுமாறன் மேற்கொண்ட இந்தப் பயணம், அவரை மாவீரன் என்ற பட்டத்திற்கு முற்றிலும் தகுதியுடையவராகவே ஆக்கிவிட்டது!

மாற்று முகாமிலே - அல்லது எதிர் முகாமிலே - இருக்கின்ற உடன்பிறப்புகள் கூட உண்மையான தமிழ் உணர்வுடன் செயல்படும் போது, அந்த இன உணர்வுக்கு வெளிப்படையாக பாராட்டு வழங்குவது ஒரு வேளை, அவர்களுக்கு ஏதாவது தீங்கினை ஏற்படுத்துமோ என்ற காரணத்தால், இதயச்சுவர்களுக்குள்ளேயே வாழ்த்துகளை எழுதிக் களிக்கிற நான், நம்மிலே ஒருவராக ஆகிவிட்டவரும் - நமது டெசோ இயக்கத்தின் காவலர்களில் ஒருவராக இருப்பவருமான எனது நண்பர் நெடுமாறனைப் பாராட்டுவதிலும், வாழ்த்துவதிலும் ஒரு சிறிதும் தயக்கமில்லாத உணர்வைத்தான் இக் கடித வாயிலாக வெளிப்படுத்தியுள்ளேன். இலங்கையில் இடிந்து பாழடைந்து கிடக்கின்ற தமிழர்தம் இல்லங்கள் - அகதிகளாக அலைமோதும் தமிழ்த் தாய்கள், குழந்தைகள் - போர்க்களமாகவே எப்போதும் காட்சி தந்து கொண்டிருக்கும் தமிழர் வாழ் பகுதிகள் - வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள்கள் எங்கள் வெற்றித் தோள்கள் என முழங்கி, கிளம்பிற்றுக்காண்! தமிழச்சிங்கக் கூட்டம், கிழித்தெறியத் தேடுது காண்! பகைக் கூட்டத்தை என்ற புரட்சிக் கவிஞரின் உணர்ச்சி வரிகளுக்கு உருவம் கொடுத்துக் கொண்டு படைக்கலன்களுடன் விடுதலை முழக்கமிடும் போராளிகளின் பாசறைகள் - இவற்றையெல்லாம் மாவீரன் நெடுமாறனின் விழிகள் வழியாக நானும் பார்த்தேன்!

எங்களுக்குத் தமிழ் ஈழம் தவிர, வேறு எதுவும் தேவையில்லை என்று இளஞ்சிறார், சிறுமியர் முதல் எழுபது, எண்பதை நெருங்கிய முதியோர் வரையில் அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொன்னதை நெடுமாறனின் செவிகள் வாயிலாக நானும் செவி மடுத்தேன்!

இந்திரா காந்தி காட்டிய அக்கறைகூட, இன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காட்டவில்லை என்பதை, இலங்கைத் தமிழர்கள் எல்லோரும் ஒரே குரலில் ஒலிப்பதை நெடுமாறன் மேற்கொண்ட சுற்றுப் பயணம் எடுத்துக்காட்டுகிறது!

எங்களுக்குத் தனிநாடு கிடைக்க எங்கள் போராளிகளை ஊக்கப்படுத்துங்கள்! அவர்களை நிர்ப்பந்தித்து பிரச்சினையை தீர்க்க முயலாதீர்கள்! தனித் தமிழ்நாடே எங்கள் இலட்சியம்!

உங்களால் முடியாவிட்டால், எங்கள் தலையில் குண்டுகளைப் போட்டு இலங்கைத் தமிழ் இனத்தையே அழித்துவிடுங்கள்!

இந்தச் செய்தியை இந்தியாவுக்குச் சொல்லுங்கள் என்று இலங்கைத் தமிழினத் தாய்மார்கள் நெடுமாறன் அவர்களிடம் அழுது புலம்பியவாறு சொல்கிற காட்சியை, இருதயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டுதான் பார்க்கமுடிந்தது!

போர் நிறுத்தம் என்பதை இலங்கை அரசு தனக்கு சாதகமாக்கிக் கொண்டு, நூற்றுக்கணக்கான புதிய இராணுவ தளங்களை அமைத்து வருகிறது. தமிழ் இனத்தை அடியோடு அழிக்க!

தெரிந்தோ, தெரியாமலோ இலங்கை அரசின் இந்தச் சதிக்கு இந்திய அரசு துணை போய்க் கொண்டிருக்கிறது!

மாவீரன் நெடுமாறன் அவர்கள் மேற்கொண்ட இந்த நெஞ்சை நெகிழ வைக்கும் சுற்றுப் பயணம், நாம் இது வரையில் டெசோ இயக்கத்தின் சார்பில் எடுத்துச் சொன்ன கருத்துகள் சரியானவைதான் என்பதை மீண்டும் ஒரு முறை தெளிவு படுத்துகிறது என்பதுதான் உண்மை!

இந்த உண்மை கண்டு, இந்திய அரசு - இலங்கையில் தமிழ் ஈழம் அமைந்திட, தக்கவழி காண முன்வர வேண்டுமேயல்லாமல் - எப்படி இலங்கைக்குப் போனார் நெடுமாறன்? என்ற ஆராய்ச்சியில் நேரத்தை வீணாக்கக்கூடாது!

இந்த வேண்டுகோளை இந்திய அரசுக்கு விடுத்து - தீரமிக்க இந்தப் பயணத்தை மேற்கொண்ட மாவீரன் நெடுமாறன் அவர்களுக்கு, குறிப்பாக தி.மு.கழகத்தின் சார்பிலும் - அவரும் இணைந்துள்ள டெசோ இயக்கத்தின் சார்பிலும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

அன்புடன்

மு.க.

04-11-1985

1367. அய்கோ! மீனவர்கள்! அந்தோ; ஆசிரியர்கள்!

உடன்பிறப்பே,

அதிகாரமும், போலீசும் கையில் இருப்பதால், ஆணவத்துடன் எதையும் செய்யலாம் என்ற போக்கும், எதிர் தரப்பிலிருந்து கூறப்படும் கருத்துகளுக்கு எள் முனையளவு மதிப்பும் தரத் தேவையில்லையென்ற எதேச்சாதிகார இயல்பும், குறைபாடுகளைக் கூறுவது - முறையீடுகளை முன் வைப்பது, அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று பரிகாரம் காண்பதற்காக அடையாள பூர்வமான அறவழிப் போராட்டங்களை நடத்துவது கூட, ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான சதித் திட்டம் என்ற கற்பனைக் குற்றச் சாட்டைக் கூறி, அடக்கு முறை கொண்டு பழிவாங்குகிற செயலும், கருங்காலி காக்காய் கூட்டத்தைச் சார்ந்த சிலரைக் கைக்குள் போட்டுக் கொண்டு, வளைக்க வேண்டிய முறையில் வளைக்கப்பட்ட அந்த வஞ்சகத் திருக்கூட்டத்தின் உதவியால், நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையில் எழுப்பப் படுகிற போராட்டக் குரலை ஒடுக்கி விட முனைகின்ற பிரித்தாளும் சூழ்ச்சித் திறனும், எதைச் செய்தாலும் ஏமாந்த சோணகிரிகளாகத் தான் தமிழ்நாட்டு மக்கள் காலமெல்லாம் இருப்பார்கள் என்று நம்பிக் கொண்டு, எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற நிலையில் காரிய மாற்றும் மமதைக் குணமும் - இன்றைய எம்.ஜி.ஆர். ஆட்சியில் விசுவரூபம் எடுத்து நிற்கின்றன என்பதற்கு எத்தனையோ ஆதாரங்களை எடுத்துக் காட்ட முடியும்!

குண்டு குழிகள் நிறைந்த பாதைகள் அவற்றில் தேங்கி நிற்கும் சாக்கடைக் குட்டைகள் - அங்கே உற்பத்தியாகும் கொசுக்கள் - விளக்கில்லா இருண்ட பகுதிகள் - தூய்மையற்ற காரணத்தால் தொத்து நோய்க்கு இரையாகும் ஏழைபாழைகளின் குடும்பங்கள், மருந்தில்லா மருத்துவமனைகள் - கூரையில்லாத

உடனடியாகச் செய்து கொடுக்கிறதா? இல்லையா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்!

இந்த ஆட்சியின் அடக்கு முறைச் செயலுக்கு இதோ மற்றொரு எடுத்துக்காட்டு!

ஆரம்பப்பள்ளி முதல் கல்லூரி வரையில் உள்ள நாற்பது சங்கங்கள் ஒன்றாக இணைந்து, தமிழ்நாடு ஆசிரியர், அலுவலர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு அமைத்து, அவர்களின் பத்து அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, ஆகஸ்டு மாதம் முதல் அமைதியான வழியில் அறப் போராட்டம் நடத்தி வருகிறார்கள்!

அவர்களின் குரலை, இந்த அரசு காதிலே போட்டுக் கொள்ளவில்லை! அவர்களின் பிரதிநிதிகளை அழைத்துப்பேசவும் இல்லை!

நான்காவது ஊதியக்குழு, ஆசிரியர்களின் ஊதியத்தில் பெருத்த சரிவை ஏற்படுத்தி சமநீதியில்லாமையை உருவாக்கியுள்ளதை பல்வேறு ஆதாரங்களையும், புள்ளி விபரங்களையும் எடுத்துக்காட்டி அரசுக்கு அறிவித்தும் கூட, இந்த அரசு தனது வழக்கமான ஆணவப் போக்குடன் அவர்களது குரலை அலட்சியப்படுத்தி - கருங்காலிக் குழு ஒன்றுடன் பேச்சு நடத்தி நாற்பது சங்கங்கள் ஒன்றுபட்டு நடத்தும் போராட்டத்தை நசுக்கி விடலாம் என்று கருதிச் செயல்பட்டது!

இப்போது நாற்பது சங்கங்கள் ஒருங்கிணைந்த போராட்டம், புது வடிவமெடுத்து ஆசிரியர், அலுவலர்க்கு அநீதி வழங்கும் அரசு ஆணையை ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் ஒரே நாளில் பல ஊர்களில் கொளுத்தித் தங்கள் அதிருப்தியை வெளியிட்டபோது - அனைவரையும் கைது செய்து சிறை வைக்க இடமில்லாத அவஸ்தையினால், பத்தாயிரத்துக்கு மேற்பட்டவர்களை மட்டும் சிறைகளில் அடைத்து விட்டு மற்றவர்களை விடுவித்திருக்கிறார்கள்!

சிறையில் இருக்கும் பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்களுக்கு எந்த வசதியும் செய்து தராமல் - அவர்கள் கொடுமைப்படுத்தப்படுவதாகவும் செய்திகள் வருகின்றன!

சிறையில் அடைக்கப்பட்டோரை உடனடியாக விடுதலை செய்து, கூட்டு நடவடிக்கைக் குழுவினருடன், பேச்சு நடத்திப் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வேண்டுமென்று வலியுறுத்தி - ஆசிரியர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளார்கள்.

தங்களின் நியாயமான போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு பொது மக்களையும், அரசியல் கட்சிகளையும் அவர்கள் வேண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு ஹெட்கான்ஸ்டேபிளுக்கு 350 ரூபாயாக இருந்த ஊதியம், 705 ரூபாயாக தற்போது உயர்ந்திருக்கிறது! ஒரு இடைநிலை ஆசிரியருக்கு 350 ரூபாயாக இருந்த ஊதியம் தற்போது 610 ரூபாயாக மட்டுமே உயர்ந்துள்ளது!

ஒரு ஸ்டோர்கீப்பருக்கு 400 ரூபாயாக இருந்த ஊதியம், தற்போது 780 ரூபாயாக உயர்ந்துள்ளது. ஆனால், ஒரு தேர்வு நிலை இடைநிலை ஆசிரியருக்கு 400 என்று இருந்தது தற்போது 705 ரூபாய் என்ற அளவில்தான் உயர்ந்திருக்கிறது! ஒரு டவுன் பிளானிங் இன்ஸ்பெக்டருக்கு - ஒரு அசிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டருக்கு - ஒரு டிராப்டிங் ஆபீசருக்கு - 400 ரூபாயிலிருந்து தற்போது 905 ரூபாயாக உயர்ந்திருக்கும் போது அதே நானூறு ரூபாய் ஊதியம் பெற்ற தேர்வுநிலை இடைநிலை ஆசிரியருக்கு 705 ரூபாய் என்றுதான் உயர்வு என்றால் இந்த ஏற்றத்தாழ்வை அகற்ற ஆசிரியர்கள் போராடுவதில் என்ன தவறு இருக்கமுடியும்?

மெஷின் இன்ஸ்பெக்டர், போர்மன் பாய்லர்ஸ், எலக்ட்ரிகல் போர்மன், லேபரட்டரி அசிஸ்டெண்ட், டிராப்ட்ஸ்மேன் கிரேடு 2 ஆகியோருக்கெல்லாம் 450 ரூபாயிலிருந்து 905 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கும் போது - இதே 450 ரூபாய் பெற்றுவந்த பட்டதாரி ஆசிரியர், தமிழாசிரியர், இடைநிலை சிறப்பு நிலை ஆகியோருக்கு 780 ரூபாய் என்று தான் உயர்த்தப்பட்டுள்ளது!

அட்மினிஸ்ட்ரேடிங் ஆபீசர்களுக்கு 600 ரூபாயிலிருந்து 1340 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால், அதே 600 ரூபாய் ஊதியம் பெற்று வந்த தேர்வு நிலை பட்டதாரி ஆசிரியர் தேர்வு நிலைத் தமிழாசிரியர் ஆகியோருக்கு 1045 ரூபாய் என்றுதான் உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒரேநிலையில் ஊதியம் பெற்று வந்தவர்களுக் கிடையே இத்தகைய வேறுபாடுகளை உருவாக்கியதை ஆசிரியர்களின் சங்கங்கள் எதிர்த்துப் போராடுவதும் - தங்கள் கோரிக்கைகள் குறித்து அழைத்துப் பேச வேண்டுமென்று அரசை வலியுறுத்துவதும் எப்படித்தவறாக இருக்க முடியும்?

எதைப்பற்றியும் கவலைப்படாமல் - நினைத்த படியெல்லாம் செய்வோம் - எங்களைத் தட்டிக் கேட்போர் யார்? என்று இந்த அரசு இறுமாப்புடன் நடந்து கொள்ளுமேயானால் - எல்லா தரப்பிலிருந்தும் உருவாகிக் கொண்டிருக்கிற கிளர்ச்சிக் கனலுக்கு முன்னால், தாக்குப்பிடிக்க முடியாமல் தலைமட்டமாகி விட நேரிடும் என்பதை மட்டும் எச்சரிக்கையாக விடுத்திடுகின்றேன்.

அன்புடன்

மு.க.

06 11-1985

1368. உணர்வாரா? அல்லது உணர்த்தப்பட வேண்டுமா?

உடன்பிறப்பே,

மெரினா கடற்கரையை அழகுபடுத்துதல் என்ற பெயரால் - எவ்விதமான முன்னறிவிப்பும், மாற்று ஏற்பாடும் செய்யாத நிலையில் திடீரென இந்த அரசாங்கம், ஆயிரக்கணக்கான போலீசாரை அணிவகுத்து நிற்க வைத்து, மீனவர்களின் அன்றாடப் பிழைப்பில் மண்ணைப் போடுகிற அளவுக்கு கட்டுமரங்களையும், நைலான் வலைகளையும் மாநகராட்சியைச் சேர்ந்த லாரிகளில் அள்ளிப் போட்டுக் கொண்டு போய் விட்டதைக் கண்டித்தும், மெரினாவை அழகுபடுத்துவதில் நமக்கு எந்த விதமான மறுப்பும் இல்லையென்ற போதிலும் - அதே நேரத்தில் கடலையும், கட்டுமரங்களையும் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற ஐயாயிரம் மீனவக் குடும்பங்களை நடுத்தெருவில் விடுவது முறைதானா என்றும் 6.11.85 முரசொலியில் நான் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

அதற்கு பதில் அளிக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயரால், ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

மீனவர்கள், கட்டுமரங்களை வைத்துக்கொள்வதற்கு பட்டினப்பாக்கத்திற்கும், செட்டிநாட்டு அரண்மனைக்கும் இடைப்பட்ட பகுதியில் இடம் ஒதுக்க திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது என்று முதலமைச்சரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதை, அயோத்தியா குப்பம், மாட்டாங் குப்பம், சிங்காரவேலர் குப்பம், நடுக்குப்பம், துண்டுக் குப்பம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவ மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தால், அதில் நாம் யாரும் குறுக்கே நிற்கப் போவதில்லை.

ஆனால் நமது கேள்வியெல்லாம், இந்தத் திட்டத்தை முதலிலேயே அந்தப்பகுதி மீனவ மக்களுடன் கலந்து

பேசி, அவர்களுடைய வசதியையும் கேட்டறிந்து இந்த அரசு செயல்பட்டிருக்கலாமே என்பது தான்! அப்படியொரு முறையை மேற்கொள்ளாமல், இந்தத் திடீர்ப் படையெடுப்பு தேவைதானா?

இந்திரா காங்கிரஸ் தலைவர்களும் கூட, இந்த அரசாங்கத்தின் இத்தகைய திடீர் நடவடிக்கையைக் கண்டித்து அறிக்கை விட்டவுடன் - உடனே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், மெரினாவை அழகுபடுத்தும் திட்டம் மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரின் திட்டமாகும் என்று தனது அறிக்கையில் குறிப்பிடுகிறார்!

இப்படித்தான் ஐயாயிரம் மீனவக் குடும்பங்களின் வயிற்றில் அடித்து, அவர்கள் பிழைப்பைக் கெடுத்து, கட்டுமரங்களையும் வலைகளையும் கைப்பற்றி - இந்திரா காந்தி அம்மையார், மெரினா கடற்கரையை அழகுபடுத்தும்படி எம்.ஜி.ஆர். அவர்களிடம் கூறியிருந்தாரா? நிச்சயமாக அவர், அப்படிக் கூறியிருக்க மாட்டார்!

இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் அறிக்கையில், இந்தக்காரியம் முதலமைச்சருக்கு தெரியாமல் நடந்திருக்கக் கூடும் என்ற கருத்துப்பட குறிப்பிட்டிருந்தார்கள்!

மாண்புமிகு முதல்வரின் பதில் அறிக்கையைப் படிக்கும் இந்திரா காங்கிரஸ் தலைவர்கள், இந்தக் கொடுஞ்செயல் முதலமைச்சரின் ஆணைப்படிதான் நடந்துள்ளது என்பதை இப்போதாவது நிச்சயம் புரிந்துகொள்வார்கள் என்றே நம்புகிறேன்.

இத்திட்டத்தைச் சென்னை நகர போலீஸ் கமிஷனராக இருந்தபோது ஸ்ரீபால் செயல்படுத்தினார். அதைத் தொடர்ந்து தற்போது சென்னை நகரப் போலீஸ் கமிஷனர் வால்டர் தேவாரம் செயல்படுத்துகிறார்.

இவ்வாறு முதலமைச்சர் அவர்கள் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

ஆனால் இந்த நடவடிக்கைக் குறித்து, 5.11.85 தினமணியில் வந்துள்ள விபரத்தை இப்போது நான் நினைவில் கொண்டு வந்து, அந்த இதழை மீண்டும் படித்துப் பார்த்தேன். அதில் வந்துள்ள விபரம் பின் வருமாறு:-

பொதுப்பணித்துறை, மீன்வளத்துறை, மாநகராட்சி ஆகிய துறைகள் மேற்கொண்ட இந்த நடவடிக்கைக்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு இருந்தது .... தங்களைப் பொறுத்த வரையில், கட்டு மரங்களையும், வலைகளையும் அப்புறப்படுத்தும் பணியை தாங்கள் மேற்கொள்ளவில்லையென்றும், போதிய பந்தோபஸ்து கொடுத்தது மட்டுமே தங்கள் பணியென்றும் நகர போலீஸ் கமிஷனர் வால்டர் தேவாரம் செய்தியாளர்களிடம் கூறினார்!

உடன்பிறப்பே! போலீஸ் கமிஷனர்கள்தான் இதனைச் செயல்படுத்துகிறார்கள் என்ற மாண்புமிகு முதல்வரின் கூற்று எவ்வளவு முரண்பாடானது என்பது, திரு.வால்டர் தேவாரம் அவர்களின் செய்தியாளர் பேட்டி மூலம் தெளிவாகிறது அல்லவா?

இப்படியொரு முன்னுக்குப்பின் முரணான அறிக்கையை வெளியிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், கழக ஆட்சிக்காலத்தில் பெரிய குப்பம் நிகழ்ச்சிகள் நடக்க வில்லையா என்று கேட்கிறார்!

இந்திரா காங்கிரஸ் தலைவர்கள், கம்யூனிஸ்டு கட்சிகளின் தலைவர்கள், ஜனதா, திராவிடர் கழகம் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் விடுத்துள்ள கண்டன அறிக்கைகளுக்கும், பெரிய குப்பம் ஒன்றுதான் பதிலா? என்பதை முதலமைச்சர்தான் விளக்க வேண்டும்!

அப்படியே இருந்தாலும், கழக ஆட்சிக்காலத்தில் பெரிய குப்பத்தில் நடந்தது என்ன? கழக அரசு போலீஸ் பட்டாளத்தைத் துணைக்கு வைத்துக் கொண்டு, பெரிய குப்பம் மீனவர்களது கட்டு மரங்களையும், வலைகளையும் கைப்பற்றியதா? இல்லையே!

அப்போது நடைபெற்ற பெரிய குப்பம், ஆளி குப்பம் என்கின்ற இரண்டு குப்பங்களுக்கிடையே தகராறு! அதனால் எழுந்த பிரச்சினை! அதிகாரிகள் உடனடியாகச் சென்று நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறை கூறப்பட்டது! அது குறித்து அரசு விசாரணை நடத்தி விளக்கம் அளித்திருக்கிறது. நடவடிக்கை மேற்கொண்டது, நல்ல முடிவு ஏற்பட்டது! இதைத்தவிர, பெரிய குப்பத்தில் மீனவர்கள் வாழ்வு பாதிக்கப் படக்கூடிய அளவுக்கு கட்டுமரங்களையும், வலைகளையும் கழக அரசு பறித்துக்கொண்டது கிடையாதே!

முதலமைச்சர் அவர்கள், இப்போது நடுத்தெருவில் நின்று தங்களின் வாழ்க்கைக்காகப் போராடுகிற மீனவர்களுக்குத் தக்க

நஷ்டாஈடு அளித்து, அவர்களுக்கு மீண்டும் வாழ்வு தர - பதில் அளிக்க முன்வராமல், என்னோடு சண்டைக்கு வருவதால் என்ன பயன்?

கழக ஆட்சிக் காலத்தில் ஆசிரியர்கள் போராடவில்லையா? கைது செய்யப்படவில்லையா? இப்படிக் கேட்கிறார் முதலமைச்சர்!

எந்த ஆட்சியிலும் கோரிக்கைகளுக்காகப் போராடுகிறவர்கள் உண்டு - அவர்கள் கைது செய்யப்படுவதும் உண்டு - ஆனால் அந்தக் கோரிக்கைகள் குறித்து, அவர்களுடன் பேச்சு நடத்தி நல்ல முடிவுகளைக் காண கழக அரசு தயங்கியதே இல்லை! அதில் கௌரவப் பிரச்சினை பார்த்ததுமில்லை!

கழக ஆட்சிக் காலத்தில் ஆசிரியர்கள் நடத்திய போராட்டம் குறித்த விபரங்களையும், அவர்கள் கோரிக்கைகள் எவ்வாறு தீர்க்கப்பட்டன என்ற விபரங்களையும் - அப்போது கல்வி அமைச்சராக இருந்த நாவலர் அவர்கள், இப்போது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் அருகில் இருப்பதால் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு நிரம்ப அவருக்கு இருக்கிறது!

நாலாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் குறித்த அரசு ஆணையில், ஆசிரியர்கள் ஊதியத்தில் சமநீதி இல்லை என்ற புள்ளி விபரங்களை பணிகள் வாரியாக, ஆதாரங்களுடன் குறிப்பிட்டுள்ளேன். ஆகஸ்டு மாதம் முதல் பத்து அம்சக் கோரிக்கைகளை வைத்துப் போராடுகிற நாற்பது சங்கங்களின் கூட்டுப் போராட்டத்தை இந்த அரசு அலட்சியப்படுத்துகிறது என்பதை எடுத்துக் காட்டியுள்ளேன்.

அவற்றை சிந்தித்துப் பார்த்து தக்க நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக, என் மீது முதலமைச்சர் சீறி விழுகிறார்! அல்லது அவர் சீறி விழுவது போல ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது! அவரது அனுமதியுடன் தான் அந்த அறிக்கை வெளியிடப்பட்டிருக்கும்!

ஏனென்றால் அவரது ஆட்சியிலும், கட்சியிலும் அவரது அனுமதியோடுதான் எல்லா அறிக்கைகளும் வெளியிடப்படுமென்று நாட்டு மக்களுக்குத் தெரியும்!

முதலமைச்சர், இந்தப் பிரச்சினைகளில் கோபம் கொள்வதை விடுத்து - மீனவர், ஆசிரியர் பிரதிநிதிகளை அழைத்துப்பேசி - நல்ல முடிவு காண முயற்சி மேற் கொள்ளாமல், குறைகளை எடுத்துச் சொல்வோர் மீது பாய்வதில் எந்தப்பயனும் விளையப் போவதில்லை!

இதை அவரே உணர்ந்து செயல்படுவாரா? அல்லது உணர்த்தப்பட வேண்டுமா?

அன்புடன்

மு.க.

08-11-1985

1369. பாதிக்கப்பட்ட மீனவர்களைப் பாதுகாக்கும் அறப்போர்!

உடன்பிறப்பே,

கோவெனக் கதறுகின்றனர்! வயிற்றிலும், வாயிலும் அடித்துக் கொள்கின்றனர்! இந்த அநியாயத்துக்கு முடிவே கிடையாதா என அலறுகின்றனர்! குழந்தை குட்டிகளோடு குடும்பம் குடும்பமாக, ஒன்றல்ல இரண்டல்ல - ஐயாயிரம் குடும்பங்கள் பட்டினி கிடக்கிறோமே! இந்தக் கொடுமையிலிருந்து எங்களுக்கு விடுதலை கிடையாதா? ஒரே விடுதலை அன்னம்மாளைப் போல உண்ணாவிரதம் இருந்து சாவதும் - கோதண்டபாணியைப்போல தீக்குளித்து மாள்வதும்தானா? எதிரியின் பிரதேசத்தில் கூட இப்படியொரு படையெடுப்பை நடத்தியிருக்க மாட்டார்களே! அப்படியொரு மூர்க்கத்தனமான படையெடுப்பை, விடிந்ததும் விடியாததுமாக நடத்தி முடித்து எங்கள் வாழ்வையே நாசமாக்கி விட்டார்களே! இதைவிட எங்களையெல்லாம் சுட்டுப்பொசுக்கியிருக்கலாமே!

இந்தக் கூக்குரல் - அழுகை - ஓலம் - புலம்பல் - சென்னை மெரினா கடற்கரையோரத்திலுள்ள மீனவர் குப்பங்களில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களில் ஏழு நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது!

அந்தக் குரலுக்குச் செவிசாய்த்து, அவர்களுக்கு மீண்டும் வாழ்வளிக்க மனமிரங்கிச் செயல்படுமாறு, தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் - இன்றைய ஆளும் கட்சியாம் அ.தி.மு.க.வின் தோழமைக் கட்சியான இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர்களும் எத்தனையோ வாதங்களை எடுத்து வைத்து - கடந்த கால முன்மாதிரிகளையெல்லாம் ஆதாரங்களுடன் விளக்கிக்காட்டி - மெரினாவை அழகுபடுத்துவதில் யாருக்கும் வேறுபட்ட கருத்துக் கிடையாது - அதே நேரத்தில் பல்லாண்டு

காலமாக மெரினா கடற்கரையில் மீன்பிடித் தொழில் நடத்தி வாழுகின்ற மக்களின் வயிற்றில் அடிக்க வேண்டாமென்று தான் வலியுறுத்துகிறோம் என எடுத்துச் சொல்லியும்கூட - முதலமைச்சர் அவர்கள், தனது பிடிவாதத்தை விட்டுக் கொடுப்பதாயில்லையென்று - நான் இந்தக் கடிதம் எழுதும் நேரம் வரையில் 10.11.85 காலை அறிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கட்டுமரங்களைத் தருகிறோம் என்றும் - ஆனால் அவர்கள் அந்த மீன்பிடிச் சாதனங்களை மெரினா கடற்கரையோரத்தில் வைத்துக் கொள்ளக்கூடாதென்றும், - பட்டினப்பாக்கத்திலிருந்து செட்டிநாட்டு அரண்மனை வரையில் உள்ள பகுதியில்தான் அவற்றை வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இந்த மாற்று ஏற்பாட்டை நடுக்குப்பம், அயோத்தியா குப்பம், மாட்டாங் குப்பம், சிங்காரவேலர் குப்பம், துண்டுக் குப்பம் ஆகிய குப்பங்களில் உள்ள;

1 மாட்டாங்குப்பம் மீனவர் பஞ்சாயத்து

2 பழனியம்மன் கோயில் மீனவர் பஞ்சாயத்து

3 தேவேந்திரன் நினைவு மீனவர் பஞ்சாயத்து

4 அப்பைய செட்டியார் மீனவர் பஞ்சாயத்து

5 அயோத்தியா குப்பம் மீனவர் பஞ்சாயத்து

6 நடுக்குப்பம் மீனவர் பஞ்சாயத்து

7 சிங்காரவேலர் மீனவர் பஞ்சாயத்து

ஆகிய கட்சிகளுக்கு அப்பாற்பட்ட மீனவர்களின் பழம்பெரும் சங்கங்களும் - மீனவர் நடவடிக்கைக் குழுவும், மீனவர் இளைஞர் சங்கங்களும் ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை!

ஏற்றுக் கொள்ளாததற்குக் காரணம், கௌரவப் பிரச்சினை அல்ல!

மெரினா கடற்கரையில் இதுவரையில் மீன்பிடிச் சாமான்களை வைத்திருந்து கடலில் தங்கள் தொழிலை நடத்தி வந்தவர்கள், தங்கள் குப்பங்களிலேயிருந்து அருகாமையில் உள்ள

கடற்பகுதிக்குச் செல்வதை விடுத்து, ஒவ்வொரு நாளும் அவர்களது குப்பங்களில் இருந்து சுமார் நான்கு கிலோ மீட்டர் தூரம் சென்று பட்டினப்பாக்கம் முதல் செட்டிநாட்டு அரண்மனைப் பகுதி வரையில் செல்வதென்பதும், பிடிபட்ட மீன்களை அங்கிருந்து வியாபார இடங்களுக்குக் கொண்டு செல்வதென்பதும் இயலாத காரியம் என்பதனாலேதான், தங்கள் இயலாமையை எடுத்துக் கூறி எம்.ஜி.ஆரின் மாற்று ஏற்பாட்டை ஏற்க மறுக்கிறார்கள்.

சட்டப்பேரவை கழக உறுப்பினரும், மீனவநண்பருமான பொன்னுரங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளபடி - மீனவர்கள் கட்டுமரங்கள், வலைகள் இவைகளையன்னியில் மீன்பிடிப்பதற்குத் தேவையான துணைக்கருவிகளான தழா, தண்டு, பரி, அண்டை, கொடுவலை, வலைக்கயிறு, மரங்களைக் கட்டும் கயிறு, கற்கள், கட்டைகள் இவற்றையெல்லாம் தங்கள் வீடுகளிலேயிருந்து முதலமைச்சர் எம்.ஜி.ஆர். குறிப்பிடுகிற பட்டினப்பாக்கம் முதல் செட்டிநாட்டு அரண்மனை வரை என்கிற இடத்துக்கு நாள்தோறும் நாலு கிலோ மீட்டர் அளவுக்குத் தூக்கிச் செல்வது என்பது மிகச் சிரமமான காரியமாகும்.

மெரினா கடற்கரைப் பகுதியை அழகுபடுத்தும் முயற்சியில் தி.மு.கழக அரசு ஈடுபட்டபோது, மீனவர்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களின் கருத்து அறியப்பட்டது. அரசின் சார்பிலும், மீனவர்களின் சார்பிலும் ஒத்துக்கொண்ட ஏற்பாட்டின்படி - கடல் நீரிலிருந்து கிழக்கு மேற்காக 150 அடி வரையில் அடையாளக் கற்கள் போடப்பட்டு, அந்தப் பகுதிக்குள் மீனவர்களின் மீன்பிடிக்கருவிகளான கட்டுமரம் போன்றவைகளை வைத்துக்கொள்வதென்றும் - அந்தப் பகுதியை விடுத்து எஞ்சிய பகுதிக்குள் மெரினாவின் அழகைக் கெடுக்கும் வகையில் மீன்பிடிக்கருவிகள் இருத்தலாகாதென்றும் முடிவு செய்யப்பட்டது.

பின்னர் 1981ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகும் கூட, 15.7.81 மீன்வளத்துறை உதவி இயக்குநர் டி. சந்திரசேகரன் அவர்களின் கையொப்பமுடன் விடுத்துள்ள சுற்றறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள மெரினா கடற்கரையை அழகு படுத்தும் திட்டத்தின்படி, அண்ணா சதுக்கம் முதல் புதிய கலங்கரை விளக்கம் வரையில் கடற்கரை ஓரமாக பரவலாக, எல்லா இடத்திலும் வைக்கப்பட்டுள்ள கட்டுமரம், பாசுலா படகு, பெரிய வலை, மற்றும் இதர மீன்பிடி வலைகளை கீழ்க்காணும் ஐந்து குறிப்பிட்டுள்ள பகுதிகளில் மட்டுமே வைக்க வேண்டுமென்றும் தெரியப்படுத்தப்படுகிறது.

பகுதி 1 : மெரினா புகாரி ஓட்டலுக்குப் பின்புறத்தில், கடற்கரை ஓரமாக சுமார் 50 மீட்டர் நீளம் மற்றும் 50 மீட்டர் அகலமுள்ள பகுதி.

பகுதி 2 : மெரினா சீரணி அரங்கத்தின் பின்புறத்தில், கடற்கரை ஓரமாக சுமார் 50 மீட்டர் நீளம் மற்றும் 50 மீட்டர் அகலம் உள்ள பகுதி.

பகுதி 3 : மெரினா கோட்ட மேற்பார்வையாளர் அலுவலகத்தின் நேர் எதிரில் கடற்கரை ஒட்டிய இடத்தில், சுமார் 50 மீட்டர் நீளம் மற்றும் 50 மீட்டர் அகலம் உள்ள பகுதி.

பகுதி 4 : லாயிட்ஸ் ரோட்டுக்கு நேர்கிழக்கில் கடற்கரை ஒட்டிய இடத்தில், சுமார் 50 மீட்டர் நீளம் மற்றும் 50 மீட்டர் அகலம் உள்ள பகுதி.

பகுதி 5 : மெரினா கடற்கரையில் காமராசர் சிலைக்கு கிழக்கே கடற்கரையை ஒட்டிய இடத்தில், சுமார் 50 மீட்டர் நீளம் மற்றும் 50 மீட்டர் அகலம் உள்ள பகுதி.

மேற்காணும் ஐந்து பகுதிகளில் மட்டுமே மீனவர்கள் தங்களுடைய மீன்பிடிச் சாதனங்களை வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், வேறு பகுதியில் கடற்கரையில் தங்களுடைய மீன்பிடிச் சாதனங்களை வைக்கக்கூடாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேற்காணும் ஐந்து தனித்தனி பகுதிகளுக்கும் தனித்தனியே 50 மீட்டர் நீளம் மற்றும் 50 மீட்டர் அகலம் உள்ள பகுதியை வேலி அமைத்து கொடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

சுற்றறிக்கை எண் 3430/அ/81 என்று வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் எம்.ஜி.ஆர். அரசின் மீன்வளத்துறை உதவி இயக்குநர்

அவர்கள் குறித்துள்ள ஐந்து பகுதிகளில் மீனவர்கள் தொழில் நடத்த இடம் ஒதுக்கி, அதனை நடைமுறைப்படுத்துவதற்கு மாறாக - ஒரேயடியாக அவர்கள் அனைவரையும் எங்கேயோ ஒரு இடத்துக்கு துரத்தி அடிப்பதென்றால், அதனை அவர்களால் ஏற்றுக் கொள்ள இயலுமா?

ஒருமுறை மூதறிஞர் ராஜாஜி அவர்கள் குறிப்பிட்டதை நினைவுபடுத்த விரும்புகிறேன்:

மீனவர்கள் குடியிருப்பையொட்டி அவர்களின் தொழில் நடைபெற வேண்டியிருக்கிறது. அவர்களை வேறு இடங்களுக்குப் போகுமாறு சொல்வது சரியல்ல. கடலை நம்பி வாழ்க்கை நடத்தாதவர்களுக்கு அக்கடலின் அகண்ட நீர்ப்பரப்புத்தான் தெரியும். ஆனால் மீனவர்களுக்கு, அது நிலத்தைப் போல இடத்துக்கு இடம் வித்தியாசப்படும் எல்லையோடு இருப்பதாகத் தோற்றமளிக்கும் கடலில் பலபகுதிகளை அவர்கள் காண்பார்கள். காலம் செல்லச்செல்ல மாறுதல் ஏற்படும். ஆனால் அடக்குமுறை நியாயமாகாது. நாமோ நிலத்தில் வாழும் பிராணிகள். கடல் வாழ்மக்களான மீனவர்களின் வாழ்க்கையில் குறுக்கிடும் போது அவர்களுடைய வாழ்க்கை, தொழில் குறித்து நாம் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். சென்னை, மீனவர்களுக்கே உரியது. அத்து மீறி நுழைந்த நமக்கல்ல சென்னை நகரம். நகரை அழகுபடுத்தவும் மீனவர் குப்பங்களையும் அழகுபடுத்தலாமே. அவைகளை அழித்துவிட வேண்டாம். காலமறிந்து தொழில் செய்தால் தான் கடல் அன்னை அவர்களுக்குப் பலன் அளிப்பாள். உங்கள் மனப்போக்கின்படி அவர்கள் தொலைவாக வாழ இயலாது.

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மீனவர்களின் வாழ்வு குறித்தும், தொழில் குறித்தும் வெளியிட்ட கருத்துகளின் அடிப்படையிலேதான் தி.மு.கழக அரசு, இந்தியாவிலேயே முதல் தடவையாக குடிசைமாற்று வாரியத் திட்டம் கண்டபோது, மீனவர்களுக்கான குடியிருப்புகளை அவர்கள் வாழும் குப்பங்களிலேயே கட்டித்தர முடிவு செய்து, அவ்வாறே அடுக்குமாடிக் குடியிருப்புகளை குடிசைமாற்று வாரியத் தலைவராக சகோதரர் அரங்கண்ணல் இருந்தபோது, அமைத்துத் தந்தோம்.

அதேபோல, மீனவர்கள் தங்கள் மீன்பிடித் தொழில் நடத்தும் இடங்களிலேயே தொடர்ந்து வாழ்ந்திட, வசதிகளைச் செய்து கொடுத்தோம்!

தஞ்சைத் தரணியில் காவிரிப்பூம்பட்டினத்தில் புதிய பூம்புகாரை உருவாக்கியபோது கூட, அந்தக் கடற்கரையில் வாழுகிற மீனவர்களையோ அல்லது அவர்களது மீன்பிடிக் கருவிகளையோ அப்புறப்படுத்தாமல் - அதே பகுதியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட காங்ரீட் வீடுகளை மீனவர்களுக்குக் கட்டித்தந்து, மீன்பிடித் தொழிலுக்கான வசதிகளையும் பல லட்ச ரூபாய் செலவில் செய்து தந்தோம்!

இத்தனை விளக்கங்களுக்குப் பிறகும் - இந்த அரசு வீண் கௌரவம் பார்த்து வீம்பு செய்கிறதே என்கிற போதுதான், மீனவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக - அனைத்துக் கட்சிகளின் அணியும் அறப்போரில் ஈடுபட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது!

தவறு என்று தெரியாமலேகூட, ஒரு அரசு தவறு செய்துவிடலாம்! அல்லது சரி என்று எண்ணியே கூட தவறு செய்துவிட நேரிடலாம்!

ஜனநாயக நாட்டில் அந்தத் தவறு எல்லா எதிர்க் கட்சிகளாலும் சுட்டிக்காட்டப்படும் பொழுது - அப்போதும் அந்தத் தவறை திருத்திக்கொள்ள முன்வராவிட்டால், அத்தகைய அரசின் முரட்டுப் போக்கினை மாற்றிடவேண்டிய கடமை எதிர்க்கட்சிகளுக்குத் தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகிறது!

அதற்கு அடையாளமாகத்தான், நவம்பர் 13 இல் அனைத்துக்கட்சியினரின் மறியல் அறப்போர் சென்னையில் தொடங்குகிறது!

அன்புடன்

மு.க.

11-11-1985

1370. ரகுபதி ராகவ ராஜாராம்!

உடன்பிறப்பே,

மாண்புமிகு அமைச்சர் நண்பர் ராஜாராம் அவர்களுக்கு, திடீரென்று ஏதோ ஒரு ஆவேசம் ஏற்பட்டு - அல்லது அவசியம் ஏற்பட்டு - ஒரு நீண்ட அறிக்கை வெளியிட வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுக் காரசாரமாகவே - மன்னிக்கவும்! சாரம் குறைவாகவும், காரம் மிகுதியாகவுமுள்ள ஒரு வியாசத்தை அவர் போய்ச் சேர்ந்துள்ள கட்சி ஏட்டில் தீட்டியுள்ளார்.

தனக்குப் புரட்சித் தலைவரின் இடம் கிடைக்க வில்லையே என்ற ஆதங்கம் கருணாநிதி உள்ளத்தில் இருப்பது எனக்குப் புரிகிறது. அதற்காக எதை வேண்டுமானாலும் பேசி, ஒரு நல்ல நிர்வாகத்திற்குக் களங்கம் கற்பிப்பது தவறான போக்காகும்

இந்த அறிக்கை யென்னும் கட்டுரையில் மாண்புமிகு அமைச்சர் ராஜாராம் அவர்கள் குறிப்பிட்டுள்ள வாசகங்களை கவனித்தாயா?

என் உள்ளத்தை எப்படிப் புரிந்து கொண்டிருக்கிறார் பார்த்தாயா?

இடம் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் எனக்காம்!

அந்த இடம்தேடும் ஆதங்கத்தில் அலைந்தவர்கள் யார் என்பதும் - அதற்காக இழக்கக் கூடாதவற்றையெல்லாம் இழந்துவிட்டு - இடத்தை மட்டும் தக்க வைத்துக் கொள்ள இளித்துக் கிடப்பவர்கள் யார் என்பதும், நண்பர் ராஜாராம் போய்ச் சேர்ந்துள்ள இடத்திலேயே 1972 முதல் சீனியாரிட்டியுள்ள பலரும் இவர்களுக்கு எதிராக முணுமுணுத்துக் கொண்டிருப்பதும் நாடறிந்த உண்மையாக இருக்கும் போது, புரட்சித்தலைவரின் இடம் கிடைக்காத ஆதங்கத்தில் கருணாநிதி எதை வேண்டுமானாலும் பேசி, களங்கம் கற்பிக்கிறார் என்று மாண்புமிகு ராஜாராம்

அவர்கள் திருவாய் மலர்ந்தருகிற போது உனக்குச் சிரிப்புத்தான் வருமென்பது எனக்குத் தெரியும் உடன்பிறப்பே!

என்மீது எதற்காக இந்தத் தாக்குதல் தெரியுமா?

அண்மையில் நான் பரமத்தி வேலூர் பொதுக் கூட்டத்தில் பேசும் போது - இளம்பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைப்பற்றிக் குறைபட்டுக் கொண்டேன்! தூய்மையான நிர்வாகம் தருவேன் என சூளுரைத்து ஆட்சிப் பொறுப்பேற்ற ராஜீவ் காந்தி அவர்களைப் பாராட்டுகிறேன் என்றாலும், ஆண்டிப்பட்டித் தொகுதியில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். போட்டியிடுவதற்கு வேட்பு மனு தாக்கல் செய்வதற்குத் துணை செய்வது என்ற பெயரால் - அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரியை விட்டு எம்.ஜி.ஆர்., அவரது முன்னிலையில் வேட்பாளருக்குரிய உறுதிமொழியை எடுத்துக் கொண்டதாக உண்மைக்கு மாறான ஒரு தகவலைச் சொல்லச் செய்ததும், எம்.ஜி.ஆர். முதலமைச்சராக கவர்னர் முன்னிலையில் பதவிப்பிரமாணம் எடுத்ததாகச் சொல்லப்பட்ட போது வாய் திறந்து பேச முடியாத சூழ்நிலையில் ஒலிபெருக்கி அனுமதிக்கப்படாமலே அந்த நிகழ்ச்சி நடைபெற்றதும், அதற்கு கவர்னர் அவர்கள் ஒத்துழைத்ததும் ராஜீவ் காந்தி குறிப்பிட்ட தூய்மையான நிர்வாகத்தின் கீழும் வராது! ஜனநாயக ஆரோக்கியமும் ஆகாது! என்று விளக்கமளித்து விமர்சனம் செய்தேன்!

பரமத்தி வேலூர் கூட்டத்தில் நான் வைத்த வாதத்தை முறியடிப்பதாகச் சூளுரைத்து, வரிந்து கட்டிக் கொண்டு வந்துள்ளார் மாண்புமிகு அமைச்சர் ராஜாராம்!

அவரது வாதத்தின் தொடக்கமே, அவரைக் காட்டிக் கொடுத்து விடுகிற பரிதாபத்தைக் காணுகிறேன்.

தேர்தல் நடைபெற்ற போது நான் சட்டமன்றப் பேரவைத் தலைவராக இருந்தேன் என்பதை நாடு நன்கறியும்.

இது, அவரைப் பற்றிய நிலைவிளக்கம், அவரே அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது!

நாடு அதை மட்டும்தானா அறியும்? இவர் 1976ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதிவரையில், தி.மு.க. அமைச்சரவையில் ஒரு அமைச்சராக இருந்ததையும் நாடு நன்றாக அறியுமே! ஏ, அப்பா! அப்போது அவர் என்னை, ஏடு கொள்ளாமல் புகழ்ந்ததையும் நாடு அறியுமே!

ஒரு சட்டமன்றம் கலைக்கப்பட்டாலும் கூட, மீண்டும் சட்டமன்றத் தேர்தல் நடக்கும் வரையில், சபாநாயகர் மட்டும் பதவியில் நீடிக்கலாம். அதன்படி மாண்புமிகு ராஜாராம் அவர்கள் 1984 தேர்தல் நேரத்திலும் அந்தச் சபாநாயகர் பதவியில் இருந்தார். சபாநாயகர்களாயிருப்பவர்கள் அரசியல் கட்சி விவகாரங்களில், நடைமுறைகளில் ஈடுபடக் கூடாது என்பது மரபு! ஆனால் இவர், மரபைக் காப்பாற்றிய அழகை அவரது எழுத்து வாயிலாகவே அவரே, வெளிச்சமாக்கிடும் விதம் காண்க!

நான் டெல்லிக்குப் போயிருந்தேன். டெல்லியில் தேர்தல் நடத்துவது பற்றிய முடிவை மேலிடத்தில் உள்ளவர்கள் பேசியதை நான் அறியும் வாய்ப்பைப் பெற்றேன். அப்போதே நம்முடைய தலைவர், தேர்தலில் நிற்பது எப்படி என்பதற்கானச் சட்டதிட்டங்களையும், வெளிநாட்டில் இருந்து கொண்டு தேர்தலில் போட்டி போடுவதென்றால் அதற்கான வழிவகைகள் என்ன என்பதையும் அறிந்தே வந்தேன்!

ஒரு சபாநாயகர், எப்படி தனது பதவிக்குரிய மரபுகளைக் காப்பாற்றியிருக்கிறார் என்பதற்கு - அவரே தந்துள்ள சான்று இது!

அவர் டெல்லிக்குச் சென்ற போது எந்தவித அரசியல் நடத்தினார் என்பது யாருக்கும் தெரியாத ரகசியமல்ல! இருந்தாலும் அதனை மறைத்து விட்டு - எம்.ஜி.ஆர். அவர்கள், வெளிநாட்டில் இருந்து கொண்டே இங்கு வேட்பாளராக நிற்பதற்குரிய வழிவகைகளையெல்லாம் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரைப் போல மாண்புமிகு சபாநாயகர் ராஜாராம் செய்துள்ளார் என்பது அவரே வழங்கிடும் வாக்குமூலமாகும்!

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர் வசந்தபாய் அவர்கள், மேலவை உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்வதில் சில ஆண்டுகளுக்கு முன்பு எழுந்த ஒரு வழக்கில் நீதிபதி வி. இராமசாமி அவர்கள், வழங்கிய தீர்ப்பை ஆதாரமாக எடுத்துக்காட்டி வாதிடுகிறார் மாண்புமிகு அமைச்சர்!

வசந்தபாய் வழக்கில் எழுந்த பிரச்சினை என்ன? வசந்தபாய் அவர்கள் மேலவை உறுப்பினர் தேர்தலுக்கு வேட்புமனு செய்வதில் ஏற்பட்ட பிரச்சினையல்ல; அது!

வசந்தபாய் மேலவை உறுப்பினராக வெற்றிபெற்ற பிறகு, பதவிப் பிரமாணம் செய்வதில் விளைந்த சிக்கல் அது!

மாண்புமிகு அமைச்சர் குறிப்பிடும் நீதிபதி வி. இராமசாமி அவர்கள் அளித்த தீர்ப்பில், வசந்தபாய் அவர்களின் வேண்டுகோளும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"Should you however desire that I should call on you in person and read out my oath before you I shall be happy to do so, if I am intimated the time and place for the purpose"

தாங்கள் நேரத்தையும், இடத்தையும் குறிப்பிட்டால், நான் நேரில் வந்து தங்களுக்கு முன்னால் பதவிப் பிரமாணத்தைப் படித்து உறுதிமொழி எடுத்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைவேன்.

இவ்வாறு வசந்தபாய் கவர்னருக்கு எழுதியதற்கு எந்தவிதமான சாதகமான பதிலும் கிடைக்காத காரணத்தினால், வசந்தபாய் அவர்கள் தனது பதவிப் பிரமாண உறுதிமொழிப் பத்திரத்தை பூர்த்தி செய்து அவரே உறுதிமொழி எடுத்துக் கொண்டு அவரே கையெழுத்திட்டு அனுப்பி வைத்து விட்டார். அது செல்லுபடியாகும் என்பதே அந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு!

உறுதிமொழி எடுத்துக் கொள்வது தற்காலிக மேலவைத் தலைவர் முன்பா? கவர்னர் முன்பா? இது கேள்வி! கவர்னர் முன்புதான் பதவிப் பிரமாணம் செய்வேன் என்றார் வசந்தபாய்! அது வழக்காயிற்று! பின்னர் வசந்தபாய்க்குச் சாதகமாக தீர்ப்புக் கிடைத்தது!

இங்கே, ஆண்டிப்பட்டி தொகுதியில் எந்த அதிகாரி முன்னிலையில் வேட்பாளர் உறுதிமொழி எடுப்பது என்ற பிரச்சினை எழவில்லை! வேட்பாளர் எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரியின் முன்பு வாய்விட்டு உறுதிமொழியும் படிக்கவில்லை. கையெழுத்தும் போடவில்லையே! அப்போது அவருக்கிருந்த உடல்நிலை குறித்து அவருக்கு சிகிச்சை அளித்த அமெரிக்க டாக்டர் பிரட்மென் அவர்களே நிருபருக்கு அளித்த பேட்டியில் - எம்.ஜி.ஆரின் இயலாமையைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

அதையெல்லாம் மறைத்துவிட்டு, அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரக அதிகாரி - தனது முன்னிலையில் எம்.ஜி.ஆர். வேட்பாளருக்குரிய உறுதிமொழியைப் படித்து உறுதி எடுத்துக் கொண்டார் என்று சான்று வழங்கியது, எப்படி ராஜீவ் விரும்புகிற

தூய்மையான நிர்வாகத்துக்கு அடையாளமாகும்? என்பதே நமது கேள்வி!

மாண்புமிகு அமைச்சர் பெருமான் அவர்கள், நீதிபதி வி. இராமசாமி அவர்களின் தீர்ப்பில் உள்ள வாசகம் ஒன்றை தனது வசதிக்காக மறைத்து விட்டார்.

"He should read the Declaration and sign under the writing as a token of acceptance"

ஒருவர் உறுதிமொழியை படிக்க வேண்டும். அதனை ஏற்றுக் கொள்ளும் வகையில் அவர் கையெழுத்தும் இட வேண்டும். இதையும் நீதிபதி வி. இராமசாமி அவர்கள், அமைச்சர் சுட்டிக் காட்டும் வசந்தபாய் வழக்கில் குறிப்பிட்டுள்ளார்.

வசந்தபாய் உறுதி மொழி எடுப்பதற்குத் தயாராக இருந்தார். படிப்பதற்கு தயாராக இருந்தார். நேரில் வருவதற்கு தயாராக இருந்தார். எனவே குற்றம் அவர் மீதில்லை என்பது தான், அந்தத் தீர்ப்பின் சாராம்சம்!

அதை அமைச்சர் திசை திருப்ப முயன்று தோல்வியுறுகிறார் வாதத்தில்! ஏன், உண்மையான நியாயத்தில் கூட!

சென்னை கவர்னர் மாளிகையில் ஒரு சிறிய அறையில் முதல்வராக எம்.ஜி.ஆர். பதவிப் பிரமாணம் எடுத்தாராம்! அதனால் வானொலியின் ஒலிபெருக்கியோ - தொலைக்காட்சி ஒலிபெருக்கியோ அந்த அறைக்குள் அமைக்கவில்லையாம்! அதனால்தான் எம்.ஜி.ஆர்., உறுதிமொழியைப் படித்தது உலகத்திற்குத் தெரியாமல் போய்விட்டதாம்! இது அமைச்சரின் வாதம்!

அய்யோ பாவம்! என்ன இருந்தாலும் இந்த கவர்னர், கிண்டி ராஜபவனத்தில் - ஒரு முதலமைச்சரின் பதவிப்பிரமாண விழாவுக்கு ஒலி பெருக்கிக்கூட நுழைய முடியாத ஒரு சிறிய அறையை ஒதுக்கியிருக்கக்கூடாது!

அதுவும் இந்த முதல்வர், அண்ணா சாலை அண்ணா சிலையைச் சுற்றி மேடைபோட்டு - பொதுமக்கள் முன்னிலையில் பதவியேற்ற, கடந்த கால நிகழ்ச்சி எல்லாம் இருக்கும்போது - அமைச்சர் ராஜாராம் அவர்கள் குற்றம் சாட்டுவது போல, அவ்வளவு பெரிய கவர்னர் மாளிகையில், பதவியேற்பு விழாவுக்கு ஒரு சிறிய

அறையையா ஒதுக்குவது? அதுவும் ஒலிபெருக்கி நுழைய முடியாத அறையையா ஒதுக்குவது?

பிரதமர் ராஜீவ் காந்தியின் பதவியேற்பு விழாவில் அவரது உறுதிமொழி ஒலிபரப்பப்பட்டது! புதுவை பரூக் மரைக்காயர் பதவியேற்பு விழாவில் அவர் உறுதிமொழி எடுத்தது ஒலிபரப்பப்பட்டது!

ஆனால்!

ஆனால்!!

இங்கே என்ன நடந்தது? ராஜீவ் காந்தி விரும்புகிற தூய்மையான நிர்வாகமெனும் Clean Administrationக்கு விரோதமாக கவர்னர் பெருமானே ஒத்துழைத்தார்! அதற்கு ராஜீவ் அவர்களே துணை நின்றார் என்பதே குற்றச்சாட்டு!

இதற்குப்போய் ராஜாராம் அவர்கள் இவ்வளவு பதறுவானேன்? காரணம், உனக்கும் புரியும்! ஊருக்கும் புரியும்! தேவைப்பட்டால் மேலும் புரியவைக்கவும் ஆதாரங்கள் உண்டு என்னிடம்!

அன்புடன்

மு.க.

07-12-1985

1371. இன்று எம்.ஜி.ஆரின் அடக்குமுறைக் கண்டன நாள்!

உடன்பிறப்பே,

கடந்த நவம்பர் திங்கள் 4ஆம் நாள், விடியற்காலை எந்தவிதமான முன்னறிவிப்போ - அல்லது மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தையோ நடத்தாமல்... திடீரென்று பல்லாயிரக்கணக்கான போலீசார் பெரும் படையெடுப்பு ஒன்றை நடத்தி, மெரினா கடற்கரையையும் - அங்குள்ள மீனவர் குப்பங்களையும் முற்றுகையிட்டு, மீனவர்களது கட்டுமரங்கள், மீன்பிடிக் கருவிகள் அனைத்தையும், ஒரு எதிரியின் நாட்டைப் பிடித்து அங்கு சிக்கிய போர்த்தளவாடங்களைக் கைப்பற்றியது போலக் கொள்ளையடித்துச் சென்றனர்.

கொதிப்படைந்த குப்பத்து மீனவர்கள் கொட்டும் மழையில், இரண்டு மூன்று நாட்கள் உண்ணாவிரதமிருந்தனர். அந்தக் குளிரில் - மழையில் - ஒரு மூதாட்டி ஜன்னி கண்டு, உண்ணாவிரதமிருந்த அந்த இடத்திலேயே உயிர் விட்டார்!

எம்.ஜி.ஆர். மனம் அப்போதும் இரங்கிடவில்லை!

கோதண்டபாணி என்ற மீனவ வாலிபர், தனது சமுதாயத்தின் பிழைப்பே நாசமாக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டி, அரசாங்கக் கோட்டைக்கு முன்பு உடலுக்குத் தீயிட்டுக் கொண்டு கருகிச் செத்தார்!

எம்.ஜி.ஆரின் இதயத்தில் அப்போதும் கருணை சுரக்கவில்லை!

இனி எப்படி குடும்பத்தைக் காப்பாற்றுவேன் என்று கதறி, மீனவக் குடும்பத்தலைவர் ஒருவர் தூக்கு மாட்டிக் கொண்டார்!

எம்.ஜி.ஆர். அப்போதும் துடித்துப் பதறவில்லை!

மீனவர்கள் தொடர்ந்து போராடினர்! பழையபடி அவர்களது மீன்பிடித் தொழில் தொடர, முன்பு அறிவிக்கப் பட்டிருந்த இடங்களையும், கட்டுமரங்களையும் திருப்பித் தருக என அனைத்துக் கட்சிகள் சார்பில் அரசை வலியுறுத்தினோம்!

ஆணவப்பேச்சும், அலட்சியப்பார்வையும்தான் அரசிடமிருந்து பதிலாகக் கிடைத்தன!

மீனவர்களுக்கு ஆதரவாக அனைத்துக்கட்சி சார்பில் தொடர் மறியல் போராட்டம் நடைபெறும் என அறிவித்தோம்!

பின்னர், மீனவர் சங்கப்பிரதிநிதிகளைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தனர்!

பேச்சுவார்த்தை மூலம் நல்ல முடிவு ஏற்படட்டும் என அறிவித்து, போராட்டத்தையும், போராட்ட அறிவிப்புப் பொதுக் கூட்டத்தையும் ஒரு முறையல்ல - இருமுறைகள் ஒத்தி வைத்தோம்!

ஆனால் மீன்பிடிக்கவும், கட்டுமரங்களை வைக்கவும் வசதியற்ற இடங்களையே - அதுவும் இரண்டே இரண்டு இடங்களையே தரமுடியுமென பேச்சு வார்த்தை நடத்திய அமைச்சர்களும், அதிகாரிகளும் அறிவித்துவிட்டனர்!

மெரினாவை அழகுபடுத்துவது என்ற அடிப்படையில் கழக ஆட்சியில் கட்டுமரங்களை வைப்பதற்கு ஒதுக்கப்பட்ட இடங்களையோ - அல்லது அ.தி.மு.க. ஆட்சியில் 1981ஆம் ஆண்டு விடுத்த சுற்றறிக்கையின்படி, ஒதுக்கப்பட்ட ஐந்து இடங்களையோ வழங்க வேண்டும் என்ற மீனவர் கோரிக்கையை எம்.ஜி.ஆர். அரசு காலில் போட்டு மிதித்து விட்டது.

அனைத்துக்கட்சி சார்பில் நடத்துவதாக இருந்து, ஒத்திவைக்கப்பட்ட மீனவர் பாதுகாப்பு மறியல் போராட்டத்தை டிசம்பர் 9 ஆம் தேதி முதல் தொடர்ந்து நடத்துவதாக முடிவு எடுக்கப்பட்டது.

அதற்கிடையே சுப்ரீம் கோர்ட்டின் இடைக்காலத் தீர்ப்பு மீனவர்களுக்குச் சாதகமாகக் கிடைக்குமென்ற யூகங்கள் சட்டத்துறையாளர்கள் மத்தியில் பேசப்பட்டன!

இந்த நிலைமையில் - அந்த மீனவர்கள், இப்போதுள்ள குப்பங்களில், குடிசைமாற்று வாரிய வீடுகளில் இருந்தால்தானே

பிரச்சினை - அவர்களை ஒரேயடியாகத் துப்பாக்கியால் சுட்டுத் துரத்தி விடலாமென்று திட்டம் தீட்டப்பட்டது!

இந்தத் தீய திட்டத்துக்கு பலியாக வேண்டியவர்களாக மீனவர்களும், காவல்துறையினரும் ஆகிவிட்டதுதான் மிகப் பரிதாபம்!

எடுத்த முடிவிலிருந்து என்ன நடந்தாலும் இறங்க மாட்டேன் என்ற எம்.ஜி.ஆரின் முரட்டுப் பிடிவாதமும் - அவரது ஆவேசத்தை அதிகப்படுத்த உடுக்கு அடிக்கும் ஒரு சில அதிகாரிகளின் வெறித்தனமும் சேர்ந்து கொண்ட காரணத்தால் - போலீசாரும், மீனவர்களும் மோதிக் கொண்டு, ஏழு அல்லது எட்டு மீனவர்களின் பிணங்கள் மெரினா கடற்கரையிலே விழுந்திருக்கின்றன!

பல மீனவர்கள் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டு - ஒரு குழந்தை - ஒரு மூதாட்டி - இவர்கள் எல்லாம் கூட துப்பாக்கி ரவைகள் துளைத்த காயங்களுடன் மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

சில காவலர்கள் சொற்ப காயங்களுடன் மருத்துவ மனையில் இருக்கின்றனர்.

நானும், அனைத்துக்கட்சித் தலைவர்களும் - மீனவர்கள், போலீசார் இரு சாராரையும், மருத்துவமனையில் பார்த்து ஆறுதல் கூறினோம்!

இத்தனை மீனவர்களின் உயிர்கள் பறிக்கப்படவும் - மீனவரல்லாத பொது மக்கள் சிலரும் கூட படுகாயமுற்றிடவும் - இன்னும் சில மீனவர்கள் பிழைப்பது சிரமம் என்ற நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதுமான இந்தக் கொடுமைக்கெல்லாம் காரணம் என்ன?

மெரினாவை அழகுபடுத்துவதில் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஏற்பட்ட அக்கறை!

மெரினா கடற்கரை அழகாக இருக்கக்கூடாது என்று யார் சொன்னது?

இப்பொழுது மீனவர்களின் ரத்தத்தால், மெரினாவுக்குச் சிவப்பு வண்ணம் பூசி, மிக அழகாக ஆக்கிவிட்டாரே எம்.ஜி.ஆர்.! இது தேவைதானா?

எத்தனைமுறை வேண்டுகோள் விடுத்தோம்! கேட்டாரா?

எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளைத்தான் கேட்கவில்லை. அவர்களது தோழமைக்கட்சியான இந்திரா காங்கிரஸ் எவ்வளவு மென்மையாக வேண்டுகோள் விட்டது. அதையாவதுக் காதில் போட்டுக் கொண்டாரா?

பெரும்பாலான ஏடுகளில் தலையங்கம் தீட்டி, பிரச்சினையை வளரவிட வேண்டாம் என்று அறிவுரை கூறப்பட்டதே! அதையாவது கேட்டாரா?

மறியல் போராட்டத்தையே ஒத்தி வைத்துள்ளோம். பேச்சுவார்த்தையில் நல்ல முடிவு காணுங்கள் என அறிவித்தோமே! அதற்காவது மதிப்பளித்தாரா?

குரங்கு ஆப்பசைத்ததைப் போல - அதுவும் குடித்துப் போதையேறிய குரங்கு ஆப்பசைத்தது போல - குடிசை மாற்று வாரியத்தை விட்டு, அந்த நொந்து கிடக்கும் மீனவர்களின் வெந்து போன உள்ளத்தில் கொள்ளிக்கட்டை கொண்டு குத்தச்சொல்லி, அதன் விளைவாக, குய்யோ! முறையோ! எனக் குப்பங்களில் கூச்சல் - குழப்பம் - கொலைவெறி - தீ வைப்பு!

சடசடவெனச் சாய்ந்தன பிணங்கள்!

தலை நொறுங்கிடும் அளவிற்குத் துப்பாக்கிச் சூடுபட்டு மாண்டு மடிந்த மீனவ மக்கள் - அவர்களைச் சுற்றிப் புலம்பித்தவித்து கண்ணீரும் கம்பலையுமாக துடித்துப்புரளும் தாய்மார்கள்! இந்தக் கோரக் காட்சிகள் ஏடுகளிலே படங்களாக வருகின்றன! நெஞ்சு அதிர்கிறது!

உடன்பிறப்பே, இதற்கிடையே ஆளுங்கட்சி நடத்துகிற தலைவலி நாடகங்களும், நகைச்சுவைக் காட்சிகளாகக் காட்டப்படுகின்றன!

அதிகாரம் - பணம் - இவைகள் இருக்கின்றன என்ற மமதையில் எதை வேண்டுமானாலும் செய்யலாம். இன்னமும் நம்புவதற்கும், கேட்பதற்கும் ஏமாளிகளும், பாமரர்களும் இருக்கிறார்கள் என்ற துணிவுடன் ஆளுங்கட்சியினர் ஆட்டம் போடுகிறார்கள்!

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்கு, ஐம்பது கோடி மக்களும் தியாகம் செய்திடப் புறப்படவில்லை!

சில லட்சம் பேர் அடக்குமுறைகளை ஏற்றுச் சிறை சென்றனர் - ரத்தம் சிந்தினர்!

சில ஆயிரம்பேர் செத்துமடிந்தனர்! அதேபோலத் தான் இந்த அராஜக அரசிடமிருந்து தமிழகத்தின் பல்வேறு பிரிவு மக்களும் விடுதலை பெற்று - நிம்மதியான நல்வாழ்வு - நிர்வாகச் சீர்குலைவில்லாத வாழ்வு பெற்றிட இந்த மாநிலத்து ஐந்து கோடி மக்களுமே எழத் தேவையில்லை!

மீனவர் மீது நடத்திய படுகொலை வெறியாட்டம் - ஆசிரியர்கள் மீது அவிழ்த்து விடப்படும் அடக்குமுறை - இவைகளை எதிர்த்து தங்களைத் தாங்களே அர்ப்பணித்துக் கொள்கிற அமைதிவழி அறப்போர் நடத்திட,

தியாகச் சிப்பாய்கள் ஆயிரக்கணக்கானோர் உண்டு என்பதை எடுத்துக் காட்டும் வகையில்,

டிசம்பர் 8ஆம் நாளான இன்று, அனைத்துக் கட்சித் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப குறுகிய கால அறிவிப்பாக இருந்தாலும் கூட, முடிந்தவரை எல்லா மாவட்டங்களிலும் ஆங்காங்கு எம்.ஜி.ஆர். அரசின் அடக்குமுறைக் கண்டன ஊர்வலங்களையும், கூட்டங்களையும் வெற்றிகரமாகவும் - அமைதியாகவும் நடத்திட வேண்டுகிறேன்!

அன்புடன்

மு.க.

08-12-1985

1372. நாகாக்க! எனும் குறள், நாவலர் அறியாததா?

உடன்பிறப்பே,

நிதி அமைச்சர் நாவலர் அவர்கள், கடந்த சில நாட்களாக மேடைப் பேச்சுகளில் மிகவும் தரக் குறைவான வாசகங்களைப் பொழிந்து வருவது குறித்து, 27ஆம் தேதி சென்னைப் பதிப்பு தினகரன் இதழில் ஒரு தலையங்கம் வந்துள்ளது.

நாவலரின் பேச்சில் இப்போதுதான் நாவடக்கமும், நாகரிகமும் இல்லையென்பது போல, தினகரன் இதழ் வருத்தப்படுவது எனக்கு வியப்பைத்தான் அளிக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில், நாவலர் அவர்கள் கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்தபோதே, காங்கிரஸ் அமைச்சரவையில் இருந்த காமராசர், கக்கன், பக்தவத்சலம், சுப்பிரமணியம், வெங்கட்ராமன் ஆகியோரைப்பற்றி நாவலர் அவர்கள் மேடைகளில் குறிப்பிடும் போது, காமன், கக்கன், பக்தன், சுப்பன், வெங்கன் என்றுதான் தனக்கேயுரிய நீட்டி முழக்கி இழுக்கும் பாணியில், நையாண்டி செய்து சொற்பொழிவு நிகழ்த்துவார். அதுகுறித்து அண்ணா அவர்களே, நாவலரிடம் நீ ஒரு பொதுச்செயலாளராக இருந்து கொண்டு இப்படியெல்லாம் பேசலாமா? என்று அடிக்கடி அறிவுரை கூறியதுண்டு! அதை நாவலர் காதில் போட்டுக் கொள்வதேயில்லை! அண்ணா கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் அப்படி அமைச்சர்களின் பெயர்களை உச்சரிக்காமல், கிராமப்புறக் கூட்டங்களில் நாவலர் மட்டும் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில், தனது பாணியிலேயே காங்கிரஸ் அமைச்சர்களின் பெயர்களை உச்சரிப்பார்!

இவ்வாறு அந்தக் காலம் முதல் இயல்பாகிப் போய்விட்ட ஒன்றை நாவலர் அவர்கள், இப்போது மாற்றிக் கொள்வதென்றால், அது முடியாத காரியம்தான். அவருக்கு!

ஆசிரியர்கள் போராட்டம் குறித்து மிக ஆவேசமாகச் சொற்களை அள்ளி வீசிவரும் நாவலர் அவர்கள், மதுரைப் பொதுக் கூட்டமொன்றில் பேசியதாக ஏடுகளில் செய்தி படித்தேன்.

புரட்சித் தலைவரால் பேச முடியவில்லை என்கிறார்கள். அதனால் என்ன? கம்யூனிஸ்டு தலைவர்களான பி. ராமமூர்த்திக்கு நடக்க முடியாது. கல்யாணசுந்தரத்திற்கு நிற்க முடியாது. பக்தவத்சலத்திற்குப் பார்க்க முடியாது. கட்டபொம்மன் தம்பி ஊமையன் ஆட்சி நடத்தவில்லையா? அவன் பெயரில் ஊமையன் கோட்டை இருக்கிறதே!

இது நாவலரின் பேச்சு! ஆம், தமிழகத்தின் மாண்புமிகு நிதி அமைச்சர் பெருமான் அவர்களின் பேச்சு!

உடன்பிறப்பே, எம்.ஜி.ஆர். நன்றாகப் பேசுகிறார் - ஜப்பானில்இருந்து நாவலருடனும், தலைமைச் செயலாளருடனும் தொலைபேசியில் உரத்தகுரலில் அரைமணி நேரம் பேசினார் - என்றெல்லாம் சொன்னவர்களும் அவர்கள்தான்! இன்று பேசமுடியாவிட்டால் என்ன? என்று கேள்வியை அவர்களே கேட்டுக் கொண்டு ராமமூர்த்தி, கல்யாணசுந்தரம், பக்தவத்சலம் போன்ற தலைவர்களைத் தேவையில்லாமல் கேலி பேசுவதும் அவர்கள்தான்!

ஆத்திரத்தில் வரலாற்றுக் குறிப்புகளைக்கூட, நாவலர் அவர்கள் சரியாகச் சொல்லாமல், ஏதோ பாமரக் குடிமகன் ஒருவனைப்போல, மதுரையில் நடந்த அந்த மாபெரும் பொதுக்கூட்டத்திலே கூறியிருக்கிறார்.

ஊமையன் ஆட்சி நடத்தவில்லையா? என்று கட்டபொம்மன் தம்பியைப் பற்றி நாவலர் குறிப்பிடுகிறார்! அவன் ஆட்சி நடத்தியதாகச் சான்றுகள் இல்லை! அப்படியே நடத்தியிருந்தாலும் முடியாட்சி காலத்து முறைகள்; குடியாட்சி காலத்துக்கும் பொருந்தும் என்று நாவலரே உளமாரக் கருத மாட்டார் என்று எனக்குத் தெரியும்!

ஊமையன் கோட்டை என அழைக்கப்படும் அந்தக் கோட்டைக்கும், கட்டபொம்மன் தம்பி ஊமையனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்றும், திருமயம் கோட்டை என்ற பெயர்தான் காலகட்டத்தில் இவ்வாறு உச்சரிப்பு மாற்றம் பெற்றுள்ளது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுவர்!

இராமன் காடாண்ட போது பதினான்கு வருடங்கள் நாடாண்டது எது தெரியுமா? என்று கூடக் கேட்டு, நாவலர் பெருமான் அவர்கள், தனது வாதத்திற்கு வலுவேற்றிட முன் வரக் கூடும்! ஆனால் அந்த வாதங்கள் அனைத்தும் முடியாட்சிக்குத்தான் பொருந்துமே தவிர, குடியாட்சிக்குப் பொருந்தவே பொருந்தாது!

உடன்பிறப்பே! ஆசிரியர் போராட்டத்தைச் சீறி விழுந்து, பாய்ந்து காய்ந்து கண்டிக்கும் எனது பழைய நண்பர் நாவலர் அவர்கள், அந்தப் போராட்டத்தைத் தூண்டி விட்டதே நான்தான் என்று என்மீதும் கணைகளைத் தொடுக்கிறார்! நண்பர் மீனாட்சிசுந்தரம் எம்.எல்.சி. தி.மு.க.வாம்! அதனால் தி.மு.க.தான் ஆசிரியர் போராட்டத்தை நடத்தியதாம்! இது நாவலர் அவர்களின் கணிப்பு! ஆசிரியர் போராட்டக் கூட்டு நடவடிக்கைச் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவர், அ.தி.மு.க.வைச் சேர்ந்த திருமதி லீலாவதி எம்.எல்.சி. என்பதை நாவலர் பெருமான் அவர்கள், ஏனோ மறந்துவிடுகிறார்! நல்லவேளை சென்னையில் மாநகராட்சித் தேர்தலை நடத்தக் கோரி, மறியல் நடத்திக் கைதான இந்திரா காங்கிரஸ்காரர்களையும் கருணாநிதிதான் தூண்டி விட்டார் என்று சொல்லாமல் விட்டாரே!

ஆசிரியர்களாகப் போராடிப் பார்த்து, அடக்குமுறைகளால் துளைக்கப்பட்டு, இறுதிக் கட்டத்திலேதான், தங்கள் போராட்டத்திற்கு ஆதரவு தரவேண்டுமென்று ஆசிரியர் போராட்டக் கூட்டு நடவடிக்கைக் குழு உறுப்பினர்கள் மயில்சாமி எம்.எல்.சி., சாமிநாதன், சண்முகம், முத்துசாமி, மஜீத், மீனாட்சிசுந்தரம் எம்.எல்.சி., சங்கரலிங்கம் எம்.எல்.சி. ஆகியோர் அன்பகத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களைச் சந்தித்தனர்.

அந்தக் காலகட்டம் வரையில், ஆசிரியர் பிரச்சினையை அழைத்துப் பேசித் தீர்த்திடுக என அரசுக்கு வேண்டுகோள் விடுத்துத்தான் அனைத்துக்கட்சிக் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தன!

ஆசிரியர் போராட்டக் குழுவினர் தங்கள் நிலையை அனைத்துக்கட்சித் தலைவர்களைச் சந்தித்து எடுத்துக் கூறிய பிறகுதான், அவர்கள் போராட்டத்துக்கு ஆதரவாக அனைத்துக் கட்சிகளும் போராட்டத்தில் ஈடுபடுவதென முடிவெடுக்கப்பட்டது. அதன்பிறகே, ஆசிரியர் போராட்டக்

குழுவுக்கு முதலமைச்சரிடமிருந்து நள்ளிரவில் அழைப்பு அனுப்பப்பட்டு - பின்னர் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று, எப்படியோ போராட்டம் முடிவுக்கு வந்தது!

ஆனால் நாவலர் அவர்கள், பிரச்சினையை இன்னும் விடமாட்டேன் என்று பிடிவாதமாக மேடைகளில் ஏறிக்கொண்டு முண்டா தட்டும் பாணிப் பேச்சுக்களில் இறங்கியிருக்கிறாரே! அது ஏன் என்றுதான் எனக்குப் புரியவில்லை!

மதுரையில் முழக்கிய நாவலர், அடுத்து அருப்புக் கோட்டையிலும் முழக்கியிருக்கிறார்! அந்த முழக்கத்தில் நாவலர் அவர்கள், தன்னை மறந்து, என்னை நினைந்து ஏதேதோ பேசியிருக்கிறார்!

கலைஞருக்கு ஏதாவது பிணம் கிடைக்க வேண்டும். இப்போது செய்யாறு தேர்தலிலே கூட ஆசிரியர் பிணம், மீனவர் பிணங்களைத் தூக்கி கொண்டு வந்துவிட்டார். அனுதாபத்தை வைத்து, பிணத்தை வைத்து தேர்தல் நடத்துகிற யோக்யதை கலைஞருக்கு மட்டும் தான் உண்டு. இந்திரா காங்கிரசுக்கோ, அ.தி.மு.க.வுக்கோ இல்லை. நாங்கள் கொள்கைகளை வைத்துத் தேர்தலை நடத்துபவர்கள்!

அருப்புக்கோட்டையில் நாவலர், அருளிய மணிவாசகமிது!

தன்னை மறந்து, என்னை நினைந்து பேசியிருக்கிறார் என்பதற்கு இதைவிட, வேறு என்ன சான்று வேண்டும்!

ஆத்தூரில் வீடியோ படம் போடவில்லையென்றால், நான் முப்பதாயிரம் ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்க மாட்டேன். வீடியோ படம் தான் அவனவனுக்கும் ஓட்டுகளை வாரிக் கொட்டியது.

அதே அருப்புக்கோட்டை கூட்டத்தில், இதுவும் நாவலர் பேசியதுதான்!

அ.தி.மு.க.வும், இந்திரா காங்கிரசும் அனுதாபத்தையோ, பிணத்தையோ வைத்துத் தேர்தலை அணுகிடாது - கொள்கைகளை வைத்துத்தான் அணுகும் என்று வீரங்கொப்பளித்த உரையாற்றிய நாவலர், அடுத்த விநாடியே வீடியோ படங்கள் தான் எங்களுக்கு ஓட்டுகளை வாரிக் கொட்டின என்கிறாரே! அய்யே - என்ன முரண்பாடு! என்ன முரண்பாடு!

எம்.ஜி.ஆர்., நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் உள்ள வீடியோ - சுட்டுக் கொல்லப்பட்ட அன்னை இந்திராவின் சவ ஊர்வலக்காட்சி அடங்கிய வீடியோ - இரண்டிலும் அனுதாப அணுகுமுறையோ, அல்லது பிணத்தைக் காட்டிடும் அணுகுமுறையோ இல்லை என்பது நாவலரின் வாதமாக இருக்க முடியாது!

வந்த பதவியைக் காப்பாற்றிக் கொள்ள, வாய்க்கு வந்தபடி பேசித்தான் ஆகவேண்டுமென்ற ஒரு நிலை வந்துவிட்ட பிறகு, வாதமாவது! வெங்காயமாவது!

ஆசிரியர், மீனவர் பிணங்களை செய்யாறு தேர்தலுக்கு நான் தூக்கிக்கொண்டு ஓடினேனாம்!

மெரினாவை அழகுபடுத்துதல் என்ற பெயரால், தேவையில்லாமல் ஒரு பிரச்சினையை விலைகொடுத்து வாங்கி - ஆறு ஏழு மீனவர்களின் உயிர் பறிக்கப்பட்ட கொடுமையையும், ஆசிரியர் போராட்டத்தில் ஒரு இளம் ஆசிரியர் சிறையில் கவனிப்பற்று மாண்ட அநியாயத்தையும், சுவரொட்டிகளாக வெளியிட்டால், கருணாநிதி பிணங்களைத் தூக்கிக் கொண்டு அலைகிறான் என்று நாவலர் அவர்கள் ஏளனம் புரிவதா?

உடன்பிறப்பே, இந்த கடித வாயிலாக நாவலருக்கு சில கேள்விகள்!

கூலி உயர்வு கேட்டான், அத்தான்! குண்டடிபட்டுச் செத்தான் என்று அண்ணா அவர்களாலே எழுதப்பட்ட வாசகம் தாங்கிய சுவரொட்டிகள், தாங்கள் பொதுச்செயலாளராக இருந்த காலத்தில் தி.மு.கழகச் சார்பில் தேர்தல் நேரத்தில் ஒட்டப்படவில்லையா?

விலைவாசிப் போராட்டத்தில், குண்டு துளைத்து, குருதி கொட்டத் துடித்தவர்களின் படங்கள், தேர்தல் காலத்தில் தங்களைப் பொதுச்செயலாளராகக் கொண்டிருந்த கழகத்தின் சார்பில் சுவரொட்டிகளாக ஒட்டப்படவில்லையா?

தி.மு.க.வில் இறுதிவரையில் அமைச்சராக இருந்து விட்டு, இனி அ.தி.மு.க.வுக்குப் போனால்தான் பதவி கிடைக்குமென அங்கே சென்றிருக்கிறீர்களே! அவர்கள் என்ன - உங்கள் பாஷையில் சொன்னால் பிணங்களைத் தூக்கிக் கொண்டு போய் தேர்தல் நடத்தாதவர்களா? அரசியல் காரணம் எதுவுமின்றி

ஏதோ ஒரு காரணத்திற்காக, பூலாவரியில் நடைபெற்ற ஒரு கொலையைப் பூதாகரமாக்கிப் போஸ்ட்டர் போட்டவர்கள் தானே! இல்லையென்று சொல்கிறீர்களா, நாவலரே?

உடன்பிறப்பே, நாவலர் அவர்களிடமிருந்து இதற்கெல்லாம் பதிலை எதிர்பார்க்க முடியாது! சுடப்பட்டு ரத்தம் சொட்டுவது போல் சித்தரிக்கப்பட்ட அன்னை இந்திராவின் சுவரொட்டிகள், கட் அவுட்கள் - இவற்றை யெல்லாம் வைத்துப் பொதுத் தேர்தலில் வென்றிட்ட நிகழ்ச்சியை நாவலர் அவர்கள், அவ்வளவு விரைவில் மறந்திருக்க முடியாது!

அருப்புக்கோட்டையில் நாவலர் அவர்கள், இன்னுமொரு அரிய கண்டுபிடிப்பையும் வெளியிட்டிருக்கிறார்.

என் மகனுக்கு முன்னால் நான் தந்தை! என் மனைவிக்கு முன்னால் நான் கணவன்! தங்கைக்கு முன்னால் அண்ணன்! ஆத்தூர் தொகுதிக்கு வந்தால் எம்.எல்.ஏ.! கோட்டையில் நிதி அமைச்சர்! இடத்துக்கு இடம் மாறுபடுகிறது! அதே போல, நீ ஆசிரியராக இருக்கும் வரை தான் ஆசிரியர்! ஆர்ப்பாட்டம் செய்தால் ஆசிரியரல்ல, ஆர்ப்பாட்டக்காரன்தானே!

மகனுக்கு முன்னால் தந்தை என்கிறார்! தந்தையாகிய நாவலர் ஒரு போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றால், அவர் மகன் என்ன சொல்லுவார்? என் தந்தை போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றார் என்றுதானே கூறுவார்! அப்படிச் சொல்லாமல் ஒரு ஆர்ப்பாட்டக்காரர் சிறை சென்றார் என்றா கூறுவார்! அதே போலத்தான் என் கணவர் சிறை சென்றார் என்று துணைவியாரும், என் அண்ணன் சிறை சென்றார் என்று தங்கையும் கூறுவார்கள்!

கோட்டையிலிருந்தால் நிதியமைச்சர், ஆத்தூர் தொகுதியில் இருந்தால் எம்.எல்.ஏ., என்கிறாரே? நாவலர் ஆத்தூர் போகும்போது நிதியமைச்சருக்குரிய பந்தாக்கள், பந்தோபஸ்துகள், எதுவுமின்றித் தான் சென்றாரா?

ஒரு கோரிக்கைக்காக ஒரு போராட்டத்தில் கலந்து கொண்டால் - அப்போது அவர்களது பதவியோ, உத்தியோகமோ முற்றாக அற்றுப்போய் ஆர்ப்பாட்டக்காரர் என்ற நிலைதான் மிஞ்சுமென்ற நாவலரின் கூற்றினை ஏற்றுக்கொள்வதாயிருந்தால்-

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மத்திய அரசுக்கு வலியுறுத்த அரிசி கேட்டு ஒருநாள் உண்ணாவிரதமிருந்தாரே,

அப்போது முதலமைச்சரின் உண்ணாவிரதம் என்றுதான் கூறப்பட்டதே தவிர; எம்.ஜி. ராமச்சந்திரன் என்ற ஆர்ப்பாட்டக்காரரின் உண்ணாவிரதம் என்றா நாவலர் கூறினார்!

அப்படிக் கூறுவது அறிவுடைமையாகாது என்பது நாவலருக்குத் தெரியாதா என்ன?

என்னமோ பாவம் - மேடையும், ஒலி பெருக்கியும் கிடைத்து விட்டால் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்ற நிலையிலிருப்போருக்கு, நாவலர் ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார் என்பதை நினைக்கும் போது, வருத்தமாகத்தானிருக்கிறது! யாகாவாராயினும் நா காக்க என்ற குறளை நாவலருக்கு நானா நினைவுபடுத்த வேண்டும்? அவரே அதற்கு அருமையாகப் பொருள் கூறும் புலவராயிற்றே!

அன்புடன்

மு.க.

28-12-1985

1373. இன்னொரு எமர்ஜன்சி - இந்தியா தாங்காது!

உடன்பிறப்பே,

பம்பாய் நகரில் நடைபெற்ற, இ.காங்கிரஸ் விழாவில் - அதனைக் காங்கிரஸ் நூற்றாண்டு விழா எனவும் கூறுகிறார்கள் - எந்த விழா என்பது முக்கியமல்ல, அங்கே கலந்து கொண்டு உரையாற்றியவர்களில் நமது பிரதமர் முக்கியமானவர் என்பதை எவரும் மறுக்க முடியாது!

மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் என்பார்களே! அதைப்போல நமது இளம் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு, இந்தியா சுதந்திரம் பெற்ற கடந்த முப்பத்தியெட்டு ஆண்டுக்கால நிலவரத்தைத் திரும்பிப் பார்க்கும் போது - வலுவானதும், சுபீட்சமானதுமான இந்தியாவை இனிமேல்தான் நிர்ணயிக்க வேண்டுமென்று தோன்றுகிறது! அதை அப்படியே பேசவும் செய்கிறார். பம்பாய் விழாவில் பேசியுமிருக்கிறார். அதே சமயம் அவரது நெஞ்சிலே ஒரு நெருடல்! முப்பத்தி எட்டு ஆண்டுகாலத்தில் முன்னேறவேண்டிய அளவுக்கு இந்த நாடு முன்னேற முடியாமல் - ஆமை வேகத்தில் நடைபோட்டதற்குக் காரணம் என்ன? அதையும் யோசிக்கிறார்! தனது ஆட்சித் திறமையினால் புதிய இந்தியாவை - வலுவான இந்தியாவை - விஞ்ஞான மனோபாவமும், வளர்ச்சியுமுள்ள நவீன இந்தியாவை நிர்மாணிக்க முடியுமென அறைகூவல் விடுக்கிறார்! ஆட்சித் திறனால் அத்தகைய வியத்தகு முன்னேற்றத்தை விரைவுபடுத்த முடியுமென்று அவர் எண்ணிடும் பொழுது, இதற்கு முன்பு ஆட்சிபீடத்தில் இருந்த பிரதமர்கள் அந்த நற்செயலைப் புரியவில்லையே என்ற நினைவு, மறைமுகத் தாக்குதலை அவர் மனச்சாட்சியின் மீது தொடுக்கிறது!

மொரார்ஜியாகட்டும், லால்பகதூராகட்டும் இரண்டொரு ஆண்டுகளே பிரதமர்களாக இருந்தனர். பண்டித நேருவாம், ராஜீவ்

அவர்களின் பாட்டனாரும் - இந்திரா காந்தியாம், ராஜீவ் அவர்களின் அன்னையாரும் மொத்தமுள்ள 38 ஆண்டுகளில் முப்பத்திரெண்டு ஆண்டுகளுக்கு மேல் இந்தியப் பிரதமர் இருக்கையிலே அமர்ந்து அரசோச்சியுள்ளனர். அவர்களது ஆட்சிக்குப் பிறகும் இளம்பிரதமர் ராஜீவ் அவர்களின் கண்முன்னால் தோன்றுவது! வளமற்ற - வலிவற்ற - ஊழல்மலிந்த - ஒரு இந்தியாதான்!

பாவம்! ராஜீவ் அவர்களால் யாரைக் குறை கூற முடியும்! தாயார் இந்திரா அம்மையாரையும் - தாத்தா நேரு பெருமகனாரையும் குற்றம் சாட்டுவதென்றால், புதிய பிரதமருக்கு ஒரு தர்மசங்கடமான நிலை தானே!

எனவே, சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், தொழிற்சங்கவாதிகள், ஏடு நடத்திடுவோர், எதிர்க்கட்சி வரிசையில் இருப்போர், ஆசிரியர், மாணவர், அதிகாரிகள், காவல்துறையினர் இப்படிச் சகட்டு மேனிக்கு அனைவரையும் குறை கூறிவிட்டு, தனது கட்சிக்காரர்களுக்கும் சேவாமனப்பான்மை, தியாக உள்ளம் இல்லாமற் போய்விட்டது என்று முழக்கமிட்டிருக்கிறார்.

அவர் குறிப்பிட்டுள்ளது, தவறான கண்ணோட்டத்தின் பாற்பட்டது என நான் வாதிடவில்லை,

ஆட்சி முறைகளில் எது சிறந்தது? ராணுவ ஆட்சியா? சர்வாதிகார ஆட்சியா? முடியாட்சியா? குடியாட்சியா? என்ற கேள்வி எழுகிறபோது - குறைபாடுகள் சிலவற்றைக் கொண்டதாயினும், குடியாட்சி என்கிற ஜனநாயகமுறை ஆட்சியே சிறந்தது என்ற முடிவுக்கு வந்து அந்த முறையை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் நாம்!

ராஜீவ் அவர்கள், அவரது கட்சி உட்பட எல்லாப் பிரிவுகளிலும் - எல்லாத் துறைகளிலும் சுட்டிக்காட்டுகிற இந்தக் குறைபாடுகள் - முப்பத்தி எட்டு ஆண்டுகால சுதந்திர இந்தியாவில், கடுகளவும் கலையப்படாமல், மேலும் மேலும் கிளைகளும், விழுதுகளும் விட்டு இந்தக் குறைபாடுகள் வளர்வதற்குக் காங்கிரஸ் ஆட்சியும் பெரும்அளவில் காரணமாயிருந்திருக்கிறது என்ற உண்மையை மறந்து விடவும் கூடாது! மறைத்து விடவும் கூடாது! மறைக்கவும் முடியாது!

எல்லா மட்டங்களிலும் குறைகள் அகற்றப்பட வேண்டுமென்ற, பிரதமர் ராஜீவ் அவர்களின் நல்லெண்ணத்தை நான் பாராட்டுகிறேன்! வரவேற்கிறேன்!

ஆனால் ஒன்று, பம்பாய் விழாவில் அவர் எதிர்க் கட்சிகளைச் சாடும் பொழுது ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார். எதிர்க்கட்சிகள், விருப்பு வெறுப்புடன் சலுகை காட்டுகின்றன என்பது அவரது குற்றச்சாட்டுக் கணைகளில் ஒன்று!

தேச விரோத சக்திகளை அனுமதிக்க முடியாது என்பது அவர் கொட்டுகிற முரசம்! நல்லது! அதற்காக அவருக்குத் துணை நிற்கவும் தயார்!

கடந்த ஆகஸ்டு திங்கள், காஷ்மீரில் பாகிஸ்தான் கொடிகளை ஐம்பது ஊர்களில் பறக்கவிட்டு, பாகிஸ்தான் சுதந்திர தினத்தைத் தேசவிரோதிகள் கொண்டாடினார்கள் என்றும், அதுகுறித்து காஷ்மீர் மாநில அரசுக்கு தகவல் தெரிந்தும், எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லையென்றும் காஷ்மீர் கவர்னரே, மத்திய அரசுக்கு தெரிவித்தாரே! அதுகுறித்து இளம் பிரதமர் ராஜீவ் எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிந்து கொள்ள இந்திய நாடு ஆவலாக இருக்கிறதே - இத்தனை நாட்கள் உருண்டோடிய பிறகும் மௌனம் ஏன்? காஷ்மீரில் உள்ள ஷாவின் அரசுக்கு இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் இன்னமும் ஆதரவு அளித்துக் கொண்டுதானே இருக்கிறார்கள்!

இந்த நிலையில் பிரதமர் ராஜீவ் காந்தி, எதிர்க்கட்சிகளைப் பார்த்து - விருப்பு வெறுப்புடன் சலுகைகள் காட்டுகின்றன எனக் கூறுவது பொருத்தமாக இல்லையே!

பேசமுடியாத நிலையில் உள்ளார் என்று அமெரிக்க டாக்டர் பத்திரிகைக்கு செய்தி கொடுத்திடும் அதே நாளில் - அவர் பேசி உறுதிமொழி எடுத்துக் கொண்டார் என்று அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரி சான்று பகருகிறார் என்றால் - ஆண்டிப்பட்டித் தொகுதிக்காக, பிரதமர் ராஜீவ் அவர்கள் விதிகளுக்கு மாறாகக்காட்டிய சலுகை என்று - குறைபடக்கூடிய சூழ்நிலைக்கு அவரே தள்ளப்பட்டு விட்டாரே! அதே போலத்தான் மிக ரகசியமாகவும், ஒலிபெருக்கி அனுமதிக்கப்படாமலும், முதலமைச்சர் பதவிப்பிரமாண நிகழ்ச்சியென்ற பெயரால் ஒன்று நடைபெற இங்குள்ள கவர்னர் ஒத்துழைக்குமாறு பணிக்கப்பட்டார் என்கிறபோது - விருப்புவெறுப்புடன் சலுகை காட்டுவது என்ற

குறைபாட்டுக்கு, அந்தக் குறைகளைக் களையவேண்டுமென்ற துடிப்புடன் பேசிவருகின்ற ராஜீவ் அவர்களே ஆளாக நேரிட்டு விட்டதே!

இந்தியாவின் சகல துறைகளும் - சகல பிரிவுகளும் - கடமையுணர்வற்றும், கட்டுப்பாடு உணர்வற்றும் இருக்கிற நிலையை மாற்ற வேண்டுமென்று சபதம் செய்கிற ராஜீவ் காந்தி அவர்கள், கடந்த காலத்து எமர்ஜன்சி பிரகடனத்தை நியாயப்படுத்தி அதே மேடையில் பேசியிருப்பது பெரும் ஐயப்பாட்டை விளைவிக்கக் கூடியதாக இருக்கிறது!

இப்படித்தான் இவரது தாயார் அன்னை இந்திராவும், எமர்ஜன்சியை அறிவிப்பதற்கு முன்பு - நாட்டில் எல்லாமே கெட்டுவிட்டது எனப் பேசி வந்தார்!

இப்போது இவரும் பேசுகிறார். அத்துடன் மாஜி எமர்ஜன்சிக்கும் மதிப்புரை வழங்குகிறார்!

அந்தச் சந்தேகம் வலுப்பெறுகிறது நமக்கு!

இன்னொரு எமர்ஜன்சியை இந்தியா, தாங்கிக் கொள்ளாது என்பதை மட்டும் - அறிவுரையாக அல்ல - எச்சரிக்கையாக அல்ல - ஒரு முன்னறிவிப்புத் தகவலாக மட்டும் கூற விரும்புகிறேன்!

எல்லாத் துறைகளிலும் கட்டுப்பாட்டுணர்வு தேவை!

Disciplined Democracy "கட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம்" என்ற 1975ஐ மீண்டும் 1985 இல் நினைத்துக் கூட பார்க்கக்கூடாது!

Discipline and Democracy "கட்டுப்பாடும், ஜனநாயகமும்" தான் இந்தியாவில் ஏற்றுக் கொள்ளப்படும் முறையாக இருக்க முடியும்!

அதைவிடுத்துத் தவறியும்கூட, நெருக்கடி நிலைக்கு வக்காலத்து வாங்கிப் பேசுவது, இந்தியப் பிரதமர் விரும்புகிற புதிய இந்தியாவை உருவாக்கிட ஒருபோதும் உதவிடாது!

அன்புடன்

மு.க.

30-12-1985

1374. நிழற்படம் எழுப்பிடும் நினைவு அலைகள்!

உடன்பிறப்பே,

இந்தியன் எக்ஸ்பிரஸ் ஜனவரி முதல்நாள் சென்னை பதிப்பில் முதற் பக்கத்தில் வெளிவந்த, இந்தப் புகைப்படத்தைக் கண்டதும், எத்தனையோ உணர்வுகள் என்னை உலுக்கின! இதயத்தில் உள்ளதை எழுத்துகளாகக் கொட்டிவிட்டால் சுமை குறையும். ஆறுதல் சிறிது பிறக்கும் - அதனால் விளைந்ததே இந்தக் கடிதம்! விநோ ஜான் என்ற புகைப்பட நிபுணர், 1985ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் மாலைநேரத்துச் சூரியன் மறைவை வள்ளுவர் கோட்டத்துடன் இணைத்து எழில்மிகு படமாக எடுத்துள்ளார். படம், பார்க்கப் பார்க்கப் பரவச மூட்டக் கூடியது. அத்துணைக் கலை நுணுக்கத்துடன் எடுக்கப்பட்டுள்ளது. மறையும் கதிரவனின் மாலை நேரத்து ஒளி வள்ளுவர் கோட்டத்துத் தேரின் கலசத்தில் பட்டுத்தெறிப்பது ஒரு பிரமாண்டமான வைரத்துண்டு பட்டை தீட்டப் பெற்று டால் அடிப்பதுபோலத் தோன்றுகிறது எனச் சில கவிஞர்கள் கற்பனையைப் பொழியக்கூடும்!

எனக்கோ, உலைக்களத்தில் ஒரு இரும்புத் துண்டை வைத்து சம்மட்டியால் ஒரு உழைப்பாளி ஓங்கி அடிக்கும் போது சிதறித் தோன்றும் சிவப்பு ஜுவாலையாகத்தான் அது தெரிகிறது!

வானில் மிதக்கும் முகிற் கூட்டம் கதிரவனை மறைப்பதால் - அந்த முகிற் கூட்டத்தையும் கிழித்துக் கொண்டு கதிரொளி பரவி நிற்பதைக் காண முடிகிறதல்லவா படத்தில்!

1985 டிசம்பர் 31 ஆம் தேதி மாலையில் மட்டுமல்ல! 1976 ஜனவரி 31 ஆம் தேதி மாலையிலும், தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சூரியனை மறைக்கும் அந்த அந்தி நேரம் - வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவையொட்டித்தான் வந்தது!

அந்தியைத் தொடர்ந்து அந்தகார இருள் பரவியது! அது ஏறத்தாழப் பத்தாண்டு காலமாகத் தமிழகத்தில் கலையாமலேதான் இருக்கிறது!

நெருக்கடி காலக் கொடுமைகள் - அவை தொடர்பான குரூர நடவடிக்கைகள் - இவற்றுக்கெல்லாம் ஈடு கொடுத்தாலும் கூட இன்னமும் - இருட்டிலே நின்று கொண்டுதான் இழிதகையோர் எதிர்ப்புகளை - எரிச்சல்காரர்களின் தாக்குதல்களை - சமாளித்துக் கொண்டிருக்கிறோம்!

உதயம் முழுமையாக ஆன பிறகுதான், ஊரை அடித்து உலையிற்போடும் உன்மத்தர்களை - உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்த சண்டாளர்களை - அற்ற குளத்து அறு நீர்ப் பறவைகளாகி விட்ட சந்தர்ப்ப சகாக்காரர்களை - துரோகத்தின் மொத்த உருவங்களை - பதவிக்காக எதையும் இழக்கத் துணிந்த பாதக வடிவங்களை - உலகம் அடையாளம் தெரிந்து கொள்ளும்!

ஏன்? நீயும், நானும் பகல் நேரத்திலேயே அந்தப் பிறவிகளை அடையாளம் தெரிந்து கொள்ளாமல் பட்டபாடு கொஞ்சமா? அந்த நிலையில் அவர்களை அஸ்தமனத்திற்குப் பிறகு மற்றவர்களுக்கு அடையாளம் காட்டுவது என்றால் அது அவ்வளவு எளிதான காரியமா?

எழுபத்தி ஆறு ஏப்ரல் திங்கள் வள்ளுவர் கோட்டம் திறக்கப்படும் பொழுது, அந்தக் கோட்டத்திற்கு அருகாமையில் முரசொலி அலுவலகத்தில் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்தேன்! அப்போதும் உனக்குத்தான் கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன்!

அண்ணா வழியில் ஜனநாயகம் காத்திட, எமர்ஜன்சியை எதிர்த்த காரணத்திற்காக ஆட்சியை இழந்தது மட்டுமல்ல - என் ஆருயிர் உடன்பிறப்புகள் ஐநூறு பேரை மிசாக் கைதிகளாக சிறையில் ஓராண்டுக்காலம் அடைத்திட்ட கொடுஞ் செயலையும் சகித்துக் கொண்டு - கூட இருந்து கொண்டே குழிபறித்த சில மேல்மட்டத் தலைவர்கள், கற்கண்டாய்ப் பதவிகளைச் சுவைத்து விட்டு - பின்னர் என் கழுத்தை அறுக்கும் வேலையில் முனைந்து ஈடுபட்டதையும் பொறுத்துக் கொண்டு, பெரியார், அண்ணா இருவரின் நினைவையே துணையாய்க்கொண்டு, உன் போன்ற

விசுவாசமும், கொள்கைப் பற்றும் கொண்ட லட்சோபலட்சம் உடன்பிறப்புகள் உடனிருக்கிறார்கள் என்ற ஒரே துணிவுடன் பேராசிரியர் போன்றவர்களின் தூய துணையுடன் கட்சியை நடத்தலாம் என்ற நம்பிக்கையுடன் நான் நிமிர்ந்து நின்ற நேரம் அது!

அப்போதுதான் - இதோ! இந்தப் படத்தில் பார்க்கிறாயே - இந்த வள்ளுவர் கோட்டத்தின் திறப்பு விழா! ஆனால் அதற்கு எனக்கு உரிய அழைப்பு இல்லை! அதற்காக அப்போது வேதனைக் கண்ணீர் வடித்தவர்கள் எண்ணிலடங்காது! அதனை எழுத்தில் வடித்தவர் என் நண்பர் சாவி என்பதை என்றும் மறந்திட இயலாது என்னால்!

அந்தக் கோட்டம் எப்படி அமைய வேண்டுமென்று சித்திரம் தீட்டிக் காட்டியது முதல் - திருவாரூர்த்தேர் உருவத்தை வரைந்து அளித்தது வரையில் மட்டுமல்ல, நாள் தவறினாலும் நான் அங்கு போவது தவறாமல் - கோட்டத்தின் ஒவ்வொரு கல்லும் எப்படி அமைந்திடல் வேண்டுமென்பதைச் சிற்பக்கலை அறிஞர்களிடமும், பொறியியல் வல்லுநர்களிடமும் விவாதித்து முடிவுசெய்து முற்றுப்பெற்றதே அந்த வள்ளுவர் கோட்டம்!

அதற்குத்தான் உடன்பிறப்பே! எனக்கு உரிய அழைப்பு கூட இல்லை!

அப்போது முரசொலியில் எழுதிய வாசகத்தை நினைவு கூர்ந்து பார்க்கிறேன். உயிர் வளர் மாதம் ஒன்பதும் ஒன்றும் நிறைந்து பிறந்த குழந்தையைச் சுமந்ததையும் இன்பமாகக் கருதி, பேற்றுக்கால வேதனையையும் இன்ப வேதனையாகக் கொண்டு, பாலூட்டிச் சீராட்டி பழமுத்தம் சுளைசுளையாய்த் தந்து, பள்ளிக்கனுப்பி, பின்னழகும் முன்னழகும் பார்த்துக் களித்து, பருவமடைந்த பின்னர் வாழ்க்கைத் துணையொன்றைத் தேர்ந்தெடுத்து, அந்த ஆசைக் கிள்ளைக்கு இனிய திருமணவிழா நடைபெறும் போது, தாலி கட்டும் காட்சியினைக் காண முடியாமல் மணப்பந்தலுக்கு வெளியே நிற்கின்ற தாயின் மனதில் ஒருவிதத் தவிப்பு இருந்தாலும், தன் அன்புச் செல்வத்துக்கு நடைபெறும் மணவிழா குறித்த மகிழ்ச்சி, பொங்கிடத்தானே செய்யும்! என் தங்க உடன்பிறப்பே! அந்தத் தாயின் மகிழ்ச்சியைத்தான் நான் பெறுகிறேன் இன்று!

இவ்வாறு 1976ஆம் ஆண்டு முரசொலியில் நான் எழுதியபொழுது - எழுத்தளவில்தான் மகிழ்ச்சி என்ற சொல் காணப்பட்டிருக்குமே தவிர, என் கண்கள் குளமாகியிருந்ததை முரசொலி அலுவலக அறையிலிருந்த கண்ணாடியொன்று மட்டுமே அறியும்!

இப்படி எத்தனையோ வேல்கள், என் இதயத்தில் பாய்ந்தன! பாய்ந்து கொண்டிருக்கின்றன!

எனினும் இந்த உயிர் ஓய்ந்து, உடல் சாய்ந்து போவதற்குள் - தமிழகத்தில் ஏற்பட்டுள்ள சூரிய அஸ்தமனம் நிரந்தரமானதல்ல - தமிழன் விழித்துக் கொண்டான் சூரிய உதயம் கண்டு! என்ற புதிய நிலையை மலர வைக்க முடியுமன்றே எண்ணுகிறேன்!

அந்த நினைவுடனேயே இந்த நிழற்படத்தைக் காணுகிறேன்!

அன்புடன்

மு.க.

02-01-1986

1375. ஒருமைப்பாட்டின் பகைவர்கள் யார்?

உடன்பிறப்பே,

புத்தாண்டு பிறந்தவுடன் முதல் செய்தியாக மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவான் அவர்கள், இந்தி பேசாத மாநில மக்களுக்கு, அதுவும் குறிப்பாகத் தமிழக மக்களுக்கு மத்திய இந்தி அரசின் மறைமுகத் திட்டம் என்ன என்பதைத் தெளிவாகவே தெரிவித்து விட்டார்!

கூச்சல் கேட்காமல் கொலை செய்து விட்டு - யாரும் பார்க்காமல் கயிற்றில் தொங்க விட்டு விட்டு - தற்கொலை செய்து கொண்டார் - என்று எத்தனையோ குரூர நிகழ்ச்சிகள் மறைக்கப்பட்டு விடுகின்றன அல்லவா?

அந்த நிகழ்ச்சிகளை நடத்தியவர்களை வழி காட்டிகளாகக் கொண்டு, மத்திய இந்தி அரசு மிகவும் எச்சரிக்கையாகக் காரியமாற்ற வேண்டுமென்று தந்திரோபாயம் கற்றுத் தருகிறார் அமைச்சர் சவான்!

உதட்டில் தடவியிருப்பது கொடிய விஷம் என்று தெரியக் கூடாது! அழகுக்கு அழகூட்டும் லிப்ஸ்டிக் என்றே அணைத்து முத்தமிடும் ஆணழகன் எண்ணிக் கொள்ள வேண்டும்! அன்பே! ஆருயிரே! என அவளை அவன் தழுவிட வேண்டும்! இன்பமே! எனையென்றும் பிரிந்திடாதே! என்றவாறு இதழோடு இதழ்களைப் பொருத்த வேண்டும்! கொடிய நஞ்சு கோகிலத்தின் இதழில் பூசப்பட்டிருப்பது தெரியாமலே, அவன் கோவைக்கனியைச் சுவைப்பதுபோல் சுவைக்க வேண்டும்! விஷம் உடலில் பரவுகிறது என்ற உணர்வு இல்லாமலே, இன்பபோதையில் நாடிநரம்புகள் நர்த்தனமாடுகின்றன எனும் களிப்புடன் கட்டழகியை அணைத்துக்

கிடந்தவன், காலையில் பார்த்தால் கட்டிலில் பிணமாகி வீழ்ந்திருக்க வேண்டும்!

இப்படி மாவீரன் அலெக்சாண்டரின் மரணம் குறித்து, ஒரு கதை கூறப்படுமல்லவா? அதை மாதிரியாகக் கொண்டு ஒரு மாய்மாலத்தில் ஈடுபட வேண்டுமென்பது போல மத்திய அமைச்சர் சவான் அவர்கள் புதுடெல்லியிலே உரையாற்றி யிருக்கிறார்!

வியாதி நீங்கவே டாக்டர் ஊசி போடுகிறார் என்ற உணர்வுடன் நோயாளி படுத்திருக்க வேண்டும். ஆனால் டாக்டரோ, வலி தெரியாமல் விஷ ஊசியைப் போட்டு - வேலையை முடித்திட வேண்டும்!

இந்த முறையைப் பின்பற்றுவதின் மூலம், மத்தியில் உள்ள இந்தி அரசின் குறிக்கோள் ஈடேறும் என்று அமைச்சர் சவான், அறிவுரை வழங்கியுள்ளார்.

இந்தியை இந்தியாவின் இணைப்பு மொழியாக்கிட வேண்டும். அதே சமயம், இந்தி திணிக்கப்படுகிறது என்ற உணர்வு, இந்தி பேசாத மக்களிடையே ஏற்படாத வகையில் இதைச் செய்யவேண்டும்.

ஏடுகளில் மட்டுமல்ல, தொலைக்காட்சிச் செய்தியிலும் அமைச்சர் சவானின் இந்த வாசகம் அப்படியே எழுத்துப் பிசகாமல் வெளியிடப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று கூறிக்கொண்டே - அதைத் திணிப்பதைத் தந்திரமாக - திணிக்கப்படுகிறது என்ற உணர்வே ஏற்படாத அளவுக்குத் திணிக்கின்ற முயற்சியை எந்த அளவுக்குத் தீவிரப்படுத்துகிறார்கள் என்பது சவான் அவர்களின் பேச்சிலிருந்து புரிகிறதல்லவா!

கொலையைத் தற்கொலையாக்கிக் காட்டுவது!

கோமளாங்கியின் இதழில் நஞ்சு தடவி, மாவீரனை மாய்ப்பது!

வலி தெரியாமல் விஷ ஊசியைப் போடுவது!

ஆம்! சவான் - சதிவலை பின்னச் சொல்கிறார்! மஞ்சள் பூசி, மாலையைக் கழுத்தில் அணிவித்து, காளியம்மனுக்கு முன்னால்

பலிபீடத்தில் நிறுத்திய பிறகு கூட ஆட்டுக்குத் தெரியாது, தனது ஆவியைப் போக்கத்தான் இந்த அமர்க்களம் எல்லாம் என்று!

அப்படி ஒரு உணர்வே ஏற்படாத அளவுக்கு - சாகசமாக, தந்திரமாக, வஞ்சகமாக, சூதாக, சூழ்ச்சித்திறனுடன் செயல்படச் சொல்லி இந்தியை இந்தத் துணைக்கண்டத்தின் இணைப்பு மொழியாக்கிடுவோம் என்று முரசு கொட்டுகிறார் மத்திய அமைச்சர்!

நேருவின் உறுதி மொழி காப்பாற்றப்படும் என்று கூறிக்கொண்டே, இன்று தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் தொலைக்காட்சி மூலம் இந்தி பரப்பப்படுகிறது. இதழில் பூசியுள்ள நஞ்சினை அறியாமலே இன்பரசவல்லியின் சரசத்தில் இன்னுயிர் இழக்கும் இளைஞனைப் போல இன்றைய தமிழகம் ஆகிக்கொண்டிருக்கிறது!

போரிடும் வீரன்! அடக்குமுறை கண்டு அஞ்சாத தீரன்! தியாக வேள்வியில் குதிக்கத் தயங்காத சூரன்!

1965ஆம் ஆண்டு மொழிப் புரட்சியின் மூலம், தமிழன் - இவ்வாறு தன்னைத் தரணிக்கு உணர்த்தியிருக்கிறான்! செந்தமிழுக்கு ஒரு தீமை வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்தொரு லாபம் உண்டோ? எனக் கேட்டு கிளம்பிற்றுகாண் தமிழ்ச் சிங்கக் கூட்டமென முழங்கி - வெங்கொடுமை சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள் என சங்கொலித்து - அவன் இந்தியை எதிர்த்துப் போரிட்ட வரலாறும், ஐம்பது ஆண்டு காலமாக அவன் இடைவிடாது நடத்தி வருகிற இந்தி ஆதிக்க எதிர்ப்பு யுத்தத்தின் வரலாறும் - சூழ்ச்சித் திட்டங்களால் சுக்கு நூறாக்கப்பட வேண்டுமென்று டெல்லியில் அமைந்துள்ள இந்தி அரசு திட்டமிட்டுச் செயலில் இறங்கிவிட்டது என்பது மிகமிகத் தெளிவாகிவிட்டது!

திணிக்கமாட்டோம் என்ற பாகுமொழி! நேருவின் உறுதிமொழி காப்பாற்றப்படும் என்ற பசப்புமொழி! இவற்றில் நமக்கு எள்ளளவு நம்பிக்கையுமில்லாத காரணத்தினாலேதான், அண்மையில் சென்னைக்கு வந்த சர்க்காரியா கமிஷனிடம், தி.மு.கழகத்தின் சார்பில் மொழிக் கொள்கை பற்றிய நமது முடிவான கருத்தைத் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம்.

1. The Provisions to make Hindi the official Language of the Union, the Courts, and the Legislature etc., should be deleted.
2. The Directive for the development of Hindi Language should also be deleted, and
3. All the Language specified in the Eighth Schedule should be made as the Official Language of the Union. Till it is achieved, English should continue as the Official Language of the Union.

1. இந்தியை யூனியன் ஆட்சி மொழியாக, நீதிமன்றங்கள் மொழியாக, சட்டமன்றங்கள் இன்ன பிறவற்றின் மொழியாக ஆக்கிட வகை செய்யும் விதிகள் நீக்கப்பட வேண்டும்.
2. இந்தி மொழி வளர்ச்சிக்காக பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டளை ஆணையும் ரத்து செய்யப்பட வேண்டும்.
3. அரசியல் சட்ட எட்டாவது அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள மொழிகள் அனைத்தும் இந்தியாவின் ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட வேண்டும், இந்தக் குறிக்கோள் எட்டப்படும் வரையில் இந்திய யூனியனின் ஆட்சிமொழியாக ஆங்கிலமே நீடிக்க வேண்டும்.

உடன்பிறப்பே, கொல்லைப்புறமாகவோ - அல்லது வெல்லமொழி பேசிக் கொண்டோ - நமது மடியில் புரண்டு, மஞ்சத்தில் கிடத்தி, இரண்டாம் தரக் குடிமகன் என்ற நாச நிலையை நமக்கு ஏற்படுத்தத் தளுக்குக் காட்டும் இந்தி ஆதிக்க மோசடியை, அறப்போர் வாள் எடுத்துத் துரத்தியடிக்கக்கூடிய அடுத்த கட்டப் போராட்டம் உன்னையும் என்னையும் அழைக்கிறது!

ஏன்? தமிழகத்தையே அந்தப் போர்க்களம் அழைக்கிறது!

போர்க்களம் அமையாமல் தடுப்பதற்கு, மத்தியில் உள்ள அரசுக்கு இருக்கின்ற ஒரே வழி, தி.மு.கழகம் சர்க்காரியா குழுவினரிடம் தந்துள்ள மொழி குறித்த மூன்று கோரிக்கை களையும் நிறைவேற்றுவதுதான்!

இல்லை, திணிக்கிறோம் என்ற உணர்வு தெரியாமல் இந்தியை இணைப்பு மொழி ஆக்குகிறோம்.

என்று மத்தியிலிருப்போர் செயல்படுவார்களேயானால் - இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு அவர்களே, அவர்களை அறியாமல் பகையாளிகள் ஆகிறார்கள் என்றுதான் பொருள்!

அன்புடன்

மு.க.

04-01-1986

1376. அண்ணா குறிப்பிட்டுள்ள அந்த அடித்தளம்!

உடன்பிறப்பே,

தி.மு.கழகத்தின் வளர்ச்சியும், பயனும், தன்மையும், கழகத்தவர் பார்த்துச் செய்திட வேண்டிய தனித்துறைக் காரியம் என்ற நிலைமாறி, பொதுமக்கள் - நாட்டு நலனில் அக்கறை கொண்டோர் - தொடர்பு கொண்டு, சமைத்தளிக்கும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டிய நிலைமை மலர்ந்து வருகிறது.

கழகம், நாட்டுக்கான நற்பணியாற்றக் கடமைப் பட்டிருக்கிறது என்பதைக் கழகத்தவர் அல்ல, நாட்டுமக்களே நம்பிக்கையுடன் எடுத்துரைக்கும் நாட்களில் இருக்கிறோம்.

கழகம், நாட்டுக்கோர் அணிகலனாகத் திகழ்கிறது என்ற உணர்வு பொது மக்களுக்கு ஏற்பட்டு விட்டிருக்கிறது.

கபடரின் ஆட்சியை, வஞ்சகத்தின் ஆதிக்கத்தை வீழ்த்தத் தக்கதோர் படைக்கலம் தி.மு.கழகம் என்ற நம்பிக்கை நாட்டுக்குரியவர்களிடம் ஆழப் பதிந்து விட்டிருக்கிறது.

எனவேதான், இதற்கு ஒரு இடுக்கண் வருகிறது என்ற நிலை கண்டாலே நாடே பேசுகிறது, நல்லோரெல்லாம் கவலையுறுகின்றனர். ஆதிக்ககாரரெல்லாம் அகமகிழ்கின்றனர். பொச்சரிப்புக்காரர் ஏசித் திரிகின்றனர். பொறுப்புணர்ந்தோர் குமுறுகின்றனர்.

விளக்கில் வீழ்ந்துபடும் விட்டில்பூச்சி கண்டு எவரும் பதறுவதில்லை! வேழத்தின் முழக்கம் கேட்டாலோ! என்ன? என்ன? ஏன் இந்த முழக்கம்? வேல் பாய்ந்த வேதனையோ? வெட்டிய படுகுழியில் வீழ்ந்துபட்டதோ? சூல் கொண்டதால் வந்துற்ற வலியோ? காரணம் யாதோ, கரி இதுபோல் குரல் எழுப்ப! என்று எவரும் எண்ணுவர்!

பட்டுத்துணி காற்றால் முட்புதர்பக்கம் அடித்துச் செல்லப்பட்டால்தான் எவரும் பதறுவர் - பறந்திடும் பட்டம் அறுபட்டால் அவ்வாறு பதறுவரோ?

அஃதேபோன்றுதான் நம்முடைய கழகம் மதிப்புமிக்கது, பயன் தரவல்லது, நாட்டுக்குத் தேவைப்படுவது, நல்லோரின் ஆதரவு பெற்றது, பெரியதோர் பணியினைச் செய்து முடிக்கும் பொறுப்பினை மேற்கொண்டிருப்பது என்பதனால்தான் அத்தகைய ஓர் அமைப்புக்கு ஒரு அதிர்ச்சி ஏற்பட்டாலும் நாடு, நடுக்குற்றுக் கேட்கிறது, என்ன? என்ன? ஏன்? ஏன்? என்று!

உடன்பிறப்பே! இந்த உணர்ச்சி மிகுந்த - உண்மை பொதிந்த வாசகங்கள், நான் எழுதியவை அல்ல!

கழகத்தின் சார்பில் சட்டமன்றத்தில் பதினைந்து உறுப்பினர்கள் மட்டுமே இடம் பெற்றிருந்த காலத்தில், நாடாளுமன்றத்தில் இரண்டே உறுப்பினர்கள் மட்டுமே வீற்றிருந்த நேரத்தில், மன்னிக்கவும் அதுகூட சரியில்லை - சட்டமன்றத்தில் இருந்த கழக உறுப்பினர்களில் நண்பர் எம்.பி. சுப்பிரமணியம் அவர்களும், அவருடன் இருசப்பன் அவர்களும், களம்பூர் அண்ணாமலை அவர்களும் விலகிவிட்ட சமயத்தில் - அவர்களின் தலைவர் சம்பத் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரில் ஒருவராக இருந்து அவரும் கழகத்தை விட்டுப் பிரிந்துவிட்ட வேளையில் - நமது அரும் பெரும் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியைத்தான் இப்போது உனக்கு நினைவுபடுத்தியிருக்கிறேன்!

1961ஆம் ஆண்டில் அண்ணன் இவ்வாறு எழுதியபோதும் சரி, அதன் பின்னர் 1962 பொதுத் தேர்தலில், அந்த அண்ணனே காஞ்சிபுரம் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்துவிட்ட போதும் சரி, வேறிடம் சென்றால் விதவிதமான பதவிகளைப் பெறலாம், வகைவகையான வாழ்க்கைச்சுகம் கிடைக்கும் என்று சிலர் விலகியோடி, மாற்றார் முகாமிலிருந்து நம்மீது மண்ணைவாரி வீசியபோதும் சரி, இந்தக் கழகத்திற்கு ஏற்படும் அதிர்ச்சிகள், தோல்விகள், இவைகளைக் கண்டு திராவிடர் இயக்கத்தின் தேவையை உளமாற உணர்ந்தோர் வருந்தினர், பதறினர் என்று சரியான நிலைமையை அண்ணா அவர்கள் படம் பிடித்துக் காட்டியிருப்பதற்குக் காரணம், எந்தச் சூழ்நிலையிலும் இந்தக் கழகமொன்றே தமிழ்நாட்டு மக்களின் பாதுகாப்பு அரண்

- தமிழர் உரிமைகளை அழிக்க வரும் ஆதிக்க சக்திகளை எதிர்த்துப் போரிடும் போர்வாள் - கொள்கைக் கூடாரம் - என்ற பேருண்மையை, தெளிவுபெற்றவர்கள் - விபரம் புரிந்தவர்கள் உணர்ந்திருக்கின்றனர் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத் தான்!

அதனால்தான் அண்ணா அவர்கள், அந்தக் கடிதத்தின் இறுதிப் பகுதியில்,

தம்பி! உன் கண்ணொளி போதும், என் கவலையை ஓட்ட! காரிருளை விரட்ட! உன் நெஞ்ச உரம் போதும், என் நடுக்கத்தை நீக்க! கழகம் காப்பாற்றப்படும் என்று, என் போன்றோர் புது உறுதி பெறுவதே, நீ எழுப்பும் எழுச்சி முழக்கம் கேட்டுத்தானே!

உன் சொல்லும் செயலும், மாற்றார்க்கு, நமது கழகத்தின் மாண்பு, துளியும் மங்கிடவில்லை என்பதனை எடுத்துக்காட்டுவதாக அமையவேண்டும். உன் போக்கும் நோக்கும், பேச்சும் செயலும் கழகத்தை நடத்திச் செல்பவன் என்ற பொறுப்பினைச் சுமந்து கொண்டிருக்கும் என் போன்றோருக்கும் நல்வழி காட்டத்தக்கதாக அமைய வேண்டும். எந்த ஒரு கட்சியும், அதன் மேல் மட்டத்தில் அமர்த்தப்பட்டிருப்பவர்களின் இயல்பு, திறமை, உழைப்பு இவைகளை மட்டுமே பொறுத்தது இல்லை. அவர்களை அமர்த்தும் உரிமையும், ஆற்றலும் பெற்றுள்ள பல லட்சம் உறுப்பினர்களின் திறமை, தன்மை ஆகியவற்றைப் பொறுத்தே இருக்கிறது. கலசத்தின் மினுமினுப்பு, காலக்கரம் பட்டுப்பட்டு மங்கிப் போகக்கூடும். நட்டமில்லை, அடித்தளம் வலுவுடன் இருந்தால்! தம்பி! அடித்தளத்தை ஆக்கிக் காத்திடும் பொறுப்பு உன்னுடையது. அதற்கேற்ற ஆற்றலும் உனக்கு நிரம்ப இருக்கிறது. அந்த நம்பிக்கைதான் இந்த இயக்கத்துக்கு உயிர் ஊட்டம் தருகிறது!

என்று குறிப்பிடுகிறார்! உடன்பிறப்பே! ஆற்றலும், நெஞ்சுரமும் கொண்ட பல லட்சம் உறுப்பினர்கள்தான் இந்த இயக்கத்தின் அடித்தளம் என்று அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள அந்தத் தீர்க்கமான கருத்தைத்தான் இப்போதும் நான் உனக்கு நினைவுபடுத்துகிறேன். அந்த அடித்தளத்தை மேலும் உறுதிமிக்கதாக ஆக்கிடத்தான் அன்றைக்கு அண்ணா வகுத்துத்தந்த ஜனநாயக வழியில் கழக அமைப்புகள் செயல்படுகின்றன!

இந்தியா முழுமையும் கட்டியாளுகிற கட்சிக்கும் சரி, அல்லது தமிழகத்தை ஆளுகிற கட்சிக்கும் சரி, கட்சி அமைப்பு ஜனநாயகம் என்பது ஒரு கசப்பான பொருள்! எனவே அதன் பக்கமே அவர்கள் தலைவைத்துப் படுப்பதும் கிடையாது! எப்படியோ ஓட்டுக்களைப் பெற முடிகிறது - ஆட்சிப் பொறுப்பில் அமர முடிகிறது - எனவே கட்சிக்குள் ஜனநாயகம் இருப்பதேகூட தேர்தல் வெற்றிகளுக்குத் தடையாகுமென எண்ணுகின்றனர்! பெரும்பாலான பொறுப்பு மிகுந்த கட்சிப் பதவிகள் நியமனங்களாகவே ஆகி விடுகின்றன; அந்த வட்டாரங்களில்!

நம்முடைய கழகம் அப்படியல்ல - ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்திலும் சரி, இல்லாத நேரத்திலும் சரி, கட்சி அமைப்புகளின் தேர்தல், முறைப்படி நடத்தப்படுகிற ஜனநாயக மரபுக்குத் தடங்கல் ஏற்பட்டதேயில்லை!

சட்டதிட்டங்களோ, கொள்கை விளக்கக் குறிப்புகளோ இவைதான் என்று சுட்டிக்காட்டக் கூடிய எதுவும் தேவையில்லையென்றும் - அப்படியே இருந்தாலும் அவை பின்பற்றப்படக்கூடியவை அல்ல என்றும் - முடிவெடுத்துக் கொண்டிருப்பவர்களை நீ அறிவாய்! ஆட்சி அல்லது பதவி என ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டிருப்பவர்களுக்கு, அதே வழியில் அரசியல் நடத்துகிறவர்களுக்கு, அண்ணா அவர்கள் குறிப்பிட்ட அடித்தளமோ அல்லது அண்ணா அவர்கள் காலத்தில் கட்சிக்கென வகுக்கப்பட்ட ஜனநாயக முறைகளோ கூட கவனிக்கப்படக்கூடிய விஷயங்களாக இல்லாமல் இருக்கலாம்!

ஆனால் நமக்கு, நம்முடைய கழகத்துக்கு இருக்கும் பொறுப்புகள் ஏராளம்!

இலங்கையில் தமிழ் இனம் அழிந்து கொண்டிருக்கிறது - இங்கே இந்தி ஆதிக்கம் வேகமாகப் பரவுகிறது - மாநிலங்களின் உரிமைகள், மத்தியிலிருப்போர் உதாசீனத்திற்கு உள்ளாகின்றன. தங்களை அழுத்தும் கொடுமைகளை உணராமலேயிருக்கின்ற தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மை மக்களின் விழிகள் திறக்கப்படாமல் பார்த்துக்கொள்வதில் பாராள்வோர் எச்சரிக்கையுடன் செயல்படுகின்றனர் - பெரியார், அண்ணா என்ற பெயர்களை மட்டும் மிஞ்சவிட்டு, அவர்களின் கொள்கைக் கோட்பாடுகளுக்கு ஆழமான குழி வெட்டப்படுகிறது - நிர்வாகம்,

நேர்மைத் திறமற்றுச் சீரழிந்து கிடக்கிறது - நீதியும், சட்டமும் வளைந்து, ஒடிந்து, தேய்ந்து மாய்ந்து கொண்டிருக்கிறது - ஊழலோ, குக்கிராமத்திலிருந்து கோட்டைவரையில் கொடிபோட்டுக் கும்மாளமடிக்கிறது!

உடன்பிறப்பே, இதற்காகவெல்லாம் போராடவும், அடக்கு முறைகளை ஏற்றுக் கொள்ளவும், தேவைப்படின் செந்நீர் சிந்திடவும், நாட்டில் உள்ள மொத்த ஜனத்தொகையினர் - அல்லது மொத்த வாக்காளர்கள் - எங்கேயும் அறவழிக் கிளர்ச்சிகளிலோ, அல்லது அடக்கு முறை எதிர்ப்புப் போராட்டங்களிலோ இறங்கியதில்லை!

கோடிக்கணக்கானோர் வாழும் நாடுகளில் கூட அவர்களின் குரலை எதிரொலிக்க, ஆயிரக்கணக்கானவர்களே சிறை புகுந்தனர் - செத்து மடிந்தனர்!

அவ்வாறேதான் தமிழக மக்களின் ஒளி மிகுந்ததும், உரிமை கொண்டதும் தன்மானம் நிலைபெற்றதுமான எதிர்காலத்தை உருவாக்கிட கழகம், உறுதியான அடித்தளம் கொண்டதாக என்றும் நீடித்து நிலைத்திருக்க வேண்டும்!

அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறாரே! அந்தப் பல லட்சம் உறுப்பினர்கள் - அவர்கள்தான் இந்தக் கழகத்தின் படைக்கலன்கள்!

ஏரியோ, குளமோ ஆழப்படுத்தப்பட்டு - கரை உயர்த்தப்பட்டு - வலுப்படுத்தப்பட்டு - அமைந்திருந்தால்தான், பொழியும் மழையைத் தேக்கி வைத்துக் கழனிகளுக்கு வகைப்படுத்திப் பாய்ச்சிட முடியும்!

இல்லையேல், மழைபொழியும் போது பொங்கி வழிந்து - பார்ப்போர் வியக்கும் வண்ணம் அலைமோதி - படமெடுப் போருக்கும் விருந்தாகி - திடீரென உடைத்துக் கொண்டு, ஏரியோ, குளமோ இருந்த இடம் தெரியாமல் உருக்குலைந்து போய் விடும்!

இந்த உண்மைகளையெல்லாம் உணர்ந்த உனக்கு, இன்னும் என்ன சொல்ல வேண்டியிருக்கிறது?

இக்கடிதம் எழுதிக்கொண்டிருக்கும்போது தஞ்சை மாவட்டக் கழகச்செயலாளர் தம்பி கோ.சி.மணி, என்னுடன் தொலைபேசியில் ஆடுதுறையிலிருந்து தொடர்பு கொண்டார்!

கழக உறுப்பினர் சேர்க்கும் பணியை விரைந்து நடத்துவதாகக் கூறினார். அவரது கைக்கு இதுவரை வந்துள்ள உறுப்பினர் படிவங்களின்படி, உறுப்பினர் எண்ணிக்கை நாற்பதாயிரத்தை எட்டிவிட்டதாக உற்சாகத்துடன் பேசினார்!

எந்த ஒன்றியம் அதிக உறுப்பினர்களைச் சேர்க்கிறதோ, அதற்குப் பரிசு தர வேண்டுமென்றார். பொதுச்செயலாளரிடம் கூறி அவ்வாறு அறிவிக்கச் சொன்னார்!

ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துதான்!

ஆனால் தஞ்சைக்கு மட்டுமல்ல! ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஒன்றியங்கள் - அதே போல மாவட்டங்கள் - மக்கள்தொகை அடிப்படையில் அதிகமான விழுக்காடு உறுப்பினர்களைச் சேர்த்தளித்தால் தலைமைக் கழகச் சார்பில் பரிசு வழங்கப்படும் என்பதை உறுதியாக நம்பலாம்!

இத்திங்களில் உறுப்பினர் சேர்க்கும் பணிநிறைவு பெற்றுவிட்டால், அடுத்து கிளைக்கழக நிர்வாகிகள் தேர்தல் தொடங்கி, தலைமைக் கழகம் வரையில் சில மாதங்களில் நிர்வாகிகள் தேர்தலை முடித்து விடலாம்!

அண்ணா குறிப்பிட்ட அந்த அடித்தளம் வலுவுடன் விளங்கிட உடன்பிறப்புகள் ஊக்கமுடன் செயல்பட வேண்டுகிறேன்.

அன்புடன்

மு.க.

05-01-1986

1377. வைர மாலையும் - மஞ்சள் கயிறும்!

உடன்பிறப்பே,

உன் கரங்களில் கழக உறுப்பினர் சேர்க்கும் தலைமைக் கழகத்தின் விண்ணப்பத்தாள் இருக்கிறதா?

ஒரு கிளைக்கழகம் அமைந்து நிர்வாகிகள் தேர்ந்தெடுக் கப்பட இருபத்தைந்து உறுப்பினர்கள் வேண்டும் என்றுதான் கழகத்தின் சட்டதிட்டம் கூறுகிறதே தவிர, இருபத்தைந்து உறுப்பினர்களுடன் நிறுத்திக் கொள்ள வேண்டுமென உச்சவரம்பு எதுவும் கட்டவில்லை!

நம்முடைய கழகத்தின் நற்பணி தொடர வேண்டுமென்பது ஏன் என்பது குறித்து அண்ணா அவர்களின் விளக்கங்களுடன் நேற்றைய தினம் கடிதம் எழுதியிருந்தேன்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல் வருகிறது! ஆமாம்! வரப்போகிறது! வந்தேவிட்டது!

அந்தத் தேர்தலைச் சந்திக்க வேண்டாமா? அதற்கென அமையும் பணிகளைக் கவனிக்க வேண்டாமா? அதற்கிடையே உறுப்பினர் சேர்த்தல் - புதுப்பித்தல் எனும் பணியினை எங்ஙனம் ஆற்றிட இயலும்? இப்படிக் கேட்பாய்!

உள்ளாட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதே ஜனவரி 23ஆம் நாளுக்குப் பிறகுதான் தொடங்குகிறது!

அதற்குள் கழக உறுப்பினர் சேர்க்கும் அருந்தொண்டினை நிறைவேற்றுவதற்கு அவகாசம் நிறையவே இருக்கிறது.

பொதுச்செயலாளர் பேராசிரியர் அறிக்கையும், அதனைத் தொடர்ந்து வந்துள்ள அமைப்புச் செயலாளர் அறிக்கையும் இத்திங்கள் முதல் வாரத்துக்குள் இதுவரை சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர் படிவங்கள் அனைத்தையும் அதற்குரிய

கட்டணத்துடன் தலைமைக் கழகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்பதைக் குறிப்பிட்டுக் கூறியுள்ளன.

பிப்ரவரி தொடக்கத்திலிருந்துதான் உள்ளாட்சி மன்றத் தேர்தல் பணிகளில் உன்னை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள இருக்கிறாய் என்பதால் - ஜனவரித் திங்கள் முழுவதும் கழக உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு நீ ஓய்வு கொள்ளாது உழைத்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர் சேர்ப்பதில் எந்த மாவட்டம் முதல் வரிசையில் இடம் பெறுகிறது என்பதை அறிந்திட ஆவல் மிகக் கொண்டுள்ளேன்.

அந்த மாவட்டத்தில் எந்த ஒன்றியம் விறுவிறுப்பாகப் பணிபுரிந்து உறுப்பினர்களை அதிகம் சேர்த்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளவும் பேரவா எனக்கு உண்டு!

புதிய உறுப்பினர்கள் பட்டியல் மட்டுமல்ல, தேர்ந்தெடுக்கப்படும் புதிய கிளைகள் - அந்தக் கிளைகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடித் தேர்தல் வாயிலாக உருவாக்கும் புதிய ஒன்றியக் கழகங்கள் - அதைத் தொடர்ந்து மாவட்டப் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படும் மாவட்டக் கழகப் புதிய நிர்வாகிகள் - பின்னர், செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைமைக் கழகத்தின் புதிய நிர்வாக அமைப்பு - இவை அனைத்துமே இந்த ஆண்டு, இன்னும் சில மாதங்களுக்குள் முற்றுப் பெற்று, கழகத்தின் பணிகள் மேலும் விறுவிறுப்பாக முடுக்கி விடப்பட வேண்டுமல்லவா? அதற்காகத்தான் உடன்பிறப்பே, உன்னைக் கேட்கிறேன் - உன் கரங்களில் கழக உறுப்பினர் சேர்க்கும் தலைமைக் கழகத்தின் விண்ணப்பத்தாள் இருக்கிறதா? என்று!

யாரும் சுற்றி விடாமலே சுழலுகின்ற பம்பரமெனக் கழகப் பணியாற்றுகிற ஆயிரம் விளக்கு உசேனை உனக்குத் தெரியுமல்லவா? மிசாத்தழும்பு ஏற்றவர்! அந்த அருமைத் தம்பி சில நாட்களுக்கு முன்பு அதிகாலையிலேயே என்னிடம் வந்து, உறுப்பினர் தாளில் கையெழுத்துப் போடச் சொல்லி, அதற்குரிய கட்டணத் தொகை ஒரு ரூபாயையும் பெற்றுக் கொண்டு போனார் - இப்படிப் பல்லாயிரக்கணக்கான உசேன்கள் இந்த இயக்கத்தின்

உயிர் அணுக்களாக இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்! இருப்பதால்தான் எரிமலைக் குழம்பு பொங்கி வழிந்திடும் போதும் நிலைகுலையாததாக நம்முடைய கழகம் நிமிர்ந்த நடைபோட முடிகிறது!

நிலவொளியில் தகத்தகாயமாகத் தோற்றமளிக்கும் பொன்னிறம் பூசியமாளிகை! சுற்றிலும் பூக்கள் குலுங்கிடும் பொய்கை! உட்புறத்து மாடியிலோ உல்லாசத்துக்கென்றே உருவாக்கப்பட்ட அந்தப்புரமெனும் ஆனந்தவிலாசம்! அத்தர், புனுகு, ஜவ்வாது எனும் விதவித மணங் கமழும் பஞ்சணை! அதுவும் முழுமையும் தந்தத்தால் ஆனது! மணம் சுமந்து வரும் தென்றலின் தெம்பாங்குப்பாடல்! அந்த மென்காற்றில் படபடக்கும் எண்ணற்ற கரன்சி நோட்டுக்கள் கட்டிலில் மெத்தைக்குப் பதிலாக!

இவை அனைத்துக்கும் சொந்தக்காரச் சீமான் மடியில் ஒரு சித்திராங்கி! இரவு முழுதும் நித்திரைக்கு விடை கொடுத்துவிட்டு, அவனுக்கு இடைவிடா இன்பமளிப் பதற்கென்றே இடையில் மட்டுமே ஒரு ரிப்பனைச் சுற்றி - அதையும் நெகிழவிட்டுக் கட்டியிருக்கும் இன்பவல்லி!

களியாட்டம் முடிந்து, கத்தை கத்தையாகக் கைநிறைய நோட்டுக்களைப் பெற்றுக் கொண்டு, அந்த இரவுப்பணி ஊதியத்தை எடுத்தெடுத்துப் பார்த்து களிப்புற்றவாறு காரிலேறி வீடு திரும்புகிறாள் வாழும் கலையறிந்த அந்த விலைமாது!

கார் போகும் வழியோ கரடு முரடானது - சிறு சிறு ஓட்டுவில்லை வீடுகள் - புழுதிபறக்கும் வீதிகள் - அந்த வீதியின் கோடியில் ஒரு வீட்டின் முன்புறம் அந்த அதிகாலை நேரத்தில் தண்ணீர் தெளித்துக் கூட்டிப்பெருக்கி - மாக்கோலமிட்டுக் கொண்டிருக்கிறாள் ஒரு மாதரசு! மாம்பழ நிறங்கொண்ட மேனி! கயல்கள் என நீண்ட கருவிழிகள்! உடல் மறைக்க அவள் உடுத்தியிருப்பது ஒரு கந்தல் ஆடைதான்! கழுத்திலோ ஒரு மஞ்சள் கயிறு! அதன் முனையில் கட்டியிருக்கும் மஞ்சள் துண்டு, அவள் குனிந்து கோலமிடும்போது பூமியை நோக்கித் தொங்குகிறது!

என்னை வெல்லும் கொள்ளை அழகியாக இருக்கிறாளே இவள்! என் வாழ்வுக் கலையின் வசீகரத்தை இவளும்

பின்பற்றினால் - ஏ, அப்பா - என் பிழைப்புக்கே ஆபத்து வந்து விடும்! நல்லவேளை! வாழத் தெரியாத முட்டாள் பெண்!

காரில் களைப்புடன் செல்லும் காரிகை, தன் கழுத்தில் உள்ள வைர மாலையைத் தடவியவாறு - வீட்டு வாசலில் கோலமிடும் அந்தக் கந்தலாடைக் காரிகையைப் பற்றி எண்ணிக் கொண்டு போகிறாள்!

கழுத்தில் கிடக்கும் மஞ்சள் கயிறு, கோலமிடும் கோதைக்கு, கோமேதகம், மரகதம், வைர வைடூரியம், முத்து, பவளம் அத்தனையிலும் செய்யப்பட்ட ஆபரணத்தை விட மேலானது என்ற பெருமைமிகு எண்ணம்!

காரணம், கற்பெனும் ஆபரணத்தைக் காத்துக் கொண்டு அவள் அந்த மஞ்சள் கயிறை மாணிக்க மாலையெனும் ஆபரணமாகப் பூண்டிருப்பவள்!

காரிலே கரன்சியில் புரண்டு கொண்டு, கடந்த இரவின் சல்லாபங்களை எண்ணி மகிழ்ந்து, இன்னும் அதுபோல் எத்தனை இரவுகள் - எத்தனை மாளிகைகள் - எத்தனை சீமான்கள் - எத்துணை ஏற்றமிகு சோபித வாழ்வு! என எண்ணிக்கிடப்பவளோ, மஞ்சள் கயிறு கட்டியிருப்பவளை முட்டாள் மங்கை என முணு முணுத்துக் கொண்டு கேலி புரிகிறாள்!

உடன்பிறப்பே, கற்பெனும் அணிகலன் ஒன்றே போதுமென கழுத்தில் மஞ்சள் கயிறுடன் மனைமாட்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்கிடும் மங்கைதான் நம்முடைய கழகம்! இதிலே நமக்கு ஆறுதல்! நமக்கு பெருமை!

பகட்டுக்காரியை நேரிலே பாராட்டிடுவர்! பயனும் கூடப் பெறுவர்! ஆனால் பத்துபேர் மத்தியிலே சொல்லப் பயந்தாலும், தனியாகவாவது நினைத்துக் கொள்வர், அவளுக்கு வந்த பவிசு எப்படியென்பதை!

எனவேதான் உழைப்பு, தியாகம், கொள்கை பிறழா கற்புடைமை, இவற்றின் வடிவமாக வாய்த்துள்ள நம்முடைய கழகத்தின் சிறப்புணர்ந்து நமக்கு நாமே பெருமிதம் கொள்கிறோம்!

அத்தகைய கழகத்தின் அங்கமாக நாமிருக்கிறோம் என்பதில் ஒரு கர்வமேகூட ஏற்படுகிறது நமக்கு!

ஏனெனில், தமிழ்ச் சமுதாயத்தின் இருளகற்றி, ஒளிவிளக்கு ஏற்றி வைத்திட பெரியார், அண்ணா வழியிலிருந்து வழுக்கி விழாத நம் போன்றவர்களையே நாடு நம்பியிருக்கிறது!

அந்த வியத்தகு வெற்றியினைக்குறிக்கும் வீரமிகு பாசறையாம் கழகம், வீணர்களால் - வீடணர்களால் என்றைக்குமே வீழ்த்தப்படமாட்டாது என்பதை அறிவிக்கும் வண்ணம், ஒவ்வொரு உடன்பிறப்பும் அயர்வின்றி அலைந்து திரிந்து கழக உறுப்பினர் சேர்த்திடும் பணியினை ஆற்றிட வேண்டுமல்லவா?

எங்கே பார்க்கலாம்! தொடர்கிறதா உனது பணி?

உன் கரங்களில் கழக உறுப்பினர் சேர்க்கும் தலைமைக் கழகத்தின் விண்ணப்பத்தாள் இருக்கிறதா?

எத்தனை உறுப்பினர் சேர்த்தாய் என்ற பட்டியலை எப்போது அனுப்பிடப் போகிறாய்?

காத்திருக்கிறேன் கண்மணியே! உன் பதிலை - செயல்மூலம் எதிர்பார்த்து!

அன்புடன்

மு.க.

06-01-1986

1378. ஆலந்தூர் - அண்ணாநகர் - தாம்பரம்!

உடன்பிறப்பே,

அரசின் சார்பில் நடத்தப்படும் விழாக்களில் எதிர்க் கட்சிகளை, குறிப்பாக நம்முடைய கழகத்தை, விமர்சிப்பதை அமைச்சர்கள் வழக்கமாகவே கொண்டிருக்கிறார்கள். அதனை நாம் பல முறை சுட்டிக்காட்டியும் கூட, அமைச்சர்கள் அது குறித்துக் கவலைப்படாமல் அப்படித்தான் பேசுவோம் என்றும், எதிர்க்கட்சிக்காரர்கள் அவர்களது கூட்டங்களில் எழுப்பும் பிரச்சினைகளுக்கு அரசு விழாக்களில் அமைச்சர்கள் பதில் கூறுவது தவறில்லை என்றும் பதில் அளித்து விட்டார்கள் பல முறை! எதிர்க்கட்சி அரசியல் மேடையில் எடுத்து வைக்கும் வாதங்களுக்கு அல்லது குற்றச்சாட்டுகளுக்கு ஆளுங்கட்சியின் அரசியல் மேடைகளில் பதில் அளிக்க வாய்ப்பு இருக்கிறது! ஆனால் அமைச்சர்கள், அதை விடுத்து அரசு விழாக்களில் தான் அரசியல் கட்சி விமர்சனங்கள் செய்வோம்! செய்தால் அது தவறில்லை என்று கூறிவிட்ட பிறகு, நம்முடைய கழகத்தின் சார்பில் ஒரு முடிவு எடுத்தோம்!

அந்த முடிவின்படி இந்த அரசு எடுக்கும் சில விழாக்கள் - அதாவது தலைவர்கள் பிறந்த நாட்களைக் கொண்டாடும் விழா போன்றவைகளில் நமது கட்சியைச் சார்ந்த முன்னணித் தலைவர்களோ, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களோ கலந்து கொள்வதில்லையென்றும், தொகுதிகளில் நடைபெறும் தொகுதிமக்கள் சார்புடைய அரசு நிகழ்ச்சிகளில் மட்டும் நமது சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வதென்றும் அறிவிக்கப்பட்டது!

எடுத்துக்காட்டுக்குச் சொல்ல வேண்டுமானால், அண்மையில் சென்னை மாநகரில் துறைமுகத் தொகுதியில் நடைபெற்ற தொகுதி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் உள்ளாட்சித் துறை அமைச்சர் பெயருடன், தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

செல்வராசன் பெயரும் அழைப்பிதழில் பொறிக்கப்பட்டிருந்தது. தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவரும் கலந்து கொண்டார்.

அதே போல் சென்னையில் தொகுதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில், அமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்.வி.என். சோமு, டாக்டர் கலாநிதி ஆகியோர் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பெயர் அழைப்பிதழில் சேர்க்கப்பட்டிருந்தது. இவைகள் அண்மைக்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் என்பதற்காக யாருக்கும் மறந்திருக்காது என்பதால் இவற்றை மட்டும் குறிப்பிட்டேன்.

ஆனால், திடீரென்று சில நாட்களுக்கு முன்பு ஆலந்தூர் நகராட்சிக் கட்டிடத்தை உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையில் முதலமைச்சர் திறந்து வைத்தார். அந்த நிகழ்ச்சிக்கான அழைப்பிதழில் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஆப்ரகாம் பெயர் இல்லை! அது குறித்து அவர் தொடர்புடைய அதிகாரிகளிடம் கேட்டார் - அதிகாரிகளிடமிருந்து முறையான பதில் எதுவுமில்லை!

எனவே சட்டமன்ற உறுப்பினர் நியாயமான எதிர்ப்பைத் தெரிவிக்க உண்ணாவிரதம் மேற்கொண்டார். அவரும், அவருடன் உண்ணாவிரதமிருந்த நூற்றுக்கு மேற்பட்டோரும் கைது செய்யப்பட்டனர். கைதாகியிருந்த நிலையிலும், அவர்கள் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து கடைபிடித்தனர். அவர்களைக் கைது செய்து வைத்து விட்டு - அவர்களது தொகுதியில் அமைச்சர்களும், முதலமைச்சரும் கலந்து கொண்ட நகராட்சி நிகழ்ச்சி நடைபெற்று முடிந்தது!

அதற்குப்பிறகும் கூட இந்த அரசுக்கு எதிர்க்கட்சிகளை மதிக்கும் எண்ணம் வரவில்லை! சென்னை அண்ணா நகரில் அண்ணா அவர்கள் பெயரால் ஒரு வளைவு திறப்புவிழா! அந்தத் திறப்புவிழா மாநகராட்சி சார்பில் நடத்தப்பட்டது. முதலமைச்சரும் அமைச்சர்களும் கலந்து கொண்டனர். அவர்களது பெயர்கள் அச்சிடப் பெற்றிருந்த அழைப்பிதழில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதியின் பெயரோ, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சோ.மா. இராமச்சந்திரன் பெயரோ இல்லை! அது

குறித்து சட்டமன்ற உறுப்பினர் அதிகாரிகளிடம் கேட்டார். அவர்கள் என்ன செய்வார்கள் பாவம்! நிலைமையை எடுத்துச் சொல்லி விட்டுத் தங்கள் காரியத்தைக் கவனித்தார்கள்.

இந்த ஜனநாயக விரோதப் போக்கினைக் கண்டித்து சென்னை மாவட்டச் செயலாளர் விடுத்த அறிக்கைக்கேற்ப, சென்னை மாநகரில் உள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற கழக உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் ஆயிரக்கணக்கானோர் கண்டன ஊர்வலம் நடத்தி, உண்ணாவிரதமும் மேற்கொண்டனர். அவர்களும் கைது செய்யப்பட்டனர். கைதான நிலையிலும் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தனர். ஜனநாயகத்துக்காகக் குரல் எழுப்பியவர்களைக் கூண்டில் போட்டுவிட்டு, அண்ணா வளைவு திறப்புவிழா - ஆம்! அரசு விழா - ஒரு அரசியல் கட்சி விழாவாக நடந்தேறியது!

சட்டப் பேரவையில் எதிர்தரப்பு சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதியில் அரசின் சார்பில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு நிச்சயம் அழைக்கப்படுவார்கள் - அவர்களது பெயர் அழைப்பிதழில் இடம்பெறும் என்று அமைச்சர்கள் பலமுறை உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள்.

அதற்கு மாறாக இந்த நிலை! நியாயந்தானா இது? எனக் கேட்டால் அது மாபெரும் குற்றமாம்! கைது செய்ய உத்திரவிடப்படுகிறது! அழைத்துப் பேசி, நடந்தவற்றை திருத்திடும் முயற்சியில் ஈடுபட வேண்டிய பொறுப்பிலே இருப்பவர்கள், சிறையிடுக எனச் சீற்றம் காட்டுகிறார்கள்!

ஆலந்தூர், சென்னை அண்ணா நகர் நிகழ்ச்சிகளை மட்டுமே நான் குறிப்பிட்டிருப்பதற்குக் காரணம், அவையிரண்டும் சில நாட்களுக்கு முன்பு நடைபெற்றவை என்பது மட்டுமல்ல, இதோ இன்றைய 7.1.86 தினத்தந்தி சென்னை பதிப்பில் ஏழாம் பக்கத்தில் ஒரு பெரிய விளம்பரம்! தாம்பரம் நகராட்சி மன்ற சார்பில் நடைபெறுகிற அரசுத் தொடர்புடைய விழா! அறிஞர் அண்ணா பெயரால் பேருந்து நிலையத்தையும், ஜீவா பெயரால் வணிக வளாகத்தையும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திறந்து வைப்பதாக விளம்பரம்! அந்த விழாவுக்கு முன்னிலை வகிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் என்ன தெரியுமா? அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரின் பெயர்!

அடேடே! பரவாயில்லையே! அதற்குள் அரசினர் திருந்திக் கொண்டார்களே! சட்டமன்ற உறுப்பினர் பெயரை விளம்பரத்திலும் அழைப்பிதழிலும் போட்டு விட்டார்களே! என்று கூறத் தோன்றும் உனக்கு!

அவசரப்படாதே, உடன்பிறப்பே! அந்த சட்டமன்ற உறுப்பினர் ஆளுங்கட்சியின் உறுப்பினர்!

தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராக இருந்தால் - அழைப்பிதழிலோ அல்லது விளம்பரத்திலோ அவர் பெயரை அச்சியற்ற இடம் போதவில்லை என்று அதிகாரிகள் மழுப்புகிறார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு மட்டும் அந்த அழைப்பிதழ்கள் சங்கப் பலகை போல நீண்டு விரிந்து இடம் தருகின்றன போலும்!

அந்தத் தொகுதிகளில் நடைபெற்ற அரசுச் சார்புடைய நிகழ்ச்சிகளில் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.வுக்கு ஒரு நீதி! கழக எம்.எல்.ஏ.க்களுக்கு ஒரு நீதி!

நடுநிலையாளர்கள் விளங்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காகவே இதனை எழுதினேன்.

அன்புடன்

மு.க.

08-01-1986

1379. சொல்லக் கொதிக்குதே நெஞ்சம்!

உடன்பிறப்பே,

இலங்கையில் தமிழினம் அனுபவிக்கும் சித்ரவதை குறித்த செய்திகளைக் கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து கேள்விப்பட்டுத் துடித்துக் கொண்டிருக்கிறோம். சிறைக் கோட்டத்தில் அடைக்கப்பட்டிருந்த தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் ஆகிய விடுதலைப் போராட்டத் தலைவர்கள் உட்பட ஐம்பதுக்கு மேற்பட்டவர்களைச் சிறைக் கொட்டடிக்குள்ளேயே வைத்துக் கண்களைப் பிடுங்கியும், கழுத்தை அறுத்து ரத்தம் குடித்தும், நாவைத் துண்டித்தும், அங்கங்களை அறுத்துக் குவித்தும் கோரக் கொலையினை நடத்தினர், சிங்கள ராணுவத்தினரும் காடையர்களும்!

அன்று முதல் இன்று வரை ஆயிரக்கணக்கானோர் - தமிழின மக்கள் ஈழத்தில் படுகொலைக்கு ஆளாக்கப் பட்டும், மானபங்கப்படுத்தப்பட்டும், உடைமை களற்றவர்களாக்கப்பட்டும், அகதிகளாக விரட்டப்பட்டும் - தாங்கொணா வேதனைத் தணலில் வெந்துகொண்டிருக்கிறார்கள்.

நாம் வடித்த கண்ணீருக்கு - எழுப்பிய கண்டனக் குரலுக்கு - அன்னை இந்திரா அவர்கள் பிரதமராக இருந்த காலத்திலே வட்டமேசை மாநாடு ஒன்றே பிரச்சினையைத் தீர்த்துவிடும் என்பதே பதிலாயிற்று!

அந்தக் கால அவகாசத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஜெயவர்த்தனே தனது ராணுவ பலத்தைப் பெருக்கிக் கொண்டு தமிழ் ஈழ மக்கள் மீது தாக்குதலைத் தொடர்ந்து கொண்டே இருந்தார்.

இந்திரா அம்மையார் காட்டிய அக்கறை கூட, இன்றைய பிரதமர் ராஜீவ் அவர்கள், ஈழத்தமிழர் பிரச்சினையில் காட்டவில்லை என்பதுதான் உண்மை!

திம்பு பேச்சுவார்த்தையினால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்று நம்பிக்கையூட்டப்பட்டது!

எந்தப் பிரச்சினையும் தீராதது மட்டுமல்ல, சிங்கள அரசின் வெறியாட்டத்துக்கு நாள்தோறும் பலியாகிற இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கைதான் பெருகிக் கொண்டிருக்கிறது!

இந்திய அரசு அக்கறை எடுத்துக்கொண்டிருப்பதால் தான் இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது குறைந்திருக்கிறது என்பதாக இந்திய அரசின் சார்பாக எடுத்து வைக்கப்படுகிற வாதம், வலிவற்றது மட்டுமல்ல, உண்மையற்றதும் கூட!

வட்டமேசை மாநாடு என்ற பெயரால் கிடைத்த அவகாசத்தில் வெளிநாடுகள் சிலவற்றின் உதவியையும், ராணுவ தளவாடங்களையும் பெற்றுக்கொண்ட சிங்கள அரசு, திம்பு பேச்சுவார்த்தை என்ற பெயரால் கிடைத்த அவகாசத்தில் மேலும் நவீனமான போர்க்கருவிகளை வெளிநாடுகளில் இருந்து பெற்றுக் கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, ஏராளமான புதிய புதிய ராணுவ முகாம்களை இலங்கையில் பரவலாக அமைத்து, தமிழ்ப் போராளிகளைச் சுடுகிறோம் என்று கூறிக்கொண்டு அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கிறார்கள்.

தமிழ்ப் போராளிகள் மீது சிங்கள அரசு ஏதாவது ஒரு கற்பனையான பொய்க் குற்றச்சாட்டை சுமத்தி, அதனை நிரூபிக்க யாராவது ஒன்றிரண்டு விபீடணத் தமிழர்கள் கிடைத்தால் அவர்களைவிட்டு அறிக்கை வெளியிடச் செய்து, அந்தப் போராளிகளைப் பிடிப்பதாகக் கூறிக்கொண்டு, அப்பாவித் தமிழ் மக்களை, தமிழ் இளைஞர்களைக் கைது செய்து ராணுவ முகாம்களுக்குக் கொண்டு செல்கிறார்கள் என்ற செய்தி வந்தவண்ணமிருக்கிறது.

அவ்வாறு ராணுவ முகாம்களுக்கு கொண்டு செல்லப் பட்டவர்களின் கதி என்ன ஆகிறது என்பது குறித்து ஏடுகள் செய்தி வெளியிட்டுள்ளன. இலங்கையில் வெளியாகும் ஏடுகளிலேயே இந்தச் செய்திகள் காணப்படுகின்றனவாம்!

ஒரு கோடி ரூபாய் செலவில் இலங்கையில் ஒரு வங்கி அமைக்கப்பட்டுச் செயல்படுகிறதாம்!

அந்த வங்கியிலிருந்து மனித திசுக்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவாம்!

இருதயத்தின் சில நுண்ணிய பகுதிகள், எலும்பு, விழிகளின் வெண்படலம், காதின் குருத்தெலும்பு, ரத்தநாளம், செவிப்பறை, சிறுநீரகம் போன்ற மனித உறுப்புகள் - இந்த வங்கியினால் சேகரிக்கப்பட்டு அவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன என இலங்கையிலிருந்து வெளிவரும் சன்டே அப்சர்வர் என்ற பத்திரிகையில் ஓரிரு மாதங்களுக்கு முன்பு செய்தி வந்தது!

அப்படி மனித உறுப்புகளை அனுப்புவதற்கு - ஆதரவற்றவர்களின் சவங்கள், அவர்களாகவே முன்வந்து, இறந்தபிறகு எடுத்துக் கொள்ளுங்கள் என அறிவிக்கும் உறுப்புகள், விபத்துக்களில் இறந்தவர் உடல்களிலிருந்து அவரது உறவினர்கள் மூலம், அனுமதி பெற்று எடுத்திடும் உறுப்புகள் - இவைகளைத்தான் தேர்ந்தெடுத்து சேகரிக்க வேண்டும்.

ஆனால், இலங்கையில் என்ன கொடுமை நடக்கிறது தெரியுமா?

தீவிரவாதிகள் என பழி சுமத்தப்பட்டு, சிங்கள ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, ராணுவ முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை அங்கே கொலை செய்து, அவர்களது உடல் உறுப்புகளை அந்த வங்கியின் மூலம் ஏற்றுமதி செய்கிறார்களாம்!

தமிழகத் தினசரி ஏடுகளில் இந்தச் செய்தியைப் படித்தபோது என் நெஞ்சம் பதறியது! இரத்தம் கொதித்தது!

எனக்கு மட்டுமல்ல, இந்த ஈவு இரக்கமற்ற காட்டு மிராண்டித்தனமான செயலைச் செய்தியாகப் படிக்கும் எவருக்கும், இதயமென ஒன்றிருந்தால் அது குமுறத்தான் செய்யும்!

சிங்கள வெறியர்களுக்கு இந்தக் காட்டுமிராண்டித்தனம் புதிதல்ல!

தமிழர் மாமிசத்தைக் கடைபோட்டு விற்றவர்கள் தானே அந்தக் கொடியவர்கள்!

இப்படி ஒரு இனம், நமது கடற்கரைக்கு அருகாமையிலே - அதுவும் நமது இனம் அழிந்து கொண்டிருக்கிறதே! இன்னமும் இங்குள்ள மத்திய அரசு இதோபதேசம் புரிந்து கொண்டிருக்கிறதே என எண்ணிடும் போது -

தமிழா! நமது உடலை நாமே கிள்ளிப் பார்த்துக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது. நமது தோலில் கொஞ்சமாவது சொரணை இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள!

அன்புடன்

மு.க.

10-01-1986

1380. பஞ்சாப் உடன்பாடும் - பஜன்லால் குறுக்கீடும்!

உடன்பிறப்பே,

லோங்கோவால் அவர்களுடன் ராஜீவ் காந்தி செய்து கொண்ட ஒப்பந்தம் குறித்து, மத்திய அரசின் விளம்பர சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி இவற்றிலெல்லாம் ஒரு வார காலத்திற்கு மேலாக பிரதமர் ராஜீவ் காந்தியின் புகழ் பாடப்பட்டது!

சண்டிகார் தலைநகரம் பஞ்சாப் மாநிலத்துக்கு உரியதாக்கப்படும் - அரியானாவுக்கு புதிய தலைநகர் அமைக்க மத்திய அரசு நிதி உதவி தரும், என்ற ஒரு தீர்வு 1971ஆம் ஆண்டிலேயே பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் காலத்திலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்த போதிலும் - அது செயல்படுத்தப்படாமலே போய், மாநில அதிகாரங்களுக்காக குரல் எழுப்பிக் கொண்டிருந்த பஞ்சாபின் அகாலிதளக் கட்சியை பிளவுபடுத்துவதற்காக பிந்தரன்வாலே என்பவரை காங்கிரசின் பக்கம் இழுத்து, பிறகு அவரே மிகப் பெரும் தீவிரவாதியாக மாறி காங்கிரசை எதிர்ப்பவராக உருக்கொண்டு - பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் அனைவரும் அறிந்தவையாகும்!

ராஜீவ் காந்தி பட்டத்துக்கு வந்த பிறகு, அகாலி தளத் தலைவர்களை அழைத்துப்பேசி, ஒரு சமரசம் ஏற்படுத்தியதன் விளைவாக பஞ்சாபில் காங்கிரசின் செல்வாக்கு உயர்ந்து, உடனடியாக அறிவிக்கப்பட்ட தேர்தலில் காங்கிரசே வெற்றி பெறும் என்றும் டெல்லி வட்டாரம் எதிர்பார்த்தது.

அமிர்தசரஸ் பொற்கோயிலில் ராணுவம் நுழைந்ததையும் - ஆயிரக்கணக்கானோர் உயிர் இழந்ததையும் பஞ்சாப் மக்கள் நினைவுக்கு வராமல் செய்வதற்காக - அந்தத் தேர்தலில் அன்னை இந்திரா காந்தி படங்களைக்கூட

சுவர்களில் ஒட்டி தேர்தல் பிரச்சாரம் செய்ய, காங்கிரஸ் கட்சி முன்வரவில்லை.

தேர்தல் முடிவு, அகாலிதளத்தின் வெற்றியாக விளைந்தது, பர்னாலா முதலமைச்சரானார்.

பஞ்சாப்பில் காங்கிரசுக்கு ஏற்பட்ட தோல்வியைக் கூடக் கண்டுகொள்ளாமல் காங்கிரஸ் தலைவர்கள், ராஜீவ் காந்தி அவர்கள் உட்பட, எப்படியோ ஜனநாயகம் காப்பாற்றப்பட்டது என்று கருத்துகளை உதிர்த்த போது, கள்ளங்கப்படமில்லாமல்தான் அப்படி பெருந்தன்மையுடன் சொல்கிறார்கள் என்று நாட்டில் பலரும் நம்பினர்!

ஆனால், அந்த நம்பிக்கையைப் போக்கும் காரியங்கள் இப்போது நடைபெறுகின்றன!

அகாலித் தலைவர்களுடன் பிரதமர் செய்து கொண்ட ஒப்பந்தப்படி - ஜனவரி 26 குடியரசு தினத்தன்று, சண்டிகார் நகரம், அதிகார பூர்வமாகப் பஞ்சாப்பின் தலைநகரமாக ஆக வேண்டும். பஞ்சாபில் உள்ள இந்தி பேசும் பகுதிகளை அரியானாவுடன் இணைப்பதற்கு ஏற்ற வகையில், அறிக்கை தயாரித்து அளிக்க மாத்யூ கமிஷன் அமைக்கப்பட்டு, அதன் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சட்லஜ், யமுனை நதிகளின் இணைப்புக்கால்வாய், ஆகஸ்டு 15க்குள் கட்டி முடிக்கப்படும். இது போன்ற சில அடிப்படைகளில் உருவானதுதான் அந்த ஒப்பந்தம்!

ஆனால் பஞ்சாபில் காங்கிரஸ் கட்சி தோற்று, அகாலிதளம் ஆட்சி அமைத்து விட்ட காரணத்தால், நிலைமை வேறு விதமாக மாறி, ஒப்பந்தம் கொட்டிக் கவிழ்க்கப்படுமோ என்ற சந்தேகம் உருவாகியிருக்கிறது.

ஜனவரி 26 இல் சண்டிகாரை, பஞ்சாபுக்கு மாற்றித் தருவதில் அரியானா முதல்வர், பஜன்லால் பெரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்.

பஜன்லால் வேறு யாருமல்ல - பிரதமர் ராஜீவ் காந்தியின் தலைமையை ஏற்றுக் கொண்டுள்ள காங்கிரஸ்காரர்தான்! பிராந்தியக் கட்சியின் தலைவரல்ல பஜன்லால்! குறுகிய கண்ணோட்டமெனும் வளையத்துக்குள் இல்லாத, பரந்த தேசிய

நீரோட்டம் எனக் கூறப்படுகிற விரிந்த வானவெளியில் பறந்து கொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சர்தான்!

அவர் இப்போது, ராஜீவ் காந்தி அவர்கள் பஞ்சாப் அகாலி தளத் தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்துகிறார். சண்டிகாரைத் தரமுடியாது என்று ஆர்ப்பரிக்கிறார். டெல்லியிலிருப்போர் காதைக் கடிக்காமல் பஜன்லால் அவர்கள் இப்படி முழக்கமிடுவாரா என்ற கேள்வி, அரசியல் அரங்கத்தில் எழுந்து நிற்கிறது.

இந்த எதிர்ப்புகளை மையமாகக் கொண்டு, பஞ்சாப்பில் மீண்டும் கலவரங்கள் ஆரம்பமாகியிருக்கின்றன!

ஜனவரி 26 ஆம் தேதியன்று சண்டிகார் நகரை, பஞ்சாப் மாநிலத்துக்கு மாற்றித் தருவதில் ஏதாவது சிக்கல் ஏற்பட்டு - ராஜீவ் - லோங்கோவால் உடன்பாடு செயலற்றுப் போகுமேயானால், அதன் காரணமாக நாட்டில் பெரும் விளைவுகள் உருவாகக் கூடுமென ஐ.கே.குஜ்ரால், ஓய்வு பெற்ற மார்ஷல் அர்ஜுன் சிங், குல்திப் நய்யார் போன்ற பிரமுகர்கள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு தெரிவித்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

பஜன்லால் அவர்கள் தானாகச் செயல்படவில்லை! டெல்லி மேலிடத்தின் யோசனைப்படிதான் மீண்டும் பஞ்சாப்பில் ஒரு ரண களத்தை உருவாக்கிட திறமையாக ஒரு நாடகம் நடத்துகிறார், இந்த நாடகத்தின் சூத்திரதாரியாக பிரதமர் ராஜீவ் காந்தி இருக்கிறார் என்று வெளிவருகிற செய்திகளைப் பொய்யாக்கிட வேண்டுமேயானால், தனது தலைமையின் கீழுள்ள பஜன்லால் அவர்கள், தான் செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு மாறாக இப்போது திடீரெனச் சிலிர்த்துக் கிளம்பியிருப்பதைத் தடுத்துநிறுத்தி - லோங்கோவால் போன்ற தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு செயல்வடிவம் தந்திட முன்வந்து துணை நிற்க வேண்டும்!

இல்லையேல் விரும்பத்தகாத விளைவுகளை, விலை கொடுத்து வாங்கிய கதையாக ஆகிவிடும்!

அன்புடன்

மு.க.

11-01-1986

1381. ஆணையிடுகிறாய்! நிறைவேற்றுகிறேன்!

உடன்பிறப்பே,

இன்றுடன் பத்து நாட்கள்! நீயும், நானும் இல்லை! இல்லை... நாம்! முரசொலியைப் படிக்கவில்லை! இந்தப் பத்து நாட்களும் பத்து நூற்றாண்டுகளாகத்தான் தோன்றியது!

முரசொலியின் முழக்கம் நிற்கிறது எனக் கேள்வியுற்ற வுடன் எத்தனை தந்திகள்! எத்தனை கடிதங்கள்! எவ்வளவு கண்டனங்கள்! எத்துணை உருக்கமிகு வேண்டுகோள்கள்!

இதோ ஐயாயிரம் ரூபாய் முரசொலி வளர்ச்சிக்காக அனுப்புகிறேன் எனத் தந்தி மூலம் அறிவித்த நாடாளுமன்றத்து முன்னாள் உறுப்பினர் அர்ச்சுனன் அவர்கள், அந்தத் தொகையை முரசொலி அலுவலகத்திலும் கொண்டு வந்து கொடுத்தார். அவரைப் போலவே கழகத்தின் சட்டத்துறைச் செயலாளர் என். கணபதி அவர்கள் ஆயிரம் ரூபாய் தந்தார். நூறு, இருநூறு, முன்னூறு என்று பலரும் நிதி வழங்கத் துவங்கிவிட்டனர்.

முரசொலி மீண்டும் தொடர்ந்து வெளிவருதல் வேண்டு மென்பதற்காக அவர்கள் கொண்ட ஆர்வத்தின் அடையாளம் அது! அந்தத் தொகைகளை நிதியாகக் கணக்கில் வைக்காமல், வழங்கப்பட்ட தொகைக்கேற்ப சந்தாக்களாக ஆக்கிக்கொள்வது என நிர்வாகம் முடிவெடுத்திருக்கிறது.

முரசொலி சுடச்சுட செய்திகளைத் தருகிற ஏடல்ல! சுவையான தொடர்கதைப் படங்களை வெளியிடுகிற இதழுமல்ல!

கருத்துவிளக்கம் - நாட்டுநிலை குறித்து நம்முடைய கழகத்தின் கண்ணோட்டம் - இவைகள், நமது கழக முன்னணியினரின் உரைகளாக, கட்டுரைகளாக இடம் பெற்று, தமிழ் மக்களின் இதயத்தைத் தொட்டு இலட்சிய வெற்றிக்காகப் பணியாற்றுகின்ற ஒரு சாதனம்தான் முரசொலி!

மத்தியிலும், மாநிலத்திலும் ஆளுகின்ற கட்சிக்காரர்களுக்கோ காலை முதல் நள்ளிரவு வரையில், அவர்களது கட்சிப் பிரச்சார சாதனங்களாகச் செயல்பட வானொலியும், தொலைக்காட்சியும் இருக்கின்றன. ஆம், அதற்கெனவே அவைகள் இயங்குகின்றன!

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள், அக்கட்சியின் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களால் அறிவிக்கப் பட்டு, எந்த எந்த நிர்வாகிகள், எந்த எந்த மாநிலங்களில் கட்சிப் பொறுப்புகளை ஆற்றிடுவர் என்பதை சாங்கோபாங்கமாக - விஸ்தாரமாக மாநிலப் பெயர்கள், பொறுப்பேற்கும் நிர்வாகிகள் பெயர்கள் அனைத்தையும் விவரித்திட, சென்னைத் தொலைக்காட்சியினர் செய்தி நேரத்தைப் பாதியளவு எடுத்துக் கொண்டதையும் காண முடிந்தது, கேட்க முடிந்தது!

ஆனால் தி.மு.கழகம் உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்கான முதல் பட்டியலை வெளியிட்டுள்ளது என்பதை மட்டும் தான் சொல்ல முடியும், எத்தனை வேட்பாளர்கள் அடங்கிய முதல் பட்டியல் என்று எண்ணிக்கையைக்கூட சொல்ல முடியாது என அடம் பிடிக்கிறது தொலைக்காட்சி!

முழுக்க முழுக்க அரசின் பிரச்சார இயந்திரமாக மட்டுமல்லாமல் அரசை நடத்துகின்ற கட்சியின் செய்திகள், நிகழ்ச்சிகள், மாநாடுகள் இவற்றுக்கு மட்டுமே இடம்தர முடியுமென்பதை செயல் மூலம் காட்டியும் வருகின்றன வானொலி, தொலைக்காட்சிகள்!

நமது தினகரன் போன்ற ஒரு சில நாளேடுகள் மற்றும் ஒன்றிரண்டு வார ஏடுகளில் நமது இயக்கத்தின் செய்திகள் வெளிவருவதைத் தவிர, மற்ற பல நடுநிலை ஏடுகளிலோ நம்மைப் பற்றிய எதிர்க் கருத்துகள் ஏதேனும் இருப்பின், அவற்றினை வெளியிட்டு மகிழ்வதிலே ஒரு தனி மகிழ்ச்சி காண்பார்களே தவிர, உளப்பூர்வமாக பத்திரிகா தர்மம் என்ற அடிப்படையில் அவர்கள் அரசியலில் ஓர் அணுகுமுறையைக் கடைபிடிக்கத் தயாராயில்லை!

எனவேதான், ஒவ்வொரு நாளும் நானும் உன்போன்ற உடன்பிறப்பும் ஒருவர் முகம் பார்த்து ஒருவர் உரையாடுவதைபோன்ற உணர்வுடன், நான் முரசொலியில் எழுதிடவும், நீ படித்திடவுமான ஒரு நிலை தேவைப்பட்டது.

இவ்வளவும் உணர்ந்துள்ள நீ, பிறகு எதற்காக முரசொலியின் முழக்கம் நிற்கிறது எனக்கூறி எங்கள் நெஞ்சில் வேதனை விதைகளைத் தெளித்தாய்? எனக்கேட்பாய்!

அப்படிக்கேட்டு, ஆயிரக்கணக்கான கடிதங்கள் இந்தப் பத்து நாட்களில் குவிந்து விட்டன - அதேபோல் நூற்றுக்கணக்கான தந்திகள்!

மடல் தீட்டியோர், தந்தி அனுப்பியோர், நேரில் சந்தித்து வற்புறுத்தியோர் அனைவரது உணர்வுகளுக்கும் தலைதாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன்.

அத்துணைப் பேருக்கும் தனித்தனி மடல் எழுத இயலாத காரணத்தால் இதனையே என் நன்றிக் கடிதமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தம்பி முரசொலி மாறன் - மீண்டும் இன்று மலரும் முரசொலி இதழை வண்ணமாக உன் கையில் வழங்கினாலுங் கூட, முரசொலியின் இதழ் வடிவமும், வனப்பும், வண்ணப் படங்களும், திருமணத்தன்று மணமகள், பளபளக்கும் காஞ்சிப்பட்டு உடுத்திக் கொண்டு மனையில் அமருவதைப் போலத்தான்!

இடையில் விழாக்கள், திருநாட்களில் வேண்டுமானால் - மீண்டும் வண்ண உடை அணியக்கூடும் அம்மங்கை!

அடுக்களை வேலைகளை கவனிப்பதுபோன்ற - குடும்பப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் போது வெறும் கைத்தறிச் சேலைதானே, காரிகையின் உடலில் இருக்கும்!

அதைப்போலத்தான் இன்று நீ காண்பது - மணமகள் நிலையில் உள்ள முரசொலி!

நாளை முதல் எளிமையான மருமகளைப் போலத்தான்!

இந்தத் திங்கள் முடியும்வரை முரசொலியின் விலை எழுபது காசு என்பது பிப்ரவரியிலிருந்து எண்பது காசு! அதுவும் இழப்பை ஓரளவு குறைத்துக்கொள்ள!

ஆனால் ஒரு உறுதியை நிர்வாகத்தின் சார்பிலும் - துணை ஆசிரியர் குழுவின் சார்பிலும் - பணியாற்றும் ஏனைய நண்பர்கள்

சார்பிலும் கூறமுடியும். ஒவ்வொரு நாளும் காலையில் தாமதமின்றி முரசொலி கிடைக்கும்!

என் கடிதங்கள் எப்போதும் போல் தொடரும்!

கருத்தாழமிக்க கொள்கை விளக்கங்கள் - நாட்டு நடப்பு குறித்த எண்ணங்கள் கட்டுரைகளாக மிளிரும்!

கார்ட்டூன் படங்கள் தவறாது வெளி வர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்!

தம்பி மாறனின் தலையங்கங்கள் தொய்வின்றி இடம் பெறும்!

நமது பேராசிரியர், மற்றும் நம்முடைய கழகத்தின் முன்னணித் தளபதிகளின் சொற்பொழிவுகள், கழகத்தின் கொள்கைச் சுடராக ஒளிவிடும்!

பிப்ரவரி முதல் புதுக்கோலம் கொள்கிறது முரசொலி என்றால், எத்தனையோ சிரமங்களுக்கிடையே - ஓய்வற்ற பணிகளுக்கிடையே - நீ ஆணையிடுகிறாய்! அதனை நான் நிறைவேற்ற முற்படுகிறேன் என்பதுதான் உண்மை!

இதோ முரசொலி! இதன் முழக்கம், இன்னும் ஓங்கி ஒலிப்பது என்பது உன் கையில்தான் இருக்கிறது!

அன்புடன்

மு.க.

25-01-1986

1382. உள்ளாட்சித் தேர்தல் - உளமுருகி ஒரு வேண்டுகோள்!

உடன்பிறப்பே,

எப்படியோ, எதிர்க்கட்சிகள் ஏழெட்டு ஆண்டுகளாக உள்ளாட்சி மன்றத்தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசை வலியுறுத்தி, சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் குரல் எழுப்பியதற்கும் - போராட்டங்கள் நடத்தியதற்கும் - பல்வேறு ஒத்திவைப்புகளுக்குப் பிறகு - இப்போதாவது பலன் கிடைத்து, ஒரு வழியாக, வேறு வழியின்றி இந்த அரசு உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு முன் வந்துள்ளது.

உச்சநீதி மன்றத்தில் தனியார் ஒருவர் இத்தேர்தல் குறித்து தொடர்ந்திருந்த வழக்கு, 1985ஆம் ஆண்டு அக்டோபர் மாதமே திரும்பப் பெறப்பட்டு விட்டது என்ற தகவலைக்கூட நமது சட்டமன்ற உறுப்பினர் தம்பி ரகுமான்கான் சட்டப்பேரவையில் கூறிய பிறகுதான், அப்படியா? அது குறித்து விசாரித்து நாளைக்கு அறிவிக்கிறோம் என்று அமைச்சர்கள் பதில் அளித்து - அதன் பின்னர் விசாரித்து, ஆமாம்! அது சென்ற ஆண்டு அக்டோபரிலேயே வாபஸ் பெறப்பட்டுவிட்டது என்ற தகவலை மறுநாள் அவையில் அறிவித்திருக்கிறார்கள்.

உச்சநீதி மன்றத்தில் வழக்கு ஒன்று நிலுவையில் இருந்திடும்போது, முதலில் நிறைவேற்றிய உள்ளாட்சித் தேர்தல் சட்டத்திற்கு மாறாக புதியதோர் சட்டத்தைக் கொணர்ந்து தேர்தல் நடத்தலாமா? என்ற கேள்வியின் அடிப்படையில், இப்போது சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப் பட்ட வழக்கு, உச்சநீதி மன்றத்தில் இருந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்ற தகவலை வெளிக் கொணர்ந்ததைத் தொடர்ந்து தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

எனவே, உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதைத் தவிர அரசுக்கு வேறு மார்க்கமில்லாமல் போய்விட்டது!

இடைக்காலத்தடை என்ற ஒரு நிலை ஏற்படும். அதனால் காங்கிரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி, தேர்தல் உடன்பாட்டை இறுதியாக்கத் தேவையில்லை என்று எண்ணிக் கொண்டிருந்த ஆளுங்கட்சிக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தின் காரணமாக, காங்கிரசுடன் உடன்பாடு குறித்துப் பேச நேரம் வேண்டும் என்பதற்காக வேட்புமனு தாக்கல் செய்யும் காலத்தை 27 ஆம் தேதி முடிவடையும் என்பதற்குப் பதிலாக 30 ஆம் தேதி வரையில் நீட்டித்து அறிவிப்பு செய்துள்ளார்கள்!

இடைக்காலத் தடையொன்று தேர்தலுக்கு வருமா அல்லது வராதா என்பது குறித்து ஆருடம் கணித்துக் கொண்டிராமல் நம்முடைய கழகம் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் - ஏற்கெனவே முடிவெடுத்தபடி ஆங்காங்கு மாவட்ட அளவில் தோழமைக் கட்சிகளுடன் உடன்பாடு குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதிலும் ஈடுபட்டு கழக வேட்பாளர்கள் பட்டியலை அறிவித்துள்ளது.

கடந்த 17ஆம் தேதி முதல் நானும், நமது பொதுச்செயலாளர் அவர்களும், தலைமைக் கழகத் தேர்தல் பணிச்செயலாளர் தம்பி கோபால்சாமியும், மற்றும் தலைமைக் கழகச் செயலாளர்களும், மாவட்டச் செயலாளர்கள், ஒன்றிய, நகர நிர்வாகிகள் ஆகியோரும் ஓய்வின்றி - உறக்கமின்றி - வேளாவேளைக்கு உணவுமின்றி - வேட்பாளர் தேர்வுப் பணியில் ஈடுபட்டிருக்கிறோம் என்பது நீ அறியாததல்ல!

ஒவ்வொரு நகரம் - ஒன்றியம் - பேரூராட்சி - தலைவர் பொறுப்புக்கும், உறுப்பினர்கள் பொறுப்புக்கும் ஒவ்வொரு இடத்திலும் பல உடன்பிறப்புகள் விண்ணப்பித்துக் கொண்டுள்ள போது, அவர்களில் யார் ஒருவரை வேட்பாளராக அறிவிப்பது என்பதில் எவ்வளவு சிக்கலும், தயக்கமும் எனக்கும், பேராசிரியருக்கும் ஏற்படுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

எல்லாமே எங்களுக்கு பார்த்த முகங்கள் - பாசமுடன் பழகிய முகங்கள் - ஒரு கொடியில் பூத்திருக்கும் மலர்கள் போல, ஒரு குலையில் பழுத்திருக்கும் கனிகளைப் போல, என்பதில் இரண்டுவித கருத்துக்கு இடமே இல்லையல்லவா?

ஒருவர் பெயரை வேட்பாளர் என அறிவித்திட, எழுதிட முனையும் போது இன்னொரு உடன்பிறப்பு அகக்கண்ணின்

முன்னே தோன்றி, அண்ணே! என்னை விட்டுவிடுகிறாயா? எனக் குழையும் குரலில் கேட்பது போன்ற உணர்வு, எங்களிருவரையும் உலுக்கிடும்!

இந்த நிலையினூடேதான் சிந்தித்துச் சிந்தித்து - அந்தந்த ஊர்நிலை - இயக்கநிலை - தோழமைக்கட்சிகளுடன் கொண்டுள்ள உடன்பாடு - அனைத்தையும் மனத்திற்கொண்டு பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

முதல், இரண்டு, மூன்று என வெளியிடப்பட்டுள்ள மூன்று பட்டியல்களையும் தொகுத்து, மாவட்ட வாரியாக இன்றைய முரசொலியில் வேறு பக்கத்தில் தலைமைக் கழகச் சார்பில் வேட்பாளர்கள் பெயர்களும், இடங்களும் வெளியிடப் பட்டுள்ளது. ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள பட்டியலில் ஒரு சில மாற்றங்கள் இந்தப் பட்டியலில் இருக்கக்கூடும். சில இடங்களில் தோழமைக்கட்சிகளுடன் பேசுவதற்கு வசதியாகவும், முட்டுக்கட்டையின்றி இருக்கவும் இந்த மாற்றங்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழக வேட்பாளர்கள் இறுதியாக அறிவிக்கப்பட்ட பிறகு கூட, தோழமைக்கட்சிகளின் உடன்பாடு காரணமாக ஏதாவது கடைசிகட்ட மாற்றம் தேவைப்படக்கூடுமானால், அது குறித்துக் கலந்து ஆலோசிக்க இம்மாதம் - 28-29, செவ்வாய், புதன் ஆகிய இருநாட்களும் மாவட்டக் கழகச் செயலாளர்களும், நிர்வாகிகளும் - அல்லது பொறுப்பாளர்கள், அல்லது மாவட்டப் பொறுப்புக் குழுவினர் சென்னையில் அவசியம் இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

தங்கள் பெயர் அறிவிக்கப்படவில்லையென்றோ - அல்லது அறிவிக்கப்பட்ட பெயர் தோழமைக்கட்சி உடன்பாடு காரணமாக இடம் பெறாமல் போய் விட்டதென்றோ கழக உடன்பிறப்புகள் யாரும் வேதனையடையாமல், நிலைமைகளுக்கேற்பத் தலைமைக் கழகம் முடிவெடுக்க ஒத்துழைப்பு தருவதுதான், அண்ணா அவர்கள் காலத்திலிருந்து நாம் கட்டிக் காத்துவரும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாடுகளுக்கு மதிப்பு தருகிற செயலாகும்!

நாமும் சரி, தோழமைக் கட்சியினரும் சரி, எத்தனை இடங்களில் நிற்பது என்பதை விட, எந்த எந்த இடங்களில் போட்டியிட்டால் வெற்றிக்கு அதிக வாய்ப்பு என்ற அடிப்படையில் தான் உடன்பாடு குறித்து மாவட்ட அளவில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றிருக்கின்றன! நடைபெற்றுக் கொண்டுமிருக்கின்றன.

அதில் மாவட்ட அளவில் தீர்க்க முடியாத பிரச்சினை எழும்போதுதான் - கட்சிகளின் தலைமை அளவில் தலையிடவேண்டியிருக்கும்.

அதற்காகத்தான் மாவட்ட நிர்வாகிகளை, நான் முதலில் குறிப்பிட்டிருப்பதைப் போல இத்திங்கள் 28, 29 ஆகிய நாட்களில் சென்னைக்கு அழைத்து, நானும், பொதுச் செயலாளர் அவர்களும் கலந்து பேசுகிறோம்!

இப்பொழுது எடுத்து அறிவிக்கப்பட்டுள்ள முடிவுகளில் பெரிய மாற்றம் எதுவும் இருக்குமோ என்று ஐயமுறத் தேவையில்லை!

தேவைப்படுகிற சிறுமாற்றங்களை, அதுவும் தோழமைக் கட்சி உடன்பாடு குறித்துச் செய்து கொள்வதற்குத் தலைமைக்கு உரிமை இருக்கிறது என்றாலும் - உன் போன்ற உடன்பிறப்புகளின் கருத்தை அலட்சியப்படுத்திவிட்டு, தலைமைக் கழகம் முடிவெடுக்காது என்பதற்காகத்தான் - தேவைப்பட்டால் சிறு மாற்றங்கள் செய்து கொள்ள எங்களுக்கு அனுமதி வழங்கிடுக என உன்னையும், கழக அமைப்புகளை நிர்வகிக்கும் உடன்பிறப்புகளையும், பொறுப்புகளுக்குப் போட்டியிட விண்ணப்பித்துள்ள உடன்பிறப்புகளையும் என்றும் உள்ள வற்றாத பாசப்பிணைப்பின் அடிப்படையில் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்

மு.க.

26-01-1986

1383. வாபஸ் ஆன வழக்குகள்!

உடன்பிறப்பே,

எப்போதும் பதட்டத்துக்குப் பேர்போன ஒரு அமைச்சர், சட்டமன்றத்தில் - நெருக்கடி நிலையைத் தொடர்ந்து கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, இந்திரா அரசினால் அமைக்கப்பட்ட சர்க்காரியா கமிஷன் விசாரணை குறித்தும், தொடரப்பட்ட வழக்குகளைக் குறித்தும் ஏதேதோ பேசி, சஞ்சய் காந்தியிடம் போய்க் கெஞ்சியதாகவும், அதனால் வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்பட்டதாகவும், வீர முழக்கமிட்டு என்னைக் கோழை என வர்ணித்திருக்கிறார்.

1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது தமிழ்நாட்டிலும் சரி, மற்ற மாநிலங்களிலும் சரி, தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டங்களில் பேசிய அசோக் மேத்தா, மொரார்ஜி தேசாய், பாபு ஜெகஜீவன்ராம், சாந்திபூஷண், ஜார்ஜ் பெர்னாண்டஸ் போன்ற தலைவர்கள் எல்லாம், தி.மு.கழகம் எமர்ஜென்சியை எதிர்த்த காரணத்துக்காக அவர்கள் மீது இந்திரா காந்தி வேண்டுமென்றே அரசியல் உள்நோக்கத்துடன் வழக்குகளைப் போட்டுள்ளார் என்று குறிப்பிட்ட போது, இப்போது அ.தி.மு.க.வில் அமைச்சராக இருந்து கொண்டு என் மீது காய்ந்து விழுபவர், அப்போது தி.மு.க.வில் தான் இருந்தார்.

அந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து மத்தியில் ஜனதா ஆட்சி ஏற்பட்டு, சில மாதங்களில் தமிழகத்திலும் அ.தி.மு.க. ஆட்சி அமைந்து - ஜனதா ஆட்சியும், அ.தி.மு.க. ஆட்சியும் அளவுக்கு மீறிய நட்புறவு கொண்டு விட்ட காரணத்தால், ஜனதா தலைவர்களாலேயே தி.மு.க. மீது இந்திரா அரசு தொடர்ந்துள்ளவை அரசியல் உள்நோக்கம் கொண்ட வழக்குகள் என்று வர்ணிக்கப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப் படவில்லை.

1977 இல் தி.மு.க. எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்த போது இன்றைக்கு அமைச்சராக இருந்து கொண்டு என்மீது புழுதி வாரி வீசுகிற இவர், எனக்கும், பேராசிரியருக்கும் அடுத்து, பேரவையில் முன்வரிசையில் அமர்ந்திருந்தார். என் தலைமையிலான அமைச்சரவையிலும் இவர் அமைச்சராக முன்வரிசையில் இருந்தார் என்பதை அவர் ஒருவேளை மறந்திருந்தாலும், நீ மறந்திருக்க மாட்டாய் சரி, விஷயத்துக்கு வருகிறேன்.

எதிர்க்கட்சி வரிசையில் இவர் 1977 இல் எங்களுடன் அமர்ந்திருந்த போது எப்படி வீர முழக்கமிட்டார் தெரியுமா? ஆளுங்கட்சித் தரப்பிலிருந்து யாரோ ஒரு உறுப்பினர், தி.மு.க.வினர் மீது சர்க்காரியா கமிஷன் விசாரணை போடப் பட்டதைச் சுட்டிக்காட்டிக் குத்தலாகப் பேசினார். உடனே இவர் ஆவேசங் கொண்டு, மேசையை ஓங்கித் தட்டியவாறு - என்ன சர்க்காரியா கமிஷன் அறிக்கை என்கிறீர்கள் - அதில் என்ன இருக்கிறது? கொண்டு வாருங்கள் அதை! கிழி, கிழி என்று கிழித்துக் காட்டுகிறேன் என்று அவையே அதிரும்படி ஒலி எழுப்பினார்! அந்தச் சங்கநாதம் இன்னமும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கும்போதே, இப்போது அவர் அந்தப் பகுதிக்குச் சென்று அமைச்சராகி விட்டதால் அங்கிருந்து கொண்டு இப்படிப் பேசுகிறார்!

சாட்சியங்கள் அனைத்தும் வேண்டுமென்றே திட்டமிட்டு, நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி, மிரட்டப்பட்டு தயாரிக்கப் பட்ட காரணத்தினால்தான் - அந்த சாட்சிகள் அனைவரையும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று தி.மு.க. சார்பில் வாதாடிய சாந்திபூஷண் உள்ளிட்ட வழக்கறிஞர்கள் அனைவரும் வலியுறுத்தியும்கூட, அதற்கு அப்போது இணங்க நீதிபதி சர்க்காரியா மறுத்துவிட்டார் என்பதும் - அதன் காரணமாக அந்த விசாரணையிலிருந்து தி.மு.க. சார்பில் வாதாடச் சென்ற வழக்கறிஞர்கள் வெளிநடப்பு செய்துவிட்டனர் என்பதும், அந்த விசாரணையை தி.மு.க. புறக்கணித்து விட்டது என்பதும் - அப்போது நம்முடன் இருந்தவரும் - இன்றைக்கு அங்கே சென்று அமைச்சராகி விட்டவருமான நண்பருக்குத் தெரியாததல்ல! விசாரணை ஒருதலைப்பட்சமாக நீதிபதி சர்க்காரியாவினால் நடத்தப்படுகிற காரணத்தால், அந்த விசாரணையைப் புறக்கணிப்பது என்று முடிவெடுத்தவர்களில் நானும்,

நாவலரும், பேராசிரியரும், சாதிக்கும், நண்பர் மாதவன், நண்பர் ராஜாராம் ஆகியோரும் முக்கியமானவர்கள் எனினும், அந்த முக்கியமானவர்களில் ஒருவராக இன்றைக்குச் சட்டசபையில் என்னை அர்ச்சித்துக் கொண்டிருக்கிற இவரும் ஒருவராக இருந்தார் என்பதை அவரது மனச்சாட்சி நிச்சயம் மறுத்திடாது என்றே நம்புகிறேன்.

கெஞ்சினோம்! கூத்தாடினோம்! வழக்கை வாபஸ் வாங்கச் சொல்லி இந்திராவிடமும், சஞ்சய்காந்தியிடமும் மன்றாடினோம்!

இப்படியெல்லாம் பேசியுள்ளார். அன்றும் மாண்புமிகுவாக இருந்து, இன்றும் மாண்புமிகுவாக இருப்பவர்!

எமர்ஜென்சி காலத்தில் இட்லர் தர்பார் மிரட்டல் உருட்டல்களுக்கு அஞ்சி நடுங்கி உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டு தி.மு.க. மீது பழி போடப் பொய்சாட்சி சொல்ல இழுத்து வரப்பட்டவர்கள், அன்று தங்களுக்கு ஏற்பட்ட நிலைமைகளை ஒளிவு மறைவு இன்றி எழுதித் தந்த காரணத்தால், அரசியல் உள்நோக்குடன் தொடரப்பட்ட அந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன!

கெஞ்சுவது, கூத்தாடுவது, காலில் விழுவது இதெல்லாம், மந்திரி வேலை வேண்டியும், கிடைத்த வேலை நிலைப்பதற்காகவும் இன்றைக்கு சில பேர் ஆடுகிற நாடகம் என்பதையும், அவர்கள் யார் என்பதையும் நாடு அடையாளம் கண்டு கொண்டுதானிருக்கிறது!

தஞ்சை இடைத்தேர்தலில் இந்திரா காந்தி நிற்பார் என அறிவித்துவிட்டு - தடபுடலாக வரவேற்பு ஏற்பாடுகளுக்கெல்லாம் ஆணையிட்டு விட்டு, இரவு 12 மணிக்கு டெல்லியிலே பிரதமர் மொரார்ஜி அவர்கள் எம்.ஜி.ஆரை அழைத்து நீர் எமக்கு நண்பனா? விரோதியா? எனக்கேட்ட ஒரு கேள்விக்கு அஞ்சி நடுங்கி, இந்திரா காந்தி நிற்க வேண்டாம் என்று செய்தி கூறிவிட்டு சென்னைக்குப் பறந்து வந்து விட்டாரே! அப்போது எவ்வளவு கெஞ்சல்! நடுக்கம்! பதட்டம்! அந்தக் காட்சியை - டெல்லித் தலைவர்கள் எத்தனைபேர் பொதுக்கூட்டங்களில் அம்பலப்படுத்தினார்கள் என்பது அதற்குள் மறந்தா போய் விட்டது!

முகவை திருப்பத்தூர் இடைத்தேர்தலின்போது தி.மு.க.வுக்கும், இந்திரா காங்கிரசுக்கும் உடன்பாடு இருந்த போதுங்கூட, அ.தி.மு.க. வலியச் சென்று இந்திரா காங்கிரசை ஆதரித்தது.

இந்திரா காங்கிரஸ் பிரச்சார மேடையில் மற்ற கட்சியினர் கலந்து கொள்ளக் கூடாதென்றும், தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகள் வேண்டுமானால் தனிமேடை போட்டுத் தங்களை ஆதரிக்கலாமென்றும் கூறப்பட்டபோது, தி.மு.க. அந்த இடைத்தேர்தலில் பிரச்சாரத்திற்கே செல்ல முடியாது என மான உணர்வுடன் மறுத்து விட்டது! ஆனால் அ.தி.மு.க. எவ்வளவு சுய மரியாதையுடன் நடந்து கொண்டது என்பது நாடறிந்த விவகாரமாயிற்றே!

உங்கள் மேடையில் எங்களை ஏற்றாவிட்டாலும், நாங்கள் தனி மேடை போட்டு உங்களுக்காகப் பிரச்சாரம் செய்கிறோம் என்று அல்லும் பகலும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் முதலமைச்சர் கலந்து கொண்டாரே? அடடா! அதுவல்லவா தன்மானத்தின் சிகரம் என்று, இன்றைக்கு இந்த மாண்புமிகு சொன்னாலும் சொல்லுவார்!

இந்திராகாந்தி அம்மையாருக்கு கருப்புக்கொடி காட்டிய நிகழ்ச்சியில் இவரும்தான் எங்களுடன் கலந்து கொண்டார். கருப்புக் கொடியைக் கையிலேந்தி!

அண்ணா காலத்தில் ராஜாஜிக்கு கருப்புக்கொடி காட்டிய நிகழ்ச்சியில் பெருங்கலவரம்! தடியடி! கண்ணீர்ப்புகை!

அண்ணா காலத்தில் நேருவுக்குக் கருப்புக்கொடி காட்டிய நிகழ்ச்சியில் குதிரைப் படைகள் ஏவப்பட்டன! எத்தனையோ அசம்பாவிதங்கள்! துப்பாக்கிப் பிரயோகம்! மொய்தீன் பிச்சை மடிந்த கொடுமை! நேரு திக்குமுக்காடிப் போனார்!

அப்போதெல்லாம் கருப்புக்கொடி போராட்டத்தில் போடாத வழக்கு - 1977 இல் இந்திரா காந்திக்குக் கருப்புக்கொடி காட்டியபோது மட்டும் கழகத் தலைவர்கள் மீது - இவர் உட்பட சதி வழக்காகவே போடப்பட்டு சுமார் எட்டு வருடகாலமாக இன்னமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இவரோ, தன்னை அந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று இரண்டு மூன்று ஆண்டு கழித்து - அதாவது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராக இருந்து, அந்த உறுப்பினர் பதவியுடனேயே அ.தி.மு.க.வுக்குச் சென்று - மந்திரி வேலைக்கு சதிவழக்கு தடையாக இருக்கிறதென்று எம்.ஜி.ஆர். தட்டிக் கழித்ததையொட்டி நீதிமன்றத்திற்குச் சென்றார்! நீதிபதியோ இவரைப் பார்த்து, வீரமாகப் பேசுவது விளைவுகளைச் சந்திக்க

முடியாமல் ஓடுவதா? என்று கேட்டு இவர் தொடர்ந்த வழக்கைத் தள்ளுபடி செய்தார்!

உடன்பிறப்பே, இவர் இந்த அரசின் அமைச்சர்!

அமைச்சராக இருந்துகொண்டே அரசாங்கம் தொடுத்த வழக்கை பொய்வழக்கு என இன்று குத்திக் காட்டிக் கொண்டு மிருக்கிறார். வழக்கு விபரத்தில் நான் நுழைய விரும்பவில்லை!

ஆனால் ஒன்று! இந்திராவைக் கொல்லச் சதி - கொலை முயற்சி என்றெல்லாம் என் மீதும், பேராசிரியர் மீதும், சாதிக் மீதும், இன்று அமைச்சராகியிருக்கிற இவர் மீதும் கழகத்தின் முன்னணியினர் பலர் மீதும் எம்.ஜி.ஆர். வழக்கு தொடுத்த பிறகு - இந்த எட்டாண்டு காலத்திற்குள் எத்தனையோ மாறுதல்கள்!

இந்த வழக்கிற்குப் பிறகே அன்னை இந்திரா காந்தியும், நானும் தமிழக முழுவதும் தேர்தல் பிரச்சாரத்திற்கென ஒரே மேடையில் தோன்றினோம்!

பின்னர் அவர்கள் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சமயம், தனி அழைப்பின் பேரில் டெல்லிக்குச் சென்றிருந்தேன்! தனது வெற்றிக்கு எனக்கும், திரு.சென்னா ரெட்டி அவர்களுக்கும் பிரதமர் இந்திரா அவர்கள், தனது சொற்பொழிவில் நன்றி கூறினார். இன்று அம்மையார் இல்லை! ஓராண்டுக்கு முன்பு கொலையுண்டார்! அவரைக் கொலை செய்தவர்களை விசாரித்துத் தண்டனையும் வழங்கப்பட்டாகி விட்டது நீதிமன்றத்தில்!

ஆனால் 1977 இல் எங்கள்மீது இவர் உட்பட எம்.ஜி.ஆர். அரசு தொடர்ந்த - இந்திரா காந்தியைக் கொலை செய்ய முயன்றதாக ஒரு சதி வழக்கு, இன்னமும் முடிவடையவில்லை!

இந்த மாண்புமிகு வழக்கு வாபஸ்களைப் பற்றிப் பேசியதால் - நினைவுக்கு வந்த ஒன்றைச் சுட்டிக் காட்டுகிறேன்!

எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக வந்ததும், இ.காங்கிரஸ் அனுதாபியான ஒரு தொழிலதிபர் மீது போர்ஜரி வழக்கு போட்டு, பல லட்சரூபாய் மோசடி எனக் கூறி, அந்தத் தொழிலதிபரைக் கைது செய்தும் ஒருநாள் சிறையில் வைத்தார்!

தனது வீரப்பிரதாபத்தை முதல்வர், பகிரங்கப்படுத்தி - அந்தத் தொழிலதிபர் போர்ஜரிப் பேர்வழி என்று திட்டவட்டமாகப் பேசியும் தீர்த்தார்.

வழக்கு நடந்துகொண்டிருந்தது. 1980 இல் நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. படுதோல்வி அடைந்து இரண்டே இரண்டு இடங்களைப் பெற்றது. ஜனதா அரசு செய்தது போல இந்திரா அரசும் ஒன்பது அரசுகளைக் கலைக்க முடிவு செய்தது.

உடனே எம்.ஜி.ஆர்., அந்தத் தொழில் அதிபரை அழைத்தார்! அம்மாவிடம் சென்று, என் ஆட்சியைக் கலைக்க வேண்டாமென்று கூறுங்கள்! அப்படியே கலைத்தாலும் எங்கள் கட்சியுடன் தேர்தல் உடன்பாடு கொள்ளச் சொல்லுங்கள்! சட்டசபையில் எத்தனை இடம் வேண்டுமானாலும் தருகிறேன்! இதை நீங்கள் ஏற்பாடு செய்திடுங்கள்! இதோ உங்கள் வழக்கு சம்பந்தமான கோப்பு! இந்த வழக்கை வாபஸ் வாங்கிட உத்தரவிடுகிறேன்! என்று கூறினார்.

கூறியவாறு அந்த வழக்கை வாபஸ் வாங்க உத்தரவிட்டார்! அதாவது எம்.ஜி.ஆர். கூற்றுப்படி பல லட்ச ரூபாய் போர்ஜரி - மோசடி என்ற வழக்கை வாபஸ் பெற்றார்! எனவே ஆரம்பத்திலேயே எம்.ஜி.ஆர். அந்த தொழில் அதிபர் மீது போட்ட வழக்கு பொய் வழக்கு என்று ஆகிறது.

அடுத்தநாளே அந்தத் தொழில் அதிபர் டெல்லிக்கு வந்து பிரதமர் இந்திரா அவர்களிடம் விபரங்களைச் சொன்னார்! அம்மையார் அப்போது எம்.ஜி.ஆர். அவர்களின் முறையீட்டை ஏற்றுக் கொள்ளவில்லை! எப்படியோ, தொழில் அதிபரின் மீதிருந்த போர்ஜரி மோசடி வழக்கு வாபஸ் ஆயிற்று!

இது வாபஸ் ஆன ஒரு வழக்கிற்கு சாம்பிள்! எம்.ஜி.ஆர். ஆட்சியில்!

இப்படிப்பல உள! தேவைப்படும் பொழுது அவைகளும் தெருவுக்கு வரும்!

அன்புடன்

மு.க.

29-01-1986

1384. ஆதாரங்கள் தந்தபோது என்ன செய்தார்கள்?

உடன்பிறப்பே,

1978ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 5 ஆம் தேதி சட்டப் பேரவை விவாதத்தில் ரகுமான்கான் பேசும் போது இந்திரா நகர் பிரேமா கொலை சம்பந்தமாக ஒரு ஆதாரத்தைக் காட்டுவதாகச் சொல்லி, அதன் பிறகு அந்த ஆதாரத்தைக் காட்டவில்லையென்றும், எனவே அந்தப் பேச்சின் அடிப்படையில், ரகுமான்கான் மீது தக்க நடவடிக்கை எடுக்கத் தமக்கு அதிகாரம் உண்டென்றும் பேரவையில் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் இப்போது கூறியிருக்கிறார்.

சபாநாயகருக்குரிய அதிகாரங்கள் குறித்து எனக்கு எந்த மாறுபாடான கருத்தும் இல்லை!

ஆதாரம் தர இயலாததற்கான காரணத்தை, அல்லது தராததைத் தொடர்ந்து சட்டமன்றத்தில் அப்போதே சில விளக்கங்களை ரகுமான்கான் அளித்துள்ளார்.

ரகுமான்கானாவது ஆதாரம் தருவதாக முதலில் கூறிவிட்டு, பிறகு ஆதாரமில்லை என்பதை அவையில் ஒத்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால், இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தேனி - முத்துதேவன்பட்டியில் என் மகன் அழகிரிக்கு நூறு ஏக்கரா தோட்டமிருக்கிறது என்றும், அதற்கான ஆதாரப் பத்திரங்கள் தன்னிடமிருப்பதாகவும், அந்த ஆதாரங்கள் இல்லாவிட்டால் பதவியை ராஜினாமா செய்யத் தயார் என்றும் பேரவையில் ஒரு அமைச்சர் சவாலே விட்டார்!

பின்னர், தன்னிடம் ஆதாரம் இல்லையென்பதை ரகுமான்கானைப் போலச் சொல்லியிருந்தாலும் பரவாயில்லை!

அதற்கு மாறாக, அந்த அமைச்சர் போலிப்பத்திரங்கள் தயாரித்து, என் மகன் அழகிரி கையெழுத்து எனக்கூறி போர்ஜரி கையெழுத்துப் போட்டு - ஒரு மோசடியை சட்டமன்றத்தில் வெளிப்படையாகச் செய்தாரே! அன்றிருந்த சபாநாயகர் ராஜாராம் அவர்களும், பேரவையில் இருந்த எல்லாக் கட்சித் தலைவர்களும் - அமைச்சர் காட்டிய ஆதாரம் போலியாகத் தயாரிக்கப்பட்டது என்ற முடிவை அறிவித்தார்களே - அதைத் தொடர்ந்து தனது சவாலின்படி, அந்த அமைச்சர் ராஜினாமா செய்தாரா?

அல்லது முதலமைச்சராவது போர்ஜரி பத்திரம் தயாரித்து அவையைத் திசை திருப்ப முயன்ற அந்த அமைச்சர் மீது உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுத்தாரா?

இந்திரா நகர் பிரேமா கொலை வழக்கில் ரகுமான்கான் மட்டும் ஆதாரங்களை கொடுத்திருந்தால் - அப்படியே நியாயத்தின் விளிம்பில் நின்று குற்றவாளிகளைக் கூண்டில் ஏற்றியிருப்போம் எனச் சில ஆளுங்கட்சி நண்பர்கள் பேசும்போது, எனக்கு மட்டுமல்ல, என்னைப் போல பலருக்கும் உள்ளத்தில் சில கேள்விகள் எழத்தான் செய்யும்!

ரகுமான்கானாவது சட்டமன்ற உறுப்பினர் - ஆனால் நீதிபதி இஸ்மாயில் அவர்களும், நீதிபதி பால் அவர்களும், நீதிபதி நஞ்சய்யா அவர்களும் - முறையே சென்னைச் சிறைச்சாலையில் மிசா காலத்துக் கொடுமைப்பற்றி விசாரணை நடத்தி குற்றவாளிகளை அடையாளம் காட்டித் தரப்பட்ட ஆதாரபூர்வமான அறிக்கையின் கதி என்ன ஆயிற்று? திருச்செந்தூர் ஆலய வளாகத்தில் அதிகாரி சுப்பிரமணிய பிள்ளையைக் கொலை செய்தவர்கள் இவர்களாகத்தானிருக்கவேண்டும் - அது தற்கொலையல்ல! என்று ஆதாரபூர்வமான அறிக்கை வழங்கப்பட்டதே அது என்ன ஆயிற்று? சேலம் கிச்சிப்பாளையத்தில் தெய்வயானை என்ற தாழ்த்தப்பட்ட சகோதரி போலீஸ் நிலையத்தில் தற்கொலை செய்து கொள்ளவில்லை, கொலைதான் செய்யப்பட்டாள் என்று ஆதாரபூர்வ அறிக்கை அளிக்கப்பட்டதே! அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

புட்லூர் தண்டபாணி என்ற அ.தி.மு.க. காண்ட்ராக்டர், அ.தி.மு.க.காரர்களாலேயே கொல்லப்பட்டார் என்பதற்கான பல ஆதாரங்களைப் பேரவையில் நான் படித்துக் காட்டி,

முதலமைச்சரிடமே அவையில் கொடுத்தேனே! அந்தக் கொலை குறித்து முதல்வர் எடுத்த நடவடிக்கை என்ன?

பிரேமா கொலை சம்பந்தமான ஆதாரங்களை தந்தால் நீதியின் உச்சியிலேறி நின்றிருப்போம் என்கிற அ.தி.மு.க. நண்பர்கள்,

நீதிபதி இஸ்மாயில் தந்த ஆதாரம் -

நீதிபதி பால் தந்த ஆதாரம் -

நீதிபதி நஞ்சய்யா தந்த ஆதாரம் -

நானே அவையில் தந்த ஆதாரம் -

இவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கிழித்து விட்டார்கள் இந்த அரசினர் என்பதை எண்ணிப் பார்த்தார்களா?

அன்புடன்

மு.க.

31-01-1986

1385. இதயத்தில் மேலும் ஈட்டி எறியாதீர்!

உடன்பிறப்பே,

கண்ணீர்க்கடலில் என் தம்பி சத்தியேந்திரனின் உடல் தெப்பமாக மிதக்கிற காட்சியைக்காண, இராமநாதபுரத்துக்குப் புறப்படும் நேரத்தில் இக்கடிதம் எழுதுகிறேன் உனக்கு!

இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, இராமநாதபுரம் மாவட்ட இலங்கைத் தமிழர் எழுச்சி மாநாட்டில், அலங்கரித்த தேரில் எங்களை அமரவைத்து அழகு பார்த்து மகிழ்ந்த அந்தத் தம்பி, இறுதிப் பயணத்தேர் ஒன்றில் இமை மூடி சயனித்திருக்கும் கொடுமையைக் காண சென்னையிலிருந்து பாண்டியன் விரைவு வண்டியில் ஏறப்போகும் நேரத்தில் இக்கடிதம் எழுதுகிறேன் உனக்கு!

எத்துணைக் கூர்வாய்ந்த ஈட்டி என் இதயத்தில் பாய்ந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருக்கும் என்பதை, என்னை முற்றிலும் உணர்ந்த நீ அறிந்து கொண்டுதானிருப்பாய்!

கண்பெருக்கிடும் அருவியினைக் கரம் கொண்டு தடுத்திட இயலாமல் தவித்திடும்போது கூட - கழகத்தின் கடமைகளை ஆற்றிடுவதற்கான வழி முறைகளை நானும், பேராசிரியரும், மற்ற முன்னணித் தளபதிகளும் வகுத்திடல் என்பது தவிர்க்க முடியாததன்றோ!

மறைந்த எனது மலர்நெஞ்சத் தம்பியின் மனத்தில் கூட அந்தக் கடமையாற்றும் துடிப்புத்தானே கடைசி வரையில் இருந்திருக்கும்.

உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் ஜனவரி 30 ஆம் தேதியுடன் முடிவடைந்துள்ளது.

வேட்புமனுக்களைத் திரும்பப் பெற்றிட அறிவிக்கப்பட்டுள்ள பிப்ரவரி 3 ஆம் தேதிக்குள் கழகத் தலைவர்களும், கழகத்தின் மாவட்ட நிர்வாகிகளும், தோழமைக் கட்சித் தலைவர்களுடன்

சென்னையில் கலந்து பேசி உடன்பாட்டுக்கு இறுதி வடிவம் கொடுத்திட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே தோழமைக் கட்சிகளுடன் பேசி முடிக்கப்பெற்ற மாவட்ட உடன்பாடுகள் தவிர்த்து எஞ்சியுள்ள மாவட்டச் செயலாளர்கள் அல்லது பொறுப்பாளர்கள் பிப்ரவரி முதல் தேதியன்று சென்னையில் இருந்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

தோழமைக் கட்சிகளுடன் உடன்பாடு வேண்டும்! ஆனால் எங்கள் இடத்தை மட்டும் விட்டுக் கொடுக்கக் கூடாது எனப் பிடிவாதம் காட்டி, உரிமையுடன் போர்க் கொடி உயர்த்துகிற உடன்பிறப்புகளை அறிவேன்!

தலைமைச் செயற்குழு, பொதுக் குழுக்களில் எடுக்கப்பட்ட முடிவினையொட்டித்தான், தலைமையின் அனுமதி பெற்று ஆங்காங்கு மாவட்டங்களில் அந்தந்த தோழமைக் கட்சிகளுடன் இயன்ற வரையில் கலந்து பேசி ஓர் உடன்பாடு காணப்பட்டுள்ளது. இதனை ஏற்க மறுக்கிற உடன்பிறப்புகள் யாராவது இருப்பார்களேயானால் - வெந்த உள்ளத்துடன் இராம நாதபுரம் நோக்கிச் செல்கிற என் மீது மேலும் சில எரியீட்டிகளை எறிகிறார்கள் என்றுதான் பொருள்!

அது போலவே, கழகம் போட்டியிடுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் ஒன்பது பத்து பேர் வேட்பாளர்களாக விரும்பும் போது - சூழ்நிலை, எங்களுக் கேற்படுகிற நெருக்கடி, வாய்ப்பு அனைத்தையும் கணக்கிட்டுத் தான் முடிவு எடுக்க வேண்டியுள்ளது.

சில நேரங்களில் அந்தக் கணக்கு தவறி விடக்கூடும்! நமக்குக் கிடைக்காவிடினும், நமது குடும்பத்து உடன்பிறப்பு ஒருவருக்குத்தானே கிடைத்தது என ஆறுதல் பெற வேண்டும்! வெற்றியினை ஈட்டித்தர விருப்பு வெறுப்பின்றி உழைத்திடல் வேண்டும்!

தலைமை முடிவு எடுத்து அறிவிக்கட்டும் என்று உரத்த குரலில் எங்களுக்கு சுதந்திரம் வழங்குகிற ஒரு சிலர், அவர்கள் எதை நினைக்கிறார்களோ அந்த முடிவை அறிவிக்க

வேண்டுமென்பதில் அக்கறையும் ஆர்வமும் காட்டுவது, இன்று மட்டுமல்ல - அண்ணா அவர்கள் காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருகிற தொடர்கதைதான்!

இத்தனை நிலைமைகளுக்கிடையே அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களுக்கும், தோழமைக் கட்சிக்கு விட்டுக் கொடுக்கும் இடங்களில் அந்தக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கும் இதயத் தூய்மையுடன் பணியாற்ற வேண்டுமென்பதே எனது பணிவான வேண்டுகோள்!

இந்த எனது வேண்டுகோளை எனது உடன்பிறப்புகள் அனைவரும் ஏற்றுச் செயல் புரிந்திடுவர் என்ற நம்பிக்கையுடன் தான்,

கட்டுப்பாட்டுக்குப் பேர் போன கழகக் கண்மணி சத்தியேந்திரனின் முகத்தை கடைசியாகப் பார்ப்பதற்குப் புறப்படுகிறேன்!

யாரோ ஒரு சிலர், இந்த வேண்டுகோளைத் துச்சமெனக் கருதி மாறுபட்டு நடப்பார்களேயானால் - இத்தனை நாள் அவர்களிடம் நான் காட்டிய பாசத்தைத் தங்கள் கால் தூசுக்குச் சமமாகக் கருதுகிறார்கள் என்பதே பொருள்!

மறைந்துவிட்ட தம்பியின் இறுதி யாத்திரையில் கலந்து கொள்ளச் செல்லுகிற இந்த அண்ணனை - இதற்காகவும் மேலும் அழவிட மாட்டார்கள் என் உடன்பிறப்புகள் என்ற நம்பிக்கையுடன், இதோ இராமநாதபுரம் புறப்படுகிறேன்.

அன்புடன்

மு.க.

01-02-1986

1386. கல்லறையைக் கண்ணீரால் குளிப்பாட்டும்போது!

உடன்பிறப்பே,

பதினேழு ஆண்டுகள் பறந்தோடி விட்டன! பத்தரை மாற்றுத் தங்கத்தை - பைந்தமிழ்க் கருவூலத்தை சந்தனப் பேழையில் சயனிக்க வைத்து, எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது! எனக் கருப்புப் பளிங்குக் கல்லறையில் எழுதி, பதினேழு ஆண்டுகள் பறந்தோடி விட்டன!

அறிவின் பரப்பை உணர்த்திட அகன்ற நெற்றியும் - அன்பின் பெருக்கை உணர்த்திட மலர்ந்த விழிகளும் கொண்ட அண்ணன்! கனிவை முகத்தில் காட்டி, துணிவை அகத்தில் தேக்கி, தம்பியரை - கழகத்தை - தமிழ் நிலத்தை, தன்மான வளங்கொழிக்கச் செய்திட்ட தகத்தகாயச் செங்கதிரோன் அன்றோ?

அந்த அண்ணன் உறங்குமிடத்துக்கு ஆண்டுதோறும் செல்லும்பொழுது, அவர் தந்த கொள்கைகளைக் காத்திட நாம் உறங்காமல் காவல் புரிகிறோம் என்ற பெருமிதம் இருக்கிறது நமக்கு!

இடையூறுகள் இடையறாது குவிந்திடினும், அண்ணன் எடுத்தடி வைத்து நடந்து காட்டிய பாதையிலிருந்து இம்மியும் தவறாமல் பயணம் நடத்துகிறோம் என்ற பெருமை பொங்குகிறது நமது உள்ளத்தில்!

ஆடிக்காற்றில் மட்டுமல்ல, அலை கடலின் காற்றழுத்த மண்டலத்திலிருந்து நிலைகொள்ளா வேகத்தில் வீசுகின்ற புயலில் கூட அணையாமல் பாதுகாக்கிறோம் அண்ணன் ஏற்றி வைத்த இலட்சியதீபத்தை என்ற கர்வம் கூட, கண்ணீரில் மிதக்கின்ற நம்விழிகளிலே ஒளிவிடத்தான் செய்கிறது!

ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும், வராவிட்டாலும் தம்பி! இன்னும் பல ஆண்டுகளுக்குக் கழகத்தின் பணி, தமிழினத்துக்குத்

தேவைப்படுகிறது என்று விருகம்பாக்கம் மாநாட்டில் அண்ணன் வழங்கிய அறிவுரையை மறந்தோமில்லை!

தமிழ்மொழி பாதுகாக்கப்பட, வளர்க்கப்பட, தமிழர்மரபு மங்காதிருக்க, தமிழர் வரலாறு மறைக்கப்படாமலிருக்க, தமிழர் கலையும், இலக்கியமும் போற்றப்பட, தமிழ்க்கொடி பட்டொளி வீசித் தரணியறியப் பறந்திட - தம்பி! நமக்கிருக்கும் பெரும் பணியை மறந்திடாதே என அந்த மாநாட்டில் அண்ணன் உரைத்த மாணிக்க வாசகத்தைச் செயல்படுத்தத் தயங்கினோமில்லை!

ஏழையின் சிரிப்பிலே இறைவன் இருக்கின்றான் என்று அண்ணன் அடிக்கடி நினைவுபடுத்தும் அந்தப் பொன்மொழிக்கேற்ப, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என முழக்கி, வேறெங்கும் இறைவனைத் தேடுகின்ற வேலையிலே ஈடுபடாமல் - அண்ணன் காட்டிய வழியிலிருந்து அகலாமல் நடக்கிறோம் என்ற ஆறுதலுடன் பீடுநடை போடுகிறோம். அண்ணன் இல்லையே எனப் பீறிட்டுக் கிளம்பும் வேதனையையும் தாங்கிக்கொண்டு!

மாநில சுயாட்சித் தத்துவம் ஏன் பிறந்தது என்பதை விளக்கி அண்ணன் தீட்டிய எழுத்தோவியங்களை நமது பாசறையின் படைக்கலன்களாகக் கொண்டோமேயன்றி - அந்தத் தத்துவத்தைப் பகடைக்காயாக ஆக்கிடவுமில்லை! அவ்வாறு ஆக்கிட முயன்றோரை அடையாளம் காட்டாமல் இருந்ததுமில்லை!

ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டுமென்பதில் - அசைக்க முடியாத உறுதி, நமது அண்ணனுக்கு உண்டு என்ற காரணத்தினால்தான் அவரது தம்பிகள் என்ற முறையில், ஆட்சியே பறிபோனாலும் கவலையில்லை - ஆயிரம் அடக்கு முறை ஈட்டிகள் பாய்ந்தாலும் பரவாயில்லை என நெருக்கடி காலப் பிரகடனத்தை எதிர்த்து நெருப்பாற்றில் நீச்சலடித்தோம்!

தமிழ் இனத்தின்பால் அண்ணன் கொண்டிருந்த பாச உணர்வுதான், இதோ இலங்கையில் அழிந்திடும் தமிழ் இனத்தை விடுவிக்க வேண்டுமென்ற ஆவேசத்தை நமக்கெல்லாம் வழங்கியிருக்கிறது!

நாற்பத்தி எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, நமதரும் தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்திட அடியெடுத்து வைத்த கட்டாய இந்தியை எதிர்த்து அண்ணன் தூக்கிய போர்க் கொடியைத்தான் இன்னமும்

நமது கைகளில் தூக்கிப் பிடித்துக் கொண்டு, துள்ளி வருகுது வேல்! தூர விலகிடு இந்தியே! எனத் துந்துபி முழக்குகிறோம்!

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர்க்கெனக் கல்வியிலும், வேலை வாய்ப்புகளிலும் இருந்து வந்த ஒதுக்கீட்டு உரிமைகள் மீது தணல் வாரிக் கொட்டுதற்கும் சிலர் தயங்காத போது - அண்ணன் வழி நின்று அறப்போர்க்களம் குதித்து அந்த உரிமைகளைக் காத்தளித்தோம்! கடமையாற்றினோம்! அதனை அவர் காலடியில் காணிக்கையாக்கினோம் என்ற களிப்பும் தலைகாட்டாமல் இல்லை, அவர் கல்லறையை நாம் கண்ணீரால் குளிப்பாட்டும் போது!

ஆட்சி மாற்றங்களை உருவாக்கும் அடுத்த தேர்தலைப்பற்றி மட்டுமல்ல - அடுத்த தலைமுறையைப் பற்றியும் சிந்திக்கவேண்டுமென, அண்ணனே! நீ வழங்கிய கருத்துரையை ஆழமாக நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டு அயராது உழைக்கும் தம்பியர் பட்டாளம்தான்,

இன்று நீ துயிலுமிடத்தில் உன் பாதம் தொழுதிட வருகிறது!

இந்த உறுதியுடன், உடன்பிறப்பே! அண்ணா சதுக்கம் நோக்கி இன்று செல்வோம்!

அன்புடன்

மு.க.

03-02-1986

1387. அண்ணா நினைவு நாளும் ஆன்மீக வேள்வியும்!

உடன்பிறப்பே,

பிப்ரவரி மூன்றாம்நாள் இன்று! ஆம்! கடலின் அலைநாக்குத் தாலாட்டத் துயில் கொண்டுள்ள அண்ணனின் கல்லறை சென்று வணங்கிவிட்டுத் திரும்பியவுடன் நாளிதழ்களைப் புரட்டினேன். பிப்ரவரி நாலாம் நாள் காலையில் ஒரு நிகழ்ச்சி!

அந்த நிகழ்ச்சிக்குத் தலைப்பே மகிழ்ச்சிகரமான பிப்ரவரி 4 ஆம் நாள் என்பதாகும்!

தமிழ்நாட்டு முதலமைச்சரை முதன்மையாக வைத்து - அவருக்கும், நாட்டுமக்களுக்கும் சுபிட்சம் வேண்டி, ஆன்மீக வேள்வியும், இறைவழிபாடும் நடைபெறுவதாகவும் - அதில் முதலமைச்சரும் கலந்து கொள்வதாகவும் முதலமைச்சர் படத்துடன் கூடிய பெரிய விளம்பரம்!

- **ஆன்மீக வேள்வி**
- **இறைவழிபாடு**
- **முதல்வர் சுபிட்சத்துக்காக**
- **அத்துடன் மக்கள் சுபிட்சத்துக்காக**

இந்தச் சொற்றொடர்களை நான் திரும்பத் திரும்பப் படித்த போது,

- **முதல்வரின் நலம் குறித்தோ**
- **நாட்டு மக்களின் நலம் குறித்தோ**

இருதய பூர்வமாக இருவேறு கருத்துகளுக்கு இடமில்லையென்பதும் - முதல்வர் நலத்திலும், நாட்டு மக்களின் நலத்திலும் அக்கறையுள்ளவன்தான் நான் என்பதும் என்னையுணர்ந்த உடன்பிறப்பே, நீ நன்றாகவே உணர்வாய்!

ஆனால், அதற்காக?

ஃ ஆன்மீக வேள்வி

ஃ இறைவழிபாடு

இந்த மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி எப்போது ஆரம்பமாகிறது தெரிகிறதா?

பத்திரிகை விளம்பரத்தை நன்றாகக் கவனித்துப் பார்!

3.2.86 திங்கள் காலை 6 மணி முதல் 4.2.86 செவ்வாய் காலை 7 மணி வரை நடைபெறுகிறது என விளம்பரத்தில் முக்கியத்துவம் கொடுத்து அறிவிக்கப் பட்டிருக்கிறது.

3.2.86 காலையில்தான் அண்ணன் மறைந்த நினைவு நாளை முன்னிட்டு, நெஞ்சில் சுமந்த வேதனையுடன் நாம் அண்ணா சதுக்கம் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம்!

அப்போதுதான் முதலமைச்சருக்கான ஆன்மீக வேள்வி - இறைவழிபாடு! அதாவது அந்த மகிழ்ச்சிகரமான நாளுக்கான தொடக்கம் என விளம்பரம் கூறுகிறது!

என் சிலை வைக்க நான் அனுமதி கொடுத்தால் பிறகு, தமிழ்நாட்டில் அண்ணா சிலை வைக்க இடமேயிருக்காது எனப் பேசியவர்தானே நமது முதலமைச்சர் ஓராண்டுக்கு முன்பு! பத்திரிகைகளில் வந்த செய்தி ஆயிற்றே இது!

எனவே - ஆன்மீகவேள்வி - இறைவழிபாடு எனும் மகிழ்ச்சிநாளுக்கான ஆரம்ப நிகழ்ச்சிகளை, அண்ணா நினைவுநாளில் அவர்கள் தொடங்குவதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை!

ஏடுகளில் வந்துள்ள விளம்பர வாசகங்களைக் கண்டுவிட்டு - என் வீட்டிலுள்ள நூலகத்துப் பக்கம் திரும்பியபோது அடுக்கி வைக்கப்பட்டிருந்த அண்ணாவின் புத்தகங்கள் சில என் கண்ணில் பட்டன!

சொர்க்கவாசல்

அண்ணா அவர்கள் எழுதிய நூல்! திரைப்படமாகக் கூட வெளிவந்தது!

எடுத்தேன்! சில பக்கங்களைப் புரட்டினேன்!

அருமறையானந்தர் என ஒருவர்! ஆத்திகத்துக்கு அவரே மொத்த குத்தகை எடுத்தவர்போல ஒரு மடாதிபதி! மதிவாணன் என ஒரு இசைவாணன்! கவிஞன்! அறிவியக்கத் தூதுவனாய் நடமாடுபவன்! அருமறையானந்தர், சொர்க்கவாசல் என ஒரு திருச்சபை அமைத்திட விழா எடுக்க முனைகிறார்! அந்த விழாவில் இசை விருந்தளிக்க மதிவாணனை அழைக்கிறார்! அவன் மறுப்பதும் - அந்த விவகாரம் மன்னன்வரை செல்வதும், மன்னன் அவையில் மதிவாணன் வாதமிடுவதும் அண்ணா எழுதிய கதையில் முக்கியமான கட்டம்!

இதோ அண்ணாவின் எழுத்து நடையில் அதனைக் காண்போம்!

ஃ அருமறையானந்தர்:- சொர்க்கவாசல் விழாவுக்கு நாள் குறித்து விட்டேன்! விழாவிலே உன் இசை விருந்து! பலநாட்டு மன்னர்கள், பிரபுக்கள், கலா ரசிகர்கள், பக்த கோடிகள் இவர்கள் முன்னிலையில் உன் இசை விருந்து!

ஃ மதிவாணன்:- பாவத்துக்கு நான் உடந்தையாக இருக்க முடியாது! வேண்டாம் இந்த வீண் விழா! நாட்டிலே நரகம் இருக்கிறது, நாற்றம் பிடித்துக்கொண்டு! அதை ஒழிக்காமல் சொர்க்கவாசல் கட்ட விழா நடத்துவது படுமோசம்! நயவஞ்சகம்!

- ❑ அருமறையானந்தர்:- மதிவாணா! என் மனதைப் புண்ணாக்காதே! சொர்க்கவாசல் விழா புனிதமானது! புண்ய காரியம்!
- ❑ மதிவாணன்:- நான் இந்த விழாவிலே பங்கு கொள்ள முடியாது!

பிறகு விவகாரம் மன்னர் முன்னால் கொண்டு வரப்படுகிறது

- ❑ மன்னன் வெற்றிவேலன்:- புனித விழாவிலே கலந்து கொள்ள நீ மறுப்பது எந்த விதமான குற்றம் தெரியுமா?
- ❑ மதிவாணன்:- கூறுங்கள் வேந்தே!
- ❑ மன்னன்:- நீ ஒரு நாத்திகன்!
- ❑ மதிவாணன்:- நான் நாத்திகனல்ல வேந்தே! கடவுளை மறுக்கவில்லை! பாபம் புரியும்படி தூண்டவில்லை! சத்தியம் வேண்டாமென்று சொல்லவில்லை. சன்மார்க்கம் ஏன் என்று

கேட்கவில்லை. சாந்தம், ஒழுக்கம், அன்பு, தயை, நீதி, நேர்மை எதையும் நான் மறுக்கவில்லை.

- மன்னன்:- சொர்க்கவாசல் விழாவிலே கலந்து கொள்ளமட்டும் மறுக்கிறாய்.

- மதிவாணன்:- ஆமாம் அரசே! விழாகூடாது என்கிறேன். மக்கள் வாடுகிறார்கள், வாழ்வில் சுகம் கிடைக்காமல்! நாட்டிலே நரகம் இருக்கிறது. எனவே தான் விழா கூடாது என்கிறேன்.

- மன்னன்:- போதும் உன் புது ஞானம். இன்று விழா வேண்டாமென்கிறாய். பிறகு துறவு வேண்டாம். குருமார் வேண்டாம் என்று பேசுவாய். பித்தம் வேகமாக வளரும்.

- மதிவாணன்:- மக்களின் மனமாசு போக்க, ஒழுக்கத்தை வளர்க்க, துறவிகள் தேவையென்றால் புத்தர் போல் போதிக்கட்டும், பற்றற்று! பசித்தால் புசித்து, வியர்த்தால் குளித்து, நிழல் கண்டால் படுத்து, செம்பொன்னும் ஓடும் ஒன்றெனக் கண்டுள்ளவர்களே துறவி என ஆன்றோரும் சான்றோரும் கூறுவர்.

- மன்னன்:- வீணனே கேள்! உன் மீதுள்ள குற்றங்கள்;- புனித விழாவிலே கலந்து கொள்ள மறுத்தது, விழாவையே கேவலமாகப் பேசியது, அருமறையானந்தரை அவமதித்தது, அரசமார்க்கத்தையே இகழ்ந்தது! இத்தனை குற்றங்களைச் செய்திருக்கிறாய்.

- மதிவாணன்:- இவைகளில் ஒன்றைக் கூட மறுக்கவில்லை.

- மன்னன்:- இவைகளைச் செய்ததால் உன்னை நாத்திகன் எனக் குற்றம் சாட்டுகிறோம்.

- மதிவாணன்:- நல்லறிவை நாத்திகமென்கிறீர், வெண்ணெய்க்கும், சுண்ணாம்புக்கும் வித்தியாசம் தெரியா குருடனைப்போல! அன்பும், அறமும் அறிந்து, உண்மையை உணர்ந்து, தன்னலத்தைத் தகர்த்தெறிந்து, பொதுநலத்துக்குப் பாடுபட்டு, நாட்டைப் பொன்னாடு ஆக்கினால், மக்களை வாழ வைத்தால் இறைவன் அருளைப் பெறலாம் என்று எடுத்துக் கூறுவதா நாத்திகம்?

உடன்பிறப்பே! அண்ணாவின் எழுத்தோவியமான சொர்க்கவாசலில் இப்படி விவாதம் தொடர்கிறது! மதிவாணன் நாடு கடத்தப்படுகிறான். மன்னன் வெற்றிவேலனால்! பிறகு கதையில் பல்வேறு திருப்பங்கள்!

புத்தகம் உன்னிடமிருந்தால் எடுத்து, மீண்டும் ஒரு முறை படித்திடு! இல்லையேல் வாங்கியாவது படித்துப்பார்!

- ❑ **ஆன்மீக வேள்வி**
- ❑ **இறைவழிபாடு**
- ❑ **முதல்வர் சுபிட்சத்துக்காக**
- ❑ **அத்துடன் மக்கள் சுபிட்சத்துக்காக**

அருமறையானந்தர்களும், அரசோச்சும் வெற்றி வேலர்களும் அன்று மட்டுமில்லை! இன்றுமிருக்கிறார்கள் என்பதை விளக்கி நாட்டைத் திருத்திடத்தானே மதிவாணன் மூலமாக அண்ணா பேசுகிறார் சொர்க்கவாசல் எனும் நூலிலே!

அண்ணாவின் கருத்துகளைக் கடலில் வீசியெறிந்து விட்டு, கடற்கரை சென்று அவரது கல்லறைக்கு மலர்வளையம் வைத்திடுவது மட்டுமே - அண்ணாவின் நினைவு போற்றுகிறோம் என்பதற்கு அடையாளமாகிட முடியுமா?

இந்த வினா எழுந்த காரணத்தால் தீட்டப்பட்டதே இந்தக் கடிதம்!

அன்புடன்

மு.க.

04-02-1986

1388. அண்ணாவின் சந்திரமோகன்; அன்றும், இன்றும்!

உடன்பிறப்பே,

அண்ணா நினைவு நாளையொட்டி, இதோ அண்ணாவின் சந்திரமோகன் என்ற நாடகத்திலிருந்து சில உரையாடல்கள்!

சிவாஜி, மராட்டியத்தின் மன்னன்! சந்திரமோகன் என்ற பாத்திரம்! சிவாஜி காகப்பட்டரின் பேச்சு கேட்டுத் தவறான வழியில் செல்லும்போது தடுத்திடத் துடித்திடும் அண்ணாவின் ஒரு படைப்பு!

- காகப்பட்டர்:- சிவாஜி! பரதகண்டத்தின் பல பாகங்களில் இருந்து பிராமணோத்தமர்களை வரவழைத்து சமாராதனை நடத்தி தட்சணை தர வேண்டும்.
- சிவாஜி:- சாஸ்திர விதிப்படிதானா அதுவும்?
- காகப்பட்டர்:- ஆம்! தானாதி காரியமூலம் ஆசீர்வாதம் பெற்று உன் பாவத்தை நீ கழுவிக் கொள்ள வேண்டும்.
- சிவாஜி:- சரி, பிறகு நடக்க வேண்டியதை கூறும்.
- காகப்பட்டர்:- நடக்க வேண்டியது ஹோமம்!
- சிவாஜி:- விறகு, நெய், ...
- காகப்பட்டர்:- மலை உயரம் விறகு! மடு ஆழம் நெய்! அதனையொட்டி, சிவாஜி! நீ இன்றே புறப்பட்டுப் போய் திவ்ய க்ஷேத்திரங்களைத் தரிசித்து, ஆங்காங்கு அர்ச்சனைகள் செய்து விட்டு வர வேண்டும்.
- சிவாஜி:- அவ்விதமே செய்கிறேன். திவ்ய க்ஷேத்திரங்களில் என்னென்ன வகையான பூஜைகள் செய்ய வேண்டும்?
- காகப்பட்டர்:- பூஜைகள் இஷ்டம்போல செய்யலாம். அந்தந்த திவ்ய க்ஷேத்திரங்களில் அனுஷ்டிக்க வேண்டிய பொதுவான பூஜை முறை இருக்கிறது.

ஃ சிவாஜி:- சரி, சென்று வருகிறேன் குருஜி!

சிவாஜி போகிறான்

ஃ சந்திரமோகன்:- ஆவேசமாகக் குறுக்கிடும் கட்டத்தில் மராட்டியமே! மண்டியிடாதே! வீரமே, வீழ்ச்சியுறாதே! மராட்டிய மாவீரர்களே! மன்னன் சிவாஜியை மாற்றார்முன் மண்டியிடச் செய்த கோழைகளானீர்! கொடுமை! கொடுமை இது. அறிவுலகத்தில் உள்ள அனைவருமே இதைக் கண்டித்தே பேசுவர்.

சந்திரமோகனுக்கு அந்த ஹோமம், வேள்வி போன்ற காரியங்களும், காகப்பட்டர் காலில் சிவாஜி விழுவதும் பிடிக்காமல் அறிவியக்க வாதம் நடத்திடும் போது சிவாஜி, சந்திரமோகனுக்குப் பதில் கூறி விளக்குவதாக அண்ணா என்ன எழுதுகிறார் பார்!

ஃ சிவாஜி:- சந்திரமோகா! நீ எல்லாம் அறிந்திருக்கிறாய்! ஆனால் என் நிலையை மட்டும் அறியவில்லை. ஒரே வினாடியில் காகப்பட்டர் இல்லாமலே மகுடாபிஷேகம் நடக்குமென்று அறிவித்து விடலாம். ஆனால் மறுகணம் முதல் என்ன நடைபெறும்? இந்த மண்டலத்திலும், வேறு பல மண்டலங்களிலும் ஆஸ்ரமவாசிகள் ஆரம்பிப்பர், தமது பிரச்சாரத்தை! மராட்டிய மண்டலாதிபதி சாஸ்திரவிரோதி! சம்பிரதாயவைரி! சனாதனத்தைக் கெடுத்தவன்! அவனுடைய ராஜ்யம் பாவபூமி என்று கூறுவர்! மக்களும் அப்படித்தானே இருக்கிறார்கள். பாதகர்கள், பாமரரை நாளை என் மீது ஏவிடுவர்! எனவே, சந்திரமோகன்! நான் இப்போது பணிந்து தான் ஆகவேண்டும், வீழ்ச்சிக்குத்தான்! ஆனால் வேறு வழியில்லை! வேறு வகை இல்லை!

உடன்பிறப்பே! அண்ணா எழுதிய சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் என்ற நாடகத்தை நான் எத்தனை முறை பார்த்தேன் என்று கணக்கே இல்லை! அந்த நாடகத்தில் முதலில் எம்.ஜி.ஆர். நடிப்பதாக இருந்து, கடைசியில் அவர் இதில் நடிக்க மறுத்துவிட்ட நிகழ்ச்சியும் - பின்னர் நடிகர் திலகம் கணேசன் நடித்து, சிவாஜிகணேசன் என்று ஆனதும், பழைய கதைகள்! அந்த நாடகத்தில் காகப்பட்டராக அண்ணா அவர்கள் வேடம் தாங்கி, யாகம், ஹோமம், வேள்வி, திவ்யக்ஷேத்திர யாத்திரை இவைகுறித்தெல்லாம் ஆதரித்துப் பேசுவது போலப் பேசி - அவை எப்படி அறிவுக்குப் பொருந்தாதவை என்பதையும்

- சுயமரியாதையை சுக்குநூறாக்கக் கூடியவை என்பதையும் - எனினும் எவ்வாறு ஏமாளிகளை எளிதில் ஏமாற்ற முடிகிறது என்பதையும் - எடுத்துக் காட்டும் அழகே அழகு!

பதவிக்காக பணிந்து போகலாம் என்று பகுத்தறிவைத் துறக்கத் தீர்மானித்துவிட்ட சிவாஜி மன்னனையும், மானம் பெரிது மகுடமல்ல என மார்தட்டி, அதனால், அந்த மண்டலத்திலிருந்தே விரட்டப்படுகிற நிலைக்கு ஆளான சந்திரமோகனையும் நம் கண்முன்னால் காட்டிய அண்ணா அவர்கள், சந்திரமோகன் என்ற பாத்திரத்திற்கே அதிக மதிப்பளித்து - ஒரு வரலாற்றின் வாயிலாகக் கொள்கை விளக்கம் தந்தார்! ஒரு முறை அந்த நாடகத்திற்குத் தலைமை வகித்த தந்தை பெரியார் அவர்கள், நாம் பேசுகிற நூறு கூட்டங்களும் சரி! அண்ணாவின் இந்த ஒரு நாடகமும் சரி! என்று போற்றிப் புகழ்ந்தார்!

இப்போது ஏன் அந்த நாடகமும், சில உரையாடல்களும் என் நினைவுக்கு வந்தன என்று கேட்கிறாயா?

அண்ணா நினைவு நாள் அல்லவா? அதனையொட்டி எத்தனையோ சிந்தனைகள்!

நேற்றுகூட அண்ணா எழுதிய சொர்க்கவாசல் குறித்து சிலவற்றைச் சுட்டிக்காட்டியிருக்கிறேனே!

அதன் பிறகு நேற்று மாலையும், இன்று காலையும் நாளேடுகளைப் புரட்டினேன்!

சென்னையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் நலனை முன்னிட்டு நடைபெறும் வேள்வி, பிப்ரவரி மூன்றாம் நாள் காலை தொடங்கி 4 ஆம் தேதி காலை வரை நடைபெறுகிறது. விசேஷ பந்தல், பந்தலின் நடுவே யாக சாலை, யாக சாலை நடுவே சண்டிகா தேவி கலசம், 64 யோகினிகள், 64 பைரவர்கள், நவகிரகங்கள், கலசங்கள், 5 அடி நீளம், 5 அடி அகலம், 6 அடி ஆழத்துக்கு யாககுண்டம். அதில் நவதானியங்கள் கொட்டப்பட்டன. அதிகாலை 5 மணிக்கு மஞ்சக்குடி ராஜகோபால சாஸ்திரியார் பூஜையைத் தொடங்கி வைத்தார். சாந்தமூர்த்தி சிவாச்சாரியார் தலைமையில் இருநூறு வேதவிற்பன்னர்கள் யாகத்தை நடத்துகிறார்கள். குடம் குடமாக நெய்யை ஊற்றினார்கள். அமைச்சர்கள் அங்கு வந்து அமர்ந்து சங்கல்பம் செய்து வைக்கப்பட்டனர். அவர்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டன. தமிழக முழுவதுமிருந்து 1200

புரோகிதர்களும், வேதவிற்பன்னர்களும் கலந்து கொண்டு நடைபெறும் இந்த யாகம், காஞ்சி சங்கராச்சாரியாரின் ஆசியுடன் நடைபெறுவதாக தினத்தந்தி பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் செய்தியினைப் படித்தபோதுதான், அண்ணா நினைவு நாளையொட்டி எழுந்த என் சிந்தனையில், அவர் எழுதி நடித்த சந்திரமோகன் நாடகம் நிழலாடியது!

என் செய்வது! அண்ணா நினைவு நாளில் அண்ணா சதுக்கத்திலேயே மேடை அமைத்து, அதிலேறி நின்று கொண்டு திராவிடப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் பேணுவோம் என்று நாவலர் கூற, அ.தி.மு.க.வினர் அதனைச் சூளுரையாக முழங்கியுமிருக்கின்றனர்!

திராவிடப் பண்பாடு வேள்வி, வேதமந்திரம், 1200 புரோகிதர் பூஜை, முதல்வருக்கு எல்லா வரமும் அருளும் கிட்டிட யாகம் என்கிற நிலைக்கு மாறியிருக்கிறது!

நாகரிகத்தைப் பேணுவோம் என்றார்களே சூளுரையில்! அது எப்படி ஆகியிருக்கிறது தெரியுமா?

அண்ணா சதுக்கத்து மேடையிலேயே - அண்ணா நினைவு நாளில் - நாவலர் அவர்கள் பஞ்சாயத்துத் தேர்தலில் அ.தி.மு.க. காங்கிரஸ் கூட்டணிக்கு அனைவரும் வாக்களித்து வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்ற வேண்டுகோள் விடுத்திட்ட அரசியல் பிரச்சாரமாக அந்த நாகரிகம் பேணல் உருவெடுத்திருக்கிறது!

அடுத்த ஆண்டு, அண்ணா சதுக்கத்தில் மேடைகூடப் போடாமல் - அந்தக் கல்லறை மேடைமீது ஏறி நின்று அரசியல் பிரச்சாரம் செய்தாலும் செய்வார்கள். அது கண்டு ஆச்சரியப்படுவதற்கில்லை.

அண்ணா பெயரைச் சொல்லியே அவரது கருத்துகளை, கொள்கைகளை, அவர் போதித்த அரசியல் நாகரிகத்தை - கேவலம் பதவிக்காகக் குழி தோண்டிப் புதைப்பவர்கள், எதையும் செய்வார்கள், மக்கள் ஏமாளிகளாக இருக்கும் வரையில்!

அன்புடன்

மு.க.

05-02-1986

1389. அரும்பெரும் வெற்றிகளை அடைந்திட வேண்டுமெனில்...!

உடன்பிறப்பே,

உள்ளாட்சி மன்றத் தேர்தலில் தி.மு.கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியுடனும், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியுடனும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்குடனும், தமிழ்நாடு பார்வர்டு பிளாக் கட்சியுடனும் தேர்தல் உடன்பாடு குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துகிற வாய்ப்பினைப் பெற்று, எந்தெந்த நகராட்சிகளில், ஊராட்சி ஒன்றியங்களில், பேரூராட்சிகளில் தலைவர் பொறுப்புக்கு எந்தெந்த கட்சிகளின் வேட்பாளர்கள் நிறுத்தப்படுவது என்று விவாதித்து, வாய்ப்புக்கேற்றவாறு முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. நமது கழகம் கட்சி திருவோணம், கொள்ளிடம், வேப்பூர், மேலூர் ஆகிய நான்கு ஒன்றியங்களில் போட்டியிட முதலில் உடன்பாடு கொண்டிருந்த போதிலும், பின்னர் அந்தக் கட்சியின் தலைவர் நண்பர் எஸ்.டி.எஸ். அவர்கள், அந்த நான்கு இடங்களிலும் தி.மு.கழக வேட்பாளர்கள் போட்டியிடட்டும் என எனக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அறிவித்து விட்டார்.

உள்ளாட்சி மன்றத் தேர்தலில் தோழமைக் கட்சிகள் உடன்பாடு கொள்வது குறித்து, இரண்டொரு மாதங்களுக்கு முன்பே அனைத்துக் கட்சிக்கூட்டத்தில் பேசப்பட்டபோது, மாவட்ட அளவில் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து பேசி முடிவுகளை மேற்கொள்வதென்றும், எந்த இடத்திலாவது சிக்கல் தோன்றினால் அது குறித்து தலைமை அளவில் அந்தக் கட்சிகளின் தலைவர்களோ அல்லது பிரதிநிதிகளோ கலந்துரையாடித் தீர்வு காண்பதென்றும் ஒரு நிலை எடுக்கப்பட்டது.

அப்போதே செய்தியாளர்கள் கேட்டபோது, உள்ளாட்சி மன்றத் தேர்தல் உடன்பாடு மாவட்ட அளவிலேயே நடைபெறும் என நான் தெரிவித்துமிருக்கிறேன்.

தேர்தல் தேதிகள், பல குழப்பங்களுக்கிடையே இறுதியாக அறிவிக்கப்பட்ட பிறகு தி.மு.க. மாவட்ட நிர்வாகிகள் ஆங்காங்கு தோழமைக் கட்சி நிர்வாகிகளுடன் உடன்பாடு குறித்துக் கலந்து பேசியிருக்கின்றனர்.

அப்படிச் பேசியதின் விளைவாக, இறுதிப்பட்டியலுக்கு வசதியாகத் தொடக்க முடிவுகள் பெரும்பான்மையான மாவட்டங்களில் எடுக்கப்பட்டு, அந்தப் பட்டியலுக்கு இறுதி வடிவம் கொடுப்பது அந்தந்தக் கட்சித் தலைமைகளுக்கு எளிதான செயலாக ஆகிவிட்டது.

இல்லையேல் 300க்கு மேற்பட்ட ஒன்றியங்கள், 600க்கு மேற்பட்ட பேரூராட்சிகள், சுமார் 100 நகராட்சி மன்றங்கள் - இவற்றின் தலைவர் பொறுப்புக்கான வேட்பாளர்கள், உறுப்பினர் பொறுப்புக்கான வேட்பாளர்கள் நிறுத்துவதில் தோழமைக் கட்சிகளுக்கிடையே தலைமை அளவில் பேச்சு வார்த்தை நடத்துவதென்பது எந்தக் கட்சிக்கும் இலகுவானதாக அமைய முடியுமா?

எனவேதான் மாவட்ட அளவில் பேசத் தொடங்கி, இறுதிப் பட்டியலுக்கு வடிவம் கொடுக்க மட்டுமே தலைமை அளவில் கலந்துரையாடலாம் என முடிவெடுக்கப்பட்டது.

கட்சிகளின் தலைமை அளவில் அந்தந்தக் கட்சிகளின் தலைவர்கள், மாவட்டத்திலிருந்து தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையில், சென்னையில் சில நாட்கள் தொடர்ந்தமர்ந்து பேசி, இறுதியாகக் கழகம் எந்தெந்த இடங்களில் போட்டியிடுகிறது என்பதையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், தமிழ்நாடு பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகள் எந்தெந்த இடங்களில் போட்டியிடுகின்றன என்பதையும் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவைதவிர வேறு சில தோழமைக்கட்சிகள், ஒன்றிரண்டு மாவட்டங்களில் மாவட்ட அளவில் பேசி முடித்து உடன்பாடு கொண்டு போட்டியிடுகின்றன.

எந்த இடத்தில், எந்தப் பதவிப் பொறுப்புக்கு, எந்தக்கட்சியின் வேட்பாளருக்குத் தி.மு.கழகம் வாய்ப்பளித்து, விட்டுக் கொடுத்திருக்கிறதோ - அந்த இடத்தில் அந்தக் கட்சியின் வேட்பாளருக்குத்தான் தி.மு.கழக உடன்பிறப்புகள்

தேர்தல் பணிகளில் ஒத்துழைப்புத் தந்து வெற்றி தேடித்தர இதய சுத்தியுடன் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தோழமைக் கட்சிகளுடன் உடன்பாடு கொண்டு தேர்தலில் போட்டியிடுவது என்ற முடிவைக் கழகத்தின் செயற்குழுவும், பொதுக் குழுவும் எடுத்து அந்தக் கட்சிகளுடன் உடன்பாடு கொண்டு பேசி முடிவுகளை எடுத்திடக் கழகத் தலைவருக்கும், பொதுச்செயலாளருக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ள நிலையில் - அந்த அடிப்படையில் காணப்பட்டுள்ள உடன்பாட்டில், தாங்கள் நிற்க வேண்டி விரும்பிக் கேட்ட சில இடங்கள் தோழமைக் கட்சிக்குத் தரப்பட்டு விட்டதே என்ற ஆதங்கம், சில உடன்பிறப்புகளுக்கு இருக்கத்தான் செய்யும்!

ஆனால் அவர்களில் பெரும்பாலான உடன்பிறப்புகள் கழகத் தலைமை செய்து கொண்டுள்ள உடன்பாட்டுக்கு மதிப்பளித்து, கட்டுப்பாடு காப்பாற்றி - தங்கள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டதோடு, விட்டுக் கொடுக்கப்பட்டுள்ள தோழமைக் கட்சி வேட்பாளர்களுக்கான வெற்றிக்கு ஒத்துழைக்கவும் முற்பட்டுள்ளனர். அந்த உடன்பிறப்புகள் - கழகத்தை முன்னிறுத்தி, தங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, இந்த இயக்க வளர்ச்சிக்காகத் தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்கள் என்ற பெருமைக்குரிய வரிசையினர்!

ஒரு சிலர், ஒரு சில இடங்களில் - தோழமைக் கட்சிக்கென அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் பதவி ஒன்றே குறிக்கோள் என்றும் - அதற்கெனவே இத்தனை நாட்கள் காத்திருந்தது போலவும் - கழகக் கட்டுப்பாடு மீறி நடந்து கொள்வதாக செய்திகள், தலைமைக்கு வந்துள்ளன.

அதுகுறித்து மாவட்டக் கழகச் செயலாளர்கள் அல்லது மாவட்டப் பொறுப்பாளர்கள் தலைமைக்கு அளிக்கின்ற தகவல்களையொட்டி - கட்டுப்பாடு மீறி நடப்போர் யாராயினும் அவர்கள் மீது தலைமைக் கழகம், கட்சியின் சட்டதிட்டங்கள் விதிமுறைகளின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கழகத்திலிருந்து வெளியேற்றும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

கழக வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்து அறிவிக்க - ஜனவரி திங்கள் 17ஆம் தேதி முதல் பிப்ரவரி திங்கள் இரண்டாம் நாள் மாலை வரையில் ஏறத்தாழ 15 நாட்கள் நானும், பேராசிரியர் அவர்களும் அன்பகத்தில் சிறிது கூட ஓய்வு கொள்ளாமல் - நேரத்திற்கு உணவருந்தாமல் - உறக்கமுமின்றி எவ்வளவு சிரமம் மேற்கொண்டோம் என்பதைச் சென்னைக்கு வந்து எங்களை நேரில் பார்த்தவர்கள்தான் அறிவார்கள்!

அப்படிக் கஷ்டப்பட்டு ஆய்வு செய்து அறிவித்துள்ள வேட்பாளர் பட்டியலில் கூட ஓரிரு தவறு விளைந்திருக்கக் கூடும்! அந்தத் தவறுகளுக்காக, உன்போன்ற உடன்பிறப்புகளுக்குக் கோபம் இருந்தால் அதனை எங்களிருவரின் மீது காட்டவேண்டுமே தவிர, கண்ணீரும் செந்நீரும் சிந்தி வளர்த்த இந்தக் கழகத்தின் மீது காட்டிவிடக் கூடாது என்று அந்த உடன்பிறப்புகளின் கைமலர்களை எடுத்து என் கண்களில் ஒத்தியவாறு கேட்டுக் கொள்கிறேன்!

நகராட்சி, ஒன்றியம், பேரூராட்சி மற்றும் அவற்றின் உறுப்பினர்கள் பொறுப்புகளில் மிகப்பெரும்பாலான இடங்களில் நாம் போட்டியிடுகிறோம் என்பதையும் - தோழமைக் கட்சிகளுக்குப் போட்டியிடவும், நாம் ஆதரவளிக்கவும் விடப்பட்டுள்ள மொத்த இடங்கள் என்று பார்த்தால் நகராட்சித் தலைவர் பொறுப்புக்கு சுமார் 15 இடங்களிலும், ஒன்றியத் தலைவர் பொறுப்புக்கு சுமார் 60 இடங்களிலும், பேரூராட்சித் தலைவர் பொறுப்புக்கு சுமார் 120 இடங்களிலும் என்றுதான் கணக்கு வருகிறது.

நம்முடைய கழகமோ தோழமைக் கட்சிகளின் ஆதரவுடன் நகராட்சித் தலைவர் பொறுப்புக்கு சுமார் 80 இடங்களிலும், ஒன்றியத் தலைவர் பொறுப்புக்கு சுமார் 320 இடங்களிலும், பேரூராட்சித் தலைவர் பொறுப்புக்கு 500க்கு மேற்பட்ட இடங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

இந்த நிலையில் கூட, நம்முடைய கழகத்தின் உடன்பிறப்புகள் சிலர், தாங்கள் நிற்க விரும்பிய இடத்தை தோழமைக் கட்சிகளுக்குத் தந்துவிட்டதாகக் குறைபட்டுக் கொண்டு, கட்டுப்பாடு மீறிடத் துணிவது ஏற்கக்கூடிய செயலா? என்பதை உன் போன்ற உடன்பிறப்புகள் எண்ணிப் பார்த்திட வேண்டுகிறேன்.

எனவே, இந்த உள்ளாட்சித் தேர்தலில் கழகத் தலைமையும், மாவட்டக் கழக அமைப்புகளும் ஆய்ந்து அறிவித்துள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு அயராது உழைத்திட வேண்டுகிறேன் உன்னை!

அது போல, கழகம், எந்த இடத்தில், எந்தவொரு குறிப்பிட்ட தோழமைக் கட்சிக்கு உடன்பாடு கொண்டு விட்டுக் கொடுத்திருக்கிறதோ, அந்தக் கட்சியின் வேட்பாளர் வெற்றிக்கும் நீ, சலியாது உழைத்திட வேண்டும்!

இவ்வாறே, கழகத்துடன் உடன்பாடு கொண்டுள்ள தோழமைக் கட்சியினரும், தங்கள் அமைப்புகளுக்கு அறிவிப்புகளை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு!

இந்த ஆட்சியில் நரகமென ஆகிக் கொண்டிருக்கிற நகரங்கள் நலன் பெறவும், உதாசீனப்படுத்தப்பட்டு விட்ட ஊர்கள் சீர்பெறவும் - உள்ளாட்சி மன்றங்களின் நிர்வாகத்தில் பெருகி வழிகின்ற ஊழல்களின் ஊற்றுக்கண்களை முற்றாக அடைத்திடவும் உடன்பிறப்பே! நீயும், நமது தோழமைக்கட்சிகளின் செயல்வீரர்களும் அயராது பணியாற்றினால் அடைந்திடலாம் அரும்பெரும் வெற்றிகளை!

அன்புடன்

மு.க.

06-02-1986

1390. ஓட்டளித்தோரை ஒட்டகங்களாக ஆக்குவதோ?

உடன்பிறப்பே,

ஒட்டகத்தைப் பற்றி ஒன்று சொல்வார்கள்! பழைய செய்திதான் - இருந்தாலும் இப்போதும் நினைவுக்கு வந்ததால் சுட்டிக்காட்டுகிறேன்.

பாலைவனப் பயணம் போகும் ஒட்டகத்தின் மீது பெரும் பாரமான பொருள்களையெல்லாம் ஏற்றி வைப்பார்களாம்.

அதைத் தூக்கிக்கொண்டு நடக்க முடியாதென்று ஒட்டகம் அடம் பிடித்து எழாமலே படுத்துக் கொள்ளுமாம்.

ஒட்டகத்தை ஏமாற்றுவதற்காக - முதலில் ஏற்றப்பட்ட பொருள்களுடன் ஒரு சில கற்களையும் ஏற்றி வைத்திருப்பார்கள்.

ஒட்டகம் அடம் பிடித்து படுத்துக் கொண்டதும், அந்தக் கற்களை மட்டும் எடுத்து அதன் கண் எதிரே கீழே எறிவார்களாம்.

முட்டாள் ஒட்டகமோ, முழுச்சுமையும் குறைந்து விட்டது எனக் கருதிக்கொண்டு எழுந்து நடக்கத் தொடங்குமாம், எலும்பொடிய பாரத்தை முதுகில் தூக்கிக் கொண்டு!

அதே காரியத்தை நவீன இந்தியாவை நிர்மாணிக்கப்போவதாகப் பிரகடனப்படுத்தி முடிசூட்டிக் கொண்ட இளம்பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் மிக நாசுக்காகச்செய்து, ஏழை, எளிய, நடுத்தர மக்களையும், உழவர் சமுதாயத்து மக்களையும் இப்போது ஏமாற்றியிருக்கிறார்.

பாவம்! பாலைவனத்து ஒட்டகம் ஏமாந்துபோய் முதுகொடியப் பாரம் சுமக்கிறது!

பாரதத்திருநாட்டு மக்களுக்கும் பலகோடி பேருக்கும் பாலைவன வாழ்வுதானே!

எனவேதான் அவர்களை ஒட்டகங்களாக ஆக்கிக் கொண்டு - எப்போதும் போல் உப்பரிகை வாழ்வு நடத்துகிறவர்களுடன் உறவாடுகிறது இந்திய அரசு!

பெட்ரோல், டீசல், கெரசின், காஸ்சிலிண்டர் இவற்றின் விலைகளை பிப்ரவரி முதல் தேதியன்று திடீரென உயர்த்தி, அதன் வாயிலாக ஆயிரம் கோடி வருமானம் அதிகம் கிடைக்குமெனக் கூறினார்கள்.

மத்திய அரசின் நிதி நிலை அறிக்கை பட்ஜெட் வருவதற்குச் சிலவாரங்களே இடையிலிருக்கும் பொழுது இப்படியொரு உயர்வை அரசு அறிவித்தவுடன், இந்த உயர்வு ஏழை மக்களையும், விவசாயிகளையும், தொழிலாளர்களையும், நடுத்தர மக்களையும் பெரிதும் பாதிக்குமென்று எதிர்க்கட்சிகள் அனைத்தும் குரல் கொடுத்தன. நமது தி.மு.கழகமும் இந்த விலை உயர்வைக் கடுமையான முறையில் கண்டனம் செய்துள்ளது.

இப்படியொரு தாங்கவொண்ணாத எதிர்ப்பு நாடு முழுவதும் கிளம்பும் என எதிர்பார்க்காத காங்கிரஸ்காரர்கள் கையைப் பிசைந்து கொண்டனர்.

உடனே காங்கிரஸ் கட்சியின் காரியக்கமிட்டி கூட்டப்பட்டது. அந்தக் கமிட்டியில், காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராஜீவ் காந்தி உட்பட அனைவரும் இந்த விலை உயர்வை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று பிரதமர் ராஜீவ் காந்தியைக் கேட்டுக் கொண்டனர்.

சென்னைத் தொலைக்காட்சி 5.2.86 செய்திப்படி, உயர்த்தப்பட்ட விலையை உடனே குறைக்குமாறு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் மத்திய நிதி அமைச்சர் வி.பி.சிங் அவர்களுக்கு உத்திரவிட்டார்.

ஆம்! சென்னைத் தொலைக்காட்சி, இப்படித்தான் செய்தி வாசித்தது!

அதாவது பிரதமருக்குத் தெரியாமலே ஆயிரங் கோடி வருமானத்துக்கு வழி செய்யக் கூடிய ஒரு விலை உயர்வை, ஏழை எளிய நடுத்தர மக்களின் மீது நிதியமைச்சர் வி.பி.சிங் அவர்கள் சுமத்தி விட்டார்.

இந்த உயர்வை பிரதமருக்கு மத்திய அமைச்சர் பகத் போன்றவர்கள் சுட்டிக் காட்டியவுடன் - கூட்டினார் காரியக் கமிட்டியை! வெட்டினார் விலைவாசி உயர்வை! பாவம்! பிரதமருக்குத் தெரியாமலே இப்படி திடீரென நிதி அமைச்சர் விலையைக் கூட்டியிருக்கிறார்!

மந்திரி நமது மாநகர் தன்னில் மாதம் மும்மாரி மழை பொழிகிறதா? என்று பழைய காலத்துத் தெருக் கூத்துகளில் மன்னர் வேடம் போட்டவர்கள் கேட்பார்கள். அது போல இருக்கிறது இதுவும்!

மழை பெய்கிறதா இல்லையா என்பது கூட தெரியாமல் மகாராஜா எந்த வெளிநாட்டுக்குப் போயிருந்தார்? என்று தெருக்கூத்து பார்ப்போர் அன்றைக்குச் சிந்தித்ததில்லை!

இன்றைக்கு ஓரளவு சிந்திப்பவர்கள் இருக்கிறார்களே!

இப்போதுமா அதே தெருக்கூத்து வசனத்தை மகாராஜா பேசுவது?

சரி! விலை குறைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது உயர்த்தப்பட்ட விலையில் வெட்டு செய்யப்பட்டிருக்கிறதா?

ஒட்டகத்தின் மீது ஏற்றிய உண்மையான பாரம் இறக்கப் பட்டிருக்கிறதா? அல்லது ஒரு சில கற்களை எடுத்துவிட்டு ஒட்டகத்தை ஏமாற்றுகிற முயற்சி நடைபெற்றுள்ளதா?

காங்கிரஸ் காரியக் கமிட்டியில் முடிவெடுத்ததாகவும், அதனையொட்டி மத்திய அமைச்சரவை கூடியதாகவும், அதன் பிறகு விலை உயர்வில் வெட்டு செய்திருப்பதாகவும் ஆடியுள்ள இந்த நாடகத்தினால், ஏழை எளிய நடுத்தர மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட முடிகிறதா?

பிப்ரவரி முதல் தேதி அறிவிக்கப்பட்ட விலைகளை விட இப்போது அறிவிக்கப்பட்டுள்ள விலை குறைவாக இருந்தாலும் கூட, பிப்ரவரி முதல் தேதிக்கு முன்பு இருந்த விலைகளை விட இன்று நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைகள் அதிகமே என்பதை யாரும் மறுக்க முடியாது!

சமையலுக்கான காஸ் சிலிண்டர் விலை, பிப்ரவரி முதல்தேதிக்கு முன்பு 50ரூ 75 காசு! பிப்ரவரி முதல் தேதிக்குப்

பிறகு 61ரூ 56 காசு! இப்போது அறிவித்துள்ள விலை 57ரூ 25 காசு! ஆக 6 ரூபாய் 51 காசு இப்போதும் காஸ் சிலிண்டர் விலை உயர்ந்தே இருக்கிறது!

நடுத்தர மக்கள் இதனால் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை!

7ரூ 39 காசாக இருந்த பெட்ரோல் விலையை 7ரூ 96 காசாக உயர்த்திவிட்டு, இப்போது 7ரூ 84 காசாக அறிவித்திருக்கிறார்கள். 45 காசு உயர்ந்தது உயர்ந்ததுதான்!

இந்தியாவில் பயன்படுத்தப்படும் பெட்ரோலில் 15 சதவிகிதம்தான் கார்களுக்கு என்றும், எஞ்சியது தொழிற்சாலைகளுக்குத்தான் பயன்படுத்தப்படுகிறதென்றும் ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது.

3ரூ 52 காசாக இருந்த டீசல் விலையை 3ரூ 73 காசாக உயர்த்தி விட்டு, இப்போது 3ரூ 65காசாக நிர்ணயித்து அறிவித்துள்ளார்கள். அதாவது 21 காசு உன உயர்த்தி, அதில் எட்டு காசு குறைத்து 13 காசு - பழைய விலையிலிருந்து அதிகமாக ஆக்கியிருக்கிறார்கள்.

இது விவசாயிகளையும், சிறுதொழில் நடத்துவோரையும் பெரிதும் பாதிக்கக் கூடிய விலை உயர்வாகும்.

மண்ணெண்ணெய் விலை 2ரூ 10 காசாக ஒரு லிட்டருக்கு இருந்ததை 2ரூ 34 காசாக உயர்த்தி விட்டனர். இந்த உயர்வில் எந்தஅளவு வெட்டப்படும் என்பது இன்னமும் தெளிவாக அறிவிக்கப்படவில்லை.

உயர்த்தப்பட்ட விலையை வெட்டிக் குறைத்துள்ளோம் என்பது - தலையை அகற்றுவதாக இருந்தோம் - இப்போது, கருணை கொண்டு கழுத்தை மட்டும் வெட்டி விடுவதாக இருக்கிறோம் என்கிற கதையாகத்தான் ஆகிவிட்டது, இந்த விலை உயர்வும், அதில் செய்துள்ள வெட்டும்!

இந்த விலை உயர்வு வெட்டுக்குப் பிறகுகூட சாதாரண மக்களும், நடுத்தர மக்களும் பாதிக்கப்படத்தான் செய்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, பிப்ரவரி முதல் தேதிக்கு முன்பு இருந்த நிலையிலேயே இந்த விலைகள் இருந்திடல் வேண்டும் என்பதை வலியுறுத்த எதிர்க்கட்சிகள் குரல் கொடுக்க வேண்டியது அவசியமாகிறது!

இன்று 6.2.86 சென்னையில் தி.மு.கழகம் சார்பில் நான், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்திய முஸ்லீம் லீக், தமிழ்நாடு பார்வர்டு பிளாக் ஆகிய கட்சித் தலைவர்களோடு கலந்துபேசி, பின்வரும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பிப்ரவரி பதின்மூன்றாம் தேதியன்று மாலையில் நகரங்கள், பேரூர்கள், கிராமங்கள் எங்கணும், மத்திய அரசு ஏற்றியுள்ள டீசல், காஸ்சிலிண்டர், பெட்ரோல், மண்ணெண்ணெய் விலைகளைக் கண்டித்து ஊர்வலங்களும், கூட்டங்களும் நடத்திட வேண்டும், என்று எடுத்துள்ள முடிவைச் செயல்படுத்துமாறு உன்னையும், உன் போன்ற உடன் பிறப்புகளையும், நமது தோழமைக் கட்சிகளின் செயல் வீரர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

பெட்ரோல், டீசல், காஸ் சிலிண்டர், கெரசின், மற்றும் ரசாயன உரங்கள், நிலக்கரி, அரிசி, கோதுமை ஆகியவற்றுக்கும் ஏற்றப்பட்டுள்ள இந்த அநியாயமான விலை உயர்வுகளுக்கு எதிராக மக்களைத் திரட்டி நாம் உருவாக்குகிற எழுச்சி, மத்திய அரசின் பிடிவாதத்தை தகர்த்து - உடனடியாக பிப்ரவரி முதல் தேதிக்கு முன்பு இருந்த விலைகளை நிர்ணயிப்பதற்கு - மத்திய அரசை வலியுறுத்தி, வழிக்குக்கொண்டு வருவதாக அமையட்டும்!

ஓட்டளித்து இவர்களை உட்கார வைத்த மக்களை ஒட்டகங்கள் என நினைத்தனரோ எனக் கேட்கும் நாள்தான் பிப்ரவரி பதின்மூன்றாம் நாள்!

அன்புடன்

மு.க.

07-02-1986

1391. குறிக்கோள் உணர்ந்து குவித்திடுக வெற்றி!

உடன்பிறப்பே,

உள்ளாட்சி மன்றத் தேர்தல் களத்தில் உடன்பாடுகொண்ட தோழமைக் கட்சிகளுடன், உளத்தூய்மையுடன் ஒத்துழைத்தவாறு நமது அணி, பணிகளைத் தொடங்கிவிட்டது.

விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுக்கு ஒருசில இடங்களில் போட்டியிட வாய்ப்பு கிட்டாத கழக உடன்பிறப்புகள் கசப்பு காட்டினர் எனினும், பின்னர் கழகக் கட்டுப்பாடு காத்திட முனைந்து விட்டனர்.

மிகச் சிலர், தலைமையின் வேண்டுகோளையும், எச்சரிக்கையையும் உதாசீனப்படுத்திக் கட்டுப்பாடு குலைத்த இடங்களில் கழகத்தின் விதிமுறைகளின்படி ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாகியுள்ளனர்.

மற்றபடி, நமது வேட்பாளர்கள் - தோழமைக் கட்சி வேட்பாளர்கள் என்ற வேறுபாடு இல்லாமல் தேர்தல் களத்தில் தொண்டாற்றிடும் செயல்வீரர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள்! வாழ்த்துகள்!

ஒன்றைக் கவனித்தாயா? தோழமைக்கட்சி என்றதும் எனக்கு நினைவுக்கு வந்ததால் எழுதநேரிடுகிறது.

திரும்பத் திரும்ப தமிழக ஜனதா கட்சியின் தலைவர், உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க.வுடன் உடன்பாடு இல்லை - உடன்பாடு இல்லை - என்று அடிக்கடி அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்.

மாநில அளவில் ஜனதா தலைவர் நண்பர் செழியன் அவர்கள், அப்படியொரு முடிவெடுத்திருப்பதாக அறிவித்து - மாவட்ட அளவில் ஓரிரு இடங்களில் தி.மு.க.வுக்கும்

ஜனதாவுக்கும் இடையே உருவாகியுள்ள உடன்பாடுகளைக்கூட சந்தேகத்திற்குரியதாக ஆக்கியுள்ளார்.

அதுகுறித்து நமது மாவட்டக் கழகச் செயலாளர்களுடன் தலைமைக் கழகம் தொடர்பு கொண்டு, உடன்பாடு கொண்டுள்ள மாவட்ட ஜனதா கட்சியினரின் கருத்தையும் நமது மாவட்ட அமைப்புகளின் மூலம் தெரிந்து கொண்டு, மேற்கொண்டு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று நமது அமைப்புகளுக்கு அறிவிக்கும்.

இதற்கிடையே நமது கழகம் கட்சியின் தலைவர் நண்பர் எஸ்.டி.எஸ். அவர்கள் விடுத்துள்ள அறிக்கையினைப் படிப்பவர்களுக்கு, தி.மு.க.வுக்கும், நமது கழகத்துக்கும் தேர்தல் உடன்பாடே ஏற்படவில்லை போலும் என்ற எண்ணமும், கருணாநிதியாகவே ஒரு அறிக்கை விடுத்து உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாகத் தெரிவித்தது போன்ற ஒரு தவறான கருத்தும் எழுவது இயல்பேயாகும்!

உண்மையில் நடந்தது என்னவென்றால், பிப்ரவரி 2 ஆம் தேதியன்று சென்னை அன்பகம் கழக அலுவலகத்தில் நண்பர் எஸ்.டி.எஸ். அவர்களும், நானும், பேராசிரியர் அவர்களும் உடன்பாடு குறித்துப் பேசி, தஞ்சை மாவட்டத்தில் திருவோணம், கொள்ளிடம், ஆகிய ஒன்றியங்களும் - திருச்சி மாவட்டத்தில் வேப்பூர் ஒன்றியத்திலும் - மதுரை மாவட்டத்தில் மேலூர் ஒன்றியத்திலும் நமது கழகம் போட்டியிடுவதென உடன்பாடு ஏற்பட்டு, அந்த உடன்பாட்டில் நானும் நண்பர் எஸ்.டி.எஸ். அவர்களும் கையெழுத்திட்ட பின்னரே, ஏடுகளுக்கு செய்தி தரப்பட்டது.

ஆனால் மறுநாள் பிப்ரவரி 3 ஆம் தேதி காலையில் நண்பர் எஸ்.டி.எஸ். அவர்கள், உடன்பாடுகொண்ட நான்கு இடங்களிலும் தி.மு.கழகம் போட்டி போட்டுக் கொள்ளட்டும் என்று தொலைபேசி மூலம் எனக்குத் தெரிவித்துவிட்டார்.

பேசியது அவர்தானா? அல்லது அவரைப்போல யாராவது குரலை மாற்றிப் பேசி நம்மை ஏமாற்றுகிறார்களோ! என ஐயமுற்று திரும்பவும் அவரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு - அவர்தான் பேசினார் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

அதன்பிறகு அந்த நான்கு இடங்களிலும், கழக வேட்பாளர்களை வாபஸ் பெற வேண்டாமென்பதற்காக முயற்சிகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டியதாயிற்று.

உடன்பாட்டுக்கு அவரது கட்சித் தொண்டர்கள் ஒப்புதல் தரவில்லை என்று அவர், தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். தி.மு.க.வுக்கும் உள்ள சூழ்நிலையில் நமது கழகம் கட்சிக்கு அவர்கள் கோரிய அளவு அதிக இடங்களை விட்டுக் கொடுக்க முடியவில்லை.

அந்த உடன்பாடு ஏற்பட்டு - பின்னர் இல்லை என்றாகிவிட்டது என்பதை நேற்றைய கடிதத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன்.

நமது கழகம் போன்ற நம்முடன் கருத்தொற்றுமையுடைய சில கட்சிகளுடன் உடன்பாடு ஏற்பட முடியாமற்போனது எனக்கும் பெரிதும் வேதனையளிக்கக்கூடிய நிகழ்ச்சிதான்!

எனினும், மத்தியிலும், மாநிலத்திலும் ஆளுங்கட்சிகளாக இருக்கிற காங்கிரஸ், அ.தி.மு.க. ஆகிய கட்சிகளின் கூட்டணியுடன் இந்தத் தேர்தலில் மோதுகிற எதிர்க்கட்சிகள் வெற்றிபெற வேண்டுமென்கிற எனது விருப்பத்தில் எந்த மாறுபாடும் இல்லை!

அந்தக் குறிக்கோளுடன் கழகமும், தோழமைக் கட்சிகளும் களம் புகுந்துள்ள இந்த நேரத்தில் நமது உடன்பிறப்புகள், எந்தவிதமான திசை திருப்பும் செய்திகள், திரித்துக்கூறும் செய்தி ஏடுகள் சிலவற்றில் இடம்பெறுமானால், அவை குறித்து அலட்டிக் கொள்ளாமல் உறுதியுடன் நின்று வெற்றிகளை குவித்திட உழைத்திடுமாறு வேண்டுகிறேன்.

அன்புடன்

மு.க.

08-02-1986

1392. துவளாமல் தொண்டாற்றிட வேண்டுகிறேன்!

உடன்பிறப்பே,

எதிர்க்கட்சியினர் மீது போடப்பட்ட வழக்குகள், ஒரு நீதிமன்றத்திலே தள்ளுபடி செய்யப்பட்டால் விடாப்பிடியாக மேல் நீதிமன்றங்களிலே அப்பீல் செய்து, அதற்கு அரசாங்க வழக்கறிஞரான அட்வகேட் ஜெனரல் கூடப் போதாது எனக் கருதி, ஜெத்மலானி போன்ற மிகப் பிரபலமான வழக்கறிஞர்களை டெல்லியிலிருந்து அழைத்து வந்து வழக்கு நடத்துகிற தமிழ்நாட்டு அரசாங்கம், உள்ளாட்சித் தேர்தலையே எதிர்த்து ஒரு சிலர் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறார்கள் என்பது முன்கூட்டியே தெரிந்தும்கூட, இங்கிருந்து அரசாங்க வழக்கறிஞரான அட்வகேட் ஜெனரலை உடனடியாக டெல்லிக்கு அனுப்பி வைக்காததிலிருந்தே, உள்ளாட்சித் தேர்தலுக்கு இடைக்காலத் தடையுத்தரவு வந்து விட்டால் நல்லது என்று இந்த அரசு கருதியது என்பது தெளிவாகி விட்டது.

பிப்ரவரி 21 ஆம் தேதி வரையில் வாய்தா போட வேண்டாம். ஓரிரு நாட்களிலேயே அரசுத் தரப்பின் விளக்கப் பதிலை சுப்ரீம் கோர்ட்டாருக்குத் தந்து விடுகிறோம் என்று கூறக்கூட டெல்லியிலிருக்கும் தமிழக அரசின் வக்கீலுக்குத் தோன்றிடவில்லையா? அல்லது அவர் சொல்லியும்கூட சுப்ரீம் கோர்ட் பிப்ரவரி 21 என்று வாய்தா போட்டு விட்டதா?

எப்படியோ, தேர்தல் ஒத்திவைக்கப்பட வேண்டு மென்பதிலே இந்த அரசு அபாரமான ஆர்வம் காட்டுகிறது என்பது, உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிந்துவிட்டது நாட்டு மக்களுக்கு!

சுப்ரீம் கோர்ட்டுக்கு எந்த அடிப்படையில் இந்த வழக்கு போயிருக்கிறதோ, அந்த அடிப்படை குறித்து சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி மோகன் அவர்களும் - அதற்குமேல் விசாரணை

நடத்திய டிவிஷன் பெஞ்ச் நீதிபதிகளும் - உள்ளாட்சித் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்று சட்டம் இயற்றிட அதிகாரம் பெற்றது சட்டமன்றம்தான் எனக்கூறியதோடு, அதில் நீதிமன்றம் தலையிட இயலாது எனத் திட்டவட்டமாகத் தீர்ப்பளித்துவிட்டனர்.

இந்த இரண்டு கட்டங்களில், உயர்நீதி மன்றத்தில் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்புக்கு மாறாக, சுப்ரீம் கோர்ட்டில் இந்தத் தேர்தல் செல்லாது எனக் கூறுவதற்கான வாய்ப்பு எதுவும் இல்லை என்றுதான் சட்ட வல்லுநர்கள் பலரும் திட்டவட்டமாகச் சொல்லுகிறார்கள்.

தேர்தல் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிற எதிர்க்கட்சிகளை சந்தேகம் கொள்ளச் செய்து, சோர்வடையச் செய்து, ஆளுங்கட்சி மட்டும் தேர்தல் பணிகளை மறைமுகமாகச் செய்வதற்காக தேர்தல் நடக்குமா? நடந்தாலும் செல்லுபடியாகுமா? என்ற அச்சத்தை இப்போது பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஏமாற்றுவித்தைக்கு நம்முடைய கழக உடன் பிறப்புகளும், தோழமைக் கட்சியின் செயல்வீரர்களும் செவிசாய்த்து அயர்ந்து விடத்தேவையில்லை. தொடர்ந்து தேர்தல் பணிகளை முடுக்கிவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுங்கட்சி, தனக்குள்ள பல்வேறு சங்கடங்களின் காரணமாக, இப்படியொரு கடைசி ஆயுதத்தைப் பயன்படுத்தப் பார்க்கிறது.

எந்த அணிக்கு எத்தனை இடங்கள் என்கின்ற கணக்கு மட்டுமல்ல! நமது தோழமை அணி அதிக இடங்களைப் பெற வேண்டுமென்பது மட்டுமல்ல! எப்படியாவது கிராமங்களில், பேரூர்களில், நகரங்களில், வார்டுகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்புக்கு வரவேண்டுமென்ற ஜனநாயகத்தின் வெற்றிக்காகவே உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தவேண்டுமென்று நமது அணியினர் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டோம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

நீண்டகாலக் கனவாக இருந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலை தமிழ்நாட்டு மக்கள் சந்திக்கும் வாய்ப்பு இப்போது ஏற்பட்டிருக்கும்போது, நிச்சயமாக நீதி, தலைகீழாக மாறி விட வாய்ப்பு இல்லை என்பதே எனது கணிப்பு!

தேர்தல் அறிவிக்கப்பட்டு, வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு, வேட்பாளர்களுக்குச் சின்னங்கள் ஒதுக்கப்பட்டு, ஒரு சில இடங்களில் பேரூராட்சித் தலைவர்கள் - நகராட்சி உறுப்பினர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில் பனிரெண்டாயிரத்துக்கு மேற்பட்ட ஊராட்சி மன்றத் தேர்தல்களை, 380க்கு மேற்பட்ட ஒன்றியத் தேர்தல்களை, 600க்கு மேற்பட்ட பேரூராட்சி தேர்தல்களை, சுமார் 100 நகராட்சித் தேர்தல்களை - அதற்கான பணிகள் அனைத்தும் பட்டி தொட்டிகள், பட்டினக்கரைகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, எந்தவொரு அதிர்ச்சியான தீர்ப்பையும் சுப்ரீம் கோர்ட் வழங்குவதற்கு அப்பீல் வழக்கின் அடிப்படையைப் பொறுத்து வாய்ப்பில்லை என்றே சட்ட வல்லுநர்கள் நம்பகமாகத் தெரிவிக்கிறார்கள்.

எனவே, சந்தேகமூட்டும் பிரச்சாரங்களுக்குச் சற்றும் இடம் தராமல், நமது தோழமைக்கட்சி அணியின் வேட்பாளர்களின் வெற்றிக்குத் துவளாது தொண்டாற்றிடுக என உன் போன்ற உடன்பிறப்புகள் அனைவரையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்

மு.க.

11-02-1986

1393. உன் ஒளி விழி காண ஓடி வருகிறேன்!

உடன்பிறப்பே,

இன்று முதல் மீண்டும் ஏழு நாட்கள் குமரி மாவட்டம் நாகர்கோயில் தொடங்கி, திருவண்ணாமலை வரையில் பல்வேறு கூட்டங்களில் உள்ளாட்சி மன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்காக வரும் நான் உன்னைச் சந்தித்து உன் ஒளிமுகம் காணும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.

முதற்கட்டமாக தஞ்சைத் தரணியில் பட்டுக்கோட்டையில் தொடங்கி - கடந்த ஏழாம் தேதி முதல் பதின்மூன்றாம் தேதி வரை, திருச்சி, தென்னாற்காடு, செங்கை அண்ணா மாவட்டங்களில் லட்சக்கணக்கில் திரண்டிருந்த தமிழ்ப் பெருங்குடி மக்களையும், உன் போன்ற எனது உயிரினுமேலான உடன்பிறப்புகளையும் சந்தித்ததில் - கருத்துகளைப் பரிமாறிக் கொண்டதில் - நான் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந்திருக்கிறேன்.

பாசமும், பற்றும், கொள்கைப்பிடிப்பும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடும் கொண்ட எண்ணற்ற வைரமணிகளுக்கிடையே, பதவியொன்றையே குறிக்கோளாகக் கொண்டு ஒளிந்து கொண்டிருந்த மிச்சம் மீதிக் கூழாங்கற்களையும் அடையாளம் கண்டுகொள்ள இந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல் நம்முடைய கழகத்திற்குப் பயன்பட்டிருக்கிறதென்றே நான் எண்ணி, மன ஆறுதல் பெறுகிறேன்.

கோட்டை, கொலு மண்டபம், ஆட்சி, அதிகாரம் இவைகளை மட்டும் எண்ணிக் கிடந்தால், ஆள்பலத்திலே ஒரு இயக்கம் வளர்ந்தால் போதும் எனக் கருதி கட்டுப்பாடற்ற, உருக்குலைந்த, ஒரு கட்சியை, உள்ளே ஆயிரம் நோய்களை வைத்துக் கொண்டு ஆள்மாத்திரம் ஆஜானுபாகுவாக இருப்பது போல சதைமலையாகக் காட்சிதந்து கொண்டிருக்கலாம்!

நாமோ, கோட்டை கொத்தளங்களை விடக் கொள்கையை உயர்வாக மதிப்பவர்கள்! அந்தக் கொள்கையில் கொண்ட உறுதிக்காகவே எமர்ஜென்சியை எதிர்த்து கோட்டை கொத்தளங்களை இழந்தவர்கள்! அப்படி இழந்தது குறித்துக் கவலைப்படாமல், உடலில் தைத்த வேலினை உருவியெடுத்து, களத்தில் உறுமிக் கொண்டு வந்த யானையை நோக்கி வீசியது போல - எதேச்சாதிகாரப் பிரகடனத்தை எதிர்த்து ஜனநாயகம் காப்பாற்றப்படப் போராடியவர்கள்! இன்னமும் போராடிக் கொண்டிருப்பவர்கள்!

அதனால்தான் குறிக்கோளை நோக்கி நடக்கும் போது - படுகுழி கண்டு பயந்து விடாமலும், பாயும் விலங்கினம் கண்டு பதுங்கி விடாமலும், பகை கண்டு மிரளாமலும், பக்கமிருந்தே முதுகில் குத்தும் துரோகம் கண்டு நிலைகுலைந்து போகாமலும் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு பயணத்தைத் தொடருகிறோம்!

பந்திகள் ஒன்றிரண்டு எனப் போடப்படும் விருந்துப்பந்தல் என்றால் யார் வேண்டுமோ அமர்ந்திட அனுமதிக்கப்படுவர் - தவறில்லை!

படைகள் அணிவகுக்கப் பயிற்சிதரும் வீரர்களின் பாசறைக்கூடமெனில் உள்ளத்தில் உறுதி வாய்ந்தோர் மட்டும்தானே அங்கீகரிக்கப்படுவர்!

அதனால்தான், எள் முனையளவும் கட்டுப்பாடற்ற தன்மை, கழகத்தில் தலைகாட்டக்கூடாது என்பதிலே கண்டிப்பாக இருக்க வேண்டியுள்ளது!

எத்தனையோ ஆண்டுக்காலம் பழகியவர் - அன்பு காட்டியவர் - என்றெல்லாம் கூடப் பாராமல், அவர் கழனியில் களையாகி விடும்போது களைந்தெறியத்தான் வேண்டி யிருக்கிறது; அதுதான் கடமையாகக் கூட இருக்கிறது. பயிர் காக்கும் பொறுப்பேற்றுள்ள உழவனுக்கு!

எடுத்தெறியப்பட்ட களைகள் வயலின் வரப்போரத்தில் காய்ந்து கருகி வாடிடும்போது - அதற்கெனக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் உலகிற்கு உண்டி கொடுக்கும் உழவன், தனது பொறுப்பினை ஒழுங்குற நிறைவேற்ற இயலாதல்லவா?

துரோக சக்திகள், சில நேரங்களில் அடிக்கும் காற்றின் வேகத்தில் உயரப்பறக்கும் சருகுகள், கோபுரக் கலசத்தில்போய்

ஒட்டிக் கொள்வதுபோல உயர்ந்துவிட்டதாகத் தோன்றவும் கூடும்! மாற்றாரிடம் மண்டியிடும் மன்னவனின் மணி முடியில் ஒரு மாணிக்கமாக இருப்பதைவிட, மானம் பெரிதெனக் களத்தில் மார்பிலே கணைதாங்கி மாண்டுகிடக்கும் வீரனது வாளின் ஒடிந்துவிட்ட கைப்பிடியாக விளங்குவது புகழுக்குரிய ஒன்றல்லவா?

இதனை மனத்திற்கொண்டு பணியாற்றும் இந்த இயக்கத்தின் இலட்சோபலட்சம் உடன்பிறப்புகளில் நானும் ஒருவனாக இருப்பதிலும் - அப்படியே இறுதிவரையிருந்து இறப்பதிலும்தானே எனக்குப் பெருமை!

சில நாட்களுக்கு முன்பு விழுப்புரத்திலிருந்து திண்டிவனம் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு வரும் வழியில் - கூட்டேரிப்பட்டியில் என்னை ஆவியற்ற கூடாக்க ஒருசிலர் கூட்டுச்சேர்ந்து வகுத்த திட்டம், அவர்கள் எதிர்பாராமல் தோல்வி அடைந்தது எனினும், தொடர் முயற்சியில் ஈடுபடவே செய்வர்! செய்கின்றனர்!

இளமைப்பருவத்தில் நான் திராவிடர் இயக்க மேடையேறும் போதே சொல்வேன், வரும் போதே வீட்டில் வாய்க்கரிசி வாங்கிப் போட்டுக் கொண்டுதான் வந்திருக்கிறேன் என்று!

நாகை மேடையில் ஒரு முறை கட்டாரியுடன் பாய்ந்தனர் - மயிலாடுதுறை மேடையில் ஒரு முறை கத்தியுடன் சூழ்ந்தனர் - புதுவையில் அடித்துத் துவைத்து உயிர் போய்விட்டது எனக்கருதி ஏமாந்து விட்டுவிட்டனர் - வண்டிப்பெரியார் எனும் ஊரில் உயிருக்குக் குறிவைத்தனர் - நெல்லை ராதாபுரத்தில், ஓடும் முயலை உளி கொண்டு கொன்று வீழ்த்தும் ஒரு திறமையாளனைப் பிடித்து நெற்றிக்கு நேராக உளிவீசச் செய்து உயிர்பறிக்க எண்ணினர் - இப்படி ஒன்றல்ல, இரண்டல்ல, செத்துச் செத்துப் பிழைத்தாலும் - அல்லது அவர்கள் முயற்சியில் ஜெயித்து, நான் செத்தே விட்டாலும், தமிழையும், தமிழ் இனத்தையும் சாகாமல் காத்திட, உடன்பிறப்பே - உன் போன்றோர் பலர் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

நமது குறிக்கோள், அய்யா காட்டிய வழி! அண்ணன் தந்த நெறி! அதனைக் காத்திடல் ஒன்றே நாம் பிறவி எடுத்த பயன்!

இடையில் வரும் தேர்தல்கள் ஜனநாயகக் கடமையாற்றிட!

அந்தக் கடமையிலும், என் கண்மணியே! கண்ணுறக்கம் கொள்ளாமல், களைப்புற்றுச் சோர்ந்திடாமல் - முறைவகுத்துப் பணிபுரிந்தால் பெற்றிடலாம் பெருவெற்றி!

ஓடிவருகிறேன்! உன்னைச் சந்திக்கிறேன்! ஒளி விழி காணுகிறேன்! உறுதியுடன் இருப்போம்! உயிரல்ல - கொள்கை பெரிதென உழைப்போம்!

அன்புடன்

மு.க.

15-02-1986

1394. மைதிலி படம் மட்டுமல்ல; ஒரு பாடம்!

உடன்பிறப்பே,

அழகு மகளிரைச் சிறைபிடித்து, ஆசை காட்டி, அவர்களின் உடலை மணிக்கணக்கில் வாடகைக்கு விட்டு, கொட்டுகின்ற பணத்தில் கோடீஸ்வரியாக வாழ்கிற ஒருத்தி!

மதுக் கிண்ணம் கையில் எப்போதும்! மயக்கு மொழியோ நாவில் நர்த்தனமாடும்! மஞ்சம் விரும்பி வருகின்ற மைனர்களுக்கெல்லாம் பொருள் பெற்றுப் போதையேற்றி, போகவிருந்தும் பல்சுவையுடனே அளித்து இன்பக் கடலில் மிதக்க விட்டுக் கொண்டிருக்கிறாள் தனது வாழ்க்கைப் படகை!

அவளிடம் சிக்குகிறது ஒரு கிளி! அந்தக் கிளியை ருசி பார்க்க பூனைகள், மனித உருவில் அணிவகுக்கின்றன!

அந்தக் கிளிக்குப் பெயர் மைதிலி! கவிதை எழுதும் - கட்டுரை தீட்டும் - கதைகள் வடிக்கும் - சமுதாயச் சீர்கேடுகளைச் சாடும் - அத்தகைய அறிவுக்கிளியின் அழகைப்பருக எத்தனை பணப்பேழைகளைக் கொண்டுவந்து பாதங்களில் காணிக்கையாகக் குவிக்கவும் குபேரர்கள் துடித்துக்கிடந்தனர்!

மைதிலி எனும் அந்தக் கிளியோ, மானமொன்றே நல்வாழ்வெனக்கொண்டு வாழ்வதென்றும் - அதற்கு இவ்வுலகில் இடமில்லையெனில் இறந்து போய்த் தொலைவ தென்றும் முடிவு கட்டிக்கொண்டு, ஒவ்வொரு நாளும் தனக்கு எதிராகத் தூண்டப்படும் அநியாயச் சேட்டைகளைப் பலங்கொண்ட மட்டும் எதிர்த்துப் போராடியது.

மைதிலி எங்கும் தப்பி ஓடிவிடாமல் இருக்க ஒரு குண்டன் நியமிக்கப்பட்டிருக்கிறான். கற்பை இழக்கமாட்டேன் என்று மைதிலி போராடும் பொழுதெல்லாம் கசையடிகள்தான்!

மென்மையான அந்த மேனியில் ரத்தக்கோடுகள். இது நித்திய பூஜையாகிவிட்டது!

ஜனநாயகத்தை இழந்து, எமர்ஜன்சியை ஏற்க முடியாது எனக்குரல் கொடுத்த போது நம்முடைய கழகத்தின் மீது ஏவப்பட்ட கணைகள் - அடுக்குமுறைகள் - இழிமொழிகள் - கசையடிகள் - சோதனைகள் - வழக்குகள் - இவைகள் தான் நினைவுக்கு வந்தன மைதிலியை அந்தக் குண்டன் கொடுங்கண்களுடன் சவுக்கால் அடித்துப் புரட்டும்போது!

எதையும் தாங்கிக் கொண்டு ஜனநாயகம் காத்திட்ட நம்முடைய கழகத்தைப் போல் மைதிலியும் - அத்துணைச் சவுக்கடிகளையும் அந்தக் கயவன் தந்திடத் தந்திடத் தன் நிலைமாறாமல் கற்பு காத்திட கடைசி வரைப் போராடுகிறாள்.

இயக்குநர் - இனியதம்பி ராஜேந்தரின் திறமைக்கோர் எடுத்துக்காட்டாக வெளி வந்து, தமிழ் மக்களின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்று வெற்றி நடைபோடும் மைதிலி என்னைக் காதலி என்ற படத்தில் வரும் சில காட்சிகளைத்தான் குறிப்பிட்டிருக்கிறேன்.

வெறி கொண்ட கயவனிடம் அந்த வெள்ளி மயில் சிக்கிக்கொண்டு படும்பாட்டையும் - துண்டம் துண்டமாகத் தன்னை வெட்டிப் போட்டாலும் தூய்மை இழக்கமாட்டேன், தோல் வாணிபம் நடத்திட ஒப்பமாட்டேன் என மைதிலி காட்டும் உறுதிப்பாட்டையும் படத்தில் கண்டபோது, கொள்கையினை இழந்து கோட்டை உச்சியில் அமரமாட்டோம் என இன்னமும் குன்றமென நிமிர்ந்து நிற்கிற உன் போன்ற உடன்பிறப்புகளே என் கண்முன்னால் தெரிந்தீர்கள்! இப்போதும் தெரிகிறீர்கள்!

அந்த உறுதி வாய்ந்த உடன்பிறப்புகள் இப்போது உள்ளாட்சி மன்றத் தேர்தல் களத்தில் நிற்கும் நேரம்!

சாராய சாம்ராஜ்யத்தின் மலையெனக் குவிந்து கிடக்கும் கப்பப் பணத்தைப் படைக்கலனாகக் கொண்டு ஆளுங்கட்சி, களத்தில் நுழைகிறது!

நாமோ, எங்கே தேடுவேன் பணத்தை? என்று ஒரு படத்தில் கலைவாணர் பாடியது போல பாடிக் கொண்டு பஞ்சாயத்துத் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளோம்!

எனினும் தம்பி ராஜேந்தர் படத்தில் நான் கண்ட ஒரு காட்சி எனக்குத் தெம்பூட்டுகிறது! நம்பிக்கையூட்டுகிறது!

குடிவெறியில் ஒரு சீமான், கோமளவல்லியாம் மைதிலியை வற்புறுத்தி வளைக்க வருகிறான். படங்களில் வழக்கமாக வருகிற பலாத்கார சீன் அல்ல!

அவனோ குடிகார வெறியன்! அவளோ ஆடற் கலையரசி!

ஆணையும், பெண்ணையும் காட்டி - அணைத்து, இழுத்து, அவிழ்த்து - கற்பழிப்புக் காட்சியை விளக்கிடவில்லை இயக்குநர்!

தரையில் ஒரு மதுப்புட்டி, ஒரு சதங்கையின் மீது விழுகிறது! சதங்கையும், மதுப்புட்டியும் போராடுகின்றன! இறுதியில் மதுப்புட்டி உடைந்து நொறுங்குகிறது! சதங்கை வெல்கிறது!

அருமையான கற்பனையென்று அன்புத் தம்பியை அணைத்துக்கொண்டேன். படம் பார்த்துக் கொண்டிருந்த போதே!

அந்தக் காட்சியை அப்படியே உவமையாக்கி, உள்ளாட்சித் தேர்தல் களத்தை உற்று நோக்கு!

கால் சதங்கை ஒலிக்கும்!
கழகமும் கொள்கைகளை ஒலிக்கும்!
மதுப்புட்டி சதங்கையை வீழ்த்திட வரும்!

ஆம்! சாராய சாம்ராஜ்யம், கழகத்தை வீழ்த்திடவும், கழகத்தின் தோழமை அணியினை வீழ்த்திடவும் வீறு கொண்டு எழும்!

மைதிலி என்னைக் காதலி படத்தில், கற்பிழக்காத கன்னியாக, மைதிலி என்பாள், சாராயப் புட்டியைச் சாய்த்து உடைத்து விரட்டுகிறாள்!

அதே காட்சிதான் இப்போதும்! இந்தத் தேர்தல் களத்தில்!

உடன்பிறப்பே! உறுதியுடன் போராடு! அப்படிப் போராடினால் - துணிவுடன் எதிர்த்து நின்றால் - தூய்மை நிலைக்கும்! தீமை தீய்ந்து போகும்!

தீரமிகு உடன்பிறப்பே! எங்கே பார்க்கலாம் உன் திறமையை!

அன்புடன்

மு.க.

16-02-1986

1395. அடக்கமுடன் செயல்படுவோம்! அநீதியை புறங்காண்போம்!

உடன்பிறப்பே,

அடக்கமும், பொறுப்பை உணர்ந்து செயலாற்றும் ஆர்வமும், அணுவளவுகூட நேர்மை தவறாத நிர்வாகமும், வேண்டியவர், வேண்டாதவர் என விருப்பு, வெறுப்பு காட்டாத கண்டிப்பும், எம்கடன் பணி செய்து கிடப்பதே என்ற தியாக உள்ளத்துடன் எளியமுறை வாழ்வும், இனிய இயல்பும் கொண்டு மக்கள் பிரச்சினைகளை உடனுக்குடன் அணுகி, தீர்த்து வைக்கக்கூடிய துடிப்பும் கொண்டு தொண்டாற்றிடுவீர் என்று உள்ளாட்சிமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள நம்முடைய கழகத்தின் நகராட்சித் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள் அந்தந்த அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவரையும் மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறேன்.

பிறந்த வீட்டுக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் புகுந்தவீட்டில் நடந்து கொள்ளம்மா! மாமியாரும், மருமகளும் தாயும், பெண்ணும்போல பாசமுடன் பழகுகிறார்கள் என்று பெயர் எடுக்கவேண்டும்! இப்படியல்லவா கணவன், மனைவியிருக்க வேண்டுமென்று ஊரார் புகழ, அதுகேட்டு உன்னைப்பெற்ற நாங்கள் பூரித்துப் போகவேண்டும்! பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய குடும்ப விளக்கு இல்லறக் காவியத்தில் வரும் இல்லத்தரசிக்கு ஒப்பானவள் இவள் என்று உற்றார், உறவினர் உன்னைப் பாராட்டினால் உன்னைப்பெற்று வளர்த்ததற்கு நாங்கள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்காதம்மா!

கணவன் வீட்டுக்குச் செல்லும் காரிகை, காலில் விழுந்து பெற்றோரிடமும், உடன்பிறந்தோரிடமும் வாழ்த்துப் பெறும்போது, அவளைக் கட்டியணைத்து, முத்தமீந்து தாயும் தந்தையும் இப்படித்தானே அறிவுரை கூறுவர்!

நல்ல பெண் என்று பெயரெடுத்திடு என்பதால், இதுவரை அவள் கெட்ட பெண்ணாக இருந்தாள் என்று கற்பனை செய்து கொள்வோர் அமைச்சர்களாகவே இருப்பினும், அவர்கள் குன்றிமணியளவைக் காட்டிலும் குறைவான உள்ளம் கொண்ட குதர்க்கவாதிகளாகவே கருதப்படுவர்!

இல்வாழ்க்கையில் இணைவோர் இருவரும் காத்திட வேண்டிய கற்புநெறி, போற்றிட வேண்டிய கடமையுணர்வு, இவற்றைப் போலவே அரசியல் வாழ்க்கையிலும் பொறுப்பில் அமரும் இடம், கோலோச்சுகிற கோட்டையாக இருப்பினும் - அல்லது குப்பைக் கூளங்களை அகற்றியும் - குடிதண்ணீர் அளித்திடவுமான மக்களின் அன்றாடத் தேவைகளுடன் ஒன்றிக் கலந்துள்ள பணிகளை ஆற்றிடும் ஊராட்சி, நகராட்சி அலுவலகங்களாக இருப்பினும் - அல்லது பொறுப்பில் அமரும் வாய்ப்பு அமைந்திடாத நிலையில் பொதுப்பணியாற்றிடும் இடமாக இருப்பினும் - நேர்மை, ஒழுங்கு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் கற்பு நெறிதனை கண்ணே போல் கண்ணின் ஒளியே போல் காத்திடல் வேண்டும்.

அன்பும் பாசமும் நிறைந்த வாழ்த்துகளுடனும் - அஃதே போல பொறுப்பை உணர்த்தி வழங்கும் அறிவுரைகளுடனும் - உள்ளாட்சி மன்றங்களில் கடமையாற்றிடச் சென்றிடும் கழகத்தின் உடன்பிறப்புகள், ஆங்காங்கு நமது தோழமைக் கட்சியினரின் தூயதுணை கொண்டும், மாற்று முகாமில் இருப்போராயினும், மக்களின் நலனுக்கேற்ற நற்கருத்துகள் எங்கிருந்து கிடைப்பினும், அவற்றையும் கூடிக் கலந்து பேசி, தக்கதை ஏற்று - தகாதன விலக்கி - அவர்தம் ஒத்துழைப்பைப் பெற்றும், ஊர்நலம், நகர் நலம், நாட்டு நலம் இவற்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட வேண்டுகிறேன்!

வெற்றி பெற்றதையொட்டி நடைபெறும் பாராட்டு விழாக்கள் - மாநில அளவில் திருச்சி நகரில் நடைபெறுவது போல, மாவட்ட அளவிலும், ஆங்காங்கு நகர், ஒன்றிய அளவில் ஒருமுறை நடந்தாலே போதும் - வெற்றிவிழா, பாராட்டுவிழா என்று தொடர்ந்து அதேவேலையாகக் கழக அமைப்புகள் கவனம் செலுத்திடவேண்டாம் எனக் கனிவுடனும், சற்றுக் கண்டிப்புடனும் தெரிவித்துக் கொள்கிறேன்!

உன்போன்ற உடன்பிறப்புகளின் ஆர்வம் எனக்குப் புரிகிறது! ஆனால் ஆரவாரமும் ஆடம்பரமும், நிறைந்த அரசியல், கட்சிக்கு வேண்டுமானால் விளம்பரம் தரலாமே தவிர - எழுச்சியும், எண்ணத்தில் உறுதியும் கொண்ட எளியமுறை விழாக்கள் மட்டுமே, என்றென்றும் மக்கள் நெஞ்சத்தில் நம்மை நிலையாகப் பதியவைக்கக் கூடியவை!

தியாகம், உழைப்பு, தொண்டு இவைகளுக்கு எடுப்பதுதான் திருவிழாவே தவிர, மாறிமாறி வரக்கூடிய பதவிகளுக்காக எடுக்கக்கூடிய பகட்டு விழாக்களில் பளபளப்புதான் மிஞ்சும்! நமது கொள்கை, குறிக்கோள் நிறைவேறுமளவுக்குப் பயன்கிட்டாது!

நானும், நமது பொதுச்செயலாளர் பேராசிரியரும் எங்களைச் சந்தித்து வாழ்த்துப்பெற வந்த நகராட்சி, பேரூராட்சி, ஒன்றியத் தலைவர்களிடம் - ஓராண்டு காலத்திற்கு நகராட்சி வரவேற்புகள், அது இது என்று எதற்கும் அழைக்காதீர்கள்! அவற்றையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு, பத்தாண்டு காலமாகப் பாழ்பட்டுக் கிடக்கும் உள்ளாட்சி மன்றங்களின் நிர்வாக அமைப்பை பழுது பார்த்து, வீதிகள், தெருக்கள் செம்மையுறவும் - விளக்குகள் தொடர்ந்து எரியவும் - குப்பைகள் அகற்றப்படவும் - குடிநீர் கிடைத்திடவும் - இன்னோரன்ன மக்களின் தேவைகளையறிந்து, முறையீடுகளைக் கவனித்து, முறையாகச் செயல்படுங்கள் எனக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

உடன்பிறப்பே, ஆம்! உன் சார்பாகத்தான் இந்த அறிவுரைகள்! வேண்டுகோள்கள்!

என்னைச் சந்தித்த ஆங்கில வார இதழ் நிருபர்களும், தமிழ் வார இதழ் நண்பர்களும் கூட ஏ அப்பா! எத்தனை சோதனைகள், தோல்விகள், எதிர்ப்புகள், இவற்றையெல்லாம் தனித்து நின்று - சிறிதும் சோர்வடையாமல் தொடர்ந்து விடாமுயற்சியுடன் உழைத்து, தொண்டர்களை ஊக்கப்படுத்தி, இப்படியொரு திருப்பத்தை வெற்றிகரமாக உருவாக்கியிருக்கிறீர்கள் என்று புகழுரை கூறினர்! நான் அவர்களிடமும் சொன்னேன்! இப்போதும் சொல்கிறேன்! எப்போதும் சொல்வேன் - சொல்லியும் இருக்கிறேன்! உன் போன்ற உடன்பிறப்புகள் தொடர்ந்து தருகின்ற உழைப்பும் - சோர்வின்றிப் பீடுநடை போட்டு அளிக்கின்ற உற்சாகமும்தான் இந்தக் கழகத்தின் கட்டுக் குலையாத் தன்மையென்பதை!

இதை யார்தான் மறுக்க முடியும்? நெருப்புமிழ்ந்த நெருக்கடி காலக் கொடுமையை நிமிர்ந்து நின்று கழகம் தாங்கிக் கொண்டதென்றால், என்னைச் சுற்றிப் புயல் காற்று மழையெனக் கணைகள் தொடுக்கப்பட்டதை நான் புன்முறுவலுடன் தாங்கிக் கொண்டேன் என்றால், இப்போதும் ஆளுந்தரப்பில் உள்ள அமைச்சர் பெருமக்கள் அக்கினியாஸ்திரங்களைப் பூட்டி அறைகூவல் விடுத்த வண்ணமிருக்க அதனையும் தாங்கிக் கொள்கிறேன் என்றால், தாங்கும் கவசமாக இருப்பது - என் தங்கம் நிகர் கழகக் கண்மணியே நீயல்லவோ?

உன் விழியின் ஒளிதரும் வீரமும், உன் தூய அன்பின் பாசம் தரும் துணிவும், என்னைக் களைப்பின்றிப் பயணம் செய்ய வைக்கின்றன.

கழக அரணைக் காத்திட நீயன்றோ கண்ணீரையும், செந்நீரையும் கலந்து அகழி உருவாக்கினாய்!

நீ பெற்ற வெற்றியல்லவோ இது! நீ திரட்டிய வலிவல்லவோ இந்த வெற்றிக்கு முழு முதற் காரணம்!

எனவே உன்நெஞ்சம் மகிழுமளவுக்கு - நீ வேங்கையென நிமிர்ந்து வீதிகளில் நடமாடுமளவுக்கு - உன் உழைப்பால் வெற்றி பெற்ற நமது உடன்பிறப்புகள், ஏற்றுள்ள பொறுப்புக்குப் புகழ் சேர்க்கத் தவற மாட்டார்கள்!

தேர்தல்கள் வரும் போகும்! வெற்றி தோல்விகள் மாறி மாறி அமையும்! ஆனால் அரசியல் நாகரிகம், பண்பாடு, கொண்ட கொள்கை, ஏற்றுக் கொண்ட இலட்சியம் - இவற்றின் வாயிலாக ஒரு சமத்துவ - சமதர்ம - பகுத்தறிவுச் சமுதாயத்தை உருவாக்கவும், தமிழினம் பாதுகாக்கப்படவும் மாநிலங்கள் சுயமரியாதையுடன் உரிமைகளைப் பெற்றுத் திகழவும், எல்லா மட்டங்களிலும் நேர்மையும், நெறிபிறழாத் தன்மையும் தலை தூக்கி நிற்கவும் எதையும் தாங்கும் இதயம் வேண்டுமடா தம்பி! என்றுரைத்த அண்ணாவின் பொன்மொழியை நினைவில் பதித்து பொதுப்பணி ஆற்றிடுவோம்! மேலும் பல வெற்றிகளைக் குவித்திடுவோம்!

அடக்கமுடன் செயல்படுவோம்!
அநீதிகளைப் புறங்காண்போம்!

அன்புடன்

மு.க.

01-03-1986

1396. கோட்டையில் கோமாளிக்கூத்து! இது நாட்டின் தலை எழுத்து!

உடன்பிறப்பே,

எதிர்க்கட்சிகள் இடைவிடாது கொடுத்த போராட்டக் குரலின் காரணமாக, எத்தனையோ சாக்குப் போக்குகளைச் சொல்லி - ஒவ்வொரு முறையும் ஒத்தி வைக்கப்பட்ட உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடந்து முடிந்து இன்று மார்ச் மூன்றாம் நாள், வெற்றி பெற்றவர்கள் பதவிப் பொறுப்புகளை ஏற்க இருக்கிறார்கள்.

பொறுப்பு ஏற்கும் அனைவர்க்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், மக்களின் குறைகளைக் கேட்டு, அது குறித்து ஆக்கபூர்மான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் நகரங்களிலும், கிராமங்களிலும், பேரூர்களிலும் இருந்த ஜனநாயக அமைப்புகள் 1976ஆம் ஆண்டு கவர்னர் ஆட்சியிலும், அதன் பின்னர் எம்.ஜி.ஆர். ஆட்சியிலும் கலைக்கப்பட்டு - சுமார் பத்தாண்டு காலமாக அதிகாரிகளின் ஆட்சியே நடைபெற்ற நிலை, இன்று முதல் மாறுகிறது என்பதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

மாநகரங்களான சென்னை, கோவை, மதுரை ஆகியவற்றிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்கும் காலம் விரைவில் வந்தாக வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இன்று பொறுப்பேற்கும் அனைவரையும் வாழ்த்துகிறேன் என்கிற போது - கட்சிகளின் சார்பில் நகர, ஒன்றிய, பேரூராட்சித் தலைவர்கள் கட்சிச் சின்னங்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தபோதிலும் - அவ்வாறே அந்தந்தக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் சுயேச்சைச் சின்னங்களில் வெற்றி பெற்றிருந்தபோதிலும், இனி பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு செயலாற்றும் போது கட்சிகளுக்கு அப்பாற்பட்டு மக்கள் பணி

ஆற்றிட வேண்டும் என்ற கருத்தையும் உள்ளடக்கித்தான் இந்த வாழ்த்து என்பதைக் குறிப்பிடுவது எனது கடமையாகும்.

தி.மு.கழகம் நகராட்சிகளிலும், ஒன்றியங்களிலும், பேரூராட்சிகளிலும் நமது தோழமைக்கட்சிகளின் ஆதரவுடன் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றிருக்கிறது.

கழக ஆதரவுடன், நமது தோழமைக் கட்சிகளும் கணிசமான இடங்களைப் பெற்றுள்ளன.

அ.தி.மு.க.வுக்கு எத்தனை இடங்கள்? காங்கிரசுக்கு எத்தனை இடங்கள்? என்பதைத் தமிழ்நாளேடுகளும் - ஆங்கில நாளேடுகளும் புள்ளிவிபரங்களுடன் வெளியிட்டு, தி.மு.க.வுக்கும் தோழமைக் கட்சிகளுக்கும் கிடைத்துள்ள வெற்றி குறித்துப் பாராட்டுத் தலையங்கங்களும் எழுதிவிட்டபிறகு அதுகுறித்த சர்ச்சைகள், வாதப்பிரதிவாதங்கள் தேவையற்றனவாகி விட்டன என்பதும் தெளிவு!

அ.தி.மு.க.வின் தோல்விக்கான காரணங்களை - அமைச்சர்கள், ஆளுக்கொரு விதமாகக் கூறிக்கொண்டிருக் கின்றனர் - அதாவது தோல்வி ஏற்பட்டுள்ளதை அவர்களால் மறைக்க முடியாத நிலைக்குச் சான்றாக!

இது அரசியல் ரீதியான தேர்தல் அல்ல என்பது அ.தி.மு.க. சார்பில் இப்போது எடுத்து வைக்கப்படும் வாதம்!

உதயசூரியன், அரிவாள் சுத்தி நட்சத்திரம், கதிர் அரிவாள், ஏர்உழவன், இலை, கை என்றெல்லாம் கட்சிச் சின்னங்களில் தேர்தல் நடைபெற்ற பிறகு, இது அரசியல் ரீதியான தேர்தல் அல்ல என்பது ஏற்றுக் கொள்ள முடியாத கூற்று!

எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், கருணாநிதிக்கும் நடந்த போட்டியல்ல இது! என்று இப்போது அ.தி.மு.க. அமைச்சர்கள் ஒரே மாதிரி கோஷ்டி கானம் பாடுகிறார்கள்!

கொள்கைகளுக்கிடையே, பிரச்சினைகளுக்கிடையே - கருத்து மாறுபாடுகளுக்கிடையே - அரசியல் ரீதியான போட்டிகள்தான் இருக்க வேண்டுமே தவிர, தனிப்பட்ட இருவரின் மோதுதல் என்ற அளவில் அரசியல் அரங்கம் அமையக்கூடாது என்பதிலே எனக்கும், நம்முடைய அணியினர்க்கும் எப்போதும் அழுத்தமான கருத்து உண்டு! ஆனால் அதற்குமாறாக, கருணாநிதி அரசியலை விட்டு விலகுவாரா? என்றும் - கருணாநிதியின் கணக்குத் தீர்க்கப்படும்

என்றும், கருணாநிதிக்கு கல்லறை கட்டப்படும் என்றும் தொடர்ந்து பேசியவர்கள் அ.தி.மு.க. அமைச்சர்கள் தானே!

கருணாநிதி அரசியலைவிட்டு விலகுவாரா? என்று எத்தனை பத்திரிகைகளில், எத்தனை நாள், எத்தனை லட்சரூபாய் செலவில் அ.தி.மு.க.வின் தலைமை நிலையத்தினர் விளம்பரம் செய்தனர் என்பதை நாடறியுமே!

அப்படி விளம்பரம் செய்தவர்கள், இப்போது, இந்தத் தேர்தல் முடிவு அரசியல் ரீதியானது அல்ல - கருணாநிதியுடன் எம்.ஜி.ஆருக்குப் போட்டியில்லை - என்று அறிக்கை வெளியிட்ட காரணத்தினால்தான், தி.மு.கழகத் தலைமை நிலையத்தின் சார்பில், தேர்தல் முடிந்தபிறகு - அ.தி.மு.க.வின் பழைய விளம்பரத்தைச் சுட்டிக்காட்டிப் பதில் விளம்பரம் ஒன்று தந்து, முன்னுக்குப்பின் முரணாகப் பேசுகிற அ.தி.மு.க. அமைச்சர்களின் முகமூடியை விலக்கிக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது!

அதே வேளையில், பத்திரிகாதர்மம் பேசுகிற நண்பர்களுக்கு ஒரு செய்தியை நான் சொல்லாமல் இருக்க முடியாது.

அ.தி.மு.க. சார்பில் தேர்தலுக்கு முன்பு வெளியிடப்பட்ட விளம்பரத்தை பிரசுரித்த தினமணி போன்ற ஏடுகள், தி.மு.க. தலைமை நிலையம் இப்போது தந்த விளக்கமுரைக்கும் விளம்பரத்தையும் வெளியிடத் தயங்கவில்லை. வெளியிட்டார்கள் நன்றி!

ஆனால், அ.தி.மு.க. விளம்பரங்களை, தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் வெளியிட்ட தினத்தந்தி ஏடுமட்டும், தி.மு.க. தலைமை நிலையத்தின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட விளம்பரத்தை வெளியிட முடியாது எனக்கூறி மறுத்துவிட்டது!

அதில் ஒன்றும் எனக்கு வருத்தமில்லை - தினத்தந்தி ஏடு தன்னை அடையாளங்காட்டிக் கொண்டது குறித்து எனக்கு மகிழ்ச்சிதான்!

தினமணி, தினகரன், முரசொலி, மாலைமுரசு ஆகிய இதழ்களுக்கு விளக்கமுரைக்கும் விளம்பரம் வழங்கிய தி.மு.க. தலைமை, தினத்தந்தி இதழுக்கு ஏன் அந்த விளம்பரம் தரவில்லையென்று யாரும் தவறாகக் கருதி விடக்கூடாதல்லவா? அதனால்தான் அவர்கள் அந்த விளம்பரத்தை வெளியிட மறுத்து விட்ட உண்மையைச் சொல்ல வேண்டியதாயிற்று!

ஆளுங்கட்சி ஆதரவு ஏடாக ஒரு பத்திரிகை இருப்பது ஒன்றும் தவறில்லை! ஆனால் அதற்காகத் தவறான தகவல்களை வேண்டுமென்றே திட்டமிட்டுத் தந்து திசை திருப்பக் கூடாது என்பதே எனது பணிவான வேண்டுகோள்!

இதோ 2.3.86 தினத்தந்தி சென்னை பதிப்பில் கூட, 15 ஆண்டுகளாக நகர சபைகள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவை தனி அதிகாரிகளின் பொறுப்பில் இயங்கி வந்தன என்று முதல் பக்கத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

1976 இல் பிரகடனப்படுத்தப்பட்ட கவர்னர் ஆட்சியும், 1977 இல் ஆட்சிக்கு வந்த எம்.ஜி.ஆர். அவர்களும்தான் இந்த உள்ளாட்சி மன்றங்களையெல்லாம் கலைத்துத் தனி அதிகாரிகள் பொறுப்பில் அவை நடக்கத் தொடங்கின!

பதினைந்து ஆண்டுகளாகத் தனி அதிகாரிகள் பொறுப்பில் இருந்தன என்பது தி.மு.க. ஆட்சியையும் சேர்த்துக் குறைசொல்வதற்காக இட்டுக் கட்டப்படும் கற்பனை!

1969-1970ஆம் ஆண்டுகளில் கழக ஆட்சியில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்று 1976 வரையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் அந்த மன்றங்களில் பணியாற்றினர் என்பதே உண்மை!

அண்ணா படத்தையும், எம்.ஜி.ஆர். படத்தையும் வைத்து, என்னை அரசியலைவிட்டு விலகுகிறாயா? என்று கேட்டவர்கள் - அந்த விளம்பரத்தில் அண்ணா படத்தையும் இணைத்து, அண்ணாவின் அரசியல் பண்பாட்டுக்குக் களங்கம் கற்பித்திருக்க வேண்டியதில்லை!

அ.தி.மு.க. தலைமையின் சார்பில் அடுத்து வெளிவந்த விளம்பரங்களில், அன்னை இந்திரா, பிரதமர் ராஜீவ் காந்தி ஆகியோரின் படங்களையும் இணைத்து, என்னை அரசியலைவிட்டு விலகுகிறாயா? என்று கேட்டபோது - அது குறித்துக் காங்கிரஸ் தலைவர்கள் கூடத் தங்கள் எதிர்ப்பையோ, கண்டனத்தையோ தெரிவிக்காவிட்டால் கூட, கசப்பைக் கூடக் காட்டி ஒரு அறிக்கை வெளியிடவில்லையே என்பதில் எனக்குச் சற்று வருத்தம்தான்!

கடுமையான கருத்து மோதுதல் காங்கிரஸ் கட்சியுடன் இருந்த போது கூட, திருமதி இந்திரா காந்தி அவர்கள், என்னை அரசியலை

விட்டு விலகுகிறாயா? என்று நிபந்தனை எதுவும் விதிக்கவில்லை! ஆட்சியைத்தான் கலைத்தார்கள்!

இப்போதுள்ள பிரதமர் ராஜீவ் அவர்களும், இந்திய ஒருமைப்பாட்டுக் குழுவில் என்னையும் ஒரு உறுப்பினராக அறிவித்து, எனக்கு அது குறித்துக் கடிதமும் அனுப்பியுள்ளார். எனக்கென ஒரு அரசியல் கருத்து இருப்பதை ஏற்றுக்கொண்டு!

நான் அரசியலில் இருப்பதே கூடாது என இந்திரா காங்கிரஸ் கட்சியில் உள்ள தலைவர்கள் யாரும் நினைக்கக் கூட மாட்டார்கள்! அவ்வளவு பண்பாடற்றோர் அல்ல அவர்கள்!

ஆனால் அவர்களின் தலைவர்களான அன்னை இந்திரா, பிரதமர் ராஜீவ் ஆகியோர் படங்களுடன் அ.தி.மு.க. தலைமை நிலையம், கருணாநிதி அரசியலை விட்டு விலகுவாரா? என விளம்பரம் வெளியிட்டதை, ஒரு தேர்தல் உடன்பாட்டுக்குச் சகித்துக் கொண்டார்களே என்பதற்காக நான் வேதனைப்படுகிறேன்!

எம்.ஜி.ஆர். மதுக்கடைகளைத் திறக்கமாட்டேன் என மாதாவின் மீது சத்தியம் செய்வாராம் - பிறகு கடைகளைத் திறந்து சாராய சாம்ராஜ்யத்தை உருவாக்குவாராம் - 1985 செப்டம்பர் 15 இல் மீண்டும் மதுவிலக்கு என்பாராம் - ஆனால் அப்படிச் சொன்னதை அவரே மறந்துவிடுவாராம். இப்போது மீண்டும் மதுவிலக்கு கொண்டு வந்தால் கருணாநிதி அரசியலை விட்டு விலகுவாரா? என்று நிபந்தனை விதித்து விளம்பரம் செய்வாராம்!

கோட்டையில் இப்படியொரு கோமாளிக் கூத்து! இதற்கு நாகரிக அரசியல்வாதிகள் சிலரும் துணை போவதுதான் நாட்டின் தலை எழுத்து!

அன்புடன்

மு.க.

03-03-1986

1397. கொதிப்பது உலையல்ல; எரிமலை!

உடன்பிறப்பே,

1983ஆம் ஆண்டு இலங்கையில் தமிழ் இனப்படு கொலையைத் திட்டமிட்டு நடத்திட சிங்கள ராணுவம் முடுக்கி விடப்பட்டபோதே - சிறையில் அடைக்கப்பட்டிருந்த தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் போன்ற விடுதலை இயக்கத் தளபதிகளும், அவர்களுடன் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஈழவிடுதலைப் போராளிகளும் மிகக் கொடூரமாகத் துன்புறுத்தப்பட்டு, சிறைக் கொட்டடிகளுக்குள்ளேயே கொலை செய்யப்பட்டபோதே ஈவு இரக்கமற்ற சிங்களக் காடையர்களுடன் இனி இலங்கைத் தமிழினம் சேர்ந்து வாழும் பேச்சுக்கே இடமில்லையென்று தெரிவித்து, இலங்கைத் தமிழ் இனத்தைக் காத்திட விரைந்து நடவடிக்கைகள் தொடங்கிடுக எனத் தாய்த்தமிழக மக்கள், இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டனர்.

தங்கள் கோரிக்கையை, இந்திய அரசு, ஏற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழக மக்களின் ஒருமித்தகுரல் எழுப்பப்பட்டது.

எத்தனையோ போராட்டங்கள் தமிழகத்தில் - இளந்தமிழர் பலர் தீக்குளித்து மாண்டனர் - எதையும் தாங்கிக்கொள்ளத் தயார்! இலங்கைத் தமிழ் இனம் பாதுகாக்கப்பட்டு உரிமை கொண்ட வாழ்வு பெற்றுத் திகழ்ந்தால் போதுமென இங்குள்ள ஐந்துகோடித் தமிழர்களேயன்னியில், உலகப்பந்தின் பல பகுதிகளில் வாழும் தமிழர்களும் சூளுரைத்தனர்.

வட்டமேசை மாநாடு - திம்பு பேச்சுவார்த்தை - பார்த்தசாரதி, பண்டாரி தூது - என்றெல்லாம் இந்திய அரசு, நம்பிக்கை வெளிச்சத்தை நமக்குக் காட்டியபோதெல்லாம் அந்த வெளிச்சத்துக்குப் பின்னாலிருந்த இருட்டில் ஒளிந்து கொண்டு, இலங்கை அரசு, இந்த மூன்றாண்டு காலத்தில் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளவும், வெளிநாட்டு ஒத்துழைப்பை

நாடித்தேடிக் கொள்ளவும், ராணுவ தளவாடங்களைச் சேகரித்துக் கொள்ளவும் அவகாசம் எடுத்துக் கொண்டதே தவிர, இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுகண்டு இலங்கைத் தமிழ் இனத்தை வாழவைக்க முன்வரவில்லை. அந்த இனத்தின் அணுவளவு வலிவு இருந்தால் கூட, எதிர்காலத்தில் சிங்களவர் ஆதிக்க வெறிக்கு விபத்து ஏற்படுமெனக்கருதி, தமிழ் இனத்தையே அறவே அழித்துவிட முடிந்த முடிவான திட்டம் தீட்டப்பட்டுவிட்டதாகவே தெளிவாகத் தெரிகிறது!

தமிழ்ஈழவிடுதலை வீரர்களைத் தரைப்படைகளான காலாட்படை, டாங்கிப்படை, குதிரைப்படை இவைகளால் மட்டுமல்ல - கப்பற்படையினாலும் எதிர்த்து நிற்க முடியாத சிங்கள அரசு, இப்போது விமானங்களின் மூலம் அப்பாவித்தமிழ் மக்கள் வாழுமிடங்களில் குண்டுகளைப் பொழிந்து, தமிழர் பிணங்களைக் குவியல் குவியலாக அடுக்கிக் காட்டுகிறது.

சுமார் மூன்றாண்டு காலம் பேச்சுவார்த்தையிலேயே இந்திய அரசு, பொழுதைக் கழித்து விட்டதால் - இலங்கை, இஸ்ரேல் உதவியைப் பெற்று, ராணுவத்திற்கு நவீனப் பயிற்சிகளைப்பெற வாய்ப்பு கிடைத்தது! பாகிஸ்தான், அமெரிக்க நாட்டின்மூலம் பெறுகிற ஆயுதங்களை இலங்கை அரசுக்கு வழங்குகிற நிலையும் ஏற்பட்டுள்ளது! திரிகோணமலையைத் தளமாக்கிக் கொண்டு இந்தியாவை மிரட்டலாம் எனத் திட்டமிட்டவாறு அமெரிக்காவும், இலங்கை அரசின் கரத்தைப் பலப்படுத்துகிறது! சீனத் தலைவர்கள்கூட எமது நாட்டுக்கு வருகிறார்கள் பாரீர்! என சிங்களவர் சிலிர்த்துக்கொண்டு நிற்கிறார்கள் என்றால், இதற்கெல்லாம் காரணம், இந்திய அரசின் மெத்தனப் போக்கன்றி வேறு எதுவாக இருக்கமுடியும்?

இலங்கைப் பாராளுமன்றம் கூடி, இந்திய அரசையும், மத்திய அமைச்சர்களையும் கடுமையாகவும், கேவலமாகவும் தாக்கிப் பேசுகிற சூழ்நிலையும் - இலங்கையில் நடைபெறுவது இனப்படுகொலையே அல்ல என்று சாதிக்கிற பொய்க்கூற்றும், நமது மத்திய அரசு காட்டிய அலட்சியப் போக்கினால் ஏற்பட்ட விளைவுகள்தானே!

கடந்த பிப்ரவரி 27ஆம் தேதி மாநிலங்களவையில் பேசிய தம்பி முரசொலி மாறன், பின்வரும் கேள்வியை எழுப்பினார்.

தமிழ் ஈழம் போன்ற கருத்து வேறுபாடுள்ள பிரச்சினையை விட்டு விடுங்கள். சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பாரும் ஒரு மனதாக சில விஷயங்களை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். முதலாவதாக, அவர்கள் போர் நிறுத்தத்திற்கு சம்மதம் அளித்தனர். இரண்டாவதாக, அந்தப் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க ஒரு குழு பணியாற்றும் என்பதற்கும் சம்மதம் தெரிவித்தனர். இப்போது இலங்கையில் போர் நிறுத்தம் இருக்கிறதா? அதைக் கண்காணிக்கும் குழு செயல்பட்டு வருகிறதா? இல்லை! அந்தக் குழு, கலைக்கப்பட்டு விட்டது! நான் அமைச்சர் பகத் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்! போர் நிறுத்தத்தை அமலபடுத்துவதற்கும், கண்காணிப்புக் குழு செயல்படுவதற்கும் நீங்கள் என்ன முயற்சி எடுத்துக் கொண்டீர்கள்? தெற்கு ஆசியாவின் மிகப்பெரிய நாடான இந்தியா, இதில் இமாலயத் தோல்வி அடைந்திருக்கிறதா இல்லையா?

முரசொலி மாறன் எடுத்து வைத்த இந்த வாதத்திற்கு மத்திய அமைச்சரிடமிருந்து விளக்கம் கிடைக்கவில்லை!

தமிழ்இனம் நாளும் அழிகிறதே! என்ற தாங்கொணா வேதனையுடன் மாநிலங்களவையில் தம்பி கோபால்சாமி எழுப்பிய சில பிரச்சினைகளுக்கு - அந்த உணர்வுகளை மதித்துப் பொறுமையாகப் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கும் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களோ, ஆத்திரப்பட்டு, உலகத்தில் என்ன நடக்கிறதென்று உங்கள் ஒருவருக்கு மட்டும்தான் தெரியுமா? என்று கேட்டிருக்கிறார்!

தென் ஆப்பிரிக்காவிலிருந்து இலங்கை அரசு தளவாடங்களை வாங்கிக் கொண்டிருக்கிறதே - இதனை ஆட்சேபித்து இலங்கையும் இடம் பெற்றுள்ள சர்வதேச அரங்கில் இந்தியா குரல் எழுப்பத் தவறுவது ஏன்?

என்றுதான் கோபால்சாமி கேட்டிருக்கிறார்!

அதற்குச் சினங்கொண்டு, பிரதமர் அவர்கள் சீறிப் பாய்ந்தது மட்டுமன்றி, மேலும் கடுமையான வார்த்தைகளை மாநிலங்களவை உறுப்பினரான கோபால்சாமி மீது வாரியிறைத்துள்ளார். உறுப்பினர் அறியாமையினால் பேசுகிறார் என்கிற அளவுக்கு ஒரு பிரதமர் கோபங்கொண்டு பேசுவதும், கம்யூனிஸ்டு கட்சியின் மீது காய்ந்து விழுந்து ஏகடியம் புரிந்திருப்பதும் வேதனைக்குரியதாகும்!

நாம் துடிக்கிறோம் என்றால் எதனாலே? கண்ணீர் வடிக்கிறோம் என்றால் எதனாலே? தானாடாவிடினும் தன் தசை ஆடும் என்பார்களே! அந்த சகோதர பாசத்தினாலே! மத்திய அரசில் இருப்போரிடம் அந்த பாசத்தை எதிர்பார்க்காவிட்டாலும், குறைந்தபட்சம் மனிதாபிமான உணர்வையாவது எதிர்பார்ப்பது என்ன பெரிய பயங்கரமான குற்றமா? அல்லது பாவ காரியமா?

இராமநாதபுரம் மண்டபம் பகுதியில் இந்திய ராணுவத்தை நிறுத்த வேண்டுமென்று தமிழ் நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களேகூட பிரதமரிடம் மகஜர் அளித்திருக்கின்றனர் என்றால், நிலைமை எந்த அளவு காங்கிரஸ்காரர்களாலேயே உணரப்பட்டிருக்கிறது என்று புரியவில்லையா?

இந்தியாவுக்கும் இலங்கைக்குமுள்ள தூதுவர் உறவையும், பொருளாதார உறவுகளையும் உடனடியாகத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று தமிழ் நாட்டின் அனைத்துக்கட்சி சார்பிலே கூடத் தீர்மானம் நிறைவேற்றியும் - பலமுறை வலியுறுத்திக் கூறியும், இந்திய அரசு அந்தக் கோரிக்கையைக் காதிலே போட்டுக் கொள்ளவில்லை!

இலங்கைத் தமிழின அழிவு கண்டு கொந்தளித்துக் கொண்டிருக்கும் தமிழகத்தை, உலைபொங்கும் போது தண்ணீர் தெளித்து அடங்கச் செய்திடும் தந்திரத்தை மட்டுமே கையாண்டு அடக்கி விடவும், அமைதிப்படுத்தவும் இந்திய அரசு எண்ணுகிறது!

தமிழகத்தில்,
கொதிப்பது உலையல்ல;
எரிமலை! என்பதை
உணர்ந்து கொள்ளாவிட்டால்
அது, இந்திய அரசின் குற்றமேயாகும்!

அன்புடன்

மு.க.

07-03-1986

1398. கழகப் பேச்சாளர்கள் கவனத்துக்கு!

உடன்பிறப்பே,

1976ஆம் ஆண்டுவரையில் நகராட்சிகள், ஒன்றியங்கள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் மக்கள் பிரதிநிதிகளின் நிர்வாகத்திலேதான் இருந்தன!

கழக ஆட்சி கலைக்கப்பட்டு கவர்னர் ஆட்சியிலும், பின்னர் வந்த எம்.ஜி.ஆர். ஆட்சியிலும்தான் சுமார் பத்து ஆண்டுக் காலமாக அதிகாரிகள் ஆட்சியில் உள்ளாட்சி மன்றங்கள் இயங்கிவந்தன!

ஆனால் தெரிந்தோ தெரியாமலோ - அல்லது திட்டமிட்டோ சிலர், அல்லது சில ஏடுகள் பதினாறு ஆண்டுக் காலமாக உள்ளாட்சி மன்றங்கள் அதிகாரிகளின் ஆதிக்கத்தில் தான் இருந்தன என்று பரப்புகின்ற தவறான கருத்துக்கு, கழகத்தின் பேச்சாளர்கள் மறுப்புக் கூறி விளக்கமளிக்க வேண்டும்!

தங்கள் கட்சியின் தேர்தல் தோல்விக்கு அமைச்சர்கள் ஆளுக்கொரு காரணம் சொல்லுகிறார்கள்.

வாக்காளர் பட்டியல் 1979ஆம் ஆண்டில் தயாரிக்கப் பட்டது - அதனால்தான் தோல்வி என்கிறார் ஒரு அமைச்சர்! அந்தப் பழைய வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டு தேர்தல் நடத்தியதால் வந்த வினை என்கிறார் அந்த அமைச்சர்! அவரோ மிகமுக்கியமான அமைச்சர்! அடுத்த முதல்வராவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அமைச்சர்!

ஆனால், உள்ளாட்சித் துறை அமைச்சரின் விளக்கமோ, வேறுவிதமாக இருக்கிறது!

1978ஆம் ஆண்டில் முழுமையான மறுபரிசீலனை செய்து வாக்காளர் பட்டியல் புதுப்பிக்கப்பட்டது. மீண்டும் 1981ஆம் ஆண்டில் வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்ப்பது

- நீக்குவது குறித்த பணிகள் நடைபெற்றன. அதன்பிறகு 18 வயதடைந்தவர்களும் உள்ளாட்சித் தேர்தலில் வாக்களிக்கலாம் என்று உத்தரவிடப்பட்டு அவர்களையும் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

இவ்வாறு உள்ளாட்சித் துறை அமைச்சர் கூறியுள்ளார்.

இரு அமைச்சர்களின் வாதத்தில் உள்ள இந்த முரண்பாட்டையும் நமது சொற்பொழிவாளர்கள் மக்களுக்கு விளக்கிட வேண்டும்.

இந்த மகத்தான வெற்றிக்குப்பிறகு நாம், மிகுந்த அடக்கத்துடன்தான் இருக்கிறோம். அப்படித்தான் இருக்க வேண்டுமென்று அறிக்கைகள், கடிதங்கள் வாயிலாக நானும் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

ஆனால் அ.தி.மு.க. வட்டாரத்துப் பிரமுகர்களும், அமைச்சர்களும் நாம் ஏதோ தலைகால் தெரியாமல் எகிறிக் குதிப்பது போலவும், எக்காளச் சிரிப்பு சிரிப்பது போலவும் கற்பனை செய்துகொண்டு - நம்மீது சுடுகணைகளை நாள் தவறாமல் பொழிந்து கொண்டிருக்கிறார்கள்.

வெற்றி பெற்றோர் அடக்கமாக இருக்கிறோம் என்பதையும் - அரசியல் பண்பாட்டுடன் நடந்து கொள்கிறோம் என்பதையும் - தோல்வியுற்றோர் மிகத் துடுக்காக பேசுகிறார்கள் என்பதையும் இருதரப்பிலிருந்தும் வெளியிடப்பட்டுள்ள கருத்துகளை ஒப்பிட்டுக்காட்டி, நமது பேச்சாளர்கள், மக்களுக்கு விளக்கமளித்திட வேண்டும்!

நாம் ஒன்று சொல்லிவிட்டால் நம்மீது சீறிப் பாய்ந்து, பூமிக்கும் ஆகாயத்திற்குமாகக் குதிக்கக் கூடிய அமைச்சர்கள், இப்போது காங்கிரஸ் தரப்பிலிருந்து வெளியிடப்படும் அறிக்கைகளைக் கண்டும் காணாதவர்கள் போல நடந்து கொள்ளும் மர்மம் என்ன? என்பதைக் கூட்டங்களில் எடுத்துக் கூறவேண்டும் நமது சொற்பொழிவாளர்கள்.

உள்ளாட்சித் தேர்தல் தோல்விக்குக் காரணம், அ.தி.மு.க. மீது ஏற்பட்டுள்ள வெறுப்புத்தான்! அ.தி.மு.க.வுடன் காங்கிரஸ் கூட்டுச் சேர்ந்தது தவறானது! அ.தி.மு.க. செய்து வரும் ஊழலை மறந்து நாம் அவர்களை ஆதரித்ததால் தான் இந்தத் தோல்வி.

இப்படிக் கூறியிருப்பவர் தஞ்சை மாவட்டக் காங்கிரஸ் தலைவர் துளசி அய்யா வாண்டையார் அவர்கள்!

மாநிலத்தில் ஆறாக ஓடும் சாராயத்தினால் தான் இந்தத் தோல்வி ஏற்பட்டது.

இவ்வாறு கூறியிருப்பவர் கரூர் தொகுதி காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் முருகையா அவர்கள்!

அ.தி.மு.க.வுடன் கூட்டு சேர்ந்தது தவறு என்று சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள காங்கிரஸ் சட்டசபைக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற காங்கிரஸ் தலைவர்கள் கூட்டத்தில் பலரும் கருத்து தெரிவித்தனர்.

இது ஏடுகளில் வந்துள்ள செய்தி!

மானம் மரியாதை போய் விட்டது. இனி அ.தி.மு.க.வுடன் உறவே வேண்டாம்!

இப்படி முழங்கியிருப்பவர் மதுரை காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஜி.சுப்பராம்ன் அவர்கள்!

இப்படியெல்லாம் காங்கிரஸ் தரப்பிலேயிருந்து விமர்சனங்கள் வரும்போது - அவற்றை எதிர்த்து அக்கினியாஸ்திரங்களைத் தொடுக்கக்கூடிய, கருவாடு மீனாகுமா? புகழ் அமைச்சர், இப்போது ஆவேசம் கொண்டாரா? ஆத்திரப் பட்டாரா? துடித்தாரா? துள்ளி எழுந்தாரா?

இல்லை! இல்லை! பிறகென்னதான் செய்தார்?

இதோ அந்த அமைச்சரை மதுரையில் நிருபர்கள் கேட்கிறார்கள் - அவரும் பதில் சொல்லியிருக்கிறார். படித்துப்பார்!

நிருபர்:-அ.தி.மு.க.வுடன் சேர்ந்ததால்தான் தோல்வி ஏற்பட்டது என்று இந்திரா காங்கிரஸ் எம்.பி. ராமமூர்த்தி கூறியிருக்கிறாரே?

அமைச்சர் பதில்:- அவர் அறிக்கை விட்டது பற்றி அவரது கட்சித் தலைமைதான் பதில் சொல்ல வேண்டும்!

அடடா! என்னே கனிவு! என்னே பணிவு! முன்பெல்லாம் இப்படியா? சொற்கள் ஈட்டிகளாகக் கிளம்புமே! வார்த்தைகள் வாளின் வீச்சாக வெளிப்படுமே! பதில் போர் முரசமாகவன்றோ ஒலிக்கும்!

இன்று சப்தநாடியும் ஒடுங்க - அவரது கட்சித் தலைமை தான் பதில் சொல்ல வேண்டும் என்று என்ன குழைவு! என்ன நெளிவு! என்ன வளைவு!

காங்கிரஸ் தலைவர்கள், காங்கிரஸ் எம்.பி.க்கள், காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் இத்தனைபேர் அ.தி.மு.க. ஊழலினால்தான் காங்சிரசுக்கும் சேர்த்து தோல்வி ஏற்பட்டது என்று வெளிப்படையாக அறிக்கைகளை விடுத்த பிறகும் - அ.தி.மு.க. வட்டாரம், அதிலும் குறிப்பாக அமைச்சர்கள், எதிர்க்குரல் கொடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்?

இவற்றையெல்லாம் நூற்றுக்கணக்கான ஆதாரங்களுடன் மக்களிடம் விளக்க வேண்டிய பொறுப்பு நமது சொற்பொழிவாளர்களுக்கு இருக்கிறது.

இவைகளேயன்னியில், இலங்கைத் தமிழினம் அழிக்கப்படும் கொடுமை - மத்திய அரசின் மெத்தனம் - இந்திய அரசியல் அரங்கின் விபரீத நிலவரங்கள் - விலைவாசி உயர்ந்து கொண்டே போவதால் பாதிக்கப்படும் மக்களின் பரிதாப நிலை - அந்த மக்கள் சார்பில் நாமும் நமது தோழமைக் கட்சியினரும் எழுப்புகின்ற கண்டனக்குரல் - இவற்றையெல்லாம் இடைவிடாது மக்கள் மன்றத்தில் புள்ளிவிபர ஆதாரங்களுடன் கழகச் சொற்பொழிவாளர்கள் எடுத்துரைக்க வேண்டும்!

விளக்கங்கள் - ஆதாரங்கள் - அரசியல் விமர்சனங்கள் - இவைகள் கழகத்தினரின் பேச்சாற்றலால் மக்களிடையே மேலும் விழிப்புணர்வைத் தோற்றுவிக்க வேண்டுமே தவிர, சற்றும் கண்ணியக்குறைவான சொற்கள் இடம் பெறக்கூடாது! இதில் நமது சொற்பொழிவாளர்கள் கவனமாக இருக்க வேண்டும்!

கண்ணியம் தவறிப் பேசியமைக்காக, ஒரு சில பேச்சாளர்கள் மீது தலைமைக் கழகம் நடவடிக்கை எடுத்திருப்பதை மறந்துவிட வேண்டாம்!

அன்புடன்

மு.க.

08-03-1986

1399. மணமிகு மாலையும் - பொன்னார் இழை ஆடையும்!

உடன்பிறப்பே,

திருவாரூர், நாகை, குளிக்கரை, தஞ்சை, திருச்சி, திருச்செங்கோடு, ஈரோடு, கோவை, குமாரபாளையம், சேலம், மோகனூர், நாமக்கல் என்று இன்று முதல் ஐந்து நாட்கள் உன்போன்ற உடன்பிறப்புகளின் மத்தியில் இருக்கின்ற வாய்ப்பு!

இங்குமட்டுமென்ன! சென்னையில் பத்து நாட்களுக்கு மேலாக உன் அன்பிலே சிக்கிப் படாத பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன். காலை முதல் இரவு பத்து மணிக்கு மேலும் கூட, வெற்றியொளி காட்டும் விழிகளுடன் நீ என்னைச் சூழ்ந்துகொண்டு மூச்சுக்கூடத் திணறுமாறு செய்து விடுகிறாய்!

சோதனைகளிலும், தோல்விகளிலும் உன்னையே தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் நாங்கள் வெற்றியில் மகிழ்ச்சி அடையக்கூடத் தடையா? இப்படிக் கேட்பாய்! அறிவேன்! எனினும் அடக்கம் தேவை என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறேன்.

தமிழக மக்கள் நமது அணியினருக்கு வெற்றியினை வழங்கியிருப்பது, ஜனநாயகத்தின் வேர்களான கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் நடக்க இருக்கும் நிர்வாகத்தின் வாயிலாக அவர்களது அடிப்படையான அத்தியாவசிய வசதிகளைப் பெறுவதற்காகத்தான்!

கழகத்தினர் நடத்தும் விழாக்கள், நிகழ்ச்சிகள், ஆளுங்கட்சியினர் நடத்தியவற்றைவிட ஆடம்பரமும், அலங்காரமும் மிகுந்தவைகளாக இருக்கின்றனவா என்று பார்த்துக் களிக்க அல்ல!

நாம் நடத்துகிற எந்த நிகழ்ச்சியானாலும், கூட்டமானாலும் அங்கே எளிமைக்கும், எழுச்சிக்கும் இடமிருக்க வேண்டுமேதவிர, ஏ அப்பா! எத்தனை அலங்காரம் - ஆடம்பரம் என்று மக்கள் பார்த்து வியப்படைவதற்கல்ல!

முதலில் வியப்பாகத் தோன்றுவது, பின்னர் சலிப்பாக ஆகிவிடும் என்பதை மறந்துவிடக் கூடாது!

திருச்சிக்கு நாங்கள் வருகிறோமென்றால் - வெற்றிபெற்ற நகராட்சி, ஒன்றிய, பேரூராட்சித் தலைவர்களுடன் அவர்கள் பொறுப்பேற்றுள்ள இடத்தில் ஆற்றிட வேண்டிய பணிகள் குறித்துக் கலந்துரையாடிட!

அதற்கு நேரமில்லாத அளவுக்கு உன் போன்ற உடன்பிறப்புகள், மாலையணிவிக்கவும், கைத்தறி ஆடைகள் அணிவிக்கவும், புகைப்படங்கள் எடுக்கவும் சூழ்ந்து கொண்டு முற்றுகையிடுவீர்களேயானால் - திருச்சிக் கலந்துரையாடல் கூட்டத்தின் நோக்கம் நிறைவேற முடியாமற் போய்விடும்!

அதேபோல நகராட்சித் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் சுமார் நானூறுபேரும், மற்றும் கழக முன்னணியினர், செயல்வீரர்கள் என நூற்றுக்கணக்கானவர்களும் எங்களுக்கு கலந்துரையாடல் கூட்டத்திலோ அல்லது மாலைப் பொதுக்கூட்டத்திலோ, கைத்தறி ஆடைகள், மாலைகள் அணிவிப்பது என நிலை உருவானால், ஆளுக்கு ஒரு நிமிடம் என வைத்துக் கொண்டாலும் பத்து மணி நேரமாகிவிடும்.

பிறகு, நிகழ்ச்சிகளில் கருத்துரைகள் வழங்குவது, வாக்காளர்களுக்கு நன்றி கூறுவது என்பதெல்லாம் விடிய விடிய நடத்தினாலும் கூட ஒருநாள் போதாது!

எனவே, திருச்சி மட்டுமல்ல, நான் கலந்து கொள்ளும் எல்லா சுற்றுப்பயண நிகழ்ச்சிகளிலும் - கருத்துரைகள் வழங்கிடவும், பொதுமக்கள் கேட்டிடவும் கூடிய வாய்ப்பினை அளிக்கவேண்டிய பொறுப்பினை உணர்ந்து, கழக உடன்பிறப்புகள் நடந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்!

மாற்றுக்கட்சியினரும் போற்றும் வண்ணம், ஏற்கெனவே மனத்தாங்கல் கொண்டோர் மேலும் எரிச்சலடையா வண்ணம், பெரியார் வழிச் சிக்கனமும், அண்ணா வழி அடக்கமும் கடைப்பிடிக்கும் நல்லோர் இவரென எல்லோரும் பாராட்டிடும் வண்ணம்,

நாம் நடத்தும் விழாக்கள், நிகழ்ச்சிகள் பகட்டுக்கும், பளபளப்புக்கும் கிஞ்சிற்றும் இடம் தராத வகையில், கொள்கை

கோட்பாடுகளை உணர்த்திடும் இலட்சிய விளக்க அரங்குகளாக அமைந்திடல் வேண்டும்!

கண்ணைப்பறிக்கும் மின்னொளி அலங்காரங்களைக் கண்டு, நான் மகிழ்வதைவிட - காணும் திசையெல்லாம் கழகக்கொடிகள் பறந்திடும் காட்சி கண்டே நான் களிப்புற்றிடுவேன்!

படாடோபச் சிங்காரங்களைக் கண்டு நான் பரவசமடைவேன் என எண்ணி ஏமாந்து போகாமல் - பார்க்கு மிடமெங்கும் நமது கொள்கை விளக்கம் தாங்கிய எளிய பதாகைகளைக் காண்பதிலேயே நான் பூரிப்படைவேன் என்பதை உணர்ந்த உன் போன்ற உடன்பிறப்புகள், அத்தகு எழுச்சியூட்டும் செயல்களில் ஈடுபட வேண்டுகிறேன்!

மீண்டும் நினைவூட்டுகிறேன்! வெற்றிகள் உனக்கும் எனக்கும் மகிழ்ச்சியூட்டலாம்! ஆனால், மக்கள், அந்த மகிழ்ச்சியினூடே நம்மிடம் எதிர்பார்ப்பது - உழைப்பு! கடமையாற்றும் மனம்! திறன்!

எனவே உடன்பிறப்பே,

ஃ ஓய்வின்றி உழைத்திடு!

ஃ ஒரு களங்கமுமின்றிக் கடமையாற்றிடு!

ஃ மக்கள் பார்வை உன் மீது!

இதை உணர்ந்து நீ செயல்பட்டால், அதுவே நீ எங்களுக்கு அணிவிக்கும் மணமிகு மலர் மாலை! பொன்னார் இழைக் கைத்தறி ஆடை!

அன்புடன்

மு.க.

09-03-1986

1400. உள்ளாட்சி மன்றம்; ஜனநாயகத்தின் வேர்!

உடன்பிறப்பே,

ரீடர்ஸ் டைஜஸ்ட் Readers Digest கடந்த பிப்ரவரி இதழில் மேற்கு வங்கத்தின் அமைச்சர் பிரபாஸ் சந்திர போதிகர் அவர்கள் ஊரக வளர்ச்சிக்கு ஊராட்சிகளின் பங்கு என்ற தலைப்பில் கட்டுரையொன்று தீட்டியுள்ளதை நமது தலைமை நிலைய அலுவலகச் செயலாளரும், முன்னாள் மேயருமான தம்பி சா. கணேசன் என் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

தமிழகத்தில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்று - அதில் கழகமும், தோழமைக் கட்சிகளும் பெரும்பாலான நகரங்களிலும், கிராமப் பகுதிகளிலும், பேரூர்கள், ஒன்றியங்களிலும் பொறுப்பேற்றுள்ள இந்தச் சூழலில், இங்குள்ள எம்.ஜி.ஆர். அவர்களின் அரசு, உள்ளாட்சி ஜனநாயகத்தை எவ்வாறெல்லாம் சீர்குலைக்கலாம் என்று கோட்டையில் உள்ள அதிகாரிகளைக் குடைந்தெடுத்துக் கொண்டிருக்கும் போது, மேற்கு வங்க அமைச்சரின் இந்தக் கட்டுரை மெத்தவும் பயன் அளிக்கக் கூடியது என்பதால் சில பகுதிகளை எடுத்துக் காட்டி விளக்கிட விரும்புகிறேன்.

உள்ளாட்சித்துறைத் தேர்தல்கள் மேற்குவங்கத்தில் பதினைந்து ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்து பின்னர் 1978ஆம் ஆண்டிலும் - அதற்குப் பிறகு 1983ஆம் ஆண்டிலும் நடைபெற்றது என்ற செய்தியை அமைச்சர், அந்தக் கட்டுரை வாயிலாகத் தந்துள்ளார்.

1977 வரையில் மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் அமைச்சரவை இருந்ததும், 1978க்குப் பிறகு மார்க்சிஸ்ட் கட்சித் தலைமையிலான கூட்டணி அமைச்சரவைதான் உள்ளாட்சிமன்றத் தேர்தல்களை 1978லும் - 1983லும் நடத்தியிருக்கிறது என்பதும் தெளிவாகிறது.

இங்கே நமது தமிழகத்தில் எத்தனைமுறை தேதி அறிவித்து, எத்தனை சாக்குபோக்குகளைச் சொல்லி உள்ளாட்சித் தேர்தல்களை ஒத்திப் போட்டுக் கொண்டே போனார்கள் என்பது நாடறிந்த உண்மை!

மேற்குவங்க அமைச்சர், திட்டக்குழுவின், ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட பிரிவின் இறுதி அறிக்கையை சுட்டிக்காட்டி, உள்ளாட்சி மன்றங்களின் ஈடுபாடு காரணத்தினால்தான், மேற்கு வங்கத்தில் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும், திட்டங்களை மேலும் விரிவாக்குவதும் எளிதாக இருக்கின்றது என்று கூறப்பட்டுள்ளதையும் கோடிட்டுக் காட்டுகிறார்.

நிலச்சீர்திருத்தத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, உபரிநிலங்களை எடுத்து அவைகளைப் பிரித்துக் கொடுப்பதில் உள்ளாட்சிகள் அந்த மாநிலத்தில் முக்கிய பங்கேற்றுள்ளன என்றும் குறிப்பிடுகிறார்.

வேலைக்கு உணவுத் திட்டம், தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம், நிலமற்ற கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் போன்றவை ஊராட்சிகளில் முக்கிய இடம்பெற்றுள்ளன என்று தொகுத்துக் கூறுகிற அவர், அந்தத் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதும் - அவற்றை நடைமுறைப்படுத்துவதும் - அதன் பயன்களை அடைவதும் உள்ளாட்சிகளுக்கே உரிய பணிகளாகும் என்பதோடு, வறட்சி நிவாரணப் பணிகள், விவசாயம், காட்டுவளம், கிராமப்புறக் குடிநீர் வினியோகம், கிராமப்புற வீட்டு வசதி போன்றவைகளில் உள்ளாட்சிகள் மேலும் நேரடியாகப் பொறுப்பேற்கக் கூடியவைகளாக உள்ளன என்றும் குறிப்பிட்டு - அந்த மாநிலத்தின் மொத்த ஆண்டுத் திட்டச் செலவில் மூன்றில் ஒரு பங்குக்கு மேலாக பஞ்சாயத்துகள் மூலமாகத்தான் நேரடியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்றும் விவரித்துள்ளார்.

மக்களைக்கூட்டிப்பேசி, அவர்களுக்குத் தேவையான பொதுத் திட்டங்கள் குறித்து விவாதித்து முடிவுகள் எடுக்கப்படுகின்றன. உள்ளாட்சிகளில் ஒப்படைக்கப்படும் நிதி, மாநில அரசால் தணிக்கை முறை மூலம் ஆராய்வதற்கும் வழி வகைகள் உண்டு என்றும் மேற்குவங்க அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

காண்ட்ராக்டர் முறைகள் தவிர்க்கப்பட்டு, உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களின் நேரடிப் பார்வையில் வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதால் அந்தப்பணிகள் சிறப்பாக அமைகின்றன என்பதை அந்த மாநில முதல்வர், இந்தியப் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருப் பதாகவும், அந்தக் கட்டுரை விளக்குகிறது.

உள்ளாட்சிகளின் வாயிலாக ஜனநாயக முறையில் அதிகாரங்களைப் பரவலாக்குவது, ஒரு புதிய சமுதாய மாற்றத்தையும், கிராமங்களில் பொருளாதார மாற்றத்தையும் உருவாக்க உதவிடும் என்பதே கட்டுரை தீட்டியுள்ள அமைச்சரின் கருத்தாக அமைந்துள்ளது.

ஆனால் நமது தமிழகத்தில், நமது அணியினர் வெற்றிபெற்று விட்டோம் என்ற காரணத்திற்காக - இன்னும் எத்தகைய அதிகாரங்களையெல்லாம் உள்ளாட்சி, நகராட்சிகளில் இருந்து எடுத்துக்கொள்ளலாம் என்றும் - முறைப்படி உரிய நேரத்தில் ஒரு மாத காலத்திற்குள் நடந்து முடியவேண்டிய துணைத்தலைவர் தேர்தல்களை, மூன்று மாத காலத்திற்கு நீட்டித்துப் புதிய ஆணைகளைப் பிறப்பித்தும் ஜனநாயகத்தைச் சீர் குலைக்கிற காரியங்களிலேயே எம்.ஜி.ஆர். அரசு கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது.

உள்ளாட்சிமன்ற ஒன்றியங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அவர்கள் விருப்பம் போல் தாழ்த்தப் பட்டோரிலிருந்தும், தாய்க்குலத்திலிருந்தும் உறுப்பினர்களை நியமிக்கலாம் என்று இங்கே தமிழ்நாட்டில் சட்டத்திருத்தமே கொண்டுவந்து, உள்ளாட்சி மன்ற உரிமையை ஜனநாயக விரோதமாகப் பறிக்க முயற்சி செய்கின்றனர்.

ஆனால் மேற்குவங்கத்தில், குறிப்பிட்ட எண்ணிக்கை; தாழ்த்தப்பட்டவர்களோ, மலைசாதியினரோ, மகளிரோ உள்ளாட்சி அமைப்பில் இடம்பெறாவிட்டால் - அந்த எண்ணிக்கையளவு உறுப்பினர்களை, அந்த உள்ளாட்சி மன்றங்களின் பரிந்துரையைப் பெற்று, அந்த மன்றங்கள் யாரைப் பரிந்துரை செய்கின்றனவோ, அவர்களையே மாநில அரசு, உறுப்பினர்களாக நியமிக்கிறது!

"In case where adequate number of scheduled caste and scheduled tribe members and women were not represented in

panchayat bodies, Provisions were also made for nomination by the State Government on Recommendation of the concerned Panchayat Body"

இவ்வாறு மேற்குவங்க அரசின் அமைச்சர், தனது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அமைச்சரின் கட்டுரை, உள்ளாட்சி மன்றங்கள் அதிகாரங்களைப் பரவலாகப் பெற்று, ஜனநாயக உரிமைகளை இழக்காமல் பணியாற்றிட வகை செய்யப்பட்டால்தான், உள்ளாட்சி மன்றங்களின் மூலம் சமுதாய மாற்றத்தையும், பொருளாதார மாற்றத்தையும் ஏற்படுத்த முடியும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது.

உள்ளாட்சி மன்றப் பொறுப்பேற்றுள்ளவர்களும், நமது மாநில அரசினரும் சிந்திக்க வேண்டிய விவகாரம் என்பதால், அந்தக் கட்டுரை குறித்து இந்தக் கடிதம் தீட்டினேன்!

அன்புடன்

மு.க.

16-03-1986

1401. இந்திய அரசு என்ன செய்யப் போகிறது?

உடன்பிறப்பே,

தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தும், நிறவெறி பிடித்து நிலைகுலைந்து ஆட்டம் போடும் தென்னாப்பிரிக்காவின் ஏகாதிபத்திய ஆணவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நமது இந்தியப் பிரதமர் ராஜீவ் அவர்கள் முழக்கமிட்டது, மாத்திரமல்லாமல், உலகில் உள்ள பல நாடுகள், தென்னாப்பிரிக்காவுடன் எந்தவிதமான உறவுகளும் வைத்துக் கொள்ளக்கூடாது என்பதற்கு முயற்சி மேற்கொண்டும், இங்கிலாந்து போன்ற நாடுகள் முதலில் தயக்கம் காட்டியபோது, அந்த நாட்டுப் பிரதமருடன் நமது பிரதமர் அவர்களே பேச்சுவார்த்தை நடத்தி, தென்னாப்பிரிக்காவுடன் உள்ள உறவுகளைத் துண்டிக்கச் செய்தும், அதே போல் இந்தியாவும் தென்னாப்பிரிக்காவுடன் உறவுகளை அறுத்துக் கொண்டும் நீக்ரோ இனத்து மக்களுக்காக நேசக்கரம் நீட்டியதை யாரும் மறந்திருக்க முடியாது.

இனப்பாகுபாடுகளின் காரணமாக எழும் பிரச்சினைகளை ஆய்ந்து, அந்தக் கொடுமையினை அகற்றுவதற்காகவே ஐ.நா. மன்றத்தில் பதினெட்டு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைந்துள்ளது. அந்தக் குழு, அண்மையில் கூடிய போது இலங்கை அரசின் மீது குற்றச்சாட்டை எழுப்பியிருக்கிறது.

தென்னாப்பிரிக்காவுடன் எந்த உறவும் வைத்துக் கொள்வதில்லையென்று முடிவெடுத்து உடன்பாடு கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்று!

ஆனால் அந்த உடன்பாட்டுக்கு மாறாக, தென்னாப் பிரிக்காவுடன் இலங்கை தொடர்பு கொண்டிருக்கிறது என்பதை ஐ.நா.வின் அந்தக்குழு சுட்டிக்காட்டி, இலங்கையின் போக்கைக் கண்டித்திருக்கிறது.

ஆனால் அந்தக் குழுவில் விளக்கமளித்த இலங்கைப் பிரதிநிதி, இலங்கையில் உள்ள வர்த்தகர்கள், தனிப்பட்ட முறையில் தென்னாப்பிரிக்காவுடன் வர்த்தகத் தொடர்புகள் கொள்வதில் தவறு எதுவுமில்லை என்று வாதிட்டிருக்கிறார். இலங்கையில் உள்ள தனியார், தென்னாப்பிரிக்காவுடன் நடத்தும் வர்த்தகம், இலங்கையிலிருந்து தேயிலையை விற்பது மாத்திரமல்ல என்பதும், அதற்கு மாற்றாக, தென்னாப்பிரிக்கா ஆயுதங்களை இலங்கைக்குத் தருகிறது என்பதும், அந்த ஆயுதங்கள் இலங்கைத்தமிழ் இனத்தை அழிக்கப் பயன்படுத்தப்படுகின்றன என்பதும் ஒளிவு மறைவு இல்லாத உண்மையென்கிற காரணத்தினால்தான் மாநிலங்களவையில் தம்பி கோபால்சாமி, பிரதமரிடம் அது குறித்த விளக்கத்தைக் கேட்டார்.

தென்னாப்பிரிக்காவுடன் உறவுகள் இருக்கக்கூடாது என்று முடிவெடுத்த நாடுகளின் பட்டியலில், இந்தியாவும், இலங்கையும் இடம் பெற்றிருக்கும் போது - இலங்கை, உடன்பாட்டுக்கு மாறாக இரண்டு தவறுகளைச் செய்வதைத்தான் அவர், பிரதமருக்கு சுட்டிக்காட்டினார்.

முதலாவது தவறு, இந்தியா, இலங்கை இருநாடுகளும் இணைந்துள்ள ஒரு அரங்கில், எடுக்கப்பட்ட முடிவுக்கு மாறாக இலங்கை, தென்னாப்பிரிக்காவுடன் உறவு கொண்டாடுவதாகும்!

இரண்டாவது தவறு, எந்த இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பதற்கு இந்திய அரசு முயற்சிகளை மேற்கொள்வதாகக் கூறப்படுகிறதோ - அந்தத் தமிழர்களைக் கொன்று குவிக்க, தென்னாப்பிரிக்காவிடமிருந்து இலங்கை ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதாகும்!

இது குறித்துக் கோபால்சாமி கேட்டபோது தான் பிரதமருக்குக் கோபம் கொப்பளித்தது. உலகத்தில் நடப்பதெல்லாம் உங்கள் ஒருவருக்குத் தான் தெரியுமா? என்றும் - அறியாமையில் பேசுகிறீர் என்றும், பிரதமர் அவர்கள் சினந்து சீறினார்.

மாநிலங்களவை நடவடிக்கையைப் படித்த பலருங்கூட, தென்னாப்பிரிக்காவுடன் இலங்கை எந்தத் தொடர்பும் கொண்டிருக்கவில்லை போலும் - அதனால்தான் பிரதமர் அவ்வளவு கடுமையாகப் பதில் அளித்திருக்கிறார் என எண்ணியிருக்கக் கூடும்.

ஆனால் மார்ச் 13ஆம் நாள் நியூயார்க்கில் கூடிய 18 பேர் கொண்ட ஐ.நா.குழுவில், இலங்கையின் பிரதிநிதி, தென்னாப்பிரிக்காவுடன் இலங்கையில் உள்ளோர் அரசாங்க ரீதியில் அல்லாமல், தனிப்பட்ட முறையில் உறவு வைத்துக் கொண்டிருப்பதை ஒப்புக் கொண்டிருப்பதாகச் செய்தியே வந்துள்ளது.

எல்லாவித உறவுகளிலிருந்தும் தென்னாப்பிரிக்கா விடமிருந்து விலகிவிட வேண்டுமென்று செய்யப்பட்ட முடிவுக்கு மாறாக, இலங்கை நடந்துகொண்டு, அதற்கு நியாயம் கற்பிக்க முன்வருவதும், அதைக்கூட வன்மையாகக் கண்டிக்க இந்தியா தயாராக இல்லாததும் - தென்னாப்பிரிக்கா விடுதலை இயக்கத்தையும் இந்தியா கைவிட்டு விடுகிறதோ என எண்ணிடத்தானே தோன்றுகிறது!

அவ்வளவு வளைந்து கொடுக்க வேண்டிய அவசியம் இலங்கையைப் பொறுத்தமட்டில் இந்தியாவுக்கு ஏன் ஏற்பட வேண்டும்?

குனிய குனியக் குட்டுபவனைப் போல, இதோ! சிங்கள அதிபர் ஜெயவர்த்தனே - இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அரசியல் தீர்வுக்கு இடமே இல்லையென்றும், இராணுவத் தீர்வு மூலமே போராளிகளை வீழ்த்தப் போவதாகவும் முழக்கமிட்டிருக்கிறார். இதற்குச் சரியான பொருள், இலங்கையில் தமிழ் இனத்தை முற்றாக அழிக்கத் திட்டம் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படுகிறது என்பது தான்!

மார்க்சிஸ்ட் கொள்கை கொண்ட ஒரு நாட்டை ஏற்படுத்த ஜனநாயக விரோத சக்திகள் நெருங்கி வருவதாக அஞ்சுகிறேன்.

என்றும் ஜெயவர்த்தனே, இலண்டன் டைம்ஸ் எனும் ஏட்டுக்கு அளித்துள்ள பேட்டியில் குறிப்பிடுகிறார்.

இந்தக் கருத்தை அவர் பரப்புவதின் வாயிலாக, ஏற்கெனவே அவருக்குப் பக்கபலமாக நின்று மறைமுகமாக உதவிக்கொண்டிருக்கிற அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகளின் உதவி, மேலும் அதிகமாகக் கிடைக்குமென எதிர்பார்க்கிறார் என்பது தெளிவாகிறது.

இந்திய அரசு, இனியும், தமிழர்கள்தானே சாகிறார்கள் என்ற அலட்சியத்துடன் இலங்கை அரசுடன் கை குலுக்கிக் கொண்டிருக்கப் போகிறதா? அல்லது உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப் போகிறதா?

இந்தக் கேள்விக்குறியை அடிப்படையாக வைத்துத் தான் டெல்லியில் எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டறிக்கையொன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

காமராஜ் காங்கிரஸ் தலைவர் மாவீரன் நெடுமாறன் அவர்கள், டெல்லி சென்று பல்வேறு கட்சித் தலைவர்களையும் சந்தித்து, இலங்கையில் நேரில் கண்ட கொடுமைகளை விளக்கியிருக்கிறார்.

மாநிலங்களவைக் கழக உறுப்பினர்களான தம்பி முரசொலி மாறன், தம்பி கோபால்சாமி இருவரும் மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக, நண்பர் நெடுமாறன் அவர்கள், டெல்லியில் எல்லாக் கட்சித் தலைவர்களுடனும் பேசி, இந்திய அரசு இலங்கைப் பிரச்சினையில் தனது கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிற அளவுக்கு எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

தி.மு.கழகம், ஜனதா, பாரதீய ஜனதா, லோக்தளம், காங்கிரஸ் எஸ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், தெலுங்கு தேசம், காமராஜ் காங்கிரஸ், காஷ்மீரத்து தேசிய மாநாட்டுக் கட்சி ஆகியவற்றின் முக்கிய பிரதிநிதிகளும், தலைவர்களும் கையெழுத்திட்டுள்ள அந்தக் கூட்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, இந்திய அரசு இலங்கைப் பிரச்சினையில் கடைப்பிடித்துவரும் ஊசலாட்டக் கொள்கையை உடனடியாக கைவிடவேண்டும். இலங்கைக்கு மற்ற நாடுகள் இராணுவ உதவி, ஆயுத உதவிகளை அளிப்பதைத் தடைசெய்ய இந்திய அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கை அரசுக்குப் பொருளாதார நிர்ப்பந்தங்களை உருவாக்க வேண்டும். இந்தியா, இந்தப் பிரச்சினையை உடனடியாகச் சர்வதேச அரங்கில் எழுப்பிட முன்வர வேண்டும். இந்தியா இந்தப் பிரச்சினையில் ஒரு மத்யஸ்தர் என்ற நிலையை விடுத்து, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தனக்கு நேரடித் தொடர்பு

உண்டு என்ற நிலையில் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்திய அரசு என்ன செய்யப் போகிறது? இந்தக் கேள்வியை தமிழன், இரத்தக் கண்ணீர் வடித்தவாறு பிரதமர் ராஜீவ் காந்தியைப் பார்த்துக் கேட்கிறான்!

பதில் என்ன?

பதில் என்ன?

அன்புடன்

மு.க.

17-03-1986

1402. மக்வானா விளக்கமும் மற்றொரு குழப்பமும்!

உடன்பிறப்பே,

புயல்! வெள்ளம்! என்ற செய்தி கேள்விப்பட்டவுடன், அதுகுறித்து விசாரிக்கத் தமிழக முதலமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அவர் தூங்கிக் கொண்டிருப்பதாக அவரது உதவியாளர் கூறி விட்டார். அதனால், தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிவாரண நடவடிக்கை குறித்துத் தொலைபேசியில் பேசினேன்.

இப்படி இந்தத் திங்கள் 10ஆம் நாள், நாடாளுமன்றத்தில் துணை விவசாய அமைச்சர் மக்வானா பேசினார்.

உடனடியாக மன்றத்தில் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கா விட்டாலும், மறுநாள் அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்வானாவின் கூற்றை மறுத்தனர்.

தமிழகத்தில் புயல் அடித்தது நவம்பர் மாதத்தில்! ஆனால் அக்டோபர் 23 ஆம் தேதி முதல் ஜனவரி 7 ஆம் தேதி வரையில் முதலமைச்சர் வீட்டுக்குத் தொலைபேசி வசதி இல்லை. இந்த நிலையில், மக்வானா அவர்கள், எவ்வாறு முதலமைச்சருடன் தொலைபேசியில் பேச உதவியாளருடன் தொடர்பு கொண்டிருக்க முடியும்?

இப்படியொரு வாதத்தை வைத்து மக்வானாவின் பேச்சு உண்மையற்றது என்று அ.தி.மு.க. உறுப்பினர்கள் கூறினர்.

மக்வானா அவர்கள், எட்டு நாட்கள் மௌனம் சாதித்துவிட்டு, நேற்றைக்கு ஒரு புதிய விளக்கத்தை அளித்துள்ளார்.

புயல், வெள்ளம் பற்றி ஆந்திர முதலமைச்சர் என்.டி.ஆர். அவர்களுடன் தொடர்புகொள்ள முயன்றபோதுதான், அவர் தூங்கிக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள்.

என்பதுதான் அந்த விளக்கம்! ஒரு மத்திய அமைச்சருக்கு, தான் தொலைபேசியில் தொடர்பு கொண்டது தமிழக முதல்வருடனா? அல்லது ஆந்திர முதல்வருடனா? என்பதுகூடப் புரியாமல் இருந்தது நல்ல வேடிக்கைதான்!

அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறுநாள் எதிர்ப்பு தெரிவித்தவுடன், மக்வானா அந்த திருத்த விளக்கத்தைச் சொல்லியிருக்கலாம். அல்லது மக்வானா அவர்கள் ஏதோ மயக்கத்தில் அப்படிப் பேசியிருக்கிறார் என்று இங்குள்ள ஒரு அமைச்சர் குறிப்பிட்ட பிறகாவது மக்வானா, உடனே தனது தவறான கூற்றைத் திருத்தி நாடாளுமன்றத்தில் அறிக்கை வைத்திருக்கலாம்.

உள்ளாட்சிமன்றத் தேர்தலுக்குப் பிறகு அ.தி.மு.க., இ.காங்கிரஸ் இருகட்சிகளின் அமைச்சர்கள், முக்கியஸ் தர்களிடையே கருத்து மோதல் ஏற்பட்டு, கசையடிகள் சாட்டையடிகள் வரையிலே வார்த்தைகள் வெளிப்பட்டு அமளி துமளியாக இருந்தபோது, மத்தியில் உள்ளவர்கள், மக்வானாவைவிட்டு இப்படி ஒரு தகவலைச் சொல்ல வைத்திருக்கிறார்கள் என்பதும் - இப்போது அந்த இருகட்சிகளுக்கிடையே மீண்டும் உறவு தொடரும் என பட்டதாரித் தொகுதி, ஆசிரியர் தொகுதி எம்.எல்.சி. தேர்தலில் ஒரு சுமுக முடிவு ஏற்படுவதற்குத் துணையாக, அதே மக்வானாவை விட்டு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். தூங்கினார் என்பதற்குப் பதிலாக ஆந்திர முதல்வர் என்.டி.ஆர். தூங்கினார் என்று வாசகத்தை மாற்றிக் கொண்டிருப்பதாக டெல்லி வட்டாரத்துச் செய்திகள் தெரிவிக்கின்றன!

திருவாளர் யோகேந்திர மக்வானா எப்படிப்பட்டவர் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்! அதனால் விரிவான விமர்சனம் தேவையில்லை!

தமிழக முதல்வர் தூங்குகிறார் என்றதும், மக்வானா அவர்கள், தலைமைச் செயலகத்துக்குத் தொடர்பு கொண்டு - சீப் செகரட்டரி அவர்களுடன் பேசி விபரங்களை அறிவதற்குப்பதிலாக - மாவட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டது ஏன் என்பதே புரியாத புதிர்!

என்.டி.ஆர். என்பதை வாய்த் தவறுதலாக எம்.ஜி.ஆர். என உச்சரித்துவிட்டார் என்பதை வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும்,

ஆந்திர மாநிலம் என்பதைக்கூட மக்வானா அவர்கள், எப்படி தமிழ்நாடு என்று மாற்றி உச்சரித்தார் என்பது 1986ஆம் ஆண்டின் தலைசிறந்த நகைச்சுவைத் துணுக்குகளில் ஒன்றேயாகும்!

தவறான தகவல் கொடுத்ததைச் சுட்டிக்காட்டியவுடன், எட்டு நாட்களுக்குப் பிறகாவது மத்திய அமைச்சர் மக்வானா, நாடாளுமன்றத்தில் தனது பேச்சுக்குத் திருத்தம் கொடுத்து வருத்தம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால் தவறான தகவல் கொடுத்த மக்வானாவை வருத்தம் தெரிவிக்குமாறுகோரி, அவ்வாறே அவரும் வருத்தம் தெரிவித்துள்ளதையும் - அதேசமயம் இந்தப் பிரச்சினையில் எதிர்ப்புக்குரலைக் கொடுத்த அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் இங்கே தமிழக அமைச்சர்களில் ஒருவராக இருந்தபோது, தேனிமுத்துதேவன் பட்டியில் என் மகன் அழகிரிக்கு நூறு ஏக்கர் நிலம் வாங்கியிருப்பதாகப் பொய்கூறி, அதை நிரூபிப்பதாக சட்டப்பேரவையில் சவால் விட்டு இல்லையேல் ராஜினாமா செய்வதாக முழங்கி, இறுதியில் போர்ஜரிக் கையெழுத்திட்டு, போர்ஜரி பத்திரம் தயாரித்துக்கொண்டு வந்து காட்டி - அந்தப் போர்ஜரி வேலை அம்பலமாகி நாடே சிரித்த போதுகூட தனது மோசடி வேலைக்கும், தவறாகத் தந்த தகவலுக்கும் ராஜினாமா செய்யாவிடினும், ஒரு வருத்தம் கூட அவையில் தெரிவித்துக் கொள்ளவில்லை என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளாமல் இருக்க முடியாது.

பைத்தியம் கிழித்தது கைக்குட்டைக்கு ஆயிற்று என்று, ஒரு பழமொழியைப் புதுமொழியாக்கிப் பார்த்தால் - மக்வானாவின் குற்றச்சாட்டு உண்மையோ அல்லவோ, அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேறொரு உண்மையைத் தெளிவாக்கி விட்டனர்.

அவர்களது அறிக்கையின்படி, முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இல்லத்தில் அக்டோபர் 23 ஆம் தேதி முதல் ஜனவரி 7ஆம் தேதி வரை தொலைபேசித் தொடர்பு இல்லை. ஆனால், வெள்ளம் வந்தது நவம்பர் மாதம் தான்!

என்ற குறிப்பு எல்லா ஏடுகளிலும் வெளிவந்து உள்ளது.

எனவே, நவம்பரில் வெள்ளம் வருவதற்கு முன்பே, அக்டோபர் 23 முதல் முதல்வர் இல்லத்துக்குத் தொலைபேசித் தொடர்பு இல்லாமல் இருந்திருக்கிறது.

அக்டோபரில் ஒன்பது நாட்கள், வெள்ளம் வந்த நவம்பரில் முப்பது நாட்கள், வெள்ளத்துக்குப் பிறகு டிசம்பரில் முப்பத்தியோரு நாட்கள், ஜனவரியில் ஏழு நாட்கள் - ஆக மொத்தம் எழுபத்துஏழு நாட்கள் முதல்வர் இல்லத்தில் தொலைபேசித் தொடர்பு இல்லாமல் ஒரு ராஜ்யம் இங்கே நடைபெற்றிருக்கிறது.

அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளபடி, நவம்பர் 13 முதல் நவம்பர் 18 வரையில் ஆறுநாட்கள்தான் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் வெள்ளத்தை முன்னிட்டு சென்னை கன்னிமாரா ஓட்டலில் தங்கியிருந்திருக்கிறார். பின்னர் இல்லம் திரும்பி விட்டார்.

அந்த ஆறு நாட்கள் போக எழுபத்தியோரு நாட்கள் முதல்வர் வீட்டுத் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்த காரணம் என்ன?

மத்திய அரசின் உத்திரவா? அல்லது முதலமைச்சரே அவ்வாறு துண்டிக்குமாறு பணித்தாரா? அல்லது முதல்வர் இல்லத்தில் இருந்த இரண்டு அல்லது மூன்றுக்கு மேற்பட்ட தொலைபேசிகளும் பழுதாகியிருந்தனவா? உடனடியாக பழுதுபார்க்க டெலிபோன் இலாகா பணியாளர்களை அழைக்கவில்லையா? அல்லது அழைத்தும் அவர்கள் வருவதற்கு மறுத்து விட்டார்களா?

மத்தியில் உள்ள அரசும், மாநிலத்தில் உள்ள அரசும் எப்படி நடைபெறுகின்றன என்பதற்கு - மக்வானாவின் குற்றச்சாட்டும், அந்தக் குற்றச்சாட்டை மறுத்தபோது அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் வெளியிட்ட முதல்வருக்குத் தொலைபேசித் தொடர்பு இல்லை என்ற உண்மையுமே சரியான எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன அல்லவா?

அன்புடன்

மு.க.

21-03-1986

1403. ஏற்றுக்கொள்ள இயலாத போக்கு!

உடன்பிறப்பே,

சைதைத் தொகுதி ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர், வாடகை முறையில் தனக்கு வழங்கப்பட்ட வீட்டு வசதி வாரிய வீட்டை, தவணை முறை விற்பனை வீடாக மாற்றி விலைக்கு வாங்கி விட்டார் என்பதை 1982-83ஆம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கை கண்டித்திருப்பதைச் சுட்டிக் காட்டும் முன்னுரையுடன் மார்ச் 16 முரசொலி இதழில் ஒரு ஊழல் புகார் வெளியிடப்பட்டிருந்தது.

வீட்டு வசதி வாரியத்திடமிருந்து அவர் வாங்கிக் குடியிருக்கும் வீட்டு எண் 62, முதல் மெயின் ரோடு, சி.ஐ.டி. நகர், சென்னை-35 என்பதாகும் என்று முகவரி குறிப்பிடப் பட்டிருந்தது.

ஒரு வீடு இருக்கும்போது அவ்வருக்கே வீட்டு வசதி வாரியத்தில் இன்னொரு வீடு தரக்கூடாது என்று விதியிருக்கிறது.

ஆனால், கே. சாமியப்பன் என்பவர், 84, வி.எஸ்.எம். கார்டன் தெரு, ஜாபர்கான்பேட்டை என்ற முகவரியிலிருந்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துக்கு தனக்கு ஒரு வீட்டுக்காக மனுச் செய்கிறார்.

எல். சுப்பிரமணியம் என்பவர், 142, ராகவ ரெட்டி காலனியிலிருந்து வீட்டு வசதி வாரியத்துக்கு ஒரு மனு செய்கிறார்.

அந்தப்பகுதியில் ஆறு வீடுகள் ஒதுக்கலாம்! இந்த அரசின் ஆணைப்படி Plot No. Allotted என்று நான்குமனை எண்களை டைப் செய்துவிட்டு - மேற்படி சாமியப்பன், சுப்பிரமணியம் என்பவர்களுக்கு மட்டும் மனை எண்களை அதே ஒதுக்கீட்டுத்தாளில் 0.56 என்றும், 0.62 என்றும் கையால் எழுதி ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

தனித்தனி முகவரியில் இருக்கும் சாமியப்பன், சுப்பிரமணியம் என்ற இருவருக்கும் 62, முதல் மெயின்ரோடு, சி.ஐ.டி.

நகர், சென்னை-35ல் இருக்கும் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினருக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும் என்ற கேள்வி எழுவது இயல்பு!

இங்கேதான் இவர்கள் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினரின் பினாமிகளாக செயல்பட்டிருக்கிறார்கள் என்பதற்கான பூர்வாங்க ஆதாரம் வெளிப்படுகிறது.

1981ஆம் ஆண்டு இவர்கள் இருவருக்கும் மனை ஒதுக்கப்பட்டது. ஆனால் இவர்கள் இருவரும் 7.8.84 அன்று வீட்டுவசதி வாரிய நிர்வாக அதிகாரிக்கு ஒரு கடிதம் எழுதுகிறார்கள்.

ஒருவர், உடல்நிலை சரியில்லாத காரணத்தால், கடந்த சில மாதங்களாக தவணைப் பணம் செலுத்த இயலவில்லையென்று எழுதுகிறார்.

இன்னொருவர், குடும்ப சூழ்நிலை சரியில்லாத காரணத்தால், கடந்த சில மாதங்களாக தவணைப் பணம் செலுத்த இயலவில்லை என எழுதுகிறார்.

இரண்டு கடிதங்களும் ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளன என்பதை முரசொலியில் பிளாக் செய்து அந்த இரு கடிதங்களையும் வெளியிட்டிருப்பதைப் பார்த்தால் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

மனுச்செய்யும் போது, சாமியப்பன் 84, வி.எஸ்.எம். கார்டன், ஜாபர்கான்பேட்டை என்று விலாசம் கொடுத்திருந்தவரும், சுப்பிரமணியம் 142 ராகவ ரெட்டி காலனி என்று விலாசம் கொடுத்திருந்தவரும் - பணம் கட்டத் தாமதமானதற்காக வீட்டுவசதி வாரிய நிர்வாகிகளுக்குக் கடிதம் எழுதும்போது, இருவருமே ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினரின் விலாசமான 62, முதல் மெயின்ரோடு, சி.ஐ.டி. நகர், சென்னை-35 என்ற விலாசத்திலிருந்தே எழுதியிருக்கிறார்கள். அதுவும் பிளாக் எடுக்கப்பட்டு முரசொலியில் பிரசுரமாயிருக்கிறது.

ஒரே முகவரி - ஒரே கையெழுத்து - ஒரே நாள் - இதற்குப்பிறகும் இவர்கள் பினாமிகள் என்பதில் சந்தேகம் இருக்க முடியுமா?

அரசும், வீட்டுவசதி வாரியமும் இதற்கு உடந்தையாக இருந்திருக்கிறது என்பதற்கு வேறு ஆதாரம் தேவையா?

அந்தக் கடிதங்கள் குறித்து, எவ்விதச் சந்தேகமும் கொள்ளாமல் - வீட்டுவசதி வாரியத்தினர், அந்தக் கடிதங்களுக்கு 08678 என்றும் 08679 என்றும், எண்கள் வழங்கிப் பெற்றுக் கொண்டுள்ளனர். இரண்டு கடிதங்களையும், ஒரே நாளில் ஒரே விதமான கையெழுத்துக் கொண்டவைகளை/ ஒரே முகவரி அதுவும் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினரின் முகவரியுடன் வந்தவைகளைக் குறித்து வீட்டுவசதி வாரியத்தினர் ஐயமுற்று எந்த நடவடிக்கையும் எடுக்காமல் 8.8.1984 முதல் மௌனமாக இருந்தது ஏன்?

யார் மீது குற்றம்? ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர் மீதா? அல்லது வீட்டுவசதி வாரிய நிர்வாகி மீதா? அல்லது இருவருமே இணைந்து செய்ததா? அதற்கு இந்த அரசும் துணை நின்றதா? இந்தக் கேள்விகளுக்கு என்ன பதில் என்று அறிவதற்கு மக்களுக்கு உரிமை இருக்கிறதல்லவா?

சாமியப்பன் என்பவர் வீட்டுவசதி வாரியத்துக்கு மனுச் செய்தபோது போட்டுள்ள கையெழுத்துக்கும் - அதே சாமியப்பன் தவணைபாக்கி குறித்து வீட்டுவசதி வாரிய நிர்வாகிக்கு எழுதியுள்ள கடிதத்தில் போட்டுள்ள கையெழுத்துக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் இருப்பதையும், முரசொலி பிளாக் எடுத்து வெளியிட்டிருக்கிறது.

இப்படி தெரிந்து செய்யப்பட்ட ஒரு தவறுக்கு வீட்டுவசதிவாரியம் உடந்தையாக இருந்திருக்கிறது என்பதே குற்றச்சாட்டு!

இதே விவகாரத்தை நமது திருச்சி சட்டமன்ற உறுப்பினர் தம்பி மலர்மன்னன், சட்டப்பேரவையில், வீட்டுவசதி வாரியத்தில் ஆளுங்கட்சியில் செல்வாக்கு படைத்த ஒருவர், விதிக்குப் புறம்பாக ஒன்றுக்கு மேற்பட்ட மனைகளைப் பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டிப் பேசினார்.

உடனே ஆளுங்கட்சி கொறடா குறுக்கிட்டு, இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால், உறுப்பினர் அது குறித்துப் பேசலாமா? எனக்கேட்டிருக்கிறார்.

வழக்கு எதுவும் இதுகுறித்து தொடரப்படவில்லை என்று மலர்மன்னன் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

உடன் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் எழுந்து, கொறடா வழக்கு என்கிறார் - மலர்மன்னன் வழக்கு இல்லை என்கிறார் - இதில் எது உண்மை? எனக் கேட்டிருக்கிறார்.

உடனே அவை முன்னவர் நாவலர் அவர்கள், தற்சமயம் வழக்கு எதுவும் நீதிமன்றத்தில் இல்லை. ஆனால் இதுபற்றி செய்தி வெளியிட்ட பத்திரிகைக்கு அந்த எம்.எல்.ஏ. நோட்டீஸ் கொடுத்திருக்கிறார் என்று விளக்கமளித்தார்.

அந்த விளக்கத்திற்குப் பிறகு, மலர்மன்னன் பேச்சு அவையின் நடவடிக்கைக் குறிப்பில் ஏறியிருக்கிறது.

அன்று மாலை 20.3.86 சென்னையிலிருந்து வெளியாகும் விடுதலை இதழில், மலர்மன்னன் பேசியதும், கொறடா குறுக்கிட்டதும், நாவலர் விளக்கியதும், அப்படியே வெளிவந்துவிட்டது.

காரணம், பகல் ஒரு மணிக்கே விடுதலை அச்சு வாகனம் ஏறினால்தான் வெளியூருக்கு அனுப்ப முடியும்.

ஆனால் ஒரு வேடிக்கை! மலர்மன்னன் காலை 11 மணி அளவில் பேசும்போது குறிப்பிட்ட குற்றச்சாட்டை, தனது மறு உத்திரவு வரும் வரையில் பத்திரிகைகள் வெளியிடக் கூடாதென மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்கள் பகல் 1.15 மணியளவில்தான் அவையில் அறிவித்திருக்கிறார்.

நாவலர் விளக்கத்துக்குப்பிறகு அனுமதிக்கப்பட்ட அந்தப் பேச்சின் பகுதியை, நீண்டநேர இடைவெளிக்குப்பிறகு, பகல் ஒரு மணிக்கு மேல் திடீரென அறிவித்த இடைக்காலத் தடையுத்தரவின் மூலம் தடுத்து நிறுத்துவதென்றால், பகல் ஒரு மணிக்குள்ளாக அச்சுக் கோத்து பத்திரிகையை வெளியூருக்கு அனுப்பக்கூடிய சூழ்நிலையில் உள்ள விடுதலை போன்ற ஏடுகள் என்ன செய்ய முடியும்?

குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்றால் மறுப்பளிக்கக் கூடிய வாய்ப்பு ஆளுங்கட்சி அமைச்சர்களுக்கும், பேரவை உறுப்பினர்களுக்கும் இருக்கும் போது - இப்படி ஒவ்வொரு பேச்சின் பகுதிகளையும் தடுத்து வைப்பது, அல்லது நடவடிக்கைக் குறிப்பில் ஏறக்கூடாது என ஆக்குவது, ஜனநாயகக்

கோட்பாட்டுக்கு குந்தகம் ஏற்படுத்திவிடாதா என்பதை சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பூர்வாங்க ஆதாரம் ஏதுமின்றி, போகிற போக்கில் புழுதி வாரித் தூற்றுவது போலக் குற்றச்சாட்டுகள் அமையுமானால், அவற்றுக்கு இடம் தரக்கூடாது என்பதில் இருவித கருத்துக்கு இடமே இல்லை!

ஆனால் அரசின் கவனத்துக்கும், மக்கள் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டு, நிலைமைகள் சீர்படுவதற்காக பூர்வாங்க ஆதாரங்களுடன் கூறப்படும் குற்றச்சாட்டுகளை, திரைபோட்டு மறைக்க முயல்வது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை!

அன்புடன்

மு.க.

22-03-1986

1404. அன்புத் தம்பிக்கு, அண்ணனின் வேண்டுகோள்!

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவர், முதலமைச்சர் வீட்டில் எழுபத்தி ஏழு நாட்கள் தொலைபேசி வேலை செய்யாத நிலையிலும், ஒயர்லெஸ் மூலம் வெள்ள நிவாரண நடவடிக்கைகளில் முதலமைச்சர் ஈடுபட்டார் என்று பேசிய போது, தி.மு.க. உறுப்பினர் ரகுமான்கான் குறுக்கிட்டுப் பேசியதற்கு சில அமைச்சர்கள் பதில் அளித்தனர். அப்போது துணைச் சபாநாயகர் இருக்கையில் அமர்ந்திருந்தார். அப்போது சபாநாயகர் பாண்டியன் இருக்கையில் வந்து அமர்ந்தார். ரகுமான்கான் பேசுவதை அனுமதிப்பதாக இல்லை என்று சபாநாயகர் கூறியதைத் தொடர்ந்து இருவருக்கும் சுமார் பதினைந்து நிமிடங்களுக்குக் காரசாரமான வாக்கு வாதம் நடைபெற்றது. இருவரும் பரஸ்பரம் சர்வ சாதாரணமாக ஏக வசனத்தில் வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டனர். அவை முன்னவர் நாவலர் நெடுஞ்செழியன் குறுக்கிட்டு சபாநாயகருக்கும் ரகுமான்கானுக்கும் இடையே நடைபெற்ற ஏகவசன வாக்குவாதங்களை அவைக்குறிப்பிலிருந்து நீக்குமாறு கூற, அவ்வாறே நீக்கப்பட்டது

இவ்வாறு இன்றைய 22.3.86 காலை ஏடுகள் பலவற்றில் செய்திகளைக் கண்டு, நான் மட்டுமல்ல! நடுநிலையில் இருந்து சிந்திக்கின்ற அனைவருமே தமிழக சட்டப் பேரவையின் நடவடிக்கைகள் குறித்து வேதனைப்படவே செய்வர்!

இது முதல் தடவையல்ல, பல தடவைகள் படிக்கக் கண் கூசுகின்ற - சொல்ல நாக்கூசுகின்ற - கேட்கச் செவி கூசுகின்ற - ஏகவசனங்கள், காட்சிகள், தமிழக சட்டப் பேரவையின் நற்பெயருக்குக் களங்கம் உண்டாக்கக் கூடிய அளவுக்கு உச்ச

கட்டத்துக்குப்போய் - சென்ற ஆண்டு அந்த உச்ச கட்டத்தின் உச்சியையே தாண்டுகிற அளவுக்கு நிலைமைகள் முற்றிப்போய், புயலுக்குப் பின் அமைதி போல, இனியாவது நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும் - அடுத்து நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என எதிர்பார்த்திருக்கும்போது - மீண்டும் ஏகவசனங்கள், முண்டாதட்டல்கள், நீ என்னடா உன் தலைவன் மிரட்டலுக்கே பயப்பட மாட்டேண்டா என்றும், என் தலைவனை ஏன் இழுக்கிறாய்? எனக்குப் பதில் சொல்! என்றும் இப்படிச் சபாநாயகரும், சட்டமன்ற உறுப்பினரும் ஹோதாவில் இறங்குகிற அளவிற்கு, அழுக்கும், இழுக்கும் நிறைந்த வார்த்தைகள் அள்ளியிறைக்கப்படுகிற இடம், ஏதோ ஒரு முச்சந்தி, முனையாக இருந்தால், அதுபற்றிக் கவலைப்படுவதைக்கூடத் தவிர்க்கலாம்.

ஆனால் ஜனநாயக ரீதியில் கருத்துகளை, வாதங்களை அடுக்கிக்காட்ட, ஆயிரங்காலத்துப் பயிராம் பாராளுமன்ற பண்பாடுகளை வளர்க்க வேண்டிய ஒரு இடத்தில் சபாநாயகரும், சட்டமன்ற உறுப்பினரும் ஏகவசனச் சொல்மழை பொழிவதென்பது அடிக்கடி நடக்கும் தொடர் நிகழ்ச்சிகளாவதை யாராலும் பொறுத்துக் கொள்ள இயலாது!

நான் சபாநாயகருக்கு எதுவும் சொல்ல விரும்பவில்லை! ஏழை சொல் அம்பலம் ஏறாது என்பது போல, என் சொல் அவரது காதில் ஏறாது! அவருக்குச் சொல்லக்கூடிய அளவுக்குத் தகுதியோ, உரிமையோ படைத்தவனல்ல நான்!

தம்பி ரகுமான்கானிடம் எனக்கிருக்கும் உரிமையின் காரணமாக, நான் அந்தத் தம்பிக்குச் சொல்லிக் கொள்கிறேன் - அழகாகப் பேசுகிறாய்! ஆணித்தரமான வாதங்களை எடுத்து வைக்கிறாய்! அரசின் நிர்வாகக் கோணல்களை அடுக்கடுக்காகத் தொகுத்து காட்டுகிறாய்! மகிழ்கிறேன்! பாராட்டுகிறேன்! பிறர் உன் திறமை கண்டு என்னிடம் புகழும் போது பூரித்துப் போகிறேன்!

ஆனால் அன்புத்தம்பியே! சபாநாயகரும் நீயும் ஏகவசனத்தில், பரஸ்பரம், சர்வசாதாரண வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டீர்கள் என்று பத்திரிகையில் செய்தி படிக்கும்போது பதைக்கிறேன்! துடிக்கிறேன்!

சிங்கக் குட்டியிடம் கர்ச்சனையை எதிர்பார்க்கும் போது, அதுவும் ஓநாய் போல ஊளையிட்டது என்றால் உள்ளம் நைந்துபோகுமல்லவா?

குருதியில் நனைந்த மாவீரனது வாளின் வீச்சு, அவன் பேச்சு! எனப் புகழ்பாடிக் கொண்டிருக்கும் போது, கும்பியில் தோய்ந்த மாட்டின் வால்வீச்சுக்கு எதிர்வீச்சாகிவிட்டதே அவன் பேச்சு என்ற ஏக்கம் எனக்கு ஏற்படக்கூடாதல்லவா?

எழுபத்தி ஏழு நாட்கள் முதலமைச்சர் இல்லத்தில் தொலைபேசியில்லையென்று நீயோ, நானோ சொல்ல வில்லை!

மாநில முதலமைச்சர்கள் என்றால் கிள்ளுக்கீரையாக எண்ணிக் கொண்டு, தூக்கம் பற்றிய ஒரு பிரச்சினையை டெல்லிப் பாராளுமன்றத்தில் மத்திய அமைச்சர் மக்வானா எழுப்ப - அதற்கு அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் அளித்த மறுப்பின்போது வெளிப்பட்ட உண்மை அது!

முதல்வர் வீட்டில் இரண்டரைமாத காலம் தொலைபேசி துண்டிக்கப்பட்டிருந்தது ஏன்? என்பது பெரிய விவகாரம்தான்!

ஆனால் அந்த விவகாரம், விகாரமாகிற அளவுக்கு விவாதம் நீளுகிறபோது - நீயும் ஏகவசனம் பேசத் தொடங்கினாய் என்பது, உன் இளமை முறுக்கின் விளைவு எனினும், உன்னை நீ கட்டுப்படுத்திக் கொண்டுதானிருக்க வேண்டும்!

இந்த அறிவுரையை, தம்பி ரகுமான்கான் ஏற்றுக் கொண்டுள்ள அண்ணன் என்ற முறையில் அவருக்கும், அவரைப்போன்ற உடன்பிறப்புகளுக்கும் வழங்கிட நான் கடமைப்பட்டவன்! எனவே இதனை அன்புரையாக அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்!

உடன்பிறப்பே! ஆனால் ஒன்றைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

இந்திராநகர் பிரேமா கொலை வழக்கு சம்பந்தமாக, தன்னிடம் ஆதாரம் இருப்பதாக 1978 ஜனவரி 5ஆம் நாள் பேரவையில் பேசிய ரகுமான்கான் கூறினார்.

பிறகு அவரே ஆதாரம் தர இயலவில்லை என்றும், அதற்கான விளக்கங்களையும் அளித்துவிட்டார்.

ஆனால் நமது சபாநாயகர் அவர்கள், எப்போது ரகுமான்கானுடன் வாதம் செய்தாலும் கொண்டுவா! பிரேமா கொலை வழக்கு ஆதாரத்தை! என்றே திரும்பத் திரும்ப எட்டு வருடங்களுக்குப் பிறகும் கேட்கிறார்.

இந்த எட்டு ஆண்டில் இரண்டு சபாநாயகர்கள் மாறிவிட்டார்கள். ஆனால் இவர் மட்டும் அந்த ஆதாரத்தைக் கொண்டுவா என்ற அறைகூவலை விடவில்லை!

என் மீது அவதூறு கூறி, தேனி என்றும், முத்து தேவன்பட்டித் தோட்டம் என்றும் முழங்கி ஆதாரம் கொண்டு வர அவகாசம் கேட்டு, இல்லையேல் ராஜினாமா செய்வேன் என்று அறைகூவல் விட்டு, பிறகு ஒரு போர்ஜரி கையெழுத்துப் போட்டு ஒரு மோசடியான பத்திரத்தை ஆதாரம் என்று காட்டி, அதை அன்றிருந்த சபாநாயகர் ராஜாராம் அவர்களும், ஆளுங்கட்சி உள்ளிட்ட எல்லாக்கட்சித் தலைவர்களும் ஏற்றுக் கொள்ள இயலாது என்று கூறிய பிறகும் - அமைச்சராகவே ஒருவர் தொடர்ந்து இருந்து, எந்த நடவடிக்கையும் அவர் மீது எடுக்கப்படாமல் இன்று நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஆகிவிட்டாரே! அதுபோல ரகுமான்கானும், பிரேமா கொலைவழக்கு சம்பந்தமாக ஒரு போலி ஆதாரத்தைக் காட்டியிருக்கலாம்.

ஆனால் ரகுமான்கான் மிகுந்த நேர்மையுடன், தன்னிடம் அந்த ஆதாரம் அப்போது இல்லை என்று ஒத்துக்கொண்டு விட்டார். திரும்பத் திரும்ப அவரை 1978ஆம் ஆண்டுக்கே விரட்டிக் கொண்டு போய்,

எங்கே அந்த ஆதாரம்? எனக்கேட்கும் போது, அவரும் பதிலுக்கு அன்பரசு எம்.பி. பேசியதாகச் சபையில் முதல்வர் காட்டிய டேப்பைப் போட்டுக் காட்டுங்கள் என்று கேட்டோமே! அதை முதலில் போட்டுக் காட்டுங்கள்! என்று கேட்க வேண்டிய நிலை ஏற்படத்தானே செய்யும்!

நீதிபதி இஸ்மாயில் கமிஷன் தந்த சென்னை சிறைச்சாலை மிசாக் கொடுமை ஆதாரங்களின் கதி என்ன?

நீதிபதி பால் கமிஷன் தந்த திருச்செந்தூர் கோயில் அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை கொலை பற்றிய ஆதாரங்களின் கதி என்ன?

நீதிபதி நஞ்சப்பா கமிஷன் தந்ததே, சேலம் கிச்சிபாளையம் அரிஜனப் பெண் தெய்வயானை கொலை பற்றிய ஆதாரம்! அதன் கதி என்ன?

மாலா என்ற பெண் உயிரோடு சென்னையில் கொளுத்தப் பட்டதற்கு நானே அவையில் முதல்வரிடம் தந்தேனே ஆதாரம்! அதன் கதி என்ன?

புட்லூர் தண்டபாணி கொலை குறித்து, அவரே முன் கூட்டி எழுதியிருந்த கடிதங்கள் உட்பட பலவற்றை அவையில் ஆதாரமாக அளித்தேனே அதன் கதி என்ன?

மக்கள் மன்றத்தில் இந்த வினாக் குறிகள் விசுவரூபம் எடுக்கும்போது, சட்டமன்றத்துக்குள் அமர்ந்து சல்லடம் கட்டி அதனைச் சமாளித்து விடலாம் என எண்ணுவது ஏற்றுள்ள பொறுப்புக்கு அழகாகுமா?

இத்தனை ஆதாரங்களையும் பொருட்படுத்தாமல், ராஜரீகம் நடத்துபவர்களிடம் ஒருவேளை பிரேமா கொலை பற்றி ஆதாரமும் தரப்பட்டால், அதையும் பிரேம் போட்டு மாட்டி வைத்துக் கொள்வார்களே தவிர, வேறென்ன செய்வார்கள்!

இறுதியாக ஒன்று! சட்டமன்ற மரபு மரியாதைகளுக்குப் பொறுப்புள்ளவர்கள் மதிப்பு தந்தாலும், தராவிட்டாலும் தம்பி ரகுமான்கானைப் போன்றவர்கள் அந்த மதிப்பைத் தந்திடத் தவறக்கூடாது என்பது தான் என் வேண்டுகோள்!

ஜனநாயக ரீதியில் வாதாட, செயல்பட, குற்றம்சாட்ட, குறைகள்கூற, சட்டமன்றத்தில் எத்தனையோ முறையான வழிவகைகள் உண்டு!

அதைத் தடுத்திட எவராலும் முடியாது!

அந்த வழிமுறைகளைப் பின்பற்றி, தம்பி ரகுமான்கான் போன்றவர்கள், பெற்றுள்ள புகழை, மேலும் பெருக்கிட வேண்டுமென்பதே என் விழைவு!

அன்புடன்

மு.க.

23-03-1986

1405. பிப்ரவரி 23ம், மார்ச் 23ம்!

உடன்பிறப்பே,

பட்டதாரிகள் தொகுதியிலிருந்தும், ஆசிரியர் தொகுதியிலிருந்தும், சட்டமன்ற மேலவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் ஜனநாயகக் களத்தில் கழகம், நல்லதோர் வெற்றியினைப் பெற்றிருக்கிறது.

சென்னை, செங்கை அண்ணா மாவட்டம் ஆசிரியர் தொகுதியிலும், கோவை, நீலகிரி, பெரியார், சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களின் பட்டதாரித் தொகுதியிலும், தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களின் பட்டதாரித் தொகுதியிலும், ஆளுங்கட்சியான அ.தி.மு.க., இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு தனது கட்சி வேட்பாளர்களை அதிகாரப்பூர்வமாக அறிவித்து, முதலமைச்சரின் வேண்டுகோள் அறிக்கைகளும் - ஆங்காங்கு முகாமிட்டுப் பணியாற்றிய மாவட்ட அமைச்சர்களின் தீவிர முயற்சிகளும் பலனளிக்காமல் இந்த மூன்று தொகுதிகளிலும் மிகக் குறைவான வாக்குகளை மட்டுமே பெற்று பெருந்தோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கிறது.

தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை பட்டதாரித் தொகுதியில் அ.தி.மு.க.வின் தஞ்சை மாவட்டச் செயலாளர் பெற்ற வாக்குகள் 4,950.

கோவை, நீலகிரி, பெரியார், சேலம், தர்மபுரி பட்டதாரித் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளரும், இதுவரை சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தவருமான நண்பர் ஜனார்த்தனம் பெற்ற வாக்குகள் 5,356.

சென்னை, செங்கை அண்ணா மாவட்ட ஆசிரியர் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளரும், இதுவரை சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தவருமான திருமதி லீலாவதி பெற்ற வாக்குகள் 1,524.

இந்த மூன்று இடங்களன்னியில், மதுரை, இராமநாதபுரம், பசும்பொன்தேவர், காமராசர் மாவட்டத்தில், ஆதரவு தேவையில்லை என்று கூறியுங்கூட ஆதரவு அளித்தே தீருவோமென சூளுரைத்து அ.தி.மு.க., வலுவில் ஆதரவு வழங்கிய ஆசிரியர் தொகுதியில் நண்பர் தாமஸ் பெற்ற வாக்குகள் 2,783.

ஆக, இதையும் இணைத்துக் கொண்டால் கூட இந்த நான்கு தொகுதிகளிலும், பட்டதாரிகளிடமும், ஆசிரியர்களிடமும் ஆளுங்கட்சியான அ.தி.மு.க., இந்திரா காங்கிரஸ் துணையுடன் பெற முடிந்த மொத்த வாக்குகள் 14,613 தான்!

நம்முடைய கழக வேட்பாளர் தம்பி கணேசன், தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டைப் பட்டதாரித் தொகுதியில் பெற்றுள்ள மொத்த வாக்குகள் 18,126.

கோவை, நீலகிரி, பெரியார், சேலம், தர்மபுரி பட்டதாரித் தொகுதியில் நம்முடைய கழக வேட்பாளர் தம்பி கே.எம். தண்டபாணி பெற்றுள்ள மொத்த வாக்குகள் 15,042.

சென்னை, செங்கை அண்ணா மாவட்டத்து ஆசிரியர் தொகுதியில் சுமார் 500 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்த கழகத்தின் ஆதரவு வேட்பாளர் அன்பு உடன்பிறப்பு ஜனகன் பெற்ற மொத்த வாக்குகள் 4,471.

மதுரை, ராமநாதபுரம், மதுரை அண்ணா, காமராசர், பசும்பொன் தேவர் மாவட்டங்களின் ஆசிரியர் தொகுதியில் கழக ஆதரவு பெற்ற வேட்பாளர் அருமை நண்பர் வேம்பு, வெற்றி வாய்ப்பை இழந்தபோதிலும் அவர் பெற்றுள்ள வாக்குகள் 3,436.

எனவே கழகத்துக்கு, பட்டதாரிகள் ஆசிரியர்கள் தொகுதிகளில் கிடைத்த மொத்த வாக்குகள் 41,075. ஆம்! நமக்கு 41,075 வாக்குகள்! ஆளுங்கட்சிகளின் கூட்டணி வேட்பாளர்களான அ.தி.மு.க.வினருக்குக் கிடைத்த மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 14,613 மட்டுமே!

இஃதன்னியில் மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர் அணியின் வேட்பாளர் நண்பர் பார்த்தசாரதி பெற்ற வாக்குகள் 6,712-உம் சென்னை, செங்கை அண்ணா மாவட்டத்தில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி ஆதரவுபெற்ற வேட்பாளர் நண்பர் மாயவன் பெற்ற வாக்குகள் 4,970-உம் சேர்த்தால் ஆளுங்கட்சியான

அ.தி.மு.க.வை எதிர்த்து மேலும் 11,682 வாக்குகள் என்ற எண்ணிக்கை வரும்!

ஆசிரியர் தொகுதிகள் இரண்டிலும் நமது ஆதரவு பெற்ற வேட்பாளர்கள் வெற்றி பெற இயலாவிடினும், பட்டதாரித் தொகுதிகளில் பட்டம் பெற்ற ஆசிரியப் பெருமக்களின் வாக்குகளும் நமக்குப் பெரும்பான்மையாகக் கிடைத்து, கழக வேட்பாளர்களான தம்பி எல்.கணேசன், தம்பி கே.எம்.தண்டபாணி இருவரும் வெற்றி வாகை சூடியுள்ளனர்!

கணக்குத் தீர்க்கப்பட்டது என்றும், கல்லறை கட்டப் பட்டதென்றும், கழுதை தேய்ந்து கட்டெறும்பாக ஆனதென்றும், கருணாநிதியே அரசியலை விட்டு விலகுகிறாயா? என்றும் கழகத்தையும், என்னையும் காரசாரமாகத் தாக்கியவர்களுக்கு பிப்ரவரி 23ஆம் நாள் தக்க விடையளித்தனர், தமிழ்நாட்டு மக்கள்!

அதற்குப் பிறகும் கூட, என்மீதும், கழகத்தின் மீதும் ஆபாச அர்ச்சனைகளையும், எந்தத் தரத்திலும் சேராத வசை மொழிகளையும், நரகல் நடையில் நாள்தோறும் வாரியிறைத்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு மார்ச் 23ஆம் நாள் தமிழகம் மீண்டும் ஒரு பாடத்தை புகட்டியிருக்கிறது!

பிப்ரவரி 23-உம், மார்ச் 23-உம் தந்துள்ள தீர்ப்புக்குத் தலைவணங்கித் திருந்திக் கொள்ள ஆளுங்கட்சியினர் முன்வருவார்களேயானால், அவர்களுக்கும், நாட்டுக்கும், அரசியல் பண்பாட்டுக்கும் நல்லது!

தி.மு.க., தேய்ந்தலாடம்! செத்துப் போனகட்சி! இனி, கழகத்தைக் கலைத்து விட்டு வேறு வேலை பார்க்கலாம்!

இவைகளையும், இவை போன்ற நாராச வாசகங்களையும் உரக்க ஒலிப்பதின் காரணமாகவே, ஊழல், நிர்வாகச் சீர்கேடு, பழிவாங்கும் போக்கு, பயங்கர அடக்குமுறை, ஆசிரியர்கள், அரசு அலுவலர், தலைமைச் செயலகப் பணியாளர்கள் மீதெல்லாம் வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கை இத்தனைப் பரிபாலனக் குறைபாடுகளையும் மறைத்து விடலாம் என நம்பினார்கள்!

ஆனால், நாடு இனி இவர்களை நம்பத் தயாராக இல்லை!

அதன் அடையாளம்தான், நான்கு இடங்களிலும் அவர்களுக்கு, 14,613 வாக்கு!

நமக்கு, 41,075 வாக்கு!

வெற்றி பெற்ற நால்வரையும் அண்ணா வழியைப் பின்பற்றி, வாழ்த்துகிறேன்!

வென்ற நால்வரில் நமது ஆதரவு பெற்றவர்கள் இருவர் வெற்றி பெறாவிடினும், வென்றிருப்போர் இருவரும் ஆளுங்கட்சியின் குறைகளைச் சுட்டிக்காட்டிக் குரல் கொடுக்கும் எதிர்தரப்பினர்!

எனவே அவர்களையும் உளமார வாழ்த்துகிறேன்!

நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் வெற்றிபெற்றுப் பதவியேற்ற அனைவரையும் வாழ்த்தியிருக்கிறேன் என்கிறபோது, நாட்டு நலிவு போக்கவும், ஆசிரியச் சமுதாயத்தின் உரிமைக்காக இணைந்து குரல் கொடுக்கவும் தயங்காத நண்பர்களை வாழ்த்துவது, மேலும் பொருத்தம் தானே!

தம்பிகள் கணேசன், தண்டபாணி இருவருக்கும் வெற்றியளித்த வாக்காளர்கள், வெற்றிக்குப் பணியாற்றிய உடன்பிறப்புகள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

வெற்றிக்கான வாய்ப்பு கிட்டாவிடினும், அன்பு உடன்பிறப்பு ஜனகன், அருமை நண்பர் வேம்பு இருவருக்கும் கணிசமான வாக்குகளை வழங்கிய வாக்காளர்களுக்கும், அரும்பணியாற்றிய உடன்பிறப்புகளுக்கும் நன்றி கூறுகிறேன்!

ஒரு மாத இடைவெளியில் இருபெரும் வெற்றியினைப் பெற்றுள்ள மகிழ்ச்சியில் மதமதப்புச் சிறிதும் ஏற்பட இடம்தராமல், அடக்கமுடன், அரசியல் பண்பாடு குலையாமல், ஆக்கபூர்வமான பணிகளுக்கு நம்மை ஒப்படைத்துக் கொண்டு, உழைத்திடுவோம் தொடர்ந்து, உறுதி வாய்ந்த உள்ளத்துடன்!

அன்புடன்

மு.க.

26-03-1986

1406. கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்போம், வா!

உடன்பிறப்பே,

லிபியா மக்கள் மீது அமெரிக்காவுக்கு எந்தவித விரோதமோ வெறுப்போ கிடையாது. உண்மையில் அவர்களுடன் ஆக்கபூர்வமான உறவுகளையே விரும்புகிறது!

ஆகா! என்னே உருக்கம்! என்னே இளகிய நெஞ்சம்! உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத நிலை எது என்பதற்கு இதனையன்றோ உதாரணமாகக் காட்டவேண்டும்!

சற்றுத் தவறியிருந்தால் லிபியாவின் அதிபர் கடாபியின் உயிரும், அவரது பதினாறுமாத வளர்ப்புக் குழந்தையின் உயிரைப்போல குண்டு வீச்சுக்குப் பலியாகியிருக்கும்! அமெரிக்கா கூறுவதைப் போல தீவிரவாதிகள் யாரும் கொல்லப்படவில்லை. லிபியாவின் சாதாரண மக்கள் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில், அமெரிக்க விமானங்கள் பொழிந்த குண்டுகளுக்கு இரையாகியிருக்கிறார்கள்!

ஆனாலும், அமெரிக்காவின் அரசாங்கம் அறிவிக்கிறது!

லிபியா மக்கள் மீது எங்களுக்கு விரோதமோ வெறுப்போ கிடையாது என்று!

இது எங்கேயோ கேட்ட குரல் போல் இருக்கிறதல்லவா?

ஆம்! இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவின் குரலும் இப்படித்தான் ஒலித்துக் கொண்டிருக்கிறது!

இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் மீது எங்களுக்கு, விரோதமோ, வெறுப்போ கிடையாது. அவர்களுடன் ஆக்கப்பூர்வமான உறவுகளையே விரும்புகிறோம்!

இப்படிக் கூறிக்கொண்டே இலங்கையில் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்தும் - அவர்தம் உடைமைகளைச்

சூறையாடியும் - தமிழ்ப் பெண்மணிகளின் கற்பை அழித்தும் - நூற்றுக்கணக்கான குழந்தைகளை அனலில் போட்டு வதக்கியும் - சிறையிலிருந்த தமிழ்ப்போராளிகளையும் அவர்தம் தளபதிகளாம் தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் ஆகியோரையும் கொட்டடிக்குள் வைத்தே கொலை செய்தும் - கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள தமிழ்மக்களின் நூலகத்தை உருத்தெரியாமல் கொளுத்திச் சாம்பலாக்கியும் - வெறியாட்டமாடிய, இன்னமும் அதே வெறியாட்டத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிற - சிங்கள அரசு, இலங்கையில் உள்ள தமிழ்மக்கள் மீது எங்களுக்கு விரோதம் கிடையாது, தீவிரவாதிகளைத்தான் குறிவைக்கிறோம் என்றுதானே பசப்பிக் கொண்டிருக்கிறது!

அமெரிக்கக் கங்காருவின் குட்டியாகத் திகழுகிற இலங்கை அரசாங்கம் இப்படிப் பேசிக் கொண்டுதான் - உலகநாடுகளை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது! நாள்தோறும் இலங்கையில் தமிழ்ச்சாதி அழிந்து கொண்டிருக்கிறது!

லிபியா மீது ஒரு தாக்குதல்! அதற்கு என்ன காரணத்தைச் சொல்லித் தன்மீது குற்றமில்லையென்று அமெரிக்கா வாதாட முயன்றாலும், நாம் அதன் செயலை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை! நாம் என்ன? சாதாரணம்!

உலகின் பலநாடுகள் அமெரிக்காவின் கூற்றை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை! பாகிஸ்தானே கண்டிக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளேன்!

இந்திய அரசும், இந்தியாவின் அனைத்து அரசியல் கட்சிகளும் அமெரிக்காமீது கண்டனக் கணைகளைப் பொழிந்திடத் தவறவில்லை!

முப்பது லட்சம் மக்களைக் கொண்ட லிபியா ஒரு நாடாக இருக்கிறது!

அந்த நாட்டு மக்கள் தாக்கப்படும்போது, அணிசேரா நாட்டுத் தலைவர்கள் அனைவருமே துடித்துப் போகிறார்கள்.

அந்த அணிசேரா நாட்டு அமைப்பில்தான் இலங்கையும் இருக்கிறது.

அந்த இலங்கையில் முப்பது லட்சம் பூர்வீகத் தமிழர்களும், மற்றும் பல லட்சம் தோட்டத்தொழிலாளர்களும் இலங்கை அரசின்

கொடுமைக்கும், சிங்களக் காடையர்களின் வெறிச் செயலுக்கும் நாள்தோறும் ஆளாகிறார்கள்!

தமிழ் ஈழப்பகுதிகளில் விமான மூலம் குண்டு வீசியே தாக்குதல் நடக்கிறது!

அந்த இலங்கை அரசு அணிசேரா நாடுகளில் ஒரு அங்கம்!

அதற்குத் துணை நிற்கின்ற பாகிஸ்தானும் அணி சேரா நாடுகளில் ஒரு அங்கமேதான்!

இவைகளேயன்னியில், பெரியநாடுகள் கூட அமெரிக்காவுக்குக் கடும் எச்சரிக்கையினை வழங்கியுள்ளன!

இந்தக் கண்டனங்களுடன் நமது குரலும் இணைகிறது!

ஆனால்...

ஆனால்...

உடன்பிறப்பே,

எனக்கும், உனக்கும் ஒரு ஏக்கப்பெருமூச்சு எழத்தானே செய்கிறது!

அண்மையில் டெல்லிப்பட்டினத்தில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் கூட்டத்தில் உரையாற்றிய நமது பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள்,

பாலஸ்தீனியர்கள் நியாயமான கோரிக்கை மறுக்கப் படுவதை ஆவேசமாகக் கண்டித்தார்.

லிபியா மீது குண்டு வீசப்பட்டது பெருங்கண்டனத்துக் குரியது எனக் குறிப்பிட்டார்.

தென்னாப்பிரிக்கா இனவெறி அரசுகளின் மீது சீறிப்பாய்ந்தார்.

தென்னாப்பிரிக்கா சுதந்திரப் போராட்ட வீரர்களின் வீரமிக்க போராட்டத்தை உணர்ச்சியுடன் வரவேற்றார்.

பாராட்டத்தக்க பேச்சு! வரலாற்று வரிகளில் நிலைத்திடக் கூடிய உரை!

ஆனால் - இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா நம்பியிருந்த வட்ட மேசை மாநாடு தோல்வியுற்ற பிறகும், திம்பு - டெல்லி பேச்சுவார்த்தைகள் - போர்நிறுத்த ஒப்பந்தம் - போர் நிறுத்த மேற்பார்வைக் குழு - எல்லாமே காற்றோடு கலந்த செய்திகளாகிவிட்ட பிறகும், அன்றாடம் அப்பாவித் தமிழர்கள்

கொல்லப்படுகிறார்கள் என்பதும், கடந்த பத்து மாதங்களில் மட்டும் மூவாயிரம் தமிழர்களின் உயிர் பறிக்கப்பட்டிருக்கிறது என்பதும், நமது பிரதமர் ராஜீவ் அவர்களுக்கு ஆவேசத்தை ஏற்படுத்தவில்லையே ஏன்? உணர்ச்சியைத் தூண்டவில்லையே ஏன்?

இந்தக் கேள்விக்கு விடைகாணவும், இலங்கையில் ஜெயவர்த்தனா அரசு நடத்தும் இனப்படுகொலையைத் தமிழகம் மட்டுமல்ல - இந்தியாவே கண்டிக்கிறது என்பதை இலங்கைக்கு உணர்த்தவும் - இனியும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா தயக்கம் காட்டக் கூடாது என்று வலியுறுத்தவும் - மதுரை மாநகரில் மே திங்கள் நான்காம் நாள் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாடு நடைபெறுகிறது!

அந்த மாநாட்டிற்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன!

இந்திய நாட்டின் பல்வேறு கட்சித் தலைவர்களும், கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்கிறார்கள்.

இலங்கைத் தமிழர் பாதுகாப்புக்காக - முன்பு நாம் மாவட்டம் தோறும் நடத்திய பேரணியே மகத்தான எழுச்சியைத் தந்தது!

இப்போது மதுரையில் மே 4 ஞாயிறன்று மாலையில் நடைபெற இருப்பது இந்த மாநிலத்திலிருந்து மட்டுமல்ல! வெளி மாநிலங்களில் உள்ளவர்களும் கலந்து கொள்ளும் மாநாடு!

இலங்கைத் தமிழர் தலைவர்களும், போராளிகளின் தலைவர்களும் இந்த மாநாட்டுக்குச் சிறப்புப் பார்வையாளர்களாக அழைக்கப்பட இருக்கிறார்கள்!

எனவே, உடன்பிறப்பே! நீயும் உன் போன்ற உடன்பிறப்புகளும் பட்டிதொட்டி, சிற்றூர், பேரூர், ஒன்றியம், நகரம் என்றுள்ள எல்லாப்பகுதிகளில் இருந்தும் மே 4 - மதுரைக்கு வந்து சேர்ந்திட, இன்றே பயண ஆயத்தங்களை செய்து கொள்க!

அன்புடன்

மு.க.

21-04-1986

1407. இலங்கைத் தமிழரைக் காத்திட இதோ மற்றொரு முயற்சி!

உடன்பிறப்பே,

இலங்கைப் பிரச்சினை வளர்ந்து கொண்டே போவதால் இலங்கையில் தமிழ்இனம் அழிக்கப்படுவது மட்டுமல்ல, இந்தியாவுக்கே ஆபத்துகள் சூழக்கூடிய அளவுக்கு இந்தியாவின் பாதுகாப்பே தெற்கு முனையில் ஒரு கேள்விக்குறி ஆகி விடுமோ என்ற அச்ச உணர்வு, இந்திய அரசு கையாண்டு வரும் மெத்தனப் போக்கினால் ஏற்பட்டுள்ளது!

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு நடவடிக்கையே எடுக்கவில்லையா என்றால் - எடுத்தது!

வட்டமேஜை மாநாடு, திம்பு பேச்சு வார்த்தை, போர் நிறுத்த ஒப்பந்தம், அதனைக் கண்காணிக்க இலங்கை அரசு அமைத்த குழு - இப்படி இந்திய அரசு நம்பிக்கொண்டிருந்த எல்லாமே தோல்வியடைந்து விட்டன என்பது தெளிவான உண்மை!

இலங்கை அரசு, வெளிநாடுகளில் இருந்து தனக்குப் பலவகையிலும் வலுவைச் சேர்த்துக் கொண்டு, தமிழர்களின் வாழ்வைச் சீர்குலைத்தும், அவர்களின் உயிரைப் போக்கியும், எண்ணிலடங்கா இழிதகைக் கொடுஞ்செயல் புரிந்தும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இராணுவதளமாக இருப்பதற்குக்கூட சம்மதம் தெரிவித்தும், இலங்கையில் சிங்களவர் மட்டுமே இருக்கமுடியும் என்ற ஒரு நிலையை உருவாக்கத் திட்டம் தீட்டி அதனைச் செயல்படுத்தியும் வருகிறது!

இலங்கைத் தமிழர்களின் கண்ணீரைத் துடைக்க தமிழ்நாட்டு மக்களாகிய நாம், கட்சி சார்பற்ற முறையிலே நம்மாலான அனைத்தையும் செய்து விட்டோம் - இன்னமும் செய்து கொண்டிருக்கிறோம்!

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாத்திட, மத்திய அரசின் கவனத்தைத் திருப்ப தமிழ்நாட்டில் எத்தனையோ போராட்டங்கள்! எத்தனையோ முறை சிறைவாசங்கள்! எத்தனையோ தமிழர்கள் தீக்குளித்துச் செத்த சம்பவங்கள்!

இலங்கையில் கொடுமையில் உழலும் தமிழர்களைக் காப்பாற்றத் தமிழ்நாட்டு அளவிலே மட்டுமின்றி - இந்திய நாட்டு அளவிலேயும் மத்திய அரசுக்குச் சுறுசுறுப்பை உண்டாக்கவும் - ஏதோ காரியமாற்றுவது போல் நாடகமாடித் தமிழ்நாட்டு மக்களை மத்திய அரசு ஏமாற்றிக் கொண்டிராமல் - எப்படிச் செயல்பட வேண்டுமென எடுத்துச் சொல்லவும் - மதுரை மாநகரில் மே திங்கள் நாலாம் நாள் ஞாயிறன்று இந்திய நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாடு நடைபெற இருக்கிறது என்பதை முன்னரே உனக்கு எழுதியுள்ளேன்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானம் குறித்து மே 4, காலை 11 மணி அளவில், மாநாட்டில் கலந்துகொள்ளும் கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் கலந்துரையாடுகிறார்கள்.

மாலையில் சரியாக ஐந்து மணிக்குத் திறந்தவெளி மாநாடு நடைபெறுகிறது. காலையில் விவாதித்து முழுமையான வடிவம் பெற்ற தீர்மானம் குறித்து மாலையில் அந்த மாபெரும் மாநாட்டில் விளக்கப்பட இருக்கிறது.

மாநாட்டு நிகழ்ச்சிகளை ஆந்திரத்து முதலமைச்சரும் - தெலுங்கு தேசக் கட்சியின் நிறுவனத் தலைவருமான - திரு.என்.டி. ராமராவ் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

மாநாட்டில் கலந்துகொள்வதற்கு ஜனதா கட்சித் தலைவர் பேராசிரியர் மதுதண்டவதே, பாரதீய ஜனதாவின் தலைவர் திரு. வாஜ்பாய், லோக்தளக் கட்சியின் தலைவர் திரு. பகுகுணா, காங்கிரஸ் எஸ் கட்சியின் சார்பில் திரு.கே.பி.உன்னிகிருஷ்ணன் எம்.பி., கர்நாடக மாநில உள்துறை அமைச்சர் திரு. ராச்சய்யா, ஆகியோர் ஒப்புதல் தந்துள்ளார்கள். பஞ்சாப் முதல்வர் திரு.பர்னாலா அவர்கள் தொலைபேசியில் தொடர்புகொண்டு எப்படியும் வருவதற்கு முயற்சி மேற்கொள்வதாகக் கூறியுள்ளார். பஞ்சாப் மாநிலத்தின் இன்றைய சூழலில் ஒருவேளை அவர்

வரஇயலாமற்போனால் - அகாலிதளத்தின் சார்பில் நிச்சயம் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்றும் மிக்க ஆர்வத்துடன் கூறியிருக்கிறார்.

மற்றக் கட்சிகளின் சார்பில் கலந்து கொள்வோர் யார் என்பது விரைவில் அறிவிக்கப்படும்.

மாநாடு எல்லா வகையிலும் வெற்றிபெற டெசோ இயக்கத்தின் செயல்வீரர்கள் பணிபுரியத் தொடங்கி விட்டார்கள். மாநாட்டுக்கான முன்னறிவிப்புச் சுவரொட்டிகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சியற்றப்பட்டு, தமிழக முழுவதுமுள்ள இயக்க அமைப்புகளுக்கு அனுப்பப் பட்டுள்ளன.

வருகிற 27ஆம் நாள் காலையில் திருச்சியில் திருமண நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு - உடனே புறப்பட்டு மதுரை வருவதாகவும் - மதுரையில் மாநாட்டுப் பணிகள் குறித்து விவாதித்துவிட்டு, அன்று மாலையே திருச்சி நிகழ்ச்சிக்குத் திரும்பிச் செல்ல இருப்பதாகவும் - மாநாட்டின் வரவேற்புக் குழுத்தலைவர் மாவீரன் நெடுமாறன் அவர்களுடன் தொடர்பு கொண்டு முடிவு செய்துள்ளேன்.

திருச்சியிலிருந்து நான், தளபதி வீரமணி, இருவரும் செல்லக்கூடும்!

உடன்பிறப்பே! நீயும், உன் போன்ற என் இனிய உடன்பிறப்புகளும் மதுரைக்குப் புறப்பட இப்போதே தயாராகிக் கொண்டிருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும்!

மாநாட்டு விளம்பரச் சுவரொட்டிகள் உனக்குக் கிடைக் கிறதோ இல்லையோ, ஆங்காங்கு உன் கைவண்ணத்தைக்காட்டி - மதுரையில் மே 4 மாலை 5 மணிக்கு - இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாடு என்பதைப் பட்டி தொட்டியெல்லாம்கூட அறிவித்து உன் கடமையை நிறைவேற்று!

இலங்கை அரசின் இனப்படுகொலைக் கொடுமைக் கெதிராக - இந்தியத் திருநாடே ஆர்த்தெழுகிறது என்பதை மதுரையில் மெய்ப்பித்துக் காட்டுவோம்; வா!

அன்புடன்

மு.க.

24-04-1986

1408. கோவை - மதுரை; கொடுத்திடும் குரல்!

உடன்பிறப்பே,

உலகப் பாட்டாளி மக்களின் ஒப்பற்ற திருநாளாம் மே முதல் நாள் இன்று!

ஆம்! வியர்வைத் துளிகளுக்கு விழா எடுக்கும் நாள்!

காலமெல்லாம் கண்ணீர்த் துளிகள் தாமோ யாம் கண்ட பன்னீர்த்துளிகள்? என்ற ஏக்கப் பெருமூச்சு, எரிமலைக் குழம்பின் வீச்சாக வெளிப்பட்டு, வெற்றி முரசு கொட்டிய நாள்!

இந்த நாளை வழக்கம்போல் நம்முடைய கழகத்தின் பாட்டாளிப் பாசறையாம் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை நாடு முழுமையும் கொண்டாடுகிறது எனினும், தொழில் நகராம் கோவையில் எழில் குலுங்க - எழுச்சி பொங்க - மகத்தான பேரணி நடத்தி இன்று கொண்டாடுகிறது!

சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு தேக்கிய நல்வாய்க்காலும் வகைப்படுத்தி நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும் நிறையுழைப்புத் தோள்களுக்கெல்லாம் என் வாழ்த்துகள்!

கற்பிளந்து, மலைபிளந்து கனிகள் வெட்டிக் கருவியெலாம் செய்துதரும் கரங்களுக்கு என் வாழ்த்துகள்!

மானங் காக்க உடையும் - வானமே கூரை என்ற நிலை மாற்ற உறையுளும் மனித குலத்திற்கு வழங்குவதற்காக எலும்பொடியப் பாடுபடும் அந்த ஓய்வற்ற வர்க்கத்திற்கு - சாலையோரத்தில் அமர்ந்து காலணி தைப்போர் முதல் ஆலையினில் அனலிடை மெழுகென உருகிடுவோர் வரையுள்ள உழைக்கும் சமுதாயத்திற்கு - இன்றோர் திருநாள் எனினும், அவர் தம் வாழ்வு முழுமையும் இருள் நாளாக இருக்கின்ற கொடுமை மாற்றிடச் சுடர் முகம் தூக்கிச் சூளுரைக்கும் பெருநாளும் இன்றேதான்!

இந்த நாளில், உடன்பிறப்பே - உன்னை நான் கோவை சிதம்பரம் பூங்காவில் சந்திக்கிறேன்!

பொதுவுடைமைப் பூங்காவாக இந்தப்புவி முழுதும் மாறவேண்டுமென்ற உன்னதத் தத்துவத்தை வெற்றிமுகட்டில் ஏற்றிவைத்திட, நமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிக்கிளம்பும் உறுதிக்குச் செயல் வடிவம் அளித்திடும் மே திருநாளில், கூடுகிறோம் கோவையில்!

அடுத்து, உன்னையும், என்னையும் அழைப்பது மதுரை என்பதை மறந்திட இயலுமோ?

வைகை வற்றிடினும், வற்றாத ஜீவநதியாம்; நமது வைர நெஞ்சத்து வீரம், வற்றிடுவதில்லை என்பதை உணர்த்திட மதுரை அழைக்கிறது உடன்பிறப்பே! புறப்படத் தயாராகு!

கண்ணகி வழிவந்த கற்புக்கரசிகளின் வாழ்வு களங்கப்படுத்தப்படுவதை, இலங்கைச் சிங்கள அரசு, தனது பொழுது போக்கு விளையாட்டாக ஆக்கிவிட்டதை எதிர்த்து - அன்றொரு நாள் பாண்டியனின் அத்தாணி மண்டபத்தில் நீதி கேட்டு நெருப்புமிழ்ந்தாளே நெறிதவறாப் பெண்மணி கண்ணகியாள்! அந்த வீரமங்கை முழக்கமிட்ட மண்ணிலே மே திங்கள் நாலாம் நாள் ஞாயிறன்று மாநாடு!

இந்திய நாட்டின் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், இந்தியப் பேரரசு, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இதுவரையில் காட்டி வரும் மெத்தனத்தைச் சுட்டிக்காட்டவும் - இனியாவது இலங்கைத் தமிழ் இனம் அழிவதைத் தடுத்து நிறுத்தவும் - மதுரையம்பதியிலே காலையிலே கலந்துரையாடுகிறார்கள்!

காலையில் உருவாக்கப்படும் தீர்மானத்தை விளக்கி - மாலையில் திறந்தவெளி மாநாட்டில் விரிவுரை நிகழ்த்துகிறார்கள்!

இலங்கையில் தமிழர்க்கு எதிராக நடைபெறும் கொடுமைகளை, தமிழகம் மட்டுமல்ல - இந்தியத் திருநாடே இப்போது ஆர்த்தெழுந்து கண்டிக்கிறது என்பதை ஓங்கி ஒலித்திடத்தான் உடன்பிறப்பே! இந்த மாநாடு!

மதுரை பந்தயத் திடலில், சரியாக மாலை ஐந்து மணிக்கு, மாநாடு தொடங்கி விடும்!

பல்வேறு மாநிலங்களில் இருந்து வருகை தரும் தலைவர்கள் மதுரையிலிருந்து திரும்பிச் செல்வதற்கு வசதியாகக் குறித்த நேரத்தில் மாநாடு தொடங்கியாக வேண்டும்!

காலையில் தலைவர்களை வரவேற்றிட - மாலையில் மாநாட்டில் பங்குபெற - படைபெருத்தலிற் பார் சிறுத்ததோ! அன்றிப் பார் சிறுத்தலிற் படை பெருத்ததோ எனும் கலிங்கத்துப்பரணி வரிகளை நினைவூட்டும் வகையில், மதுரையில் குழுமிட வருக! கண்மணியே வருக!

காலையில் தலைவர்கள் வரவேற்பு நிகழ்ச்சிக்குப் பிறகு, தலைவர்கள் மட்டுமே கலந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டம்!

அந்தக் கூட்டத்தில் அழைக்கப்பட்டுள்ள தலைவர்கள், பிரதிநிதிகள் தவிர, வேறுயாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்! எனவே, மாநாட்டு வரவேற்புக் குழுவுக்கு தர்மசங்கடத்தை அளிக்காமல் கட்சிகளின் முன்னோடிகள் நடந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

வருகின்ற ஒவ்வொரு உடன்பிறப்பும், தனக்குத்தானே கட்டுப்பாடு காத்து - இலங்கைத் தமிழினத்தைப் பாதுகாக்கும் மகத்தான பணிக்கென நடைபெறுகிற இந்த மாநாட்டை வெற்றிகரமாக்கித் தர வேண்டிய பொறுப்பு உன்போன்ற உடன்பிறப்புகளுக்கு உண்டு!

இன்று - மே முதல் நாள்! கோவையில் உன்னுடன் நான்!

மே திங்கள் நாலாம் நாள்! மதுரையில் உன்னுடன் நான்!

என்றுமே உன்னுடன் நானும், என்னுடன் நீயும் என்றிருந்தாலும் - இந்த இருநாட்களும் மிக முக்கியமான நாட்கள் அல்லவா?

அன்புடன்

மு.க.

01-05-1986

1409. தாங்கிக்கொள்ள முடியவில்லை! தவிக்கிறேன்!

உடன்பிறப்பே,

ஈழ விடுதலைப் போராளிகளின் இனமானத் தலைவர்களாக ஒளிவிட்ட தங்கதுரை, குட்டிமணி, ஜகன் மூவரும் இலங்கையின் வெளிக் கடைச் சிறையில் நிராயுதபாணிகளாக இருந்த நிலையில் சிங்கள வெறியர்களும், சிங்கள அதிகாரிகளும் அவர்களைக் கொட்டடியில் வைத்துக் கொன்று குவித்த கொடிய நிகழ்ச்சிக்குப் பிறகு - தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை டெலோ தலைமையேற்று நடத்திய அஞ்சாநெஞ்சனாம் அருமைத் தம்பி சிறீ என்று அழைக்கப்படும் சபாரத்தினத்தைத் தங்கள் அன்பு அண்ணனாகவும், ஆற்றல் மிகு தலைவனாகவும் ஏற்றுக் கொண்டு மூன்றாண்டுகளுக்கு மேலாகப் போராளிகள் ஆயிரக்கணக்கானோர் தியாக மறவர்களாகச் செயல்பட்டு வந்தனர்.

இலங்கையில் தமிழ் ஈழத்து இளைஞன் துப்பாக்கி தூக்கியதற்குக் காரணமே, அவன் கண்ணுக்கு நேராகவே அவன் தாயோ, தங்கையோ அல்லது தாரமோ, சிங்கள வெறியர்களால் மானபங்கப்படுத்தப்படுவதை அவனால் சகிக்க முடியவில்லை. அவன் வீடு சூறையாடப்படுவதை - அவன் உடைமைகள் அழிக்கப்படுவதை - உற்றார் உறவினர் உருத் தெரியாமல் ஆக்கப்படுவதை அவனால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. எனவே அந்தக் கொடுமையை எதிர்க்கவும், தடுத்துக் கொள்ளவும் அந்த இளைஞர்களுக்குப் படைக்கலன் தேவைப்பட்டது.

ஆனால் அதன் விளைவு, இப்போது எந்த அளவுக்கு வேதனை தரக் கூடியதாக மாறிவிட்டதென்றால் - எதிரியைத் தடுத்திட எடுத்திட வேண்டிய ஆயுதம், இனத்தின் ரத்தத்திலேயே குளித்து மகிழத் தொடங்கி விட்டது!

பகைவன் முயற்சிகளைச் சிதற அடித்துத் தமிழ் மக்களைப் பாதுகாத்திடப் பயன்பட வேண்டிய ஆயுதம், பற்றோடும், பாசத்தோடும் ஒரே பாசறையில் - ஒரே குறிக்கோளுக்காகப் பயிற்சி பெற்றவர்களின் உயிர்களையே குடிக்கத் துள்ளி எழுந்து விட்டது!

விடுதலைபெற்ற பிறகே சர்வாதிகார நாடுகள் பலவற்றில் - ஆட்சிப் பொறுப்பை ஏற்பது யார் என்பதை ஓட்டுமுறை மூலம் தீர்மானிக்காமல், வேட்டுமுறை மூலம் தீர்மானித்துக் கொண்டுள்ள வரலாறு இந்த வையத்தில் உண்டு!

ஆனால், ஈழவிடுதலை - இன்னும் எவ்வளவு தொலைவில் இருக்கிறதென்று தெரியாத நிலையிலேயே - ஆட்சிப் பொறுப்புக்கு யார் வருவது என்பதில், போராளிகளின் பல்வேறு குழுக்கள் ஆயுதம் தாங்கிப் போரிட்டு, ஒருவரை யொருவர் மாய்த்துக் கொண்டு மடிந்து போகிற அவலம் இப்போதே ஆரம்பமாகிவிட்டது!

குழுக்களின் இத்தகைய மோதுதல்களையும் - விடுதலை இயக்கத்தின் மிதவாதிகள், தீவிரவாதிகள் என்போரிடையே உள்ள பிணக்குகளையும் விட்டொழித்து, ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டுமென்று இரண்டு ஆண்டுகட்கு முன்பு, சென்னையில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேசிய கூட்டமொன்றில் நான் கண் கலங்க வேண்டுகோள் விடுத்தேன்!

தமிழ்நாட்டுத் தலைவர்கள் பலரது கருத்தும் அவ்வாறே இருந்தது!

பின்னர் டெலோ, ஈராஸ், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஆகிய மூன்று இயக்கங்களும் கூட்டாக நின்று பணியாற்ற முன்வந்தன. மூன்று இயக்கத் தலைவர்களும் என்னைச் சந்தித்து அந்த நல்ல முடிவை வெளியிட்ட போது நான் பூரித்துப் போனேன். சிறிது காலம் கழித்து எல்.டி.டி.இ. எனும் புலிகள் இயக்கமும், அந்த மூன்று இயக்கம் உருவாக்கிய இ.என்.எல்.எப். என்ற முன்னணியில் இடம்பெற்று அந்த நான்கு இயக்கங்களும் ஐக்கிய உணர்வுடன், ஈழதேசிய விடுதலை முன்னணியாக மிக்க வலுவுடன் சிலிர்த்தெழுந்து நின்றிடும் செய்தியை ஏடுகளில் கண்டு இன்பவாரிதியில் திளைத்தேன்!

நான் மட்டுமா? தமிழ்நாட்டு மக்களும் தலைவர்கள் பலரும் - கட்சி சார்பற்ற முறையில் களிபேருவகை கொண்டனர்!

ஆனால், அந்த ஒற்றுமை நெடிதுநாள் நிற்கவில்லை! யாரோ சாமர்த்தியசாலிகள் சகுனி வேலையில் இறங்கி வெற்றி பெற்று விட்டனர்! இந்தப் பிரித்தாளும் சக்திக்கு ஈழவிடுதலைப் போராளிகளின் பாசறைகளில் எப்படியோ நடைபாவாடை விரிக்கப்பட்டு விட்டது!

அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிரு அசம்பாவிதங்கள் - உயிரிழப்புகள் - போராளிக் குழுக்களிடையே ஏற்பட்டதை அவ்வப்போது நானும், மற்றும் நமது தமிழகத்துத் தலைவர்களும் சுட்டிக்காட்டி ஒற்றுமை காத்திட வேண்டுகோள் விடுக்கத் தவறவில்லை!

நமது டெசோ இயக்கச் சார்பில் நான், பேராசிரியர், தளபதி வீரமணி, மாவீரன் நெடுமாறன், அய்யணன் அம்பலம் ஆகியோரும் போராளிகளைச் சந்தித்து ஒற்றுமையுடன் களத்தில் நின்றிடுமாறு எத்தனையோ முறை வேண்டியிருக்கிறோம்!

அவ்வப்பொழுது தீ அணைக்கப்பட்டது போல் தெரிந்தாலும்கூட - இப்போது அது அணைக்க முடியாத பெருந்தீயாக ஜுவாலை விடத்தொடங்கி, இந்தப் பிரச்சினையில் ஏற்பட்டிருந்த எழுச்சியையே எரித்துச் சாம்பலாக்கிட முனைந்து விட்டது!

சிங்கள வெறியர்களை எதிர்த்து நடக்கும் போராட்டத்தில் உயிரைத் துச்சமாக மதித்துக் களத்தில் குதித்த தமிழ்ப் போராளிகள், எதிரியிடம் சிக்கிக் கொண்டால் யாரையும் காட்டிக் கொடுத்துவிடக்கூடாது என்பதற்காக சைனட் என்ற விஷத்தைக் கையிலேயே வைத்திருந்து விழுங்கிச் செத்து விடும் வீரர்கள் - எதிரிகளை மறந்து விட்டு தங்களுக்குள்ளேயே மோதிக் கொள்ள குருக்ஷேத்திரம் அமைத்துக் கொண்டார்கள்.

அந்தக் கட்டத்தில்தான் மதுரையில் அகில இந்தியத் தலைவர்கள் கலந்து கொள்ளும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாடு!

மத்திய அரசின் சார்பில் குழு ஒன்று இலங்கையில் பேச்சுவார்த்தை!

இப்படியொரு வாய்ப்பைக் குலைப்பது போல - யாரோ நடத்துகிற சகுனி வேலையில் போராளிகள் பலியாகலாமா? என்ற

கேள்வியைத் தழுதழுத்த குரலில் மதுரைக்கு வந்த போராளிக் குழுக்களின் தலைவர்களிடம் கேட்டேன்! கேட்டோம்!

வருகை தந்திருந்த அனைத்திந்தியக் கட்சிகளின் தலைவர்களும் - போராளிகளின் ஒற்றுமையை வலியுறுத்தினர்!

அனைவருமே எங்கள் வேண்டுகோளையேற்று ஒற்றுமையுடன் செயல்படுவதாக உறுதிமொழி உரைத்தனர்!

இதுவெறும் உதட்டு உச்சரிப்பாக இருத்தலாகாது - உள்ளத்து உணர்வாக இருக்க வேண்டும் - அப்போதுதான் தமிழ்நாட்டு மக்களின் ஆதரவையும், இந்தியநாட்டு மக்கள் ஆதரவையும் தொடர்ந்து நீங்கள் பெற முடியும். இல்லையேல் எங்களுக்கே ஒரு விரக்தி ஏற்பட்டு விடும் என்று கெஞ்சாத குறையாகக் கேட்டுக் கொண்டேன்! உளமாறத்தான் உறுதியளிப்பதாகக் கூறினர்!

ஆனால் மீறிவிட்டனர்! எல்லோருமல்ல! சிலர் மீறி விட்டனர்!

அதில் வெடித்து வந்த வேதனை கக்கும் செய்திதான் சிறீ சபாரத்தினமும், மற்றும் இரண்டு தளபதிகளான மோகன், ஜகுவா ஆகியோரும் நூற்றுக்கு மேற்பட்ட போராளிகள் கொல்லப்பட்டிருப்பதுமாகும்!

போராளிக் குழு ஒன்றின் தலைவனையே சுட்டுத் தீர்த்துவிட்டனர்! சகுனியின் சூழ்ச்சி பலித்து விட்டது!

ஆடுகள் முட்டிக் கொள்ள, அப்போது வழியும் ரத்தத்தை நரிகள் குடித்து மகிழ்கின்ற கதையைப் பால பாடத்திலேயே படித்திருக்கிறோம் - படித்ததை மறந்தவர்களை யெண்ணிப் பதைத்துப் போகிறோம்! விரக்தி அடைகிறோம்!

உடன்பிறப்பே, ஜனவரித் திங்களில் என்னைச் சந்தித்து தம்பி சபாரத்தினம் என்னுடன் நின்று படம் எடுத்துக்கொண்டார்! இதென்ன திடீரென்று? இத்தனை நாள் இல்லாத ஆசை? என்றேன்.

நினைவில் இருப்பதற்காக என்றார் புன்னகை புரிந்தவாறு!

அய்யோ! இப்படி நினைவில் நிற்பதற்காகவா - அப்படியொரு நிழற்படம்?

அதற்குப் பிறகு என்னைச் சந்திக்கவில்லை - நேரடியாக ஈழத்துக் களத்துக்குச் சென்றுவிட்டார்!

உடன்பிறப்பே, கர்நாடக மாநிலத்தில் உள்ள சீரங்கப் பட்டினத்தில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட திப்புசுல்தான், களத்திலே காயம் பட்டுப் பிணமாகக் கிடந்த இடத்தைக் குறிக்க இப்போதும் ஒரு கல் அங்கே நடப்பட்டிருக்கிறது. அதில் திப்புவின் உடல் இங்கே கண்டுபிடிக்கப்பட்டது என எழுதப்பட்டுள்ளது!

இதோ டெலோ தலைவன் என் இனிய தம்பி - சபாரத்தினத்தின் உடலும் அப்படித்தான் களத்தில் வீழ்ந்து, பிறகு ஈழத்து நடுத்தெருவில் கண்டுபிடிக்கப்பட்டதாகச் செய்தி வருகிறது!

எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு

எனும் குறளின் பொருளை, இனியாவது ஈழ விடுதலைப் போராளிகளின் குழுக்கள் உணர்ந்து செயல்பட, சபாரத்தினம் என்ற அந்த வீரத்தம்பியின் தியாகம் உதவட்டும்!

எதிர்பார்க்கலாமா?
அல்லது இனியும்
எதிர்பார்ப்பது பைத்தியக்காரத்தனந்தானா?
எதுவுமே புரியவில்லை எனக்கு!

ஒரு உடன்பிறப்பாக என்னோடு மூன்றாண்டுக் காலம் நெருங்கிப் பழகிவிட்டதால் தாங்கிக்கொள்ள முடியவில்லை! அந்த இளைஞனின் கோரமான முடிவை! எனவே தவிக்கிறேன்!

அன்புடன்

மு.க.

08-05-1986

1410. மனச்சாட்சியில்லாத மனிதர்கள்!

உடன்பிறப்பே,

பதவிக்காக கட்சிகளை, தலைமைகளை, கொள்கைகளை மாற்றிக்கொண்டாலும்கூட நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் - பொதுக்கூட்டங்களில் தரம் தாழ்ந்து பொய்மாரி பொழிந்தாலும் - சட்டப் பேரவையிலோ அல்லது மேலவையிலோ நாணயமாகவும், நாகரிகமாகவும் நடந்துகொள்ளும் பவ்யம் படைத்தவர் என்று எதிர்க்கட்சியில் உள்ளவர்களாலும் இதுவரையில் பாராட்டப் பெற்றவர்.

ஆனால், சட்டமன்ற மேலவையைக் கலைக்கும் விஷயத்தில் மட்டும் அவர் மூன்று நாட்களுக்குள் மூன்றுவிதமான பொய்களைக்கூறி, பொய்மை ராஜ்யத்தின் முடிசூடா மன்னர் என்ற பட்டத்தைப் பெற்றுவிட்டார்.

மே திங்கள் ஒன்பதாம் நாளன்று காலையில், மேலவை கலைக்கப்படும் என்ற செய்தியைத் தாங்கி முரசொலி வெளிவந்தது.

அன்று சட்டமன்றப் பேரவையில், தம்பி ரகுமான்கான், தமிழக சட்டமன்ற மேலவையைக் கலைக்கப் போவதாக தகவல் கிடைத்துள்ளது. அது உண்மையா? அரசுக்கு அப்படியொரு உத்தேசம் இருக்கிறதா? ஏதாவது ஆரம்ப முயற்சி அதற்கென நடைபெறுகிறதா? என்று ஒரு விளக்கத்தைக் கேட்டார்.

அவை முன்னவரும், நிதியமைச்சருமான நாவலர் அவர்கள்,

சட்டமன்றம் - சட்டமன்ற மேலவை என இரண்டு அவைகள் தேவைதானா என்கிற சர்ச்சை, எல்லா மாநிலங்களிலும் ஏற்பட்டதுண்டு. தமிழ்நாட்டிலும் அப்படிப்பட்ட பேச்சு வந்து போனது உண்டு. தமிழகத்தைப் பொறுத்தவரையில், மேலவையைக் கலைக்கின்ற திட்டவட்ட முடிவு இப்போது இந்த நேரத்தில் எடுக்கப்படவில்லை. என்று பதில் அளித்தார். இது எல்லா ஏடுகளிலும் வெளிவந்தது.

மறுநாள் மே 10 சனிக்கிழமையன்று மேலவையில் திரு. பி.டி.ஆர். பழனிவேல்ராசன் அவர்கள், மேலவை கலைக்கப்படும் என்று சில ஏடுகளில் செய்தி வந்துள்ளதைச் சுட்டிக்காட்டி விளக்கம் கேட்டார்.

அப்போது நாவலர் என்ன சொன்னார் தெரியுமா?

கொள்கை அளவில் இதுபற்றிய எண்ணம் உருவாக்கப் பட்டிருக்கிறது. இரண்டொரு நாட்களில் செயற்குறிப்பு வருமானால் அது குறித்து முடிவு எடுக்கப்படும்.

இப்படியொரு பதிலை அவர் சொன்னதும், பேரவையில் இந்திரா காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் என்.எஸ்.வி. சித்தன் அவர்கள்,

நிதியமைச்சர் நாவலர், வெள்ளிக்கிழமை மேலவை கலைப்பு குறித்து இங்கே சட்ட சபையில் தெரிவித்த கருத்துக்கு மாறாக, மேலவையில் இன்று சனிக்கிழமை மேலவை ஒழிப்பு குறித்துக் கருத்து தெரிவித்துள்ளார். இது முறையாகுமா?

என்று வினா எழுப்ப, அதைத் தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து உரிமைக் குரல் கொடுக்கத் தொடங்கினார்கள். உடனே மேலவையில் இருந்த நாவலர் அவர்கள், பேரவைக்குச் சென்று, மேலவையில் சொன்னதைப் பூசி மெழுகி சமாளித்துக் கொண்டார். மேலவைக்கலைப்புப் பிரச்சினையில் திட்டவட்டமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லையென்று மீண்டும் ஒருமுறை நாவலர் அடித்துச் சொன்னார்.

ஆனால் மே 12ஆம் நாள் மாலையில், மேலவையைக் கலைக்கும் தீர்மானம் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டு மே 14ஆம் நாளன்று சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டும் விட்டது.

அந்தக் கலைப்பு தீர்மானம் நிறைவேற்றப்படும் போது, சட்டப்பேரவையில் அவை முன்னவரான நாவலர் அவர்கள் அளித்த விளக்கம் இதோ:-

மேலவையைக் கலைக்க வேண்டுமென்பது சமீபத்தில் எடுக்கப்பட்ட முடிவு அல்ல! கடந்த ஏழெட்டு மாதங்களாக என்னைப் போன்ற அமைச்சர்களிடம் பேசி, விரிவாக விளக்கம் பெற்று, சாதக பாதகங்களைத் தெரிந்து கொண்டு அதன்பிறகு முதலமைச்சர் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்

இப்படியொரு முன்னுரையுடன் நாவலர் அவர்கள் தீர்மானத்தை அவையில் முன்மொழிந்து பேசியிருக்கிறார்.

ஏழெட்டு மாதங்களாக இவரைப் போன்ற அமைச்சர்களிடம் மட்டுமே மேலவைக் கலைப்பு பற்றி முதலமைச்சர் பேசினாராம்! பாவம்! வீரப்பனைப் போன்ற அமைச்சர்களிடம் இதுகுறித்துப் பேசவில்லை போலும்! மேலவையில் வீரப்பன் அவர்களே அதை சூசகமாகத் தெரிவித்தாரே!

ஏழெட்டு மாதமாகப் பேசப்பட்டு வருகிற ஒரு பிரச்சினையை, நாவலர் எதற்காக மே 9ஆம் நாள் ரகுமான்கான் கேள்வி கேட்டபோது மூடி மறைக்க வேண்டும்?

இது என்ன பட்ஜெட் ரகசியமா? வெளியே சொல்லி விவாதிக்காமல் திரைபோட்டு வைத்திருக்க?

கடந்த ஏழெட்டு மாதங்களில் அமைச்சரவை இரண்டு மூன்று தடவையாவது கூடியிருக்குமே? அப்போது ஏன் - இதனை அமைச்சரவையில் ஒரு கொள்கைப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு விவாதிக்கவில்லை?

நாவலரைப் போன்ற அமைச்சர்களிடம் எம்.ஜி.ஆர். விவாதித்தாராம்!

நாவலருக்கு அப்படியொரு பொன்னான வாய்ப்பு கிட்டியதுண்டா?

ஒருவேளை இண்டர்காம் மூலம் முதல்வருடன் விவாதிருப்பாரோ என்னவோ?

எப்படியோ, ஒன்பதாம் தேதி பேரவையில் ஒரு பதில் - பத்தாம் தேதி மேலவையில் ஒரு பதில் - அன்றைக்கே பேரவையில் ஒரு மழுப்பல் - பிறகு 12ஆம் தேதி தீர்மானம் அனுப்பல் - 14ஆம் தேதி நிறைவேற்றல்!

ஒன்பதாம் தேதி வரையில், என்ன நடக்கப் போகிறது என்று நாவலருக்கே தெரியாத நிலை!

பத்தாம் தேதியும் அவருக்கு அதே பதட்ட நிலை!

14ஆம் தேதி தீர்மானத்தின் மீது பேசும்போது, மகாராஜாவுக்கு என் மீதுதான் ஆசை என்று மாளிகைச் சேடியைப் போல, என்னைப் போன்ற அமைச்சர்களிடம் முதல்வர் பொன்மனச் செம்மல் ஏழெட்டு மாதமாகக் கலந்து பேசினார் என்று வளைந்து, குழைந்து,

வாய்மையைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு அவைநடுவே அநியாயமாகப் பொய் சொல்லுகிறார்!

மேலவையைக் கலைக்க வேண்டுமென்று ஏழெட்டு மாதங்களுக்கு முன்பே முடிவிருந்தால் - ஆசிரியர் தொகுதி தேர்தல்களையும், பட்டதாரித் தொகுதி தேர்தல்களையும் எதற்காக நடத்தினார்கள்?

அந்தத் தேர்தலில், நான்கு இடங்களிலும் ஆளுங்கட்சி தோல்வியைத் தழுவிக் கொண்ட பிறகுதானே, முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மேலவை மீதே ஒரு வெறுப்பு ஏற்பட்டது.

மேலவையைக் கலைக்கும் எண்ணம் இவர்களது மூளையில் முன்பே முகிழ்ந்திருந்தால், மூன்று உறுப்பினர்களை மேலவைக்குக் கவர்னர் மூலம் நியமனம் செய்யப் பரிந்துரை செய்தது ஏன்?

அந்த மூன்றில் ஒன்று திவால் என்று தெரிந்தவுடன், பத்துலட்ச ரூபாயை வசதி செய்துகொடுத்துக் கடனை அடைக்கச் செய்து, திவால் என்ற நிலையை மாற்றி - மஞ்சளை வெண்ணிறமாக்கிட - அவ்வளவு முயற்சிகள் எடுத்துக்கொள்வானேன்?

அந்த முயற்சியிலும் மூக்குடைபட்ட காரணத்தினால் தானே - மேலும் ஆத்திரம், மேலவைமீது வந்தது?

உள்ளாட்சிமன்ற தேர்தலில் அ.தி.மு.க.வின் அஸ்தமனத்திற்கான அறிகுறிகள் தோன்றிவிட்ட பிறகு, இருபது உள்ளாட்சி மன்ற மேலவை உறுப்பினர் இடங்களில் குறைந்தபட்சம் தி.மு.கழகம், பதினோரு இடங்களையாவது பிடித்து விடும் என்ற கணிப்பு, ஒற்றர்கள் மூலம் அறிவிக்கப் பட்ட பிறகு - அடடா! கழகம் மேலவையில் எதிர்க்கட்சியாகி விடுமே! கருணாநிதி அதிகாரபூர்வமான எதிர்க்கட்சித் தலைவனாகி விடுவானே! என்ற காந்தாரிக் காய்ச்சல் ஏற்பட்டதின் விளைவுதான் இந்தக் கலைப்பு!

மகாபாரதத்தில் காந்தாரியும் இப்படித்தானே கலைத்துக் கொண்டாள்!

மேலவையில், கடந்த இரண்டு ஆண்டுக்கு முன் கழகத்தினர் ஐவர் இருந்த போது - நால்வராக இருந்த காங்கிரஸ் கட்சியுடன் ஒரு நாமினேஷனைச் சேர்த்து ஐந்தாக ஆக்கி - அகட விகடம்

செய்து என்னை மூன்றாவது இடத்தில் உட்கார வைத்து - அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியில் எம்.ஜி.ஆர். எகிறிக் குதிக்கவில்லையா?

தி.மு.க. சட்டமன்றக் கட்சி அலுவலகத்திலிருந்த எங்களையெல்லாம் கைது செய்துவிட்டு, சீல் வைத்துப் பூட்டி, சட்டமன்ற தி.மு.க. கட்சி என்ற பலகையையும் அதிகாரிகளைவிட்டு உடைத்து நொறுக்கி எறியவில்லையா?

சேடிஸ்ட் என ஆங்கிலத்தில் கூறப்படும் குரூரகுணம் படைத்தவர் ஒருவர், ஆட்சிப் பொறுப்பில் ஏற்றி வைக்கப் பட்டால் இவைகள் எல்லாம் நடப்பதில் ஆச்சரியமில்லைதான்!

இப்போது நமது எண்ணிக்கை வளருகிறது என்பதற்காக - மேலவையைக் கலைத்து விட்டார்கள்!

அடுத்து என்ன செய்வார்கள் என்பதற்கு அடையாளங்கள் தெரிகின்றன!

பெரும்பான்மையான நகராட்சிகள், ஒன்றியங்கள், பேரூராட்சிகள் இன்று அவர்கள் கையில் இல்லை!

ஒவ்வொரு நாளும் வருகிற சட்ட திருத்தங்கள், அரசு ஆணைகளைப் பார்க்கும்போது - நகராட்சிகளுக்கும், ஒன்றியங்களுக்கும், மேலவையின் கதி ஏற்பட்டாலும் வியப்படைவதற்கு இல்லை!

யாருக்கு செல்வாக்கு? கருணாநிதிக்கா? எம்.ஜி.ஆருக்கா? என்பதைத் தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன - தெரிவிக்கும்!

என்று நாவலர், இந்தத் தீர்மானத்தின் மீது பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

1957 இல் சேலத்தில் மாரியப்பன் என்ற நண்பரிடம் நாவலர் தோற்றார்!

செல்வாக்கு, மாரியப்பனுக்கா? நாவலருக்கா?

நாவலர்தான் பதில் சொல்ல வேண்டும்.

1962ல் காஞ்சியில் நடேச முதலியார் என்பவரை எதிர்த்து நின்ற பேரறிஞர் அண்ணா, வெற்றி வாய்ப்பை இழந்தார்!

செல்வாக்கு நடேச முதலியார் என்ற பஸ் முதலாளிக்கா? அண்ணாவுக்கா?

தந்தை பெரியாரும், மூதறிஞர் ராஜாஜியும் எந்தச் சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தல்களில் நின்று தங்கள் செல்வாக்கை நிலைநாட்டினார்கள்?

இதற்கும் நமது நடமாடும் பல்கலைக் கழகமாம் நாவலர் பெருமான் தான் விளக்கமளிக்க வேண்டும்!

தலைவன் படத்தைக் கொடியில் போட்டுக் கொள்ளும் இவரைப் போல ஒரு கிறுக்கன் உலகத்தில் உண்டா?

எம்.ஜி.ஆரைப் பற்றி இப்படிப் பேசிய நாவலர் அவர்கள்; இன்று

பொன் மனச் செம்மலே போற்றி!
புரட்சித் தலைவா போற்றி!
பதவி அளித்தாய் போற்றி!
பவிசு கொடுத்தாய் போற்றி!

என்று போற்றிப் புகழ்மாலை சூட்டுகிறார் என்றால், அவர் இட்டகட்டளை எதுவாயினும், அதனை நிறைவேற்றிடச் சன்னிதானத்தில் காத்துக் கிடக்கிறார் என்றால் -

மனச்சாட்சியில்லாத மனிதர்கள் எனும் தொகுப்பு நூலில் தொடக்கக் கட்டுரையில் இடம்பெற வேண்டிய பெயர் அல்லவோ நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் பெயர்!

வாழ்க அவர் பல்லாண்டு காலம்! பதவிச் சுகம், பெற்று!

வாழ்க அவரது தலைவர் பல்லாண்டு காலம், தனது பழிகாரச் செயல்களை மேலும் வளர்த்து!

அன்புடன்

மு.க.

16-05-1986

1411. தமிழ் இன அழிவைத் தடுத்திட; தமிழகம் எழுக!

உடன்பிறப்பே,

மே-31 சனிக்கிழமையன்று தமிழகத்தில் காலை ஆறுமணி முதல் மாலை ஆறு மணி வரையில் முழு அடைப்பு நடைபெற வேண்டுமென விடுத்துள்ள வேண்டுகோள் - என் கண்ணீர் கொண்டு எழுதப்பட்டதென்பதை நீ அறிவாய்!

1983 முதல் இலங்கையில் தொடர்ந்து அழிந்து கொண்டிருக்கும் தமிழ் இனத்தின் மரணஓலத்தைத் தடுத்து நிறுத்திட, மனிதாபிமான அடிப்படையில் கூட, உரிய - உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தவறிவிட்ட மத்திய அரசின் அலட்சியப் போக்கைச் சுட்டிக்காட்டி, இனியாவது ஏற்ற செயலில் ஈடுபடுக என வலியுறுத்துவதற்காகவே மே-31ஆம் நாள் தமிழ் மக்களின் உணர்வை வெளிப்படுத்தும் நாளாக அமையவேண்டுமென நான் கருதுகிறேன்.

இலங்கைத் தமிழ் இனமக்கள் துடிக்கத் துடிக்கச் செத்து மடியும் செய்திகளைக் கேள்வியுறும் தமிழ்ப் பெருங்குடிமக்கள் அனைவருமே கட்சிச் சார்பற்ற முறையில் தங்களது இதயங்கள் கனத்துப் போய் - இரத்தக் கண்ணீர் வடிப்பதை - இந்த நாளில் முழு அடைப்பை நடத்திக் காட்டுவதின் மூலம் இந்தியப் பேரரசுக்குத் தெரிவிப்பதற்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஈழவிடுதலைப் போராளிகளுக்கிடையே அண்மையில் ஏற்பட்ட மோதுதலும் - அதில் டெலோ தலைவர் சிறீசபாரத்தினம் சுட்டுக் கொல்லப்பட்டதும் - எனக்கும், தமிழ்நாட்டில் உள்ள அனைவருக்குமே பேரதிர்ச்சியை உண்டாக்கி, செயல்பட இயலாத ஒரு மனப்புழுக்கத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சியாக அமைந்தது எனினும், அதன்பிறகு யாழ்ப்பாணத்தில் சிங்கள அரசின் முப்படைத் தாக்குதலால் அப்பாவித் தமிழ்மக்கள் கொன்று

குவிக்கப்படுவதை எவ்வாறு சகித்துக் கொண்டு, கைகட்டி வாய்புதைத்து இருந்திட இயலும்!

தானாடாவிடினும் தன் தசையாடும் என்ற பந்த பாசங்கள் விட்டுப்போய்விடுமா?

கடந்த 24.5.86 நேற்றைக்கு முன் தினம் சென்னையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் வெளியிட்டுள்ள உண்மை விளக்கம் என்ற சிறு நூலில் சபாரத்தினத்தைக் கொன்றதை நியாயப்படுத்த முனைந்து,

ஒரு முற்போக்கான புரட்சிகர சக்திக்கும், ஒரு பிற்போக்கான எதிர்ப்புரட்சி சக்திக்கும் மத்தியில் முரண்பாடு தோன்றுவது வரலாற்று நியதி. உலக தேசிய விடுதலைப் போராட்டங்களில் இது சகஜமான நிகழ்வு. இந்த முரண்பாடுகள் ஆயுத மோதலால் தீர்வு காணப்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

யார் சொல்வது உண்மை என்பதைவிட முற்போக்கு சக்தியும் - பிற்போக்கு சக்தியும் தங்கள் கருத்து முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ள ஆயுதமேந்தித்தான் ஆகவேண்டும் என்று முடிந்தமுடிவாகக் கூறி, போராளிகளுக்குள்ளேயே ஒருவரையொருவர் அழித்துக் கொள்ளும் திட்டமிடப்பட்ட முறையை நியாயப்படுத்துவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. யாராலும் ஏற்றுக்கொள்ள இயலாது. இதைச் சொல்வதால் என்னையே கூட பிற்போக்குச் சக்திகளின் பட்டியலில் இணைத்துப் பார்க்கவும்கூடும். அதற்காக நான் கவலைப்படவில்லை!

ஆனால் ஒன்று உடன்பிறப்பே! இவர்களுடைய ஒற்றுமையின்மை - உயிர்பறிக்கும் மோதல் - இவற்றைச் சிந்தித்து, சிந்தித்து வேதனைதாளாது - தமிழ் மக்களும், இந்திய நாட்டு மக்களும் நமக்கென்ன வந்தது? எனத் துவண்டு போய் விடுவார்களேயானால், அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு இலங்கையின் சிங்கள அரசு, அப்பாவித் தமிழ் மக்களை அடியோடு சுட்டுப்பொசுக்கி - இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளையே சுடுகாடாக ஆக்கி விடுமே! என்ன செய்வது?

அந்தத்தமிழ் இன அப்பாவி மக்களைக் காப்பாற்ற, இந்திய அரசின் கவனத்தை முழுமூச்சாகத் திருப்ப வேண்டியது நமது மிக முக்கியமான பொறுப்பாகும்!

போராளிகளில் பிற்போக்கு சக்தியென்போர் யார்? முற்போக்கு சக்தியென்போர் யார்? அதை அவர்கள் தெளிவாக்குகிற பணியிலே ஈடுபடட்டும்!

நமக்கோ இப்போதுள்ள அவசரமும் அவசியமுமான பணி, இலங்கையில் தமிழ் இன மக்கள் வாழும் பகுதிகள் தரைமட்டமாகாமல் தடுப்பதற்குத் தேவையான முயற்சிகளை மேற்கொள்ளும் பணியேதான்!

போராளிகள் ஒருவருக்கொருவர் விடுத்திடும் அறிக்கைகள் - அணிபிரித்துக் கொண்டு அறிந்தோ அறியாமலோ நம்மனோர் நடத்தும் ஏடுகளில் கூட, எழுதப்படும் விமர்சனக் கருத்துகள், இனிமேலாவது நிறுத்தப்படுமென்று நம்புகிறேன்!

இந்த என் நம்பிக்கை வீண் போனால் கூட மணலைக் கயிறாகத் திரித்திடும் வேலையில் ஈடுபட்டது எனது குற்றமென எண்ணிக் கொண்டு, உன் போன்ற உடன்பிறப்புகளையும், இலங்கைத் தமிழ் இனமக்களைப் பாதுகாக்கும் நல்லெண்ணத்துடன் செயல்படும் கட்சிகளைச் சார்ந்த தலைவர்களையும் மே 31ஆம் நாள் முழு அடைப்புக்கு ஆதரவு தர வேண்டுமென மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆங்காங்குள்ள அமைப்புகள் உடனடியாகக் கூடி கலந்துரையாடி - மே 31ஆம் நாள் காலையில் அல்லது பிற்பகலில் வசதிக்கேற்ப இலங்கைத் தமிழினத்தின் மீது சிங்கள அரசின் முப்படைத் தாக்குதலைக் கண்டித்து ஊர்வலங்கள் நடத்த வேண்டும்!

இலங்கையில் தமிழ் இனம் அழிக்கப்படும் கொடுமை கண்டு துயருற்றிருக்கும் நமது நிலையை உணர்த்திட, அந்த நாளில் கறுப்புச் சின்னங்கள் அணிந்திட வேண்டும்!

இந்தியப் பேரரசு, இனியும் மெத்தனமாக இருந்தால் ஒரு இனமே இலங்கையில் அழிந்துவிடும் என்பதை அன்று மாலை நடைபெறும் பொதுக்கூட்டங்களின் வாயிலாக மத்திய அரசுக்கு வலியுறுத்திட வேண்டும்!

இவற்றுடன், அன்று காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணி வரையில் அமைதியான முறையில் முழு அடைப்பு நடைபெற்றிட வேண்டும்.

இதோ! இலங்கைத் தமிழ் இனத்தின் காய்ந்த மரமொன்று வெட்டுண்டு கருகிக் கிடப்பதைப்பார்!

இதோ! கனியவேண்டிய இளம் பிஞ்சு ஒன்று கழுத்தறுபட்டு இரத்தத் தடாகத்தில் மிதப்பதைப் பார்!

இந்த அப்பாவித் தமிழ்க்குலம் இலங்கையில் முற்றிலுமாக அழிந்துவிடாமல் காப்பதற்கு நாம் வடிக்கும் கண்ணீரே - நாம் கொடுக்கும் அபயக் குரலே - மே 31ஆம் நாள் முழு அடைப்பு என்பதை உணர்க!

அன்புடன்

மு.க.

26-05-1986

1412. உனது உடன்பிறப்பின் வேண்டுகோள்!

உடன்பிறப்பே,

கடந்த ஆண்டு நான் அறிவித்ததைப் போலவே இந்த ஆண்டும் - இலங்கைத் தமிழர் படும் துயரத்தில் நமக்குள்ள வேதனையை வெளிப்படுத்த - எனது பிறந்தநாளுக்கென விழா நிகழ்ச்சிகள் எதுவும் ஏற்பாடுசெய்து அவற்றில் என்னைக் கலந்து கொள்ளுமாறு வலியுறுத்த வேண்டாமென இரண்டு திங்களுக்கு முன்பே தெரிவித்திருக்கிறேன்.

ஆங்காங்கு சிற்றூர், பேரூர், நகரங்களில் கழகக் கொடிகளை உயர்த்தி - இலங்கைத் தமிழரைப் பாதுகாக்கும் இன எழுச்சிச் சூளுரை மேற்கொள்ள மட்டுமே இந்த நாளைப் பயன்படுத்துங்கள் என்று கடந்த ஆண்டு கேட்டுக் கொண்டபோதிலும், என் வேண்டுகோளை மீறிப் பலரும் சென்னைக்கு வந்துவிட்டனர்.

இந்த ஆண்டும் அப்படி வந்துதான் தீருவோம் என திட்டமிட்டிருப்போருக்கு ஒரு பணிவன்பான வேண்டுகோள்!

இதோ - என் பிறந்த நாள், ஜூன் மூன்றாம் நாளன்று நான் என்ன செய்யப் போகிறேன் என்பதையும், எனைக் கண்டு வாழ்த்து கூற வருவோர் என்ன செய்ய வேண்டுமென்பதையும் குறிப்பிடுகிறேன்.

அதிகாலையில் அண்ணா நினைவிடம் - பெரியார் நினைவிடம் சென்று மலர் வளையம் வைத்தல்!

பின்னர் அங்கிருந்து நேராக கலைவாணர் அரங்கத்திற்கு வருதல்!

அங்குப்ச பகல் முழுதும் இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கு உதவிட, எனை வாழ்த்திட வருவோர் வழங்குகின்ற நிதியினைப் பெறுதல்!

வாழ்த்த வருவோர் தயவு செய்து மாலைகள் கொண்டு வர வேண்டாம்!

போராளிகள் உதவிநிதியும் - அத்துடன் மாலை வாங்குவதற்கென செலவழிக்கும் தொகையும் சேர்த்து - போராளிகள் உதவிநிதியாகவே வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாலைதானே வேண்டாமென்கிறாய்! கைத்தறி ஆடைகள் அணிவிக்கலாம் அல்லவா? என்று கேட்க வேண்டாம்!

மாலை குறித்து எழுதியுள்ளதே, கைத்தறி ஆடை அணிவிப்பதற்கும் பொருந்தும்!

பத்துரூபாயும், அதற்குமேல் நூறு, ஐநூறு, ஆயிரம் என்று - என் பிறந்த நாளை முன்னிட்டு இலங்கைத் தமிழ் இனம் காப்பதற்காக, நீயும், உன்போன்ற உடன்பிறப்புகளும் வழங்குகிற நிதிதான் அன்று எனக்களிக்கப்படும் ஆயிரமாயிரம் வாழ்த்துகளுக்குச் சமம்!

நிதியினை, நான் அமர்ந்திருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் வைக்கப்படும் உண்டியலில் குவித்திட வேண்டுகிறேன்.

போராளிகளின் அவசிய அவசரத் தேவைக்குப் போதுமான அளவுக்குப் பெரும் நிதியாக அது அமைந்திட இயலாது என்பதை நானறிவேன்.

ஈழத் தமிழினம் குறித்த நமது உணர்வுகளை - ஏடுகளில், எழுத்தாக - மேடையில் சொற்களாக வெளிப்படுத்துவதைக் காட்டிலும், இப்படி வெளியிடுவது மேலும் பயன்தரக் கூடியதாக அவர்களுக்கு அமையுமல்லவா?

கடந்த மூன்றாண்டுகளாக தமிழக முழுதும் உள்ள கழக அமைப்புகளும், உடன்பிறப்புகளும் - இந்த உதவியைத் தங்களால் இயன்ற அளவுக்கு அவர்களுக்குச் செய்தே வருகின்றனர்.

நம்மிடமுள்ள வசதி, வாய்ப்புகளுக்கு ஏற்ப நம்மால் முடிந்த உதவிகளை வழங்குவதைத் தொடர்ந்து,

இந்த ஜூன் 3ஆம் நாள்

என் பிறந்த நாளும் -

அந்தக் கடமையுணர்வைச் செயல்படுத்தப் பயன்படட்டும்!

உடன்பிறப்பே! என்னை அன்றைக்கு நீ உண்மையிலேயே வாழ்த்துகிறாய் என்பதற்கு அடையாளமாக - வண்ணச் சுவரொட்டிகள், மாலைகள், ஆடைகள் இவற்றுக்குச் செலவிடும் தொகையனைத்தையும் போராளிகளின் உதவி நிதிக்கே என்னிடம் பணமாக வழங்கிட வேண்டுமென, அன்பும், பாசமும் நிறைந்த உனது உடன்பிறப்பாகிய நான் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்

மு.க.

27-05-1986

1413. மே 31- முழு அடைப்பு; ஏன்? எதற்காக?

உடன்பிறப்பே,

வரும் 31ஆம் தேதி சனிக்கிழமையன்று ஒரு முழு அடைப்பை நடத்துவதும் - கறுப்புச் சின்னங்கள் அணிவதும் - கண்டனப் பேரணிகள் - கண்டனப் பொதுக்கூட்டங்கள் நடத்துவதும், தி.மு.கழகம் தனது அரசியல் ஆதாயத்துக்காக அறிவிக்கப்பட்ட ஒன்றல்ல என்பதையும் - திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் தளபதி வீரமணி அவர்களும், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் மாவீரன் நெடுமாறன் அவர்களும் அந்த முழு அடைப்பை ஆதரித்து விடுத்துள்ள அறிக்கைகளும் அரசியல் லாபம் கருதியல்ல என்பதையும் - தமிழ்நாட்டு மக்கள் தெளிவாகவே அறிவார்கள்.

தமிழகத்தில் உள்ள அரசு, உள்ளாட்சி மன்றங்களில் கடை பிடிக்கும் ஜனநாயக விரோதப் போக்குகளையும், விவசாயிகள் பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகளையும், ஆளுங்கட்சியினர் நடத்தும் அராஜகங்களையும், மத்திய அரசு, புதிய கல்விக் கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும் முயற்சிகளையும் விவாதித்து, சில முக்கியமான முடிவுகளை எடுப்பதற்காக ஜூன் நான்காம்நாள் சென்னையில் பொதுக்குழுக் கூட்டம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளில் தலைமைக் கழகம் முனைந்து செயலாற்றி வருகிறது.

கழக உறுப்பினர்கள் சேர்க்கும்பணி முடிவுற்று - சற்றொப்ப முப்பதுலட்சம் கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டு வாக்களிக்கும் கிளைக்கழக அமைப்புகளின் தேர்தலுக்கும், தொடர்ந்து கழகத்தின் ஏனைய அமைப்புகளின் தேர்தலுக்கும் தேதிகளைக் குறித்து உடனடியாகப் பணிகளைத் தொடங்குவது என நானும், பொதுச்செயலாளரும் கலந்து பேசி முடிவெடுத்து - அந்தப் பெரும் பணியில் தலைமைக் கழகத்தில் நூற்றுக்கணக்கான அலுவலர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

இவற்றையும், இவற்றையொத்த இன்னும் பல பணிகளையும் மேற்கொள்ள வேண்டிய நெருக்கடி மிகுந்த சூழலில் - ஒரு முழு அடைப்பு, கண்டனப் பேரணிகள், கண்டனக் கூட்டங்கள் நடத்த வேண்டுமென்று முன்னரே தீட்டப்பட்டுள்ள திட்டங்கள் எதுவுமில்லை!

பிறகு எவ்வாறு இந்த முடிவு எடுக்கப்பட்டது?

அதற்கு விளக்கமளிக்க வேண்டியது எனது கடமையாகும்!

திடீரென்று இலங்கையில் யாழ்ப்பாணப் பகுதியும், வேறு சில தமிழர்கள் வாழும் பகுதிகளும் சிங்கள அரசின் முப்படைகளால் தாக்கப்பட்டன! அப்பாவித் தமிழர்கள் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்! இந்தச் செய்திகளைத் தாங்கிய வண்ணம் தமிழக நாளேடுகள் வெளிவந்தன!

இந்தச் செய்திகளை உறுதிப்படுத்தி நண்பர் சந்திரகாசன் அவர்களும், திரு சிவசிதம்பரம் அவர்களும், அவரைத் தலைவராகக் கொண்ட தமிழர் ஐக்கிய முன்னணி டி.யு.எல். எப்யின் மற்ற தலைவர்களும், நண்பர் ஈழவேந்தன் அவர்களும், ஈழப்போராளிகளின் இயக்கங்களைச் சேர்ந்த சிலரும் - என்னையும், பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களையும் சந்தித்து விபரங்களை மிகுந்த வேதனையுடன் எடுத்துக் கூறினார்கள்.

அதைத் தொடர்ந்து நாங்கள் மற்ற கட்சித்தலைவர்களுடன் கலந்து பேச முயற்சி எடுத்தோம். பலரும் வெளியூர் சுற்றுப்பயணங்களில் இருந்ததால் தொடர்புகொள்ள இயலவில்லை. எனினும் தொலைபேசி வாயிலாகவும் - அவர்களின் கட்சி அலுவலகங்களுடனும் தொடர்பு கொண்டு, இப்படியொரு முடிவு எடுக்க வேண்டிய அவசரமும், அவசியமும் ஏற்பட்டிருப்பதை நானும், கழகத் தலைமைச் செயலாளர்களும் விளக்கினோம். இவைகுறித்தெல்லாம் நான் நிருபர்களிடம் விளக்கமாக அன்றைக்கே அறிவித்துள்ளேன்.

இலங்கையில் அப்பாவித்தமிழர்கள் மீது சிங்கள அரசு நடத்துகிற முப்படைத் தாக்குதலைக் கண்டித்தும் - இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றும் அளவுக்கும் நிலையான அமைதி அங்கு ஏற்படுமளவுக்கும், இதுவரையில் இந்திய அரசு ஏற்றிருந்த மத்தியஸ்தர் எனும் பொறுப்பை

விடுத்து, தமிழர்களின் நியாயமான உரிமைகளைப் பெற்றுத் தர தமிழர்களின் பக்கமிருந்து வாதாட வேண்டுமென்றும், அதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்றும் மத்திய அரசை வலியுறுத்தியும் - தமிழ்நாட்டு மக்களின் உணர்வை அமைதியான முறையில் வெளிப்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாததும், விரைந்து மேற்கொள்ள வேண்டியதுமான கடமையாகி விட்டது நமக்கு!

இந்த முடிவினை வரவேற்றுத் தங்கள் இயக்கங்களும் முழு அடைப்பில் கலந்து கொள்ளுமென தளபதி வீரமணி அவர்களும், மாவீரன் நெடுமாறன் அவர்களும் அறிவித்துள்ளனர். மற்ற கட்சித்தலைவர்களிடமிருந்தும் அதுபோன்ற ஆதரவை எதிர்பார்க்கிறேன். மத்திய அரசு, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காட்டும் மெத்தனப் போக்கை நமது அனைத்துக்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கண்டித்தும், இலங்கையுடன் ராஜீய உறவுகளைத் துண்டித்துக்கொள்ள வேண்டுமென்றும் ஏற்கெனவே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன!

இலங்கையில் எதுவுமே நடக்காத நேரத்தில் அல்லது தமிழர்கள் பத்திரமாக பாதுகாப்பாக இருக்கும் நேரத்தில் - ஏதோ ஒன்றைத் தமிழ்நாட்டில் செய்ய வேண்டுமென்ற அரசியல் அரிப்பு எதுவும் நமக்கு ஏற்பட்டுவிடவில்லை!

தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழ்கிற யாழ்ப்பாணப் பகுதியில் சிங்கள ராணுவத்தை விடுதலைப் போராளிகள் எதிர்த்துத் தாக்குகின்றனர் என்றாலும் - சிங்கள ராணுவத் தாக்குதலால் யாழ் நகரம் சீரழிவதை இந்தியாவில் உள்ள யு.என்.ஐ. போன்ற செய்தி நிறுவனங்கள் நாள்தோறும் வெளியிடுகின்றன!

யாழ்ப்பாணம், தற்போது மனித நடமாட்டமேயில்லாத நகரமாகவே மாறிவிட்டது. சுமார் இரண்டு லட்சம் மக்கள் தொகையுள்ள அந்த நகரம் யுத்தத்தால் பெருமளவு பாதிக்கப்பட்ட நகரமாகவே இப்போது காட்சியளிக்கிறது. அங்குள்ள மக்களுக்கு அரிசி, காய்கறி போன்ற அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கவில்லை. இலங்கையின் மற்ற பகுதிகளோடு எந்தவிதத் தொடர்புமில்லாமல் யாழ்ப்பாணம் துண்டிக்கப்பட்டுள்ளது

என்று தமிழர் ஐக்கிய முன்னணி டி.யு.எல்.எப். சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ள செய்தி, ஏடுகளில் இன்றைக்குக்கூட வெளிவந்துள்ளன!

மத்திய துணைமந்திரி சிதம்பரம் தலைமையிலான குழு, அண்மையில் இலங்கை சென்று திரும்பிய பிறகு, இப்பிரச்சினை அமைதியாகத் தீர சில ஆக்கப் பூர்வமான விளைவுகள் ஏற்படுமென நாம் நம்பியதற்கு மாறாக, அங்கு நிலைமை எதிர்பாராதபடி மோசமடைந்துள்ளது

என்று திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் தனது அறிக்கையொன்றில் சுட்டிக் காட்டியுள்ளார்.

திரிகோணமலைப் பகுதியில் ராணுவத்தினர் நடத்திடும் கொடூரத் தாக்குதலால், பொதுமக்கள் கிராமங்களை விட்டு வெளியேறி காடுகளுக்குச் சென்று தஞ்சம் புகுந்துள்ளனர் என்று போராளிகளது இயக்கங்களின் செய்திக் குறிப்புகள் இன்றைக்குக் கூடத் தெரிவிக்கின்றன.

இவையனைத்தும் இந்திய அரசுக்குத் தெரியாத விவகாரங்கள் அல்ல!

தெரிந்திருக்கும் போது நாம் எதற்காக மே 31 இல் முழு அடைப்பு நடத்த வேண்டும்!

1983 முதல் நாம் மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள எல்லாக்கட்சிகளுமே ஒன்றாக நின்றும், தனித்தனியாகவும் - மத்திய அரசை இந்தப் பிரச்சினையில் உரிய நடவடிக்கை எடுத்திட, கிளர்ச்சிகள், அறப்போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், முழு அடைப்புகள், கறுப்புச் சின்னமணிதல், கண்டனக் கூட்டங்கள், பேரணிகள் நடத்துதல் போன்ற அந்தந்தக் கட்சிகளுக்கு உடன்பாடுடைய முறைகளை மேற்கொண்டிருக்கின்றன!

பலமுறை சிறை புகுந்துள்ளோம் நாம். பல்லாயிரக் கணக்கில்!

இருபது தமிழர்கள் தீக்குளித்து அவர்களில் பத்துக்கு மேற்பட்டோர் மடிந்தே போயினர்! ஆம் - கழகத்தோழர்கள் அவர்கள்! ஒரு பெண்மணிகூட அந்தப் பட்டியலில்!

தி.மு.க., தி.க., காமராஜ் காங்கிரஸ் ரயில் நிறுத்தப் போராட்டம் நடத்தியபோது, பல்லாயிரவர் சிறை புகுந்தனர்!

நெடுமாறன் அவர்கள் தியாகப் பயணமொன்றே மேற்கொண்டார்!

மதுரையில் டெசோ மாநாட்டில், அகில இந்தியத் தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர். இருபது லட்சம் மக்கள் கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டில், இலங்கைத் தமிழரைப் பாதுகாத்திட மத்திய அரசை வலியுறுத்தி தீர்மானம் - அந்தத் தீர்மானத்தையொட்டித் தலைவர்களின் வேண்டுகோள்!

மூன்றாண்டுகளாக எத்தனையோ - கிளர்ச்சிகள் - போராட்டங்கள் - அடக்குமுறைகளை ஏற்ற நிகழ்ச்சிகள்!

எனினும் மத்திய அரசு, அதாவது இலங்கையில் தமிழர்க்கு விளைக்கப்படும் கொடுமைகளை விபரமாக அறிந்துள்ள மத்திய அரசு, இன்னமும் ஏதோ ஒரு தயக்கம் காட்டுகிறதென்றால் - நாம் நமது தமிழக மக்களின் உள்ளக்குமுறலை, அதற்கு மேலும் மேலும் எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறதல்லவா?

சுடர் விளக்குக்கே தூண்டுகோல் வேண்டுமென்பர்!

இந்த விளக்குக்கு ஒரு தூண்டுகோல் நிச்சயம் தேவையன்றோ?

அதுதான் மே 31ஆம் நாள்! முழு அடைப்பு - கறுப்புச் சின்னம் அணிதல் - கண்டன ஊர்வலம் - பொதுக்கூட்டம்!

உடன்பிறப்பே, இவையனைத்தும் அமைதியாக நடைபெற - ஒரு சிறிது அமளிக்கும் இடம் தராமல் - இன்றே உன் பணியினைத் தொடங்குக!

அன்புடன்

மு.க.

28-05-1986

1414. அமைதி வழியில் அமையட்டும் நமது அறப்போர்!

உடன்பிறப்பே,

மே 31 - இலங்கையில் தமிழ் இனத்தைப் பூண்டோடு அழித்துவிட்டு, அழிக்கப்பட்ட பகுதிகளில் சிங்களவர்களைக் குடியமர்த்தி - ஈழத்துத் தமிழர்களை நாடற்றவர்களாக்கி விட்டு, இலங்கையென்பது முழுக்க முழுக்க சிங்களவ மக்கள் வாழும் நாடு என்பதை அறிவிக்கும் சதித்திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத் தொடர்ந்து மூன்றாண்டு காலமாக இலங்கைச் சிங்கள அரசு நடத்தும் இராணுவத் தாக்குதல் இப்போது உச்சகட்டத்தை அடைந்துள்ள நிலையில் - அந்தச் சிங்கள அரசின் கொடுமையைக் கண்டிக்கத் தமிழகம் முழு அடைப்பு நடத்துகிறது.

இலங்கையில் சிங்கள வெறியர்களாலும் - முப்படைத் தாக்குதலாலும் மாண்டு மடியும் தமிழ்க் குடும்பங்களின் பெருந்துயரத்தில் நாமும் பங்கு பெறுகிறோம் என்பதற்காக மே 31 இல் தமிழ்மக்கள் கறுப்புச்சின்னம் அணிகிறார்கள்.

இலங்கை அரசின் மூர்க்கத்தனமான நடவடிக்கைகள் - ஆணவப் பேச்சுக்கள் - இனப் படுகொலையைத் திட்டமிட்டு நடத்தும் வெறித்தனம் - இந்தியாவையே மிரட்டுகின்ற போக்கு - அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல், பாகிஸ்தான், தென்ஆப்பிரிக்கா போன்ற நாடுகளின் உதவியைப் பெற்று இலங்கைத் தமிழர்களை மட்டுமல்ல, இந்திய பூபாகத்துக்கே அறைகூவல் விடுப்பேன் - என்ற தோரணையில் ஜெயவர்த்தனே செயல்படும் முறைகள் - இவையனைத்தையும் புண்ணுக்குப் புனுகு பூசிடும் சிகிச்சையால் சமாளித்து விடலாம் என இன்னமும் மத்தியஸ்தர் நிலையிலே இருந்து, ஆமை வேகத்தில் செயல்புரியும் இந்திய அரசின் மெத்தனத்தைச் சுட்டிக்காட்டி, மே 31 இல் கண்டன ஊர்வலங்கள், கண்டனப் பொதுக்கூட்டங்கள் தமிழகம் முழுவதும் நடத்தப் படுகின்றன.

உடன்பிறப்பே, இலங்கையில் தமிழன் இருந்தால்தான் - அவனது மொழி, கலாச்சாரம், இலக்கியம், வரலாறு இவைகளைப் பற்றியெல்லாம் பேச முடியும்!

சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுதுவாய் என்று சுவரையே இடித்து நொறுக்கித் தரைமட்டமாக்கி விட்டால், பிறகெங்கே சித்திரம் தீட்டுவது?

தி.மு.க. - தி.க. - காமராஜ் காங்கிரஸ் - தமிழ்நாடு பார்வர்டு பிளாக் - கட்சிகள் கொண்ட டெசோ இயக்கம், தமிழ் ஈழம் என்ற குறிக்கோளை ஆதரிக்கிற இயக்கமெனினும், இலங்கைத் தமிழர் பிரச்சினையில், சிங்கள அரசினரும் - தமிழ் ஈழவிடுதலை இயக்கங்களைச் சேர்ந்தோருமான இருசாராரும் எந்த ஒரு சுமுகமான முடிவை ஏற்றுக் கொண்டாலும் அது டெசோ இயக்கத்துக்குச் சம்மதமே எனப் பலமுறையும் அறிவித்திருக்கிறோம்.

அந்தக் கருத்து எல்லா ஏடுகளிலும் வெளிவந்திருக்கிறது.

அந்த அடிப்படையில்தான் மதுரையில் மே மாதம் 4 ஆம் நாள் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டைக் கூட்டினோம்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில், இந்திய அரசு மெத்தனப் போக்கைக் கைவிட வேண்டுமென்பதை வலியுறுத்தவே அந்த மாநாடு!

மத்திய அரசை நடத்தும் ஆளும்கட்சியான இந்திரா காங்கிரஸ், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசின் கடந்த கால நடவடிக்கைகளைப் பாராட்டுவதையே கடமையாகக் கொண்டிருக்கும் தமிழக அரசின் ஆளுங்கட்சியான அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளைத் தவிர, இந்தியாவில் உள்ள எல்லாக் கட்சித் தலைவர்களையும் அந்த மாநாட்டுக்கு அழைத்தோம்.

நேரிலும் சென்று மதுரை மாநாடு எந்தவொரு வடிவத்தில் தீர்மானத்தை அமைக்க விரும்புகிறது என்பதையும், அந்தத் தீர்மானத்தில் அந்தந்தக் கட்சியினர் விரும்புகிற மாற்றங்களைச் செய்வது பற்றி, மதுரை மாநாட்டுக் கலந்துரையாடல் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கலாமென்றும் - முக்கியமாக அத்தீர்மானம் இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்கவும் - இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தவும் - இதுவரை

இந்தப் பிரச்சினையில் இந்திய அரசு கடைப்பிடித்துள்ள அலட்சியப் போக்கைக் கைவிட வேண்டுமென்று வலியுறுத்தவும் பயன்படுவதாக இருக்கவேண்டும் என்பதுதான் மாநாடு கூட்டியுள்ள எங்களின் நோக்கம் என்று அந்தத் தலைவர்களுக்குக் கடிதம் எழுதினோம். முரசொலி மாறன், சி.டி. தண்டபாணி, வை. கோபால்சாமி ஆகியோர் டெல்லி சென்று அந்தத் தலைவர்கள் பலரை நேரில் சந்தித்து விளக்கியும், மாநாட்டுக்கான அழைப்பை விடுத்தனர்.

அழைப்பினையேற்று ஆந்திர முதல்வர் என்.டி.ஆர்., தெலுங்குதேசக் கட்சிப் பொதுச் செயலாளர் உபேந்திரா, கர்நாடக ஜனதா அமைச்சர் ராச்சய்யா, அரசுக் கொறடா திரு. பெருமாள், பாரதீய ஜனதாத் தலைவர் திரு. அடல்பிகாரி வாஜ்பாயி, திரு. ஜஸ்வந்த் சிங் எம்.பி., லோக்தளத் தலைவர் திரு. பகுகுணா, பஞ்சாப் அகாலிதளக் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. பல்வந்த்சிங் ராமுவாலியா எம்.பி., காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியின் சார்பில் திரு. அப்துல்ரஷித் காபுலி எம்.பி., காங்கிரஸ் எஸ் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. உன்னி கிருஷ்ணன் எம்.பி., இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் திரு. அப்துஸ் சமத் எம்.எல்.ஏ., இந்துஸ்தான் தேசிய முன்னணித் தலைவர் திரு. சுப்பிரமணியம் சுவாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அந்தத் தலைவர்கள் கலந்து பேசி, வடித்தெடுத்த தீர்மானத்தின் முக்கிய பகுதி பின்வருமாறு:-

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு, தனது அலட்சியப் போக்கைக் கைவிட வேண்டுமென்றும், மத்தியஸ்த நிலையிலிருந்து இந்தப் பிரச்சினையை அணுகாமல் இலங்கைத் தமிழர்களோடு நேரடியாகவும், நெருக்கமாகவும் தொடர்புள்ள நாடு எனும் அடிப்படையில் அணுகி, இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வாய்ப்புள்ள அனைத்து வழிகளிலும் முயலும் வண்ணம் தனது கொள்கையை மறுபரிசீலனை செய்து, தமிழ்மக்கள் சமத்துவத்தோடும், பாதுகாப்போடும், கண்ணியத்தோடும் வாழ வழி செய்ய வேண்டும் என்று இந்திய அரசை வலியுறுத்தி இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

அகில இந்தியத் தலைவர்கள் மதுரையில் கூடி, நிறைவேற்றிய இந்தத் தீர்மானம் உள்ளிட்ட வேறு சில தீர்மானங்களும் அடங்கிய

இந்த அறிக்கையில், இந்திய அரசை பேச்சு வார்த்தை என்ற பெயரால் இலங்கை அரசு எப்படியெல்லாம் ஏமாற்றி வருகிறது என்ற கருத்தும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டு மக்களின் குரல் மட்டுமன்றி - இந்தியாவின் கருத்தே, இலங்கை அரசின் இனப்படுகொலைக்கு எதிராக உள்ளது என்பதை உலகுக்கு அறிவிப்பதே மதுரை மாநாடு கூட்டப்பட்டதின் முக்கிய நோக்கம்.

அதற்குப்பிறகும் கூட, இலங்கையில் தமிழர்க்கு எதிராகத் தொடரும் கொடுமைகளும், இந்திய அரசு காட்டும் மெத்தனமும் நீடிக்கிற நிலையிலேதான் - அவசர அவசியமாக மே 31 இல் தமிழக மக்களின் உணர்வை வெளிப்படுத்திட வேண்டி - முழு அடைப்பு என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பணிகளுக்கு இந்த முழு அடைப்பால் எந்த இடையூறும் இருக்காது! இருத்தலாகாது!

கடை அடைப்பு - போக்குவரத்து நிறுத்தம் - போன்றவற்றால் மே 31 காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் பொதுமக்களுக்குச் சிறிது சங்கடம் இருக்கும்!

இலங்கையில் அழிந்து கொண்டிருக்கும் தமிழினத்தைக் காத்திட இந்தச் சிறு சங்கடத்தைத் தமிழ்நாட்டு மக்கள் பொருட்படுத்தமாட்டார்கள்! பொருட்படுத்தவும் கூடாது எனக் கேட்டுக் கொள்கிறேன்!

உடன்பிறப்பே! முழு அடைப்பு, கண்டன ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் அமைதியாக நடைபெற - வெற்றிகரமாக நடைபெற - முழு முயற்சிகளில் ஈடுபடுக! ஆதரவு தரும் கட்சிகளுடன் இணைந்து!

அன்புடன்

மு.க.

29-05-1986

1415. மதுரை மாநாட்டுத் தீர்மானம் - ஓர் எடுத்துக்காட்டு!

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழரைப் பாதுகாத்திட மே 31 சனிக்கிழமையன்று முழு அடைப்பு ஒன்றை, காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் நடத்துவதாக அறிவித்ததும், சில பத்திரிகையாளர்களுக்கு அதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் சங்கடங்களைப் பற்றிய கவலை வெகுவாக வந்து விட்டது.

ஜூன் முதல் தேதி - இரண்டாம் தேதி ஆகிய இரு தேதிகளிலும் முகூர்த்த நாள் என்பதால் பொதுமக்களுக்கு பெரிதும் பாதிப்பு ஏற்படுமேயென்று அதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? என்று பத்திரிகையாளர்கள் சிலர் அரசின் தலைமைச் செயலாளர் திரு. அந்தோணி அவர்களைக் கேட்டிருக்கிறார்கள். அவரும் அதற்கு பதிலளிக்கும் போது சகல அம்சங்களும் கருத்தில் கொள்ளப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

முழு அடைப்பின் காரணமாக ஜூன் முதல்தேதி, இரண்டாம் தேதி திருமணங்களுக்குச் செல்வோர் ரயில்களிலும், பஸ்களிலும் செல்ல முடியாமல் பெரிதும் சங்கடப்படுவார்கள் என்றும், வெளியூரிலிருந்து பால், காய்கறி வரத்துக்கு இடர்ப்பாடு ஏற்படுமென்ற அச்சம் உருவாகியுள்ளதென்றும், ஓரிரு பத்திரிகைகள் மெத்தவும் வருத்தப்பட்டுக் குறிப்புகள் எழுதியுள்ளன.

முழு அடைப்பு என அறிவிக்கும்போது, திருமண நாட்கள் குறித்தெல்லாம் ஆழ்ந்து ஆலோசிக்கத் தவறவில்லை. மே 30 வரையில் திருமணத் தேதிகள் உள்ளதையும் - அதேபோல் ஜூன் முதல்தேதி, இரண்டாம் தேதி திருமண நாட்கள் உள்ளதையும் எண்ணிப் பார்க்காமல் தேதி அறிவிக்கவில்லை. சனிக்கிழமையில் திருமணங்கள் பெரும்பாலும் நடைபெறுவதில்லை என்ற

காரணத்தினால்தான் மே 31 சனிக்கிழமை முழு அடைப்பு என முடிவெடுக்கப்பட்டது. ஜூன் முதல்தேதி திருமணங்களுக்குச் செல்வோர் போக்குவரத்து வசதியின்றிப் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான் 31 ஆம் தேதி சனிக்கிழமை மாலை 6 மணிவரையில் மட்டுமே முழு அடைப்பு எனப் பலமுறையும் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பால் வர முடியாமல் போய்விடுமேயென்று கவலைப்படும் பத்திரிகைக்காரருக்கு நன்றாகவே தெரியும், திருமணங்களுக்கு இரண்டுநாள் முன்னதாகவே வந்திருந்து பால், தனது கடமையை ஆற்ற இயலாது! புளித்துப்போய்க் கெட்டுவிடும்! 31 ஆம் தேதி இரவு அல்லது விடியற்காலையில்தான் திருமணங்களுக்கான காய்கறிகளோ, பாலோ வந்துசேர்வது வாடிக்கை! 31 ஆம் தேதி பகல் தேவைக்கு என்றால் 30 ஆம் தேதியன்று காய்கறி முதலியவற்றை வாங்கி வைத்துக்கொள்ள முடியும்!

இதெல்லாம் தெரியாமல் அந்தப் பத்திரிகையாளர்கள் இருட்டில் நடமாடுவதாக நான் கருதிடவில்லை.

ஒரே ஒரு எரிச்சல்தான் அந்தச் சிலருக்கு! அதாவது நாம் முன்னின்று நடத்துகிறோமே அது பிடிக்காதது தான்!

தமிழ்நாட்டில் இதுவரையில் பந்த் எனப்படும் முழுஅடைப்பு நடந்ததில்லையா? நடந்திருக்கிறது! அ.தி.மு.க. அரசாங்கமே முன்னின்று நடத்தியிருக்கிறது - அப்போதெல்லாம் பொதுமக்களுக்கு போக்குவரத்து வசதிகள் பாதிக்கப்பட்டதில்லையா? அந்தச் சங்கடங்களை மக்கள் பொருட்படுத்தாமல் முழு அடைப்புக்கு ஒத்துழைப்பு தரவேண்டுமென்று அரசின் சார்பில் அறிக்கைகள் விடவில்லையா?

முக்கியமான தலைவர்கள் மறைந்த செய்தி வந்தவுடன் - முழு அடைப்புகள் நடைபெற்றதில்லையா?

ஒரு துக்கத்தில் - துயரத்தில் - என்பது மட்டுமல்ல, தொடர்ந்து மூன்றாண்டுகளாக உயிரை, உடைமைகளை, உயிரினும் மேலான மானத்தை, கற்பை சிங்கள இராணுவ வெறியாட்டக் கொடுமைகளால் இழந்து வரும் ஈழத்துதமிழ் இனத்தைப் பாதுகாக்க, இந்தியா இதுவரை எடுத்த முயற்சிகள் அனைத்தும் - நாம் முன் கூட்டியே கூறியது போலத் தோல்வியடைந்து விட்ட காரணத்தால், இனியாவது மத்தியஸ்தர் நிலைமையிலிருந்து

அந்தப் பிரச்சினையை அணுகாமல், தமிழர்களின் உரிமைகளுக்கும், நியாயமான கோரிக்கைகளுக்கும் உறுதுணையாக நின்று வாதாடுகிற அளவுக்குத் தனது போக்கையும், செயல்முறைகளையும் மாற்றிக்கொள்ள வேண்டுமென இந்திய அரசை வலியுறுத்துவதற்காக ஒரு நாள் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் - தமிழன் என்ற இன உணர்வோடு என்று கூடவேண்டாம்! மனிதாபிமான உணர்வோடு தமிழ்நாட்டு மக்கள் சிறிது சங்கடத்தைத் தாங்கிக்கொள்ளக்கூடாதா?

முழு அடைப்பால் மக்கள் பாதிக்கப்படுவார்கள் - வேலைநிறுத்தத்தால் உற்பத்தி பாதிக்கப்படும் - அறப்போராட்டங்களால் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படும் - ஊர்வலங்கள், பேரணிகளால் போக்குவரத்து பாதிக்கப்படும் - என வாதிட்டுக்கொண்டேபோனால் பாதிக்கப்படுவோர், தமது கோரிக்கைகளை - உரியவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவே முடியாது!

எடுத்ததற்கெல்லாம் முழு அடைப்பு - போராட்டம் - வேலைநிறுத்தம் - என்று தேவையில்லாமல் கிளர்ச்சிகளில் ஈடுபடுவதைக் கழகம் என்றைக்குமே ஏற்றுக்கொண்டதேயில்லை!

அதே சமயம், விவசாயிகளின் போராட்டங்கள், ஆசிரியர்களின் போராட்டம் - தொழிலாளர் போராட்டம் - இவை போன்றவை, நம்மை முன்கூட்டியே கலந்து கொள்ளாமல் அறிவிக்கப்பட்டு நடைபெற்ற போதெல்லாம் அவற்றில் நியாயம் இருப்பின், அவற்றை ஆதரித்தே நாம் குரல் கொடுத்திருக்கிறோம்.

எனவே பிரச்சினைகள்தான் முக்கியமே தவிர, யார் நடத்துகிறார்கள் என்பதல்ல!

இலங்கைத் தமிழர் பிரச்சினை, தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல - இந்தியா முழுமையும் கவலைப்படக்கூடிய ஒரு பிரச்சினை என்பதினாலேதான் - தமிழ்ஈழ விடுதலை என்பது நமது டெசோ இயக்கத்தின் சார்பில் ஆதரிக்கப்படுகிற குறிக்கோளாக இருந்தும் கூட - மதுரை மாநாட்டில் அதனை வலியுறுத்தாமல் - இலங்கைத் தமிழரைப் பாதுகாக்கும் முயற்சியில் இனியும் மத்திய அரசு மெத்தனமாக இருக்கக் கூடாதென்றும், அந்தப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா தனது கொள்கைகள் அனைத்தையும், சாத்தியமான மாற்றுத் திட்டங்கள் அனைத்தையும், தமிழர்கள் சம உரிமையோடு,

கௌரவத்தோடு, பாதுகாப்போடு வாழத்தக்க வகையில் பயனுள்ள முறையில் திருத்தி அமைக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகிற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மதுரை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மான வாசகம் முழுவதையும் ஊன்றிப்படிப்போருக்கு, டெசோ இயக்கத்தின் முயற்சிகளில் இந்தியா முழுமையிலும் இலங்கைத் தமிழருக்கு ஆதரவான சூழ்நிலை உருவாக வேண்டுமென்று எண்ணுகிற இதயத்தூய்மை தெளிவாகவே தெரியும்.

தமிழ் ஈழம்! டெசோவின் கொள்கை! தமிழ்ஈழம் கூடாது என்பது முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் கருத்து!

தமிழ்ஈழம் என்ற கருத்தை டெசோ கூறுகிறது - ஆனால் அனைத்துக் கட்சித் தலைவர்களிடத்திலே அதனைத் திணிக்க டெசோ முயன்றதில்லை!

ஆனால் தமிழ்ஈழம் கோருவது, ஜெயவர்த்தனாவின் கரத்தைப் பலப்படுத்தவே பயன்படும் என்ற எம்.ஜி.ஆரின் கருத்து, அவர் நடத்துகிற அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் முடிவாக எடுக்கப்பட்டுள்ளது என்று கடந்த மே 3 ஆம் தேதி முதல்வர் கூட்டிய அனைத்துக் கட்சி கூட்டம் பற்றிய நடவடிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டு அனைத்துக்கட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ் ஈழம் - வேண்டும் அல்லது வேண்டாம் - என்ற பிரச்சினையையே இழுக்காமல் - உடனடியாக இலங்கைத் தமிழ் இனத்தை சிங்கள அரசின் இராணுவத் தாக்குதலில் இருந்து காப்பதற்கு இந்திய அரசு, வழக்கம்போல் மெத்தனம் காட்டாமல் செயல்பட வேண்டுமென வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்ற இயலுமென்பதையும், அதற்கு அனைத்திந்தியத் தலைவர்களின் ஒத்துழைப்பைப் பெற முடியும் என்பதையும் எடுத்துக்காட்டுவதுதான் மதுரையில் நடைபெற்ற டெசோ மாநாடு!

அந்த மாநாடு நடைபெற்ற காரணத்தால் - மத்திய அரசின் குழு ஒன்று இலங்கைக்கு அனுப்பப்பட்டது! மே 4ந் தேதிக்குப் பிறகே அந்தக் குழு திரும்பியது! திரு. சி.எஸ். அவர்கள் கூறியிருப்பது போல அக்குழு சென்று திரும்பிய பிறகு இலங்கைத் தமிழ்ப்பகுதியில் நிலைமை மேலும் மோசமாகிவிட்டது!

மதுரை மாநாட்டையொட்டி, தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அப்போதும் ஒரு அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்தினார்.

இப்போது நாம் முழு அடைப்பை அறிவித்துள்ள நேரத்திலும் - தமிழக முதல்வர் அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார்.

எப்படியோ நமது முயற்சிகள் - மத்திய, மாநில அரசுகளை அவ்வப்போது இலங்கைத் தமிழர் பிரச்சினையை நினைத்துப் பார்க்கும்படியாகவாவது தூண்டி விடுகிற அளவுக்கு வெற்றி பெறுகின்றன என்பதில் ஒரு ஆறுதல் கிடைக்கிறது நமக்கு!

அந்த ஆறுதல் மட்டும் போதுமானதல்ல!

மத்திய அரசு, தனது அலட்சியத்தைக் கைவிட்டு, மதுரை மாநாட்டு தீர்மானத்தைச் செயல்படுத்த முன்வர வேண்டும்.

உடன்பிறப்பே, அதற்காகவே மே 31 முழு அடைப்பு - கறுப்புச் சின்னமணிதல் - கண்டன ஊர்வலங்கள் - பொதுக்கூட்டங்கள்!

அமைதியாக - அறவழியில் - தமிழ்நாட்டு மக்களின் உணர்வை, இந்திய அரசுக்கு எடுத்துக்காட்ட மே 31 பயன்பட வேண்டும்!

அன்புடன்

மு.க.

30-05-1986



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜெ.ஜெ டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

வெளியீடு 2022